# உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு

## உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும்

பேராசிரியர் மாலிக் பத்ரீ

அறபியிலிருந்து தமிழில்:
கலாநிதி பீ.எம்.எம். இர்ஃபான்

உணர்வியல் நோக்கில்
நபிமார்கள் வாழ்வு

உணர்வியல் நோக்கில்

# நபிமார்கள் வாழ்வு

உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும்

பேராசிரியர் மாலிக் பத்ரீ

தமிழில்

கலாநிதி பீ.எம்.எம். இர்ஃபான்

***Unarviyal Nokkil Nabimaargal Vaalvu***

*(Ulaviyal Sindanaigalum Avadhanangalum)*

Tamil edition of

الجوانب العاطفية في حياة الأنبياء

By

Malik Badri

ISBN 978-605-06675-6-1

Published by

The International Institute of Islamic Thought

P.O.Box 669, Herndon, VA 20172, USA

www.iiit.org

London Office

P.O.Box 126, Richmond, Surrey tw9 2ud, UK

www.iiituk.com

Tamil edition

Translated by PMM Irfan

ISBN 978-624-5832-03-3

Published by

Fuzin Texts

23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka

Cover design by Dynamisgns

Printed by Millennium Graphics, Maharagama

# உள்ளடக்கம்


பதிப்புரை 9

தமிழ் மொழிபெயர்ப்புக்கான அணிந்துரை 11

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் அணிந்துரை 15

இஸ்தான்பூல் ஸபாஹுத்தீன் ஸஈம் பல்கலைக்கழகத்தின் அணிந்துரை 19

பீடிகை 23

நூலின் மொழிநடை 29

அத்தியாயம் ஒன்று 31

நபிமார்களின் பண்புகளை ஆய்வுசெய்வதற்கு நவீன உளவியல் விஞ்ஞானம் பொருத்தமானதா?

இறைத்தூதர்களின் உணர்வுகளை ஆய்வுசெய்வதற்குப் பயன்பட முடியாத அல்லது பயன்படுத்த முன் வடிகட்டப்பட வேண்டிய முக்கியமான உளவியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும் 32

ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு 35

நடத்தையியல் புரட்சி 38

மனித இயல்பு பற்றிய உயிரியல் கருதுகோளில் நிலவும் தீவிரத்தன்மை 47

நபிமார்களது உணர்வுகளை ஆய்வுசெய்வதில் பயனளிக்கத்தக்க உளவியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும் 49

அத்தியாயம் இரண்டு 63

நவீன மனோதத்துவ-நரம்பியல் ஆய்வுகளின் நோக்கில் உணர்ச்சிவயப்பாடு

உணர்ச்சி வெளிப்பாட்டின் அகிலத்தன்மை 63

நவீன உளவியலின் மிக முக்கியமான பங்களிப்புகள் 64

உணர்ச்சிகள் தொடர்பான முக்கியமான உளவியல் கோட்பாடுகள் 65

பகுத்தறிவும் மூளையும் 70

மூளை மற்றும் அதன் நரம்புத்தொகுதியின் படைப்பியல் அற்புதம் 80

அத்தியாயம் மூன்று 97

உணர்ச்சித் தொடர்பின்றி புத்தியால் மாத்திரம் இறைவனை அறிந்து வணங்குவதால் ஒருவரது விசுவாசம் முழுமையடையுமா?

உணர்ச்சிப் பெருக்குக்கும் ஆத்மீக வேட்கைக்கும் மத்தியிலான தொடர்பு 111

அத்தியாயம் நான்கு 119

மனிதர்கள் என்ற வகையிலோ, பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் என்ற வகையிலோ நபிமார்கள் காட்டிய உணர்ச்சித் துலங்கல்கள் பற்றிய உளவியல் அவதானங்கள்

அத்தியாயம் ஐந்து 157

இறைவன் ஒவ்வொரு நபிக்கும் உகந்த சூழலையும் பரம்பரையையும் தேர்வுசெய்தமை குறித்த அவதானங்கள்

முற்குறிப்பு 157

நபிமார்களது பண்புருவாக்கத்தில் பரம்பரையும் சூழலும் வகிக்கும் இடம் பற்றிய சில அவதானங்கள் 160

ஆத்மீகப் பாரம்பரியம் 162

நபிமார்களது உடற்பலத்தின் முக்கியத்துவம் 169

விவேகமும் புத்தாக்கச் சிந்திப்பும் 173

பரம்பரை மதிப்பும் குடும்பக் கண்ணியமும் 176

அத்தியாயம் ஆறு 179

நபி மூசாவின் சூழலையும் பரம்பரையையும் திட்டமிடுவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றிய அவதானங்கள்

குழந்தைப் பருவ வளர்ப்பில் தாயின் வகிபாத்திரம் 182

நபி மூசாவின் முன்னோர் 185

நபி மூசாவுக்கு இறைவன் உடற்பலத்தையும் உணர்வுப் பலத்தையும் அனந்தரமாக வழங்கியது ஏன்? 186

அத்தியாயம் ஏழு 195

நபி யூசுஃபின் சூழலையும் பரம்பரையையும் திட்டமிடுவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றிய அவதானங்கள்

கனவுவிளக்கத் துறையில் நரம்பியல் மற்றும் உளவியல் ஆய்வு களின் பங்களிப்பு 196

கனவுகளின் ஆத்மீகப் பரிமாணத்தை நவீன உளவியல் நிராகரிக்கிறது 198

கனவுகள் பற்றிய இஸ்லாத்தின் நோக்கும் வகைப்பாடும் 210

நபி யூசுஃபின் வரலாறும், அவரது சூழலையும் பரம்பரையையும் தெரிவுசெய்வதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானமும் 216

நபி யூசுஃபின் முதல் கனவு பற்றிய அவதானங்கள் 217

இறைவன் யூசுஃபைப் பெருநகருக்கு அனுப்பியது ஏன்? 220

யூசுஃப் ﷺ இளவயதிலேயே பெற்றாரிடமிருந்து பிரிக்கப்பட்டது ஏன்? 222

தாய்ப்பாலிலிருந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு … 223

'காந்த' ரகசியம் 224

சிறையில் நபி யூசுஃப் 228

உண்மைக் கனவுகள் 229

குறியீடாக வரும் கனவுகள்: கனவுகளா, செய்திகளா? 230

யூசுஃப் ﷺ தான் யார் என்பதைச் சகோதரர்களுக்கும் தந்தைக்கும் தெரிவிப்பதைத் தாமதப்படுத்தியது ஏன்? 238

அத்தியாயம் யூசுஃபில் தொலைநுண்ணுணர்வு; உளவழி உடற் கோளாறுகள்; கண்திருஷ்டி. 248

தொலைநுண்ணுணர்வு 249

யூசுஃபின் வாசனையை யஅகூபு நுகர்ந்தது எப்படி? 251

உளவழி உடற்கோளாறுகள் 253

கண்திருஷ்டி 256

முடிவுரை 263

பிற்சேர்க்கை

கலைச்சொற்கள் 273

மேற்கோள் நூல்பட்டியல் 277

**வாசகர் கடன்**

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும்; அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு / அன்ஹா / அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும்; முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.*

# பதிப்புரை

இஸ்லாமிய உளவியல் கற்கையின் பிதா எனக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் மாலிக் பத்ரீ அவர்களது உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு: உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும் எனும் இந்நூலை வெளிக்கொணர்வதில் நாம் அளவிறந்த மகிழ்ச்சி அடைகின்றோம். அன்னவரின் இஸ்லாமும் போதைப்பொருள் ஒழிப்பும் என்ற தலைப்பில் நாம் வழங்கிய நூல் வாசகர்கள் மத்தியில் பெற்றுக்கொண்ட வரவேற்பு மகத்தானது. இந்த நூலும் எமது வாசகர்களுக்குப் பெரும் பயன் விளைப்பதாய் அமையும் என்பது எமது நம்பிக்கை.

அச்சுக்கென இந்த நூலைச் செப்பம் செய்து தந்தவர் கோட்டாறு ஸம்மில் மஜீத். இதன் பதிப்பில் நல்ல பல ஆலோசனைகள் தந்து உதவியவர் சீர்மை உவைஸ் அஹ்மது. அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.


பூஸின் டெக்ஸ்ட்ஸ்
23/3, மார்கட் வீதி,
தர்கா நகர் - 12090

06 பிப்ரவரி 2023

# தமிழ் மொழிபெயர்ப்புக்கான அணிந்துரை

உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு: உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும் என்ற இந்நூல் இஸ்லாமிய உளவியலுக்கும் மற்றைய இஸ்லாமியத் துறைகளுக்கும் முன்னுதாரணமானது.

உளவியல் விஞ்ஞானம் என்பது மனிதப் பண்பு, நடத்தைகள் பற்றிக் கற்கின்ற துறையாகும். அத்துடன் அது மதநீக்கமும் கொண்டது. பல்பரிமாணங்களையும் சிந்தனைப் பள்ளிகளின் தாக்கங்களையும் கொண்டது; விழுமியம் சாராதது. தனது பரிசோதனை முறைமைகளையும் பகுத்தறிவு அளவுகோல்களையும் மனித உளவியலில் பிரயோகிக்க முயல்வது. இத்தகைய நவீன உளவியல் விஞ்ஞானம் இஸ்லாமிய ஆய்வாளர்கள் பலரில் பல்வேறு தாக்கங்களைச் செலுத்தியும் இருக்கிறது. இவ்வாய்வாளர்கள் நவீன உளவியலில் சிக்மண்டு ஃபிராய்டு (Sigmund Freud) முன்வைத்த 'ஈடிபஸ் சிக்கல் (Oedipus complex)' போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நபிமார்களின் நடத்தைகளுக்கும் பண்புகளுக்கும் பாலியல்ரீதியான விளக்கங்களைக் கொடுக்க முனைந்தனர். ஆனால் இந்த அணுகு முறை இஸ்லாமிய வரையறைகளையும் நடத்தைகளையும் நபிமார்களையும் ஆய்வுசெய்வதற்குப் பொருத்தமற்றதாகும். மட்டுமன்றி — பெரும்பாலான நேரங்களில் — சாதாரண மனிதர்களின் நடத்தைகளைக்கூட ஆய்வுசெய்வதற்கு அது பொருத்தமற்றதாகக் கருதப்படுகிறது.

நவீன உளவியல் விஞ்ஞானம் பல்வேறு விளக்கங்களையும் ஆய்வுகளையும் கொடுத்தாலும், இறைத்தூதர்களின் உணர்வுகளை ஆய்வுசெய்வதற்குப் பயன்படுத்த முடியாத ஆய்வுமுறைகள், சிந்தனைகள், செயல்முறைகள், கோட்பாடுகள் போன்றவற்றைக் கொண்டு அது காணப்படுகிறது. இந்தப் புள்ளியில்தான் இஸ்லாமிய உளவியல் விஞ்ஞானத்தின் தேவைப்பாடு எழுந்துநிற்கிறது.

திருக்குர்ஆன், நபிவாழ்வு போன்றவற்றின் அடிப்படையில் இஸ்லாமிய உளவியல் விஞ்ஞானத்தின் தேவை நீண்ட காலமாகவே இருந்துவந்திருக்கிறது. இஸ்லாமிய அடிப்படையில் நவீன உளவியலின் துணைகொண்டு, அதன் தேவையில்லா விசயங்களை வடிகட்டி, மனித நடத்தைகளையும் பண்புகளையும் விவரிக்க முடியுமா என்ற நீண்டகாலக் கேள்விக்கான விடைகளை இந்நூல் சாத்தியப்படுத்தியிருக்கிறது.

நவீன உளவியல் மனிதர்களில் காணப்படும் எதிர்மறைப் பக்கங் களை மட்டும் கருத்தில் கொண்டு, நவீன மருத்துவத் துறைக்குள் மட்டும் தன்னைச் சுருக்கிக்கொண்டு அவர்களது நடத்தைகளை விவரித்தது; பரிசோதனைகளுக்கே முன்னுரிமை கொடுத்தது. ஆனால் இஸ்லாமிய உளவியலானது மனித நடத்தைகளில் உள்ள நன்மைகளையும் தீமைகளையும் தெளிவாக வேறுபடுத்தி, நற்செயல்களைத் தூண்டி, தீய நடத்தைகளிலிருந்து அவனை விடுவிக்க முனைகிறது. அறிவு, நடத்தை, உணர்ச்சி, ஆன்மா போன்ற பல்வேறு அம்சங்களை அது கவனத்தில் கொள்கிறது.

நூலாசிரியர் தான் ஏற்றம்செய்ய விழைந்த கருத்துகளை ஏற்றம்பெறச் செய்வதைச் சாத்தியப்படுத்தக் கையாண்டிருக்கும் விசயங்கள் மலைக்கவைப்பன; எடுத்தாளும் விசயங்களும் உத்திகளும் ஆய்வுமுறைகளும் தர்க்கமுறைகளும் பிரமிக்கவைப்பன. இனப் பெருக்கச் சூழலியல் (Reproductive Ecology), பரம்பரையியல் (Genealogy), உயிர் வேதியியல் (Biochemistry), நரம்பு (மூளை) உடலியங்கியல் (Neurophysiology), நரம்பு (மூளை) அமைப்பியல் (Neurostructuralism), மனித உயிரியல் (Human Biology), கல்வியியல் (Pedagogy), உளநல மருத்துவவியல் (Psychiatry), நீண்டகால, குறுகியகால நினைவுச்சேமிப்பு, ஆய்வுமுறைகள், பரிசோதனைகள் போன்றவற்றைச் சேகரித்து ஒரு புள்ளியில் திரட்டி, நவீன அறிவியலில் உள்ள அபத்தங்களையும் (உதாரணமாக நவீன உளவியல்), அதன் வடிகட்டப்பட வேண்டிய பக்கங்களையும் நவீன அறிவியலிலிருந்தே இந்நூல் முன்வைக்கிறது.

நடத்தைகள் முற்றுமுழுதாகச் சுற்றுச்சூழலின் அல்லது பரம்பரையின் தாக்கங்களால் உருவாவதல்ல; மாறாக, இரண்டின் கலவையினால்தான் உருவாகின்றன என்றும், அந்த நடத்தைகளுக்கு நரம்புத்தொகுதியும் நாளமில்லாத் தொகுதியும் காரணமாகின்றன என்றும் கூறும் நவீன நடத்தையியலின் கருத்துகளையும் இந்நூல் முன்வைக்கிறது. சரளமான, இறுக்கமற்ற நடையில் தனது கருத்துகளுக்கு அது இலகுவாக எங்களை இட்டுச்செல்கிறது.

இஸ்லாமிய அடிப்படைகளுக்கும் நபிமார்களின் மரியாதைக்கும் பங்கமில்லாமல், நவீன உளவியல் ஆய்வுகளின் உதவியுடன் அசல் பண்பு, ஆய்வு நுணுக்கம், திருக்குர்ஆன் மீதான ஆழ்ந்த உளவியல் விளக்கங்கள் போன்றவற்றை இந்நூல் ஒருங்கிணைக்கிறது. நபிமார்கள் மனிதர்கள்; உணர்ச்சிவசப்படுபவர்கள். இறைவன் அந்த நேரத்தில் அவர்களை எவ்வாறு நெறிப்படுத்தினான் என்பதையும், மனித-உணர்ச்சி எதிர்வினை, கண்ணியமான நபித்துவ எதிர்வினை (நரம்புத்தொகுதி காட்டுகின்ற இச்சையில்லாத அல்லது இச்சையான அல்லது அனிச்சைத் தூண்டல்-துலங்கல்கள்), நபிமார்களின் உணர்வு, ஆத்மீக நடத்தைகள், அவர்களின் உருவாக்கத்தில் தொழிற்பட்ட இறைஞானம் போன்றவற்றையும் இந்நூல் விளக்குகிறது.

இந்நூல் முன்வைக்கும் 'ஆத்மீக மரபணுக்கள்' என்ற கொள்கை வியப்பானதாகும். எல்லோரையும்விட நபிமார்கள் ஏன் சிறப் பானவர்கள் என்பது பற்றியும், அவர்களுக்கு ஏற்படும் நல்லுணர்ச்சித் தூண்டல்கள், அவற்றுக்குரிய துலங்கல்கள், அவற்றின் பாரம்பரியத் தன்மை, சூழலியல் தூண்டல்களைப் பிரித்தறியும் தன்மை, இவற்றுக்குக் காரணமான ஆத்மீகக் கொடைகள், சூழலியல்-பாரம்பரியப் பண்புகள் போன்றவற்றையும், அவர்கள் கொண்டிருந்த விசேஷமான பரம்பரை அலகுகள்தான் இவற்றுக்குக் காரணம் எனவும் ஆத்மீக மரபணுக் கொள்கையை இந்நூல் முன்வைக்கிறது. இவற்றைக் கொண்டு நபி மூசா, நபி யூசுஃப் ஆகியோரின் சூழலையும் பரம்பரையையும் திட்டமிடுவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றிய அவதானங்களையும் இந்நூல் விளக்குகிறது. நபி யூசுஃப் தொடர்பான பகுதியில் வரும் கனவுகளுக்கும் மற்றைய கனவுகளுக்குமான நவீன உளவியல் விளக்கங்களும் இஸ்லாமிய விளக்கங்களும் மிகுந்த ஈர்ப்பு கொண்டவையும் வாசிப்பதற்குச் சுவையானவையும் ஆகும்.

கடந்த இருபது வருடங்களாகச் சில பல்கலைக்கழகங்களில் விலங்கு நடத்தைகள் (Ethology), மனித உயிரியல் (Human Biology), மனித உடலியங்கியல் (Human Physiology), பரம்பரையியல் (Genealogy) போன்ற பல்வேறு பாடங்களை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் எனக்கு, கையிலெடுத்து இரு நாள்களுக்குள் வாசித்து முடிக்கும் அளவுக்கு இந்நூல் வாசக ஈர்ப்புமிக்கதாக இருந்தது.

இது நேரடியாகத் தமிழில் எழுதப்பட்ட நூலாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. நூலில்

கையாளப்பட்டுள்ள தொய்வில்லாத, தடுமாற்றம் இல்லாத, சரளமான மொழிநடை அதற்குக் காரணமாக இருக்கலாம். அதற்கு முனைவர் பீ.எம்.எம். இர்ஃபான் அவர்களை வாழ்த்துகிறேன். சில இடங்களில் அவர் மிகவும் கனமான, பெறுமதியான சொற்களைக் கையாண்டிருக்கிறார். அறிவியல்-தொழில்நுட்பச் சொற்கள் மிகவும் சவாலானவை. அவையும் பொருத்தமாகவும், பொருத்தமான இடங்களிலும் வந்திருக்கின்றன. இது முனைவர் இர்ஃபானின் தேடலைக் காட்டுகிறது.

மொழியாக்கம் என்பது கலை. மிகுந்த வாசிப்பும் தேடலும் அர்ப்பணிப்பும் கொண்ட முனைவர் இர்ஃபானின் மொழியாக்கத்தில் தனித்தன்மை, பண்பாட்டுக் கலாச்சார இடைவெளிகளைப் புரிந்து பிரதிகளில் அவற்றை ஏற்றம்செய்தல், ஆற்றொழுக்கான வாசிப்புக்கு உதவல், மயக்கமின்மை, கருத்துத் தெளிவு, மூலமொழியைச் சிதைக்காது பெறுமொழியை வளப்படுத்தல் போன்ற பல பண்புகளைக் காண்பது வழமை. அது இந்த மொழியாக்கத்திலும் கைவரப் பெற்றிருக்கிறது.

பேராசிரியர் மாலிக் பத்ரீ அவர்களின் ‘உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு: உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும்’ என்ற இந்நூல், இஸ்லாமிய உளவியலுக்கும் மற்றைய இஸ்லாமியத் துறைகளுக்கும் முன்னுதாரணமானது என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன். ஏதிர்காலத்தில் இவ்வாறான நூல்கள் தொடர்ச்சியாகத் தமிழ்ப்படுத்தப்பட்டு இஸ்லாமிய அறிவியலும் தமிழும் செழுமையாக்கப்பட வேண்டும்.

இந்நூலை வெளியிடும் பூஸின் டெக்ஸ்ட்ஸ் பதிப்பகத்தாருக்கும், மொழியாக்கம் செய்த முனைவர் பீ.எம்.எம். இர்ஃபானுக்கும் மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துகளும்.

ஏ.எம். றியாஸ் அகமட்,

முதுநிலை விரிவுரையாளர்,
பிரயோக விஞ்ஞான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் அணிந்துரை

இஸ்தான்பூல் ஸபாஹுத்தீன் ஸயீம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மறைந்த பேராசிரியர் மாலிக் பத்ரீ அவர்களது 'உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு: உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும்' என்ற அறிவாக்கத்தை இஸ்லாமிய உலகுக்கு அன்பளிப்பு செய்வதில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் (IIIT) உவகை கொள்கிறது.

இதற்கு முன் 'அத்தஃபக்குர் மினல் முஷாஹதா இலா ஷுஹூது: திறாசா நஃப்சிய்யா இஸ்லாமிய்யா' என்ற தலைப்பில் பேராசிரியர் பத்ரீ எழுதிய நூலை நமது நிறுவனம் வெளியிட்டதையும் இங்கு நினைவுபடுத்துகிறோம். உளவியல் துறையில் நிலவும் மேற்கத்தியக் கண்ணோட்டங்களை எவ்வாறு அணுகுவது என்பதற்கான ஓர் மாதிரிமுறைமையை முன்வைத்திருந்த அந்நூல், இத்துறையில் புதைந்திருக்கும் இஸ்லாமியக் கருவூலத்தை அகழ்ந்தெடுக்கும் முயற்சியாகவும் அமைந்திருந்தது. உண்மையில் அது வினைமை மிக்க ஓர் அறிவுசார் முயற்சி. உருவாக்கநிலை 'உஸூல்'களையும் அறிவுப் பாரம்பரியங்களையும் மேற்கத்தியச் சிந்தனைகளையும் அணுகுவதற்கான முறைமை தொடர்பான நமது அறிவுக் கோட்பாடு களைத் துலக்குவதற்கு அம்முயற்சி அவசியமாகவும் இருந்தது.

இதோ நாம் மீண்டும் ஒருமுறை பேராசிரியர் பத்ரீயின் அறிவியல் அனந்தரத்தைப் பயன்படுத்திக்கொள்கிறோம். இறைத்தூதர்களின் உளவியல் அடிப்படைகளைப் புரிந்துகொள்வதில் மறைந்துள்ள இஸ்லாமிய ஆன்மாவை வெளிக்கொணரவும், மேற்கத்தியச் சிந்தனைகளை முறியடிக்காமல் விமர்சனத்திற்கு உட்படுத்தவும் இந்நூல் உதவுகிறது. அவ்வகையில், அறிவுஞானம் எங்கிருந்தாலும் — அது இறைவிசுவாசி ஒருவரின் தவறிப்போன செல்வம் என்ற நோக்கில் — அதனைத் தேடிப்பெறுவது கடமை என்ற நமது நிறுவனத்தின் கொள்கையுடன் உடன்படுவதாக இம்முயற்சி உள்ளது.

திருக்குர்ஆனிய முழுமொத்த நோக்கினுள் அடங்கும் வகையில் மானிட அறிவியல் கலைகளை அணுகும் அதன் நிலைப்பாட்டுடன் இயைந்ததாகவும் இம்முயற்சி உள்ளது.

இந்நூல் உரையாடும் சிந்தனையும் விவகாரமும் முக்கியமானவை. இஸ்லாமிய அறிவு வட்டாரங்களில் மிகக் குறைவாகவே கலந்துரையாடப்படும் அவை இங்கு 'ஆழ்ந்த அவதானம்' (Contemplation) என்ற பிரயோகத்தால் சுட்டப்படுகின்றன. இப்பிரயோகம் மனித உள்ளத்தில் கொண்டுள்ள ஆழம் எப்படியானது என்பதையும், குழந்தையின் ஆளுமை-விருத்திக் கட்டத்திலிருந்து செயலாக வெளிப்படும் கட்டத்தை நோக்கி அது எவ்வாறு நகர்கிறது என்பதையும் இங்கு நம்மால் உணர முடிகிறது. ஆழ்ந்த அவதானம் (Contemplation) என்பது பேராசிரியர் பத்ரீயின் புரிதலின்படி, நிகழ்வுகளை அவதானிப்பதன் மிக முன்னேற்றகரமான கட்டமாகும். அறிவார்ந்த அகழ்தலுக்கு அவசியமான (எப்படி? ஏன்? ... முதலிய) கேள்விகளைத் தாண்டி பெறுபேறுகளைச் சென்றடையும் கட்டம் அது. ஏனெனில், ஆழ்ந்த அவதானம் என்பது அறிவியல், தேர்ச்சி, தெய்வீகக் கொடை என்பவற்றின் இரசாயனச் சேர்க்கையாகும்.

எனினும், இத்தோற்றப்பாடு குறித்த மேற்கத்தியக் கோட்பாடுகளையும் பகுப்பாய்வுகளையும் விவாதிக்கும்போது பேராசிரியர் மாலிக் கறாரான அறிவியல் ஆய்வாளன் என்ற பண்பை இழந்துவிடாமலே அதனை மேற்கொள்கிறார். அந்த வகையில், குறித்த சிந்தனை, அதன் வடிவமைப்புகள், நீட்சிகள், முடிவுகள் என்பவற்றை முழுமையான பிரக்ஞையோடு ஆய்வுக்குட்படுத்துகிறார். மேற்கத்தியரிலும் முஸ்லிம்களிலும் இச்சிந்தனையின் உரிமையாளர்களோடும் பின்பற்றாளர்களோடும் உரையாடுகிறார். இந்த வகையில், பேராசிரியர் மாலிக் பத்ரீயின் பகுப்பாய்வு முறைமை என்ன என்பது நமக்குத் தெளிவாகிறது. இறைத்தூதர்களின் வாழ்வியல் நிகழ்வுகள், அவர்களது உரையாடல்கள், இயல்புகள் என்பவற்றைத் திருக்குர்ஆன் விளக்கிய அமைப்பிலேயே ஆய்வுக்கு உட்படுத்துவதற்கும், அவை பற்றிய ஆழ்ந்த அவதானத்துக்கும் நடுவில் அவர் நிற்கிறார்.

இது கவனிக்கப்பட வேண்டிய முறைமையாகும். பகுத்தறிவு விதிகள் மற்றும் தரவுகள் என்பவற்றுக்கும், உணர்வுகள் மற்றும் ஆழ்ந்த அவதானங்கள் என்பவற்றுக்கும் மத்தியில் சமநிலையை ஏற்படுத்துவதன் மூலமாக மனித அறிவின் மூலாதாரங்களுள் ஒரு பகுதியாக அவற்றை மாற்றிக்கொள்வதற்கு இம்முறைமை அவசியமாகும். ஏனெனில், மனிதனின் அகவுலகம் தன்னளவிலேயே

ஒரு பரிபூரண உலகம்; முழுமொத்த இஸ்லாமிய நோக்கின் அடிப்படையில் நிறைவான ஆய்வை மேற்கொள்வதற்குத் தகுதியான உலகம்.

நமது நிறுவனம் பல்வேறு கல்வி நிறுவனங்களுடனும் அறிவாய்வு நிறுவனங்களுடனும் இணைந்து பல சிந்தனா, அறிவியல் ஆய்வுச் செயல்பாடுகளில் ஈடுபட்டுவந்திருக்கிறது. அந்நிறுவனங்கள் அறிவியல் ஆய்வுகளோடு தெளிவான தொடர்பைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்த வகையில்தான், துருக்கியின் பல புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் ஆய்வுச் செயல்பாடுகளையும் — குறிப்பாக ஷரீஆ கலைகள் தொடர்பாகவும், சமூக–மானிடவியல் கலைகள் தொடர்பாகவும் — மேற்கொண்டுவந்திருக்கிறோம். இந்நூலை வெளியிட்டுவைப்பதன் மூலமாக அத்தகைய அறிவியல் ஒத்துழைப்பின் ஒரு கட்டத்தையே நாம் வெளிப்படுத்துகிறோம். முழு மனிதச் சமூகத்திற்கும் பணிபுரிவதில் நமது நாகரிகப் பொறுப்பை நிறைவேற்ற மேலும் உதவுமாறும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இந்நூலாக்கம், மறைந்த முனைவர் பத்ரீ அவர்கள் உயிரோடிருக்கும் போதே மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களும் கல்வியியலாளர்களும் தமது கற்கைகளிலும் ஆய்வுகளிலும் பயன்பெறக்கூடிய வகையிலான அறிவியல் வடிவத்திற்கு இந்நூலை முன்னேற்றுவது தொடர்பாக அவருக்கும் நிறுவனத்துக்குமிடையில் பல தொடர்பாடல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், இந்நூல் அச்சகம் நோக்கிச் செல்லும் வேளையில் பேராசிரியர் மாலிக் பத்ரீயின் மறைவுச் செய்தி வர வேண்டும் என்பது இறைவனின் ஏற்பாடாகிவிட்டது. இறைவன் அவர்மீது அருள்கூர்ந்து, அவரது பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றும், இப்பணியை அவரது நன்மைகளின் தராசில் கனமாக்கிவைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறோம். *வஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி வபறக்காதுஹு.*

முனைவர் ஹிஷாம் அல்தாலிப்,

தலைவர், இஸ்லாமிய சிந்தனைக்கான
சர்வதேச நிறுவனம் (IIIT).

# இஸ்தான்பூல் ஸபாஹுத்தீன் ஸஈம் பல்கலைக்கழகத்தின் அணிந்துரை

அளவிலாக் கருணையும் முடிவிலாக் கிருபையும் கொண்ட இறைவனின் பெயரால் ...

சர்வ புகழும் அகிலங்களின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் அருளும் அவனுடைய அடியாரும் தூதருமாகிய முஹம்மது அவர்கள் மீதும் குடும்பத்தார் மீதும் உண்டாவதாக. நேர்வழி காட்டும் தூதையும் உயர்ந்த பதவியையும் கொடுத்து அன்னாரை அவன் அனுப்பிவைத்தான்.

நவீன உளவியல் விஞ்ஞானம் பல்பரிணாமங்களைக் கண்டிருக்கிறது. அந்த ஒவ்வொரு பரிணாமத்திலும் வேறுபட்ட சிந்தனைப் பள்ளி களால் அது தாக்கமடைந்துவந்திருக்கிறது. ஆனாலும் அவை அதன் தேவைகளையோ அபிலாஷைகளையோ நிறைவுசெய்யவில்லை. மனிதனின் நீண்டுபரந்து கிளைபரப்பி நிற்கும் உலகங்களை அவை முழுமையாக உள்ளடக்கவுமில்லை. ஆய்வாளர்களும் தேடல் கொண்டோரும் ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளியை நோக்கித் தடுமாற்றத்துடன் நகர்ந்துகொண்டே இருந்ததால், உளவியல் தொடர்பான சிந்தனைப் பள்ளிகளும் பல்கிப்பெருகிக் கிளைவிடலாயின. அவற்றுள் ஒன்றுதான் ‘நடத்தை உளவியல் பள்ளி’ (Behavioral School) ஆகும். வாட்சன், பாவ்லோவ் (Watson & Pavlov) ஆகியோர் அதன் முக்கியப் பிதாமகன்களாக இருந்தனர். ‘உளப்பகுப்பாய்வுப் பள்ளி’ (School of Psychoanalysis) மற்றொன்றாக இருந்தது. அதன் பிரதானியாக ஃப்ராய்டு இருந்தார். இவை தவிர வேறுபல பள்ளிகளும் காணப்பட்டன.

இப்பள்ளிகள் தமது பரிசோதனை முறைமைகளையும் பகுத்தறிவு அளவுகோல்களையும் மனித உளவியல்மீது பிரயோகிக்க முயன்று கொண்டே இருந்தன. மனித மனத்தையும் நடத்தையையும் வியாக்கியானப்படுத்த தாம் எடுத்துக்கொண்ட முறைமைகளுக்கு

அமைவான வகையில், மனோதத்துவப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சிகளாக அவை அமைந்திருந்தன. ஆனால் இப்பள்ளிகள் — பல்வேறுபட்ட வழிகளிலும் முறைமைகளிலும் இயங்கியபோதும் — அனைத்துமே மனிதனது ஆத்மீக உலகையும் அதன் உயர்ந்த தொடர்புகளையும்விட்டுத் தூர விலகி அவனது ஸ்தூலப் பரிமாணத்தின் மீது மட்டுமே தம் கவனத்தைச் சுருக்கிக்கொண்டன.

இப்பள்ளிகளால் மதிமயங்கிய பல முஸ்லிம் ஆய்வாளர்களும்கூட அவற்றின் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் ஆராயவோ வடிகட்டவோ திறனாயவோ மீள்வாசிப்பு செய்யவோ முற்படாமல் அப்படியே ஏற்றுக்கொண்டனர். அவர்களுள் பலர் இன்றுவரை அம்முறைமைகளை அப்படியே பின்பற்றியும் வருகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மனித மனம் பற்றிப் புதிய வகையில் புரிந்துகொள்வதற்கான வினைமைமிக்க முயற்சிகள் தோன்றின. புனிதத் திருக்குர்ஆனின் அடிப்படையிலும், நபித்துவ வழிகாட்டல்களின் நிழலிலும் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிகள் நவீன உளவியல் விஞ்ஞானத்தையும் அதன் கோட்பாடுகளையும் முழுமையான திறனாய்வுக்கு உட்படுத்தின. இஸ்லாமிய நோக்கிலான உளவியல் விஞ்ஞானத்தின் பிறப்புக்குக் கட்டியம் கூறுவதாக அத்திறனாய்வு அமைந்தது. அதனை நிகழ்த்திய தேர்ச்சிமிக்க முஸ்லிம் உளவியல் அறிஞர்களின் முன்வரிசையில் நின்றவர்தான் பேராசிரியர் மாலிக் பத்ரீ ﵀ அவர்கள்.

முஸ்லிம் உளவியல் அறிஞர்கள் சங்கத்துக்குத் தலைமை வகித்த அவர், உளவியல் விஞ்ஞானத்தை இஸ்லாமியச் சூழமைவில் உலகின் பல பல்கலைக்கழகங்களில் விருத்திசெய்வதற்கு முன்னின்று உழைத்திருக்கிறார். இதனால் அவருக்குப் பல சர்வதேச விருதுகளும் கிடைத்திருக்கின்றன. இத்துறையில் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அவ்விருதுகள் சாட்சி. பேராசிரியர் மாலிக் பத்ரீ இஸ்தான்பூல் ஸபாஹுத்தீன் ஸஈம் பல்கலைக்கழகத்தில் வந்து இணைந்தமை அதற்கோர் கௌரவமாக அமைந்ததுடன், அதன் அறிவுக் கலங்கரையாகவும் அவர் மாறினார். அவரது அறிவூற்றிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் மாணவர்களுக்கு முன்பாக ஆசிரியர்கள் அள்ளிப்பருகினர். அன்னார் தனது நற்பள்ளியின் விதைகளை நமது பல்கலைக்கழக வளாகமெங்கும் தூவினார். அவற்றின் நல்விளைவு மறுமைநாள்வரை தொடர வேண்டுமென நாம் பிரார்த்திக்கிறோம்.

மனிதனைப் பற்றிய சடரீதியான நோக்கைக் கொண்ட உளவியல், கல்விசார் அளவீடுகளைப் பிரதியெடுத்து நடைமுறைப்படுத்துவதைப் பேராசிரியர் மாலிக் பத்ரீ விமர்சனத்துக்கு உட்படுத்தினார். அவை இறைத்தூதர்களது உணர்வார்ந்த பரிமாணங்களை ஆய்வுசெய்ய உகந்தவையல்ல என்ற கருத்தையும் முன்வைத்தார். அதன் மூலமாக, இஸ்லாமிய நோக்கிலான உளவியலின் தனிச்சிறப்பை அவர் சுட்டிக்காட்டினார். அந்த வகையில், மேற்கத்திய உளவியலின் பரிசோதனைகளை ஒரு முஸ்லிம் பயன்படுத்தினாலும் இஸ்லாமிய உயிர்ப்புக்கும் *'வஹீ'*யின் உலகத்துக்கும் ஏற்ப அவற்றைத் தகவமைத்துக்கொள்வது அவசியம் என வலியுறுத்தினார்.

மனித உள்ளமானது மனிதன் பற்றிய இஸ்லாமியக் கொள்கைக்கு இயைபாகவே ஆய்வுசெய்யப்பட வேண்டும் எனப் பேராசிரியர் மாலிக் பத்ரீ கருதுகிறார். ஏனெனில், அப்போதுதான் சட உலகமும் ஆத்மீக உலகமும் இணையும். இதன் மூலமாக, மனித நடத்தையில் கவனம் செலுத்தும் உளவியல் ஆய்வுகளுக்கும், திருக்குர்ஆனிய கருத்தாடலிலும் இஸ்லாமிய சிந்தனையிலும் விவரிக்கப்படும் மன உலகங்களுக்கும் மத்தியில் அவர் பாலம் அமைக்கிறார். மனித மனத்தையும், மனிதப் பகுத்தறிவோடும் பிரபஞ்சப் படைப்புகளோடும் அதற்குள்ள தொடர்புகளையும் புரிந்துகொள்ளவும் வழியமைக்கிறார். இதனால் மனிதன்மீது அக-புறரீதியாகவும், சட-மானசீக-ஆத்மீகரீதியாகவும் எவையெல்லாம் தாக்கம் செலுத்துகின்றன என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. சமய நம்பிக்கை, இறை விசுவாசம், ஆத்மீக அனுபவம் என்பன மனித நடத்தையின் மீதும் மன ஆரோக்கியத்தின் மீதும் ஏற்படுத்தும் நேர்நிலைத் தாக்கங்கள் குறித்தும் அவர் கவனயீர்ப்பு செய்கிறார்.

இன்று நம்முன்னால் ஒரு புதிய விளைச்சல் அறுவடைக்காகக் காத்திருக்கிறது. *'உணர்வியல் நோக்கில் நபிமார்கள் வாழ்வு: உளவியல் சிந்தனைகளும் அவதானங்களும்'* என்ற தலைப்பில் பேராசிரியர் சாதித்த அறுவடை இது. ஆயினும், கண்ணியமான வாசகர்களுக்கு இதனை முன்வைக்க முன்பே மரணம் அவரைத் தழுவிக்கொண்டது.

நபிமார்கள் பற்றிய சித்தரிப்பின்போது 'உணர்ச்சிவயப்பாடு' (Emotion) என்ற பிரயோகத்தைவிட 'பெருவிருப்பு' அல்லது 'வேட்கை' (Passion) என்றவாறான பிரயோகத்தையே பேராசிரியர் முன்னிலைப்படுத்தினார். ஏனெனில், அதுவே தெரிவுசெய்யப்பட்ட மனிதப்புனிதர்களாகிய இறைத்தூதர்கள் குறித்த நேர்நிலையான அர்த்தங்களைத் தரவல்லது என அவர் கருதினார்.

இறை விசுவாசமும் நெருக்கமும் பூரணமடைவதற்கு அறிவும் உணர்வும் ஒன்றிணைய வேண்டும் என்ற நூலாசிரியரின் விளக்கம் மிக நுட்பமானது. மனிதர்களுள் சிறந்தோராக விளங்கிய நபிமார் களின் மாதிரியில் இந்த இணக்கம் எவ்வளவு துலாம்பரமாக வெளிப்பட்டது என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. நபிமார்களை உருவாக்கிய மிக நுட்பமான தெய்வீகக் கண்காணிப்பு இது எனலாம். இதன் மூலமாகச் சூழல், மரபியல் என்பன பௌதிக, மானசீக, ஆத்மீகக் காரணிகளுடன் கலந்துநிற்பது தெளிவாக வெளிப்படுகிறது. இவையனைத்தும் இணைந்து, நபிமார்களிடம் இறை விசுவாசம் கலந்த உணர்வைப் பலப்படுத்துவதில் தாக்கம் செலுத்தின. அந்த வகையில்தான், மனிதப் பண்பு, பாவமிழைக்காத தெய்வீகம், இறைவிசுவாச மேம்பாடு முதலிய அனைத்தும் இணைந்து சத்தியத்தை அல்லாஹ்விடமிருந்து பூரணமாக எடுத்துரைக்கும் பணியை மேற்கொள்ள அவர்களைத் தூண்டின.

சுருங்கச் சொன்னால், இந்நூல் இஸ்லாமியப் பயிற்றுவிப்பு என்னும் நூலகத்துக்கான பெறுமதி வாய்ந்த இணைவு எனலாம். இஸ்லாமியக் கண்ணோட்டத்திலான மனோதத்துவவியல் கோட்டைக்கு ஓர் அடிக்கல்லாகவும் இது அமைகிறது. உயிர்ப்புமிக்க இத்துறையில் மாணவர்களும் ஆய்வாளர்களும் ஒதுக்க முடியாத மூலாதாரமாக இது உள்ளது.

முடிவாக, இம்மகத்தான பணிக்காகவும், கல்வியியல், இஸ்லாமிய உளவியல் ஆகிய துறைகளில் நம்முடைய பேராசிரியர் ஏற்படுத்திய தெளிவான தாக்கங்களுக்காகவும் சங்கைமிக்க இறைவன் அபரி மிதமான நற்கூலியை அவருக்கு வழங்க வேண்டுமெனக் கற்றறிந் தோர் சார்பாகப் பிரார்த்திக்கிறேன். பின்வருவோருக்கு அவரது அறிவும் நூல்களும் பயனளிக்கவும், நிலையான தர்மமாக அமையவும் பிரார்த்திக்கிறேன்.

அனைத்து புகழும் அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது.

பேராசிரியர் முனைவர் முஹம்மது பூலூத்,

வேந்தர், இஸ்தான்பூல் ஸபாஹுத்தீன்
ஸஈம் பல்கலைக்கழகம்,
துருக்கி.

# பீடிகை

உளவியல் விஞ்ஞானத்தை இஸ்லாமிய அடிப்படையில் மூலாதாரப்படுத்துவதற்கான எனது ஆர்வம் கடந்த நூற் றாண்டின் அறுபதுகளில் ஆரம்பித்தது. இத்தலைப்பு தொடர்பான எனது முதல் பொது விரிவுரையை 1963ம் ஆண்டு ஜோர்டான் பல்கலைக்கழகத்தில் மனோதத்துவப் பிரிவுத் தலைவராக இருந்த போது நிகழ்த்தினேன். அவ்விரிவுரைக்கு மாணவர்களிடமிருந்தும், உளவியல், சமூகவியல் கற்கைகள் துறையில் சிறப்புத் தேர்ச்சி கொண்டிராதோரிடமிருந்தும் பலத்த ஆதரவும் வரவேற்பும் கிடைத்தன. ஆனால், எனது சகபாடிகள் அதனைக் கடுமையாக விமர்சித்தனர். உளவியல் விஞ்ஞானம் என்பது இயற்பியல் அல்லது வேதியியல் துறைபோன்று பரிசோதனை அறிவியல் (Experimental science) துறையே எனவும், அது தத்துவம், சமயம் என்பவற்றிலிருந்து சுயாதீனம் பெற்ற துறை எனவும் வாதிட்டனர்.

“எங்களை மீண்டும் பின்னோக்கி இழுத்துச்செல்லவா விரும்புகிறீர்? ‘இறைநம்பிக்கை கொண்ட இயற்பியல்’ என்றோ ‘இறைநம்பிக்கை அற்ற வேதியியல்’ என்றோ பேசுவீரா?! அப்படி இருக்கும்போது, ஃப்ராய்டு என்ற விஞ்ஞானி பற்றியும், அவரது பகுப்பாய்வு அணுகுமுறை பற்றியும் இஸ்லாமியச் சமயக் கண்ணோட்டத்தில் நீர் ஏன் பேச வேண்டும்?!” என ஒருவர் என்னைக் கடிந்துகொண்டது இன்னும் நினைவிருக்கிறது.

கடந்த நூற்றாண்டின் எழுபதுகளில் ரியாத் பல்கலைக்கழகத்தில் நான் விரிவுரையாற்றிய பிறகும் அதேபோன்ற ஓர் எதிர்வினையைச் சந்தித்தேன். ஆனாலும், உளவியல் துறையை இஸ்லாமிய அடிப்படையில் மூலாதாரப்படுத்துவதற்கான எனது உத்வேகம் காலவோட்டத்தில் அதிகரித்ததே அன்றிக் குறையவில்லை. அதிலும் குறிப்பாக, அறிவியல் கலைகளை இஸ்லாமியப்படுத்தும் பணியைத் தனது முறைமையாக எடுத்துக்கொண்ட மலேஷிய இஸ்லாமிய சர்வதேசப் பல்கலைக்கழகத்தில் நான் இணைந்த பிறகு அது இன்னும் பலமடைந்தது.

மேற்கத்திய உளவியல் விஞ்ஞானத்தில் பரிசோதனை அறிவியல் மூலமாக நிரூபிக்கப்பட்ட, சீரிய மனித அறிவு காலங்காலமாக ஏற்றுவந்த அம்சங்கள் எவை என்பதையும், அதன் நிறுவனர்களால் எவ்வித ஆதாரமுமற்று வெறும் கற்பிதங்களாக முன்வைக்கப்பட்ட அல்லது தனிப்பட்ட புரிதலிலிருந்து முன்வைக்கப்பட்ட சடவாதச் சிந்தனைகளும் நம்பிக்கைப் பிறழ்வுகளும் எவை என்பதையும் வேறுபிரித்துப் பார்க்கும் பயிற்சியை என்னுடைய மாணவர்களுக்கு வழங்கினேன். இஸ்லாமிய உளவியல் சிந்தனையின் மேன்மை குறித்தும் அவர்களுடன் உரையாடினேன். நபிகளார் ﷺ அவர்களது வாழ்வியலிலிருந்தும், நற்பண்பு கொண்ட நபித்தோழர்களது ؓ வரலாற்றிலிருந்தும், நமது முன்னைய அறிஞர்களது நூல்களிலி ருந்தும் பல உதாரணங்களை எடுத்துக்காட்டினேன். இவற்றுள் சில சிந்தனைகளை, கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் *'அத்தஃபக்குர் மினல் முஷாஹதா இலா ஷுஹூது'* என்ற எனது நூலில் சுருக்கித் தந்தேன். அந்நூல் எகிப்தில் வெளியிடப்பட்டது.

கடந்த நூற்றாண்டு முடிவடைந்தபோது நம்முடைய நேசர் முஹம்மது ﷺ அவர்களது குணநலன்கள் குறித்து இஸ்லாமிய உளவியல் நோக்கில் ஒரு நூலை ஆக்கும் பெருவேட்கை என்னை ஆட்கொண்டது. அன்னாரது கண்ணியமான வாழ்வியலின் உணர் வார்ந்த பரிமாணத்தில் நமக்குக் கிடைக்கின்ற மேலதிக உளவியல்–ஆத்மீகப் பாடங்களில் கவனம் செலுத்துவதே அங்கு எனது எண்ணமாக இருந்தது.

எனது அந்த நூலுக்கு *'அல்ஆதிஃபா வல்ஹனீன் ஃபீ ஹயாதி சைய்யிதில் முர்சலீன்'* என அழகிய தலைப்பொன்றையும் இட்டுக்கொண்டேன். நபியவர்களது வாழ்வியல் பற்றிய மிக முக்கியமான மூலாதாரங் களைத் திரட்டிக்கொண்டு எழுதவும் ஆரம்பித்தேன். நூலின் ஆரம்ப அத்தியாயங்களில் உணர்வு, உணர்ச்சிவயப்பாடு முதலிய விசயங்கள் பற்றி எழுதி முடித்துவிட்டு நேரடியாக விசயத்துக்குள் நுழைந்த பிறகுதான் இறைத்தூதர் ﷺ அவர்களது உணர்வார்ந்த பக்கங்கள் பற்றிய எனது சிந்தனைகளையும் அவதானங்களையும் வலுவூட்டுவதற்கு ஏனைய தூதர்களையும் நபிமார்களையும் பற்றி வந்துள்ள விசயங்களையும் துணையாகக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். குறிப்பாக, மூசா, யூசுஃப் ؊ போன்று திருக்குர்ஆனில் ஓரளவு விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் அவசியமாகத் தோன்றின.

அந்த வகையில்தான், எனது நூல் பொதுவாக நபிமார்களது உணர்வார்ந்த வாழ்வியலை உள்ளடக்கும் வகையில் அமைய வேண்டுமெனத் தீர்மானித்தேன். இறைவன் நாடினால், இதன் இரண்டாம் பாகம் இறுதித்தூதர் ﷺ அவர்களது வாழ்வின் உணர்வுப் பரிமாணத்தைச் சுருக்கித் தருவதாக அமையும். இஸ்லாமிய உளவியல் துறையில் என்னுடைய மாணவர்கள் பயன்பெறத்தக்க உசாத்துணையாக அமைய வேண்டும் என்ற நோக்கிலேயே இந்நூலை இயற்றியுள்ளேன். எனவேதான், அவர்களுக்கு நான் வழங்கும் விரிவுரைகளைப் போலவே மிக எளிய நடையில் அது அமைய வேண்டும் என்பதில் கரிசனை காட்டியிருக்கிறேன்.

பொதுவாக வரண்ட கல்வியியல் ஆய்வுகளது இறுக்கமான, சிக்கல் நிறைந்த எழுத்துநடையிலிருந்து விடுபடவும் முயன்றிருக்கிறேன். அந்த வகையில்தான், எனது உணர்வுகளையும் ஆழ்ந்த அவதானங்களையும் இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறேன். நூலின் ஆரம்பத்தில் அதன் தலைப்பிலேயே இதனைப் பிரகடனப்படுத்தியும் உள்ளேன். எனவே, இந்நூலின் உள்ளடக்கம் சாதாரண வாசகருக்கும், உளவியல் விஞ்ஞானத்தில் சிறப்பறிவு பெற்றிராதோருக்கும்கூடப் பொருத்தமாக அமையும் என நினைக்கிறேன். அதேபோல், தூதர்களது வாழ்வை விளக்கிக்கொண்டு செல்லும்போது, அவர்களை உடல்-உள-ஆத்மீகரீதியில் வடிவமைப்பதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானம் குறித்து என் உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகளை விளக்குவதற்கும் கவனம் செலுத்தியிருக்கிறேன். 'நுபுவ்வத்' பணியின் சோதனைகளுக்கு உகந்த உருவாக்கமாக அது அமைந்திருந்ததையும் விளக்கியிருக்கிறேன்.

இவ்வாய்வை நிறைவுசெய்வதில் எனக்குதவிய அனைவருக்கும் நிறைவான நன்றிகளைத் தெரிவிப்பதே இப்பீடிகையில் எஞ்சியிருக்கிறது. அந்த வகையில், அறிவியல் ஆய்வுகளுக்கான இப்னு ஃகல்தூன் நிறுவனத்தின் மேலாளராக என்னைத் தெரிவுசெய்த மலேஷிய சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் பேராசிரியை ஸூலைஃகா கமறுத்தீனுக்கும் அவரது பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவிக்கிறேன். ஏனெனில், அந்தத் தெரிவுதான் இந்நூலின் ஆரம்ப அத்தியாயங்களை எழுதுவதற்கு அவசியமான பல ஆய்வுகளில் முழு நேரமாக ஈடுபட எனக்கு உதவியது. உணர்ச்சிவயப்பாடு குறித்த மேற்கத்திய உளவியல் கருதுகோள் பற்றி ஆய்வுசெய்யவும் அது உதவியது.

இரண்டாவதாக எனது பெரும் நன்றியும் கடமைப்பாடும் இஸ்தான் பூல் ஸபாஹுத்தீன் ஸஈம் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் முஹம்மது பூலூத் அவர்களுக்குரியது. மலேஷிய இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் எனது பணி நிறைவடைந்த பிறகு நூல்களை யும் இதர பொருள்களையும் திரட்டிக்கொண்டு சூடானுக்குத் திரும்ப நான் தயாராகிக்கொண்டிருந்தபோது அவர் என் அலுவலகத்துக்கு வருகைதந்தார். அருள்பொருந்திய அவரது பல்கலைக்கழகத்தில் இணைந்துகொள்ளுமாறு எனக்கு அவர் அழைப்பு விடுத்ததுடன், இந்நூலை நிறைவுசெய்ய உதவும் வகையில் எனது சுமைகளைக் குறைப்பதாகவும் வாக்களித்தார். மட்டுமன்றி, இந்நூலைப் பதிப்பிக்கும் பணியையும், ஆங்கிலம், துருக்கி மொழிகளுக்குப் பெயர்க்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

ஸஈம் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் புலத் தலைவர் பேராசிரியர் ஹசன் காமில் யல்மாஸ் அவர்களுக்கும் எனது நன்றி. பல்கலைக்கழகம் சார்பாக இந்நூலுக்கான அணிந்துரையை அவரே எழுதினார்.

துருக்கியின் மர்மறா பல்கலைக்கழகத்தின் ‘தசவ்வுஃப்’ துறைப் பேராசிரியரான என்னுடைய அன்பு நண்பர் முனைவர் சுலைமான் தெரின் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி செலுத்த மறக்கலாகாது. எனது இந்நூல் பற்றிப் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முன்வைக்கும்படி அவர் என்னிடம் வேண்டிக்கொண்டதுடன், அவற்றை இணையத்தில் பதிவேற்றுவதற்காகத் துருக்கி மொழிக்கு மாற்றமும் செய்தார். எனது சிந்தனைகளை ஒழுங்கமைக்கவும், உதாரணங்கள் மூலமாக அவற்றின் மொழியை எளிமைப்படுத்தவும் இத்தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உதவின.

என் அருமைச் சகோதரர் முனைவர் ஃகாலித் அல்துகைம் அவர்களும் எனது மனமார்ந்த நன்றிக்குரியவர். அவர் இந்நூலை நுணுக்கமாகத் திருத்தியமைத்ததுடன், அவரது ஆலோசனைகளும் கருத்துகளும் ஊக்குவிப்பும் என்னில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஏனெனில், அவர் அறபு மொழியிலும் அணியிலக்கணத்திலும் சிறப்புத் தேர்ச்சி கொண்டிருப்பது மட்டு மன்றி இஸ்லாமியக் கல்வி, சமயக் கல்வி ஆகியவற்றின் அடிப் படைத் தத்துவத்திலும் சிறப்புத் தேர்ச்சி கொண்டவர். இத்தேர்ச்சி இஸ்லாமிய உளவியலைக் கற்பிக்கும் தகைமையை அவருக்கு அளித்திருந்தது. அவர் எனக்கு வழங்கிய வழிகாட்டல்கள் இந்த அனைத்து அறிவிலிருந்தும் பிறப்பனவாய் அமைந்திருந்தன.

உளவியல் விஞ்ஞானப் பிரிவில் என்னுடைய உதவியாளராகச் செயல்படும் ஆய்வாளர் ஈசா ஷாக்கிரையும் நன்றியுடன் மெச்சுகிறேன். எனக்குப் பதிலாக எனது பல நிர்வாக, கற்பித்தல் பணிகளை அவரே மேற்கொண்டிருந்தார். அவர் இல்லையென்றால் அப்பணிகள் எனது பெருமளவு நேரத்தையும் முயற்சியையும் விழுங்கியிருக்கும்.

இறுதியாக, இந்நூலை அறிவாய்வுரீதியாகவும் முறைமை சார்ந்தும் செம்மைப்படுத்தப் பங்களித்த 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவன'த்திற்கும் (IIIT) எனது நிறைவான நன்றிகள். அதன் அறிவார்ந்த சேர்க்கைகள் வசனங்களையும் சிந்தனைகளையும் அறிவியல் முறையில் உரையாடும் வகையில் அமைந்துள்ளன. நிறுவனத்தின் உற்பத்திகளிலும் சிந்தனைத் திட்டங்களிலும் இந்த அணுகுமுறையை நாம் பொதுவாகவே அவதானிக்க முடியும்.

இன்னும் பலர் எனக்கு உதவினாலும் அனைவரையும் இங்கு குறிப்பிட முடியாமைக்காக மன்னிக்க வேண்டுகிறேன். அவர்களுக்கு நற்கூலி வழங்கும் பொறுப்பு அல்லாஹ்வுக்குரியது.

அனைத்து விவகாரங்களும் — ஆரம்பமாகவும் இறுதியாகவும் — இறைவனுக்கே உரியவை.

நமது தலைவர் முஹம்மது ﷺ மீது அவன் பேரருள் பொழிவானாக!

மாலிக் பத்ரீ,

இஸ்தான்பூல்,
ஜூன் 2020

### கல்வியியல் ஆய்வுகளின் இறுக்கத்துக்கும் உணர்வார்ந்த அவதானத்துக்கும் மத்தியில்

# நூலின் மொழிநடை

வழக்கமாக நான் பின்பற்றும் இறுக்கமான அறிவியல் நடையிலிருந்து வேறுபட்ட ஒரு நடையையே இந்நூலில் கையாண்டிருக்கிறேன் என்பதை ஆரம்பத்தில் வாசகருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உள்ள கருத்தாடல்களின் ஒரு பகுதி எனது அகநிலையிலிருந்தும் தனிப்பட்ட அனுபவத்திலிருந்தும் ஊற்றெடுத்ததாகும். அவை வசனங்களையும் நிகழ்வுகளையும் பற்றிய எனது ஆழ்ந்த அவதானத்துடன் தொடர்புபட்டவை. நூலின் இவ்வுள்ளடக்க இயல்புதான் சிந்தனைகளையும் நிகழ்வுகளையும் எடுத்தாள்வதற்கான முறைமையை இவ்வாறு நான் வரையறை செய்யக் காரணமாகியது. அதற்கு அமைவாகவே, ‘உளவியல் அவதானங்களும் சிந்தனைக் கிளர்வுகளும்’ என்ற வசனப் பிரயோகத்தையும் இந்நூலின் தலைப்பிலேயே பதிவுசெய்திருக்கிறேன். அகநிலை–புறநிலை, விஞ்ஞானம்–மெஞ்ஞானம், விதிகள்–ஆழ்ந்த அவதானங்கள் முதலிய இருண்மைகளுக்கிடையில் சமநிலை பேணுவதே இதன் நோக்கமாகும்.

இஸ்லாமிய நம்பிக்கையும் (அகீதா), நபிமார்கள் வரலாறும் தொடர்பான அடிப்படையான விவகாரங்களைக் கலந்துரையாடும் இவ்வகை இஸ்லாமியச் சிறப்புத்துறைகளுக்கும் உளவியலுக்கும் மத்தியிலான தொடர்பைப் பற்றிய சில தவறான கருத்தாக்கங்களைத் திருத்தம் செய்ய உதவவே இவ்வாய்வினூடாக நான் விரும்பினேன். மட்டுமன்றி, நபிமார்களுக்கு வாய்ப்பான சூழல், அவர்களை வளர்த்தெடுக்கப் பொருத்தமான பரம்பரை என்பவற்றைத் தெரிவுசெய்வதனூடாக மலைகளாலும் சுமக்க முடியாத ஒரு பணியை மேற்கொள்ளத் தகுந்தவர்களாக அவர்களைப் பயிற்றுவிப்பதில் இயங்கிய இறைஞானத்தை விளக்கவும் முயன்றிருக்கிறேன்.

இறைவனின் இத்தெரிவில் தொழிற்பட்ட தெய்வீக உண்மைகளை வெளிப்படுத்த உகந்ததாகவே நவீன உளவியலும் காணப்படுகிறது. அந்த வகையில், உளவியல் மாணவர்களுக்கு இவ்வாய்வு பயனுள் ளதாய் அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

நபிமார்களின் உணர்வுகள் பற்றிய இஸ்லாமிய நோக்கிலான அவதானங்கள் என்ற வகையில் இவ்வாய்வு சன்மார்க்கச் சட்டங்கள் பற்றியோ 'ஃபிக்ஹு' விவகாரங்கள் பற்றியோ பேசப்போவதில்லை. மாற்றமாக, இது பேசும் விசயங்கள் நற்பண்புகள், நற்செயல்கள், மனத்தை மென்மைப்படுத்தும் அம்சங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டவையாகும்.

அந்த வகையில், 'ஸஹீஹ்' தரத்திலான நபிமொழிகளுடன் மாத்திரம் நின்றுவிடாமல் — அதுதான் என் விருப்பமாக இருந்தபோதிலும் — 'ளஈஃப்' தரத்திலான நபிமொழிகளையும் சான்றாகப் பயன் படுத்தியுள்ளேன். 'ளஈஃப்' தரத்திலான நபிமொழிகளைப் பயன் படுத்துவது தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்போருக்கு இமாம் அஹ்மது இப்னு ஹன்பலும் பிறரும் வழங்கியிருக்கும் பதில் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது:

> அனுமதிக்கப்பட்டவை, தடுக்கப்பட்டவை தொடர்பாக நபி ﷺ அவர்களிடமிருந்து ஏதும் அறிவிப்பு செய்யும்போது அவற்றின் அறிவிப்பாளர் வரிசைகளை நாம் கறாராகக் கவனிப்போம். அதேவேளை, மேலதிக நற்செயல்கள் தொடர்பான அறிவிப்பின்போதும், ஒரு சட்டத்தை ஏற்படுத்தவோ நீக்கவோ முற்படாத அறிவிப்பின்போதும் அவற்றின் அறிவிப்பாளர் வரிசைகள் தொடர்பாக நாம் கடும்போக்கைக் கடைப்பிடிக்க மாட்டோம்.[1]

பரிபாஷையில் 'ளஈஃப்' எனப் பெயரிடப்பட்டவைகூட உண்மையில் 'மவ்ழூஉ' எனும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களோ போலி ஹதீஸ் களோ அல்ல. ஹதீஸ்துறை விற்பன்னர்கள் விதித்த கண்டிப்பான நிபந்தனைகளை முழுமையாகப் பூர்த்திசெய்யவில்லை என்பதையே 'ளஈஃப்' என்னும் பதம் குறிக்கிறது.

# அத்தியாயம் ஒன்று

## நபிமார்களின் பண்புகளை ஆய்வுசெய்வதற்கு நவீன உளவியல் விஞ்ஞானம் பொருத்தமானதா?

மேற்குலகின் சில அறிஞர்கள் இருபதாம் நூற்றாண்டை 'உளவியல் விஞ்ஞானத்தின் நூற்றாண்டு' என்றே அழைக்கின்றனர். அந்த அளவுக்கு மேற்கத்தியர்களது மதச்சார்பற்ற கருத்தாக்கங்களை வடிவமைப்பதில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தம்மையும் தமது சூழமைவையும் தமது எதிர்காலத்தையும் உற்றுக் கவனிப்பதற்கு அந்நூற்றாண்டு வழியமைத்தது.

இன்னும் சிலரது கருத்துப்படி, உளவியல் விஞ்ஞானம் மேற்கு ஐரோப்பாவின் புதிய மதம்போன்றே ஆகிவிட்டது. அந்த வகையில், அது திருச்சபையின் இடத்தைப் பிடித்தது மட்டுமன்றி, அதன் அறிஞர்கள் மதச்சார்பின்மையின் கோயில்களிலும் சுயவழி பாட்டிலும் மதகுருக்களாகவும் புரோகிதர்களாகவும் மாறி விட்டார்கள்.[2] உளவியலும் ஏனைய அறிவியல் கலைகளைப் போலவே மனிதனது மதச்சார்பற்ற-சடவாதச் சிந்தனையைத் தத்தெடுத்துக்கொண்டதுதான் இதற்கான காரணமாகும். எனினும், மேற்கத்தியர்களை இக்கோட்பாட்டை ஏற்கச்செய்வதற்கு அத் துறையின் கற்றறிவாளர்கள் இன்னும் சக்தி படைத்தவர்களாகவே உள்ளனர். அந்த வகையில்தான், திருச்சபைப் பின்னடைவும் மதப்போதனைகளை உதறித்தள்ளியமையும் ஏற்படுத்திய இடை வெளியை நிரப்பும் நம்பிக்கைக் கோட்பாடாக உளவியல் விஞ்ஞானம் இன்று அங்கு மாறியுள்ளது.

உளவியல் விஞ்ஞானம் மனிதனின் இயல்பு குறித்தும் நடத்தை குறித்தும் ஆராய்வதைத் தனது சிறப்புத்துறையாகக் கொண்டது என்ற வகையில், மதச்சார்பற்ற சிந்தனை தன்னை நியாயப்படுத்திக்

2. Paul C. Vitz, '*Psychology as Religion: The Cult of Self-worship*'. London: William Eerdmans Publishing, 1977.

கொள்வதற்கான அனைத்து வழிகளையும் அது ஏற்படுத்திக் கொடுத்தது. எனவே, அதன் பிறகு தன்னைத்தானே ஆளும் அரசனாகத் தனிமனிதனுக்கு முடிசூட்டிவிடுவதில் மதச்சார்பற்ற மானுடத்திற்கு எந்தச் சிரமமும் இருக்கவில்லை. அந்த வகையில், திருச்சபைக்கு உரித்தாக இருந்த அனைத்து விழுமிய-சட்ட அதிகாரங்களும் தனிமனிதனுக்கு அருளாக வந்துசேர்ந்தன. இதனால் அவன் தனது மதப்போதனைகளைப் புறக்கணித்தது மட்டுமன்றி, தனது படைப்பியல்புக்கு முரணான பல விசயங்களைக்கூடத் தனக்கு ஆகுமாக்கிக்கொண்டான்.

ஆக, இத்தகைய தன்மை கொண்ட ஒரு சிறப்புத்துறை இறைத் தூதர்களது பண்பொழுக்கங்கள் குறித்து ஆராய்வதற்குப் பொருத்த மானதா?

இக்கேள்விக்கான விடையாக 'ஆம்' என்பதோ 'இல்லை' என்பதோ, கேள்வி கேட்பவரும் கேட்கப்படுபவரும் எந்த உளவியல் பிரிவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அதிலேயே தங்கியுள்ளது.

## இறைத்தூதர்களின் உணர்வுகளை ஆய்வுசெய்வதற்குப் பயன்பட முடியாத அல்லது பயன்படுத்த முன் வடிகட்டப்பட வேண்டிய முக்கியமான உளவியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும்

மேற்கத்திய உளவியல் விஞ்ஞானம் என்பது தனித்துவமான ஒரு சிறப்புத்துறையாகும். வரலாற்றுத் துறைபோன்ற அதிக வரையறுத்த தன்மை கொண்ட அனைத்து சமூகவியல் துறைகளிலிருந்தும் அது வேறுபட்டது. மதச்சார்பற்ற தனித்துவமான கலவை அது; நவீனப் பரிசோதனை அறிவியலை ஆதாரமாகக் கொண்ட சில பரிமாணங்களையும், உண்மையான அறிவியல் சான்றுகளற்ற சிந்தனைகளையும் கருதுகோள்களையும் ஒன்றிணைத்த கலவை அது. மட்டுமன்றி, அதன் சில பகுதிகள் மிகைப்படுத்தலும் புறநடையான சடவாதப் புனைவுகளும் கொண்டவை. பொதுவாக இத்துறையின் பெருமளவான உள்ளடக்கமே அத்தகைய மிகைப்படுத்தல்களும் புனைவுகளும்தான்.

மேற்கத்திய உளவியல் நூல்களின் பெரும்பாலான பக்கங்களில் ஆதிக்கம் செலுத்தும் கோட்பாடுகளும் செயல்முறைகளும் ஆய்வுகளும், அத்துறை சார்ந்த சிந்தனைப் பள்ளிகளின் முன் னோடிகள் மனிதனது இயல்பு குறித்து முன்வைத்த அபிப்பிரா யங்களையும் கருதுகோள்களையும் அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டவை.

தமது நிலைப்பாடுகள் விஞ்ஞானபூர்வமானவை என்று அந்த முன்னோடிகள் கூறியபோதிலும், அவர்கள் பரிசோதனைக் கூடங்களிலோ கள ஆய்வுகளிலோ முழுமூச்சாக ஈடுபட்டுத் திட்டவட்டமான கண்டுபிடிப்புகளை முன்வைத்தவர்கள் அல்லர். அவர்கள் கூறியவற்றுள் அனேகமானவை அவர்களது சொந்தச் சிந்தனைகளாக அல்லது அவர்கள் வாழ்ந்த நாகரிகத்தின் தாக்கத்தி னாலோ, தனிப்பட்ட வாழ்வின் தாக்கத்தினாலோ, பெற்றோர் அவர்களை வளர்த்த முறையினாலோ, அவர்களது தனிப்பட்ட உளவியல் பிரச்சினைகளின் விளைவாலோ தோன்றியவை.

ஆனால், மனிதனின் இயல்பைப் பற்றிய இத்தகைய சடவாதக் கருதுகோள்கள்தான் — அவற்றுள் சில ஆரோக்கியமான தர்க்கத்தி லிருந்தும், சிறந்த ஒழுக்க விழுமியங்களிலிருந்தும் தூரமானவையாக இருந்தபோதிலும் — பல ஆய்வுகளுக்கான அடிப்படை மூலாதாரங் களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் உளவியல் பள்ளியின் பின்பற்றாளர்களும் அவ்வாய்வுகளைப் போட்டிபோட்டு மேற்கொண்டு தமது பள்ளி நிறுவனரது கருதுகோள்களை உறுதிப்படுத்த முயன்றுள்ளனர். ஏனெனில், இக்கருதுகோள் ஒவ்வொன்றும் அந்தந்தப் பள்ளியின் உளவியல் கோட்பாட்டு, நடைமுறைக் கட்டொழுங்கிற்கான அஸ்திவாரமாக உள்ளது. இதனால், மனிதனின் இயல்பைக் கண்டறிவதில் ஏற்பட்ட ஒவ்வொரு பிறழ்வும் அதனை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டி யெழுப்பப்பட்ட உளவியல் கட்டடத்தில் ஒரு சிதைவு தோன்றக் காரணமாக அமைந்தது. அதன் கோட்பாடுகளும் செயல்வாதங்களும் போலித்தனமான அறிவியலாக மாறின. அவற்றின் சொந்தக்காரர்கள் அவற்றைச் சரியான பரிசோதனை முறையிலான அறிவியல் என வாதிட்டபோதிலும் உண்மைநிலை இதுதான்.

நவீன உளவியல் துறை தனது உருவாக்கக் காலம்தொட்டு ஒரு நூற்றாண்டை நிறைவுசெய்தபோது, அந்தச் சிறப்புத்துறையின் அறிவியல் அந்தஸ்தையும் சிந்தனா உற்பத்தியையும் மதிப்பீடு செய்ய அமெரிக்க உளவியலாளர் சங்கம் அமெரிக்காவின் மகத்தான உளவியல் சிந்தனையாளர் ஒருவரை நியமித்தது. அவர் போஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிக்மன்டு காச் (Sigmund Koch).[3] உளவியல் துறையில் மட்டுமன்றித் தத்துவம், திறனாய்வுச் சிந்தனை என்பவற்றிலும் பிரபலமானவர். இவ்வறிவியலாளர் தனது பணியை நிறைவுசெய்து முழுமையான ஒரு அறிக்கையையும்

3. Sigmund Koch, S.C.ed., '*Philosophy of Psychology*'. London: The Macmillon Press (Ltd), 1979.

எழுதினார். அதில் வந்த மிக முக்கியமான பகுதியை மொழிமாற்றித் தருவதில் மகிழ்வடைகிறேன்:

> உளவியல் விஞ்ஞானத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் திரட்சியடைந்து முழுமையாக நூறு ஆண்டுகள் கழித்து விட்டபோதிலும், அதனால் நாம் கண்டடைந்த உண்மைகளும் புதிய சிந்தனைகளும் சொற்பம்தான். விஞ்ஞானபூர்வமானவை என்று கூறப்பட்ட பல தகவல்கள் இந்தச் சிறப்புத்துறைமீது ஆதிக்கம் செலுத்தியமையே இதற்குக் காரணமாகும். ஆனால் உண்மையில் அவை போலியான தகவல்களே (Pseudo knowledge) அன்றி விஞ்ஞானபூர்வமானவை அல்ல ...[4]

உளவியல் துறைமீது ஆதிக்கம் செலுத்திய இப்போலியான அறிவியல் தகவல்கள் மனிதர்கள்மீது பெரும் தாக்கம் கொண்டவை. மனிதனின் இயல்புக்கு முரண்பாடான பல அபத்தமான கருது கோள்களால் உளவியல் துறை நிறைந்திருக்கிறது. அவற்றைச் சூழப் பின்னப்படும் பல கோட்பாடுகளும் ஆய்வுமுறைமைகளும் அவை உண்மையானவைதான் என உறுதிப்படுத்த கடும் பிரயத்தனம் செய்கின்றன. அந்த வகையில், யாராவது கோட்பாட்டாளர் ஒருவர் மனிதனை ஒரு கரப்பான் பூச்சி என்றோ எலி என்றோ நாய் என்றோ மனத்தால் ஏற்றுக்கொண்டுவிட்டால், அவர் மனிதன் பற்றிய இவ்விசித்திரக் கருதுகோளுக்கு இசைவான கோட்பாட்டாக்கத்தையும் செயல்முறைகளையும் நோக்கிச் செல்வது நிச்சயம்.

அதேபோன்றுதான், மனிதன் என்பவன் ஒரு 'தொலைபேசி அழைப்பு மாற்றி' (Phone call converter)[5] என்றோ, அல்லது 'புகழுக்கும் வெகுமதிக்கும் அலைபவன்' என்றோ, தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையில் வைக்கப்பட்ட 'காவற்படை'[6] என்றோ, கணினி[7] என்றோ, 'பாலியல் வீரியமாற்றி'[8] என்றோ பல்வேறு உளவியல் பள்ளிகளின் முன்னோடிகள் நம்பிவிட்டால் அந்த நம்பிக்கையை நியாயப்படுத்துகின்ற போலியான கோட்பாடுகளும் செயல்முறைகளும் தோன்ற நிச்சயமாக வழியமைக்கப்பட்டுவிடும்.

இக்கருதுகோள்களும் சிந்தனைப் பள்ளிகளும் அவற்றிலிருந்து பிறந்த பல்வேறு போலிக் கோட்பாடுகளும் செயல்வாதங்களும் ஏராளம். ஆயினும், உளவியல் விஞ்ஞானத்தை வார்ப்பதில்

---

4. மேலது.
5. உயிரியல் கருதுகோளாளர்கள் அப்படித்தான் மனிதனை வர்ணிக்கிறார்கள்.
6. நடத்தையியலாளர்கள் அப்படித்தான் மனிதனை வர்ணிக்கிறார்கள்.
7. அறிவுக்கருதுகோளாளர்களது வர்ணனை.
8. உளவியல் பகுப்பாய்வாளர்களது வர்ணனை.

பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய மூன்று கோட்பாடுகள் பற்றி மாத்திரம் இங்கு நாம் பேச விரும்புகிறோம். அறபிய, ஆசியப் பல்கலைக்கழகங்களின் உளவியல் துறைப் பாடப்பரப்பில் பெரும் பகுதியை இக்கோட்பாடுகளே பிடித்திருக்கின்றன. இத்துறையில் சிறப்புக் கற்கைகளை மேற்கொண்டிராதவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் எளிய வடிவில் இதனை முன்வைக்க நாம் முயல்கிறோம். அம்மூன்று கோட்பாடுகளாவன:

1. ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு (Freud's Psychoanalysis);
2. நடத்தையியல் புரட்சி (The Behavioral Revolution);
3. உயிரியல் நோக்கிலான உளவியல் (Biologically oriented Psychology).

### ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு

நவீன உளவியல் விஞ்ஞானத்தை வடிவமைப்பதில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கோட்பாடுகளுள் மிகப் பழையதும் பெரியதுமான கருதுகோளாக அமைந்தது, உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடுகளின், செயல்முறைகளின் நிறுவனராகிய ஃப்ராய்டு அறிமுகப்படுத்திய கருதுகோள்தான்.

ஃப்ராய்டினதும் அவருடைய பின்பற்றாளர்களினதும் கருது கோள்களின்படி, மனிதன் என்பவன் இயல்பாகவே சுயநலம் கொண்ட உயிரி. அவனுக்குள் நனவிலியாகக் காணப்படும் பாலியல், அடர்ந்தேறல் சார்ந்த இயல்பூக்கங்களே அவன்மீது ஆளுகை செய்கின்றன என்பது இவர்களது வாதமாகும். மனிதனது இந்த அடர்ந்தேறல் இயல்பை வலியுறுத்தியதன் மூலம் ஃப்ராய்டு கிறிஸ்தவ நம்பிக்கையைத் தலைகீழாகப் புரட்டினார். ஏனெனில், கிறிஸ்தவ நம்பிக்கையின்படி, ஆதித்தந்தையான ஆதம் தடுக்கப் பட்ட மரத்தின் கனியைப் புசித்ததால் ஏற்பட்ட பாவத்தை அனந்தரமாகச் சுமந்தவனாகவே மனிதன் பிறக்கிறான். அந்த வகையில், இவ்வனந்தரப் பாவத்தையும் பிற பாவங்களையும் கழுவிக்கொள்ளுமாறும், நன்மைகளில் முனைந்து ஈடுபடுமாறும், பாவமன்னிப்பு கோருமாறும், பாவங்களில் பிரதானமானதாகப் பாலுணர்வை நோக்குமாறும் மனிதனை அது ஏவியது. இப்பின்னணி யில்தான் ஃப்ராய்டு மக்களை நோக்கி இவ்வாறு கூறினார்:

> நீங்கள் உங்கள் பிறப்பியல்பிலேயே சுயநலம் கொண்டவர்கள். உங்களது பாலுணர்ச்சியும் அடர்ந்தேறும் பண்புமே உங்களை இயக்குகின்றன. இந்த 'டார்வினிய' மிருக இயல்பை மாற்றவே முடியாது. அந்த வகையில், உங்கள் பாலுணர்வை உரிய வகையிலும் முடியுமான அளவிலும் தீர்த்துக்கொள்வீர்களாயின், அதன் மூலமாக உங்களது மிருக இயல்பையே நீங்கள் பூர்த்திசெய்துகொள்கிறீர்கள். அதில் எந்தக் குற்றமும் இல்லை. அதேவேளை, இப்பாலுணர்வை நீங்கள் மறுதலித்துவிடுவீர்களாயின், அடக்கிவைக்கப்பட்ட இச்சக்தி உங்கள் நனவுலகத்துக்கு வலிந்து வெளியேற முயலும். எனவே இம்மறுப்பின் மூலமாக உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்கிறீர்கள். உங்களுக்குப் பல்வேறு தற்காப்பு வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதால், இப்பாலியல் சக்தியானது உங்களது நனவுலகச் செயல்பாடுகளிலும் நனவிலிச் செயல்பாடுகளிலும் கனவுகளிலும் பல்வேறு பிறழ்வுற்ற குறியீட்டு வழிகள் மூலமாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும்.
>
> இப்பாலியல் அடக்குமுறையின் காரணமாக, பல்வேறு மனக்குழப்பங்களுக்கு உங்களை நீங்களே உட்படுத்திக் கொள்வீர்கள். அதன் பிறகு உளவியல் பகுப்பாய்வு சிகிச்சையின் மூலமே உங்களால் அவற்றிலிருந்து குணமடைய முடியும். ஏனெனில், அத்தகைய சிகிச்சையினால்தான் நனவிலி மனத்தில் நீங்கள் ஒளித்துவைத்த இருண்ட பக்கங்களைப் பிரக்ஞையுலகின் வெளிச்சத்திற்குக் கொண்டுவர முடியும்.[9]

மனிதனைப் பற்றிய இப்பிறழ்வுற்ற கருதுகோளே நீண்ட பல வருடங்களாக உளவியல் விஞ்ஞானத்தின் மீதும் சமூக விஞ்ஞானங்களின் மீதும் கலைகளின் மீதும் ஏனைய சிறப்புத்துறைகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, உளவியல் சிகிச்சையின் மீது அதன் பிடி அறுபது வருடங்களைவிட அதிகக் காலம் நீடித்திருந்தது. இக்காலம் முழுவதும் ஃப்ராய்டும் அவருடைய சகாக்களும் எவ்வித எதிர்ப்போ போட்டியோ இன்றி, மனித வாழ்வின் அனைத்து பரிமாணங்கள் குறித்துமான புறநடையான பகுப்பாய்வு வியாக்கியானங்களை விரும்பியவாறு துணிச்சலாக வழங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் மனிதனது தொட்டில் பருவம்முதல் புதைகுழிவரையிலான அனைத்து செயல்பாடு

9. Elizabeth Thornton (Mary Forrest Baxter), *'Freud and Cocaine: The Freudian Fallacy'*, London: Blond and Briggs Publishers, 1983.

களுக்கும் பாலியல்ரீதியான புறநடையான விளக்கங்களையே வலிந்து வழங்கினர்.

மட்டுமன்றி, ஃப்ராய்டு தனது சமகால நிகழ்வுகளுடன் மாத்திரம் நின்றுகொள்ளாமல் முழு மனித வரலாற்றையும் தனக்குத் தோன்றியவாறு வடிவமைக்கலானார். மனித வரலாற்றில் தோன்றிய சில மாமனிதர்களது வாழ்வைக்கூட இவ்வாறு அவர் தனது பாலியல் கருதுகோள்களினூடாகவே வியாக்கியானப்படுத்தினார். நபிமார்களையும் அவர்களது மதங்களையும் மாசுபடுத்தும் அளவுக்குக்கூட அவர் சென்றார். நீங்கள் விரும்பினால், உலகின் மிகப் பிரபலமான ஓவியமான ‘மோனாலிசா’வின் சொந்தக்காரரான லியனார்டோ டாவின்சி (Leonardo da Vinci) என்ற பெரும் கலைஞரைப் பற்றி ஃப்ராய்டு எழுதிய பிரபல நூலைப் படித்துப்பார்க்கலாம்.

இக்கலைஞரின் கலைப்படைப்புகள் பற்றிய உளவியல் பகுப்பாய்வின் மூலம் தான் கண்டடைந்த அவரது நனவிலி மனத்தூண்டல்கள் பற்றிய உண்மைகள், அவர் தனக்குள் சமபாலுறவு சார்ந்த உணர்ச்சிகளை அடக்கிவைத்திருந்ததைக் காட்டுவதாகவும், அவர் ஒருபாலுறவில் நாட்டம் கொண்டவராக இருந்ததாகவும், ஆண்களுடன் பாலியல் தொடர்பு வைப்பதை விரும்பியிருந்ததாகவும் ஃப்ராய்டு இந்நூலில் குறிப்பிடுகிறார். அதேவேளை, இக்கலைஞர் ஃப்ராய்டு பிறப்பதற்கு 350 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நபிமார்களைப் பற்றிய ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு “மோசஸும் ஓரிறைக் கொள்கையும்” என்ற அவரது இறுதி நூலில் வெளிப்படுகிறது. மோசஸ் இஸ்றவேலரன்றி எகிப்தியராகவே இருந்தார் என்றும், ஓரிறைக் கொள்கையையன்றிப் புராதன எகிப்தியரின் நம்பிக்கைகளையே அவர் கொண்டுவந்தார் என்றும் ஃப்ராய்டு இந்நூலில் குறிப்பிடுகிறார். நபிமார்கள் தொடர்பாகவும் மாமனிதர்கள் தொடர்பாகவும் கருத்துச் சொல்ல ஃப்ராய்டு கொண்டிருந்த இத்துணிச்சல்தான் சில அறபிய, முஸ்லிம் உளவியலாளர்களைக்கூட அவரை அச்சொட்டாகப் பின்பற்றத் தூண்டியது எனலாம்.

ஃப்ராய்டின் இறப்புக்குப் பிறகு அவரது வாரிசாக வந்த பகுப்பாய்வாளர்கள் முன்வைத்த கோட்பாடுகளும் கருதுகோள்களும் வெளிப்படையில் ஃப்ராய்டிலிருந்து வேறுபட்டவையாகத் தோன்றினாலும், உட்கருவில் அதிக வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதனால் ஃப்ராய்டிய உளவியல் பகுப்பாய்வே, தொடர்ந்து

வளர்ச்சியடைந்து வந்த உளவியல் சிந்தனையின் மீது — குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் — ஆதிக்கம் செலுத்தலானது.

ஆனால் ஐரோப்பிய மேற்குலகைப் பொறுத்தவரை, அங்கிருந்த ஆய்வாளர்கள் ஃப்ராய்டின் கோட்பாடுகளையும் சிகிச்சை முறை களையும் நடைமுறை சார்ந்த பரிசோதனைகளுக்கு உட்படுத்தி விமர்சனங்களை முன்வைத்ததால், அங்கு அவற்றின் தாக்கம் வெகுவாகக் குறைவடைந்தது. நடத்தையியல் புரட்சி தொடர்பான அடுத்த பகுதியில் இதனை நாம் விளக்குவோம்.

## நடத்தையியல் புரட்சி

நடத்தையியல் கோட்பாடு ஏற்படுத்திய பெரும் புரட்சிக்கு மேற்கத்திய உளவியல் விஞ்ஞானம் அரை நூற்றாண்டுகாலம் அடிமைப்பட்டுக் கிடந்தது. மட்டுமன்றி, அதன் பல கருது கோள்களுக்கும் செயல்முறைகளுக்கும் இன்றுவரை மேற்கத்திய உளவியல் விஞ்ஞானம் பணிந்திருக்கிறது. இக்கருதுகோள்கள், செயல்முறைகள் ஆகியவற்றின் இலக்கு உளவியல் விஞ்ஞானத்தைப் பரிசோதனை முறையிலான ஓர் சிறப்புத்துறையாக மாற்றுவதாகும். அந்த வகையில், ஃப்ராய்டிய பகுப்பாய்வுக் கோட்பாடுகளையும், மனிதனது நனவிலி மனம், பாலியல் இயல்பூக்கங்கள், அடர்ந்தேறும் இயல்பு என்பவற்றின் மீது அவை செலுத்தும் மூர்க்கமான கவனக் குவிப்பையும் நடத்தையியல் கோட்பாடு பரிகாசம் செய்தது.

ஆயினும் மனிதனது இயல்பு பற்றிய, இக்கோட்பாடு அடிப் படையாகக் கொண்ட கருதுகோள்கூட ஃப்ராய்டின் கருதுகோளைவிட மதச்சார்பின்மையில் எவ்வகையிலும் குறைந்ததாக இருக்கவில்லை. ஏனெனில், நடத்தையியலாளர்களும் மேற்கத்திய மதச்சார்பற்ற நம்பிக்கைக்கே வேறொரு முறையில் ஆதரவளித்தனர். அவர்கள் கூறியது இதுதான்: மனிதன் என்பவன் பொதுவாகவே எந்த இயல்புமற்ற விலங்கு. உட்படும் சூழலுக்கேற்பவே அவனது இயல்பு வடிவாக்கம் பெறுகிறது. இந்த வகையில், தான் வாழும் சூழலின் காற்றுக்கேற்ப அசையும் இறகாக அவன் இருக்கிறான்.

ஆக, நடத்தையியல் கருதுகோளின்படி, மனித இயல்புருவாக்கத்தில் அவனது பிறப்பியல்புக்கோ பாரம்பரிய நடத்தைக்கோ எந்தப் பங்கும் இல்லை. நிலையான விழுமியங்கள் என எதுவுமில்லை. மாறாக, மனிதனது வளர்ப்புமுறைக்கேற்பவே அது அமையும். எனவே, தனிநபர்களதும் குழுமங்களதும் நடத்தை குறித்து தீர்ப்பளிப்பதற்கு விழுமிய அல்லது சமய அளவுகோல்களை

அடிப்படையாகக் கொள்ள முடியாது. அந்த வகையில், நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ யாருமில்லை. அனுமதிக்கப்பட்டது என்றோ தடுக்கப்பட்டது என்றோ எதுவும் கிடையாது. ஒவ்வொரு சமூகமும் தனக்கும் தனது நாகரிகத்துக்கும் பொருந்தக்கூடிய சட்டங்களையே ஏற்படுத்திக்கொள்ளும்.[10]

விழுமியரீதியாகக் 'குருடாகி'விட்ட இத்தகைய நம்பிக்கை நபிமார்களது உணர்வுகளை ஆய்வுசெய்யப் பொருத்தமாக இருப்பது எப்படிப் போனாலும், சாதாரண மனித உணர்வுகளை ஆய்வுசெய்வதற்குக்கூடப் பொருத்தமற்றதாக உள்ளது. ஆயினும் — இச்சித்தாந்தத்தில் காணப்படும் கோளாறுகளுக்கு மத்தியிலும் — நடத்தையியல் சிகிச்சையை வளர்த்தெடுப்பதில் நடத்தையிய லாளர்கள் கண்ட பிரமிக்கத்தக்க வெற்றிக்காக அவர்களை நாம் மெச்சுகிறோம். இத்துறையில் அவர்கள் ஏற்படுத்திய புரட்சியானது உளவியல் பகுப்பாய்வையும், பாலியல், அடர்ந்தேறல் சார்ந்த நனவிலித் தூண்டல்களை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறைகளையும் கோட்பாடுகளையும் வீழ்த்தியது.

பயனுள்ள நடத்தையைக் கற்றுக்கொள்வதிலும், கேடான அல்லது நோய்த்தன்மை கொண்ட பழக்கங்களிலிருந்து விடுபடுவதிலும் பயிற்றுவித்தலின் முக்கியத்துவத்தை அவர்கள் மீள நிலைநிறுத்தினர். இப்பயிற்றுவித்தல் முறையையே மனித இனம் தொன்றுதொட்டு அறிந்துவைத்திருந்தது. குழந்தை வளர்ப்பிலும், வேட்டைக்காக நாய்களையும் பறவைகளையும் பயிற்றுவிப்பதிலும் இம்முறையை அது பின்பற்றியும் வந்திருக்கிறது. இத்துறையில் சிறப்புக் கற்கையைக் கொண்டிராத வாசகருக்கு இதனைப் புரியவைக்கும் வகையில் இங்கு நான் எளிமையான ஓர் உதாரணத்தைத் தருகிறேன்:

> நடத்தையியல் சிகிச்சையானது கற்றல் தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆரோக்கியமான ஒருவர் இருபதாம் மாடியில் உள்ள தனது வீட்டுக்குச் செல்ல மின்னுயர்த்தியைப் பயன்படுத்துவதற்கும், தனது வீட்டின் பால்கனியிலிருந்து மனிதர்கள், வாகனங்களின் அசைவுகளைப் பார்த்து ரசிப்பதற்கும் பழக்கப்படுவது இயல்பானது. அதேவேளை, உளவியல் சமநிலையற்ற ஒருவர் அத்தகைய உயர்ந்த இடங்களைப் பார்த்து கடுமையான அச்சம் கொள்ள முடியும். அத்தகையவர் மின்னுயர்த்தியில் ஏறவோ, மிக உயர்ந்த ஓர்

10. John Carl Flügel, *'Man, Morals and Society: A Psychoanalytical Study'*, Beirut, 1966.

இடத்துக்கு ஏறி பூமியைப் பார்க்கவோ மறுத்துவிடலாம். அப்படி ஏறும்போது பெரும் அபாயத்துக்கு உட்படுவதான உணர்வுகூட அவரை ஆட்கொள்ளலாம்.

உயர்ந்த இடங்கள் பற்றிய இந்தப் பய உணர்வு நனவிலி மனப் போராட்டத்திலிருந்து ஊற்றெடுப்பதாகவும், பாலுணர்வு சார்ந்த காரணங்கள் அதற்குப் பின்புலத்தில் காணப்பட முடியும் எனவும் ஃப்ராய்டும் அவருடைய சகாக்களும் வாதிட்டனர். அல்லது குழந்தைப் பருவத்தில் அவர் கடந்துவந்த சில அனுபவங்கள் அதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும், அடக்கிவைக்கும் பழக்கத்தினால் அந்த அனுபவங்களை அவர் மறந்திருக்கலாம் எனவும் அவர்கள் கூறினர். இந்நிலையில், அத்தகைய நோயாளி ஒருவர் அவர்களிடம் பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் நீண்ட பல சிகிச்சைகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. அவரது குழந்தைப் பருவ நினைவுகளை அல்லது நனவிலி மனப் போராட்டத்தை வெளிக்கொணர்வதே அந்த சிகிச்சைகளின் நோக்கமாகவும் இருந்தது.

ஆனால், பின்னர் வந்த நடத்தையியல் சிகிச்சைமுறை இப்படிச் சொன்னது:

நனவிலி மனப் போராட்டம் என்றோ, பாலுணர்வு சார்ந்த புனைவுகள் என்றோ எதுவும் கிடையாது. மாறாக, உயரமான இடங்களைப் பார்த்து அஞ்சுதல் என்பதே ஒரு நோய்தான். குறித்த நோயாளியிடம் பாதுகாப்புணர்வையும் சௌகரிய உணர்வையும் தூண்டும் அதேவேளை, உயர்ந்த இடங்களுக்கு ஏறும் பயிற்சியைப் படிப்படியாக அவருக்கு வழங்கி, நோய்த்தன்மை கொண்ட பயத்திலிருந்து கட்டம்கட்டமாக வெளியே வரும் ஆற்றலை வளர்ப்பதே அதற்கான சிகிச்சை யாகும்.

இந்நடத்தையியல் சிகிச்சைமுறையின் பெறுபேறுகள் பிரமிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தன. இதுபோன்ற அனைத்து நோய் நிலைமைகளையும் நடத்தையியல் சிகிச்சைமுறையின் முன்னோடி யான 'வொல்பே' (Wolpe) சில வாரங்களிலேயே சிகிச்சையளித்துக் குணப்படுத்தினார். இவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்டவர்களுள் சிலர், முன்பு பல வருடங்கள் உளவியல் பகுப்பாய்வு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டும் சிகிச்சையில் தோல்விகண்டவர்கள் ஆவர்.[11]

---

11. Joseph Wolpe, *'Psychotheraphy by Reciprocal Inhibition'*, Stanford: Stanford Univ. Press, 1958.

எளிய உணர்ச்சித் தொந்தரவுகளுக்கு சிகிச்சையளிப்பதில் நடத்தையியல் சிகிச்சைமுறை அபார வெற்றிகளைச் சாதித்துக்கொண்டது. நோயாகக் கொள்ளத்தக்க அச்சம் (Phobia) போன்ற உணர்ச்சிக் கோளாறுகள் நோயாளியின் சூழலில் தூண்டல்களாக வடிவமைக்கப்பட்டு அவற்றுக்கான துலங்கல்களை அவரிடம் உண்டுபண்ணுவத னூடாக இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. படிமுறையிலான பயிற்றுவிப்பை அது அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் புது வகையான சிகிச்சைமுறைகளையும் உள்ளடக்கியிருந்தது. ஆயினும், நோயாளியின் தவறான கற்பனைகளாலும் கருதுகோள்களாலும் உருவாகின்ற மன அழுத்தம் (Depression) போன்ற சிக்கலான உணர்வுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த சிகிச்சைமுறை அவ்வளவு தூரம் வெற்றியடையவில்லை.

இந்த வகையிலேயே ‘அறிவாற்றல் நடத்தை சிகிச்சை’ (Cognitive Behavioural Theraphy) முறை தோன்றி, நோயாளியின் மனத்தில் படிந்திருக்கும் சிந்தனைகளையும் கற்பனைகளையும் நிகழ்காலச் சூழமைவையும் மாற்றியமைக்கும் நோக்குடன் இயங்கலானது. இந்த ‘அறிவாற்றல் நடத்தை சிகிச்சை’ முறைமை இன்று — நடத்தையியல் சிகிச்சையாளர்களது ஒத்துழைப்புடன் — மேற்கத்திய உலகிலும், உளவியல் பகுப்பாய்வு முறையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்ற அனைத்து சிகிச்சை நிலையங்களிலும் விருப்பத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆக, நடத்தையியலாளர்கள் உளவியல் பகுப்பாய்வு முறையைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிட்டார்கள். அதன் சிந்தனைகள் எவ்வளவு ஆபத்தானவை என்பதையும், அதன் சிகிச்சைமுறைகள் எவ்வளவு தோல்விகரமானவை என்பதையும் அவர்கள் வெளிக் கொண்டுவந்தார்கள். ஃப்ராய்டு பற்றிய மதிப்புணர்வு குறைவடைந்து அவர் மீதான விமர்சனங்களும் அதிகரித்தன. அவரது சிகிச்சை முறையின் கேடுகளையும் பயனின்மையையும் மனோதத்துவ ஆய்வாளர்களும் வரலாற்றாசிரியர்களும் வெளிக்கொண்டுவந்தனர்.

எடுத்துக்காட்டாக, பிரிட்டனின் பிரபல உளவியலாளரான ஹேன்ஸ் ஐசென்க் (Hans Eysenck) ஏழாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க மன நோயாளர்கள்மீது நடத்திய ஆய்வில், உளவியல் பகுப்பாய்வு மூலமாக சிகிச்சை வழங்கப்பட்டவர்களுக்கும் அறவே சிகிச்சை எடுத்துக்கொள்ளாதவர்களுக்கும் மத்தியிலான ஓர் ஒப்பீட்டை நடத்தினார். குறித்த பரிசோதனை நிகழ்ந்து ஒரு வருடத்தில் சிகிச்சை பெறாதவர்களில் 72% நோயாளர்களது மனநிலை சீரடைந்துவிட்ட

அதேவேளை, பகுப்பாய்வு சிகிச்சை பெற்றவர்களுள் 44% நோயாளர்கள் மட்டுமே குணமடைந்திருந்ததாக அவர் கண்டறிந்தார்.[12] இப்பரிசோதனையானது உளவியல் பகுப்பாய்வின் முகத்துக்கு முன்னால் வெடித்த குண்டாகவே கருதப்பட்டது. குறைந்தபட்சம், உளவியல் பகுப்பாய்வானது உளவியல் சிகிச்சை என்ற வகையில் எந்தப் பயனுமற்றது என்பது இதன் மூலம் தெளிவாகியது. ஆனால், உளவியல் சிகிச்சைமுறை பிரயோகிக்கப்பட்டவர்களது நிலை முன்பிருந்ததைவிட மோசமாகிவிட்டதைப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தின.[13]

கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் மேலும் நுணுக்கமான ஆய்வுகள் பிரசுரமாகின. அவை ஃப்ராய்டின் நம்பகத்தன்மையையே ஐயத்திற்குட்படுத்தின. அவ்வாறே, உளவியல் பகுப்பாய்வானது அதன் பாரம்பரிய வடிவத்தில் பயனற்றது என்பதையும் அவை உறுதிப்படுத்தின. ஐரோப்பியப் பெண் ஆய்வாளரான தார்ன்டன் (Thornton) தொகுத்த பெறுமதி வாய்ந்த ஆய்வுகளும் அவற்றினுள் அடங்கும். மனிதர்களது அனைத்து செயல்பாடுகளையும் நனவிலி மனப் பாலியல் தூண்டல்களோடும் அடர்ந்தேறல் பண்புகளோடும் தொடர்புபடுத்துகின்ற விசித்திரமான கோட்பாடுகளை ஃப்ராய்டு எழுதியபோது அவர் ஆரோக்கியமான மனநிலையிலோ அறிவுடனோ இருக்கவில்லை என்பதை அந்த ஆய்வுகளில் தார்ன்டன் உறுதி செய்கிறார். ஏனெனில், ஃப்ராய்டு அவற்றை எழுதும்போது கொகெயின் என்னும் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தார். தனக்கு ஏற்பட்டிருந்த வாய்ப் புற்றுநோயின் வேதனையைக் குறைப்பதற்காக அந்தப் போதைப்பொருளைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டிருந்த அவர், இறுதியில் அதனை அதிகளவு உட்கொண்டு தற்கொலையும் செய்துகொண்டார்.

மேலும், ஃப்ராய்டு தான் சிகிச்சையளித்துக் குணப்படுத்தியதாகக் கூறும் மனநோயாளர்கள்கூட உண்மையில் குணமடையவில்லை என்பதையும், அவர்களில் சிலர் மனவியல் நோய்களாலன்றி உடலியல் உபாதைகளுக்கு உட்பட்டிருந்தவர்கள் என்பதையும் மேற்குறித்த ஆய்வாளர் ஏராளமான வரலாற்று ஆய்வுகளினூடாக உறுதிப்படுத்தினார். ஃப்ராய்டு தனது 'பிரமிப்பூட்டும்' வெற்றிகளைப் பற்றி எழுதியவை வெறும் பொய்களும் போலிவாதங்களுமே

12. Hans Eysenck, *'The Effects of Psychotheraphy: An Evaluation'*, Journal of consult. Psychology:16, p.319–324, 1952.

13. Melitta Schmiedeberg, *'Psychotheraphy with Failures of Psychoanalysis'*, British Journal of Psychology:116, p.195–200, 1970.

என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். அவர் தொகுத்த ஆய்வுகள் 'ஃப்ராய்டும் கொகெயினும் (Freud and Cocaine)' என்ற தலைப்பில் நூலுருப்படுத்தப்பட்டது.[14] இந்த ஆய்வுகளும் இவற்றுக்குப் பின் வெளிவந்த ஆய்வுகளும் ஃப்ராய்டையும் அவரது கோட்பாடுகளை யும் பல மேற்கத்தியப் பல்கலைக்கழகங்களில் 'உளவியல் சிகிச்சை' என்ற சிம்மாசனத்திலிருந்து 'உளவியல் வரலாற்றைக் கற்றல்' என்ற நிலைக்குத் தரமிறக்கிவிட்டன.

நபிமார்களது உணர்வுகளை மட்டுமன்றி, சாதாரண மனித நடத்தையைக்கூட விளக்குவதற்குப் பொருத்தமற்ற சில பக்கங்கள் நவீன உளவியலில் காணப்படுகின்றன என்பதை வாசகருக்கு விளக்குவதற்காகவே ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு முறை யைப் பற்றிய விமர்சனத்தை இவ்வளவு தூரம் விளக்கினோம். அதனைப் பின்பற்றிச்சென்ற சில அறபிகளதும் முஸ்லிம்களதும் செயல்பாடுகள் குறித்து வாசகருக்கு விழிப்பூட்டுவதே இங்கு நமது நோக்கமாகும். ஏனெனில், மேலே நாம் முன்வைத்த எந்த ஆய்வுகளும் சான்றுகளும் இத்தகையோரது உளவியல் சிகிச்சைச் செயல்பாடுகளில் பாதிப்பு செலுத்தவில்லை. அதனால்தான் இன்றும்கூட சில அறபு-இஸ்லாமிய நாடுகளின் சிகிச்சை நிலை யங்களில் பாரம்பரிய ஃப்ராய்டிய உளவியல் பகுப்பாய்வு முறை அச்சொட்டாகச் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இந்நாடுகளில் உள்ள பல உளவியலாளர்கள் ஃப்ராய்டிய உளவியல் பகுப்பாய்வு குறித்த எந்த விமர்சனத்தையும் ஏற்பதில்லை. மட்டுமன்றி, தமது நாடுகளின் சமூகவியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தல் என்ற பெயரில் ஃப்ராய்டின் கோட்பாடுகளையும் உதவிக்கு எடுத்துக்கொண்டனர்.

ஃப்ராய்டின் புகழ்பாடும் வகையில் சில அறபு உளவியல் பகுப்பாளர்கள் எழுதிய ஆக்கங்களை வேண்டுமானால் வாசித்துப்பாருங்கள். மனிதர்கள் தம்மைத்தாமே பார்க்கும் விதத்தையும், உலகத்தைப் பற்றிய அவர்களது புரிதலையும் மாற்றியமைத்த மூவருள் ஒருவராக ஃப்ராய்டைக் கருதுமளவுக்கு அவர்களில் சிலர் சென்றனர். உளவியலாளர் ஒருவர் அறபிய உளவியல் வலைத்தள சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். 2008ம் ஆண்டில் அதன் பத்தொன்பதாவது இதழில் பிரசுரிக்கப்பட்ட அக்கட்டுரையின் தலைப்பு, 'உளவியல் பகுப்பாய்வும் அறபியச் சுயமும்: கோட்பாட்டாக்கத்திலிருந்து செயல்முறைகளை நோக்கி' என

14. Elizabeth Thornton (Mary Forrest Baxter), *'Freud and Cocaine: The Freudian Fallacy'*, London: Blond and Briggs Publishers, 1983.

அமைந்திருந்தது. கட்டுரையாசிரியரான அப்துல் ஹாதீ அல்ஃபகீர் அதில் பின்வருமாறு கூறுகிறார்:

> மனித இனத்தைக் கடுமையாக உலுக்கிய சிந்தனைப் புரட்சிகள் மூன்று. மனித இனத்தின் பைத்தியக்காரத்தனமான ஆணவத்தின் மீதும் இறுமாப்பின் மீதும் அவை குரூரமான தாக்குதலை நடத்தின.
>
> அவற்றுள் முதலாவது கொப்பர்னிகஸ் புரட்சியாகும். அகிலத்தின் மையத்தில் இருப்பது பூமியே[15] என்ற பழைய கோட்பாட்டை மாற்றி, பூமியை அதன் மைய அந்தஸ்திலிருந்து பல படிகள் கீழிறக்கிவைத்தது அக்கோட்பாடு.[16]
>
> இரண்டாவது நிகழ்ந்த சிந்தனைப் புரட்சி டார்வினின் புரட்சியாகும். மனிதன் ஏனைய அனைத்து படைப்புகளையும் விட மேலானவன் என்ற போலிப்புனைவை இப்புரட்சி முறியடித்தது.
>
> மூன்றாவதாக வருவது ஃப்ராய்டின் புரட்சியாகும். மனிதனது சுய மகத்துவ நம்பிக்கையை இப்புரட்சி ஆட்டம்காணச் செய்தது. (அதாவது மனிதன் என்பவன் கண்ணியமான ஒரு படைப்பு என்ற நம்பிக்கையை அது உருக்குலைத்தது.)
>
> மனிதனது 'நான்' என்னும் இப்புனைவே அனைத்து வகையான சிந்தனா உற்பத்திகளின் மீதும் பிரக்ஞைபூர்வமான மேலாண்மையைச் செலுத்திவந்திருக்கிறது. அத்தகைய மனிதன் இன்று சிந்தனா உலகிலும் செயலுலகிலும் — அச்சிந்தனைகளும் செயல்களும் உயர்ந்தவையாயினும் தாழ்ந்தவையாயினும் நல்லவையாயினும் கெட்டவையாயினும் — 'ஆழ்மனம்' என்ற மகிமைமிக்க தலைவனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறான். ஆழ்மனத்தின் பொறிமுறைகளையும், அவற்றை ஒழுங்கமைத்து இயக்கும் விதிகளையும் ஃப்ராய்டு கண்டு பிடித்தமையானது மனித இனத்துக்கு முன்னால் தெளிவான வாயில்களையும் சாளரங்களையும் திறந்துவிட்டது; அதன் மானிடவியல் உள்ளடக்கங்களை மிக நுணுக்கமாகவும் ஆழமாகவும் வெளிக்கொணரவும் வாய்ப்பளித்தது; அதன் பகுத்தறிவு, புத்தாக்க இயலுமைகளை இன்னும் விரிவாகப் புரிந்துகொள்ளவும் வழியமைத்தது.

---

15. புவிமையக் கோட்பாடு (The Geocentric Theory) (மொ.பெ.).

16. பரிதிமையக் கோட்பாடு (Nicolaus Copernicus's Heliocentric Theory) (மொ.பெ.).

ஃப்ராய்டின் பங்களிப்புகள் கடந்தகாலங்களில் ஐரோப்பியர்களுக்குத் தேவைப்பட்டதைவிட அதிகமாக இன்று நமது அறபு தேசங்களுக்குத் தேவைப்படுகின்றன எனவும் அவர் தொடர்ந்து கூறுகிறார்.

இவ்வாறான பகுப்பாய்வாளர்கள் தமது உளவியல் சிகிச்சை நிலையங்களுக்கு வரும் முஸ்லிம் இளைஞர்களிடம், அவர்களது மனக்குழப்பங்களுக்கான உண்மையான காரணங்கள் அவர்களது ஆழ்மனத்தின் இருளடுக்குகளில்தான் மறைந்திருக்கின்றன என நம்பச்செய்வதற்குத் தயங்குவதில்லை. பாலுணர்வை அடக்கி வைப்பதால்தான் இது ஏற்படுகிறது எனக் கூறி அவ்விளைஞர்களது நனவிலி மனத்தில் மறைந்திருக்கும் விசயங்களை வெளிக் கொண்டுவருவதாக நீண்ட பல பகுப்பாய்வு அமர்வுகளை நடத்துகிறார்கள். இதனால் சிலர், எந்த மனக்குழப்பத்திலிருந்து விடுபட சிகிச்சை பெற விரும்பினார்களோ அதைவிட மோசமான ஆன்மீக-சமய நெருக்கடிக்கு ஆட்படும் மோசமான நிலைகூட உருவானது. இத்தகைய மோசமான பகுப்பாய்வு சிகிச்சையைப் பெற்றதால் பாதிப்புற்ற இளைஞர்களுக்கு மீண்டும் சிகிச்சை வழங்குவதில் வேதனைமிக்க பல அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன.

அது மட்டுமன்றி, ஃப்ராய்டிய சிந்தனையால் தாக்கமடைந்த சில முஸ்லிம்கள் ஃப்ராய்டையும் அவருடைய சகாக்களையும் அச்சொட்டாகப் பின்பற்றத் தொடங்கி, வரலாற்றில் தோன்றிய மகத்தான ஆளுமைகளைப் பகுப்பாய்வு செய்யும் நூல்களையும் கட்டுரைகளையும்கூட எழுதத் தொடங்கினர். இவர்களது உளவியல் பகுப்பாய்வு நோக்கிலிருந்து இறைத்தூதர்கள்கூடத் தப்பவில்லை.

'நபிமார்கள் பற்றிய மனோதத்துவப் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் எகிப்திய எழுத்தாளரான அப்துல்லாஹ் கமால் வெளியிட்ட நூலை இதற்கு உதாரணமாகக் கூற முடியும். இந்நூல் பல வாசகர்களை ஆத்திரமடையச் செய்தது. அவரே தனது நூலில் குறிப்பிடுவதுபோல், 'சன்மார்க்கத்தைவிட்டு வெளியேறி நபி மார்கள்மீது அடர்ந்தேறியவர்'[17] என்றுகூடச் சிலர் அவரைக் குற்றம்சாட்டினர். இந்நூலாசிரியர் ஃப்ராய்டை மகத்துவப்படுத்தியது மட்டுமன்றி, அவரது சில கோட்பாடுகளை நபிமார்கள் மீதும், அந்த நபிமார்கள் அனுப்பப்பட்ட சமூகங்கள் மீதும் பிரயோகிக்கவும் முற்பட்டார்.

---

17. அப்துல்லாஹ் கமால், *'நபிமார்கள் பற்றிய உளவியல் பகுப்பாய்வு'*, கெய்ரோ, தாருல் ஃகயால், 1996, பக்.12.

பதற்றம் (Anxiety) குறித்து அவர் பேசும்போது, அதுபற்றிய ஃப்ராய்டின் வரைவிலக்கணத்தையே குறிப்பிடுகிறார். அதாவது, பதற்றம் என்பது உண்மையானதோர் அபாயத்தால் உருவாக முடியும் என அவர் குறிப்பிடுகிறார். இதுவே 'யதார்த்தம் மீதான கலக்கம்' (Reality anxiety) எனப்படுகிறது.

இரண்டாவது வகை பதற்றம் 'நரம்பியல் பதற்றம்' (Neurotic anxiety) எனப்படுகிறது. 'உள்ளார்ந்த இயல்பூக்கத்தின் வழியாகத் தோன்றும் அபாயத்தின் மீதான எதிர்வினை' இதுவாகும்.

இவ்வாறு ஃப்ராய்டு சொன்னதையே திரும்பச் சொல்லும் நூலாசிரியர், இந்த 'இயல்பூக்க அபாயம்' குறித்து ஃப்ராய்டு வழங்கிய வரைவிலக்கணத்தை (தனது உளவியல் பகுப்பாய்வில் இதனை அவர் பயன்படுத்தியபோதும்) வாசகருக்குத் தெரிவிப்பதைத் தவிர்த்துக்கொள்கிறார். ஃப்ராய்டின் வியாக்கியானப்படி, 'நரம்பியல் பதற்றம்' என்பது ஒருவரது உள்ளார்ந்த நனவிலிப் போராட் டத்திலிருந்து உருவாவதாகும். ஆழ்மனத்தில் புதைக்கப்பட்டு வெளிவரத் துடிக்கும் பாலுணர்வுத் தூண்டல்களுக்கும், தனது யதார்த்தச் சூழலில் சமூக விழுமியங்களை உள்வாங்கி மனசாட்சியுடன் அவர் மேற்கொள்ளும் பிரக்ஞைபூர்வமான வாழ்வுக்குமிடையிலான போராட்டத்திலிருந்தே அப்போராட்டம் உருவாவதாக ஃப்ராய்டு விளக்குகிறார். நபிமார்களுக்கு ஏற்பட்ட பதற்றத்தை விவரிப்பதற்கு ஆசிரியர் இவ்வாறு ஃப்ராய்டின் — பாலுணர்வு மற்றும் அடர்ந்தேறல் சார்ந்த — பதப்பிரயோகங்களையே வியாக்கியானப்படுத்துகிறார்.

நபிமார்கள் விசயத்தில் நூலாசிரியர் எவ்வளவு தைரியமாகப் பேசுகிறார் என்றால், 'ஒவ்வொரு நபியையும் அவரது சமூகம் எதிர்த்ததற்குக் காரணம் அவர் ஒரு மாற்று அரசியல் ஒழுங்கினைக் கொண்டுவருவார் என அம்மக்கள் அஞ்சியதே' எனக் கூறுகிறார். இதனால் குறித்த நபி ஓர் அரசியல் தலைவராகவே மாறிவிடுவ தாகவும், அவரது தூது ஓர் அரசியல் திட்டமாகவே மாறிவிடுவ தாகவும் நூலாசிரியர் தொடர்ந்து எழுதுகிறார். மட்டுமன்றி, சில நபிமார்கள் எப்போதுமே அரசியல் தந்திரோபாயங்களையும் நுணுக்கங்களையும் பயன்படுத்துபவர்களாக இருந்திருக்கின்றனர் என்றும் அவர் கூறுகிறார். அவர்களுள் பிரதானமானவராக இப்றாஹீம் நபியை அவர் அடையாளப்படுத்துகிறார். ஏனெனில், அவர் சில சந்தர்ப்பங்களில் உண்மையை மறைத்துப் பேசியிருக்கிறார். நபி முஹம்மது ﷺ அவர்கள்கூட 'யுத்தம் என்பதே தந்திரம்தான்' என்று கூறியிருக்கிறார்கள்.

தொடர்ந்து நபி இப்றாஹீம் பற்றி விவரிக்கும் நூலாசிரியர், முதல் கலகக்காரர் நபி இப்றாஹீமே எனவும், கலகத்தின் பிதாமகன் அவரே எனவும் கூறுகிறார். '... அவரது கலகம் அடிப்படையில் தந்தைக்கு எதிரான கலகமாக ... தந்தையின் அதிகாரத்துக்கு எதிரான கலகமாக இருந்தது'[18] என்கிறார். இங்கு அவர் ஃப்ராய்டின் 'எடிபல் கோட்பாடு' (Oedipal theory) குறித்தே மறைமுகமாகச் சுட்டுகிறார் போலும்.

ஆண்பிள்ளை தனது குழந்தைப் பருவம்முதலே தாய்மீது பாலியல் ஈர்ப்பு கொண்டிருக்கும் அதேவேளை தந்தைமீது வெறுப்பும் பொறாமையும் கொள்கிறான் என அக்கோட்பாடு கூறுகிறது. அந்த வகையில், இப்போராட்டத்திற்கு ஓர் உளவியல் தீர்வு கிடைக்காவிட்டால் குழந்தை பருவ வயதை எட்டும்போது உளவியல் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதற்கான காரணங்களுள் ஒன்றாக அது மாறிவிடும் என இக்கோட்பாடு விளக்குகிறது.

அப்துல்லாஹ் கமால் இந்நூலை 1996ம் ஆண்டு, அதாவது ஐரோப்பாவில் உளவியல் பகுப்பாய்வு என்னும் நட்சத்திரம் மறைந்த பிறகே எழுதினார் என்பதுதான் விசித்திரமானது. நமது பல பிராந்தியங்களில் வாழும் உளவியல் சிறப்புத்துறையாளர்கள் அறபு, உள்ளூர் மொழிபெயர்ப்புகளுடன் அநேகமாகப் போது மாக்கிக்கொள்வதே இதற்குக் காரணமாகும். அதேவேளை, இம்மொழிபெயர்ப்புகளின் மேற்கத்திய உளவியல் மூலாதாரங்கள் எப்போதோ காலம்கடந்தவையாக மாறிப்போயிருக்கும். ஐரோப்பிய மொழிகளில் பரிச்சயமின்மையால் அல்லது நவீன மூலாதாரங்கள் கிடைக்காமையால் தங்களது சிறப்புத்துறைகளில் ஏற்படும் புதிய மாற்றங்களை இவர்களால் பின்தொடர முடிவதில்லை.

## மனித இயல்பு பற்றிய உயிரியல் கருதுகோளில் நிலவும் தீவிரத் தன்மை

மனிதனின் இயல்பு குறித்து உளவியல் பகுப்பாய்வாளர்களும் நடத்தையியலாளர்களும் முன்வைத்த கருதுகோள்கள் பற்றியும், அவ்விரு சாராரும் உருவாக்கிய கோட்பாட்டாக்கம், செயல்முறைகள் பற்றியும் முன்னர் எளிமையாக விளக்கினோம். இனி மூன்றாவது கோட்பாட்டை விவரித்து இப்பகுதியை நிறைவுசெய்ய விரும்பு கிறோம். இம்மூன்றாவது கோட்பாடு மனித இயல்பின் உயிரியல் பரிணாமத்தை மட்டுமே பார்க்கிறது.

18. மேலது.

இக்கோட்பாட்டின் நிறுவனர்கள் டார்வினின் பரிணாமவாதக் கோட்பாட்டை ஒருமனதாகவோ ஐயத்துக்கிடமற்ற சிந்தனை யாகவோ எடுத்துக்கொண்டனர். பின்னர் அப்பலவீனமான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மனித இயல்பு பற்றிய தமது கருதுகோளையும் கட்டியெழுப்பினர். இக்கருதுகோளும் — முன்னர் பகுப்பாய்வாளர்களும் நடத்தையியலாளர்களும் செய்ததுபோலவே — மனிதனிடமிருந்து தெரிவுச் சுதந்திரத்தைக் கபளீகரம் செய்துகொண்டது.

மனிதன் என்பவன் ஆழ்மனத் தூண்டல்களின் தப்பிக்க முடியாத அடிமையாக இருக்கிறான் எனப் பகுப்பாய்வாளர்கள் நம்பினர். நடத்தையியலாளர்கள் மனிதனைச் சூழல் பிறழ்வுகளின் அடிமை யாக ஆக்கினர். அதேபோன்றுதான், உயிரியல் கருதுகோளை முன்வைத்தவர்கள் மனிதன் இயல்பாகவே அவனது நரம்புகளாலும் ஹார்மோன்களாலும் பாரம்பரிய நிறமூர்த்தங்களாலும் (Chromosomes) வேறுபட்ட உயிரியல் காரணிகளாலும் இயக்கப்படுபவன் என்ற நம்பிக்கையைத் தத்தெடுத்துக்கொண்டனர். ஒருவரிடம் ஓர் சிந்தனை பிறக்கும் ஒவ்வொரு தடவையும் அவரது மூளையின் நுண்ணிய உயிரணுக்களுக்குள் அவரை அறியாமலே மாற்றமொன்று இடம்பெறுவதாகக் கூறுமளவுக்கு இவர்களில் சிலர் சென்றனர்.

உயிரியல் விஞ்ஞானமும் (Biological Science) வேதியியல் விஞ்ஞானமும் (Chemical Science) விருத்தியடைந்திருந்தால், உயிர்வேதியியல் (Biochemistry) மேலாண்மையினூடாக மனிதர்களது உளவியல், சமூகவியல் பரிமாணங்களை ஆளுகை செய்யும் இயலுமையை அறிவியலாளர்கள் பெற்றிருப்பர் என்பது இக்கோட்பாட்டாளர்களது வாதமாகும். மருத்துவத் துறையில் ஏற்பட்ட நவீனக் கண்டுபிடிப்புகளே அவர்களது இந்நிலைப்பாட்டுக்குத்[19] தைரியமளித்தன. புத்திமந்தம் போன்ற சில குறைபாடுகளும், 'பார்கின்ஸன்' (Parkinson's disease) போன்ற சில உடலியல் குறைபாடுகளும் தோன்றுவதில் மரபணுக்களும் நிறமூர்த்தங்களும் பாரம்பரிய உயிரியல் கூறுகளும் தாக்கம் செலுத்துவதாக இம்மருத்துவக் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தின.

அவ்வாறே, கதிரியக்கத் துழாவல் (CT Scan)[20] மூலமாக மனித மூளையைப் படம்பிடித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நரம்பியல், உளவியல் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்

19. இவர்களது முன்னோர்கள் முன்வைத்த 'நியதிக் கொள்கை (Determinism)' என்பதே இந்நிலைப்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.
20. Computer Tomography Scan.

வகையிலான பிரமிக்கத்தக்க விளைபலன்களை வழங்கின. பௌதிக-உயிரியல்ரீதியாகப் பெறப்பட்ட இவ்வெற்றிகளை உயிரியல் கோட்பாட்டாளர்கள் மனித இயல்பின் உயிரியல், சமூகவியல் சார்ந்த அனைத்து பரிமாணங்கள் மீதும் பொதுமைப்படுத்தி தமது சிந்தனைக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொண்டனர். நாம் மேலே குறிப்பிட்டதற்கான தெளிவான உதாரணமாக வில்லியம் ஜேம்ஸின் எழுத்துகளைக் கொள்ளலாம். 'மனிதனும் உளவியல் விஞ்ஞானமும்'[21] என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட முக்கியமான நூலை இதுதொடர்பில் வாசகர்கள் ஆராயலாம்.

## நபிமார்களது உணர்வுகளை ஆய்வுசெய்வதில் பயனளிக்கத்தக்க உளவியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும்

உளவியல் விஞ்ஞானம் என்பது தனது தனித்துவமான சிறப்புத் துறையினுள் பல்வேறு தலைப்புகளை ஒன்றிணைக்கின்ற மதச் சார்பற்ற ஒரு கலவை எனவும், அத்தலைப்புகளுக்கிடையில் சிலபோது வெளிப்படையான பிணைப்பெதுவும் இருப்பதில்லை எனவும் முன்னர் குறிப்பிட்டோம். அதன் பல்வேறு பள்ளிகளின் ஒவ்வொரு முன்னோடியும் அவருடைய பின்பற்றாளர்களும் தாம் கவனம் செலுத்தும் விசயத்தின் எல்லையுடன் மாத்திரம் நின்றுவிடுவதே இதற்குக் காரணமாகும். மட்டுமன்றி, மனித நடத்தையின் அனைத்து பரிமாணங்களையும் அந்த எல்லைக்குள் மாத்திரம் நின்று வியாக்கியானப்படுத்தவே அவர்கள் முயல்கிறார்கள். ஒருவர் தன்னைச் சூழவுள்ள பரந்த உலகத்தை ஓர் குழாயினூடாகப் பார்ப்பதுபோன்றது இதுவாகும். இந்நிலையானது உளவியல் விஞ்ஞானத்தைப் பல்வேறு சிந்தனைகளையும் கருதுகோள்களையும் உள்ளடக்கிய கலவையாக மாற்றிவிட்டது.

இதனால்தான் மேற்குலக உளவியலாளர்கள் தமது சிறப்புத்துறையை 'சலட்' (Salad) எனக் குறிப்பர். ஆனால் நான் அதனை ஒழுங்கற்ற ஓர் சந்தையாகவே பார்க்கிறேன். ஏனெனில் 'சலட்'டில் அடங்கியுள்ள காய்கறி வகைகளில்கூடச் சுவை, பயன்கள், வைட்டமின்கள் எனச் சில பொதுத்தன்மைகள் காணப்படும். ஆனால் பொதுச்சந்தையில் நாம் காணும் பொருள்களுக்கிடையில் தொடர்பிருப்பதில்லை. அங்கு இறைச்சிக்கு அருகில் கடிகாரங்களும், கணினி இறுவட்டுகளுக்கு (Computer CDs/DVDs) பக்கத்தில் ஆடைகளும் இருக்க முடியும்!

---

21. அப்துல் சத்தார் இப்றாஹீம், *'அல்இன்சான் வ இல்முந்நஃப்ஸ'*, குவைத், சில்சிலதுல் ஆலமில் மஃரிபா 86, பிப்ரவரி 1985 (அறபியில்).

இதனால்தான், பொதுவான மனோதத்துவ நூல்களை எழுதியோர் தமது நூல்களின் அத்தியாயங்களை ஒழுங்கமைப்பதில் வித்தியாசப் பட்டிருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக ஒருவர் தனது நூலில் உளவியல் துறை பற்றிய பொதுவான விவரணத்தின் பின்னர் 'கற்றல்' தொடர்பான அத்தியாயத்தில் தொடங்கி, அடுத்ததாகப் 'புள்ளிவிவரம்' பற்றிப் பேசி, அப்பால் 'புலனறிவு' பற்றிய அத்தியாயம் எனத் தொடர்வார். அதேவேளை மற்றொருவர் 'உயிர் உளவியல் (Biopsychology)' பற்றி ஆரம்பித்து, அடுத்ததாகக் 'குழந்தை உளவியல் (Child psychology)' எனத் தொடர்வார். எனவே, எந்த ஒரு கற்கையாளரும் ஒரு நூலின் ஆரம்பத்திலோ இறுதியிலோ எந்த ஒரு அத்தியாயத்தையும் எடுத்து அதற்கு முன்னுள்ள அத்தியாயங்களின்றியே வாசித்துப் புரிந்துகொள்ள முடியும்.

பொது உளவியலைக் கற்பிக்கும் ஆசிரியர்கள்கூட நூலாசிரியர்களது அதே ஒழுங்கைப் பின்பற்றாததற்குக் காரணம் இதுதான். ஒவ்வோர் ஆசிரியரும் தனிப்பட்ட முறையில் தனது பாட உள்ளடக்கத்தை ஒழுங்கமைத்துக்கொள்கிறார். இது நுணுக்கமான அறிவியல் கலைகளின் இயல்பல்ல. ஆயினும், — முன்பே அறிவியலாளர் சிக்மன்டு காக் குறிப்பிட்டதுபோல் — போலித் தகவல்களின் திரட்சியே இந்நிலைக்குக் காரணமாகும்.

நுணுக்கமான அறிவியல் கலைகளின் ஒவ்வோர் அத்தியாயமும் அதற்கடுத்த அத்தியாயத்துக்கு இயல்பாகவே அழைத்துச் செல்வதாக இருக்கும். உதாரணமாக, உடலுறுப்புகளின் தொழிற்பாடுகள் பற்றிய எல்லா நூல்களும் முதலில் உயிரணு (கலம்) பற்றிய ஆய்வில் ஆரம்பித்து, அடுத்ததாக ஒத்த உயிரணுக்களின் தொகுதியால் உருவாகும் இழையங்கள் (Tissues) பற்றி ஆய்வுசெய்து, அதனைத் தொடர்ந்து பல்வேறு இழையங்களால் உருவான உறுப்புகள் பற்றிய ஆய்வுக்குள் செல்லும். அதன் பிறகே செரிமானத் தொகுதி, நரம்பு மண்டலம் என்பவைபோன்ற பல்வேறு உறுப்புகளால் உருவான தொகுதிகள் பற்றி அந்நூல்கள் பேசும். எனவே ஒருவர் ஓர் அத்தியாயத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அதற்கு முந்திய அத்தியாயங்களைப் புரிந்திருப்பது அவசியம்.

விடா முயற்சியும் புத்தாக்கச் சிந்தனையும் கொண்ட ஆய்வாளர் ஒருவர் ஒருவேளை இந்த 'உளவியல் சலட்' குவியலுக்குள்ளிருந்து தனக்குகந்த காய்கறிகளைப் பிரித்தெடுத்துக் கழுவி, பயனுள்ள 'இஸ்லாமிய' மசாலா வகைகளுடன் கலந்துகொள்ளலாம்.

பிறகு அவற்றை நபிமார்களது உணர்வுகளைப் பற்றிப் பொது வாகவும், நபிமார்களது உணர்வுகளைப் பற்றிக் குறிப்பாகவும் மேற்கொள்ளப்படும் பயன்மிக்க ஆய்வுகளில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

பல்வேறு உளவியல் சிறப்புத்துறைகளுக்கிடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த வகையில், ஓர் உளவியல் உள்ளடக்கம் பரிசோதனை அறிவியல் அடிப்படைகளின் மீது தங்கியிருக்கும் அளவுக்கு அதனை மூலாதாரப்படுத்திக்கொள்வது இலகுவாக அமையும். அவ்வாறில்லாதபோது அது சிரமமாகிவிடும்.

இதுவரை நாம் எழுதியதிலிருந்து மனோதத்துவவியல் துறையின் எந்தப் பகுதியும் அறிவியல் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டவை யல்ல என்ற எண்ணம் வாசகருக்குத் தோன்றியிருக்கலாம். பரிசோதனை அறிவியல் போன்று தன்னை நிலைநிறுத்திக்கொண்ட அறிவியல் கலைகளிலிருந்து பெறப்பட்ட எந்தச் சிந்தனையும் அதற்கு மையச்சரடாக இல்லை என்றும் தோன்றியிருக்கலாம். அப்படியாயின் நபிமார்களது பண்புகளை ஆய்வுசெய்வதற்கு இவ்வாறான துறை பொருத்தமாக முடியுமா என்ற ஐயம்கூட எழுந்திருக்கலாம். 'ஆம், முடியும்!' என்பதே இதற்கான பதிலாகும். ஏனெனில், இக்கலவையின் சுழலுக்குள்ளும் பல்வேறு உளவியல் பள்ளிகளின், அவற்றின் முறைமைகளின் நெருக்கடிகளிலிருந்து தூர விலகிநிற்கும் உளவியலாளர் குழாமொன்றை நாம் அடையாளம் காண முடிகிறது. அவர்கள் நம்பத்தகுந்த ஒப்பீட்டுச் சாதனங்களையும் புள்ளிவிவரங்களையும் பயன்படுத்தி பரிசோதனைகளிலும் கள ஆய்வுகளிலும் ஈடுபடுபவர்கள். மனிதனது பல்வேறு வாழ்வுக் கட்டங்களில் அவனது நடத்தைக்குப் பின்னால் மறைந்திருக்கும் தூண்டற்காரணிகளையும் ஊக்கிகளையும் வெளிக்கொணர்ந்து, அவனது நடத்தைக் கோலத்தில் அக்காரணிகள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து தலைமுறை தலைமுறையாக எழுப்பப்பட்டுவரும் கேள்விகளுக்கு இவர்கள் விடையளிக்க முயல்கிறார்கள்.

சில மனிதர்கள் மனவியலையும் அறிவுச் சமநிலைகளையும் இழப்பதில் பரம்பரையியலும் சூழலும் ஏற்படுத்தும் தாக்கங்களை ஒப்பிட்டு இவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூற முடியும். உளவியல் விஞ்ஞானத்தைச் சிறப்புத்துறையாகக் கற்றிராதவர்களுக்கு இன்னும் இதனை விளக்கும் வகையில் எளிய முறையிலான ஓர் உதாரணத்தைக் கீழே தருகிறேன்:

மனச்சிதைவு நோய் (Schizophrenia)[22] தொடர்பான கேள்விக்கு நுணுக்கமாக விடை காண்பதற்காக ஒத்த இரட்டையர்களையும் (Identical twins), வேறுபட்ட இரட்டையர்களையும் (Different Twins) அறிவியலாளர்கள் பயன்படுத்தினர். அனைவரும் அறிந்திருப்பதுபோல, மனைவியின் முட்டை கணவனின் உயிரணுவுடன் இணைந்து கருக்கட்டிய பிறகு இரு கலங்களாகப் பிரிந்தால், அது ஒரே வகையான பாரம்பரியப் பண்புகளைக் கொண்ட ஒத்த இரட்டையர்களைப் பிரசவிக்கும். மறுபுறத்தில், மனைவியின் கருப்பையில் ஒரே நேரத்தில் இரண்டு முட்டைகள் உருவாகி, அவ்விரண்டும் இருவேறு உயிரணுக்களுடன் இணைந்து கருக்கட்டுமாயின், அவை இருவேறுபட்ட இரட்டையர்களைப் பிரசவிக்கும். இந்நிலையில், அவ்விருவருக்கும் மத்தியிலான ஒற்றுமை சாதாரணமாகச் சகோதரர்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையாகவே அமைந்திருக்கும்.

சிறப்புத்துறை ஆய்வாளர்கள் தமது திறமை வாய்ந்த முறைமைகளைப் பயன்படுத்தி, மனச்சிதைவு நோய்ப் பாதிப்பானது வேறுபட்ட இரட்டையர்களுடன் ஒப்பிடும்போது ஒத்த இரட்டையர்களுக்கு மத்தியில் அதிகம் அவதானிக்கப்படுவதாகக் கண்டறிந்தனர். அதாவது, இந்நோய்ப் பாதிப்பில் பரம்பரையியலுக்குப் பெரும் பங்குள்ளது என்பதை இது உறுதிப்படுத்தியது.

இத்தகைய ஆய்வுகள் மனித இயல்பு பற்றிய மேலோட்டமான தத்துவச் சிந்தனையையோ பிறழ்வுற்ற கருதுகோளையோ அடிப் படையாகக் கொண்டவையல்ல. இப்புதிய அறிவியல் மூலமாகவும், புள்ளிவிவர முறைகள் மூலமாகவும், அவற்றின் செயல்முறைகள் மூலமாகவும் விஞ்ஞானிகளால் பல பயனுள்ள விசயங்களை வெளிக்கொணர முடிந்தது. கற்றல், கற்பித்தல், மனனமிடல் என்பவற்றுக்கான சிறந்த வழிமுறைகளை அவர்கள் கண்டுபிடித்துத் தந்தனர். உளவியல் அழுத்தங்களால் விளையும் எதிர்மறைத் தாக்கங்களையும், அவற்றுக்கு சிகிச்சையளிக்கும் முறைகளையும் கண்டுபிடித்தனர். மட்டுமன்றி, மனித உளவியல் செயல்பாடுகளின் ஆரோக்கியமான அம்சங்கள், நோய்க்கூறுகள் என்பவற்றையும்கூட அவர்கள் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதேபோல், உளவியலையும் நுணுக்கமான பரிசோதனை அறிவியலையும் இணைத்து அவர்கள் பயன்பெற்றனர். (அடுத்த அத்தியாயத்தில் இதுபற்றி விரிவாக விளக்கவுள்ளோம்.) உயிர்

22. எண்ணமும் செயலும் மாறுபட்டுச் செயல்படும் மனக்கோளாறு.

வேதியியல் (Bio Chemistry), மூளை மற்றும் நரம்புமண்டல ஆய்வுகள், மரபியல் (Genetics), மருந்தியல் (Pharmacology) முதலியவற்றை இத்தகைய நவீனப் பரிசோதனை அறிவியலுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இதன் மூலமாக, கடந்த நூற்றாண்டுகளில் நமக்குத் தெளிவற்றிருந்த பல விசயங்களை அவர்கள் திரைநீக்கம் செய்தனர். கற்றல் துறையில் கேள்வி, பார்வை, நினைவு முதலியவற்றுக்கிடையில் நிகழும் நெருக்கமான உள-உடல் இடைவினைகளின் நுணுக்கங்கள் பற்றிய பரிசோதனை ஆய்வுகள் இவற்றுக்கு உதாரணங்களாகும். இத்தகைய ஆய்வுகள் இறைவனின் படைப்புகள் பற்றிச் சிந்திக்குமாறு நம்மை நெம்பித்தள்ளுகின்றன.

> உங்களுக்குள்ளும் (பல அத்தாட்சிகள் உள்ளன). நீங்கள் பார்த்து படிப்பினை பெற வேண்டாமா? (51:21)

உளவியல் விஞ்ஞானமானது அண்மைக்காலமாகத் தனது தீவிர மதச்சார்பற்ற போக்கினைத் திருத்திக்கொள்ள ஆரம்பித்திருப்பதும் சுபமான ஒரு எதிர்பார்ப்புக்கு வழி ஏற்படுத்தியுள்ளது. உளவியல் அழுத்தங்களைக் குறைப்பதிலும் மனக்குழப்பங்களுக்கு சிகிச்சை யளிப்பதிலும் மத-ஆன்மீகப் பரிமாணம் தரும் பயன் உறுதிப் படுத்தப்பட்ட பின்னர் அப்பரிமாணத்தின் மீதான உளவியல் விஞ்ஞானத்தின் பகையுணர்ச்சி தணிந்துவருகிறது. இந்த வகையில் தான், பரிசோதனை முறையிலான ஆய்வுகளால் பயன்மிக்கதாக உறுதிப்படுத்தப்பட்ட தியானம்போன்ற மத அனுஷ்டான முறைமை களும் சிந்தனைகளும் உளவியல் விஞ்ஞானத்துக்குள் உள்வாங்கப் படுவதற்கான வாயில்கள் திறக்கப்பட்டன. ஆயினும், இந்தத் தியான முறை பௌத்த மதத்திலிருந்து அதன் மத உள்ளடக்கம் நீக்கப்பட்ட பின்பே உள்வாங்கப்பட்டது. ‘அறிவாற்றல் நடத்தை சிகிச்சையின் மூன்றாம் அலை’ என்ற சிகிச்சைமுறையிலும் இப்பௌத்த ஆழ்தியான முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கிக்கொண்டவர்கள் அவர்களது வாழ்வின் யதார்த்தத்தை ஏற்கும்படி செய்ய இந்த சிகிச்சைமுறை (Mindfulness and acceptance theraphy) உதவியது.

ஆயினும், மேற்கத்திய உளவியல் விஞ்ஞானக் கோட்பாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஓர் பிரிவு ‘நேர்நிலை உளவியல் விஞ்ஞானம் (Positive psychological science)’ என்ற துறையிலிருந்தே எதிர்வரும் ஆண்டுகளில் தோன்றவிருக்கிறது. தற்கால உளவியல் விஞ்ஞானம் மனிதனது எதிர்மறையான, நோய் நிலைகொண்ட பக்கங்களில் கவனம் குவிக்கிறது; நேர்நிலையான

பக்கங்களைப் புறக்கணிக்கிறது. இதற்கு எதிரான புரட்சியாக அமைந்ததே நேர்நிலை உளவியல் விஞ்ஞானமாகும்.

மனிதனிடம் உளவியல் பிரச்சினைகள் தோன்றிய பிறகு அவற்றின் நோய்க்குறிகளுக்கு சிகிச்சையளிப்பதில் கவனம் குவிப்பதைவிட, குறித்த உளவியல் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு இப் புரட்சி உதவியாக அமைந்தது. ஏனெனில், பலபோது உளவியல் பிரச்சினையின் நோய்க்குறிகளிலிருந்து சிகிச்சை பெற்று வெளியேறும் நோயாளி மகிழ்ச்சியையோ திருப்தியையோ, எதிர்கால வாழ்வின் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் தன்னம்பிக்கையையோ உணர்வ தில்லை. எனவேதான் நேர்நிலை உளவியல் விஞ்ஞானமானது ஒருவரது ஆளுமையில் காணப்படும் பலங்களை வெளிக்கொணர்ந்து பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணவும், அவரது உளவியல் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்கவும் முயல்கிறது.

இந்தச் சிறப்புத்துறை கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றிய பிறகுதான் உளவியல் விஞ்ஞானம் புறக்கணித்திருந்த மகிழ்ச்சி, திருப்தி, பிறருக்கு உதவுதல் முதலிய பிரயோகங்களும் கருத்தாக்கங்களும் நம் காதுகளில் விழத் தொடங்கின. மதத் தன்மை கொண்டவையாக அல்லது மனித இயல்பைப் பற்றிய மிருக-தன்னுணர்வுக் கருதுகோளுடன் இணங்காதவையாக இப்பிர யோகங்கள் இருந்ததால்தான் மேற்கத்திய உளவியலால் புறக் கணிக்கப்பட்டன.

உதாரணமாக, நவீன உளவியல் விஞ்ஞான நூல்களின் பொரு ளடக்கப் பட்டியலை நீங்கள் புரட்டிப்பார்த்தால், அவற்றில் மகிழ்ச்சி, திருப்தி முதலிய பிரயோகங்களைக் கண்டுகொள்ள முடியாது. இம்மதச்சார்பற்ற உளவியல் சிந்தனைக்கு முரணான வகையில், மனநோயாளர்கள் தேவையுடையோருக்கு உதவிக்கரம் நீட்டும்போது அது அவர்களது மனக்குழப்பங்களைத் தணிப்பதில் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்துவதாக நேர்நிலை உளவியலின் பரிசோதனை முறை ஆய்வுகள் வெளிப்படுத்தின. துன்பங்களை நீக்குவதில் தர்மத்தின் முக்கியத்துவத்தை முஸ்லிம்களாகிய நமக்கு இது வலியுறுத்துவதுபோல் உள்ளது. எனவே இவ்வகையான ஆய்வுகளிலிருந்து பயன்பெறுவதில் நமக்குத் தடையேதும் இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறே நபிமார்களது வாழ்வை ஆய்வுசெய்வதற்கு இவ்வாய்வுகளையும் நுண்பரிசோதனை அறிவியலையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பயன்பெறுவதற்கும் நமக்குத் தடை இல்லை. இறைத்தூதைச் சுமப்பதற்கு ஏற்ற ஒரு சூழலை

நபிமார்களுக்குத் தேர்வுசெய்து, அதில் அவர்களை வளர்த்தெடுத்தமை தொடர்பான இறைஞானத்தைக் கண்டுகொள்ளவும் இவ்வாய்வுகள் நமக்கு உதவ முடியும்.

நவீன உளவியலின் போலிக் கோட்பாடுகளிடமும், மனித இயல்பு பற்றிய பிறழ்வுற்ற கோட்பாடுகளின் மீது கட்டமைந்த அதன் சிந்தனையிடமும் மனத்தைப் பறிகொடுத்த சிலர் நபிமார்களது மனநிலைகள் குறித்து எழுத எவ்வாறு துணிந்தார்கள் என்பது குறித்து ஏற்கனவே நாம் கலந்துரையாடினோம். 'நபிமார்கள் பற்றிய உளவியல் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் அப்துல்லாஹ் கமால் என்பவர் எழுதிய நூலையும் இதற்கு உதாரணமாக எடுத்துக்காட்டினோம். இப்போது நமக்கு எழும் கேள்வி இதுதான்:

> பரிசோதனையும் புள்ளிவிவர அறிவியலும் உறுதிப்படுத்திய உளவியலின் மறுபாதியில் தங்கிநின்று முஸ்லிம் அறிவிய லாளர்கள் ஏதாவது செய்திருக்கிறார்களா? அல்லது நபி மார்களது உணர்வுகளை ஆய்வுசெய்வதற்குப் பொதுவான மானிட உளவியல் அனுபவங்களையாவது அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்களா?

'ஆம்' என்பதுதான் இதற்கான பதிலாகும். ஆயினும், அத்தகைய பணிகள் திருக்குர்ஆன் விரிவுரைகளிலும், இறைத்தூதர் வாழ்வியல் நூல்களிலும், அவர்களின் குணநலன் பற்றிய ஆக்கங்களிலும் சிறுசிறு பத்திகளின் வடிவில்தான் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதில் விதிவிலக்காக முனைவர் இப்றாஹீம் அப்துர் றஹீம் மேற்கொண்ட ஆய்வினைக் குறிப்பிடலாம். அந்நஜாஹ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வுக்காக இவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் தலைப்பு 'நபிமார்களிடம் காணப்பட்ட மனவுணர்ச்சிகள்' என்பதாகும்.

உணர்ச்சிகள் தொடர்பான பகுதியில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பேணிய நிலையிலும், நபிமார்களது கண்ணி யத்தைப் பேணிய நிலையிலும் நவீன உளவியல் ஆய்வுகளிலிருந்து பயன்பெற நுணுக்கமான இவ்வாய்வாளரால் முடிந்திருக்கிறது. அவ்வாறே, அறிவியல் ஆதாரமோ சீரான தர்க்கமோ அற்ற மதச்சார்பற்ற உளவியல் வியாக்கியானங்களையும் இவர் தவிர்த் திருக்கிறார். மட்டுமன்றி, நபிமார்களது உணர்ச்சிகளில் திருக் குர்ஆனில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள பயம், கோபம், கவலை, கைசேதம், அவநம்பிக்கை ஆகியவற்றை மட்டுமே இவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். சில உணர்ச்சிகள் பற்றி மிக

வெளிப்படையாகப் பேசியுள்ள திருக்குர்ஆனிய வார்த்தைகளை இவர் கடுமையாகப் பற்றிப்பிடித்திருப்பதால், உபதேசப் போக்கில் அல்லது நபிமார்களது வரலாறுகளைச் சொல்லும் போக்கில் திருக்குர்ஆனில் உள்ளுறையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங் களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை வாசகர்களுக்கு இல்லாமல் செய்துவிடுகிறார்.

அந்த வகையில் அன்பு, இரக்கம், கலக்கம் போன்ற முக்கியமான சில உணர்வுகள் பற்றிய குறிப்புகள் அவரது ஆய்வில் இல்லை. அவ்வாறே இறைவனுக்கு அஞ்சுதல் என்ற உணர்ச்சியையும், அவனை நேசித்துப் பணிதல் என்பதையும் இணைக்கும் 'அல்ஃகுஷூஉ' என்பது பற்றிய குறிப்பும் அதில் இல்லை. ஆனால், இவையெல்லாம் திருக்குர்ஆன் இறைப்பிரக்ஞை கொண்ட அடியார்களைப் பற்றியும் அவர்களது உள்ளச்சம் பற்றியும் பேசும்போதெல்லாம் குறிப்பிடு கின்ற உணர்வுகளும் உணர்ச்சிகளும் ஆகும்.

அவ்வாறே, அவர் எடுத்துக்கொண்ட திருக்குர்ஆன் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புன்னகை, கடுகடுப்பு முதலியவை — நுணுக்கமான நோக்கில் — உணர்ச்சிகளாகக் கருதப்பட முடியாதவை; உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக அமைபவை. உதாரணமாக, கோபம் என்ற உணர்ச்சி முகத்தில் கடுகடுப்பாக வெளிப்படுகிறது. புன்னகை என்பது மகிழ்ச்சி என்ற உணர்வின் வெளிப்பாடாக அமைகிறது. எவ்வாறாயினும், முனைவர் இப்றாஹீம் தனது தலைப்புக்குரிய வசனங்களையும் நபிமொழிகளையும் ஒன்று திரட்டுவதில் செலவிட்ட கடும் முயற்சிக்காகவும், நபிமார்களது உணர்வார்ந்த வாழ்வியலிலிருந்து பொருத்தமான உதாரணங்களை எடுத்துக்காட்டும் ஆற்றலுக்காகவும் அவரை நான் பாராட்டுகிறேன்.

அதேவேளை, நபிமார்களது உணர்ச்சிகளைப் பற்றி, அதிலும் குறிப்பாக அவர்களின் தலைவர் முஹம்மது ﷺ அவர்களது உணர்ச்சிகளைப் பற்றிப் பேசும்போது நூலாசிரியர் அவற்றைத் தன்னளவில் எந்த உணர்ச்சியுமின்றி விவரித்துச்சென்றிருக்கிறார். ஆயினும், அவரது நடையில் உள்ள இந்த 'வரட்சி'க்கும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஏனெனில், அவர் கல்வித் தரத்தைப் பெறுவதற்கான ஓர் ஆய்வை எழுதியிருக்கிறார். அந்த ஆய்வுமுறையில் எவ்வாறான சம்பிரதாயங்களும் மரபுகளும் பேணப்பட வேண்டும் என ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு ஐரோப்பாவிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட இச்சம்பிர தாயங்களும் மரபுகளும், 'ஆய்வாளர் ஒருவர் தனது உணர்ச்சிகளை

வெளிப்படுத்துவது அவரது சான்றுகளில் உள்ள பலவீனத்தையே காட்டும்' என்பதாகக் கூறுகின்றன. அந்த வகையில், மேற்கத்திய எழுத்தாளர்கள் 'அறிவியல் நடுநிலைமை' என்ற பெயருக்குப் பின்னால் தங்கள் உணர்ச்சிகளை மறைத்து தாம் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதில் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள்.

இதன் காரணமாகத்தான் — நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போல் — எனது இந்நூலை ஆழ்ந்த உளவியல் அவதானங்களின் நூலாக அமைத்துக்கொண்டதாக வாசகருக்கு விளக்கினேன். நபிமார்களதும் அவர்களுடைய தலைவரதும் கண்ணியமான உணர்ச்சிகளை மதிப்பதில் வாசகரும் என்னுடன் பங்கேற்க வேண்டும் என்பதும், அந்நபிமார்களைத் தேர்ந்தெடுத்து வளர்த்தெடுப்பதில் இயங்கிய இறைஞானத்தின் ஒரு பகுதியை வாசகரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுமே இங்கு எனது நோக்கமாகும்.

உணர்ச்சி வெளிப்பாடு குறித்து இஸ்லாமிய நோக்கில் எழுதப்பட்ட ஆய்வுகளுள் ஒன்றாக முனைவர் அஸ்ஸிர் அஹ்மது சுலைமான் '*திருக்குர்ஆனில் முகவெளிப்பாடு பற்றிய உளவியல் பரிமாணங்கள்*'[23] என்ற தலைப்பில் எழுதிய பெறுமதி வாய்ந்த நூலையும் குறிப்பிடலாம். இவ்வாய்வுக்காக அணிந்துரை எழுதும் கௌரவத்தை ஆசிரியர் எனக்கு வழங்கியிருந்தார். அதில் நான் இப்படிக் குறிப்பிட்டேன்:

> அசல்பண்பு, ஆய்வுநுணுக்கம், திருக்குர்ஆன் மீதான ஆழ்ந்த உளவியல் விளக்கவுரை என்பவற்றை இந்நூல் ஒன்றிணைத் திருக்கிறது.

அந்த வகையில், ஒவ்வொரு மனோதத்துவவியலாளரது நூலகத்திலும் இவ்வாய்வு நூலும், முனைவர் இப்றாஹீம் அப்துர் றஹீம் முஸ்தஃபாவின் ஆய்வும் இருக்க வேண்டுமென நான் பரிந் துரைக்கிறேன்.

நபிமார்களது உணர்வுகளைப் பற்றி உளவியல் நோக்கிலான உரையாடல் — சுருக்கமாகவேனும் — நமக்குக் கிடைத்திருப்பது உளவியல் விஞ்ஞானத்தின் சிறப்புத்துறையாளர்களிடமிருந்து அல்ல என்பதைக் குறிப்பிடாமல் இத்தலைப்பை முடிக்க நான் விரும்பவில்லை. உளவியலைச் சிறப்புத்துறையாகக் கொள்ளாத இலக்கியவாதிகளிடமிருந்தும் அறிவியலாளர்களிடமிருந்துமே அத்தகைய உரையாடல் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வாறு

23. அஸ்ஸிர் அஹ்மது சுலைமான், '*அல்அப்ஆத் அந்நஃப்ஸிய்யா லித்தஅபீர் ஃபில்வஜ்ஹீ ஃபில்குர்ஆனில் கரீம்*'. ரியாத். 2017.

இத்துறையில் பேசிய முன்னோடிகளுள் ஒருவராக உஸ்தாது சையித் குதுபை நாம் அடையாளம் காண்கிறோம். அவரது இலக்கிய ஆற்றல், ஆழ்ந்த இறை விசுவாசம் என்பவற்றின் காரணமாக *'ஃபீ ழிலாலில் குர்ஆன்'* என்ற விசயதான அடிப்படையிலான திருக்குர்ஆன் விரிவுரை நூலில் உளவியல் மற்றும் உணர்வார்ந்த பரிமாணங்கள் பற்றிய பல குறிப்புகளைத் தருகிறார். அதேவேளை இவ்வாற்றல் அவரது, *'அத்தஸ்வீருல் ஃபன்னீ ஃபில்குர்ஆனில் கரீம்'* என்ற நூலில் தெளிவாக வெளிப்படுகிறது.

இந்நூலின் ஓர் அத்தியாயத்தில் மூசா ﷺ, யூசுஃப் ﷺ, இப்றாஹீம் ﷺ போன்ற சில நபிமார்களது வாழ்வின் உணர்வார்ந்த பக்கங்கள் பற்றித் தெளிவாகப் பேசுகிறார். மூசா ﷺ பற்றி முஸ்லிம் உளவியலாளர் ஒருவர் பேசுவதுபோன்று அவர் பேசுவதைக் கவனியுங்கள். *'கதைமாந்தரை வரைதல்'*[24] என்ற தலைப்பில் அவர் எழுதியிருக்கும் பகுதியை இங்கு நாம் தருகிறோம். தான் தேர்ந்தெடுத்த நபியின் ஆளுமையை வர்ணிப்பதில் திருக்குர்ஆன் வசனங்களுடன் சரளமாகப் பயணிக்கும் ஆற்றலையும் திறமையையும் இப்பகுதியில் அவர் வெளிப்படுத்துகிறார்:

> உணர்ச்சித் துடிப்பும் இனப்பற்றும்மிக்க தலைவருக்கான மாதிரி அவர். ஃபிர்அவ்னின் மாளிகையில், அவனது நேரடிக் கண்காணிப்பில் வளர்க்கப்பட்டுப் பலமிக்க வாலிபராக அவர் மாறியிருந்தார்.
>
> 'ஒருநாள் மூசா மக்கள் கவனிக்காதிருந்த சமயத்தில் நகரினுள் நுழைந்தார். அப்போது இருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார். ஒருவன் அவரது இனத்தைச் சேர்ந்தவன்; மற்றவன் எதிரிகளின் இனத்தைச் சேர்ந்தவன். அவரது இனத்தைச் சேர்ந்தவன் பகையினத்தைச் சேர்ந்தவனுக்கு எதிராக மூசாவிடம் உதவி வேண்டியதும் மூசா அப்பகைவனை ஒரு குத்து குத்திக் கொன்றுவிட்டார்.' (28:15)
>
> இங்கு அவரது இனப்பற்றும் உணர்ச்சி வேகமும் வெளிப்படுகின்றன. ஆனாலும், இந்த இன உந்துதல் விரைவாக விலகி அவர் நிதானமடைந்துவிடுகிறார். உணர்ச்சிவசப்படுபவர்கள் பொதுவாக இப்படித்தான் இருப்பார்கள்.

24. சையித் குதுப், *'ஃகஸாயிஸ் அத்தஸவ்வுர் அல்இஸ்லாமீ'*, பெய்ரூத்: தாருஷ்ஷுறூக். 2000, பக்.25.

*“‘இது ஷைத்தானின் வேலைதான்; நிச்சயமாக அவன் வழிகெடுக்ககூடிய பகிரங்க விரோதியாகவே இருக்கிறான்’ என அவர் கூறினார். ‘என் ரட்சகா, நிச்சயமாக எனக்கு நானே அநியாயம் செய்துகொண்டேன். எனவே என்னை மன்னிப்பாயாக!’ என்றும் பிரார்த்தித்தார். எனவே இறைவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன் மிக மன்னிப் பவனாகவும் மிகக் கிருபை கொண்டவனாகவும் இருக்கிறான். ‘என் ரட்சகா, நீ எனக்கு அருள்புரிந்ததனால் இனி ஒருபோதும் குற்றவாளிகளுக்கு உதவிசெய்ய மாட்டேன்’ என்றும் கூறினார்.”* (28:15-17)

*நகரில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் அவர் மறுநாள் அவதானமாக எதிர்பார்த்திருந்தார்.*

*எல்லோருக்கும் தெரிந்த ஒரு நிலை இங்கு காட்சிப் படுத்தப்படுகிறது. ஒவ்வோர் அசைவிலும் ஆபத்தை எதிர்பார்த்து நிலைகொள்ளாது கலங்கிநிற்கும் ஒருவரது காட்சி. உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருப்பவர்களது நிலை. அந்நிலையிலும் அவர் குற்றவாளிகளுக்கு இனி உதவப் போவதில்லை என உறுதியளித்துவிட்டார். அதன் பிறகு என்ன செய்கிறார் என்று பார்ப்போம்.*

*அவர் கவனிக்கிறார் ...*

*முன்னைய தினம் உதவி கோரியவனே மீண்டும் அவரது உதவிக்காகக் கூக்குரல் எழுப்புகிறான்.*

*“வேறொரு மனிதனுக்கு எதிராக மீண்டும் உதவி கேட்கிறான். ஆனால் மூசா அவனிடம், ‘நிச்சயமாக நீ வெளிப்படை யாகவே கேடுகெட்டவனாகத்தான் இருக்கிறாய்’ எனக் கூறுகிறார்.”* (28:18)

*ஆயினும், முந்திய நாள் நடந்துகொண்டதுபோலவே அவர் இன்றும் நடந்துகொள்ள முற்படுகிறார். இன உணர்வும் உணர்ச்சி வேகமும் பாவமன்னிப்பையும் கைசேதத்தையும் அச்சத்தையும் அவமானத்தையும் மறக்கடித்துவிடுகின்றன. ஆனால், இன்று அவரது தாக்குதலுக்கு ஆளாகவிருந்த மனிதன் அவரது தவறான செயல் குறித்து நினைவூட்டியதும் மீண்டும் நல்லுணர்ச்சி பெற்று இறையச்சம் கொள்கிறார்:*

> *"அவ்விருவருக்கும் விரோதியாக இருந்தவனை அவர் துன்புறுத்த முற்பட்டபோது அவன் இப்படிக் கூறினான்: 'மூசாவே, நீர் நேற்று ஒரு மனிதனைக் கொன்றதுபோல என்னையும் கொல்ல விரும்புகிறீரா?! நிச்சயமாக நீர் பூமியில் அடக்கியாள்பவராக இருக்க விரும்புகிறீரே தவிர சீர்திருத்தம் புரிய விரும்பவில்லை!'"* (28:19)[25]

*'ஃபீ ழிலாலில் குர்ஆன்'* நூலின் ஆசிரியர்மீது நாம் பெரும் கௌரவம் வைத்திருக்கின்றபோதிலும், நபிமார்களைப் பற்றி அவர் சாதாரண மனிதர்கள்போன்று பேசுவதை அவர் விட்ட தவறுகளுள் ஒன்றாகக் கருதுகிறோம். நண்பர்களை அல்லது சம வயதுடையோரைப் போல் நபிமார்களைப் பற்றி அவர் பேசுவது கண்டிக்கத்தக்கதாகும்.

மூசா ﷺ உணர்ச்சி வேகமும் கடுமையான இனப்பற்றும் கொண்டவராக இருந்ததாக அவர் வர்ணிக்கிறார். இஸ்றவேலரின் அபயக் குரலுக்குப் பதிலளிக்கும் வகையில் எகிப்தியரை மூசா ﷺ குத்திய செயலில் இன உணர்வும் உணர்ச்சி வேகமும் கலந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். ஆனால் இவ்வாறு நாம் நபிமார்களைப் பற்றி நமது சம வயதினரைப் போன்றும், சாதாரணமாக நமக்கு அறிமுகமானவர்களைப் போன்றும் பேசுவது, நபித்தோழர்கள் தமக்குள் பேசிக்கொள்வதுபோன்று இறைத்தூதர் ﷺ அவர்களுடன் பேச முற்படக் கூடாது என்று அல்லாஹ்வால் தடுக்கப்பட்ட வட்டத்தினுள் அடங்கிவிடக்கூடியதாகும். இறைத்தூதருடன் பேசும்போது குரலைக்கூட உயர்த்தக் கூடாது என நபித்தோழர்களை இறைவன் தடுத்திருந்தான்:

> *விசுவாசம் கொண்டவர்களே, உங்களது குரல்களை நபியின் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள். உங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் இரைந்து பேசுவதுபோன்று அவருடன் இரைந்து பேசாதீர்கள். நீங்கள் உணராமலே உங்களது நற்செயல்கள் அதனால் வீணாகிவிடும்.* (49:2)

எனவே, இச்சம்பவம் குறித்து (மட்டுமன்றி நபியவர்கள் பற்றி வந்துள்ள வேறு சம்பவங்கள் குறித்தும்) விளக்கவுரை வழங்குபவர்கள் அல்லது கருத்து சொல்பவர்கள் பின்வருமாறு கேட்டுப்பார்ப்பது நல்லது:

---

25. சையித் குதுப், *'ஃபீ ழிலாலில் குர்ஆன்'*, கெய்ரோ, அத்தியாயம் *அல்கஸஸ்*, வசனங்கள் 15-19ன் விளக்கம்.

மூசா ﷺ அந்த எகிப்தியரைக் குத்திக் கொல்லத்தான் நாடினாரா?

அல்லது, எகிப்தியரின் உயிரைப் பறிக்கும் அளவுக்கு அந்தக் குத்து விழுந்துவிட்டதா?

அல்லது, உஸ்தாது சையித் குதுப் 'ஃபீ ழிலாலில் குர்ஆன்' நூலின் வேறோர் இடத்தில் சொல்வதுபோன்று, அவரைத் தள்ளிவிடவே மூசா ﷺ விரும்பினாரா?

அல்லது, இவ்விவகாரம் முழுமையாகவே ஒரு தெய்வீகத் திட்டமிடலாக அமைந்ததா? அதன் மூலமாக, ஃபிர்அவ்னின் மாளிகை வாழ்விலிருந்து மூசாவை வெளியேற்றி, பூமியும் மலைகளும் சுமக்கப் பயந்த ஓர் பொறுப்பையும் தூதையும் அவர்மீது சுமத்த இறைவன் நாடினானா?

உஸ்தாது சையித் குதுப் கூறுவதுபோன்று, மூசா ﷺ அவ்வளவு கடுமையாகக் கோபமடைந்தது வெறும் இனத் தூண்டுதலால்தானா?

அல்லது, கடும் இழிவுக்கும், சிலபோது உடலளவிலான தீங்குக்கும் உட்பட்டிருந்த இஸ்றவேலர் மூசாவை உதவிக்கு அழைத்ததால்தான் அவ்வாறு செய்தாரா?

மட்டுமன்றி, ஒரு நபியின் சமூகம் மிக மோசமான குற்றங்களுக்கும் விழுமியத் தீமைகளுக்கும் ஆளாக்கப்படும்போதும், குழந்தைகள் கொல்லப்படும்போதும், பெண்கள் மானபங்கப் படுத்தப்படும்போதும் அவர் தனது இனத்துக்குச் சார்பாகச் செயல்பட்டார் என்று குற்றம்சாட்டப்படுவது எப்படி நியாயமாகும்?

ஆக, திருக்குர்ஆனில் (20:41) குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று இறைவன் இறைத்தூதர் மூசாவைத் தனது நேரடிக் கண்காணிப்பில் வளர்த்தெடுத்து, ஃபிர்அவ்னுக்கு முன்னால் நிமிர்ந்து நிற்கக் கூடியவராகத் தயார்படுத்தினான் என்றுதான் நாம் கூற முடியும். அநியாயக்காரன் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும், அவன் முன்னால் வெறுமனே கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்க முடியாத உளவியலையும் நரம்புமண்டலத்தையும் இறைவன் அவருக்கு அளித்திருந்தான். எனவேதான், தன் கண்முன்னே ஒருவர் அநீதிக்குட்படுவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறான சூழ்நிலைகளில் — அவரே தன்னைப் பற்றி வர்ணிப்பது

போல் — அவரது நெஞ்சில் நெருக்கடி தோன்றிவிடும்; பேச முடியாமல் நா குளறும். ஆனால், அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவ அவயவங்கள் இயங்கும். அதேபோன்ற நிலை திரும்பத்திரும்ப உருவாகி புதிய அபயக்குரல்கள் எழுந்தாலும், அவர் அப்படியே இயங்க முற்படுவார்.

இந்நூலில் நான் நபிமார்களது உணர்வுகள் குறித்தும், அவற்றுக்கு அவர்கள் எதிர்வினையாற்றிய விதம் குறித்தும் பொதுவாகவே பேசியுள்ளேன். எனது அடுத்த நூலில் — இறைவன் நாடினால் — நபி முஹம்மது ﷺ அவர்களது உணர்வுகள் பற்றிக் குறிப்பாகக் கவனம் செலுத்தவுள்ளேன். ஏனெனில், நபிமார்கள் அனைவருள்ளும் முஹம்மது ﷺ அவர்களது உணர்ச்சி சார்ந்த வாழ்வியல் மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் பதிவுசெய்யப்பட்டதைப் போன்று அன்னாருக்கு முன்னரோ பின்னரோ எந்த மனிதரது வாழ்வியலும் பதிவுசெய்யப்பட்டதில்லை. மட்டுமன்றி, அன்னாரது உணர்வார்ந்த வாழ்வியல் அவர்களது நுபுவ்வத்திற்குச் சான்றாக அமையும் மிகப் பெரும் ஓர் அற்புதமாகவும் அமைந்துள்ளது.

இது எனது பார்வையில் நுபுவ்வத்தின் சான்றுகள் குறித்து எழுதிய வர்கள் பெரிதும் கவனம் குவித்த பௌதிக அற்புதங்களைவிடப் பெரியதாகும். அதேவேளை இப்பௌதிக அற்புதங்கள்கூட — நவீன 'முஃதஸிலா' சிந்தனையால் தாக்கமடைந்தோர் குறைமதிப்பு செய்வதுபோல் அன்றி — மிக முக்கியத்துவம் கொண்டவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத்துடன் இவ்வத்தியாயத்தை நிறைவுசெய்துகொண்டு நவீன உளவியல் நோக்கில் மன உணர்ச்சி களுக்கான வரைவிலக்கணங்கள் யாவை என்பதை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# அத்தியாயம் இரண்டு

## நவீன மனோதத்துவ-நரம்பியல் ஆய்வுகளின் நோக்கில் உணர்ச்சிவயப்பாடு

### உணர்ச்சி வெளிப்பாட்டின் அகிலத்தன்மை

உணர்ச்சிகள் என்றால் என்ன என்றும், அவை எப்படி இயங்குகின்றன என்றும் வரையறை செய்வதில் உளவிய லாளர்களிடையே தெளிவான வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், அவர்களது ஆய்வுகளை நுணுக்கமாகக் கவனிக்கும் ஒருவரால் அவற்றின் நேர்நிலையான, பயன்மிக்க பல பங்களிப்பு களைக் கண்டுகொள்ள முடியும். (அவ்வாறே அவற்றில் ஆச்சரிய மும் விசித்திரத்தன்மையும் கொண்ட கோட்பாடுகளையும் பொருள்கோடல்களையும்கூட ஒருவரால் கண்டுகொள்ள முடியும். தமது உளவியல் கருதுகோளை இறுகப் பற்றிப்பிடித்துக்கொண்டு உணர்ச்சிகள் என்ற களத்தில் அவற்றைப் பிரயோகித்த சில அறிவியலாளர்களது சிந்தனையிலிருந்து பிறந்தவை அவை.) ஒரு மனிதனது பல்வேறு உள்ளார்ந்த உணர்ச்சிகளுடன் இணைந்த வகையில் முகத்தில் வெளிப்படும் மாற்றங்கள் பிறப்பியல் பாகவும் பரம்பரையாகவும் வருபவை எனவும், பல்வேறு நாடுகளிலும் நாகரிகங்களிலும் வாழும் மனிதர்களால் அவற்றை இனங்கண்டுகொள்ள முடியும் எனவும் கள ஆய்வுகள் உறுதிப் படுத்தியமை இப்பங்களிப்புகளில் முக்கியமானவையாகும்.

சில அடர்ந்த காடுகளில் வசிக்கும் பழங்குடியினரால் அல்லது ஆஸ்திரேலியப் பாலைவனங்களில் வாழும் ஆதிவாசிகளால்கூட அவர்களிடம் காண்பிக்கப்படும் படங்களில் காணப்படும் முக உணர்ச்சிகளை இனங்காண முடியும் என அந்தக் கள ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

கோபம் ஏற்படும்போது நரம்புகள் புடைத்து கண்கள் சிவத்தல், பயத்தின்போது முகம் வெளிறி, கைகால்கள் நடுங்கி குரல்

மாற்றமடைதல், ஆச்சரியத்தின்போது புருவங்கள் உயர்ந்து கண்கள் அகல விரிதல், விரும்பத்தகாத வாசனைகளை நுகரும்போது அல்லது வெறுக்கத்தக்க ஒன்றைக் காணும்போது அல்லது கேட்க நேரும்போது அருவருப்பையும் வெறுப்பையும் வெளிக்காட்டும் வகையில் மேலுதடு மடிந்து மேலுயர்தலும் மூக்கு இலேசாகச் சுருங்குதலும் கண்கள் சிறிதாதலும் ... அவ்வாறான உணர்ச்சி வெளிப்பாட்டுக்கான சில உதாரணங்களாகும்.

## நவீன உளவியலின் மிக முக்கியமான பங்களிப்புகள்

நவீன உளவியலின் மிக முக்கியமான பங்களிப்புகளுள் ஒன்று, அது அனைத்து — விரும்பத்தக்க, விரும்பத்தகாத — உணர்ச்சிகளையும் ஒரே வகைப்பாட்டினுள் கொண்டுவந்தமையாகும். கடந்தகாலங்களில் மனித உணர்ச்சிகளை ஆய்வுக்குட்படுத்தியவர்கள் ஒவ்வொரு உணர்ச்சி பற்றியும் தனித்தனியாகவே பேசிக்கொண்டிருந்தனர். உதாரணமாக, புராதனக் காலங்களில் அறபு மொழியில் (ஒவ்வோர் உணர்ச்சியையும் தனித்தனியாக வர்ணிக்கத்தக்க தன்னிகரற்ற நுணுக்கம் அதில் காணப்பட்டபோதிலும்) அனைத்து உணர்ச்சிநிலைகளையும் ஒன்றிணைத்துக் குறிக்கக்கூடிய ஓர் தனிச்சொல் இருக்கவில்லை. அந்த வகையில், உணர்வுக்கிளர்ச்சி, உடலின் சமநிலையில் ஏற்படும் பாதிப்பு, வெளிப்படையான நடத்தையில் ஏற்படும் மாற்றம் ஆகிய மூன்றிலும் உணர்ச்சிகள் கொண்டிருக்கும் பாரிய உள-உடல் ஒற்றுமையை வெளிக்கொண்டுவந்து, அனைத்து உணர்ச்சிகளையும் ஒரே வகைப்பாட்டினுள் அடக்கியமை நவீன உளவியலின் பெரும் பங்களிப்பாக அமைந்தது.

உதாரணமாக, ஒருவரது கோபம், பயம் போன்ற வேறுபட்ட சில உணர்ச்சிகள் அவரிடம் வெவ்வேறான முகமாற்றங்களை ஏற்படுத்த முடியும். அவற்றுடன் இணைந்த வகையில் வேறுபட்ட அறிவு, உணர்ச்சி மாற்றங்களும் அவரிடம் ஏற்பட முடியும். எனினும், இவையனைத்தும் உடலளவில் ‘இதயத்துடிப்பு வேகம் அதிகரித்தல்’ போன்ற ஒத்த தன்மை கொண்ட மாற்றங்களையே ஏற்படுத்துகின்றன.

உணர்ச்சிச் செயல்பாட்டின் இந்த முத்தொடர்பை வலியுறுத்துவதிலும் உளவியல் விஞ்ஞானம் பங்களிப்பு செய்திருக்கிறது. உதாரணமாக, உணர்ச்சிவயப்பாடு என்பது — நாம் காண்பதுபோன்று — பய உணர்ச்சி, கோப உணர்ச்சி, மகிழ்ச்சி போன்ற உள்ளார்ந்த உணர்ச்சிகளையும் பிற உணர்ச்சிகளையும் உள்ளடக்கும் பிரயோகமாகும். இவ்வுணர்ச்சி

களைத் தொடர்ந்தே உள்ளார்ந்த, வெளிப்படையான உடலியல் மாற்றங்கள் தோன்றுகின்றன என அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தின. முகபாவனை, நரம்புமண்டலச் செயல்பாடு, ஹார்மோன் சுரப்பு என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை இவை உள்ளடக்குகின்றன. உணர்ச்சிவயப்படுபவர் இந்த உளவியல், உடலியல் தூண்டலின் காரணமாக வெளிப்படையான துலங்கலை மேற்கொள்கிறார். அச்சத்தை ஏற்படுத்திய ஒன்றைவிட்டு வெருண் டோடுதல், கோபப்படுத்தியவருடன் சண்டையிடுதல், நேசிப்பவரைத் தழுவுதல், மகிழ்ச்சியளித்த ஒன்றைப் பார்த்து நெகிழ்தல் அல்லது சிரித்தல் என்பன இத்தகைய துலங்கல்களுள் அடங்கும்.

### உணர்ச்சிகள் தொடர்பான முக்கியமான உளவியல் கோட்பாடுகள்

சங்கிலித்தொடர்போன்ற இந்த முத்தொடர்பையே பொதுவாக மனிதர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், தர்க்கத்துக்கு இயைபான தொடர்பாக இதுவே உள்ளது. லாசரஸ் (Lazarus) போன்ற ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ள கோட்பாடும், அறிவுளவியல் களத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பலப்படுத்தும் கோட் பாடும்கூட இதுதான். ஆனால், கேனன் (Cannon) என்னும் அறிவியலாளர், உணர்ச்சி சார்ந்த பக்கமும் உடல் சார்ந்த துலங்கலும் ஒரே நேரத்தில் நிகழ்வதாகத் தனது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்த முயன்றார்.

மறுபுறத்தில், மிகச் சிறந்த உளவியலாளராகக் கருதப்படும் வில்லியம் ஜேம்ஸ் (William James) வித்தியாசமான ஒரு கருதுகோளை முன்வைக்கிறார். நடத்தையியல் கொள்கையை மிதமிஞ்சி ஆதரிக்கும் இவர், சிந்தித்தல், அறிவுப் பகுதி ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பின்தள்ளி, தூண்டல்கள், அவற்றுக்கான உடனடித் துலங்கல்கள் ஆகியவற்றின் மீது மாத்திரம் கவனம் குவிக்கிறார். ஒருவரது மனநிலைக்குத் தூண்டியாக அமையும் ஒரு விசயம் பற்றிய அவரது அறிவார்ந்த புரிதலே அவரிடம் உணர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன என மனிதர்கள் கருதுவதாகவும், அது தவறான புரிதல் எனவும், உண்மைநிலை அதற்கு நேர்மாறானது எனவும் வில்லியம் ஜேம்ஸ் கூறுகிறார். அதாவது, ஒருவர் தனக்கருகில் நிற்கும் மிருகம் கொடிய சிங்கம் என்பதை முதலில் புரிந்துகொண்டு, பின்னர் அந்தக் காட்சியால் அவருக்குப் பயம் ஏற்பட்டு, அதன் பிறகு தப்பிக்கும் நோக்குடன் தலைதெறிக்க ஓடுவார் என நம்புவது விவகாரங்களைத் தவறான ஒழுங்கில் தொகுப்பதாகவே அமையும் என அவர் கருதுகிறார்.

நடத்தையியலாளர்கள் உற்சாகத்துடன் ஆதரித்த அவரது பிரபலமான கோட்பாட்டின்படி, ஒருவர் சிங்கத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அவரது உடல் ஓடுதல் அல்லது நடுங்குதல்போன்ற துலங்கல்களை நேரடியாக வெளிப்படுத்துவதாகவும், நரம்புமண்டல, ஹார்மோன் மாற்றங்களுக்கு உட்படுவதாகவும், இதயத்துடிப்பு வேகம் அதிகரித்தல் போன்ற உள்ளுறுப்பு செயல்பாடுகள் தோன்றுவதாகவும், அதன் பிறகே இம்மாற்றங்கள் அனைத்தும் சேர்ந்து பய உணர்வை ஏற்படுத்துவதாகவும் அவர் விளக்கினார்!

இவ்விளக்கத்தின்படி, 'எனது உற்ற நண்பனின் மரணச்செய்தியைக் கேள்விப்பட்டேன். எனவே கடும் கவலையடைந்து அழுதேன் ...' என்று உங்களால் கூற முடியாது. மாறாக, 'நான் துன்பச்செய்தி கேட்டு அழுதேன். அதனால் என்னிடம் கவலையுணர்வு தோன்றியது' என்றே கூற வேண்டும். 'அவர் என்னைத் திட்டிக் கோபப் படுத்திவிட்டார். எனவே அவரை அடித்தேன்' என்று கூற முடியாது. மாறாக, 'அவர் என்னைத் திட்டினார். எனவே நான் அடித்தேன். அதனால் கோபம் என்னை ஆட்கொண்டுவிட்டது' என்றுதான் கூற வேண்டும்.[26]

இக்கோட்பாட்டிலிருந்து கிளைபிரிந்த, இதனைவிட முக்கியமான சில உணர்ச்சிப் பரிமாணங்கள் பற்றிய விமர்சனத்துக்குச் செல்ல முன்னர், இக்கோட்பாட்டைக் கண்டித்து வெளியான ஆய்வுகள் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கரிம வேதியியல் (Organic Chemistry) துறைக்குப் பக்கபலமாகவே ஜேம்ஸின் கோட்பாடு உருவாக்கப்பட்டதெனினும், அத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்திலிருந்தே இக்கோட்பாட்டுக்கு மறுப்பு வழங்கப்படும் என எவரும் எண்ணியிருக்கவில்லை.

இக்கோட்பாடு குறிப்பிடுவதுபோல் உடலின் உள்ளார்ந்த மாற்றங்களே குறிப்பிட்ட உணர்ச்சிநிலைகளை ஏற்படுத்துவதாக இருந்தால், மனிதனுக்கு ஏற்படும் ஒவ்வோர் உணர்ச்சிநிலையின்போதும் தனித்தனியான உள்ளார்ந்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஆனால் யதார்த்த அனுபவத்தில் இதயத்துடிப்பு அதிகரித்தல் என்பது ஒரு தனித்த உணர்ச்சியுடன் மாத்திரம் தொடர்புபட்டதல்ல. கோபம், பயம், காதல் முதலிய எல்லா உணர்ச்சிநிலைகளிலும் அது ஒருவருக்கு ஏற்படவே செய்கிறது. அவ்வாறே, ஒருவர் உடற்பயிற்சியில் ஈடுபடும்போது அங்கு எந்த உணர்ச்சிவயப்பாடும் இல்லாதபோதும் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. வேறுபட்ட சில

26. Williams James, *'The Varieties of Religious Experience: A Study in Human Nature'*, 1982.

உணர்ச்சிவயப்பாடுகள் ஒரே வகையான ஹார்மோன்களையும் நரம்புமண்டல மாற்றங்களையும் தூண்டுவதாகக்கூடத் தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இறுதியாக, மனிதனிடம் பய உணர்வு அல்லது கோப உணர்வு தோன்றும்போது சுரக்கும் அட்ரினலின் ஹார்மோனை அல்லது நோராட்ரினலின் ஹார்மோனைச் சில நபர்கள்மீது — அவர்கள் அறியாத வகையில் — ஊசிமூலம் செலுத்திப் பரிசோதித்தபோது, அவர்களிடம் பய உணர்வோ கோப உணர்வோ தோன்றாமல் இனம்புரியாத ஓர் உற்சாக உணர்வு மாத்திரம் தோன்றியதாகக் கண்டறியப்பட்டது. அவர்கள் கோபம் கொண்ட ஒரு கூட்டத்துக்கு மத்தியில் இடப்பட்டபோது அவர்களும் கடும் கோபமடைந்தனர். பயங்கரமான ஒரு விசயத்தை எதிர்கொண்டபோது கடுமையான பயத்தை வெளிப்படுத்தினர்.

ஆக, உள்ளார்ந்த மாற்றங்களோ உடலியக்கங்களோ இரசாயன மாற்றங்களோ உணர்ச்சிவயப்பாட்டுத் தன்மையைத் தாமாக ஏற்படுத்துவதில்லை. மாறாக, குறித்த உணர்ச்சித் தூண்டலுக்கு ஏதுவான சூழ்நிலை பற்றிய அறிதல் அதற்கு அவசியம். அந்த அறிவே குறித்த உணர்ச்சியுடன் இணைந்த இரசாயன, உள்ளுறுப்பு மாற்றங்களைத் தூண்டுகிறது. எனினும், இக்கோட்பாடும் இதனை ஒத்த கருத்தாக்கங்களும் கடுமையான உணர்ச்சிவயப்பாட்டு நிலைமைகளின்போது தோன்றும் எதிர்பாராத எதிர்வினைகளை விளக்குவதற்கு மிகச் சொற்ப அளவே உகந்தவையாக உள்ளன. அதாவது, திடீர் பீதிகளால் (Panic attacks) தாக்கமுறுபவர்கள் பற்றி, அல்லது எதிர்பாராத தூண்டல்களுக்குக் கடுமையாக உணர்ச்சிவயப்பட்டு எதிர்வினையாற்றும் பரம்பரை இயல்பைக் கொண்டவர்கள் பற்றி விளக்குவதற்கு இவை போதுமானவையல்ல. ஏனெனில், இத்தகைய நிலைமைகளில் அறிதலுடன் பிறப்பியல்பாக வரும் விரைவான எதிர்வினைகளும் கலந்திருக்கும். பூனையைக் கண்டு எலி பயப்படுவதையும், பூகம்பத்தைக் கண்டு மனிதன் பயப்படுவதையும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

இக்கோட்பாட்டை முன்வைத்ததன் மூலம் ஜேம்ஸ் விரும்பியது என்ன?

ஒரே கல்லில் நான்கு குருவிகளை வீழ்த்த முயல்வதே இங்கு அவரின் நோக்கமாக இருந்திருக்கிறது:

**ஒன்று:** உணர்ச்சிவயப்பாடான எதிர்வினைகள் உடலைப் பின்தொடர்ந்து வருபவையே அன்றி, உணர்ச்சிகளை

உடல் பின்பற்றிச் செல்வதில்லை என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும் முயற்சி. இது சடவாதக் கொள்கையை ஆதரிக்கும் நிலைப்பாடாகும்.

**இரண்டு:** மனிதனது உணர்வார்ந்த எதிர்வினைகளையும், மனிதனைப் போன்று பகுத்தறியும் திறனைக் கொண்டிராத மிருகத்தையும் தொடர்புபடுத்துதல். இதன் மூலமாக, உணர்ச்சிகள் பற்றிய டார்வினின் கூர்ப்புக் கொள்கையைப் பலப்படுத்துதல். டார்வின் இதனை *'மனிதனிடமும் மிருகங்களிடமும் உணர்ச்சி வெளிப்பாடு'*[27] என்ற தனது நூலில் விளக்கியுள்ளார்.

நரம்புமண்டலத் தொகுதியிலும் செரிமானத் தொகுதியிலும் நமக்கும் மிருகங்களுக்கும் மத்தியில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது என்பதில் ஐயமில்லை. நமது இதயங்களின் படைப்பமைப்பு, குருதிச் சுற்றோட்டம், சில வகையான உணர்ச்சிகள் என்பவற்றிலும் இந்த ஒற்றுமையைக் காண முடிகிறது. மனிதன் என்பவன் 'பேசும் விலங்கு' என முன்னோர் வரைவிலக்கணம் செய்யக் காரணமாக அமைந்ததும் இந்த ஒற்றுமைதான். 'தக்கனபிழைத்த'லுக்கு (Survival of the fittest) வழியாக அமையும் 'இயற்கைத் தேர்வு' என்ற தோற்றப்பாடு உண்மையானது என்பதிலும் சந்தேகம் இல்லை. ஏனெனில், இத்தோற்றப்பாட்டினூடாகவே படைப்புகள் தமது சூழலுக்கேற்பத் தகவமைகின்றன. அதேவேளை, இத்தோற்றப்பாட்டையே டார்வினும் தனது வாதங்களுக்குச் சார்பாகத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டார்.

எவ்வாறாயினும், நமக்கும் மிருகங்களுக்கும் மத்தியில் ஓர் ஒற்றுமை இருப்பதை ஏற்பதாலோ, 'சூழலுக்கு இயைபாக்கம் அடைதல்' என்ற கொள்கையை ஏற்பதாலோ ஆமை பறவையாக மாறிவிடும் என்றோ, குரங்கு மனிதனாகிவிடும் என்றோ பகுத்தறிவுள்ள எவரும் கூறுவதில்லை. இதில் முரண்நகை என்னவென்றால், கடந்த ஐம்பது வருடங்களில் உயிர் வேதியியல் துறையிலும் நுண்ணுயிரியலிலும் பரம்பரையியலிலும் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க அறிவியல் முன்னேற்றமே பரிணாமக் கோட்பாட்டின் அரியணையை உலுக்கி அதன் குறைபாடுகளை வெளிக்கொண்டுவந்தது. அதுபற்றி விரிவாக

27. Charles Darwin, *'The Expression of the Emotions in Man and Animals'*, Oxford University Press, 9 April 1998. Retrieved: 4 August 2013.

விளக்குவதற்கு உகந்த இடம் இதுவல்ல. எனவே, கீழ்வரும் கூற்றுடன் நமது இக்கலந்துரையாடலைமுடித்துக்கொள்வோம்:

*நமக்கும் உயர்நிலை மிருகங்களுக்கும் மத்தியில் காணப்படும் ஒற்றுமை இறைவனது படைப்புகள் பற்றிச் சிந்திக்க நம்மைத் தூண்டுகிறது. அவன் நமக்குள் ஏற்படுத்தியிருக்கும் சிந்தனா-உணர்வாற்றல்களால்தான் நாம் மனிதர்களாக இருக்கிறோம். நமக்கும் உயர்நிலை மிருகங்களுக்கும் மத்தியிலான இந்த ஒற்றுமைதான் ஏக இறைக்கொள்கையை நோக்கியும் நம்மை அழைக்கிறது. ஏனெனில், படைப்பினங்களுக்கு மத்தியிலான இந்த ஒற்றுமை அவற்றைப் படைத்தவன் ஒருவனே என்பதையும், அவனைத் தவிர வேறு கடவுளே இல்லை என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. உலகில் காணப்படும் மனிதர்கள், மரங்கள், மலைகள், நதிகள் முதலிய அனைத்து படைப்புகளும் ஒரே வகையான அணுக்களாலும் நுண்மங்களாலும் ஆனவை என்ற அறிவுகூட இத்தகைய சிந்திப்பை நோக்கியே நம்மை அழைக்கிறது. ஒவ்வொன்றையும் படைத்து உருவமைத்து வழிகாட்டிய அந்த இறைவன் தூய்மை நிறைந்தவன்.*

***மூன்று:*** மனித இயல்பு குறித்த சுயாதீன எந்திரக் கருதுகோளுக்கு வலுசேர்க்க விரும்பியமையே ஜேம்ஸ் தனது கோட்பாட்டின் மூலமாக வீழ்த்த விரும்பிய மூன்றாவது குருவியாகும். இக்கருதுகோள் — முன்பே நாம் குறிப்பிட்டதுபோல் — 'தூண்டலும் நடத்தைரீதியான எதிர்வினையும்' எனவும் அறியப்படுகிறது. இக்கருதுகோளானது உள்ளார்ந்த சிந்திப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து வெளிப்படையாகப் பார்க்கவும் அளவிடவும்கூடிய தூண்டல்-துலங்கல் மீதே கவனம் குவிக்கிறது. அந்த வகையில், இலகுவாக அவதானிக்கவும் ஒப்பிடவும் ஏதுவான உடல்ரீதியான எதிர்வினைகளையே இது அதிகம் கவனத்தில் கொள்கிறது.

***நான்கு:*** நவீன உளவியல் விஞ்ஞானம் தத்தெடுத்துக்கொண்ட சித்தாந்தத்திற்கு ஆதரவளித்தல் நான்காவது குருவியாகும். மனிதனது நல்ல பழக்கம், கெட்ட பழக்கம், அவன் தனது முழுத் தெரிவுடன் மேற்கொள்ளும் செயல்களுக்கான பொறுப்பு ஆகியவற்றை இச்சித்தாந்தம் நிராகரிக்கிறது. மனிதன் என்பவன் சூழல் காரணிகளாலும் பரம்பரைக் காரணிகளாலும் இயக்கப்படும் மிருகமே அன்றி வேறல்லன்

எனவும், அவனுக்கு உண்மையான சுயாதீனம் எதுவும் கிடையாது எனவும் இச்சித்தாந்தம் கருதுகிறது. இந்த அபத்தமான கருதுகோளைத் தத்தெடுத்ததன் மூலமாக நவீன உளவியல் ‘மதச்சார்பின்மை’ என்ற குடைக்குள் நுழைந்துகொள்கிறது.

## பகுத்தறிவும் மூளையும்

ஆக, மனித இயல்பு பற்றிய மதக்கோட்பாட்டையும், மேற்கத்திய உளவியல் கட்டமைப்பைத் தாங்கிநிற்கின்ற நாத்திக-சடவாதச் சித்தாந்தத்தையும் நிரந்தர மோதல் நிலையில் வைத்திருப்பது இக்கருதுகோள்தான். ஏனெனில், மனிதனது பகுத்தறிவே அவன் பொறுப்பு சுமப்பதற்கான முன்நிபந்தனை என மதம் கருதுகிறது. அவனது சிந்திப்பும் பகுத்தறிவும்தான் நன்மையானதைத் தேர்வு செய்யவும் தீங்கானதைத் தவிர்ந்துக்கொள்ளவும் — அந்தத் தேர்வு தனது மனவிருப்பத்திற்கு மாற்றமாக அமைந்திருந்தாலும் — அவனைத் தூண்டுகிறது. எனவேதான், மிருகத்தைப் போலன்றி மனிதன் சில வகையான உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்கிறான். தான் ஆசைப்படுவதை அனுபவிப்பதை அதற்குப் பொருத்தமான சூழ்நிலை வாய்க்கும்வரை பிற்படுத்திவைக்கிறான். அப்படி அவன் நடந்துகொள்ளாதபோது ஏற்படும் தீமைகளுக்கு அவனே பொறுப்பாகவும் நிற்கிறான்.

> இவ்வாறு உணர்வுசார்ந்த நடத்தையில் மிருகத்தைப் போன்று செயல்படாமல் மனிதனைத் தடுப்பது எது? குரங்குகளிலிருந்து பரிணாமமடைந்த அவனது மூளையா? அல்லது, சடவுலக விதிகளால் ஆளப்படாததும், மூளையை ஆளுகை செய்வதும், ஆன்மீக இயல்பு கொண்டதுமான அவனது பகுத்தறிவா?

மனிதனின் இயல்பு குறித்த இம்முரண்பாடே அனைத்து உளவியல் சிந்தனைகளும் கோட்பாடுகளும் அவற்றிலிருந்து பிறக்கும் செயல்வாதங்களும் சுற்றிச் சூழல்கின்ற மையப்புள்ளியாக உள்ளது. எனவேதான், இப்புள்ளியை நாம் இலகுவாகக் கடந்துசென்று விடாமல் நின்று கவனிக்க வேண்டியுள்ளது. அந்த வகையில், இத்துறையில் சிறப்பறிவு பெற்றிராத வாசகர்களுக்கு இதனை நாம் எளிமைப்படுத்தி விளக்க முற்படுகிறோம். உண்மையில் அதிகச் சிக்கல் கொண்ட இவ்விவகாரம் பற்றி ஏற்கனவே தெரிந்துவைத்திருக்கும் சிறப்புக் கற்கையாளர்கள் நமது இந்த எளிமைப்படுத்தலைப் பொறுத்துக்கொள்வார்களாக!

சடப்பொருளின் விதிகளுக்கு முற்றிலும் கட்டுப்படாத ஆன்மீக இயல்பு கொண்ட பகுத்தறிவோ உள்ளமோ இருப்பதை மதச்சார்பற்ற சடவாதம் ஏற்றுக்கொள்ளாதிருப்பது இயல்பானதுதான் என்பதை ஆரம்பமாகவே கூறிக்கொள்கிறோம். ஏனெனில் அவ்வாறு ஏற்றுக்கொண்டால், அது மதச்சார்பற்ற சடவாதக் கட்டமைப்பையும் டார்வினியக் கருத்தாக்கத்தையும் அடியோடு தகர்த்துவிடும். மனிதனிடம் பரிணாம முன்னேற்றமடைந்த மூளை காணப்படுகிறது என்பதைத் தவிர அவனுக்கும் மிருகத்துக்கும் மத்தியில் எந்த வேறுபாடும் இல்லை என இக்கட்டமைப்பின் அடிப்படை விதி வலியுறுத்துவதே இதற்குக் காரணமாகும். நவீன மேற்கத்திய அறிவியலும், அதனைத் தொடர்ந்து மேற்கத்திய உளவியலும் ஒரு மதம்போன்று ஏற்றிருக்கும் நம்பிக்கையாக இது உள்ளது.

மனிதனின் 'மிருகநிலை' குறித்து நடத்தையியலாளர்களும் சடவாதிகளும் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கையை நாம் இக்கருத்தாக்கத்திலிருந்தே புரிந்துகொள்கிறோம். 'பகுத்தறிவு' என்னும் பதம் நமது சிரசுக்குள் இருக்கும் மூளையைத்தான் குறிக்கிறது என்பதற்கப்பால் வேறெதையும் ஏற்க முடியாது என அவர்களுள் தீவிரமானோர் கூறுவதும் இதனால்தான். ஸ்தூலமற்ற எதுவாக இருப்பினும் அது அவர்களைப் பொறுத்தவரை உடலின் பருப் பொருளே அன்றி உண்மையான இருப்பு கொண்ட வேறொன்றாக இருக்க முடியாது. விபத்து அல்லது கிருமித்தாக்கம் அல்லது இரத்த உறைவு காரணமாக மனித மூளையின் ஒரு பகுதி சேதமடைந்து விட்டால், அவனது உணர்ச்சிகளும் ஆளுமையும் மாற்றமடைந்து விட முடியும் என்பதை அவர்கள் தங்களது இக்குறுகிய புரிதலுக்குச் சான்றாக முன்வைக்கின்றனர்.

அதாவது, அத்தகைய மனிதனின் உணர்ச்சிசார் நடத்தை மாற்ற மடைந்து, ஏற்கனவே அமைதியான ஆளுமை கொண்டிருந்த அவன் கூருணர்ச்சி கொண்டவனாகவும், அற்பமான காரணத்துக்குக்கூடக் கோபம் கொப்பளிப்பவனாகவும் மாற்றமடையலாம்; அல்லது பகுதியளவில் செயலிழந்துவிடலாம்; அல்லது பேச முடியாதவனாகி விடலாம்; அல்லது வேறெதுவும் குறைபாடுகளுக்கு உட்படலாம். இதன் மூலமாக, இச்சடவாதக் கருதுகோள் மனிதனது அனைத்து உடல் மற்றும் பகுத்தறிவுச் செயல்பாட்டையும் கட்டுப்படுத்தும் அரசனாகச் சாம்பல் நிறப் படலத்தினால் மூடப்பட்ட மூளையை ஆக்கிக்கொண்டது. அவர்கள் சொல்வதுபோல் இதுதான் உண்மை நிலை என்றால், மனிதனது உளவியல், உடலியல் செயல்பாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் வேறோர் ஆத்மீகப் படைப்பும் இருப்பதாகக் கருத வேண்டிய அவசியம்தான் என்ன?!

எனினும், மனித இயல்பு குறித்தும் உணர்ச்சிகள் குறித்துமான இந்த அதீதச் சடவாத-நாத்திகச் சிந்தனைக்கு எதிராக நரம்பியல் துறையில் தோன்றிய அறிவுப் புரட்சியும் சமகால ஆய்வுகளும் உண்மையிலேயே மகிழ்ச்சியளிப்பவையாகும். வெறித்தனமான நாத்திகச் சிந்தனைக்குப் பின்னால் அள்ளுண்டுபோவதை நிராகரித்த அறிவியலாளர்களே இப்புரட்சியையும் ஆய்வுகளையும் மேற் கொண்டனர். மட்டுமன்றி, புலன்களுக்கு அப்பாற்பட்ட உளவியல் அல்லது மீநிகழ்வு உளவியல் (Parapsychology) பற்றிய நியமப் படுத்தப்பட்ட ஆய்வுகளும் இவற்றுடன் சேர்ந்துகொண்டன.

உளவியல் துறையின் அறிவுப் புரட்சிக்கும், நரம்பியல் துறை ஆய்வாளர்களுக்கும் மத்தியிலான இந்த ஒத்துழைப்பின் விளைவாக மனிதனது உணர்வார்ந்த நடத்தையை வடிவமைப்பதில் பகுத்தறி வின் வகிபாத்திரமும், உணர்வின், பிரக்ஞையின் முக்கியத்துவமும் மீள நிலைநிறுத்தப்பட்டன. இந்த வகையில்தான் ஜான் எக்லஸ் (John Eccles) என்னும் அறிவியலாளரது கூற்றும் அமைந்திருந்தது. நரம்புத் தொகுதி தொடர்பான ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்ற அவர், மனிதனிடம் ஸ்தூலமற்ற ஓர் அறிவு அல்லது 'அறியும் மனம்' உள்ளதெனக் கூறினார். மனிதனின் மூளையை ஆளுகை செய்யும் ஓர் அறிவின் அல்லது படைப்பின் இருப்பை ஏற்காமல் அவனது நரம்புத் தொகுதியின் செயல்பாட்டை அல்லது தன்னைப் பற்றிய அவனது பிரக்ஞையை விளங்கிக்கொள்ள முடியாது எனவும் அவர் உறுதியாகக் கூறினார். மனிதனுக்கோர் ஆன்மீக இயல்பு இருப்பதை ஏற்பதற்கு அண்மித்த நிலைப்பாடாக அவரது இக்கருத்தும், அவரைச் சார்ந்த அறிவியலாளர்களது கருத்தும் அமைந்தது எனலாம்.

இவ்வறிவியலாளர்கள் மூளையைத் தொலைக்காட்சிப் பெட்டிக்கும், பகுத்தறிவை ஒளிபரப்பு நிலையத்திற்கும் உவமித்தனர். தொலைக் காட்சிப் பெட்டி செயலிழந்துவிட்டாலோ, அதில் தோன்றும் படங்கள் தெளிவற்றுத் தெரிந்தாலோ அதன் உரிமையாளர் ஒளிபரப்பு நிலையத்திடம் முறையிடுவதில்லை. மாறாக, அதனைத் திருத்தக்கூடிய தொழில்நுட்பவியலாளரிடமே எடுத்துச்செல்வார். ஏனெனில், ஒளிபரப்பு அலைகளில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது அவருக்குத் தெரியும். மனிதப் பகுத்தறிவும் ஒளிபரப்பு நிலையம்போன்றதுதான். அதுதான் கண்ணுக்குத் தெரியாத தனது குறுந்தகவல்களின் மூலமாக மூளை செய்ய வேண்டிய பணியைத் தீர்மானிக்கிறது. மூளைக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டுப் பகுத்தறிவு அனுப்புகின்ற தகவல்களை அதனால்

உள்வாங்க முடியாமல்போகுமாயின், ஒளிபரப்பு நிலையத்தின் அலைவரிசையை உள்வாங்கும் திறனை இழந்த தொலைக்காட்சிப் பெட்டியாய் அது மாறிவிடும்.

ஆக, மனிதனது மூளையில் சேதம் ஏற்படுவதன் காரணமாக அவனது உணர்வு, உடல் நிலைகளில் மாற்றம் ஏற்பட முடியும். ஆயினும், அவனது நடத்தையை வடிவமைப்பதில் பௌதிகம் சாராத பகுத்தறிவும் ஆன்மீகப் பரிமாணங்களும் செல்வாக்கு செலுத்துவதை மறுப்பதற்கு அது சான்றாகக் கொள்ளப்பட முடியாது. மட்டுமன்றி, பகுத்தறிவின் இருப்பை மறுதலித்து மூளையே அனைத்துக்கும் பொறுப்பானது என்று கூறும் சடவாதச் சிந்தனை யின் பின்னால் ஈர்க்கப்பட்டுச் செல்பவர்கள் சிறு குழந்தையின் மேலோட்டமான புரிதலைக் கொண்டவர்கள். ஏனெனில், சிறு குழந்தைகள்தான் தொலைக்காட்சியில் தெரியும் மனிதர்களும் மிருகங்களும் உண்மையிலேயே அந்தப் பெட்டிக்குள் இருப்பதாக நம்புவார்கள். அறிவியலாளரான எக்லஸும் அவருக்கு ஆதரவான ஆய்வாளர்களும் மதச்சிந்தனையைப் பலப்படுத்துவதற்காக இவ்வாய்வுகளை மேற்கொள்ளாவிட்டாலும், அவர்களது ஆய்வு முடிவுகள் சடவாதச் சிந்தனை கொண்டோரது மிகைப்படுத்தலைக் கண்டிக்கும் வகையிலும், மனிதனுக்குள் ஓர் ஆத்மீகப் பக்கம் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தன. மனித உணர்ச்சிகள் குறித்த இஸ்லாமிய நோக்கிலான நமது ஆய்வில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மறுக்க முடியாத தமது வாதங்களுடன் மாத்திரம் இவ்வறிவிய லாளர்கள் நின்றுகொள்ளாமல், பரிசோதனை ஆய்வுகள் மூலமாக அவற்றுக்குப் பலமும் சேர்த்தனர். மூளைதான் நடத்தைமீது முழு ஆதிக்கம் செலுத்துகிறது என்ற கருத்தாக்கத்தை அவ்வாய்வுகள் மறுதலித்தன. மூளைக்கு மின்தூண்டல் வழங்குவதனூடாக மேற்கொள்ளப்பட்ட அறிவார்ந்த பரிசோதனைகளும் அவற்றுள் அடங்கும். எடுத்துக்காட்டாக, கையை உயர்த்தும்படியாக உடலுக்கு மூளை கட்டளையிட்டாலும் கைக்குச் சொந்தக்காரர் கையை உயர்த்த விரும்பாதிருக்க முடியும். அதாவது இங்கு மூளையும், மூளை இடும் கட்டளையை ஏற்காத பிரக்ஞையும் (அல்லது பகுத்தறிவும்) உள்ளன. மனிதனது நடத்தை, சிந்தனை, உணர்வுகள் முதலிய அனைத்தின் மீதும் மூளை மட்டுமே ஆதிக்கம் செலுத்துகின்றதெனில், மூளை ஒரு விசயத்தை ஏவ, மனிதனது பிரக்ஞை வேறொன்றை நாடுவது சாத்தியமற்றது. இக்கருதுகோளுக்கு அவர்கள் வேடிக்கையான ஒரு

பரிசோதனையைச் சான்றாக முன்வைத்தனர். மூளையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவிருந்த நோயாளிகளுள் தன்னார்வமாக முன்வந்த ஒருவரது மூளையின் குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தூண்டுவதற்கு மின்முனைகளைப் பயன்படுத்தினர். அப்போது அவர் தனது கையைப் பலமாக மேலுயர்த்தினார். ஏனெனில், மூளையில் தூண்டலுக்கு உட்பட்ட அந்த மேற்பகுதியே கையை உயர்த்துமாறு தசைகளுக்குக் கட்டளையிடும் பகுதியாகும். கையை உயர்த்த வேண்டாம் என அவருக்குக் கூறப்பட்டபோது அவரும் உடன்பட்டார்.

எனினும் மீண்டும் மூளையின் அதே பகுதி மின்தூண்டலுக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் மறுபடியும் கையை உயர்த்தினர். 'கையை உயர்த்துவதில்லை என உடன்பட்ட பிறகும் ஏன் கையை உயர்த்தினீர்கள்?' என ஆய்வாளர் வினவியதற்கு, 'நானாக அதனை உயர்த்தவில்லை' என அவர் பதிலளித்தார். 'நீங்கள் உயர்த்துவில்லை என்றால் யார்தான் உயர்த்தினார்?' என அவரிடம் கேட்கப்பட்டது.

ஆக, மூளை கையை உயரச்செய்கிறது. ஆனால் பிரக்ஞை அல்லது பகுத்தறிவு அதனை உயர்த்த விரும்பவில்லை. இந்நிலையில், குறித்த பரிசோதனைச் செயல்பாடு மீண்டும் ஒருமுறை மேற்கொள்ளப் படுமாயின், அந்நபர் தனது கை மேலே உயராமல் தடுப்பதற்காகத் தன்னை அறியாமலே அடுத்த கையைப் பயன்படுத்த முயல்வார். அதாவது, கை உயராமல் தடுக்க அவரது பகுத்தறிவு முயல்கிறது. அவ்வகையில், இங்கு ஏகக் கட்டுப்பாட்டாளராக இருப்பது மூளை அல்ல என்பது தெளிவு.

மனிதனது சிந்தனையையும் உணர்வுகளையும் ஆளுமையையும் வடிவமைப்பது மூளை மட்டுமல்ல என்பதற்கான தீர்க்கமான சான்றுகளுள் ஒன்றாக மற்றொரு தோற்றப்பாட்டையும் குறிப் பிடலாம். அத்தோற்றப்பாட்டைப் பல அறிவியலாளர்கள் கவனிப்பதில்லை. பகுத்தறிவுதான் மூளையைக் கட்டுப்படுத்துகிறது என்று கூறுவோர்கூட இத்தோற்றப்பாட்டைக் கவனிப்பதில்லை. ஒத்த, சியாமிஸ் இரட்டையர்களே அத்தோற்றப்பாடகும்.

முன்னரும் நாம் குறிப்பிட்டதுபோல், ஒத்த இரட்டையர்கள் தந்தை யின் உயிரணுவுடன் கருக்கட்டிய தாயின் ஒரே முட்டையிலிருந்து பிரிந்த இரு கலங்களிலிருந்தே உருவாகின்றனர். எனினும், இருவரும் ஒரே பாரம்பரியப் பண்புகளையும் ஒரே மூளையின் பண்புகளையும் கொண்ட இரட்டையர்களாக வளர்ச்சியடைவர். இவ்வாறான இரட்டையர்கள் முக அமைப்பு, உயரம் போன்ற உடற்கூறுகளிலும்,

விவேகம் போன்ற சில உளவியல் பண்புகளிலும் முற்றிலும் ஒத்தவர்களாக இருந்தாலும், ஆளுமைப் பண்புகளில் பெரிதும் வேறுபட்டவர்களாக இருப்பர் என இவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்தின. அந்த வகையில், ஒருவர் இறையச்சமும் பேணுதலும் கொண்டவராகவும், மற்றவர் அடங்காதவராகவும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவராகவும் மாற முடியும். இங்கு சூழல் ஒரே மாதிரியாக இருப்பதும், மரபியல் கூறுகள் ஒத்தவையாக இருப்பதும் இருவரது ஆளுமையிலும் நெறிமுறைகளிலும் ஒத்த தன்மையை ஏற்படுத்துவதற்குப் போதுமானவையல்ல. ஒரே மாதிரியாக இருக்கின்ற இரு மூளைகள் இத்தகைய வேறுபாடுகளைக் கொண்டிருப்பது எப்படி?

சியாமிஸ் இரட்டையர்களிடமிருந்து நமக்கு இன்னும் திருப்தியளிக்கக் கூடிய சான்று கிடைக்கிறது. இவ்விரட்டையர்கள் ஒருவரோடு ஒருவர் ஒட்டிப் பிறப்பவர்கள் ஆவர். சிலபோது இவர்களை வேறுவேறாகப் பிரிப்பதில் அறுவை சிகிச்சையாளர்கள் வெற்றி யடைந்தாலும் பலபோது அவர்களைப் பிரிக்க முடிவதில்லை. சிலபோது அறுவை சிகிச்சை அவர்களுள் ஒருவரது மரணத்துக்கு அல்லது இருவரது மரணத்துக்கும் காரணமாகிவிட முடியும். அவ்வாறான ஓர் உதாரணத்தை இங்கு நான் வாசகருக்கு முன் வைக்கிறேன்.

> 1961ம் ஆண்டு அமெரிக்காவில் இருவர் ஒட்டிப் பிறந்தனர். உடல்கள் வேறுவேறாகவும், தலைகள் ஒட்டியும், மூளைகள் ஒன்றோடொன்று கலந்து பிணைந்தும் அவர்கள் பிறந்தனர். ஆனால் விசித்திரம் என்னவென்றால், இருவரது ஆளுமைப் பண்புகளும் உணர்வார்ந்த நடத்தைகளும் முற்றிலும் வேறுபட்டவையாக அமைந்திருந்தன. ஒருவர் மகிழ்ச்சி யானவராகவும் இசையை ரசிப்பவராகவும் இருந்தார். அந்தப் பொழுதுபோக்கிற்காக அவர் ஒரு விருதையும் பெற்றுக்கொண்டார். மற்றவர் தன்னம்பிக்கை அற்றவராகவும், மருத்துவமனை ஒன்றில் உடை கழுவும் தொழிலாளராகவும் இருந்தார். ஒரே மூளையிலிருந்து இந்த வேறுபாடு எப்படி வருகிறது?
>
> இந்தியாவில் ஒரு குழந்தை இரு தலைகளோடு பிறந்தது. ஒவ்வொரு தலையிலும் ஒரு மூளை. அந்தக் குழந்தை உயிர்பிழைத்துப் பெரிதாகும்போது அதன் உணர்வார்ந்த நடத்தையை எந்த மூளை கட்டுப்படுத்தும்?!

சடவாத வியாக்கியானமும், மனித நடத்தையின் மீது அது ஏற்படுத்தும் தாக்கமும் பலவீனமானவை என்ற நம்பிக்கையை மீநிகழ்வு உளவியலின் (Parapsychology) பரிசோதனை ஆய்வுகள் மேலும் பலப்படுத்துகின்றன. ஏனெனில் மூளையும் அதன் சூழலில் உள்ள தூண்டிகளுமே அறிவுக்கும் உணர்ச்சிக்குமான ஏக வழியாக இருக்குமாயின், சில மனிதர்கள் நுணுக்கமான தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கான விளக்கத்தைப் பெற வாய்ப்பில்லாது போய்விடும். மட்டுமன்றி, அதற்கமைவாகச் சட வாத வியாக்கியானங்களுக்குக் கட்டுப்படாத சாதனங்கள் மூலமாக அவர்கள் எவ்வாறு தங்களது உணர்வுகளை மாற்றிக்கொள்கிறார்கள் என்பதற்கும் விளக்கம் கூற முடியாதுபோய்விடும்.

ஒரு நபரிடமிருந்து பல்லாயிரம் மைல்கள் தூரத்தில் இருக்கும் மற்றொரு நபருக்குச் சிந்தனைகளும் உணர்வுகளும் கடத்தப்படுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'தொலைநுண்ணுணர்வு' (Telepathy) எனப்படும் இத்தோற்றப்பாட்டை மனிதன் மீதும் விலங்குகள் மீதும் பல்வேறு நியமமுறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட அறிவாய்வுப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தின. எனினும், இவ்வகையான பரிசோதனை முடிவுகள் மோசமாக விமர்சிக்கப் பட்டு அல்லது மறைக்கப்பட்டு அல்லது அறிவியல் சபைகளில் சந்தைப்படுத்தப்படாமல் விடப்பட்டு ஓரங்கட்டப்படுகின்றன. மதச்சார்பற்ற சடவாதச் சிந்தனையுடன் இவை முரண்படுவதே அத்தகைய புறக்கணிப்புக்குக் காரணம் எனலாம்.

இதுபோன்ற ஒரு தோற்றப்பாட்டை இஸ்லாமிய வரலாறும் பதிந்துவைத்திருக்கிறது. ஃகலீஃபா உமர் இப்னுல் ஃகத்தாபு மதீனாவில் ஒரு வெள்ளிக்கிழமை ஜும்ஆப் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, 'சாரியாவே மலை ... சாரியாவே மலை ...' என இடைநடுவில் கூறிவிட்டுத் தன் உரையைத் தொடர்ந்தார். அந்தக் குரலைப் பாரசீகத்தில் இஸ்லாமியப் படையை வழிநடத்திக் கொண்டிருந்த சாரியா பின் ஸனீம் அல்துஅலீ செவிமடுத்திருக்கிறார். அது, எதிரிகள் ஏராளமாகத் திரண்டு இஸ்லாமியப் படை பெரும் அபாயத்தில் இருந்த வேளை. உமரின் அழைப்பொலியைக் கேட்ட சாரியா உடனடியாக மலையை அரணாகக் கொண்டு எதிரிகளைத் தோற்கடித்தார்.[28]

இதேபோன்றுதான், 'மனக்கண் தொலைக்காட்சி' (Clairvoyance) என்ற தோற்றப்பாட்டை விளக்கவும் மதச்சார்பற்ற அறிவிய

---

28. இப்னு ஜரீருத் தபரீ, *'தாரீஃகுர் றுசுல் வல்முலூக்'*, தாருல் மஆரிஃப், பாகம் 3; பக்.533.

லாளர்களால் முடியாதுபோனது. மிகக் கடினமான ஒரு இடத்தில் மறைத்துவைக்கப்பட்ட பொருள்களைக்கூட இந்த மனக்கண் தொலைக்காட்சி கொண்டவரால் பார்த்துவிட முடியும். இந்தப் பொதுவான பிரயோகத்தின் கீழ்தான் தீர்க்கதரிசனம் சார்ந்த கனவுகளும் அடங்கும். அவை பற்றித் தனியான ஓர் அத்தியாயத்தில் கலந்துரையாட உள்ளோம். இத்தகைய கனவுகளின் அனைத்து விவரங்களும் அல்லது அனேகமான விவரங்கள் உண்மையாகவே நடப்பவையாக இருக்கும்.

நரம்பியல் துறை பேராசிரியரான ஜூலியா மோஸ்பிரிட்ஜ் (Julia Mossbridge) என்ற பெண்விஞ்ஞானி அமெரிக்காவின் நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் பல மனிதக் குழுமங்களின் மீது 15 வருடங்களாக மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பிறகு, எதிர்காலம் குறித்து தீர்க்கதரிசனம் கூறுவதற்குக் கனவுகள் கொண்டிருக்கும் ஆற்றல் சர்வ நிச்சயமானது என உறுதிப்படுத்தினார். மட்டுமன்றி, பல அறிவியலாளர்களும் கண்டுபிடிப்பாளர்களும் தூக்கத்தில் கண்ட சில கனவுகளால் வழிகாட்டப்பட்டிருக்காவிட்டால் அவர்களது சாதனைகள் சாத்தியமாகியிருக்க வாய்ப்பில்லை என அவர்களே தெரிவித்துள்ளனர்.

அவர்களுள் பிரபல இயற்பியல் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் பிரதானமானவர். மின்கம்பிகளிடமிருந்து வெருண்டோடும் மாடுகள் பற்றி அவர் வாலிபப் பருவத்தில் கண்ட ஒரு கனவிலிருந்தே தனது சார்பியக் கோட்பாட்டை (Theory of Relativity) உருவாக்கினார்.

‘டிஎன்ஏ’வின் சுருள்வடிவத்தைக் கண்டுபிடித்து 1962ம் ஆண்டு நோபல் பரிசு வென்ற வாட்சன் மற்றொரு அறிவியலாளர் ஆவார். இச்சுருள்வடிவத்தை அவர் தனது கனவிலேயே முதலில் கண்டார்.

தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஹாவ் என்பவரும் தனது கனவிலிருந்தே அதற்கான வடிவத்தைப் பெற்றார்.

அதேபோல், சில மனிதர்கள் தூரத்தில் இருந்துகொண்டு வெறுமனே மனமுயற்சியால் பொருள்களை அசைக்கும் ஆற்றலை (Psychokinesis) எவ்வாறு பெற்றிருக்கிறார்கள் என்பதையோ, மரணப்படுக்கையில் இருப்பவர்களது நிலையைச் சிலர் எவ்வாறு உணர்ந்துகொள்கிறார்கள் என்பதையோ, சிலர் மரணத்தை நெருங்குமளவு நோயுற்றுவிட்டு மீண்டும் எவ்வாறு வாழ்க்கைக்குத் திரும்புகிறார்கள் (Near death

phenomenon) என்பதையோகூட மதச்சார்பற்ற அறிவியலாளர்களால் விளக்க முடிவதில்லை. பின்வரும் பிரபல்யமான நிகழ்வை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்:

> பிறக்கும்போதே குருடாகப் பிறந்த ஒரு பெண் பருவ வயதை அடைந்த பிறகு நோய்வாய்ப்பட்டு உணர்விழந்தாள். மருத்துவரும் — தன்னுடைய உதவியாளர்களது ஒத்துழைப் புடன் — பல முயற்சிகளைச் செய்த பிறகு அவளைக் காப்பாற்றும் நம்பிக்கையை இழந்துவிட்டார். எனினும் அதன் பிறகு அவள் உயிர்பிழைத்து வந்து, தான் உணர்விழந்திருந்த வேளையில் மருத்துவர் மேற்கொண்ட முயற்சிகளையும், உதவியாளர்களுடன் அவர் என்னவெல்லாம் பேசினார் என்பதையும் மிக நுணுக்கமாக விவரித்தாள். மட்டுமன்றி, மரணப்படுக்கையின்போது தான் இருந்த நிலையையும், தனது குடும்பத்தாரின் நிலையையும், சுற்றியிருந்த உலகையும் பற்றி மிக உணர்ச்சியுடன் வர்ணித்தாள். அதாவது, அவள் கடுமையாக நோயுற்றிருந்தபோதுதான் இவற்றையெல்லாம் வாழ்வில் முதல் தடவையாகப் பார்த்திருக்கிறாள். எனினும், அவள் உயிர்பிழைத்து வந்த பிறகும் முன்னரைப் போல் குருடாகத்தான் இருந்தாள்.

ஒரு விபத்தின் காரணமாக மூளையில் அதிர்வு ஏற்பட்ட ஒருவர் தான் முன்பு கற்றிராத ஒரு மொழியைப் பேசும் நிகழ்வும் இவ்வாறான உளவியல் விசித்திரங்களுள் ஒன்றுதான். விபத்துக்குட்பட்டவர்கள் இப்படித் தாம் அறிந்திராத மொழியைப் பேசுவதை, அல்லது தமது மொழியை வேறொரு நாட்டு வழக்கில் பேசுவதை விஞ்ஞானிகள் குரல்பதிவு மூலமாகவும் படப்பிடிப்பு மூலமாகவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஐரோப்பா, அமெரிக்கா, கொரியா, சில தென் கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றின் பல பிராந்தியங்களில் இத்தகைய நிலைகளை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆயுள் முழுக்க தனது சிறிய கிராமத்தைவிட்டு எங்குமே சென்றிராத அமெரிக்கப் பெண் ஒருவர் ஒரு விபத்தின் பிறகு ரஷ்ய மொழியைச் சரளமாகப் பேசியமை இத்தகைய நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்கதாகும். அறிவியலாளர்கள் இதனை 'வேற்று மொழி பேசும் நோய்க்குறி' (Foreign accent syndrome) என்ற பிரயோகத்தால் அழைக்கின்றனர். ஆயினும், உளவியல் துறையானது தனது சடவாத நோக்கினால் புரிந்துகொள்ள இயலாத ஒரு தோற்றப்பாட்டுக்கு இவ்வாறு ஒரு கலைச்சொல்லை இட்டு

அழைப்பதால் மாத்திரம் குறித்த பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம் ஆகாது!

நமது இஸ்லாமிய வரலாற்றில் இத்தகைய அனுபவங்கள் ஏராள மாகக் காணப்படுகின்றன. சடவாத விளக்கத்திற்கு உட்படாத அந்த அனுபவங்களை 'வஹீ' என்னும் வேத வெளிப்பாடும், இறைத்தூதர் ﷺ அவர்களது திருமொழிகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும், மேற்கத்தியருக்கு அவர்களிடமிருந்தே சாட்சியங்களை முன்வைப்பதற்குத்தான் இங்கு நாம் அதிகக் கவனம் செலுத்தினோம். முஸ்லிம் ஆய்வாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் இத்தகைய நிகழ்வுகளுக்கும் நபிமார்களது 'முஃஜிஸா'க்களுக்கும் இறைநேசர்களது 'கறாமா'க்களுக்கும் மத்தியிலான வேறுபாடுகளைப் பிரித்தறிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில், முதல் வகை நிகழ்வுகள் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் ஏற்பட முடியும். மனிதர்களது ஆத்மீகப் பலமோ, அவர்களுக்குள் ஊதப்பட்டிருக்கும் ஆன்மாவின் ஈர்ப்பு விசையோ, நம்மால் புரிந்துகொள்ள முடியாத ஆத்மீக உலகங்களுடன் அவர்களுக்குள்ள தொடர்புகளோ இவற்றுக்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், நபிமார்களோடும் இறைநேசர்களோடும் தொடர்புபட்ட அற்புதங்கள் இவற்றிலிருந்து வேறுபட்டவையாகும். உளவியலின் இப்பிரிவு தொடர்பாக நான் சில ஆய்வுகளைச் செய்திருக்கிறேன். உலகச் சுகாதார நிறுவனத்திற்காக எத்தியோப்பியாவிலும் சூடா னிலும் பாரம்பரிய உளவியல் சிகிச்சை என்ற சட்டகத்தினுள் நான் மேற்கொண்ட ஆய்வுகள், இவ்வுலகில் நாம் மட்டும் தனியாக வாழவில்லை என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்தின. பிரபஞ்சம் பற்றிய சடவாதக் கருதுகோள் என்ற சிறைக்குள் மாத்திரம் தன்னை அடைத்துவைத்திருக்கும் பகுத்தறிவால் அத்தகைய அனுபவங்களை நம்ப முடிவதில்லை.

களிமண்ணில் ஆத்மா (றூஹ்) ஊதப்பட்ட மனிதக் கட்டமைப்பு பற்றிய நமது முன்னைய நம்பிக்கையை இத்தகைய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆக, அந்த 'ஆத்மீக' உள்ளடக்கம்தான் நமது மூளைகளையும் சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஆளுகை செய்கிறது. அதுவே மனிதனுக்கு அவனைப் பற்றிய பிரக்ஞையை வழங்குகிறது. நமது உடல், உள்ளம், சமூகம், உணர்வு, ஆன்மா முதலியவை சார்ந்த அனைத்து செயல்பாடுகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்ற அந்த 'ஆத்மீக நுண்பொருள்' என்னவென்று விவாதிக்க இங்கு நாம் முற்படவில்லை. அந்த நுண்பொருளைத்

திருக்குர்ஆன் 'அல்கல்பு' என்ற வார்த்தையால் குறிக்கிறது. அதன் பிரதான பணியைக் குறிக்கும் வகையில் மக்கள் அதனை 'அல்அக்லு' (பகுத்தறிவு) என அழைக்கின்றனர்.

இவை பற்றிய விவாதங்கள் இவ்வாய்வின் இலக்குகள் மீதான கவனக்குவிப்பைவிட்டு நம்மைத் தூரமாக்கிவிடும். அதனால், உளவியல் அறிஞர்கள் பொதுவாகப் பயன்படுத்திய 'பகுத்தறிவு' (Reasoning) என்ற கலைச்சொல்லையே நாமும் பயன்படுத்துவோம். அவர்களுடன் அவர்களது மொழியில் உரையாடுவதுதான் இங்கு நமது நோக்கமாகும். அதேவேளை, உண்மையாகவே நாம் 'அல்கல்பு' போன்ற சமயச் சொற்பிரயோகங்களை விசுவாசிக்கிறோம் என்பதையும் பதிவுசெய்துகொள்கிறோம்.

நமது நடத்தையையும், உடல்-உள-உணர்வுச் செயல்பாடுகளையும் வடிவமைக்கும் ஏகக் காரணி மூளை அல்ல என்பதையும், அந்த மூளை 'அக்லு' என்னும் பகுத்தறிவுக்கோ 'ஆன்மீக உள்ள'த்துக்கோ பணிந்து செயலாற்றும் ஒரு சேவகனே அன்றி வேறல்ல என்பதையும் நாம் மனதார ஏற்றுக்கொள்கிறோம். இப்போது நாம் தெளிவுபடுத்த வேண்டிய விசயம் ஒன்றுதான்:

> பகுத்தறிவு விதிக்கும் செயல்பாடுகளைப் பொதுவாகவும், உணர்ச்சி சார்ந்த அம்சங்களைக் குறிப்பாகவும் வடிவமைப்பதற்கு மூளையும் அதன் நரம்புத்தொகுதியும் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதுதான் அவ்விசயம். ஏனெனில், மூளையும் அதன் நரம்புமண்டலமும் ஸ்தூலமானதாகவும், அதன் சில செயல்பாடுகள் அவதானிக்கத்தக்கதாகவும் இருந்தபோதிலும், இறைவனின் படைப்புகளுள் மிகச் சிக்கலான ஒன்றாக அது உள்ளது எனலாம். இதனையே நாம் கீழே விளக்கவுள்ளோம்.

## மூளை மற்றும் அதன் நரம்புத்தொகுதியின் படைப்பியல் அற்புதம்

நரம்பு, ஹார்மோன் ஆகிய தொகுதிகளின் பௌதிக அமைப்பு பற்றியோ, உணர்ச்சிவயப்பாட்டின்போது அவை இரண்டும் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றியோ இந்நூலில் விரிவாகப் பேச முடியாவிட்டாலும், சில பொதுவான தகவல்களைச் சுருக்கமாக இங்கு வாசகருக்கு முன்வைக்கிறோம்.

மனித மூளை, நரம்புகள், அவற்றின் ஹார்மோன் செயல்பாடுகள் என்பவற்றின் படைப்பியல் அற்புதம் பற்றிச் சிந்திக்க இவை அவர்களுக்கு உதவலாம். இறைவன் மனித மூளையைப்

பிரமிக்கத்தக்க அற்புதங்களுடன் படைத்திருப்பது உண்மையிலேயே சிந்தனைக்குரியதாகும். இறைவனின் பரந்த பிரபஞ்சப் படைப்பில் புரிந்துகொள்வதற்கு அதிகச் சிக்கலானது நம்மைவிடப் பல்லாயிரம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரங்களோ, அறிவியலால் சிகிச்சையளிக்க முடியாதிருக்கும் வைரஸ் தொற்றுக் கிருமிகளோ அல்ல. பிரபஞ்சப் படைப்புகளில் மிக மர்மமானதும் சிக்கல் நிறைந்ததுமான படைப்பு, நாம் ஒவ்வொருவரும் மண்டையோட்டினுள் பாதுகாப்பான ஓர் இடத்தில் சுமந்துகொண்டிருக்கும் மூன்று ராத்தல்கூட[29] இல்லாத மூளை என்னும் இந்தச் சிறு பொருள்தான். நரம்பு மண்டலத்துடனும் அவற்றின் இயக்கங்களுடனும் தொடர்புடைய அறிவியலாளர்கள் அனைவரும் இதில் ஏகோபித்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர்.

2012ம் ஆண்டில் அதிகம் விற்பனையான *'மூளையின் ரகசியங்கள்'*[30] என்ற நூலில் அதன் ஆசிரியர் டேவிட் ஈகிள்மேன் (David Eagleman) கூறுவதாவது:

> *மனித மூளையே படைப்புகளில் மிகச் சிக்கலானதாகும். பல பில்லியன் எண்ணிக்கையில் காணப்படும் அதன் நரம்புக் கலங்கள் அற்புதமான முறையில் ஒன்றோடொன்று தொடர்புற்றுக் காணப்படுகின்றன. மூளையின் ஒரு மில்லி மீட்டர் அளவான இழையத்தினுள் காணப்படும் நரம்புத் தொடர்புகளின் எண்ணிக்கை நமது பால்வீதியில் காணப்படும் நட்சத்திரங்களின் எண்ணிக்கையை எட்டக்கூடியதாகும். நமது பால்வீதியினுள் பல நூறு பில்லியன் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*
>
> *மூளையின் பருமன் சிறிதாக இருந்தாலும், மனிதனது உடல், உள்ளம், சமூகம், உணர்வு, ஆன்மா என்பவை சார்ந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பணியையும் மேற்பார்வை செய்யும் பணியையும் அதுவே மேற்கொள்கிறது. மனித உடலின் செயல்பாடுகளை அதுவே ஒழுங்கமைக்கிறது. புலன்கள் வழியாகக் கேள்வி, பார்வை முதலிய அறிதல் செயல்பாட்டையும் அது மேற்கொள்கிறது. சிந்தித்தல், பிரச்சினையைத் தீர்த்தல் என்பவற்றுக்கான ஆற்றலும் அதனிடமே உள்ளது.*

---

29. (முன்பு வழக்கில் இருந்த) சுமார் 325 கிராம் கொண்ட நிறுத்தலளவு.
30. David Eagleman, *'Incognito: The Secret Lives of the Brain'*, Vintage; Reprint edition (15 May 2012).

*தகவல்களை ஒரு நினைவுக் கிடங்கில் பிரமிக்கத்தக்க வகையில் அது சேமித்தும் வைக்கிறது. அந்த நினைவுக் கிடங்கின் யதார்த்தம் பற்றிக் கண்டறிய அறிவியலால் இன்னும் முடிய வில்லை. அழகை ரசித்தல், அன்பு, பயம், கோபம், மகிழ்ச்சி முதலிய அனைத்து மனித உணர்ச்சிகளுக்கும் அதுவே பொறுப்பாக உள்ளது ...*

*சுருங்கச்சொன்னால், மனிதன் தனது உலகில் மேற்கொள்ளும் அல்லது உணரும் அனைத்துக்கும் அதுவே பொறுப்பாக உள்ளது. மூளையின் பருமன் மனிதப் பருமனில் வெறும் 2% அளவே. இருந்தாலும், பகுத்தறிவின் (Reasoning) மேற்பார்வையின் கீழ் அது மேற்கொள்ளும் பணிக்குப் பெருமளவு சக்தி தேவைப்படுகிறது. அந்த வகையில்தான், மனித உடல் முழுவதும் பயன்படுத்தும் சர்க்கரை (Glucose), பிராணவாயு (Oxygen) ஆகியவற்றில் சுமார் 20% அளவை மூளையே நுகர்கிறது. மனிதன் விழித்திருந்தாலும் தூங்கினாலும் நரம்புக் கலங்கள் இரவுபகலாக இயங்கிக்கொண்டே இருக்கின்றன.*

மூளையின் செயல்பாடுகளை மேலாண்மை செய்வது பகுத்தறிவே என நாம் நம்புகிறோம். குறிப்பாக, மனிதனது பிரக்ஞையுடன் தொடர்புற்ற செயல்பாடுகளையும், நல்ல அல்லது தீய தீர்மானங் களை எடுப்பதற்கான அவனது சுதந்திரத்தையும் பகுத்தறிவே ஆளுகை செய்கிறது. எனினும், கீழே நமது உரையாடல் மனித மூளையின் பௌதிகச் செயல்பாடுகளைப் பற்றியதாக மாத்திரமே அமையவிருக்கிறது என்பதை நினைவூட்டிக்கொள்கிறோம்.

மின்னணுவியல் கணிப்பொறிகளின் (Electronic Computers) புரட்சிக்குப் பிறகு கணினிகள் மூலமாக மனித மூளையின் செயல்பாட்டை அளக்க விஞ்ஞானிகள் முயன்றனர். அதுதொடர்பாக நரம்பியல் மற்றும் மின்னணுவியல் கணிப்பொறித் துறைகளின் பிரபல ஆய்வாளர்களுள் ஒருவரான டேவிட் ஒட்டோசன் (David Ottoson) கூறுவதாவது:

*மனித மூளையின் ரகசியங்களை நரம்பியல் விஞ்ஞானிகளால் நிகழ்காலத்திலோ எதிர்காலத்திலோ நுணுக்கமாகத் தெரிந்து கொள்ள முடியாது. ஏனெனில், மனித மூளையால் தன்னைத் தானே அறிந்துகொள்ள முடியாது! அதேபோல், மனித மூளைக்கு நிகரான ஒரு கணிப்பொறியையும் நிகழ்காலத்திலோ எதிர்காலத்திலோ மின்னணுவியல் விஞ்ஞானிகளால் உருவாக்க முடியாது. ஏனெனில், மனித மூளையின் இயலுமைக்கு*

*நிகரான இயலுமையைப் பெற ஒரே நேரத்தில் தொழிற்படக் கூடிய ஒரு மில்லியன் அதிசிறந்த கணினிகள் அவசியம். அவை செயல்படுவதற்குச் சுமார் ஒரு லட்சம் ஆம்பியர்* (Ampere) *மின்சாரமும் அவசியம். ஆனால் மனித மூளையோ தனது அற்புதமான பணியைப் பத்தில் ஒரு ஆம்பியர் அளவு மின்சாரத்திலேயே செய்து முடித்துவிடுகிறது.*[31]

மூளையின் செயல்பாட்டுக்கு முன்பாகவே அறிவியல் இவ்வாறு வாய்பிளந்து நிற்குமாயின், அந்த அற்புதமான மூளையை ஆளுகின்ற ஆன்மசக்தி கொண்ட பகுத்தறிவைப் பற்றியோ உள்ளத்தைப் பற்றியோ அதனால் எப்படி விளக்க முடியும்?! ஆக, மனித இனம் இங்கு வாயில்கள் மூடப்பட்ட ஓர் ரகசியக் கிடங்கின் முன்னால் செய்வதறியாது திகைத்து நிற்பதைப் பார்க்கிறோம்.

*(நபியே!) கூறும்: 'ஆத்மா என்பது எனது ரட்சகனின் விவகாரமாகும். உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அறிவு சொற்பமானதுதான்.'* (17:85)

இந்த ஆத்மீக நுண்பொருள் எவ்வாறு மூளையுடன் இடைவினை யாற்றுகிறது என்பது நமக்குத் தெரியாது. இந்த அற்புதமான இடைவினையில் *'கல்பு'* என்னும் உள்ளத்திற்குப் பங்கேதும் உள்ளதா என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால், முடிவுறாத அந்த அற்புதத்தை எடுத்துக்காட்டக்கூடிய புதுப்புது கண்டுபிடிப்புகளைப் பற்றி நாம் படித்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

உதாரணமாக, மனித இதயம் இரத்தத்தை உடலுக்குப் பாய்ச்சும் இயந்திரமாக மாத்திரமன்றி, தனக்கென்று ஓர் நரம்புத் தொகுதியையும் நினைவகத்தையும் கொண்டுள்ளதாகவும், உணர்வார்ந்த நடத்தை தொடர்பாக அது பிரத்தியேகமான ஓர் இயக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் உறுப்புமாற்று ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இதனால்தான் வேறொருவரது இதயத்தைப் பெறும் நோயாளி ஒருவர் குறித்த இதயத்துக்குரியவரது உணர்ச்சி நிலைகளால் தாக்கமுறுகிறார் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு நமது பிரக்ஞையின் மீதும் உணர்வின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் ஆத்மீக நுண்பொருளின் உண்மைநிலை பற்றி நமது மூளைகளைப் பயன்படுத்தி அறியும் வாய்ப்பை இறைவன் நமக்கு மறைத்திருந்தாலும், முடிவற்ற அதிசயங்கள் கொண்ட நமது மூளையின் ரகசியங்களைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை அவன் நமக்கு அனுமதித்தே இருக்கிறான். அந்த வகையில், உணர்வுகள்

31. David Ottoson, *'Challenges and Perspectives in Neuroscience'*, Pergamon Pr.; 1st ed., 1985.

தொடர்பான நமது தலைப்புடன் சம்பந்தப்படுத்தி அந்த அதிசயங்கள் பற்றிக் கலந்துரையாடலாம்.

மனித மூளையானது உடலுறுப்புகள், புலன்கள், சுற்றுச்சூழல், கற்பனை, நினைவகம் முதலியவற்றிலிருந்து பல பில்லியன் கணக்கான குறிப்புகளையும் நரம்புமண்டல அதிர்வுகளையும் பெறுகிறது. எனினும் அதிசயம் நிறைந்த இம்மூளை அவற்றைப் புரிந்துகொள்கிறது; ஒழுங்குபடுத்துகிறது; தேவையான அறிவுறுத்தல் களை வழங்குகிறது. அவ்வறிவுறுத்தல்கள் உடலின் ஆரோக்கியத் தையும், உயிர்-வேதியியல் சமநிலையையும் பேணுபவையாகும். உடலினுள் காணப்படும் செரிமானத் தொகுதி, சுவாசத் தொகுதி, குருதிச் சுற்றோட்டம், இதயத்துடிப்பு, கழிவகற்றல் தொகுதி முதலிய பல்வேறு தொகுதிகளை ஆளுகை செய்வதனூடாக இச்செயல்பாடு இடம்பெறுகிறது. இவற்றுடன் பிரச்சினைகளைத் தீர்த்தல், நிதானமான தர்க்கச் சிந்தனை என்பவற்றையும் மனித மூளை மேற்கொள்கிறது. கடந்தகால அனுபவங்களை அவதானித்து, எதிர்காலத்தில் நிகழச் சாத்தியமானதைக் கற்பனை செய்வதனூடாக இது நிகழ்கிறது.

மட்டுமன்றி, அபாயங்களை எதிர்கொள்வதற்கோ அத்துமீறலைத் தடுப்பதற்கோ தப்பிப்பதற்கோ, அன்புணர்வைக் கிளர்த்தி அழகிய வாழ்த்துகளிலும் இனிய கவிதைகளிலும் அதனை வடிப்பதற்கோ அவசியமான விரைவான உணர்வார்ந்த எதிர்வினைகளையும் திடமான தீர்மானங்களையும்கூட மூளையே மேற்கொள்கிறது.

ஆக, பன்முகப்பட்ட இச்செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு அறிவும் விவேகமும் நிறைந்த ஒரு தலைமை தேவை. அத்தலைமையின் கட்டளைப்படி நரம்புத்தொகுதியின் உட்பிரிவுகளுக்குப் பொறுப்பு களும் துறைசார் பணிகளும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த வகையில்தான், மூளையின் 70% அளவை மூடி நிற்கும் பெருமூளை (Cerebrum) என்னும் பகுதியே இந்த அனைத்து செயல்பாடுகளையும் ஒழுங்கமைக்கும் பிரதான சீராக்கியாகத் தொழிற்படுவதாக மேற்குலக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த முன்பக்க மூளையின் ஏராளமான மடிப்புகளும் சுருக்கங்களும் கொண்ட புறணிப்பகுதி (Cortex) அல்லது சாம்பல் இழையமே (Gray matter) மூளையின் அனைத்து செயல்பாடுகளையும் ஆளுகை செய்கிறது. நரம்பு, ஹார்மோன் ஆகிய தொகுதிச் செயல்பாட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் அதுவே. மனிதனது உடலும் பகுத்தறிவும் சார்ந்த அனைத்து செயல்பாடுகளிலும் அதன் வார்த்தையே தீர்மானகரமானது.

உணர்ச்சிவயப்பாட்டின்போது அது கட்டுப்பாட்டு அறையிலிருந்து செயல்படும் இராணுவத் தளபதியின் நிலையில் இருக்கும். படையின் அனைத்து தொகுதிகளிலிருந்தும் அதற்குத் தகவல்கள் வந்துகொண்டிருக்கும். இத்தகவல்களின் அடிப்படையிலேயே அது தனது கட்டளைகளைப் பிறப்பிக்கிறது. தசைகள் இயங்கும்படியும், சுரப்பிகள் அவற்றின் இரசாயனத் தாக்கங்களை வெளியிடும்படியும் கட்டளையிடுகிறது. அவ்வாறே பல்வேறு செயல்பாடுகளுக்குப் பொறுப்பான உறுப்புகளுக்கு அவற்றின் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஆணையிடுகிறது. மற்றொரு புறத்தில், அது ஒரு பல்கலைக்கழகத்தின் மதிப்புவாய்ந்த பேராசிரியர்போன்று செயல்படுகிறது. வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான ஆற்றலை அது நமக்கு வழங்குகிறது. மூளையின் உள்ளும் நரம்புத்தொகுதியின் உள்ளும் இடம்பெறும் இத்தகைய துறைப் பிரிப்பும் கச்சிதமான ஒருங்கிணைப்பும் உண்மையிலேயே பின்வரும் இறைவசனத்தை ஊன்றிக் கவனிக்கும்படி தூண்டுகின்றன:

> இது இறைவனின் படைப்பாகும். அவனல்லாதவை எதனைப் படைத்தன என்பதை எனக்குக் காட்டுங்கள். எனினும் அநியாயக்காரர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே உள்ளனர். (31:11)

கடந்த இரு தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இந்த அற்புதத்தின் ஒரு பகுதியை வெளிக்கொண்டுவந்திருக்கின்றன. மனிதன் தனது மூளையின் செயல்பாடு குறித்து கேள்வியெழுப்பத் தொடங்கியதிலிருந்து அவனைக் குழப்பத்தில் ஆழ்த்திவரும் அற்புதம் இது எனலாம். சிந்திக்கும்போதும் கற்கும்போதும் கற்பனை செய்யும்போதும் மனித மூளையின் கலங்களுக்கு என்ன நிகழ்கிறது என்பதை வரலாற்றில் முதல் தடவையாக விஞ்ஞானிகள் தமது கண்களால் பார்க்க முடிந்திருக்கிறது. ஒருவர் பிரக்ஞையுடன் இருக்கும்போதும் கனவு காணும்போதும் தளர்வாக ஓய்வெடுக்கும்போதும் பல்வேறு உணர்ச்சிநிலைகளுக்கு ஆளாகும்போதும் மூளைக்குள் நிகழும் மாற்றங்களை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். மட்டுமன்றி உடல், அறிவு, உணர்ச்சி, கலை என்பவை சார்ந்த செயல்பாடுகளை மூளையின் உட்பிரிவுகள் எவ்வாறு நுணுக்கமாகப் பிரித்து வேறுபடுத்துகின்றன என்பதையும் அவர்களது ஆய்வுகள் வெளிக்கொண்டுவந்திருக்கின்றன.

பிரமிக்கவைக்கும் இக்கண்டுபிடிப்புகளை ஆய்வாளர்கள் 'காந்த ஒத்ததிர்வு உருவரைவு (Magnetic resonance imaging MRI)', 'செயல் பாட்டுக் காந்த ஒத்ததிர்வு உருவரைவு (Functional magnetic resonance imaging FMRI)' போன்ற 'ஸ்கேனிங்' நுட்பங்கள் மூலமாகவோ, 'கணிப்பொறிப் பருவரைவுத் துழாவற்படம் (Computed Tomography [CT] Scan)' மூலமாகவோ கண்டடைந்தனர். ஒருவர் உயிருடன் இருக்கும்போதே அவரது மூளையைக் கூர்ந்து கவனிக்கும் வசதி கொண்ட தொழில்நுட்பங்களாக இவை உள்ளன.

அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழகத்தில் ஆய்வாளர் ஒருவர் காந்த ஒத்ததிர்வலையைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஓர் ஆய்வு இவ்வகையில் பிரமாதமாக அமைந்திருந்தது. பல்வேறு உணர்ச்சிநிலைகளின்போது மூளையின் குறிப்பிட்ட இடங்களை அடையாளம் காணும் முயற்சியாக அது அமைந்திருந்தது. மன அழுத்த நோயாளிகள் அதற்கு எதிரான மருந்துகளைப் பயன்படுத்தும்போதும் மன அழுத்தம் சீரடையும்போதும் அவர்களது மூளைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிவதே அவரது நோக்கமாக இருந்தது.[32]

மூளையின் வெளிப்பரப்பில் உள்ள சாம்பல் நிற இழையத்திலேயே அதியுயர் அறிவுச் செயல்பாடுகள் இடம்பெறுவதாக இயற்பியல் அவதான ஆய்வுகள் வலியுறுத்துவதை இவ்வாய்வில் பதிவுசெய்வது நமக்கு முக்கியமானதாகும். (இந்த அதியுயர் அறிவுச் செயல் பாடுகளின் காரணமாகவே நாம் மனிதர்களாகவும் பூமியின் பிரதிநிதிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளோம்.) அதிலும் குறிப்பாக இவ்வுயர் செயல்பாடுகளின் மையமாக அமைந்திருப்பது மூளையின் முன்புற மேல்தோலாகும். இது நமது நெற்றியின் உட்புறத்தே (Prefrontal Cortex) அமைந்துள்ளது. ஒருவரது வாழ்வுச்சூழலிலிருந்து வரும் தகவல்களும், அவரது முன்னைய அனுபவங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களும் இந்த முன்பகுதியில்தான் செயலாக் கத்திற்கு உட்படுகின்றன. நிதானமாகவும் தர்க்கரீதியாகவும் சிந்திப்பதற்கான மனித ஆற்றல் இதில் வெளிப்படுகிறது. மனிதன் பல்வேறு தெரிவுகளை ஒப்பீடுசெய்து, நல்ல அல்லது கெட்ட தீர்மானங்களை எடுப்பது இதன் மூலமாகத்தான்.

இந்த வகையில்தான் திருக்குர்ஆன் அபூஜஹ்லின் முன்னெற்றியைப் 'பொய்கூறிப் பாவமிழைக்கும் முன்னெற்றி' என வர்ணிப்பதாகவும், அதில் திருக்குர்ஆனின் தெளிவான அறிவியல் அற்புதம் வெளிப்

32. David Matthew Driscoll, *'The Effects of Prefrontal Cortex Damage on the regulation of Emotion'*, University of Iowa, 2009, vii, p.101.

படுவதாகவும் நவீனக்கால விரிவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். திருக்குர்ஆன் குறிப்பிடும் இம்முன்னெற்றியின் உட்புறமாகவே மூளையின் முன்பகுதி காணப்படுகிறது. கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகத்தின் உடற்கூற்றியல் பேராசிரியரான கீத் மூர் (Keith moore) இப்படிக் கூறுகிறார்:

> மூளையின் முன்பகுதித் தொழிற்பாடு குறித்து 1842ம் ஆண்டுவரை மருத்துவர்கள் அறியாதிருந்தமை திருக்குர்ஆனிய அற்புதத்திற்குச் சான்றாக அமைந்தது எனலாம். ஏனெனில் அவ்வாண்டில்தான் அமெரிக்காவின் புகைவண்டிப் பாதைத் தொழிலாளி ஒருவரது நெற்றியை இரும்புக்கம்பி தாக்கி ஊடுருவியது. அதனால் அவர் பகுத்தறிந்து தீர்மானமெடுக்கும் ஆற்றலை இழந்தார். அவரது ஆளுமைக்கூறுகளும் மாற்ற மடைந்தன. அதேவேளை அவரது பிற உடலியல் செயல் பாடுகளிலோ பிறப்பியல்பு நடத்தையிலோ அது பாதிப்பு களை ஏற்படுத்தவில்லை.[33]

மூளையின் இந்த முன்புறத்திலிருந்தே மில்லிவினாடிகள் (Milliseconds) நேர அவகாசத்துக்குள் உணர்ச்சித் துலங்கல்களுக்குப் பொறுப்பான இடங்களுக்கு அவசரச் செய்திகள் அனுப்பப்படுகின்றன. அதன் மூலமாகச் சிறுநீரகங்களுக்கு மேலிருக்கும் நாளமில்லாச் சுரப்பிகளில் (Adrenal glands) அட்ரினலின் ஹார்மோன் சுரப்பு தூண்டப்படுகிறது.

இவ்விரு சுரப்பிகளும் அட்ரினலினையோ நோரட்ரினலினையோ சுரக்கத் தொடங்கிய மாத்திரத்திலேயே உடலில் அவசரக் கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுவிடுகிறது. குறித்த நபரைப் பயமுறுத்திய அல்லது கோபப்படுத்திய அல்லது அவருக்குள் வேறொரு உணர்ச்சியைக் கிளர்த்திய அல்லது அவருக்குள் மறைந்திருந்த ஓர் இயல்பூக்கத்தைத் தூண்டிவிட்ட அவசரநிலையை எதிர்கொள்வதற்கான தயார்நிலை உடலில் உருவாக்கப்படுகிறது. இந் நிலையில், ஈரலில் சேமித்துவைக்கப்பட்டிருந்த சர்க்கரை (Glucose) இரத்தத்திற்குப் பாய்ந்துவருகிறது. சுவாசத்தின் வேகத்துக்கேற்பவும் நுரையீரல்களின் விரிவுக்கேற்பவும் குருதியில் பிராணவாயு (Oxygen) அளவு அதிகரிக்கிறது. உணர்ச்சிவயப்பாட்டின்போது அவசியமாகத் தேவைப்படும் சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கே இவ்வளவு ஏற்பாடுகளும் நிகழ்கின்றன.

---

33. https://neurophilosophy.wordpress.com/2006/12/04/the-incredible-case-of-phineas-gage/

பிராணவாயுக்கும் சர்க்கரை வெல்லத்துக்கும் மத்தியில் நிகழ்கின்ற உள்ளார்ந்த இரசாயன இடைவினையிலிருந்தே இந்த சக்தி வெளிவருகிறது. உள்ளார்ந்த சுவாசம் (Internal respiration) எனவும் இது அழைக்கப்படுகிறது. இந்த இரசாயன இடைவினையின் காரணமாக சர்க்கரை வெல்லத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் சக்தி வெடித்து வெளிவருகிறது. இந்நிலையில், உணர்ச்சிவயப்பாட்டுக்கு உட்படுபவருக்குக் கரியமிலவாயுவையும் (Carbon dioxide) நீராவி யையும் வெளியேற்ற வேண்டிய தேவை ஏற்படுகிறது. வேகமான சுவாசச் செயல்பாட்டின் மூலமாக இது இடம்பெறுகிறது. அதேபோல், கண்விழிவில்லை விரிவடைந்து பார்வை இன்னும் கூர்மையடைகிறது; செவிப்புலன் பலமடைகிறது. இதயத்துடிப்பு அதிகரித்து இரத்தப்பாய்ச்சலின் அளவும் அதிகரிக்கிறது. உடல் தசைகளிலும் மூளையிலும் சக்தி குவியமடைகிறது. இந்நிலையில், குறித்த உணர்ச்சிவயப்பாட்டுக்குக் காரணமாய் அமைந்த அவசர நிலையுடன் நேரடியாகத் தொடர்பற்ற உணவு செரிமானம் போன்ற வழக்கமான உடலியல் செயல்பாடுகள் மந்தமடைகின்றன.

அதேபோல், போராட்டத்தில் ஒருவர் காயமடையும்போது ஏற்படக்கூடிய கடுமையான இரத்தப் பெருக்கைத் தவிர்ப்பதற்கு, குருதி உறையும் வேகத்தை அதிகரிக்கச் செய்வதற்கான வேதிப் பதார்த்தங்கள் உடலில் சுரக்கத் தொடங்குகின்றன. சுருங்கச் சொன்னால், உணர்ச்சிவயப்பாட்டுக்கு உட்படும் மனிதர் போராட்டத் திற்கோ தப்பியோடுவதற்கோ வேறு வகையான உணர்ச்சிக் கிளரல் களுக்கோ உட்படுவதற்கான அதியுச்சத் தயார்நிலையை அடைகிறார்.

இச்சடுதியான சுயாதீன மாற்றங்கள் அனைத்தும் சுயாதீன நரம்பு மண்டலத்தின் (Autonomic Nervous System) கட்டுப்பாட்டின் கீழ், அதிலும் குறிப்பாகப் பரிவு நரம்புத்தொகுதியின் (Sympathetic Nerve Branch) கட்டுப்பாட்டிலேயே நிகழ்கின்றன. அவசரநிலைகளின் போதான நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்குப் பொறுப்பாக இருப்பது சுயாதீனமான இப்பிரிவுதான். எதிர்பாராத உணர்ச்சி நிலைகளின்போது உணவு செரிமான நடவடிக்கைகள் நின்று விடுகின்றன. ஏனெனில், அத்தகைய பதற்றமான நிலைகளில் இதுபோன்ற ‘தளர்வான’ உடலியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய தேவை ஒருவருக்கு இருப்பதில்லை. அவசரநிலை நீங்கும்போது, பரிவு நரம்புத்தொகுதிக் கிளைக்கு நேரெதிரான கிளை உடலை அதன் பழைய நிலைக்கு மீண்டும் கொண்டுவருகிறது. இக்கிளை அனுபரிவு அல்லது இணைப்பரிவு நரம்புமண்டலக் கிளை (Parasympathetic Nerve Branch) என அறியப்படுகிறது.

எதிரெதிரான செயல்பாடு கொண்ட இவ்விரு தொகுதிகளின் இடைவினையாற்றல் மூலமாகத்தான் சுயாதீன நரம்புமண்டலம் உடலின் வேதியியல், உளவியல் சமநிலையைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்கிறது. பயம், கோபம் போன்ற உணர்ச்சிநிலைகளில் பரிவு நரம்புத்தொகுதி சுறுசுறுப்படைவதைப் போலவே, மகிழ்ச்சி, மன அமைதி, பாலியல் தூண்டல் என்பன மிகைக்கும்போது அதற்கெதிரான அனுபரிவு நரம்புத்தொகுதி சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகிறது.

மனிதனை உணர்ச்சி ஆட்கொள்ளும்போது இம்மாற்றங்கள் அனைத்தும் அவனது முன்விருப்பம் எதுவும் பெறப்படாமல் நிர்ப்பந்தமாகவே ஏற்படத் தொடங்கிவிடுகின்றன. அவற்றை ஆளுகை செய்யும் ஆற்றல் அவனிடம் இல்லாவிட்டாலும் அவற்றின் செயல்பாட்டை அவனால் உணர முடியும். அந்த வகையில், பயம், கலக்கம், கோபம், போன்ற உணர்ச்சிகளையும், காதலியைச் சந்திக்கும்போது தன் இதயத்துடிப்பு வேகம் அதிகரிப்பதையும் வியர்த்துக் கொட்டுவதையும் நடுக்கம் ஏற்படுவதையும் அவனால் உணர முடியும். உணர முடிந்தாலும் நிறுத்த முடியாத இவ்வுணர்ச்சித் துலங்கல்களையே பொய்யைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகளில் விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக, குறித்த ஒரு குற்றத்தோடு நேரடியாகத் தொடர்பற்ற தகவல்களுடன் குற்றம் பற்றிய தகவல்களையும் சேர்த்து உளவிய லாளர் குற்றம்சாட்டப்பட்டவரிடம் முன்வைக்கிறார் என வைத்துக் கொள்வோம். அந்நிலையில், அவர் இழைத்த குற்றம்பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படும்போதெல்லாம் உணர்ச்சித் தடுமாற் றத்தின் காரணமாக அவரது இதயத்துடிப்பு வேகம் அதிகரிக்கும்; ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்படும்; உள்ளங்கைகள் வியர்க்கும். ஆனால் குற்றத்துடன் தொடர்பற்ற தகவல்கள் குறிப்பிடப்படும் போது அவரிடம் இம்மாற்றங்கள் ஏற்படுவதில்லை. இதன் மூலமாக, குறித்த நபரே குற்றவாளி என்ற முடிவுக்கு அல்லது நடந்த குற்றம் பற்றி அவர் முழுமையாக அறிந்துவைத்திருக்கிறார் என்ற முடிவுக்கு உளவியல் ஆய்வாளர் வந்துசேர்வார். ஆக, பொய்யைக் கண்டறியும் இயந்திரம் என்பது உண்மையில் கடுமையான உணர்ச்சிவயப்பாட்டு நிலையைக் கண்டறிவதற்கான நுணுக்கமான மின்னணுவியல் அளவுகோலே அன்றி வேறல்ல.

ஆக, மனிதனது நரம்புமண்டலம் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதியை வழங்குகிறது. அவற்றுள் சில

செயல்பாடுகள் மனிதன் தனது முழுத் தெரிவோடும் பிரக்ஞையோடும் மேற்கொள்ளக்கூடியவை. அத்தெரிவின் பொறுப்பும் அவனுக்கே உரியவை. அவை நல்ல தெரிவாயின் அவனுக்கு நன்மையாக இருக்கும்; தீய தெரிவாயின் தீமையாக அமையும். இச்செயல்பாடுகள் மூளையின் முன்மேற்படலத்தின் வழியாகவே இடம்பெறுகின்றன. வேறுசில செயல்பாடுகள் நாம் மேலே குறிப்பிட்டதுபோல் மனிதன் உணர்ச்சிவயப்படும்போது நிகழ்பவை. சுயாதீனமாக நிகழக்கூடிய மூன்றாவது வகை செயல்பாடுகளும் உள்ளன. அவை மனிதனது பிரக்ஞைக்கு அப்பாற்பட்டவை. உணர்ச்சிவயப்பாடு அவற்றுக்குக் காரணமாக அமையாவிட்டாலும் அவை உணர்ச்சிவயப்பாட்டினால் தாக்கமடைகின்றன. நரம்பிழைகளின் உள்ளார்ந்த செயல்பாடுகளான அவை உணவு செரிமானம், சிறுநீரக இயக்கம் என்பன போன்ற உள்ளுறுப்புச் செயல்பாடுகளை ஆளுகை செய்கின்றன.

கருணைமிக்க இறைவன் இச்சுயாதீன நரம்பியல் தொழிற்பாட்டை மனிதனது பொறுப்பில் விடாமல் தானே பொறுப்பேற்றிருக்கிறான். அவ்வாறன்றி மனிதப் பொறுப்பில் அது விடப்பட்டிருக்குமானால், ‘இன்ன மனிதர் தூங்கச்செல்ல முன்னர் தனது இதயத்துடிப்பு வேகத்தைக் கட்டுப்படுத்த மறந்ததால் அல்லது தனது சிறுநீரகங் களின் மூடியைத் திறந்துவைக்க மறந்ததால் உடல் நஞ்சேறி இறந்துவிட்டார்’ என்பனபோன்ற செய்திகளையே நாம் கேள்விப்பட வேண்டியிருக்கும்.

நரம்புமண்டலச் செயல்பாட்டின் இவ்விரு பக்கங்களையும் மனிதனது இரு வகையான புறச்செயல்பாடுகளுடன் ஒப்பிட்டு மாணவர்களுக்கு நான் விளக்குவதுண்டு.

> முதல் வகை, இறைவனின் அனுமதியோடு ஆனால் மனிதன் தனது முழுத் தெரிவின் அடிப்படையில் மேற்கொள்ளும் செயல்பாடுகள். அவை குறித்து இறைவனால் அவன் விசாரணைக்கும் உட்படுத்தப்படுவான்.
>
> இரண்டாவது வகை, மனிதனுக்குத் தெரிவுச் சுதந்திரமின்றி இறைவனால் விதிக்கப்பட்டவை. அந்த வகையில், ஒரு மனிதன் இறைவனை வணங்கவும் தேவையுடையோருக்கு உதவவும் முன்வரும்போது அதற்கான நற்கூலியைப் பெறு கிறான்; பாவச்செயல்களைத் தெரிவுசெய்யும்போது அதற்காகத் தண்டிக்கப்படுகிறான். ஆனால், அவன் பிறக்கும் ஊர், அவனது உடற்கட்டமைப்பு, அவனுடைய பெற்றோர் முதலிய அம்சங்கள் அவனது தெரிவுகள் அல்ல. அவை இறைவனின்

ஏற்பாடுகள். இவ்வாறுதான் நமது உடலின் உள்ளார்ந்த செயல்பாடுகளை இறைவன் நமக்குப் பொறுப்பாக்கி விடாமல், நமது தலையீடோ பிரக்ஞையோ இன்றி அவை முழுமையான சுயாதீனத்துடன் இயங்கும் ஏற்பாட்டைச் செய்திருக்கிறான். அதற்காக நாம் இறைவனுக்கு அதிகம் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய ஏற்பாடுகளைச் செய்துவைத்த இறைவனின் கருணை எப்பேர்ப்பட்டது என்பதை மறுமையில் நாம் எழுப்பப்படும்போது நிச்சயம் கண்டுகொள்வோம்.

உணர்ச்சிகளால் மனிதன் தூண்டல்-துலங்கல் அடைவதிலும், அவை தொடர்பான நிகழ்வுகள் அவனுக்குள் பதிவாவதிலும் 'அமிக்டலா' (Amygdala) என்னும் வாதுமை வடிவ மூளைப் பகுதியும், 'ஹிப்போ காம்பஸ்' (Hippo campus) என்னும் மூளைப் பின்மேடும் வகிக்கும் தலையாய பாத்திரம் குறித்து வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த ஆய்வுகளே உணர்ச்சி உயிரியல் பற்றிய அறிவியலாளர்களது கருத்தாக்கங்களைப் பெரிதும் மாற்றிய நவீனக் கண்டுபிடிப்புகளாக அமைந்தன.

'அமிக்டலா' என்னும் வாதுமை வடிவ மூளைப் பகுதியானது அளவில் சிறியதாகவும் மூளையின் அடிப்பகுதியில் நெரிசலான இடத்திலும் அமைந்திருந்தாலும், உணர்ச்சிகளைக் கிளரச்செய்வதிலும், அவை தொடர்பான அனுபவங்களைப் பலமான ஓர் நினைவகத்தில் சேமித்துவைப்பதிலும் பெரும் பங்கு வகிப்பதாக நரம்புமண்டல விஞ்ஞானிகள் கண்டடைந்தனர். மிருகங்களின் அமிக்டலாவைத் தூண்டுவதன் மூலமாக வன்மமான போராட்ட எதிர்வினையை அவற்றிடம் உருவாக்க முடியும் எனவும் கண்டறியப்பட்டது. இதன்போது, சாதுவான பூனைகூட ஏனைய பூனைகளைத் தாக்க முற்படும். மட்டுமன்றி, தனக்கு உணவளித்து உடலோடு அன்பாக உரசி விளையாடும் எஜமானனைக்கூட அது தாக்க முற்படக்கூடும்.

விலங்கின் மூளையிலிருந்து இப்பகுதி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுவிட்டால் எதிர்த்துத் தாக்கும் பண்பை அது இழந்து விடுவது மட்டுமன்றி, பயம், பாலுணர்வு முதலிய உணர்ச்சி களையும் இழந்துவிடும். அதேபோல், மருத்துவக் காரணங்களுக்காக அறுவை சிகிச்சை மூலமாக இம்மூளைப்பகுதி அகற்றப்பட்ட மனிதர்களிடம் உறவினர்கள், நண்பர்கள் போன்றோர் பற்றிய கரிசனை இல்லாதுபோய்விடும் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பிற மனிதர்களை அடையாளம் காணும் ஆற்றலை இழப்பது

மட்டுமன்றி, சிந்திக்கும் ஆற்றல் மந்தமடைந்தவர்களாகவும் தனிமையை நாடுபவர்களாகவும் இருப்பர்.

'அமிக்டலா'வுக்கு அருகில் உள்ள 'ஹிப்போ காம்பஸ்' என்னும் மூளைப் பின்மேடு குறுகியகால நினைவுகளை (Short term memory), அதாவது நாம் இப்போது சிந்திப்பதை அல்லது செய்வதை நீண்டகால நினைவகத்துக்கு (Long term memory) நகர்த்துவதனூடாகப் பத்திரப்படுத்தும் பணியில் முக்கியப் பங்காற்றுகிறது. இந்த நீண்டகால நினைவகம்தான் நம்மையும் நம்முடைய உறவினரையும் நாம் பிறந்த இடத்தையும் அன்புக்குரியவர்களையும் முக்கியமானவர்களையும் நமக்குத் தெரியப்படுத்துகிறது. அந்த நினைவகம் இல்லாமல் நமது வாழ்வு சீரடையாது. எனவே ஒருவரது மூளைப் பின்மேட்டில் சேதம் ஏற்பட்டால் அல்லது மூளையிலிருந்து அப்பகுதி அகற்றப்பட்டால் புதிய அறிவுகளை உள்வாங்கும் ஆற்றலை அவர் இழந்துவிடுவார். ஏனெனில், புதிதாகக் கிடைக்கும் ஒவ்வோர் அனுபவமும் அவரது நினைவகத்திலிருந்து விரைவாகவே அழிந்துவிடும். இந்நிலையில், முன்பு அறிமுகமற்ற ஒருவர் அப்போதுதான் அவரைச் சந்தித்து விட்டுச் சில வினாடிகள் கழித்துத் திரும்பிவந்தால்கூட முதல் தடவை சந்திப்பதுபோல்தான் அவரைப் பார்ப்பார்.

ஆக, அனுபவங்களை நுணுக்கமாகப் பதிவுசெய்வதும், தேவை ஏற்பட்டால் நீண்டகால நினைவகத்தில் அவற்றைப் பத்திரப் படுத்துவதும் மூளைப் பின்மேட்டின் பணியாகும். அதேவேளை, இந்த அனுபவங்களுக்கு உணர்வார்ந்த உள்ளடக்கத்தை வழங்குவது 'அமிக்டலா' ஆகும். ஒரு சிங்கம் மிடுக்காக நடப்பதை நீங்கள் காணும்போது 'ஹிப்போ காம்பஸ்' என்னும் மூளைப் பின்மேடு அதன் முழு விவரங்களையும் பதிவுசெய்துகொள்கிறது. ஆனால், அந்தச் சிங்கம் மிருகக்காட்சி சாலையின் கூண்டுக்குள் இருக்கிறதா, உங்கள் வீட்டு வாசலில் நிற்கிறதா என்று தீர்மானித்து உங்களுக்குப் பாதுகாப்புணர்வைத் தருவது அல்லது பீதியுடன் வெருண்டோடச் செய்வது 'அமிக்டலா'தான்.

உணர்ச்சித் தன்மை கொண்ட அனுபவங்கள் புலன்களிலிருந்து மூளை நரம்புமுடிச்சு (Thalamus) வழியாக மூளையின் மேற் பரப்புக்கு அனுப்பப்படுவதாக நரம்பியல் ஆய்வாளர்கள் அண்மைக்காலம்வரை நம்பிக்கொண்டிருந்தனர். அங்கிருந்துதான் அமிக்டலாவுக்கும், உணர்ச்சிகளுக்குப் பொறுப்பான ஏனைய பகுதிகளுக்கும் அவை கடத்தப்படுவதாகவும், அதன் பிறகே அத் தூண்டல்களை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான செயல்பாடுகள்

இடம்பெறுவதாகவும் அவர்கள் நம்பினர். ஆனால், ஒருவர் அதியுயர் உணர்ச்சிநிலையைச் சட்டென்று எதிர்கொள்ளும்போது அமிக்டலாவே தனியாக நின்று நாளமில்லாச் சுரப்பியை (Adrenal glands) தாண்டி ஒரு வினாடியைவிடக் குறைந்த நேரத்துக்குள் விரைவான துலங்கலுக்கு உடலைத் தயார்செய்வதாக நவீன ஆய்வுகள் வெளிப்படுத்தின. வழக்கமாக அது மூளையின் மேற்பரப்புக்குப் பயணம் செய்து அமிக்டலாவுக்குத் திரும்ப எடுக்கும் கால அளவைவிட இக்கால அளவு குறைவானது எனவும் அறியப்பட்டது.

பூனை நாயைக் கண்டு பயப்படுதல், எலி பூனைக்குப் பயப்படுதல், மனிதன் பாம்புக்கும்[34] நிலநடுக்கத்துக்கும் பயப்படுதல் போன்ற பாரம்பரிய இயல்பூக்க எதிர்வினைகளுக்கு இந்த ஏற்பாடு பெரும் பயனுள்ளதாகும். ஏனெனில், இவ்வாறான நிலைகளில் ஒருவரது எதிர்வினை இமைப்பொழுதைவிட வேகமாக இருக்கும். ஓர் உணர்ச்சித் தூண்டல் பற்றிய அறிதல் முழுமையடைய முன்பே அதுபற்றிய உணர்வை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு எதிர்வினையாற்றக்கூடிய அரிதான நிலைமைகள் இவை. முன்பே நாம் குறிப்பிட்ட ஜேம்ஸின் கோட்பாட்டை ஒத்த அவசரநிலைகளை இது சுட்டுகிறது எனலாம். பார்ப்பவர் மனத்தில் திடீர்ப் பயத்தை விதைப்பதன் மூலமாகக் குகைவாசிகளை இறைவன் 300 வருடங் களைவிட அதிகக் காலம் பாதுகாத்ததாகத் திருக்குர்ஆன் குறிப்பிடு கிறது:

> அவர்களை நீர் எட்டிப்பார்ப்பீராயின், அவர்களைவிட்டு வெருண்டோடிவிடுவீர். அவர்களைப் பற்றிய பீதியும் உமக்குள் நிறைந்துவிடும். (18:18)

ஆனால், சிந்தனைக்கு இடம்கொடுக்காத இந்த அவசர எதிர் வினைக்காக ஒருவர் பின்னர் கைசேதப்படலாம், அல்லது வெட்கப்படலாம். உதாரணமாக, மிக மோசமாகக் கோபம் கொண்டதற்காக, அல்லது அறிமுகமான மனிதர்களுக்கு முன்னால் ஏதோ ஒன்றுக்குப் பயந்து ஓடியதற்காக, அல்லது குதிரையிலிருந்து விழுந்த நண்பரைப் பார்த்து வெடிச்சிரிப்பு சிரித்ததற்காகப் பின்னர் ஒருவர் வெட்கப்படலாம். இத்தகைய அவசர உணர்ச்சி வெளிப்பாடு சற்றுநேரம் கழித்து அவருக்கே ஆச்சரியத்தைக்கூட ஏற்படுத்தலாம்.

---

34. மனிதர்கள் பாம்புகளுக்குப் பயப்படுவதற்குக்கூட மரபுவழியான உள்ளார்ந்த அச்சம்தான் காரணம் எனச் சில அறிவியலாளர்கள் நம்புகின்றனர். பார்க்க: Herbert Benson, *'Timeless Healing'*, London: Simon & Schuster, 1996.

இதுதொடர்பில் நகைச்சுவையான ஒரு சம்பவமும் கூறப்படுவதுண்டு. அதாவது, சிறு குழந்தையொன்று நீச்சல் குளத்தினுள் விழுவதைக் கண்ட ஒருவர் உடனடியாக முழு உடைகளுடன் தானும் தண்ணீரில் பாய்ந்துவிட்டார். அதன் பிறகுதான் தனக்கு நீச்சல் சரியாக வராது என்பது அவருக்கு நினைவுவந்தது. பிறகு அவரையும் குழந்தையையும் காப்பாற்றுவதற்கு வேறு நபர்கள் வர வேண்டியிருந்தது!

புலன்களிலிருந்து மூளையின் மேற்படலத்தை நோக்கிச் செல்லும் நரம்பிழைகளிலிருந்து பிரியும் ஒரு கிளை நேரடியாக அமிக்டலாவை நோக்கிச் செல்வதாகவும் ஆய்வாளர்களுக்குத் தெளிவாகியது. அந்தக் கிளையே இவ்வாறான உணர்ச்சிசார் நிகழ்வுகளுக்கான அவசர எதிர்வினைகளை மேற்கொள்கிறது. ஆயினும், பிரதான கிளை மூளையின் மேற்படலத்தை நோக்கியே செல்கிறது.

ஆக, அமிக்டலாவே அவசரப் பணிகளை மேற்கொள்கிறது என்பது மேற்சொன்னவற்றின் அடிப்படையில் உறுதியாகிறது. அதுவே உடலில் அவசரநிலையைப் பிரகடனப்படுத்தி, தகவல்கள் நரம்பு மண்டலத்தை நோக்கி நகர முன்னர் விரைவான நிலைப்பாடுகளை எடுக்கிறது. அதாவது, முன்னெற்றியின் உட்புறத்தே அமைந்துள்ள மூளையின் முன்புறத் தோலுக்கு (Pre frontal cortex) அவை சென்றடைந்து அதன் அபிப்பிராயம் பெறப்பட முன்னர் இது நிகழ்ந்துவிடுகிறது. எனினும், சாதாரண உணர்வு சார்ந்த விவகாரங்கள் மூளையின் முன்புறத் தோலுக்கே அனுப்பப்படுகின்றன. அங்கு அவை நிதானமாக ஆராயப்படுகின்றன. இறைத்தூதர்களது மனித உணர்ச்சி, ஆன்மீகம் சார்ந்த எதிர்வினைகள் ஆகியவற்றோடு இவ்விவகாரத்திற்கு முக்கியமான தொடர்புள்ளது. அடுத்த அத்தியாயத்தில் இதுகுறித்து கலந்துரையாடுவோம்.

நாம் இந்த அத்தியாயத்தையும் இதற்கு முந்திய அத்தியாயத்தையும் உளவியல் விஞ்ஞான மாணவர்களுடன் உரையாடும் வகையிலேயே எழுதினோம். இத்துறையில் சிறப்புக் கற்கையைக் கொண்டிராத வாசகருக்கும் பயனளிக்கும் வகையில் அவற்றை எளிமைப்படுத்தி முன்வைத்தோம். ஏனெனில், இவற்றில் இடம்பெற்றுள்ள சில விசயங்கள் குறித்து எதிர்வரும் அத்தியாயங்களிலும் பேசவுள்ளோம். உளவியல் துறை சார்ந்தவர்கள் அறிந்துவைத்திருக்கும் ஆழமான, சிக்கலான பல விசயங்களை இங்கு நாம் எளிமைப்படுத்த முயன்றமைக்காக அவர்களிடம் மன்னிப்பு கேட்கிறோம். அதே போல், இங்கு நாம் விளக்கிய சில விசயங்களைப் புரிந்துகொள்

வதில் துறைசாராத வாசகர்கள் சிரமத்தை எதிர்கொள்வாராயின் அதற்காகவும் மன்னிப்பு கேட்கிறோம்.

நபிமார்களது உணர்வும் ஆத்மீக நடத்தையும் பற்றியும், அவர்களை உருவாக்குவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றியுமான நமது அவதானங்களை இனிவரும் அத்தியாயங்களில் பதிவுசெய்ய உள்ளோம்.

# அத்தியாயம் மூன்று

## உணர்ச்சித் தொடர்பின்றி புத்தியால் மாத்திரம் இறைவனை அறிந்து வணங்குவதால் ஒருவரது விசுவாசம் முழுமையடையுமா?

முன்னைய அத்தியாயத்தில் உணர்ச்சிவயப்பாடு பற்றிய பொதுவான தகவல்களை வழங்க முயன்றோம். மதச்சார்பற்ற சடவாத அறிவியல் அடிப்படைகளைக் கொண்ட நவீன உளவியல், நரம்பியல் ஆய்வுகளில் உணர்ச்சிகள் கையாளப்பட்டுள்ள விதத்தை இஸ்லாமியக் கண்ணோட்டத்துடன் ஒப்பிட்டு ஆய்ந்தறிந்தோம். அடுத்ததாக, இறை விசுவாசத்தைப் பூரணப்படுத்துவதிலும், இறைவனுடனான தொடர்பை ஆழப்படுத்துவதிலும் உணர்வுப் பகுதியின் முக்கியத்துவம் பற்றி இந்த அத்தியாயத்தில் உரையாட உள்ளோம். ஏனெனில் உணர்ச்சிகள் இல்லாவிட்டால் இறை நம்பிக்கை வாடி பலவீனமடைந்துவிடும். அந்த வகையில், உணர்வார்ந்த பகுதி என்பது மூன்றாவது மையப்பொருளாக அமைகிறது எனலாம். நான்காவது மையப்பொருளாக அமைவது ஆன்மீகப் பகுதியாகும். நவீனச் சடவாத உளவியல் விஞ்ஞான மானது இந்நான்காவது மையப்பொருளின் இருப்பை நிராகரித்து அல்லது புறக்கணித்து ஏனைய மூன்று மையப்பொருள்களோடு மாத்திரம் போதுமாக்கிக்கொண்டது.

1. மேற்குறித்த மையப்பொருள்களில் முதலாவதாக அமைவது அறிவுப் பகுதி (Cognition) ஆகும். மனிதன் தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றியிருக்கும் விசயங்கள் பற்றியும், சிலபோது தனது நம்பிக்கைகள் பற்றியுமான நோக்கை மாற்றிக்கொள்ளத்தக்க புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள இந்த அறிவுப் பகுதியினூடாக முயல் கிறான்.

2. இரண்டாவதாக அமைவது நடத்தைப் பகுதியாகும் (Behavioral part). ஒருவர் பெற்ற தகவல்களின்படி அவர் மேற்கொள்ளும் செயல்சார்ந்த பகுதியாக இது அமைகிறது.

3. மூன்றாவதாக அமைவது உணர்ச்சி சார்ந்த பகுதியாகும் (Emotional part). அதாவது, குறித்த செயலை மேற் கொள்ளும்போது ஒருவருக்கு ஏற்படும் மகிழ்ச்சியுணர்வை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆக, மனிதனது எல்லா உளவியல், உடலியல் செயல்பாடுகளும் இம்மூன்று மையங்களைச் சுற்றி அல்லது அவற்றுக்கிடையில் நிகழும் பரஸ்பர தாக்கத்தைச் சுற்றியே திரும்பத்திரும்ப நிகழ்வதாக நவீன உளவியல் வலியுறுத்துகிறது.

ஆக, இக்காரணிகளின் தர்க்க ஒழுங்கு அறிவுப் பகுதியுடன் ஆரம்பிக்கிறது. அடுத்ததாக நடத்தைசார்ந்த பகுதியும், அதற்கடுத்து உணர்ச்சிப் பகுதியும் இடம்பெறுகின்றன. எனினும் யதார்த்தத்தில் இக்காரணிகள் ஒன்றுக்குள் மற்றொன்று ஊடறுக்கவும், பிரித்துப்பார்க்க முடியாதவாறு ஒழுங்கு மாறுபட்டு வரவும் முடியும். அந்த வகையில், ஆரம்பமாகவே அறிவுக்காரணி பலமான உணர்ச்சி உந்துதலுடன் இணைந்துவந்து மனிதனது சிந்தனையிலும் பிரக்ஞையிலும் தாக்கம் செலுத்த முடியும். அதன் மூலமாக நடத்தைக்காரணி பிற்படுத்தப் படவோ பலப்படுத்தப்படவோ முடியும். அல்லது நடத்தைக் காரணிகூட ஆரம்பத்தில் இடம்பிடிக்கலாம்.

உதாரணமாக, முன்பு மனத்தில் தோன்றாத சில செயல்பாடுகளை மேற்கொள்ளும்படியான நிர்ப்பந்தச் சூழ்நிலைகள் ஒருவருக்கு ஏற்படலாம். அதன் மூலமாக அவருக்குப் புதிய அறிவு கிடைத்து, மறைந்திருந்த அவரது சில ஆற்றல்களும் உணர்ச்சிகளும் வெளிக் கொண்டுவரப்படலாம். இதனால் தன்னைப் பற்றியும், தனது சூழலைப் பற்றியுமான அவரது பார்வையும், குறித்த செயல்பாட் டைப் பற்றிய அவரது உணர்வுநிலையும் மாற்றமடையலாம். நவீன உளவியலில் இக்காரணிகள் பற்றிய சாராம்சம் இதுதான். அடுத்ததாக நாம் இவ்வம்சங்கள் பற்றியும், அவற்றுக்கிடையிலான வினையாற்றல் பற்றியுமான இஸ்லாமியக் கோட்பாட்டை நோக்குவோம்.

உமர் இப்னுல் ஃகத்தாபு ﵁ அறிவித்ததாக முஸ்லிம் பதிவுசெய் துள்ள பிரபல நபிமொழியிலிருந்து இதனை ஆரம்பிக்கலாம்:

> ஒருநாள் நாங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அமர்ந் திருந்தோம். அப்போது மிக வெண்மையான ஆடையும் கருநிறக்

கேசமும் கொண்ட ஒரு மனிதர் எங்களிடம் வந்தார். பயணம் செய்தமைக்கான அடையாளம் அவரில் தெரியவில்லை. எங்களில் யாரும் அவரை அறிந்திருக்கவுமில்லை. அவர் நபிகளாருக்கு முன்னால் அமர்ந்து தனது முழங்காலை அன்னாரது முழங்காலுடன் இணைத்துவைத்துக்கொண்டார். கைகளை அன்னாரது தொடைகளில் வைத்துக்கொண்டார்.

பின்னர், 'முஹம்மதே, எனக்கு இஸ்லாத்தைப் பற்றிக் கூறும்' என்றார். அதற்கு அன்னார், 'இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும், முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி பகர்வதும், தொழுகையை நிலைநிறுத்துவதும் ஸகாத் கொடுப்பதும் றமளானில் நோன்பு வைப்பதும் வசதியிருந்தால் ஹஜ்ஜை நிறைவேற்றுவதும் ஆகும்' எனக் கூறினார்கள். அதற்கவர், 'உண்மையுரைத்தீர்' எனக் கூறினார்.

அவரே கேள்வி கேட்டு அவரே 'உண்மைதான்' எனக் கூறியதைக் கண்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம்.

பின்னர் அவர், 'எனக்கு ஈமான் பற்றிக் கூறும்' என்றார். அதற்கு நபிகளார், "அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் விசுவாசம் கொள்வதும், 'கத்ரு' என்னும் முன்னளப்பை அதன் நன்மை-தீமைகளோடு விசுவாசம் கொள்வதும்" எனப் பதிலளித்தார்கள். அப்போதும் அவர், 'உண்மையுரைத்தீர்' என்றே கூறினார்.

அடுத்ததாக, 'இஹ்சான் பற்றி எனக்குக் கூறும்' என்றார். அதற்கு நபிகளார், 'நீர் அல்லாஹ்வைப் பார்ப்பதுபோன்று அவனை வணங்குவதாகும்; அவனை நீர் பார்க்காவிட்டாலும் உம்மை அவன் பார்க்கிறான்' எனக் கூறினார்கள்.

பிறகு அன்னார் என்னிடம், 'உமரே, கேள்வி கேட்டவர் யாரென்று உமக்குத் தெரியுமா?' எனக் கேட்டார்கள். 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர்' என்றேன். 'அவர் ஜிப்ரீல். உங்களது சன்மார்க்கத்தை உங்களுக்குக் கற்பிக்கவே உங்களிடம் வந்தார்' என நபிகளார் விளக்கினார்கள்.

அபூஹுறைறா ﵁ அறிவிப்பதாக முஸ்லிம் பதிவுசெய்த மற்றோர் அறிவிப்பில், ஜிப்ரீல் ﵇ நபி ﷺ அவர்களிடம் ஈமான் பற்றிக் கேட்க

ஆரம்பித்து, அடுத்ததாக இஸ்லாம் பற்றியும், அதற்கடுத்து இஹ்சான் பற்றியும் கேட்டதாக வந்துள்ளது.

ஆக இந்த நபிமொழியின்படி, அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் வானவர்களையும் தூதர்களையும் மறுமைநாளையும் விசுவாசித்தல் என்பது திடமான அறிவும் நம்பிக்கையும் சார்ந்த அடிப்படையாகும் என்பது தெளிவாகிறது. தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற இஸ்லாமிய வணக்கங்கள் என்ற கட்டடத்தின் அஸ்திவாரம் இதுவே.

குறித்த நபிமொழி கவனம் குவிக்கும் மூன்றாவது விசயம், அடியான் வணக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது இறைவன் தனது உயர்திரு மேன்மையால் அவனைக் கவனித்துக்கொண்டிருக்கிறான் என உணர்வதாகும். இதன்போது உணர்ச்சியும் ஆன்மீகத் திளைப்பும் கலந்த ஓர் நிலை அவனை ஆட்கொள்கிறது. இறைவனுக்கு நாம் அறிவாலும் பகுத்தறிவு சார்ந்த நம்பிக்கையாலும் கடமையான வணக்கங்களாலும் மட்டுமன்றி, நம்பிக்கையிலிருந்து கிளைபிரியும் உணர்ச்சியாலும் அடிபணிகிறோம் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்த வகையில்தான், இஸ்லாமியக் கண்ணோட்டத்திலான உளவியல் கோட்பாடு நான்கு தனிமங்களைக் கொண்டது எனக் குறிப்பிட்டோம். அவை: அறிவு, நடத்தை, உணர்ச்சி, ஆன்மா.

இந்த உணர்வார்ந்த இஸ்லாமியப் பகுதியின் முக்கியத்துவத்தை மீண்டும் நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது. ஏனெனில், இப்பகுதியின்றி விசுவாசம் பலவீனப்படலாம் அல்லது அழிந்துவிடலாம். இதற்கான தெளிவான உதாரணமாகப் பின்வரும் விசயத்தைக் குறிப்பிடுகிறோம்:

ஒரு முஸ்லிமின் இறைவிசுவாசம் இறைத்தூதர் ﷺ அவர்கள் மீதான அன்புணர்வின்றி முழுமையடைவதில்லை. அவன் தன்னையும் தனது குடும்பத்தையும் ஏனைய மனிதர்களையும் நேசிப்பதைவிட அதிகமாக இறைத்தூதரை நேசிக்க வேண்டும். இறைத்தூதர் ﷺ கூறியதாக அனஸ் பின் மாலிக் رضي الله عنه அறிவிக்கிறார்:

> உங்களில் ஒருவருக்கு நான் அவருடைய பிள்ளைகளையும் பெற்றோரையும் அனைத்து மனிதர்களையும்விட நேசத்துக்குரியவராக அமையாதவரை அவர் பரிபூரண விசுவாசம் கொண்டவராக மாட்டார்.[35]

---

35. ஸஹீஹுல் புஃகாரீ.

ஸஹீஹுல் புஃகாரீ கிரந்தத்தில் பின்வருமாறும் இடம்பெற்றுள்ளது:

> உமர் ﷺ தனது வழக்கமான வெளிப்படைத் தன்மையோடு நபி ﷺ அவர்களிடம், 'இறைத்தூதரே, என்மீது நான் கொண்டிருக்கும் நேசத்துக்குப் பிறகு, ஏனைய அனைவரையும்விட உங்களைத்தான் அதிகம் நேசிக்கிறேன்' எனக் கூறினார். அப்போது நபிகளார் ﷺ, 'இல்லை, எனது ஆத்மாவைத் தன்வசம் வைத்திருப்பவன்மீது சத்தியமாக! உம்மைவிடவும் நான்தான் உமது மனத்துக்கு அதிக நேசத்துக்குரியவராக இருக்க வேண்டும்' எனக் கூறினார்கள். உடனே உமர் ﷺ, 'நிச்சயமாக இப்போது நீங்கள்தான் என் மனத்துக்கு என்னைவிட அதிக நேசத்துக்குரியவர்' என்றார். அதற்கு நபிகளார், 'இப்போது சரியாகிவிட்டது உமரே!' என்றார்கள்.

மனித வாழ்வில் ஒப்புவமை காண முடியாத அந்த நேசத்துக்கான அற்புதமான எடுத்துக்காட்டுகளை நபிகளாரின் வாழ்வை வரைந்தளித்த நம்பிக்கைக்குரிய நூலாசிரியர்கள் தந்திருக்கின்றனர். இதோ அபூபக்கர் சித்தீக் ﷺ இறைத்தூதர் ﷺ அவர்களுக்காகத் தன் உயிரையே அர்ப்பணிக்கிறார்:

> மதீனாவை நோக்கிய இரகசிய 'ஹிஜ்றத்' புலம்பெயர்வின் போது இடையில் 'ஸவ்ரு' குகையில் இருவரும் மறைந்திருக்க நேர்கிறது. அப்போது அவரே முதலில் குகையினுள் நுழைந்து கொடிய மிருகங்கள் அல்லது நச்சுப்பாம்புகள் உள்ளனவா என்று தேடிப்பார்க்கிறார். குகை பாதுகாப்பாக இருப்பது அவருக்கு ஊர்ஜிதமாகிறது. ஆயினும், அவர் அடித்துக் கொன்ற ஒரு பாம்பு அவரைத் தீண்டியிருந்தது. இறைத்தூதர் ﷺ அபூபக்கரின் மடியில் தலைவைத்துத் தூங்கிக்கொண்டிருந்ததால், அன்னார் விழித்துவிடக் கூடாது என்பதற்காகப் பாம்புக் கடியால் ஏற்பட்ட வலியை அவர் பொறுத்துக்கொள்கிறார். எனினும் வேதனை கடுமையாகியதால் பெருகிய அவரது கண்ணீர் நபி ﷺ அவர்களது முகத்தில் விழுந்து அன்னாரை எழுப்பிவிடுகிறது.[36]

உஹுது யுத்த வேளையில் எதிரிகளைச் சந்திப்பதற்காக நபிகளார் அணிகளை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது சவாத் இப்னு கஸிய்யா என்ற தோழரை நோக்கி, 'நேராக நில் சவாதே' எனக் கூறிய நபிகளார் அவரது வயிற்றில் ஒரு

---

36. இப்னு கஸீர், *'அல்பிதாயா வந்நிஹாயா'*, தாருல் மஅரிஃபா, 1997, பாகம் 4. பக்.194.

பாத்திரத்தால் அல்லது பலகைத் துண்டால் குத்தினார்கள். அது தனக்கு வேதனையை ஏற்படுத்தியதாகப் பாவனை செய்த சவாத், அதற்குப் பழிவாங்குவதற்காக இறைத்தூதர் வயிற்றைக் காண்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். நபிகளார் வயிற்றைக் காண்பித்ததும் சவாத் அன்னாரைக் கட்டித் தழுவி அன்னாரது கண்ணியமான வயிற்றை முத்தமிட்டார்.[37] தான் போரில் ஷஹீதாக மரணித்தால் உலகைவிட்டுப் பிரியும்போது இடம்பெற்ற கடைசி நிகழ்வாகத் தனது தோல் இறைத்தூதரின் மேனியைத் தொட்ட தாகவே இருக்க வேண்டும் என்பதுதான் நபித்தோழர் சவாதின் விருப்பமாக இருந்தது.

மற்றோர் உதாரணம் ஃகுபைபு இப்னு அதீ என்ற நபித்தோழர்:

> குறைஷிக் காஃபிர்கள் அவரைக் கொல்வதற்காகக் கழுவேற்றிய போது, ‘உமது இடத்தில் முஹம்மதும், நீ உம்முடைய குடும்பத்தாருடன் எந்தக் குறையுமின்றிப் பாதுகாப்பாகவும் இருப்பதை விரும்புவாயா?’ என அவர்களில் ஒருவர் கேட்டார். அதனைக் கேட்டுப் பொங்கியெழுந்த ஃகுபைபு கூறினார்: ‘இறைவன்மீது ஆணையாக! நான் என்னுடைய குடும்பத்தாருக்கும் பிள்ளைகுட்டிகளுக்கும் மத்தியில் முழு ஆரோக்கியத்தோடு இன்பமாக வாழ்ந்திருக்க, இறைத்தூதர்மீது ஒரு முள் குத்துவதைக்கூட நான் விரும்ப மாட்டேன்.’[38]

‘நாங்கள் மதீனாவுக்குத் திரும்பியதும் உயர்ந்தவர் இழிந்தவரை அதிலிருந்து நிச்சயம் வெளியேற்றிவிடுவார்’ என ஓர் பயணத்தின் போது நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு சலூல் நபி ﷺ அவர்களது அந்தஸ்தின் மீது அடர்ந்தேறினான். அவனை எதிர்கொண்ட அவனுடைய மகனான ஃகப்பாபு ؓ வாளை உருவிக்கொண்டு தன் தந்தை மதீனாவுக்குள் நுழையாமல் தடுத்துவிட்டார். இறைத்தூதர் அவனை மதீனாவுக்குள் நுழைய அனுமதித்த பிறகே ஃகப்பாபு அவனை உள்ளே விட்டார்.[39]

இந்த நேசம் நபித்தோழர்களிடம் மாத்திரம் சுருங்கியிருக்கவில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது நபித்தோழியர் கொண்டிருந்த நேசம் பற்றியும் பல செய்திகள் வந்திருக்கின்றன.

---

37. அல்பைஹகீ, *‘அஸ்ஸுனனுல் குப்றா’*.
38. இப்னு கஸீர், *‘அல்பிதாயா வந்நிஹாயா’*, தாருல் மஅரிஃபா, 1997, பாகம் 4. பக்.445.
39. மேலது, பக்.545.

பனூ தீனார் கோத்திரத்தைச் சேர்ந்த அன்ஸாரிப் பெண் ஒருவருடைய கணவரும் சகோதரரும் உஹுதுப் போரில் கொல்லப்பட்டனர். அந்தச் செய்தி அப்பெண்ணிடம் சொல்லப்பட்டபோது, 'இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு என்ன நடந்தது?' என வினவினார். 'அவர்கள் நலமாகவே இருக்கிறார்கள் தாயே!' எனக் கூறப்பட்டபோது, 'அவர்களை நான் பார்க்க வேண்டும் காட்டுங்கள்' எனக் கேட்டார். உடனே அங்கிருந்தோர் நபிகளாரைச் சுட்டிக் காண்பித்தனர். நபிகளாரைக் கண்ட அப்பெண், 'உங்களுக்குப் பிறகு எல்லாத் துன்பங்களும் அற்பம்தான்' என்றார்.[40]

இந்த ஒப்பற்ற உணர்வுப் பிரவாகமே, 'பெரும்பாவம் இழைத்தவர் காஃபிர் ஆவார்' என்ற கூற்று மறுக்கப்படுவதற்கும் பிரதான காரணமாக இருந்தது எனலாம். ஏனெனில், அத்தகைய நபரைச் சபிக்க வேண்டாமென நபியவர்கள் தடுத்ததோடு, அவருக்கு மன்னிப்பை வேண்டிப் பிரார்த்தித்தும் இருக்கிறார்கள்.

'அல்ஹிமார்' (கழுதை) என்ற பட்டப்பெயர் கொண்டு அழைக்கப்பட்ட அப்துல்லாஹ் என்ற தோழர் நபி ﷺ அவர்களை நகைச்சுவையால் சிரிப்பூட்டக்கூடியவராக இருந்தார். அவரிடம் மது அருந்தும் பழக்கமும் இருந்தது. அதற்காக அவருக்குப் பல தடவை 'ஹத்' தண்டனையும் வழங்கப்பட்டது. ஒரு தடவை தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக அவர் நபியவர்களிடம் கொண்டுவரப்பட்டார். அப்போது ஒருவர், 'இறைவா, இவரைச் சபித்துவிடு; எத்தனை தடவைதான் இப்படிச் செய்துவிட்டார்!' எனக் கூறினார். அதற்கு நபிகளார் ﷺ இப்படிக் கூறினார்கள்: "அவரைச் சபிக்காதீர்கள். அல்லாஹ் வின் மீது ஆணையாக! எனக்குத் தெரிந்தவரை அவர் அல்லாஹ் வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கிறார். உங்களுடைய சகோதரனுக்கு எதிராக ஷைத்தானுக்கு உதவிசெய்யாதீர்கள். அதற்கு மாறாக, 'இறைவா, இவரை மன்னிப்பாயாக ...' என்று பிரார்த்தியுங்கள்."

உமர் இப்னுல் ஃகத்தாபு வாயிலாக வந்திருக்கும் இந்நபிமொழியை இமாம் புஃகாரீ தனது *'ஸஹீஹ்'* கிரந்தத்தில் பதிவுசெய்துள்ளார்.

அப்துல்லாஹ் எனப்படும் அம்மனிதர் மதுவுக்கு மிகக் கடுமையாக அடிமைப்பட்டிருந்தார் என்றே தோன்றுகிறது. நபித்தோழர்களுக்கு முன்னால்கூட மது விசயத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள

---

40. இப்னு ஜரீருத் தபரீ, *'தாரீஃகுர் றுசுல் வல்முலூக்'*, பாகம் 2, பக்.533.

முடியாதவராக அவர் இருந்தமையிலிருந்து இம்முடிவை நாம் பெற முடிகிறது. ஃகைபர் போரில் முஸ்லிம்கள் கைப்பற்றிய கோட்டைகளில் பல மது வகைகள் நிறைந்திருந்தன. அவை அனைத்தும் கொட்டப்பட்டபோது அவற்றிலிருந்து எடுத்து அருந்தாமல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள அப்துல்லாஹ்வால் முடியாதிருந்தது. மதுவைப் பெரும் ஆசையுடன் அருந்திய அவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் எடுத்துச்செல்லப்பட்டார். அப்போது அவருக்கு 'ஹத்' தண்டனை வழங்குமாறு நபிகளார் கட்டளையிட்டார்கள். அவரது இந்த மதுப்பழக்கம் நபிகளாரின் காலத்தில் மட்டுமன்றி, உமர் இப்னுல் ஃகத்தாபு ؓ அவர்களது ஆட்சிக்காலத்திலும் நீடித்திருந்தது. உமரின் ஆட்சிக்காலத்திலும் மது அருந்தியமைக்காக அவருக்குக் கசையடி வழங்கப்பட்டிருக்கிறது.[41]

பெரும்பாவம் இழைத்தவர்கள்மீது நபிகளார் ﷺ காட்டிய இரக்கத் திற்கு மற்றோர் எடுத்துக்காட்டு முஸ்லிம் கிரந்தத்தில் பதிவாகியுள்ள கீழ்வரும் அறிவிப்பாகும்:

> நபித்தோழர் ஒருவர் வந்து, 'நான் அழிந்துவிட்டேன் அல்லாஹ்வின் தூதரே!' என்கிறார். றமளான் மாதத்தின் பகல்பொழுதில் அவர் மனைவியுடன் உறவுகொண்டுவிட்டார் என்பதே அதற்குக் காரணமாகும். 'அதற்குப் பிராயச்சித்தமாக ஓர் அடிமையை வாங்கி விடுதலை செய்யக்கூடிய வசதி உள்ளதா?' என நபி ﷺ அவர்கள் கேட்கிறார்கள். அவர் 'இல்லை' என்கிறார். 'இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பிருக்க முடியுமா?' என நபிகளார் மறுபடியும் கேட்கிறார்கள். அதற்கும் அவர் 'இல்லை' என்கிறார். 'அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க முடியுமா?' என மீண்டும் நபிகளார் கேட்க, 'இல்லை' என்றே அவர் பதிலளிக்கிறார்.
>
> அந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு மனிதர் கூடையில் பேரீச்சம் பழங்களைக் கொண்டுவந்து நபிகளாரிடம் கொடுக்கிறார். உடனே நபிகளார் அதனை அந்த நபித்தோழரிடம் கொடுத்து, 'இதனை ஏழைகளுக்குத் தர்மம் செய்துவிடுவீராக!' என்கி றார்கள். அதற்கவர், 'மதீனாவில் எங்களைவிட வறியவர்கள் இல்லை' என்றார். அதனைக் கேட்டுக் கடைவாய்ப் பற்கள் தெரியுமளவு சிரித்த நபியவர்கள், 'போய் உம்முடைய குடும்பத்தாருக்கு இதனை உண்ணக் கொடுப்பீராக!'

41. இப்னு ஹஜருல் அஸ்கலானீ, *'அல்இசாபா ஃபீ தம்யீஸ் அஸ்ஸஹாபா'*, தாருல் ஜீல். ஹி.1412. பாகம் 2. பக்.117.

என்கிறார்கள். அந்த மனிதர் பாவம் மன்னிக்கப்பட்டு ஈச்சம்பழக் கூடையுடன் திரும்புகிறார்.

எவ்வளவு அற்புதமான உணர்வு இது! 'பின்பற்றலின்றி அன்பு இல்லை' என்று வாதிடுவோர் இந்த உணர்வைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டனர். 'நீங்கள் இறைவனை விரும்புபவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள்; இறைவன் உங்களை விரும்புவான்' (3:31) என்ற இறைவசனத்தை அவர்கள் இதற்குச் சான்றாக முன்வைக்கின்றனர். ஆனால் இவ்வசனத்தை விளக்கும் தபரீ, இது இறைவனை நேசிப்பதாகப் போலியாகக் கூறிய சிலர் குறித்து இறங்கியது என உறுதிப்படுத்தியுள்ளார். 'நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் தூதரைப் பின்பற்றுங்கள்; அப்போது இறைவன் உங்களை விரும்புவான்' என அவர்களுக்குக் கூறப்பட்டது. இறைத்தூதர் ﷺ அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவந்த நஜ்றான் பிரதேசக் கிறிஸ்தவர்கள், தாம் அல்லாஹ்வை நேசிப்பதாகக் கூறியபோதுதான் இவ்வசனம் இறங்கியிருக்க வேண்டுமெனத் தபரீ குறிப்பிடுகிறார்.[42]

ஆனால் அன்பு, இரக்கம் சார்ந்த உணர்ச்சிகளைக் குறைமதிப்பு செய்த சிலர் தமது இக்கருத்தாக்கத்தை அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவாக்கிவிட்டனர். சிலர் இதில் அளவுகடந்து செல்வதும் உண்டு. அன்பைப் பற்றிப் பேசுவோரைப் பார்த்து, 'நேசமா, என்ன நேசம்?! பின்பற்றலின்றி நேசம் இல்லையே!' என அதட்டுவதைக்கூட நாம் பார்க்க முடிகிறது. அவர்கள் இப்படிக் கூறுகின்றனர்: அன்பையும் பின்பற்றலையும் தனித்தனியாகப் பிரித்துப்பார்ப்பதானது, அவ்வாறு பார்ப்பவர்களின் உள்ளங்களில் நமது நேசத்துக்குரிய தூதர் ஸ்தூலப்படுத்திக் காட்டிய மெல்லிய உணர்ச்சிகள் எவ்வளவு வரண்டுகிடக்கின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. நபிமொழியில் வந்திருப்பதுபோல் ஒரு முஸ்லிம் தனது உயிர், உறவுகள், பிற மனிதர்கள் ஆகியோரைவிட அதிகமாக இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது நேசம் கொள்ளாதவரை அவரது இறை நம்பிக்கை பூரணமடையாது என்ற வகையில், அன்பு கொள்வது என்பது ஏவப்பட்ட பின்பற்றலாகவே மாறிவிடுகிறது. எனவே, அவ்விரண்டையும் பிரித்து நோக்க வழியே கிடையாது.

இவ்விசயம் குழந்தை வளர்ப்பில் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமன்றி வளர்ந்தோரிடமும் உளவியல் பிரச்சினைகளை

42. இப்னு ஜரீருத் தபரீ, *'ஜாமிஉல் பயான் அன் தஃவீல் ஆயில் குர்ஆன் (தஃப்சீருத் தபரீ)'*.

ஏற்படுத்தக்கூடியது என்பதால் இதுகுறித்து இன்னும் சற்று விரிவாகப் பேச விரும்புகிறேன்.

ஆம், அன்புக்கும் பின்பற்றலுக்கும் மத்தியில் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவ்விரண்டும் இணைபிரியாமல் ஒட்டிநிற்கும் பண்புகள் அல்ல. மாறாக, மனிதர்களது நிறை, உயரம் ஆகிய இரு பண்புகளைப் போன்றவைதான் இந்த அன்பும் பின்பற்றலும். அதாவது, சில மனிதர்களது உயரத்தையும் நிறையையும் அளந்துபார்த்தால், இரண்டுக்குமிடையில் தொடர்பிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

பொதுவாக, உயரம் கூடியவர்களின் சராசரி நிறை உயரம் குறைந்தவர்களின் சராசரி நிறையைவிட அதிகமாக இருக்கும். எனினும், இந்த முடிவை அனைத்து மனிதர்கள் மீதும் பொதுமைப் படுத்திவிட முடியாது. ஏனெனில், மெலிந்தும் உயர்ந்தும் இருக்கும் அதேவேளை, நிறை குறைவாக இருப்பவர்களும் மனிதர்களில் உள்ளனர். அதேபோன்று, உயரம் குறைவாக இருந்தாலும் அதிகச் சதைப்பற்றும் கொழுப்பும் கொண்டு அதிக நிறையுடன் இருப்பவர்களையும் நாம் காண்கிறோம். அன்பும் பின்பற்றலும்கூட இப்படியானவைதான்.

உதாரணமாக, ஒருவர் இறைத்தூதரை இதயசுத்தியுடன் நேசிக்கலாம். ஆனால், வணக்க வழிபாடுகளில் அன்னாரை அவர் குறைவாகப் பின்பற்றலாம். மற்றொருவர், உபரியான நன்மை தரும் நபிகளாரின் வழிகாட்டல்களைக்கூட இரவுபகலாகச் சிரத்தையுடன் பின்பற்று பவராக இருக்கும் அதேவேளை ஆன்மீக, உணர்வார்ந்த, ஈமானியப் பகுதியில் முன்னவரைவிடக் குறைவான நிலையில் இருக்கலாம். இத்தகைய ஒன்றைத்தான் விசுவாசிகளின் தாய் ஆயிஷா ﵂ அறிவிக்கும் பின்வரும் நபிமொழி குறிப்பிடுகிறது:

> உங்களைவிட அபூபக்கர் நோன்பினாலோ தொழுகையினாலோ முந்தியவர் அல்லர். ஆனால், அவரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த ஒன்றினால் அவர் முந்தி நிற்கிறார்.

அன்பு, இரக்கம் ஆகிய உணர்வுகளுக்கு அதிகப் பெறுமானம் கொடுக்காமல் குழந்தைகள் வளர்க்கப்பட்டமையே அவர்களது உள்ளங்கள் கடினமாகிவிட்டதற்குக் காரணம் என இதனால்தான் நாம் நம்புகிறோம். மார்க்கத்தை இறுகப் பற்றிப்பிடித்திருப்பவர்கள்கூட நிராகரிப்பின் அழைப்பாளர்களுக்கும், ‘ஃகவாரிஜ்’ சிந்தனைப் பாங்கு கொண்டவர்களுக்கும் இலகுவான வேட்டைப்பொருளாக மாறிவிடும் நிலை ஏற்பட்டதும் இதனால்தான்.

அல்லாமா இப்னுல் கையிம் அல்ஜவ்ஸிய்யாவைத் தங்கள் 'இமாம்' என எடுத்துக்கொள்ளும் சிலர், சன்மார்க்க விசயத்தில் நேசம் என்ற உணர்ச்சி பெறும் இடத்திற்கு அவர் அளித்துள்ள மகத்துவத்தைப் புறக்கணித்துவிடுவதைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது.

'றவ்ளதுல் முஹிப்பீன் வ நுஸ்ஹதுல் முஷ்தாக்கீன்' என்ற தனது அன்பு பிரவகிக்கும் நூலின் முன்னுரையில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> அன்பின் காரணமாகவும் அன்புக்காகவுமே பூமியும் வானங்களும் தோன்றின; படைப்பினங்கள் உருவாக்கப் பட்டன; கிரகங்கள் சுழன்றன; இயக்கங்கள் அவற்றின் இலக்குகளைச் சென்றடைந்தன; ஆரம்பங்களும் முடிவுகளும் தொடர்புபட்டன; உயிர்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொண்டன, கோளாறுகளிலிருந்தும் விடுபட்டன, தமது ரட்சகனை நோக்கிய பாதையை எடுத்துக்கொண்டன.அவனே அவற்றுக்கு எதிர்பார்ப்பாகவும் ஆறுதலாகவும் இருக்கிறான். அந்த அன்பின் மூலமாகவே அல்லாஹ்வை ரட்சகனாகவும் இஸ்லாத்தைச் சன்மார்க்கமாகவும் பொருந்திக்கொண்ட நல்வாழ்வு ஈமானின் சுவையைக் கண்டுகொண்டது.

மேற்குறிப்பிட்டோர் அன்பு, இரக்கம், மென்மையான உணர்வுகள், பற்றற்ற வாழ்வு, இறையச்சம் என்பவற்றைப் பற்றிப் பேசாத மூலாதாரங்களுடன் மாத்திரம் தம்மைச் சுருக்கிக்கொண்டமையே அவர்களது இந்த நடத்தைக்குக் காரணமாகும். பின்பற்றுவதில் குறைபாடு கொண்டவர்கள், தாம் இறைவனையும் அவனுடைய தூதரையும் நேசிப்பதாகச் சொல்லும்போது அவர்களுடன் கடுமை யாக நடந்துகொள்வதிலேயே இத்தகையோர் குறியாக இருப்பர்.

அன்புணர்வைப் பின்பற்றலுடன் மாத்திரம் இவ்வாறு மட்டுப் படுத்துவதற்கு அப்பால், மற்றொரு பயிற்றுவித்தல் பக்கத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அது முஸ்லிம் நாடுகளில் பரவலடைந்தும் காணப்படுகிறது. மாட்சிமையும் அருளும்மிக்க இறைவன் பற்றிய பிம்பத்தை, அவனது தண்டனை குறித்த பயத்தை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளிடம் உரு வாக்குவதே அந்த அபாயகரமான பக்கமாகும். இறைவனின் அன்பையும் கருணையையும் அது பின்தள்ளிவிடுகிறது அல்லது புறக்கணித்துவிடுகிறது.

இந்த வகையில்தான், நாம் தவறிழைத்தால் இறைவன் இம்மையிலும் மறுமையிலும் தண்டித்துவிடுவான் என்ற அச்சத்தை விதைத்தே

அனேகமாக நாம் குழந்தைகளைப் பிஞ்சுப் பருவத்திலிருந்து வளர்க்கிறோம். இறைவனின் கிருபை, அடியார்கள் மீதான அவனது அன்பு, மன்னிப்பு முதலிய பண்புகளில் நாம் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. தாய்மார் குழந்தைகளைப் பண்படுத்துவதற்காகக் கற்பனையான விலங்குகளைக் கூறிப் பயமுறுத்துவதுண்டு. இந்நிலையில், குழந்தைகள் அந்த அச்சங்களையும், இறைவனின் நரகத் தண்டனை குறித்த அச்சத்தையும் தொடர்புபடுத்திப் பார்க்கிறார்கள். இறுதியில், எல்லா விவகாரங்களும் அவர்களது கற்பனையில் கலந்து குழம்பிப்போய்விடுகின்றன.

குழப்படிக்காரப் பிள்ளையிடம் தாய்மார் சிலபோது இப்படிக் கூறுவதுண்டு: 'நான் சொல்வதைக் கேட்டு நடக்காவிட்டால், இறைவன் உன்மீது கோபம் கொண்டு நரகில் வீசிவிடுவான்.' ஆனால் பெரியவர்களிடம் இல்லாத கற்பனா ஆற்றல் சிறு குழந்தைகளிடம் இருப்பதையோ, அது அவர்கள்மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையோ அத்தாய்மார் உணர்வதில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் இறைவனைப் பற்றிக் குழந்தை செய்துகொள்ளும் கற்பனை மனத்தில் ஆழமாகப் பதிந்து, அதன் உணர்வார்ந்த, ஆத்மீக வாழ்வுக்கான எதிர்கால வரைபடமாக அது நிலைத்துவிட முடியும். அதாவது, கடும் வேதனையையும் தண்டனையையும் பிரதிபலிக்கின்ற பிம்பமாக அது அவர்களிடம் பதிந்துவிடும். ஏனெனில், புலன்களாலன்றிச் சிந்தையால் மாத்திரம் கிரகிக்கப்படும் கருத்தாக்கங்களைக் குழந்தையால் ஆரம்ப வயதுகளில் புரிந்துகொள்ள முடிவதில்லை. சிலபோது அது இறைவனின் மெய்மையைப் பள்ளிவாசலின் கோபுரம்போன்று பிரமாண்டமான ஒரு மனிதனின் உருவத்திலும், அவனுக்கு முன்னால் பெருநெருப்பு கொழுந்துவிட்டு எரிவதுபோலவும் கற்பனை செய்துகொள்ள முடியும்.

பெற்றோருக்குக் கட்டுப்படாததற்காக அல்லது தங்கையை அடித்ததற்காக அந்த ராட்சதன் (இறைவன் இத்தகைய கற்பனை களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் என்பது வேறு விசயம்) தன்னைப் பிடித்து நெருப்பில் வீசிவிடுவதுபோன்று சிலபோது குழந்தை கற்பனை செய்ய முடியும். ஆனால் குழந்தை பெரியவனாகி, அறிவு முதிர்ச்சியடைந்து, கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ளும் நிலையை அடையும்போது இறைவனைப் பற்றிய தனது குழந்தைப்பருவக் கற்பனைகளை நினைத்து அவனே சிரிக்க முடியும். ஆனால், உலகிலும் மறுமையிலும் இறைவன் தரும் தண்டனை பற்றிய அச்சவுணர்விலிருந்து அவன் விடுபட மாட்டான். இறைவன் தனது

அடியார்கள்மீது கொண்டிருக்கும் அன்பையும் கருணையையும் பற்றிய உணர்வு அவனிடம் குறைவாகவே காணப்படும்.

ஆக, இறைவன் பற்றி அவன் உருவாக்கியிருந்த குழந்தைப்பருவ பிம்பம் அழிந்துவிடும் அல்லது மறந்துபோய்விடும். ஆனால் அதனால் ஏற்பட்ட தாக்கம் வாழ்வு முழுவதும் தொடர்ந்திருக்கும். அன்றாடக் கட்டாயத் தொழுகையின்போது, 'அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன் (அர்றஹ்மானிர் றஹீம்)' எனக் குறைந்தபட்சம் 17 தடவையும், உபரித் தொழுகைகளில் பல தடவையும் ஓதினாலும், இறைவனின் அன்பைப் பற்றி உள்ளத்தை உருக்கும் பல உபதேசங்களைச் செவிமடுத்தாலும் குழந்தைப் பருவத்தில் பதிந்த உணர்வு இலகுவில் அழிந்துவிடுவதில்லை.

எதிர்பார்ப்பு, கருணை, மன்னிப்பு முதலிய எதுவுமின்றி, தெய்வத் தண்டனை பற்றித் திரண்டெழும் பயத்துடனும், அன்பு போன்ற மெல்லிய உணர்ச்சிகள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் மேற்கொள்ளப்படும் இவ்வளர்ப்பு முறையானது பல்வேறு தீவிரக் குழுக்களால் வழிகெடுக்கப்படக்கூடிய ஓர் இளைய தலைமுறை உருவாகவே வழிவகுக்கும். இறைவன் இத்தகையோருக்குத் தேசங்களின் அதிகாரத்தை வழங்கும்போது எவ்வித தயார்படுத்தலோ பயிற்றுவிப்போ இரக்கமோ இன்றிக் கடுமையான தண்டனை முறைகளை அமுல்படுத்தி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவர். கொடூரமான தண்டனைகளைத் தெரிவுசெய்து அவற்றை எவ்வித இரக்கமுமின்றி நடைமுறைப்படுத்துவதில் புதுப்புது வழிமுறைகளையும் கண்டுபிடிப்பர்.

தீவிரக் குழுக்களுடன் இணைய மறுத்தவர்கள்கூட இப்பிறழ்வுற்ற, குழப்பமான வளர்ப்புமுறையால் தாக்கமடைவதற்கான வாய்ப்பிலிருந்து தப்பவில்லை. ஏனெனில், எதிர்பார்ப்புக்கான எந்த வாய்ப்புமின்றி இறைவனைப் பயத்துடன் வணங்குவது அல்லது பயத்துடன் தெரிந்துகொள்வது அவநம்பிக்கைக்கும் நிராசைக்குமே வழிவகுக்கும். அதேபோல் அன்பு, அனுதாபம் போன்ற உணர்ச்சிகள் விலக்கப்படும்போது இறைப்பணிவு, மன அமைதி முதலியவற்றால் கிடைக்கும் இன்பமும் தடுக்கப்பட்டுவிடும். குறித்த நபர்மீது நவீன வாழ்வமைப்பின் அழுத்தங்களும் சேர்ந்துகொள்ளும்போது அவர் மனக்குழப்பங்களுக்கு ஆளாகவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

தனிநபர்களின் நடத்தையில் இந்நிலை ஏற்படுத்தும் தாக்கத்தை, கவலை, மன அழுத்தம் முதலிய பிரச்சினைகளுக்கு இரையான நோயாளர்களுக்கு உளவியல் சிகிச்சையளிக்கும் அமர்வுகளின்போது

நான் தெளிவாகக் கண்டிருக்கிறேன். அத்தகைய விரக்தியுற்ற, மனஅழுத்த நோயாளர்களுள் பலர் மேற்சொன்னவாறு சமநிலையற்ற புரிதலின் அடிப்படையில் வளர்க்கப்பட்டவர்கள்தான். அவர்களிலும் சிலர் பெரும் பாவம் ஒன்றை இழைத்துவிட்டு இறைவனது கருணயிலும் மன்னிப்பிலும் நிராசையடைந்தவர்கள். தெய்வத் தண்டனை எந்த வேளையிலும் எந்த இடத்திலும் தம்மீது இறங்க லாம் என எதிர்பார்த்து ஒருவகை பதற்றத்திலும் கலக்கத்திலும் வாழ்பவர்களாக அவர்கள் இருந்தனர். சிலர் அவநம்பிக்கையால் ஆக்கிரமிக்கப்பட்டு நிரந்தர சோகத்திலும் அவநம்பிக்கையிலும் உழன்றுகொண்டிருந்தனர். மிக அசிங்கமான வகையில் தம்மைத் தாமே குற்றம்சாட்டிக்கொண்ட அவர்கள், அண்மையிலும் நீண்ட காலத்திற்கு முன்பும் செய்த பாவங்கள் குறித்த குற்றவுணர்ச்சியில் மூழ்கியிருந்தனர். தமது தாழ்வு மனப்பான்மையின் காரணமாக, அவை நிகழ்வதற்கான முழுக் காரணமும் தாமே என அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு என்னிடம் அனுப்பப்பட்ட பல நோயாளிகள் ஏற்கனவே கவலைக்கும் மன அழுத்தத்துக்கும் எதிராக மருந்துகள் உட்கொண்டு தோல்வி கண்டவர்கள். மத நம்பிக்கையற்ற உளவியல் சிகிச்சைகூட இவர்களது உளவியல் நிலையைச் சீர்படுத்துவதில் அல்லது தம்மையும் தமது சூழலையும் பற்றிய அவர்களது பார்வையை மாற்றியமைப்பதில் தோல்வி கண்டிருந்தது. அவர்களது பல நோய்க்குறிகளுக்குப் பின்னால் இறைவனது கருணை, அன்பு, பாவ மன்னிப்பு என்பவை பற்றிய பிறழ்வான உணர்ச்சிக் கருத்தாக்கங்கள் இருந்திருப்பது எனக்குத் தெளிவாகியது. எனவே நான் எனது அறிவு-நடத்தை-மனிதாபிமானம்சார் சிகிச்சையை ஆன்மீக, உணர்வார்ந்த பரிமாணங்களின்பால் திசைப்படுத்தினேன். அப்போது பலரது முகங்களில் நிராசை என்னும் இருள் விலகி நம்பிக்கைக் கீற்றுகள் தோன்றத் தொடங்கின. அதன் பிறகு, உளவியல் சிகிச்சைக்கு அல்லது முன்னர் தோல்வி கண்ட பல்வேறு சிகிச்சை முறைகளுக்குக்கூட நல்ல முறையில் ஒத்துழைக்கத் தொடங்கினர்.

அனேகமாக இந்நிலை குறுகிய காலத்திலேயே சாத்தியமாகிவிட்டது. அவ்வாறான நிலைகளில் சிலருக்கு இறைவன் பற்றிய அன்பாலும் பணிவாலும் உணர்ச்சிக்கண்ணீர் மடைதிறந்தமை இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. வாழ்வில் முதல் தடவையாக அவர்கள் பெற்ற உணர்வு அது. இறைவன் எவ்வளவு பணமும் புகழும் தந்திருந்தபோதும் மன ஆரோக்கியமின்றிக் கழிந்த வாழ்வாக அவர்களது முன்னைய வாழ்வு அமைந்திருந்தது.

## உணர்ச்சிப் பெருக்குக்கும் ஆத்மீக வேட்கைக்கும் மத்தியிலான தொடர்பு

*இந்த அத்தியாயத்தின் தலைப்பிலிருந்தும், இதுவரை நாம் உரையாடிய அனைத்திலிருந்தும் பெறப்படும் முடிவு யாதெனில், ஆன்மீகப் பரிமாணத்தைப் பூரணப்படுத்துவதில் உணர்ச்சிக்கென்று அடிப்படையான ஒரு பங்கு உள்ளது என்பதே. இறைவிசுவாசி ஒருவர் அல்லாஹ்வைப் பார்ப்பதுபோன்று அவனை வணங்கும் போது அவ்விசுவாசியின் உள்ளத்தை இந்த ஆன்மீகப் பரிமாணமே ஆக்கிரமித்து நிற்கிறது. இந்த உரையாடலானது உணர்ச்சிப் பெருக்குக்கும் ஆத்மாவின் தெளிநிலைக்கும் மத்தியில் உள்ள மறைமுகத் தொடர்பு என்ன என்ற கேள்விக்கு என்னை அழைத்துச் செல்கிறது. இக்கேள்விக்கு நானே எனக்குச் சொல்லிக்கொள்ளும் பதில் இதுதான்:*

*இவ்விவகாரம் மிகப் பெரும்பாலான நேரங்களில் கொந்தளிக்கும் உணர்ச்சியுடன்தான் ஆரம்பிக்கிறது. அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதுமான நேசம் அல்லது அவன் மீதான அச்சமாக, அவனது உடனிருப்பு பற்றிய உணர்ச்சியாக அது அமைந்திருக்க முடியும். இந்த உணர்ச்சியானது இறைவிசுவாசி ஒருவரின் உளவியல், உடலியல் நிலையை மாற்றுகிறது. இதனுடன் இனம்புரியாத ஓர் உயர்ந்த ஆத்மீகப் பரவச உணர்வு இணைந்துகொள்கிறது. இறுதியில் அந்த உணர்ச்சிப்பெருக்கும் ஆத்மீகத் தெளிநிலையும் கலந்து ஒன்றையொன்று பலப்படுத்துகின்றன.*

*மட்டுமன்றி, தாக்கம் நிறைந்த ஒரு கவிதையைச் செவிமடுத்தல் அல்லது அழகிய குரலிலான ஒரு பாடலைக் கேட்டல் போன்ற — மதப் பரிமாணத்துடன் நேரடித் தொடர்பற்ற — இயல்பான உணர்ச்சிக் கிளரல்கூட இறைவிசுவாசி ஒருவரின் மனத்தை முன்னர் அவருக்குப் பழக்கப்பட்ட ஆத்மீக உணர்ச்சிப் பிணைப்பை நோக்கி நகர்த்த முடியும். கவிதையைச் செவிமடுக்கும்போது ஏற்படும் இந்த உணர்ச்சிநிலை இறைவனது நிலையற்ற உலகில் உள்ள சிறியவை, பெரியவை அனைத்தின் மீதும் அவன் கொண்டிருக்கும் மகத்துவத்தையும் ஆதிக்கத்தையும் பற்றிய நினைவுகூரலாக மாற்றமடையும். இந்த வகையில்தான், இறைப் பணிவை வரவழைப்பதில் உணர்ச்சியின் முக்கியத்துவம் பற்றிக் கூறும்போது, 'திருக்குர்ஆனை ஓதுபவருக்கு அழுகை வராவிட்டால், செயற்கையாக அழட்டும்' என்று கூறப்பட்டது. ஏனெனில்,*

அந்த முயற்சி உண்மையான அழுகையாக மாற்றமடையக்கூடும். பின்வரும் நபிமொழியும் இக்கருத்தைப் பலப்படுத்துகிறது: 'நிச்சயமாக அறிவு என்பது முயன்று பெறும் அறிவாகும்; பொறுமை என்பது முயன்று பொறுமை காப்பதால் வருவதாகும்.'[43]

ஆனால் சிலபோது எதிர்பாராத ஓர் ஆத்மீக நிலையினூடாகக்கூட இது ஆரம்பிக்க முடியும். அந்த வகையில், திருக்குர்ஆனின் சில வசனங்களைச் செவிமடுக்கும்போது அல்லது ஓர் சன்மார்க்க உரையைக் கேட்கும்போது இறைவிசுவாசி ஒருவரின் உணர்வு தூண்டப்பட்டு, உள்ளம் மென்மையடைந்து, இறைவனுக்கு முன்னால் மனமுருகிப் பணியும் நிலை ஏற்பட முடியும். அதன் விளைவாக இறைவன் மீதான அன்பு அவரிடம் கிளரப்பட்டு, அந்த அன்புணர்வு அவரது ஆத்மீக நிலையை இன்னும் பலப் படுத்தலாம். ஆக, இந்நிலையில் இறைப்பணிவே உணர்வுக் கிளரலுக்கு முந்தியதாக இருக்கிறது. அந்த உணர்வு மேலும் கிளரப்படும்போது இறைப்பணிவு இன்னும் அதிகரிக்கிறது. இப்பரஸ்பர இடைவினையையே *அல்இஸ்றா* என்ற அத்தியாயத்தின் 109வது வசனம் சுட்டுகிறது போலும்:

> மேலும், அவர்கள் அழுதவர்களாக முகங்குப்புற விழுவார்கள். அவர்களது உள்ளச்சத்தை அது இன்னும் அதிகப்படுத்தும். (17:109)

உணர்வுக்கும் ஆத்மீகப் பரிமாணத்துக்கும் மத்தியிலான இவ் வினையாற்றல் உச்சத்தை அடையும்போது, இறையச்சம் கொள் பவரின் உள்ளமும் அறிவும் உடலுறுப்புகளும் அதிர்வுக்கு உட்படு கின்றன. அதனைத் தொடர்ந்து பணிவும் அமைதியும் மௌனமான மன்றாட்டமும் கொண்ட நிலை அவரிடம் ஏற்படுகிறது.இறைவனின் மகத்துவத்தையும் சக்தியையும் பேராதிக்கத்தையும் கண்டுகொண்ட பிறகு ஏற்படும் இந்தப் பணிவும் தாழ்மையும் உஷ்ணம் நிறைந்த ஒரு நாளின் பின்னர் மறைந்த சூரியனின் நிலை போன்றதாகும்:

> அல்லாஹ் அழகான விசயங்களையே வேதமாக இறக்கியுள் ளான். அதன் வசனங்கள் ஒன்றுக்கொன்று ஒத்தவையாகவும், கருத்துகளைப் பல வகைகளில் திரும்பத்திரும்ப எடுத்துக் கூறுபவையாகவும் உள்ளன. அதனைச் செவியுற்றதும் தங்கள் இறைவனுக்கு அஞ்சிப் பணிபவர்களது மேனி சிலிர்த்துவிடும். பின்னர் அவர்களது மேனியும் உள்ளமும் இறைத் தியானத்தை நோக்கி மிருதுவாகின்றன. இதுவே

---

43. அத்தபறானீ, *'அல்முஃஜமுல் அவ்சத்'*.

> இறைவனது நேர்வழியாகும். தான் நாடியவர்களுக்கு அதன் மூலமாக அவன் வழிகாட்டுகிறான். அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டுவிடுகிறானோ அவரை நேர்வழியில் செலுத்துபவர் எவருமிலர். (39:23)

இத்தகைய உள-ஆத்மீக-உடல் அமைதியைத் தொடர்ந்து இனம் புரியாத ஓர் மகிழ்ச்சிப் பரவசநிலை தோன்றுகிறது. அதனை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இவ்வாத்மீகப் பரவசம் கூர்மையடைந்து மேனி மிருதுவடையும் நிலையை மிகச் சிறந்த முறையில் விவரிப்பவராக உஸ்தாது முஹம்மது அல்கஸ்ஸாலியைக் காண முடிகிறது. *'அல்ஜானிபுல் ஆதிஃபீ ஃபில் இஸ்லாம் (இஸ்லாத்தில் உணர்வுப் பரிமாணம்)'* என்ற தனது நூலில் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> சில மனிதர்களது அந்தரங்கம் களங்கமற்றிருக்கும்; அகம் சுத்தியடைந்திருக்கும். அல்லாஹ்வுடனான அவர்களது தொடர்பு திடமாக இருக்கும். அவனது அன்பு அவர்களது உள்ளங்களை ஆழத் தொட்டிருக்கும். உயர்ந்த சன்னி தானத்திலிருந்து வரும் சூட்சுமம் அவர்களைத் தழுவும்போது நல்லுணர்ச்சிகள் கொழுந்துவிட்டு எரியும். செந்தரையின் மீது காற்று வீசுவதுபோன்ற நிலை அது. அப்போது அவர்களைக் கடந்துசெல்லும் கணங்கள் சாதாரண மனித வாழ்வுக் கணங்கள் அல்ல. அந்தக் கணங்களில் அவர்கள் தம்மையே மறந்துவிடுவார்கள். தங்கள் ரட்சகனுடனான ஆழ்நிலையில் லயித்திருப்பார்கள். அந்த நிலை நீளவும் முடியும்; குறுகவும் முடியும். இதில் என்ன அதிசயம்?! விசுவாசம் என்பது சிலபோது ஆழிப் பேரலைகள்போன்று உயரக்கூடியது. பிறகு — எதுவுமே நடக்காததுபோன்று — பணிந்து நுரைத்து அமைதியாகிவிடவும் கூடியது.

உணர்ச்சிவயப்பாட்டு நிலையானது இறை நினைவும் ஆத்மீகக் கிளர்ச்சியும் ஒரே உள-ஆத்மீகப் பாத்திரத்தில் இரண்டறக் கலந்த நிலையிலும் ஏற்பட முடியும். உதாரணமாக, அழகிய குரல்வளம் கொண்ட ஒருவர் திருக்குர்ஆன் வசனங்களை இராகத்துடன் ஓது வதைக் கேட்கும் ஒரு முஸ்லிம் அதனால் ஆனந்தக் கிளர்ச்சியடைய முடியும். ஏனெனில், அழகிய குரலும் இராகத்துடன்கூடிய அழகிய ஓதலும் உணர்வுக் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியவை; திருக்குர் ஆனிய வசனங்களின் அர்த்தங்கள் உள்ளத்தை அசைக்கக்கூடியவை. இவ்விரண்டும் சேர்ந்த அருட்கலவையானது ஒரு மனிதனைப் பொடுபோக்கு என்ற நிலையிலிருந்து மிக உயர்ந்த இறையச்ச

நிலைக்குக் கொண்டுசென்றுவிட முடியும். நபி தாவூது ﷺ அவர்களுக்கு அல்லாஹ் வசீகரிக்கும் குரல்வளத்தை அருளியிருந்தான். அவர் இறைவனைத் துதிசெய்யும்போது அவருடன் இணைந்து மலைகளும் பறவைகளும்கூட ஆழ்ந்த இறையச்சத்துடன் துதிசெய்ததாகத் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது:

> மேலும், நாம் தாவூதுக்கு மலைகளையும் பறவைகளையும் வசப்படுத்திக் கொடுத்தோம். அவை அவருடன் தஸ்பீஹ் செய்துகொண்டிருந்தன. இவற்றையெல்லாம் நாமே செய்தோம். (21:79)

அரிதான நிலைகளில், சில உணர்ச்சிகளும் தாய்நாட்டின் மீதான அல்லது பிறந்த கிராமத்தின் மீதான வேட்கையும்கூட இரண்டறக் கலந்து நிற்பதுண்டு. தனது ஆயுளின் இனிமையான வயதுகளில் மத-ஆத்மீக உணர்வுகளைப் பெற்று வாழ்ந்த நிலம்மீது ஒருவருக்கு ஏற்படும் வேட்கை இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகும். அதிலும் மிக இளம் பிராயம்முதல் குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் அவர் தனது சமயக் கருத்தாக்கங்களைப் பெற்றிருந்தால், அக்கிராம வாழ்க்கை மீதான அவரது அவாவும் ஆத்மீக உணர்வும் இரண்டறக் கலந்திருக்கும்.

இதனை நான் கற்பனையாகச் சொல்லவில்லை; உண்மையான ஓர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே சொல்கிறேன்:

> என்னுடைய நண்பர் ஒருவர் தனக்குத் தனது கிராமம் பற்றியும் அதில் உள்ளவர்கள் பற்றியும் ஏக்கம் தோன்றும் போதெல்லாம் தன்னிடம் சில ஆத்மீக உணர்வுகள் தோன்றி உள்ளத்தை மென்மைப்படுத்துவதாகவும், இறையுணர்வுக்கும் அமைதிக்கும் இட்டுச்செல்வதாகவும் என்னிடம் கூறியிருக்கிறார். மட்டுமன்றி, அவர் தொழுகையில் ஆழ்ந்து விடும்போதெல்லாம் தனது சிறுபிராயக் கிராமத்து நினைவுகள் தோன்றுவதாகவும் கூறினார். இதற்காக அவர் தன்னைத்தானே கடிந்துகொண்டு இப்படியும் கூறுவார்: 'கற்பனையால் உன் மனத்தை மென்மைப்படுத்திக்கொள்ள விரும்பினால், நீ செய்த ஹஜ்ஜையும் கஅபாவையும் நபி ﷺ அடக்கப்பட்டிருக்கும் மதீனாவையும் அல்லவா நினைத்துப்பார்க்க வேண்டும்! அதை விடுத்து, சூடானின் வரண்ட பாலைவனத்தில் எங்கேயோ ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்த குழந்தைப்பருவ நினைவுகளையா கற்பனை செய்ய வேண்டும்?!'

ஆனால், குழந்தைப்பருவ உணர்ச்சிகளுடன் தொடர்புடைய இத்தகைய கற்பனைகள் எப்போதும் பலமாகவும் உயிர்ப்போடும் இருக்கக்கூடியவை. அவற்றை ஒத்த உணர்ச்சி அனுபவங்கள் தோன்றும்போதெல்லாம் அவை தூண்டப்படுகின்றன.

*கண்ணியமிக்க மூத்த சகோதரர் ஒருவரை இங்கு நினைவு படுத்திக்கொள்கிறேன். அல்லாஹ் அவருக்குக் கருணை புரிவானாக! அவர் தனது ஆரம்பக் குழந்தைப் பருவத்தை சூடானின் ஓர் வடபுறக் கிராமத்தில் நைல் நதிக்கரையில் கழித்திருந்தார். அந்தக் கிராமத்தில் பெரியதொரு காய்கறித் தோட்டமும் காணப்பட்டது. அவர் ஐந்து வயதில் சமவயதுக் குழந்தைகளுடன் பாரம்பரிய சமயப் பாடசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கிருந்த ஷைஃகு பத்ருப் போர் பற்றி உருக்கமாக அவர்களுக்கு எடுத்துக்கூறினார். அப்போது அந்தப் போர் தனது கிராமத்தில் உள்ள காய்கறித் தோட்டத்தில் நடந்ததாகவே நம்முடைய சகோதரர் கற்பனை செய்து கொண்டார். அந்தக் கற்பனை நபி ﷺ அவர்கள் மீதும் நபித்தோழர்கள் மீதுமான அவரது அன்புடன் ஒன்றாகப் பதிந்துவிட்டது.*

*பிற்காலத்தில் அவர் சவூதி அறபியாவுக்குச் சென்று, பத்ரு யுத்தம் நிகழ்ந்த பாலைவனப் பிரதேசத்தைக் கண்களால் நேரடியாகப் பார்த்த பிறகும்கூட அவரது முன்னைய கற்பனை அழியவில்லை. அவரே சொன்னதுபோல், அவர் இஸ்லாமிய உணர்வில் ஆழ்ந்துவிடும்போதெல்லாம் பத்ரு யுத்தம் கிராமத் தோட்டத்தில் இடம்பெற்றதைப் போன்ற காட்சிதான் அவருக்கு நினைவுவரும்.*

இத்தகைய தொடர்புகள் பலருக்கு மறைமுகமாகவோ நனவிலி மனத்திலோ ஏற்பட முடியும். குறிப்பிட்ட ஒரு இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரது அன்பும் மன அமைதியும் சமய-ஆத்மீக உணர்வுடன் இணையும்போது இந்நிலை தோன்றலாம். இறைவன் அளித்த அருட்கொடைகளுக்காக அவனுக்குப் பணியும் வகையில் இத்தகைய உணர்வுகளைத் தனக்குள் கிளர்த்துபவரே விவேகமானவர். இறைவனைச் சரியாக நினைவுகூர்வதைத் தடுக்கும் ஊசலாட்டங்களை ஷைத்தான் மனத்தில் போட்டுவிடாமலும் அவர் இவ்வுணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இங்கு நாம் குறிப்பிடுகின்ற இறையச்சம் அல்லது இறைப்பணிவு (அல்ஃகுஷூஉ) என்ற பிரயோகம் தனித்துவமான ஓர் இஸ்லாமியக் கலைச்சொல்லாகும். அது வானுலகம் சார்ந்த இஸ்லாமிய உணர்வு, அகிலங்களின் இரட்சகனுக்குப் பணிதல் ஆகியவை கலந்த பல உணர்ச்சிகளை ஒருசேரக் குறிக்கும் பிரயோகம். இதனால்தான் அதற்கு நிகரான ஒரு மொழிபெயர்ப்பை மற்றொரு மொழியில் நம்மால் கண்டுகொள்ள முடிவதில்லை.

'அல்ஃகுஷூஉ' என்ற சொல்லுக்கான மொழிபெயர்ப்பை நீங்கள் ஐரோப்பிய அகராதிகளில் தேடிப்பார்த்தால் அது Humbleness and Submission (பணிவும் அடிபணிதலும்) எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் பணிவு, அடிபணிதல் என்பதெல்லாம் அல்ஃகுஷூஉ என்பதன் உட்கூறுகளுள் சிலவே. குறித்த சொல்லுக்குரிய முழுநிறைவான வரைவிலக்கணமாக அவற்றைக் கொள்ள முடியாது.ஏனெனில், ஒருவர் தன்னுடைய தலைவரை வெறுத்த நிலையிலும் அவருக்கு அடங்கிப் பணிய முடியும். பின்னர் சூழ்நிலைகள் அவருக்குச் சாதகமாக மாற்றமடையும்போது தலைகீழாக மாறி தலைவருக்கு எதிராகச் செயல்படவும் முடியும்.

ஆனால், அல்லாஹ்வுக்கு முன்னால் பணியும் அடியானிடம் பணிவு, பயம், அச்சம் என்பவை மட்டுமன்றி, ஆழமான இறை நேசம், அவன்பாலான வேட்கை, அவனுக்குரிய கடமைகளில் குறைவிட்டதான குற்றவுணர்வு முதலிய அனைத்தும் கலந்திருக்கும். இந்த அனைத்து உணர்வுகளும் ஓர் ஆத்மீக இன்பத்துடன் கலந்திருக்கும். பல்வேறுபட்ட இந்த உணர்ச்சிகளின் கலவைமீது ஓர் ஆத்மீக சக்தி ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும். இத்தகைய ஒரு நிலையை நுணுக்கமாக விவரிக்கும் சொற்பிரயோகம் அறபுமொழியில்கூடக் கிடையாது. ஏனெனில் அது 'அல்லாஹ்வின் விவகாரங்களுள் ஒன்று'; அல்லாஹ்வுக்கு அடங்கிப் பணியும் அடியானின் உள-உடல் நிலைகளை மாற்றியமைக்கும் விவகாரமும்கூட.

அத்தகைய நிலையில் உள்ள அடியான் சிலபோது தேம்பியழ முடியும். அவனது கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வடிய முடியும். அவனது உளவியல்நிலையும் உணர்வெழுச்சியும் உடல்நிலையும்கூட மாற்றமடைய முடியும். அந்நிலையில் அவனைக் காணும் மேற்கத்திய உளவியலாளர் ஒருவர் அவனுக்குக் கடுமையான மன அழுத்தம் ஏற்பட்டுள்ளதாகவே கூறுவார். மன அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகளையும் சிபாரிசு செய்வார். அவன் தற்கொலை செய்துகொள்ள முற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்றுகூடப் பரிந்துரைப்பார். ஆனால் இணையற்ற மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்கியிருப்பதால்தான் அவன் அவ்வாறு நடந்துகொள்கிறான் என்பதைப் பாவம் அவரால் புரிந்துகொள்ள முடிவதில்லை!

ஆழ்ந்த இறை நினைவும் சிந்தனையும் வாய்க்கப்பெற்ற சில மகான்கள் அனுபவிக்கக்கூடிய ஆத்மீகப் பரவசநிலை குறித்து ஷைஃகுல் இஸ்லாம் அஹ்மது இப்னு தைமிய்யா கூறுவதைக் கேளுங்கள். அத்தகைய மகான்களுள் ஒருவர் இப்படிக் கூறியதாக அவர் குறிப்பிடுகிறார்:

> ... எனக்கு ஒரு நிலை ஏற்பட்டது. சுவனவாசிகள் அதுபோன்ற ஒரு நிலையில்தான் சுவனத்தில் இருப்பார்களாயின் நிச்சயமாக அது நன்னிலைதான்.[44]

மற்றொருவர் சொல்கிறார்:

> உள்ளம் களிநடனம் புரியும் சில பொழுதுகள் அதனைக் கடந்துபோகவே செய்கின்றன.

இன்னொருவர் சொல்கிறார்:

> கேளிக்கையில் திளைத்திருப்பவர்கள் காணும் இன்பத்தைவிட இரவுவணக்கத்தில் திளைத்திருப்பவர்கள் அதிக இன்பம் காண்கிறார்கள்.[45]

மற்றொருவர் சொல்கிறார்:

> நாமிருக்கும் இன்பநிலையை அரசர்கள் அறிவார்களாயின் எங்களோடு வாளெடுத்துப் போர் புரிந்திருப்பர்.[46]

அன்புணர்வு பற்றி நாம் குறிப்பிட்டது ஏனைய உணர்வுகளுக்கும் உணர்ச்சிவயப்பாடுகளுக்கும்கூடப் பொருந்தும். அந்த வகையில், அல்லாஹ்வின் வரையறைகளை மீறுவோர்மீது கோபம் கொண்டு அவர்களைத் தடுக்கும் மனநிலை ஒருவரிடம் தோன்றவில்லையெனில், அவரிடமிருந்து இறைவிசுவாசம் ஒரேயடியாக மறைந்துவிட அது காரணமாகிவிட முடியும். இறைத்தூதர் ﷺ கூறியதாக இப்னு மஸ்ஊது ؓ அறிவிக்கும் பின்வரும் நபிமொழி முஸ்லிம் கிரந்தத்தில் பதியப்பட்டுள்ளது:

---

44. இப்னு தைமிய்யா, *'மஜ்மூஉல் ஃபதாவா'*, தாருல் வஃபா. பாகம் 10, பக்.647.
45. மாலிக் பத்ரீ, *'அத்தஃபக்குர் மினல் முஷாஹதா இலஷ்ஷுஹூது'*, அல்மஃஹத் அல்ஆலமி லில் ஃபிக்ருல் இஸ்லாமீ, 1995.
46. இப்னு தைமிய்யா, *'மஜ்மூஉல் ஃபதாவா'*, தாருல் வஃபா. பாகம் 10, பக்.647.

அல்லாஹ் எனக்கு முன்னர் எந்த ஒரு சமுதாயத்திற்கு நபி ஒருவரை அனுப்பிய வேளையிலும் அவருக்கென்று அச்சமுதாயத்தில் தோழர்களும் சகாக்களும் இருந்தனர். அவரது வழிமுறையை அவர்கள் எடுத்து நடந்தனர்; அவரது கட்டளையைப் பின்பற்றினர். ஆனால், அவர்களைத் தொடர்ந்து சில சந்ததிகள் தோன்றினர். அவர்கள் செய்யாததைப் பேசினர்; ஏவப்படாததைச் செய்தனர். அத்தகையோருடன் எவர் தன் கரத்தினால் போராடினாரோ அவரே ‘முஃமின்’. அவர்களுடன் எவர் தன் நாவினால் போராடினாரோ அவரும் ‘முஃமின்’தான். அவர்களுடன் எவர் தன் மனத்தால் போராடினாரோ அவரும் ‘முஃமின்’தான். அதற்கப்பால் கடுகளவு இறைவிசுவாசமும் கிடையாது.

அதாவது, அல்லாஹ்வுக்காகக் கோபமடைதல் என்ற உணர்ச்சியும், தீமையை உள்ளத்தால் வெறுக்கும் உணர்ச்சியும் இல்லாதுபோனால் இறை நம்பிக்கையும் இல்லாதுபோய்விடும் என்பதே இதன் பொருள். இறைத்தூதர் ﷺ கூறியதாக ஜாபிர் ؓ வழியாகத் தப்ரானீ பதிவுசெய்த பின்வரும் நபிமொழியும் இதனை உறுதிப்படுத்துகிறது:

குறிப்பிட்ட ஒரு நகரத்தை அதில் வாழ்பவர்களுடன் சேர்த்து தலைகீழாகப் புரட்டிவிடுமாறு அல்லாஹ் ஒரு வானவருக்குக் கட்டளையிட்டான். அதற்கு அவ்வானவர், ‘அவ்வூரில் உனக்கு இமைப்பொழுதும் மாறுசெய்யாத இன்ன அடியார் இருக்கிறாரே’ என்றார். அதற்கு அல்லாஹ் கூறினான்: ‘அவரையும் அவர்களுடன் சேர்த்துப் புரட்டிவிடு; ஏனெனில், அவரது முகம் ஒருபோதும் எனக்காக நிறம்மாறியதில்லை.’

இறை நம்பிக்கையை முழுமைப்படுத்துவதில் உணர்ச்சியின் முக்கியத்துவம் பற்றிய உரையாடலை இத்துடன் போதுமாக்கிக் கொள்கிறோம். நமது அறபு-இஸ்லாமிய யதார்த்தத்தில் அன்பு என்ற உணர்ச்சி பெறும் முக்கியத்துவம் குறித்த கவனத்துடனேயே பயத்தையும் கோபத்தையும் பற்றி மாத்திரம் இங்கு உரையாடினோம். ஆயினும், இறைவன் மனிதனுக்களித்த வெறுப்பு, அருவருப்பு, உத்வேகம், வேட்கை, சந்தோஷம் முதலிய அனைத்து உணர்வெழுச்சிகளும் அவனது அறிவு-விசுவாசப் பகுதிக்கும், அதனை ஒட்டிய அவயவச் செயல்பாடுகளுக்கும் ‘கதகதப்பு’ வழங்குவதில் வினைத்திறன்மிக்க பாத்திரத்தை வகிக்கின்றன என்பது மனம் கொள்ளத்தக்கது.

# அத்தியாயம் நான்கு

## மனிதர்கள் என்ற வகையிலோ, பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் என்ற வகையிலோ நபிமார்கள் காட்டிய உணர்ச்சித் துலங்கல்கள் பற்றிய உளவியல் அவதானங்கள்

நமது அன்றாட வாழ்வில் நிகழ்கின்ற உணர்ச்சித் தூண்டல்களை அவதானித்ததன் மூலமாக அவற்றை நான்காக வகைப்படுத்தலாம் எனக் கருதினேன். சில தூண்டல்களுக்கு நாம் மிக விரைவான 'அனிச்சைத் துலங்கல்களை' (Involuntary responses) வெளிப்படுத்துகிறோம். ஏனெனில், அவை நாம் மனிதர்களாகப் படைக்கப்பட்டதுமுதல் நமது நரம்புத் தொகுதியில் இயல்பாகவே அமைந்திருப்பவை. கொடிய விலங்கை அல்லது பயங்கரச் சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது நமக்கு ஏற்படும் நிலையை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். பலமான சத்தம் அல்லது எதிர்பாராத சங்கடநிலை போன்ற திடீர்த் தூண்டல்களையும் இவற்றுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவை எந்தப் பிரக்ஞையுமின்றி விரைவாக எதிர்வினையாற்றும் நிர்ப்பந்தத்தை நமக்கு ஏற்படுத்துகின்றன. இந்த எதிர்வினைகள் — நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல் — 'அமிக்டலா' என்னும் வாதுமை வடிவ மூளைப் பகுதியிலிருந்து வருவதாக நரம்பியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இவ்வனைத்து 'அனிச்சைத் துலங்கல்களும்' நமது நரம்புத் தொகுதியில் இயல்பாகவே அமைக்கப்பட்டுள்ள எல்லா விதமான எதிர்வினைகளையும் (Reflexes) நமக்கு நினைவூட்டுகின்றன. கடுமையான உஷ்ணம் உள்ள ஒரு மேற்பரப்பிலிருந்து விரைவாகக் கையை இழுத்துக்கொள்ளல், எதிர்பாராத வகையில் பலமான காற்றடிக்கும்போது அல்லது கடுமையான வெளிச்சத்தின்போது

கண்களை மூடிக்கொள்ளல் என்பன இத்தகைய அனிச்சை எதிர் வினைகளுக்கான வேறுசில உதாரணங்களாகும்.

இதுபோன்ற நிலைகளில் ஏனைய மனிதர்களைப் போன்றுதான் நபிமார்களும் எதிர்வினையாற்றுவர். ஸாத் என்னும் அத்தியாயத்தில் தாவூது ﵇ அவர்களுக்கு ஏற்பட்ட பீதி பற்றிக் கூறப்பட்டுள்ளமை இதற்கான ஓர் உதாரணமாகும். நபி தாவூது ﵇ இறை வணக்கத் துக்காக அமைத்திருந்த 'மிஹ்றாபு' என்ற இடத்தின் எல்லையைத் தாண்டி இரு வழக்காளிகள் வந்தபோது அவர் கடும் பயத்திற்கு உள்ளானதாக அந்த அத்தியாயம் குறிப்பிடுகிறது. ஜிப்ரீல் ﵇ அவர்களை அவர்களது உண்மைத் தோற்றத்தில் கண்டபோது நபி முஹம்மது ﷺ அவர்களுக்கு ஏற்பட்ட பீதியும் இவ்வாறானதே. நபி மூசாவின் கைத்தடி பாம்புபோன்று நெளிந்து துடித்ததைக் கண்டபோது அவருக்கு ஏற்பட்ட பயத்திலும் இதனையே காண் கிறோம். ஒன்றைத் திடீரென்று எதிர்கொள்ளும்போது அல்லது பயமூட்டக்கூடிய விசயங்களைக் காணும்போது ஏற்படும் பயம் இதுவாகும்.

கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகள், எதிர்பாராத அல்லது கடுமையான வலிகளை ஏற்படுத்தும் உணர்ச்சிகள் என்பவற்றின் போதான 'அனிச்சை எதிர்வினைகளும்' இவ்வாறானவைதான். இந்த உணர்ச்சிவயப்பாடுகளின் தாக்கங்களும் அவற்றுக்கான எதிர்வினைகளும் பிற மனிதர்களைப் போன்றுதான் நபிமார்களிட மும் காணப்படும். எனினும், நபிமார்களிடம் அவை ஒப்பீட்டளவில் குறைவாகவும், விரைவில் அமைதிநிலைக்குத் திரும்புவனவாகவும் காணப்படும்.

உதாரணமாக, உஹுதுப் போரின் பிறகு இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு ஏற்பட்ட கோபநிலையைக் கவனித்துப்பாருங்கள். அன்னாருடைய அன்புக்குரிய சிறிய தந்தையும் பால்குடி சகோதரருமாகிய ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிபு கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சியை அன்னார் கண்டு திகைக்கிறார்கள். அவரது வயிறு குத்திக் கிழிக்கப்பட்டு ஈரல் வெளியே எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தமக்கேற்பட்ட கோபத்தை நபிகளார் தாக்கம்மிக்க வகையில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்:

> இதைவிடக் கோபமான நிலை என்றுமே எனக்கு ஏற்பட்ட தில்லை.

தொடர்ந்து அன்னார் இப்படிக் கூறுகிறார்கள்:

அல்லாஹ் உங்கள்மீது கருணை புரியட்டும் சிறிய தந்தையே! இனச் சொந்தங்களைப் பேணி நடப்பவராக நீங்கள் இருந் தீர்கள். நன்மைகளை அதிகம் செய்பவராகவும் இருந்தீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவர்களுக்கு எதிராக அவன் எனக்கு வெற்றியைத் தந்தால் அவர்களில் எழுபது பேரை இப்படிச் சித்திரவதை செய்வேன்.[47]

நபிகளாரும் மனிதரே என்ற வகையில் அந்த மனித இயல்பிலிருந்து ஆத்திரம் நிறைந்த இந்த உடனடி எதிர்வினை பிறந்திருக்கக்கூடும். ஆயினும், இறைவன் அன்னாரை அழகிய முறையில் நெறிப் படுத்தியதால், அந்த மனித இயல்பிலிருந்து நபித்துவத்தின் உயர் நிலைக்கு அன்னார் விரைவாகவே மீண்டுவிட்டார்கள். நபிகளார் அந்த இடத்திலிருந்து அகலாமல் நின்றுகொண்டிருக்கும்போதே திருக்குர்ஆனின் கட்டளை இறங்குகிறது:

நீங்கள் தண்டித்தால் நீங்கள் தண்டிக்கப்பட்ட அளவுக்கே தண்டியுங்கள். நீங்கள் பொறுமை காப்பீர்களாயின், பொறுமை யாளர்களுக்கு அதுவே நன்மையானதாகும். (16:126)

நபிகளார் ﷺ அந்தக் கட்டளைக்குப் பணிகிறார்கள். இரண்டிலும் மிகக் கடினமான பொறுமையைத் தேர்ந்தெடுத்து, 'இல்லை ... நாம் பொறுமை காப்போம்' என்கிறார்கள். இறந்த உடலைச் சேதப்படுத்துவதையும் தடைசெய்கிறார்கள்.

இதேபோன்ற மற்றொரு உதாரணத்தையும் உஹுதுப் போரின்போது பார்க்கிறோம். இறைத்தூதர் ﷺ அவர்களது மனித இயல்புக்கும், தூதர்களின் தலைவர் என்ற வகையில் அன்னாரது உணர்வுநிலைக்கும் மத்தியிலான வேறுபாட்டைத் தெளிவாக வேறுபடுத்திக்காட்டும் நிகழ்வு அது. அந்தப் போரில்தான் நபிகளார் ﷺ அவர்கள் காயமுற்றார்கள். அவர்களது கடைவாய்ப் பல் உடைக்கப்பட்டது. தலைக்கவசத்தின் இரண்டு வளையங்கள் அன்னாரது முகத்தில் பதிந்தன. நிராகரிப்பாளர்கள் அன்னாரைக் கற்களால் அடித்து வீழ்த்தினார்கள். இந்நிலையில், அன்னார் கோபத்துடன் இவ்வாறு கூறியதாகத் தப்ரானீ பதிவுசெய்கிறார்:

தங்களுடைய நபியின் முகத்தைக் காயப்படுத்திய கூட்டத்தின் மீது அல்லாஹ்வின் கோபம் கடுமையாக இறங்கட்டுமாக!

ஆனாலும் சிறிது நேரம் கழிந்த பின் அன்னார் இப்படிப் பிரார்த்தித் தார்கள்:

---

47. அத்தபறானீ, 'அல்முஃஜமுல் அவ்சத்'.

> இறைவா, என் சமூகத்தினரை மன்னித்துவிடுவாயாக; அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர்.[48]

இங்கு அன்னாரது முந்திய எதிர்வினை மனித உணர்ச்சியாகவும், பிந்திய எதிர்வினை கண்ணியமான நபித்துவ உணர்வாகவும் அமைந்து முன்னதன் தாக்கத்தை வீரியமிழக்கச் செய்துவிடுகிறது.

கடுமையான வேதனையின்போது ஏற்படும் 'அனிச்சை எதிர் வினை'க்கு ஓர் உதாரணமாவது:

> முஸ்லிம்கள் ஹுனைன் யுத்தத்தில் வெற்றிபெற்று அவர்களது படைகள் ஓரிடத்தில் நெரிசலடைந்திருந்த வேளையில், நபித்தோழர் ஒருவரின் பாதணி விளிம்பு நபிகளாரின் காலில் உராய்ந்து கடும் வேதனையை ஏற்படுத்திவிட்டது. காலணிக்குச் சொந்தக்காரரான அந்த நபித்தோழர் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அபூபக்கர் வாயிலான அறிவிப்பை இப்னு கஸீர் தனது 'சீறா அந்நபவிய்யா' என்ற நூலில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்:
>
> நான் இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பக்கத்தில் எனது ஒட்டகத்தின் மீது சென்றுகொண்டிருந்தேன். கால்களில் கடினமான பாதணிகளையும் அணிந்திருந்தேன். அவ்வேளை எனது ஒட்டகம் நபிகளாரின் ஒட்டகத்துக்கு நெருக்கமாகச் சென்றதால், எனது காலணியின் விளிம்பு அன்னாரின் காலில் உராய்ந்து வேதனைப்படுத்திவிட்டது. உடனே நபிகளார் சாட்டையால் என் காலில் அடித்து, 'என்னை வேதனைப்படுத்திவிட்டாய். பின்னால் போ!' என்றார்கள். நானும் போய்விட்டேன். மறுநாள் நபிகளார் என்னை வரச்சொல்லி செய்தியனுப்பினார்கள். 'நேற்று இறைத்தூதரின் காலை வேதனைப்படுத்தியதற்காகத்தான் இருக்கும்' என எண்ணிக்கொண்டு அன்னாரிடம் சென்றேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னிடம், 'நேற்று நீர் எனது காலில் வேதனை ஏற்படுத்தியதால் உமது காலில் சாட்டையால் அடித்து விட்டேன். அதற்கு நஷ்ட ஈடு வழங்கவே உம்மை அழைத் தேன்' என்றார்கள். முந்திய நாள் அன்னார் என்னை அடித்த ஒரேயொரு அடிக்குப் பரிகாரமாக எண்பது ஆடுகளையும் தந்தார்கள்.

சிலவேளை மகிழ்ச்சி என்பது எதிர்பாராததாக அல்லது தாங்க முடியாததாக அமையும்போதுகூட இதுபோன்ற 'அனிச்சை

48. அத்தபறானீ, *'அல்முஃஜமுல் அவ்சத்'.*

எதிர்வினைகளை' மனிதன் வெளிப்படுத்தலாம். உணர்ச்சிக் கட்டுடைப்புகள் அல்லது உடலசைவுகள் அல்லது பிதற்றலான பேச்சுகள் என்பனகூட இதன்போது அவனிடமிருந்து வெளிப்படலாம்.இறைத்தூதர் ﷺ அவர்கள் கண்ணியமான தோழரான ஜஅஃபர் இப்னு அபூதாலிபைப் பார்த்து பின்வருமாறு கூறியதாக அல்பறாஅ இப்னு ஆஸிபு வாயிலாக இமாம் அல்புஃகாரீ பதிவுசெய்கிறார்:

> நீர் தோற்றத்திலும் பண்பிலும் என்னைப் போலவே இருக்கிறீர்.

இதனைக் கேட்டு மகிழ்ச்சி தாளாத ஜஅஃபர் ﵁ அபிசீனியர்களைப் போன்று ஒற்றைக்காலில் துள்ள ஆரம்பித்துவிட்டார்.[49]

இங்கு மற்றொரு நபிமொழியும் என் நினைவுக்கு வருகிறது:

> ஒரு மனிதர் பாலைவனத்தின் மத்தியில் தனது ஒட்டகத்தைத் தொலைத்துவிட்டார். அவரது உணவு, தண்ணீர் முதலிய அனைத்தும் அதன் மீதுதான் இருந்தது. எங்கு தேடியும் அது கிடைக்காததால் முன்பிருந்த இடத்துக்கே திரும்பிவந்து, மரணம் வரும்வரை அங்கேயே உறங்கிவிடலாம் எனத் தீர்மானிக்கிறார். கைமீது தலை வைத்து அப்படியே உறங்கியும் போகிறார். விழித்துப் பார்த்தபோது அவரது ஒட்டகம் எல்லாப் பொருள்களோடும் தன்முன்னால் நிற்பதைப் பார்க்கிறார். சந்தோஷ மிகுதியால் அவரது நா குளறுகிறது: 'இறைவா நீ என் அடிமை ... நான் உன் இரட்சகன் ...' என்கிறார்.

இச்சம்பவத்தைக் குறிப்பிட்ட நபிகளார் தொடர்ந்து கூறிய வாசகம் இறைவன் மீதான நமது அன்பை அதிகரிக்கும் வகையிலும், நம்மிடம் சுப நோக்கை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது:

> அந்த மனிதர், காணாமல்போன தனது ஒட்டகத்தையும் கட்டுச்சாதத்தையும் மீளக் கண்டடைந்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிட, இறைவிசுவாசி ஒருவரின் பாவமன்னிப்பால் இறைவன் அதிக மகிழ்ச்சியடைகிறான்.[50]

ஆக, இவையனைத்தும் அனிச்சை எதிர்வினைகளின் அல்லது தெறிவினைகளின் முதல் பகுதிக்கான எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. இவை நமது மனிதப் படைப்பியல்புக்குரியவை. நபி

49. ஸஹீஹுல் புஃகாரீ.

50. ஸஹீஹ் முஸ்லிம்.

மார்களும் மனிதர்களாக இருந்தபோதிலும், அவர்களைச் சாதாரண மனிதர்களைவிட இறைவன் தனிச்சிறப்பாக்கி வைத்துள்ளான். இத்தகைய தூண்டல்களை வெல்லவும், அமைதிநிலைக்கு விரைவாகத் திரும்பிவிடவும்கூடிய பெரும் ஆற்றலை அவன் அவர்களுக்கு வழங்கினான்.

உதாரணமாக, ஹுனைன் யுத்த வேளையில் ஹவாஸின் கோத்திரத்துடன் போரிட மக்காவிலிருந்து முஸ்லிம் படை பன்னிரண்டாயிரம் பேருடன் புறப்பட்டது. வெற்றி நிச்சயம் என்றே முஸ்லிம்கள் நம்பியிருந்தனர். ஏனெனில், அவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான ஒரு படை முஸ்லிம்கள் தரப்பில் ஒன்றுசேர்ந்தது அதுவே முதல் தடவை. அந்தப் பெரும் படையின் காட்சி அவர்களிடம் ஒருவித மமதையை ஏற்படுத்தியிருந்தது. வெற்றி இலகுவாகக் கிட்டிவிடும் என்ற உறுதியும் திருப்தியும் அவர்களிடம் ஏற்பட்டிருந்தன. எனினும், அதிகாலைக் கருக்கலில் ஹுனைன் பள்ளத்தாக்கில் அவர்கள் இறங்கியபோது அங்கு மறைந்திருந்த ஹவாஸின்கள் ஒரேயடியாகத் தாக்குதல் தொடுத்தனர். அம்புகளை மழையாகப் பொழிந்தனர். வாள்களால் வெட்டினர்.

அந்தத் திடீர்த் தாக்குதல் தாங்க முடியாததாக இருந்தது. எனவே முஸ்லிம்கள் — தமது மனித இயல்பின் காரணமாக — பின்வாங்கி ஓடினர். இறைத்தூதர் ﷺ அவர்களுடன் சிறு எண்ணிக்கையினர் மாத்திரமே எஞ்சிநின்றனர். இறைத்தூதர் அவர்கள் நிலைத்து நின்றார்கள். மனிதர் என்ற வகையில் அந்தத் திடீர்த் தாக்குதல் ஆரம்பத்தில் அன்னார் மீதும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்தது. எனினும் விரைவாகவே அவர்கள் அமைதிநிலைக்குத் திரும்பினார்கள். உத்வேகமும், இறைவன் தரும் வெற்றி மீதான நம்பிக்கையும் அன்னாரிடம் பலமடைந்தன.

நபிகளார் தமது கறுப்பும் வெள்ளையும் கலந்த கோவேறு கழுதையின் மீதேறி எதிரிகளை நோக்கி விரைந்தார்கள். போகும்போதே 'நானே நபி ... இது பொய் அல்ல. நான் அப்துல் முத்தலிபின் பிள்ளை' எனக் கூறி முஸ்லிம்களைத் திரும்பிவருமாறு அழைத்தார்கள். அதனால் திரும்பிவந்த முஸ்லிம்கள் நிராகரிப்பாளர்களைத் தோற்கடித்தார்கள். போரில் நடந்த நிகழ்வுகளையும் ஏற்பட்டிருந்த உணர்ச்சிகளையும் அத்தியாயம் அத்தவ்பாவில் தெளிவான வசனங்கள் மூலமாகத் திருக்குர்ஆன் ஆவணப்படுத்தியுள்ளது:

> ஹுனைன் யுத்த தினத்தில், உங்களது அதிக எண்ணிக்கை உங்களைப் பெருமை கொள்ளச்செய்ததை நினைத்துப்

> பாருங்கள். எனினும் அது உங்களுக்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை. பரந்துவிரிந்த பூமி அப்போது உங்களுக்கு ஒடுங்கியே விட்டது. பின்னர் அங்கிருந்து நீங்கள் புற முதுகிட்டு ஓடினீர்கள். அதன் பிறகு அல்லாஹ் தனது அமைதியை அவனுடைய தூதர் மீதும் விசுவாசிகள் மீதும் இறக்கினான். நீங்கள் காணாத படைகளையும் இறக்கினான். நிராகரித்தவர்களை வேதனை செய்தான். நிராகரிப்பாளர் களுக்கான கூலியும் அதுதான். (9:25-26)

உணர்ச்சிவயப்பாடு சார்ந்த எதிர்வினைகளின் இரண்டாவது வகையானது ஒருவர் பொருத்தமான ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலையில் தோன்றுவதாகும். நாட்டம் சார்ந்த இத்தகைய செயலையும் பேச்சையும் குறித்து முன்னைய அத்தியாயத்திலும் கலந்துரையாடினோம். மனிதன் இவற்றைத் தனது முழுத் தெரிவின் அடிப்படையில் மேற்கொள்வதாகவும், அத்தெரிவின் பொறுப்பையும் விளைவுகளையும் அவனே சுமப்பதாகவும் அங்கு குறிப்பிட்டோம். அந்த விளைவு நன்மையாகவும் இருக்கலாம்; தெளிவான நஷ்ட மாகவும் அமையலாம். இத்தகைய எதிர்வினைகளுக்கு முன்னெற்றி மூளையின் மேற்பகுதியே பொறுப்பு என இன்றைய நவீன அறிவியல் உறுதிப்படுத்தியுள்ளது.

எனினும் — நாம் முன்பே விளக்கியதுபோல் — அறிவியலானது அதன் நவீனச் சடவாத இயல்பின் காரணமாக அனைத்து மனித நடவடிக்கைகளையும் மூளையுடன் மாத்திரமே தொடர்புபடுத்துகிறது. மனித மூளையின் அற்புதம் குறித்த எதிர்காலக் கண்டுபிடிப்புகள் இந்நம்பிக்கையை மாற்றியமைக்கலாம். அல்லது எக்லஸ் (Eccles), பீர்சால் (Pearsall) போன்ற விஞ்ஞானிகள் நம்புவதுபோல், ஸ்தூல இயல்பற்ற பகுத்தறிவுதான் மூளையின் செயல்பாடுகளை ஆளுகை செய்கிறது என்ற நம்பிக்கைக்கு நவீன அறிவியல் வந்துசேரலாம். இந்த நம்பிக்கையே அவ்விஞ்ஞானிகளது சிந்தனையை நமது இஸ்லாமிய சிந்தனைக்கு நெருக்கமாக்கிவைக்கிறது. ஏனெனில் இஸ்லாமிய நம்பிக்கையின்படி, ஆத்மீக இயல்பு கொண்ட உள்ளம்தான் நமது மூளையை ஆளுகை செய்கிறது. நமது தெரிவுகளுக்கான பொறுப்பை ஏற்பதும் அதுவே. நமது வாழ்வில் நிகழ்பவற்றைப் பிரக்ஞைபூர்வமாக உணரும் அருட்கொடையை அதுவே நமக்குப் பெற்றுத்தருகிறது.

ஆக, முதல் வகையான எதிர்வினைகளைப் பொறுத்தவரை, மனிதர்கள் என்ற வகையில் அவற்றைத் தடுக்கவோ பிற்படுத்தவோ அவற்றின் கூர்மையில் சமரசம் செய்யவோ நம்மால் முடியாது.

இரண்டாவது வகையான எதிர்வினைகளே நமது நாட்டத்துடன் இணைந்தவை. இந்த இரண்டாவது நிலையின்போது உணர்ச்சித் தூண்டலுக்கு உட்படும் மனிதர் தான் எதிர்கொள்ளும் உணர்ச்சிநிலை எத்தகையது எனப் புரிந்திருப்பார். பொருத்தமான எதிர்வினையையும் அவரே தெரிவுசெய்வார். குறித்த உணர்ச்சித் தூண்டலின் கூர்மை, அவரிடம் காணப்படும் உள-ஆத்மீக நிலை, நம்பிக்கைகள், ஆளுமைப் பண்புகள் என்பவற்றுக்கேற்ப அவரது தெரிவு அமைந்திருக்கும். இவ்வுணர்ச்சிப் பரிமாணத்தில் நபிமார்களது எதிர் வினைகளுக்கும் சாதாரண மனிதர்களது எதிர்வினைகளுக்கும் மத்தியிலான இடைவெளி பெரியது. அதன் தொடராக அவர்களது பொறுப்புகளும் வெவ்வேறானவை.

இவ்விசயத்தைத் தெளிவுபடுத்தவும் எளிமையாக விளக்கவும் 'பயம்' என்ற உணர்ச்சியை இங்கு நாம் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். ஏனெனில் அதுவே இவ்விசயத்தை விளக்க அதிகம் உகந்த உணர்ச்சியாகும். அவ்வாறே பயத்தைக் கடுமையாகத் தூண்டக்கூடிய ஒரு நிலையையும் தெரிவுசெய்துகொள்வோம். கொலை என்பதே பயத்தை மிகக் கடுமையாகத் தூண்டக்கூடியதாகும்.

கொலை அச்சுறுத்தல் அல்லது சித்திரவதை அச்சுறுத்தல் விடுத்தவர் களுடன் நபிமார்களது எதிர்வினைகள் எப்படி அமைந்திருந்தன என்பதைத் திருக்குர்ஆன் நமக்கு எடுத்துரைக்கிறது. அத்தகைய அச்சுறுத்தல்களுக்கு அவர்கள் எவ்விதத்திலும் பணியவில்லை. மரணத்தை அவர்கள் துச்சமாக மதித்தார்கள். ஏனெனில், இப் பிரபஞ்சத்தின் அணுமுதல் அண்டம்வரை அல்லாஹ்வின் பிடியில் இருப்பதை அவர்கள் திடமாக அறிந்திருந்தார்கள். அதனை விரும்பியவாறு புரட்டவும், விரும்பியவரை உயிர் வாழச்செய்யவும், விரும்பியவரை மரணிக்கச்செய்யவும் அவனால் முடியும் என்பதை யும், அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன் என்பதையும் அவர்கள் புரிந்திருந்தார்கள்.

எனவே, நபிமார்களைப் பொறுத்தவரை நிராகரிப்பாளர்களின் அச்சுறுத்தலானது, நீங்கள் மிருகக்காட்சி சாலையில் நிற்கும்போது சிங்கம் உங்களைத் தாக்கும் எனப் புத்தி குறைந்த மனிதர் ஒருவர் எச்சரிப்பதைப் போன்றதாகவே இருந்தது. சிங்கம் கச்சிதமாக மூடப்பட்ட கூண்டினுள் இருப்பதும், அங்கிருந்து அதனால் வெளியேற முடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும் என்பதால் அத்தகைய எச்சரிக்கையைப் பார்த்து உங்களுக்குச் சிரிப்பு தோன்று வது இயல்பானது. இப்படித்தான் நபிமார்களும் நிராகரிப்பாளர்களது

அச்சுறுத்தலை ஏளனமாகப் பார்த்தார்கள். அல்லாஹ்வின் உதவி பற்றிய திடநம்பிக்கை அவர்களிடம் இருந்தது.

அத்தியாயம் யூனுஸில் நபி நூஹ் ﷺ கூறுவதைப் பாருங்கள். தனது சமூகத்தின் அச்சுறுத்தலை அவர் பரிகாசம் செய்கிறார். நிராகரிப்பாளர்கள் தங்களுடைய பங்காளர்களைச் சேர்த்துக்கொண்டு தன்னைக் கொல்வதற்கான தெளிவான தீர்மானம் எடுத்து, அதைத் தாமதமின்றி நிறைவேற்றலாம் என அவர் சவால் விடுக்கிறார். ஏனெனில், தனது விவகாரங்களை முற்றிலும் பொறுப்பேற்றுக்கொண்ட அல்லாஹ் தன்னுடைய எதிரிகளுக்கு எவ்வகையிலும் இடமளிக்கப்போவதில்லை என்ற திடமான நம்பிக்கை அவரிடம் இருந்தது:

*நூஹின் செய்தியை அவர்களுக்கு (நபியே) ஓதிக்காண்பிப் பீராக! அவர் தன்னுடைய சமூகத்தினரை நோக்கி, 'என் சமூகத்தினரே, எனது இருப்பும், அல்லாஹ்வின் அத்தாட்சி களை உங்களுக்கு நான் நினைவூட்டுவதும் உங்களுக்குப் பெரும் பளுவாக இருக்குமாயின், அல்லாஹ்வின் மீதே நான் முழுப் பொறுப்பையும் சாட்டிவிட்டேன். எனவே நீங்கள் இணைவைப்பவற்றையும் கூட்டுசேர்த்துக்கொண்டு, பின்னர் எந்த ஐயமும் தோன்றிவிடாத வகையில் கூட்டாகச் சேர்ந்து உங்கள் காரியத்தை முடிவுசெய்யுங்கள். பின்னர் உங்கள் முடிவை என்மீது நிறைவேற்றுங்கள்; எனக்கு அவகாசம் தராதீர்கள்.*

*ஆயினும், நீங்கள் என் உபதேசத்தைப் புறக்கணித்துவிட் டாலும் பரவாயில்லை. அதற்காக உங்களிடம் நான் கூலி கேட்கவுமில்லை. நிச்சயமாக எனக்குரிய கூலி அல்லாஹ் விடம் உள்ளது. அவனுக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களுள் ஒருவராக இருக்க வேண்டுமென்றே நான் ஏவப்பட்டுள்ளேன்' எனக் கூறினார்.*

*அப்பொழுதும் அவர்கள் அவரைப் பொய்யர் என்றே கூறினர். எனவே நாம் அவரையும் அவருடன் இருந்தவர்களையும் கப்பலில் ஏற்றிக் காப்பாற்றினோம். அவர்களையே பூமியின் பிரதிநிதிகளாகவும் ஆக்கினோம். நமது அத்தாட்சிகளைப் பொய்யாக்கியோரை மூழ்கடித்துவிட்டோம். எனவே அச்சமூட்டி எச்சரிக்கப்பட்டவர்களின் முடிவு என்னவாயிற்று என (நபியே) கவனிப்பீராக!* (10:71-73)

அத்தியாயம் ஹூதில் நபி ஹூது ﷺ பற்றியும் திருக்குர்ஆன் நமக்குச் சொல்கிறது. தனது சமூகத்தில் தன்னைக் கொல்வதற்கு ஒன்றிணைந்தவர்களுக்கு முன்னால், தான் அவர்களது சூழ்ச்சி களுக்கோ அச்சுறுத்தல்களுக்கோ அஞ்சவில்லை எனப் பகிரங்கமாக அவர் பிரகடனம் செய்கிறார். ஏனெனில், பூமியில் நகர்கின்ற எந்த உயிரும் — அது வயிற்றினால் ஊர்வதாயினும், இரு கால்களால் அல்லது நான்கு கால்களால் நடப்பதாயினும் — அல்லாஹ்வின் அதிகாரத்துக்கும் பலத்துக்கும் அடிபணிந்ததுதான். அனைத்து உயிர்களின் முன்னெற்றி முடி அவனது பிடியில்தான் இருக்கிறது:

> நிச்சயமாக நான் எனது ரட்சகனும் உங்கள் ரட்சகனுமாகிய அல்லாஹ்விடம் என் விவகாரத்தை ஒப்படைத்துவிட்டேன். எந்த ஒரு உயிராயினும் அதன் முன்னெற்றி முடியை அவனே பிடித்திருக்கிறான். நிச்சயமாக எனது இரட்சகன் நேரான பாதையில் இருக்கிறான். (11:56)

நாம் அதிகத் தூரம் செல்ல வேண்டியதில்லை. ஆதமின் சந்ததிகளில் சிறந்தவரான முஹம்மது ﷺ அவர்களைப் பாருங்கள். தன்னைக் கொல்வதற்கு உறுதிபூண்டு வந்த மக்கத்து நிராகரிப்பாளர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் தோழர் அபூபக்கருடன் அன்னார் ஸவ்ருக் குகையில் மறைந்திருக்கிறார்கள். குகையின் வாசல்வரை வந்துவிட்ட நிராகரிப்பாளர்களைக் கண்டு நடுங்கிக்கொண்டே அபூபக்கர் ؓ கூறுகிறார், ‘குகையின் மேற்புறம் நின்றிருக்கும் அவர்களுள் ஒருவர் தனது பாதங்கள் இருக்குமிடத்தைக் குனிந்து பார்த்தால் நிச்சயமாக எங்களைக் கண்டுவிடுவார்’. அப்போது நபிகளார் தம்மீது இறங்கிய பேரமைதியின் திருப்தியுடன் அவருக்கு இப்படிப் பதிலளிக் கிறார்கள்: ‘அபூபக்கரே! தம்முடன் மூன்றாவதாக இறைவனைக் கொண்டிருக்கும் இருவரைப் பற்றி நீர் என்ன நினைத்துவிட்டீர்?’[51]

அந்நிகழ்வை அத்தியாயம் அத்தவ்பாவில் திருக்குர்ஆன் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறது:

> நீங்கள் அவருக்கு உதவிசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. நிராகரிப்பாளர்கள் அவரை ஊரைவிட்டு வெளியேற்றியபோது அல்லாஹ் அவருக்கு உதவிசெய்தே இருக்கிறான். குகையில் இருவரில் ஒருவராக அவர் இருந்தபோது தன் தோழரிடம், ‘கவலைப்படாதீர், நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக் கிறான்’ எனக் கூறினார். அவ்வேளை அல்லாஹ் தனது சாந்தியை அவர்மீது இறக்கிவைத்தான். நீங்கள் பார்க்க

51. ஸஹீஹுல் புஃகாரீ.

முடியாத படைகளை இறக்கி அவரைப் பலப்படுத்தியும் வைத்தான். நிராகரித்தவர்களின் வாக்கையும் கீழாக்கினான். அல்லாஹ்வின் வாக்கே மிக உயர்ந்ததாகும். அல்லாஹ் சக்திமிக்கவன்; ஞானமிக்கவன். (9:40)

இவ்வாறான உணர்ச்சிநிலைகளின்போது நபிமார்களது எதிர்வினைகளுக்கும், ஏனைய மனிதர்களது எதிர்வினைக்கும் மத்தியிலான வேறுபாடு எப்படி இருக்கும் என்பதை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது. ஏனைய மனிதர்கள் அபூபக்கர் ﵁ போன்ற உயர் இறைவிசுவாசத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அந்த வேறுபாடு மிகத் தெளிவானது. இறைத்தூதரின் உயிர் குறித்து அபூபக்கர் ﵁ அஞ்சிக்கொண்டிருக்க, இறைத்தூதரோ அவரது மடியில் தலைவைத்து அமைதியாக உறங்கிவிடுகிறார்கள். எப்பேர்பட்ட அமைதியாக இருந்திருக்கும்! நபியைக் கொல்வதற்காக ஒரு கூட்டமே சுற்றிவளைத்திருக்கிறது. அவர்களோ நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக்கிறார்கள்!

ஆக, உணர்ச்சிவயப்பாட்டுக்கான எதிர்வினையானது நாட்டத்துடன்கூடிய ஓர் தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலையில் இருக்குமாயின், அப்போது நபிமார்கள் பயப்பட மாட்டார்கள்; பயப்படவும் கூடாது. ஆனால் சாதாரண இறைவிசுவாசி ஒருவர் தன்னை எவராவது கொல்ல முற்பட்டால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்த அனுமதி உண்டு.

உதாரணமாக, அம்மார் இப்னு யாசிர் என்ற நபித்தோழர் முஹம்மது ﷺ அவர்களை நிராகரிக்கும்வரை அவரைச் சித்திரவதை செய்வதை நிறுத்தப்போவதில்லை என இணைவைப்பாளர்கள் பிடிவாதம் காட்டியபோது அவர் நிர்ப்பந்தமாக அன்னாரை நிராகரித்தார். பிறகு நபி ﷺ அவர்களிடம் வந்து அதற்காக மன்னிப்பும் கேட்டார். அப்போது நபிகளார், ‘அவர்கள் மீண்டும் அவ்வாறு நிர்ப்பந்தித்தால் நீரும் அவ்வாறே நடந்துகொள்ளும்’ எனக் கூறினார்கள். அப்போதுதான் அத்தியாயம் அந்நஹ்லு உள்ளடக்கியுள்ள இவ்வசனம் இறங்குகிறது:

எவர் இறைவிசுவாசம் கொண்ட பிறகு அல்லாஹ்வை நிராகரிக்கிறாரோ அவர்மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான். எனினும், எவரது உள்ளம் இறைவிசுவாசத்தால் அமைதியடைந்த நிலையில் இறை நிராகரிப்புக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறாரோ அவர்மீது குற்றம் இல்லை. அவ்வாறன்றி, எவரது நெஞ்சம் நிராகரிப்பில் மகிழ்ச்சியடைகிறதோ அவர்கள்மீது அல்லாஹ்

வின் கோபம் உண்டாவதோடு அவர்களுக்குப் பெரும் வேதனையும் வழங்கப்படும். (16:106)

எவ்வாறாயினும், தாம் விசுவாசம் கொண்டிருக்கும் கொள்கையை விட்டுக்கொடுப்பதைவிட மரணத்தையும் சித்திரவதையையும் மேலாகக் கருதிய பல அறிஞர்களாலும் அடியார்களாலும் நமது மகத்தான இஸ்லாமிய வரலாறு நிறைந்திருக்கிறது. நமது சமகாலத்தில்கூட அத்தகைய சில அரிதான உதாரணங்களைக் காண முடிகிறது. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல், அவ்ஸாயீ, ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபால் கொல்லப்பட்ட இமாம் சயீது இப்னு ஜுபைர், இப்னு தைமிய்யா முதலிய பலரது வாழ்க்கை நிகழ்ச்சிகளால் இஸ்லாமிய வரலாற்று நூல்கள் நிறைந்திருக்கின்றன.

நமது வாழ்வில் உணர்ச்சிகளைக் கிளர்த்துகின்ற நான்கு விதமான தூண்டல்கள் பற்றியும், அவற்றுக்கு நபிமார்கள் காட்டிய எதிர்வினைகள் பற்றியும் இவ்வத்தியாயத்தில் நாம் கலந்துரையாடுகிறோம் என்பதைக் கண்ணியமான வாசகருக்கு மீண்டும் நினைவூட்டிக்கொள்கிறோம். அவற்றுள் முதல் வகையான உணர்ச்சித் தூண்டல்களுக்கு ஏனைய மனிதர்களைப் போன்றுதான் நபிமார்களும் வினையாற்றுவார்கள் என விளக்கினோம். அவர்களும் மனிதர்கள்தான் என்ற வகையில் அவர்களுக்குள் அவை இயல்பூக்கமாகவே அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது வகை எதிர்வினைகளைப் பொறுத்தவரை, ஒருவர் உணர்ச்சித் தூண்டலுக்கு உட்படும்போது அதற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுவது எனத் தீர்மானிக்க வேண்டியிருக்கும். அந்த வகையில், அவரது முழுத் தெரிவின் அடிப்படையில் பிறக்கும் செயல்களாகவும் வார்த்தைகளாகவும் அந்த எதிர்வினைகள் அமைந்திருக்கும். அவற்றின் விளைவு நன்மையாக அமைந்தாலும் தீமையாக அமைந்தாலும் அவரே அதற்கான பொறுப்பை ஏற்பார். நடைமுறை உதாரணங்களை எடுத்துக்காட்டி இதனை நாம் எளிமையாக விளக்கினோம். உளவியல் விஞ்ஞானத் துறை சிறப்புக் கற்கையாளர்கள் விவரிக்கும் உணர்ச்சிவயப்பாடு சார்ந்த கோட்பாடுகளை வெறுமனே விவரிப்பதையும் அங்கு தவிர்த்துக்கொண்டோம்.

தீமை கொண்ட மனங்களின், ஷைத்தானிய ஊசலாட்டங்களின், கெட்ட — ஜின்னு அல்லது மனித — நண்பர்களின் உணர்ச்சித் தூண்டல்களுக்கு நாம் வெளிப்படுத்துகின்ற எதிர்வினைகள் மூன்றாவது வகையாகும்.

இத்தகைய மோசமான உணர்ச்சித் தூண்டல்களை ஒருவர் விரும்பி ஏற்கும்போது பொறாமை, காழ்ப்புணர்ச்சி, சுயநலம் என்பனபோன்ற மிகக் கெட்ட உணர்ச்சிப் பழக்கங்களுக்கு அவரை இட்டுச்செல்ல முடியும். இதற்கு முஸ்லிம்கூட விலக்கல்ல. ஆனால், நபிமார்கள் இவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டிருப்பார்கள்.

இதுகுறித்தே இறைத்தூதர் ﷺ கூறியதாக இப்னு மஸ்ஊது ؓ வாயிலாக இமாம் முஸ்லிம் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்:

> ‘உங்களில் ஒவ்வொருவருடனும் ஜின்களைச் சேர்ந்த ஒரு சகபாடி சாட்டப்பட்டிருக்கிறார்.’
>
> ‘உங்களுக்குமா?’ எனக் கேட்கப்பட்டபோது, ‘எனக்கும்தான். ஆனாலும் அல்லாஹ்வின் உதவியால் அவரும் முஸ்லிமாகி விட்டார். எனவே அவர் எனக்கு நன்மையை மட்டுமே ஏவுவார்’ என நபிகளார் பதிலளித்தார்கள்.

நபிமார்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற விசயம் தொடர்பாக இவ்வத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் நாம் விரிவாக விளக்கவுள்ளோம்.

எனவே, இப்போதைக்கு நமக்கு எஞ்சியிருப்பது நான்காவது வகையான உணர்ச்சித் தூண்டல்கள் பற்றிய சில அவதானங்களை முன்வைப்பதுதான். அதில் ஏனைய மனிதர்களைவிட நபிமார்கள் பெற்றிருந்த சில சிறப்பம்சங்களை விளக்க நாம் விரும்புகிறோம்.

இரக்கம், பாசம், கஷ்டங்களின் மீதான பொறுமை, துணிச்சல், உடலிச்சைகளைக் கட்டுப்படுத்தல் போன்ற நல்ல விழுமியங்களை நோக்கிய உணர்ச்சித் தூண்டல்களையே இந்நான்காவது பகுதி உள்ளடக்குகிறது. நமது படைப்பியல்பாக அமைந்த இந்த உணர்ச்சிகளில் சிலவற்றை மிருகங்களின் நடத்தையிலும் நாம் காண முடியும். அந்த வகையில், தமது குழந்தைகள்மீது அவை காட்டும் இரக்கமும் அர்ப்பணமும் இயல்பிலேயே இறைவனால் ஏற்படுத்தப்பட்டவையாகும். தமது இருப்பைப் பாதுகாக்க இவ்வுணர்ச்சிகள் அவற்றுக்கு அவசியம். இதுகுறித்து அபூஹுறைறா ؓ அறிவிக்கும் ஒரு நபிமொழியை இமாம் புஃகாரீ இவ்வாறு பதிவுசெய்துள்ளார்:

> நபிகளார் ﷺ பின்வருமாறு கூறுவதை நான் செவிமடுத்தேன்: ‘அல்லாஹ் இரக்கம் என்ற பண்பை நூறு பங்காக அமைத்து தன்னிடம் தொண்ணூற்றொன்பது பங்குகளை வைத்துக்

கொண்டு ஒரேயொரு பங்கை மாத்திரம் பூமிக்கு இறக்கினான். அந்த ஒரு பங்கிலிருந்தே உயிரினங்கள் தமக்குள் பரஸ்பரம் அன்பு செலுத்துகின்றன. ஒரு மிருகம் தனது குட்டிக்குப் பாதிப்பு ஏற்படாமல் காலை உயர்த்திக்கொள்வதுகூட அதனைச் சேர்ந்ததுதான்.'

இவ்விவகாரத்தைக் கையாளும் முறையில் நமக்கும், மேற்கத்திய மதச்சார்பற்ற உளவியல் துறைக்கும் மத்தியிலான வேறுபாட்டை நாம் தெளிவாக அவதானிக்க முடிகிறது. மேற்கத்திய உளவியலானது விழுமியம் சாராமையையும், மனிதனிடம் காணப்படும் எதிர்மறைப் பக்கத்தையும் மாத்திரம் எடுத்துக்கொண்டு நவீன சிகிச்சை மருத்துவத் துறைக்குள் தன்னைச் சுருக்கிக்கொண்டது. நடத்தை பற்றிய தனது ஆய்வுமுறைமையாக இதனையே அது எடுத்துக்கொண்டது. விழுமியம் சாரா நிலைப்பாடுகளைக் கொண்ட பரிசோதனை அறிவியலுக்கே தான் நெருக்கமாக இருப்பதாக அது கூறியது. இக்கருத்தாக்கத்துக்கும் இஸ்லாமிய நோக்குக்கும் மத்தியிலான வேறுபாடு தெளிவானது. ஏனெனில், உளவியல் குறித்த இஸ்லாமியப் பார்வையானது மனித நடத்தையில் உள்ள நன்மையையும் தீமையையும் தெளிவாக வேறுபடுத்துகிறது. மனிதர்களை நற்செயல்கள் புரியத் தூண்டவும், நல்ல விழுமியங்களை ஏற்று கெட்டவற்றிலிருந்து விடுபட அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் உளவியல் விஞ்ஞானம் பயன்பட வேண்டியதன் அவசியத்தை அது உணர்த்துகிறது.

நல்ல உணர்வுகள் மனிதனிடம் இயல்பாகவே உள்ளமைந்திருப்பதை நம்புதலும் நம்பாதிருத்தலும் சமய-தத்துவ அறிஞர்களிடம் பெரும் முக்கியத்துவம் கொண்டதாகும். மனித இயல்பை அவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதிலேயே அது தங்கியுள்ளது:

மனிதன் இயல்பாகவே நல்லவனாக இருக்க, அவனது வளர்ப்பு முறையிலிருந்து அல்லது அவன் வாழும் சூழலிலிருந்தே தீமை வருகிறதா? அல்லது நன்மையும் தீமையும் அவனுக்குள் இயல்பாகவே விதைக்கப்பட்டுள்ளனவா? அல்லது கத்தோலிக்கத் திருச்சபை நம்புவதுபோல், இறைவன் தடுத்த மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் சாப்பிட்டதன் காரணமாக அந்தப் பாவத்தை அனந்தரமாகச் சுமந்து இயல்பாகவே அவன் கெட்டவனாக இருக்கிறானா?

இந்தத் தத்துவார்த்த தலைப்பின் இருட்குகைகளுக்குள் அல்லது தர்க்க இறையியலின் இருண்ட மண்டபங்களுக்குள் நுழைவது

நமது இந்நூலுக்குப் பொருந்தாது என்பது தெளிவு. எனவே, ஆதாரபூர்வமான நபிமொழிகளை அடிப்படையாகக் கொண்ட தெளிவான இஸ்லாமியக் கோட்பாட்டுடன் மாத்திரம் இங்கு நாம் போதுமாக்கிக்கொள்வோம்.

உறுதிப்படுத்தப்பட்ட சன்மார்க்க வசனங்களுக்கு இயைபான நம்பிக்கையானது மனிதர்கள் இயல்பாகவே நல்லவர்களாகத்தான் பிறக்கிறார்கள் என்ற நம்பிக்கையை நோக்கியே நம்மை அழைக் கிறது. அதாவது, மனிதர்களை அவர்களுடைய தந்தையர்களது முதுகுகளிலிருந்து இறைவன் படைத்ததுமுதல் அந்த நல்லியல் பிலேயே அவர்கள் உள்ளனர். அந்நிலையில் அல்லாஹ் மிகப் பெரிய ஒரு வாக்குறுதியை அவர்களிடம் பெற்றுக்கொண்டதாக அவனே திருக்குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

> உமது இரட்சகன் ஆதமின் பிள்ளைகளின் முதுகுகளிலிருந்து அவர்களது சந்ததிகளை வெளியாக்கி, அவர்களை அவர்களுக்கே சாட்சியாக வைத்து, 'நான் உங்கள் இரட்சகன், அல்லவா?' என்று கேட்டதற்கு, 'ஆம், நிச்சயமாக நாங்கள் அதற்கு சாட்சி பகர்கிறோம்' எனக் கூறியதை (நபியே) நினைவுபடுத்துவீராக. (7:172)

இந்தப் படைப்பியல்புதான் வல்லமைமிக்க ஏக இறைவனை விசுவாசிக்குமாறும், மிகச் சிறந்த விழுமியங்களைக் கடைப் பிடிக்குமாறும் நம்மை அழைக்கிறது.

அடுத்ததாகக் கீழ்வரும் இறை வசனத்தையும் கூர்ந்து கவனியுங்கள்:

> ஆதலால், உமது முகத்தைத் தூய இறை மார்க்கத்தை நோக்கியே நிலைநிறுத்துவீராக! எந்த இயல்பின் மீது அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனது இயற்கை மார்க்கமாகும். இறைவனின் படைப்புக்கு எந்த மாற்றும் இல்லை. அதுவே சீரிய மார்க்கம். எனினும், மனிதரில் அனேகர் இதனை அறிவதில்லை. (30:30)

பின்வரும் நபிமொழியையும் அவதானியுங்கள்:

> ஒவ்வொரு குழந்தையும் 'ஃபித்றா' என்னும் படைப்பியல் பிலேயே பிறக்கிறது. அதன் பெற்றோரே அதனை யூதனாகவும் கிறிஸ்தவனாகவும் மஜூசியாகவும் மாற்றுகின்றனர். கால் நடைகள் பிறக்கும்போது எவ்வித குறைபாடுமின்றிப் பிறப்பதுபோன்றதுதான் இதுவும். (காதுபோல் ஏதாவதொரு)

*உறுப்பு வெட்டப்பட்ட நிலையில் அவை பிறப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?*[52]

நல்லியல்பு என்பது மனிதர்களிடம் பிறப்பிலிருந்தே முழுமையான வடிவத்தில் விதைக்கப்பட்டிருப்பதை இந்த ஒப்பீட்டில் நாம் காண முடிகிறது. கால்நடைகள் முழுமையான அங்க லட்சணங்களுடன் பிறப்பதுபோன்றதுதான் இதுவும். எனினும் பெற்றோர், மோசமான சூழல், ஷைத்தான்கள் என்பனவே அந்த நல்லியல்பை விகாரப் படுத்தும் அல்லது அதன் தாக்கத்தைப் பலவீனப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

இக்கெட்ட சக்திகள் மனிதனின் நல்லியல்புடன் போட்டியிடவும், பிறழ்வுற்ற நம்பிக்கைகளாலும் இச்சைகளாலும் அவை மனித உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்தவும் ஆழ்ந்த இறைஞானம் இடமளித் திருக்கிறது. இந்த வாழ்வை அவன் பரீட்சைக்கும் சோதனைக்குமான களமாக ஆக்கியிருக்கிறான். அவ்வகையில், படைப்பியல்பின் அழைப்பைப் புரிந்துகொள்ளும் தன்மையை மனித உள்ளங்களுக்கு அவன் கொடுத்திருப்பதுபோலவே, தீமையின் பக்கம் சாய்ந்து அந்தப் படைப்பியல்பின் மீது அடர்ந்தேறும் தெரிவை மேற்கொள்வதற்கான சுதந்திரத்தையும் வழங்கியுள்ளான்:

*ஆத்மாவின் மீதும் அதனைச் சீரமைத்தவன் மீதும் சத்தியமாக! அவனே அதற்கு அதன் தீமையையும் நன்மையையும் உணர்த்தினான்.* (91:7-8)

ஆக, ஒருவர் பிறப்பியல்பின் அழைப்புக்குப் பதிலளிக்கலாம்; அல்லது அதனை மூடி மறைத்துவிடலாம். ஆனால், மனிதன் எவ்வளவு பாவம் செய்பவனாக அல்லது அடர்ந்தேறுபவனாக அல்லது நிராகரிப்பவனாக இருந்தாலும் இந்த நல்லியல்பு அவனது ஆத்மீகக் கட்டமைப்பினுள் மறைந்தே இருக்கும். அவன் தன்னிலை உணர்ந்து பாவமன்னிப்பு கோரிவிட்டால் இருளைச் சிதறடிக்கும் ஒளிபோன்று அது திரும்பிவரும். மொழிரீதியாக *'குஃப்ரு'* என்பதன் பொருள் 'மறைத்தல்' ஆகும். *'காஃபிர்'* என்பவர் படைப்பியல்பின் ஒளியைவிட்டு உள்ளத்தை மறைத்து இருளில் வாழ்பவர் ஆவார்.

*நிராகரித்தவர்களின் பாதுகாவலர்களாக வழிகெடுக்கும் ஷைத்தான்களே இருப்பர். அவர்கள் இவர்களை ஒளியிலிருந்து இருள்களின்பால் அழைத்துச்செல்வர்.* (2:257)

---

52. *ஸஹீஹுல் புஃகாரீ.*

அல்லாஹ் மனிதனுக்கு ஓர் பாரம்பரிய ஆற்றலை வழங்கியிருக்கிறான் என்பதை மீளவும் வலியுறுத்தவே இங்கு நான் விரும்பினேன். நன்மைக்கும் தீமைக்கும் மத்தியில், நல்ல உணர்ச்சிகளுக்கும் தீய உணர்ச்சிகளுக்கும் மத்தியில் வேறுபடுத்திப்பார்க்கும் ஆற்றலே அதுவாகும். அந்த வகையில், நன்மை என்பது மனித ஆத்மாக்களில் இயல்பாகவே பதிந்திருப்பது. தீமை என்பது இடையில் வந்து போவது. மனிதனது ஆத்மீகக் கட்டமைப்பில் பதிந்துள்ள படைப்பியல்பின் தாக்கத்தால் இறைவிசுவாசி ஒருவர் அடைகின்ற பிரக்ஞைபூர்வமான உணர்வெழுச்சிகள் பற்றி இறைத்தூதர் ﷺ அவர்களும் நமக்குக் கூறியிருக்கிறார்கள்:

இமாம் அஹ்மதின் முஸ்னது கிரந்தத்தில் நபித்தோழர் வாபிசா இப்னு மஅபத் ؓ அறிவிக்கிறார்:

> நான் ஒருமுறை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் சென்றிருந்த போது, ‘நன்மை என்பது யாதெனக் கேட்கத்தானே வந்தீர்?’ என வினவினார்கள். நான் ‘ஆம், அல்லாஹ்வின் தூதரே’ என்றேன். அப்போது அன்னார் இப்படிக் கூறினார்கள்: ‘உன் உள்ளத்தின் தீர்ப்பைக் கேள். மனிதர்கள் இப்படியும் அப்படியுமாகத் தீர்ப்பு சொன்னாலும், நன்மை என்பது உன் உள்ளம் அமைதியடைவதாகும். பாவம் என்பது உள்ளத்தில் சங்கடத்தையும் தடுமாற்றத்தையும் ஏற்படுத்துவதாகும்.’

நபி ﷺ அவர்கள் கூறியதாக நவாஸ் இப்னு சம்ஆன் ؓ பின்வருமாறு அறிவிக்கிறார்:

> நன்மை என்பது நற்பண்பாகும். தீமை என்பது உங்கள் உள்ளத்தில் குறுகுறுப்பை ஏற்படுத்துவதும், பிற மனிதர்கள் அதனை அறிந்துகொள்வதை நீங்கள் வெறுப்பதுமாகும்.[53]

ஆக, நன்மையையும் தீமையையும் பிரித்தறியும் ஆற்றல் படைப்பியல்புக்கு வழங்கப்பட்டுள்ளது. அது மனிதனிடம் பாரம்பரியமாக இருந்துவரும் உணர்வாகும்.

இக்கருத்தாக்கமே மனத்துக்கு அமைதியைத் தருகிறது. ஏனெனில், இறைவனின் அருளுக்கும் கிருபைக்கும் இயைபான கருத்தாக்கம் இதுவே. மனிதனது உள-ஆத்மீகக் கட்டமைப்பில் நன்மை, தீமையின் ஊக்கிகள் சமமாக இயங்கும் வகையில் அவனை இறைவன் பூமியில் பிறக்கச்செய்யவில்லை. எனினும் பின்வரும் திருக்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கமளித்த சில பழைய அறிஞர்

---

53. ஸஹீஹ் முஸ்லிம்.

களும் நவீன அறிஞர்களும், அவை இரண்டும் மனிதனில் சமமாக இயங்குவதாகவே குறிப்பிட்டுள்ளனர்:

> *நன்மை, தீமை ஆகிய இரு பாதைகளையும் அவனுக்கு நாம் காண்பித்தோம்.* (90:10)

> *ஆத்மாவின் மீதும் அதனைச் சீரமைத்தவன் மீதும் சத்தியமாக! அவனே அதற்கு அதன் தீமையையும் நன்மையையும் உணர்த்தினான்.* (91:7-8)

அதாவது நன்மை, தீமை ஆகிய இரண்டின் தூண்டல்களும் 50:50 என்ற விகிதத்தில் மனிதனில் சமமாக இருப்பதாக அவர்கள் விளக்குகின்றனர். ஆனால், இறைவனை நெருங்கச்செய்யும் நல்ல உணர்வுகளையும் செயல்களையும் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய ஃபித்றா என்னும் படைப்பியல்பை இறைவன் மனிதனுக்கு அளித்துள்ளான். அந்த வகையில், தூய இறைவன் தன்னுடைய அடியார்கள்மீது எப்போதும் அருள் கூர்ந்தவனாகவே இருக்கிறான். அடியானின் ஒரு நன்மைக்கு இறைவன் பத்து மடங்கு நற்கூலியும், ஒரு தீமைக்கு அந்தத் தீமையின் அளவான தண்டனையும் கொடுக்கிறான், அல்லது மன்னித்துவிடுகிறான். இந்தத் தெய்வீகக் கொடைமீது மனிதன் அத்துமீறும்போதுகூட இறைவன் அவனை வெறுமனே விட்டுவிடுவதில்லை. மாறாக, பல்வேறு எச்சரிக்கைகளையும் சோதனைகளையும் அனுப்பி தன்னை நோக்கித் திரும்ப அவகாசமளிக்கிறான்:

> *அவர்கள் மீண்டுவிடலாம் என்பதற்காக, மறுமையின் பெரிய வேதனைக்கு முன்பாக இம்மையின் வேதனையைச் சுவைக்கும்படி நாம் செய்வோம்.* (32:21)

இந்த வகையில்தான் இறைவன் தூதர்களையும் அனுப்பினான். அத்தூதர்கள் மனிதனுக்கு இறைவனை நினைவுபடுத்தி அவன் புறக்கணித்திருந்த அல்லது மறந்திருந்த பிறப்பியல்பைத் தட்டி யெழுப்பினர்.

இந்த விளக்கமே தீமை (அஷ்ஷர்) என்ற பண்பிலிருந்து அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்துவதற்கு மிக நெருக்கமான விளக்கமாக உள்ளது எனலாம். ஜின்கள் கூறியதாகத் திருக்குர்ஆன் குறிப்பிடுகின்ற பின்வரும் வசனமும் இதனையே உணர்த்துகிறது:

பூமியில் இருப்பவர்கள்மீது தீமை நாடப்பட்டதா அல்லது அவர்களது இரட்சகன் அவர்களுக்கு நேர்வழியை நாடினானா என்று நிச்சயமாக எங்களுக்குத் தெரியவில்லை. (72:10)

இங்கு தீமை என்பது தோன்றா எழுவாயுடனும், நன்மை அல்லது நேர்வழி என்பது அல்லாஹ்வுடனும் தொடர்புபடுத்தப்பட்டு வந்துள்ளன. தீமையிலிருந்தும், மனிதர்களைப் பீடிக்கின்ற பல்வேறு வியாதிகள், நோவினைகள், இறை நிராகரிப்பு என்பவற்றிலிருந்தும் இறைவன் தூயவன் என்பதைக் காட்டக்கூடிய இத்தகைய பல உதாரணங்களை நாம் திருக்குர்ஆனில் காண முடிகிறது.

இதிலிருந்து நாம் பெறுகின்ற முடிவு யாதெனில், இறை விசுவா சத்தையும் நற்பண்புகளையும் நோக்கி அழைக்கும் உணர்வுத் தூண்டல்களுக்கான நமது எதிர்வினையும், துர்பண்புகளுக்கு இட்டுச்செல்லும் மோசமான இச்சைகளைக் கட்டுப்படுத்த நாம் மேற்கொள்ளும் தொடர்ச்சியான முயற்சிகளும் நமது படைப்பியல்பிலிருந்தே அடிப்படையில் தோன்றுகின்றன. எனினும் இப்படைப்பியல்பின் தாக்கமானது — நாம் முன்னர் குறிப்பிட்ட நபிமொழி கூறுவதுபோல் — மோசமான சூழல், பெற்றோர், அதிகாரம் படைத்தவர்கள் முதலிய காரணிகளின் தாக்கத்தால் — குறிப்பாகக் குழந்தைப் பருவத்தில் — பலவீனமடையலாம் அல்லது மொத்தமாகவே செயலிழக்கலாம். அதேபோல், கெட்ட நண்பர்களின் சகவாசம், தற்காலத்தில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் வழியாகவும் இணைய வழியாகவும் பரப்பப்படும் பாவச்செயல்களைப் பார்ப்பதற்கு அடிமையாதல் என்பவற்றின் மூலமாகவும் பிறப்பியல்பின் தாக்கம் பலவீனப்படலாம்.

ஆக, ஒரு முஸ்லிமின் நடத்தையிலும் சன்மார்க்கப் பற்றிலும் படைப்பியல்பு ஏற்படுத்தும் நல்ல தாக்கம் என்பது அப்படைப் பியல்பின் நல்லூக்கிகளுக்கும், அவர் வாழும் சூழலின் தீமைகளுக்கும் மத்தியிலான இடைவினையால் ஏற்படும் விளைவாகும். குறித்த நபரின் பாரம்பரிய, இடையில் வந்த ஆளுமைப் பண்புகளையும் இவற்றுடன் சேர்த்துக்கொள்ளலாம். உணர்ச்சிவயப்பாட்டுத் தன்மையின் அளவு, உடலிச்சைகளை எதிர்த்துநிற்கும் ஆற்றல் முதலியன ஆளுமைப் பண்புகளுள் அடங்கும். அனைத்துக்கும் மேலாக, அவரது இறைவிசுவாசத்தின் அளவையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எல்லா வகையிலும் மிகச் சிறந்த சூழல் என்று உலகில் எங்கும் கிடையாது. சாதாரண மனிதர்களில் ‘ஃபித்றா’வுக்கு முழுமையாகக் கட்டுப்படும் பூரணத் தயார்நிலை கொண்டவர்கள் என்றும் எவருமிலர். அந்த வகையில்தான், நாம்

எப்போதும் பாவமன்னிப்பு கேட்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இறைவன் நம்மை தவறிழைக்கும் மனிதர்களாகப் படைத்திருப்பது நாம் பாவமன்னிப்பு கேட்கும்போது மன்னிப்பளிக்கத்தான். அவன் நம்மைப் பற்றி நம்மைவிட அறிந்தவன். நமது நல்லியல்புக்கும், அதிலிருந்து நம்மைத் திசைதிருப்பும் உலக விவகாரங்களுக்கும் மத்தியிலான நிரந்தரப் போராட்டத்தை அவன் நன்கறிவான். இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்கள் சிலரை நோக்கிப் பின்வருமாறு கூறியதாக அபூஹுறைறா ؓ அறிவிக்கிறார்:

> நீங்கள் தவறிழைக்கவில்லையெனில் தவறிழைக்கக்கூடிய வேறொரு சமூகத்தை அல்லாஹ் கொண்டுவருவான்; அவர்களுக்கு மன்னிப்பும் அளிப்பான்.[54]

இவ்வாறு இறைவிசுவாசி ஒருவரின் பிறப்பியல்புத் தாக்கமானது அவனுக்கும் அவனது சூழலுக்கும் மத்தியிலான இடைவினையின் விளைவாகத் தோன்றுவதால், சூழலின் தன்மைகளுக்கேற்பப் பிறப்பியல்பின் தாக்கமும் கூடி குறைகிறது. சூழல் நல்லதாக அமையும்போதெல்லாம் பிறப்பியல்பின் தாக்கமும் மகத்தானதாக அமையும். சூழல் கெட்டதாக அமையும்போது, பிறப்பியல்பின் தாக்கம் குறைவடையும். இறைவிசுவாசிகளின் உள்ளத்தில் நன்மைக்கும் தீமைக்குமிடையில் நிகழும் இந்தப் போராட்டத்தின் பரிமாணங்கள் சிலபோது இலகுவாக அடையாளம் காணுமளவு தெளிவாகத் தோன்றலாம். அதனால்தான் உள அளவையியலில் தீராத மோகம் கொண்ட சில உளவியல் ஆய்வாளர்கள் இந்த இடைவினையை அளவீடு செய்யவும், அதற்கான சில தரநிலைகளை உருவாக்கவும் முற்பட்டனர். ஆனால் இது மிகச் சிக்கலான விவகாரமாகும். இதன் பருமனை இறைவன் மட்டுமே அறிவான். இதற்கு நான் ஒரு உதாரணத்தைத் தருகிறேன்:

> இரு நபர்கள் அவர்களது கிராமத்து பள்ளிவாசலிலிருந்து சம தூரத்தில் வசிக்கிறார்கள். இருவருமே தொழுகையைப் பள்ளிவாசலில் அக்கறையுடன் நிறைவேற்றுபவர்கள். ஆனால் ஒருவர் பள்ளிவாசலுக்குச் சமதரையின் மீது நடந்துசெல்ல, மற்றவர் ஒரு குன்றின் மீது ஏறியிறங்கியே பள்ளிவாசலை அடைய வேண்டிய நிலை. மட்டுமன்றி, நடந்துசெல்வதால் ஒருவருக்குப் பாதங்களில் வலியும் ஏற்படுகிறது. அவர்களில் ஒருவர் இலகுவாக உணர்ச்சிவயப்படுபவர்; வேகமாகக்

54. *முஸ்தத்றக் அல்ஹாகிம்.*

கோபமடைந்து தாமதமாக அமைதிநிலைக்குத் திரும்புபவர். கோபமடைந்துவிட்டால் தொழுகையில் கவனம் குவிப்பது அவருக்குச் சிரமமாக இருக்கும். மட்டுமன்றி, பிறப்பியல்பின் எந்த நல்ல பகுதியிலும் அவரால் கவனம் குவிக்க முடியாதுபோய்விடும். இந்நிலையில், இருவரது நற்செயல்களையும் ஒப்பிட்டு ஒவ்வொருவருக்கும் உரிய நன்மைகளைக் கணக்கிட எந்த மனிதனால்தான் முடியும்? இந்த 'மெய்நிகர்' (Virtual) போட்டியில் அதிக நன்மை பெறுபவர் யார்? இதனைக் கண்டறிவது மனிதர்களுக்குச் சாத்தியமற்றது. குறிப்பாக, இருவரிடமும் காணப்படும் இறைவிசுவாசத்தின் தரம் போன்ற ஆன்மீக விவகாரங்களை ஒப்பீடு செய்வது மிகவும் அசாத்தியமானது.

கண்களின் துரோகத்தையும் உள்ளங்கள் மறைத்திருப்பதையும் அறிபவன் அல்லாஹ் மாத்திரமே. அந்த ஆற்றலை அவன் தன்னிடம் மட்டுமே வைத்திருப்பதாகத் திருக்குர்ஆனிலும் குறிப்பிடுகிறான்:

மறுமைநாளில் நாம் நீதியான தராசுகளை ஏற்படுத்துவோம். எனவே எந்த ஆத்மாவும் சிறிதளவும் அநியாயம் இழைக்கப்பட மாட்டாது. ஒரு கடுகளவே ஆயினும் அதனையும் நாம் கணக்கில் கொண்டுவருவோம். கணக்கெடுப்பதற்கு நாமே போதுமானவர்கள். (21:47)

இன்று நாம், தீமை நன்மையாகவும் நன்மை தீமையாகவும் மாறிவிட்ட ஒரு சூழலில் வாழ்கிறோம். நமக்குள் இருக்கும் நல்லியல்புகளைத் துறந்துவிடவே நம்மைச் சூழவுள்ள அனைத்தும் வலிந்து அழைக்கின்றன. நல்ல சூழலில் வாழ்பவர்களுக்குக் கிடைக்கும் நற்கூலியைவிட இவ்வாறான தீமைகளின் அலையை எதிர்த்துப் போராடுபவர்களுக்குக் கிடைக்கும் நற்கூலி மகத்தானது. இந்த வகையில்தான் இறைதூதர் ﷺ தம்முடைய தோழர்கள் சிலருக்குப் பின்வருமாறு கூறியதை நாம் புரிந்துகொள்கிறோம்:

'நிச்சயமாக உங்களுக்குப் பின்னர் ஒரு காலம் வரும். அதில் பொறுமையாக வாழ்வதென்பது கையில் நெருப்புத் தணலை வைத்திருப்பதைப் போன்றதாகும். அப்போது நற்செயல் புரியும் ஒருவருக்கு உங்களில் ஐம்பது பேர் புரியும் நற்செயலைப் போன்று கூலி வழங்கப்படும்.'

அதற்குச் சில நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே, எங்களில் ஐம்பது பேரின் நற்கூலியா அல்லது அவர்களில் ஐம்பது பேரின் நற்கூலியா?' எனக் கேட்டனர்.

அதற்கு நபிகளார், 'இல்லை, உங்களில் ஐம்பது பேரின் நற்கூலி' எனப் பதிலளித்தார்கள்.[55]

இறுதியாக, இவ்வத்தியாயத்தின் முக்கியமான பகுதிக்கு நாம் வருகிறோம். நபிமார்கள் ஏனைய எல்லா முஸ்லிம்களையும்விட சிறப்பிக்கப்பட்டுள்ளமை பற்றியும், மனித மனத்தின் ஃபித்றாவால் ஏற்படுத்தப்படும் நல்லுணர்ச்சித் தூண்டல்களுக்கு அவர்கள் எவ்வாறு துலங்குகிறார்கள் என்பது பற்றியுமான பகுதி இதுவாகும். இதுதொடர்பாக நாம் கூற விரும்புவது இதுதான்:

அல்லாஹ் விசுவாசிகளுக்குப் பாரம்பரிய ஆற்றலொன்றை வழங்கியிருக்கிறான். அவ்வாற்றலைக் கொண்டு அவர்கள் நன்மையை நோக்கி அழைக்கும் சூழலியல் தூண்டல்களைப் பிரித்தறிகிறார்கள். கெட்ட உணர்ச்சித் தடுமாற்றங்களைப் புறக்கணித்துவிடவும் அது அவர்களுக்கு உதவுகிறது.

சாதாரண விசுவாசிகளுக்கே இது கைவரப்பெறும்போது, இறைவனால் அவனது படைப்புகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நபிமார்கள் எப்படியான நிலையில் இருப்பார்கள்?! அவர்கள் மனிதர்களில் அதிக உள்ளச்சமும் பூரண அறிவும் அழகிய நற்பண்பும் வசீகரத் தோற்றமும் கொண்டவர்கள்; சொல்லிலும் செயலிலும், ஆகுமானதிலும் விலக்கப்பட்டதிலும் மனிதர்களுக்கு முன்மாதிரியாகத் தேர்வுசெய்யப்பட்டவர்கள்; வஹீயின் கனத்தையும் அழைப்பின் சிரமங்களையும் தாங்கிக்கொண்டவர்கள். நன்மைகளைத் தூண்டும் இவ்வுணர்ச்சிகள் அவர்களது உள-ஆத்மீகக் கட்டமைப்பில் ஆழ விதைக்கப்பட்டிருந்தன. அதனால்தான் அவர்கள் சிரமமோ பிரக்ஞையோ இன்றி அவற்றுக்கான துலங்கலை வெளிப்படுத்தினர். ஆனால், சாதாரண மனிதர்களது ஃபித்றா நபித்துவத்தின் இக்கடினமான பொறுப்பைச் சுமக்கப் போதுமானதாக இருப்பதில்லை.

இந்த வகையில்தான், அல்லாஹ் நபிமார்களுக்கு 'இஸ்மத்' என்னும் பண்பைக் கொடுத்தான். இஸ்மத் என்பது மொழிரீதியாகப் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதைக் குறிக்கிறது. சன்மார்க்கத்தை எடுத்துச்சொல்லும் விசயத்தில் நபிமார்கள் 'மஅஸூம்'கள் (பாதுகாக்கப்பட்டவர்கள்) என அறிஞர்கள் ஏகோபித்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். அந்த நபிமார்கள் தங்களுக்கு அருளப்பட்ட வஹீயில் எதனையும் மறைப்பதில்லை; மேலதிகமாக எதனையும் சேர்ப்பதுமில்லை.

---

55. சுனனுத் திர்மிதீ.

அவர் நம்மீது சில சொற்களைப் புனைந்து கூறியிருப்பா ராயின், அவரது வலக்கையைப் பிடித்திருப்போம். பிறகு அவரது நாடி நரம்பை வெட்டியிருப்போம். அந்நிலையில், உங்களில் எவரும் அதனைத் தடுக்கக்கூடியவர் அல்லர். (69:44-47)

நபிமார்கள் பெரும் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களாக இருந்தனர். எனினும், அவர்கள் சிறுபாவங்களைச் செய்தார்களா என்பதில் அறிஞர்கள் முரண்பட்ட அபிப்பிராயம் கொண்டுள்ளனர். 'அல்இஸ்மா' என்ற பண்பினுள் சிறுபாவங்கள் அடங்குவதில்லை என்றே அவர்களுள் அனேகர் கூறுகின்றனர். அந்த வகையில், அவர்களிடம் அல்லது அவர்களில் சிலரிடம் சிறுபாவங்கள் சில ஏற்பட்டிருக்க முடியும். பின்னர் அதற்காக அவர்கள் பாவமன்னிப்பு கேட்டு, அல்லாஹ்வும் அவர்களுக்கு மன்னிப்பளித்து தனது அருளை மேலும் சொரிந்திருக்க முடியும் என இவர்கள் கூறு கின்றனர். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஆதமின் தவறுபோன்ற சில நிகழ்வுகளைத் தங்களுக்குச் சான்றாகவும் அவர்கள் முன் வைக்கின்றனர்:

ஆதம் தனது இரட்சகனுக்கு மாறுசெய்து வழி பிசகிவிட்டார். பின்னர் அவரது இரட்சகன் அவரைத் தேர்ந்தெடுத்து, மன்னித்து நேர்வழியும் காட்டினான். (20:121-122)

மூசா ﷺ தவறுதலாக ஓர் எகிப்தியனைக் கொன்றுவிட்டு அதற்காகத் தன் இரட்சகனிடம் பாவமன்னிப்பு கேட்ட நிகழ்வையும் இங்கு அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

இதற்கு மறுகிடையான அபிப்பிராயம் கொண்ட அறிஞர்கள் சிலரும் உள்ளனர். அவர்களுள் பலர் மொராக்கோவைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் 'அஷ்ஷிஃபா' என்னும் நூலை எழுதிய நீதிபதி இயாழ் பிரதானமானவர். இவ்வறிஞர்களின் அபிப்பிராயப்படி, நபிமார்கள் சிறிய பாவங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்கள். எனினும், இவர்கள் தமது வாதத்தை முஹம்மது ﷺ அவர்களது நபித்துவத்துக்கு முந்திய, பிந்திய இஸ்மாவில் மாத்திரமே குவித்துள்ளனர்.

இவ்விரு நிலைப்பாடுகளுக்கும் மத்தியில் எப்படி இணக்கம் காணலாம்? நபிமார்கள் பற்றிய நமது ஆழ்ந்த அவதானங்களின் தொடரிலேயே இதுபற்றியும் கருத்துரைக்க முயல்கிறோம். அந்த வகையில், நமக்கு எழும் கேள்வி இதுதான்:

ஒருவரது சூழல், பாரம்பரியம், ஆளுமை என்பவற்றுக் கிடையிலான பரஸ்பரத் தாக்கமானது அவர் பெரும் பாவங்களில் ஈடுபடாமல் தடுக்க முயலும் ஃபித்றாவுடன் இணைந்து ஆற்றும் இடைவினையைப் போலவே நபி மார்களிடம் உள்ள 'இஸ்மத்' என்ற பண்பும் சிறுபாவங்கள் இழைக்காமல் அவர்களைத் தடுக்குமா?

இவ்விடத்தில் நமது அறியாமையையும், இறைவன் நபிமார்களுக்கு வழங்கிய ஆத்மீக உள்ளறிவு என்ற சமுத்திரத்தின் ஒரு கரையிலேயே நாம் நிற்கிறோம் என்பதையும் வாசகருக்கு வலியுறுத்த விரும்பு கிறோம். ஆயினும் — மறுபுறத்தில் — நாம் சொல்லத் துணியும் கருத்தின் ஏற்புநிலைக்கான சான்று புனிதத் திருக்குர்ஆனில் காணப்படுகிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறோம். அந்த நபிமார்களில் சிலரைவிட வேறு சிலரை அல்லாஹ் மேன்மைப் படுத்தி வைத்திருந்ததாகத் திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

வானங்களிலும் பூமியிலும் இருப்பவர்களை உமது இரட்சகன் நன்கறிந்தே இருக்கிறான். நாம் நபிமார்கள் சிலரை வேறு சிலரைவிட மேன்மைப்படுத்தியுள்ளோம். தாவூதுக்கு நாம் ஸபூர் வேதத்தை அருளினோம். (17:55)

அந்தத் தூதர்களில் சிலரை மட்டும் சிலரைவிட நாம் மேன்மைப்படுத்தினோம். அவர்களில் சிலருடன் அல்லாஹ் நேரடியாகப் பேசியிருக்கிறான். அவர்களை அவன் பல அந்தஸ்துகள் உயர்த்தியும் வைத்தான். (2:253)

நபிமார்களது நடத்தையில் அவர்களது இஸ்மாவின் செல்வாக்கு வெவ்வேறு விதமாக அமைந்திருந்ததே அவர்களில் சிலரைவிடச் சிலர் மேன்மைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமைக்கான காரணமாக இருந்திருக்கலாம். நிச்சயமாக நமது அன்புக்குரிய தூதர் முஹம்மது ﷺ அவர்களை அல்லாஹ் அனைத்து நபிமார்களைவிடவும் மேன்மைப்படுத்தி வைத்தான். மட்டுமன்றி, மனு வர்க்கம், ஜின்னு வர்க்கம், வானவர்கள் உள்ளிட்ட நமக்குத் தெரியாத எல்லாப் படைப்புகளைவிடவும் அன்னாரை அவன் மேன்மைப் படுத்தி வைத்தான். அந்த வகையில், சிறுபாவங்கள் செய்வதி லிருந்துகூட முஹம்மது ﷺ பாதுகாக்கப்பட்டதனூடாக எல்லா நபிமார்களைவிடவும் அன்னார் மேன்மைப்படுத்தப்பட்டிருந்தார்க ள் என்ற நிலைப்பாட்டில் முற்கால மொராக்கோ அறிஞர்களுடன் நாமும் உடன்படுகிறோம்.

மக்காவிலிருந்து ஜெருசலேமுக்கு அன்னார் மேற்கொண்ட ‘அல்இஸ்றா’ என்ற நடுநிசிப் பயணத்தின்போது நபிமார்களுக்குத் தலைமைதாங்கி தொழுகை நடத்தியதுபோன்ற ஆத்மீகக் கொடைகளும் அன்னாருக்கு வழங்கப்பட்டிருந்தன. எந்த ஒரு நபிக்கோ வானவருக்கோ கிட்டாத ‘மிஃறாஜ்’ என்னும் விண்ணுலகப் பயண அத்தாட்சிகள் மூலமாகவும் அன்னார் மேன்மைப்படுத்தப்பட்டிருந்தார்கள். இவ்வாறு நமக்குத் தெரியாத வேறுபல கொடைகளும் அன்னாருக்கு வழங்கப்பட்டிருக்கலாம். அதுபற்றிய ஆய்வை முழுமையாக மேற்கொள்ள முற்பட்டால் நமது தற்போதைய ஆய்வுத் தலைப் பிலிருந்து வெளியேறிவிடுவோம். எனவே, உண்மையாளரான முஹம்மது ﷺ அவர்கள் தாமே குறிப்பிட்ட சில கூற்றுகளுடன் இங்கு போதுமாக்கிக்கொள்வோம்.

அந்த வகையில், சில நபிமார்கள் கூறிய அல்லது செய்த சில விசயங்களைக் குறித்துக்காட்டிய நபிகளார், ‘அந்த நபிமார்களின் இடத்தில் நான் இருந்திருந்தால் அப்படிக் கூறியிருக்க மாட்டேன் அல்லது செய்திருக்க மாட்டேன்’ எனக் கூறிய சில சந்தர்ப்பங்களை இங்கு நாம் குறித்துக்காட்ட முடியும். சிறுபாவங்களிலிருந்தான பாதுகாப்பு அந்த நபிமார்களை அவ்வாறு கூறுவதிலிருந்தோ செயல்படுவதிலிருந்தோ தடுக்கவில்லை என்பது அவற்றிலிருந்து நமக்குத் தெளிவாகிறது.

நபி லூத்தின் சமூகத்தினர் அவருடைய விருந்தினர் இருவர்மீது மானக்கேடான செயல் புரிய கோரிக்கை விடுத்தபோது, அதற்குப் பதிலாக அவர் பல ஆலோசனைகளை அவர்களுக்கு முன்வைத்தார். அவர்கள் எதற்குமே இணங்காதபோது இப்படி அங்கலாய்க்கிறார்:

> உங்களைத் தடுக்க எனக்குப் போதுமான பலம் இருக்க வேண்டாமா?! அல்லது சக்திமிக்க உதவியாளர்களுடன் நான் சேர்ந்துகொள்ளக் கூடாதா?! (11:80)

அதாவது, அவர்களது தீங்கிலிருந்து தன்னைப் பாதுகாத்து உதவக்கூடிய குழுவொன்று தனக்கு இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். நபி லூத்தின் இந்தக் கையறுநிலை குறித்து இறைத்தூதர் முஹம்மது ﷺ இவ்வாறு கூறினார்கள்:

> லூத்தின் மீது அல்லாஹ் கருணை புரிவானாக! அவர் பலம்மிக்க ஒரு குழுவின் உதவியை நாடும் நிலையில்தான் இருந்திருக்கிறார். எதற்காக அவர் அவ்வளவு தாழ்ந்து போனார்?!

அதேபோல் நபி மூசா ﷺ பற்றியும், ஃகிள்ரு ﷺ தொடர்பாக அவர் பொறுமை காக்கச் சக்தியற்றவராக இருந்தமை பற்றியும் குறிப்பிட்ட இறைத்தூதர் ﷺ அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

> அல்லாஹ் நம் மீதும் மூசாவின் மீதும் கருணை புரிவானாக! அவர்கள் இருவரதும் செய்திகள் பற்றி அல்லாஹ் மேலும் நமக்குப் பல செய்திகளைக் கூறும் வகையில் அவர் பொறுமையாக இருந்திருக்க வேண்டாமா!

அத்தியாயம் அல்கஹ்ஃபில் கூறப்பட்டுள்ளதுபோல், ஃகிள்ரின் வேறுபல அற்புதங்களையும் நாம் தெரிந்துகொள்ளாமல் நபி மூசாவின் பொறுமையின்மை தடுத்துவிட்டது. அவரது இடத்தில் நம்முடைய திருத்தூதர் இருந்திருந்தால் நிச்சயமாகப் பொறுமை காத்திருப்பார்கள்.

சிறையிலிருந்து வெளியே வருமாறு மன்னர் விடுத்த அழைப்பை நபி யூசுஃப் ﷺ மறுத்தமை குறித்து இறைத்தூதர் ﷺ இவ்வாறு கூறினார்கள்:

> யூசுஃப் சிறையில் இருந்த காலமளவுக்கு நான் இருந்திருந்தால் மன்னரின் அழைப்பை ஏற்றுக்கொண்டிருப்பேன்.[56]

அதாவது, 'என்னைச் சிறை வாழ்வு மூலம் சோதித்து, பின்னர் அதிலிருந்து வெளியேற அருள்பாலித்த அல்லாஹ்விடமே என்னை நிரபராதியாக நிரூபிக்கும் பொறுப்பையும் விட்டிருப்பேன்' என்பதே இதன் பொருளாகும்.

இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது நாம் கூற விரும்புவது இதுதான்:

அல்லாஹ் நபிமார்களுக்குப் பல ஆத்மீகக் கொடைகளை வழங்கியிருந்தும் அவர்களுள் சிலர் சில சிறுபாவங்களை இழைத்தார்கள் எனில் அதற்குக் காரணம் அவர்களது சூழல், பாரம்பரியம் என்பவற்றுடன், மனிதர்கள் என்ற வகையில் அவர்களிடம் காணப்பட்ட தனிப்பட்ட ஆளுமைப் பண்புகளுமே. அப்பண்புகளில் பலமும் இருந்தது; பலவீனமும் இருந்தது. அல்லாஹ் அவனுடைய நபிமார்கள் சிலரை அவர்களது சில செயல்களுக்காகக் கண்டித்தமை பற்றிக் குறிப்பிடும் திருமறை வசனங்களைப் படிக்கும்போது இது நமக்குப் புரிகிறது. வாசகர்கள் அவற்றைக் கூர்ந்து அவதானித்து

56. ஸஹீஹுல் புஃகாரீ.

நம்முடைய திருத்தூதர் ﷺ அவர்களது வார்த்தைகளையும் செயல் களையும் அவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்க முடியும்.

அந்த வகையில், இதோ நூஹ் ﵇ தனது கப்பலில் இறை விசுவாசிகளுடன் மலைகள்போன்ற பேரலையின் மீது பயணித்துக் கொண்டிருக்கிறார். அவ்வேளை தனக்குக் கட்டுப்படாமல் நிராகரித்திருந்த தன்னுடைய மகனையும் விசுவாசிகளுடன் இணைந்துகொள்ளுமாறு அவர் அழைக்கிறார். ஆனால் அவன் அதனை மறுத்து நிராகரிப்பாளனாகவே இறந்துவிடுகிறான். தந்தைப் பாசத்தின் வேதனை அவரை ஆட்கொள்ள, தன் இரட்சகனை நோக்கி இப்படிப் பிரார்த்திக்கிறார்:

> நிச்சயமாக என்னுடைய மகன் என் குடும்பத்தைச் சேர்ந் தவன். நிச்சயமாக உனது வாக்குறுதி உண்மையானது. நீதி வழங்குவோருக்கெல்லாம் நீதியாளனாக நீ இருக்கிறாய். (11:45)

அப்போது கண்டனம் போன்றும் எச்சரிக்கை போன்றும் இறை வனின் பதில் சீக்கிரமாகவே வருகிறது:

> நூஹே, நிச்சயமாக அவன் உம்முடைய குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன். நிச்சயமாக அவனது செயல் ஒவ்வாத செயல்தான். ஆகவே, நீர் அறியாத விசயம் பற்றி என்னிடம் கேட்காதீர். அறியாமை கொண்டவர்களுள் ஒருவராகிவிட வேண்டாம் என்று திடமாக உமக்கு நான் உபதேசம் செய்கிறேன். (11:46)

அப்போது நூஹ் ﵇ தனது பிரார்த்தனையின் அபாயத்தைப் புரிந்து இறைவனிடம் சரணாகதி அடைகிறார்:

> இரட்சகா, எனக்கு அறிவில்லாத விசயம் குறித்து உன்னிடம் கேட்பதைவிட்டும் உன்னிடமே பாதுகாவல் தேடுகிறேன். நீ என்னை மன்னித்து கிருபை செய்யாவிட்டால், நான் நஷ்டமடைந்தவனாக ஆகிவிடுவேன். (11:47)

இந்நிலைப்பாட்டையும், தூதர் முஹம்மது ﷺ அவர்கள் தமது சித்தப்பாவான அபூலஹபு போன்ற நெருங்கிய உறவினர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தபோது கொண்டிருந்த நிலைப்பாட் டையும் ஒப்பிட்டுப்பாருங்கள். மட்டுமன்றி, திருட்டுக் குற்றம் உறுதியாகிய மஃக்ஸூம் கோத்திரப் பெண்ணின் தண்டனை தொடர்பாக உசாமா இப்னு ஸைது சிபாரிசு செய்ய வந்தபோது

அன்னார் கோபம் கொண்டு கூறிய இவ்வார்த்தைகளையும் கவனியுங்கள்:

> அல்லாஹ் விதித்த தண்டனை பற்றியா என்னிடம் சிபாரிசுக்கு வந்தீர்?! அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடியிருந்தாலும் அவளது கரம் வெட்டப் பட்டிருக்கும்.[57]

பொதுவாக அல்லாஹ்வால் கண்டிக்கப்படும் வகையில் நபிமார் களிடமிருந்து வெளிப்பட்ட சில வார்த்தைகளையும் செயல்களையும் உணர்ச்சிகளையும் பற்றித் திருக்குர்ஆன் எடுத்துரைக்கும்போது, பிற நபிமார்களைவிட முஹம்மது ﷺ பெற்றிருந்த சிறப்பு தெளிவாக வெளிப்படுவதைக் காணலாம். உதாரணமாக, நபி யூனுஸ் ؑ தனது சமூகத்தின் மீது கோபம் கொண்டு, அவர்கள்மீது அல்லாஹ்வின் தண்டனை இறங்கும் என எச்சரிக்கிறார். பின்னர், அவருக்கு அல்லாஹ்வின் அனுமதி வழங்கப்பட முன்னதாகவே தன் சமூகத்தைவிட்டுப் போய்விடுகிறார். நபி யூனுஸ் பொறுமை குறைவானவராக இருந்ததாக இமாம் அத்தபரீ தனது திருக்குர்ஆன் விளக்கவுரையில் குறிப்பிடுகிறார். அந்த வகையில்தான் அவரது கடுங்கோபமும் அவசர நடவடிக்கையும் அமைந்திருக்க வேண்டும்.

நபி தாவூது தன்னிடம் வந்த வழக்கில் ஒரு சகோதரன் சொன்னதை மாத்திரம் வைத்து — அடுத்த சகோதரனின் வாதத்தைக் கேட்காமல் — அவசரப்பட்டுத் தீர்ப்பு சொன்னதும், பிறகு அதற்காக வருந்தி தன் இரட்சகனிடம் மண்டியிட்டுப் பாவமன்னிப்பு கேட்டதும் இவ்வாறான ஒன்றுதான்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், இறைவன் அந்த நபிமார்களைக் கண்டித்தமைக்கும் நபி முஹம்மதைக் கண்டித்தமைக்கும் மத்தியில் ஒப்பீடு செய்துபாருங்கள். நமது நபிகளார் ﷺ அவர்களை அல்லாஹ் கண்டித்த எல்லாச் சந்தர்ப்பங்களும் அன்னார் தமது சமூகத்தவர் நேர்வழி பெற வேண்டும் என்பதில் காட்டிய கடும் ஆர்வம் பற்றியவையாகவே அமைந்திருந்தன. அந்த ஆர்வம் அன்னாரின் ஆரோக்கியத்தைப் பாதித்தது மட்டுமன்றி, அன்பு, இரக்கம், பாசம் என்பன பற்றிய அனைத்து மனிதக் கருத்தாக்கங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. எனவேதான், அன்னாரைக் கண்டித்த வசனங்கள்கூட அன்னார்மீது அனுதாபத்தையும் ஆறுதலையும் வெளிப்படுத்தின:

---

57. ஸஹீஹுல் புஃகாரீ.

*(நபியே) இந்த வேதத்தில் அவர்கள் நம்பிக்கை கொள்ளா விட்டால், அவர்களுக்காக வருந்தி உம்மை நீரே அழித்துக் கொள்வீர் போலும்!* (18:6)

*ஆகவே, அவர்களுக்காக உமது உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு நீர் கவலைப்பட வேண்டாம்.* (35:8)

*அவர்கள் விசுவாசம் கொள்ளாதிருப்பதால் உம்மை நீர் அழித்துக்கொள்வீர் போலும்.* (26:3)

இவ்வசனங்களில் அல்லாஹ் சங்கைமிகு தூதர் மீதான தனது அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறான். தனது சமூகம் பற்றிய கவலையில் அவர் தன்னையே அழித்துக்கொள்வாரோ என்று பரிதாபப்படுகிறான். தனது சமூகத்தில் வழிதவறிப்போய்ச் சொல்லொணாத் தீங்கு புரிந்தவர்கள் மீதுகூட நபிகளார் ﷺ இரக்கத்தையும் பாசத்தையும் வெளிப்படுத்தியதை அன்னாரது சுகந்தம்மிகு வாழ்வியல் நமக்குக் கூறிக்கொண்டிருக்கிறது.

இந்த நுண்ணிய தெய்வீக உணர்வுகளைத் தாங்கிக்கொள்வதற்கு இறைத்தூதர் ﷺ கொண்டிருந்த மகத்தான ஆற்றல் பற்றி நான் அதிகம் சிந்தித்திருக்கிறேன். ஏனெனில், இறைத்தூதர் அவர்கள் கண்ணியமான தம்முடைய தோழரான ஜஅஃபர் இப்னு அபூ தாலிபை நோக்கி, 'நீர் தோற்றத்திலும் பண்பிலும் என்னைப் போன்றவர்'[58] எனக் கூறியபோது அவர் ஆனந்த மிகுதியால் அபிசீனியர்கள் போன்று துள்ளிக்குதித்தமை பற்றி ஏற்கனவே நாம் குறிப்பிட்டோம். உண்மையில் இத்தகைய கூற்றை உயர்வும் மாட்சிமையும்மிக்க அல்லாஹ்வே கூறுவதாக இருந்தால் நிலைமை எப்படி இருக்கும்?

உபை இப்னு கஅபு ﷺ அறிவிக்கிறார்:

*நபி ﷺ அவர்கள் கண்ணியமான நபித்தோழர் ஒருவரைப் பார்த்து, 'உமக்குத் திருக்குர்ஆனை மனனமிட்டுக் கொடுக்குமாறு அல்லாஹ் என்னை ஏவினான்' எனக் கூறினார்கள். அதற்கு அந்தத் தோழர், 'அல்லாஹ்வின் தூதரே, எனது பெயரைக் குறிப்பிட்டா அப்படிக் கட்டளையிட்டான்?' எனக் கேட்டார். இறைத்தூதர் ﷺ 'ஆம்' என்றதும், நபித்தோழரால் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதுபோனது. புத்தி பேதலித்தவர்போன்று ஒரே நேரத்தில் அழவும் சிரிக்கவும் தொடங்கிவிட்டார்.*[59]

---

58. *ஸஹீஹுல் புஃகாரீ.*

59. மேலது.

*இவ்வாறு, தன்னை நிராகரித்தவர்கள் பற்றிய பெரும் கவலையி லிருந்து அல்லாஹ்வின் ஆறுதல் வார்த்தைகளால் கிடைக்கும் அதியுச்ச மகிழ்ச்சியை நோக்கிய மகத்தான உணர்ச்சி நகர்வை நபிகளார் சட்டென எப்படித் தாங்கிக்கொண்டார்கள்?! நிச்சயமாகத் தனது தூதை எங்கே அனுப்ப வேண்டும் என்று அல்லாஹ் அறிந்தே இருந்தான். இறைத்தூதரது இந்தத் தாங்குசக்தியும் உணர்வாற்றலும் நமக்குத் தெரியாத ஒன்று. அன்னாரே அதனை இப்படிக் கூறினார்கள்: 'நான் அறிவதை நீங்களும் அறிவீர்களானால், கொஞ்சமாகச் சிரித்து அதிகம் அழுதிருப்பீர்கள்.'*[60]

*திர்மிதீயின் ஓர் அறிவிப்பில் அன்னார் இப்படிக் கூறினார்கள்:*

> *அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அறிவதை நீங்கள் அறிவீர்களானால் குறைவாகச் சிரித்து அதிகமாக அழு திருப்பீர்கள்; படுக்கையில் பெண்களைத் துய்த்திருக்க மாட்டீர்கள்; அல்லாஹ்விடம் மன்றாடுவதற்காகக் குன்றுகளை நோக்கி விரைந்திருப்பீர்கள்.*

*அத்தியாயம் அபசவில் இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது இறங்கிய கடுமையான கண்டனம்கூட உண்மையில் நபிகளார் தமது அழைப்பைப் பரப்புவதில் கொண்டிருந்த கடும் ஈடுபாட்டையும், அன்னாரது உயர்பண்பாட்டுத் தரத்தையுமே எடுத்துக்காட்டுகிறது.*[61] *அத்தகைய உயர்நிலை நபிமார்களின் தலைவருக்கே சாத்தியமாகும். ஏனெனில், அச்சந்தர்ப்பத்தில் நபிகளார் வலீது இப்னுல் முகீறா வையும் சில குறைஷித் தலைவர்களையும் நேர்வழிக்குக் கொண்டு வந்துவிடும் எதிர்பார்ப்புடன் அதில் முழுக் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது வறியவரும் அந்தகருமான இப்னு உம்மி மக்தூம் இறைத்தூதரின் பேச்சினிடையே குறுக்கிட்டு, 'அல்லாஹ் உங்களுக்குக் கற்றுக்கொடுத்ததை எனக்கும் கற்றுத் தாருங்கள்' எனக் கேட்கிறார். அவர் திரும்பத்திரும்பக் கடுமையாக வற்புறுத்திக்கொண்டிருந்தது நபிகளாருக்குப் பிடிக்காததால் கடுகடுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்கள்.*

*அந்தப் புறக்கணிப்பையும் கடுகடுப்பையும் கண்டித்தே 'அபச' என்னும் அத்தியாயம் இறங்கியது. இவ்வாறான சந்தர்ப்பங்களில்*

---

60. மேலது.

61. நபிமார்களும் சிறு பாவங்கள் இழைக்க முடியும் எனக் கூறிய சிலர் முஹம்மது ﷺ அவர்களும் அத்தகைய சிறு பாவங்களை இழைத்திருப்பதற்கான சான்றாக இக்கண்டனத்தைக் குறிப்பிட்டனர்.

நமது இயல்பான எதிர்வினை எப்படி இருக்கும் எனக் கண்ணியமிக்க வாசகர் சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக, பெரும் முக்கியத்துவம் கொண்ட ஓர் விவகாரத்தில் உங்கள் சிந்தனையும் உணர்வும் குவிக்கப்பட்டிருக்கின்றன. தீர்மானிக்கும் தரத்தில் உள்ள சிலருடன் அதுபற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்போது பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு நபர் வந்து உங்களது உரையாடலில் குறுக்கிட்டு ஏதோ ஓர் உதவியைக் கேட்கிறார். அந்த முக்கியமான உரையாடலை முடித்துவிட்டுக்கூட உங்களால் அவருக்கு உதவ முடியும். ஆனால் அவரோ இடைவிடாமல் வற்புறுத்திக்கொண்டே இருக்கிறார். இந்நிலையில், உங்களுடன் உரையாடிக்கொண்டிருந்த முக்கியமான நபர்கள் போன பிறகு நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்? கோபப்பட்டுக் கூச்சலிடுவீர்கள். சிலபோது அந்த மனிதர் கேட்ட உதவியைச் செய்யவும் மறுத்துவிடுவீர்கள். இவையனைத்துமே நமது சமூகங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய எதிர்வினைகள்தான்.

ஆனால் நபிகளார் ﷺ செய்தது என்ன? வெறுமனே கடுகடுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொண்டது மட்டும்தான். அந்தக் கடுகடுப்பையும் புறக்கணிப்பையும்கூட அந்தப் பார்வையற்றவரால் பார்க்க முடியாது. இப்னு உம்மி மக்தூமின் வற்புறுத்தலால் ஏற்பட்ட கோபத்தை நபிகளார் வார்த்தைகளாலோ குரலாலோ வெளிப்படுத்தவில்லை. ஏனெனில் அவர் செவிடர் அல்லர். நபிகளார் அப்படியேதும் பேசிவிட்டால் அவரை அது புண்படுத்த முடியும். அருட்கொடையாக வந்த தூதரிடமிருந்து அப்படி ஓர் எதிர்வினை பிறக்க முடியாது.

முன்னர் நாம், ‘நற்பண்புகளை நோக்கி அழைக்கும் உணர்ச்சித் தூண்டல்கள்’ என்ற மூன்றாவது வகை பற்றி உரையாடியதை இங்கு வாசகருக்கு நினைவுபடுத்துகிறோம். அத்தகைய தூண்டல்கள் நபிமார்களிடம் இயல்பாகவே அமையப்பெற்றிருந்ததாகவும், அவற்றை அவர்கள் அநாயாசமாகவும் வருத்திக்கொள்ளாமலும் செயல்படுத்தியதாகவும் நாம் குறிப்பிட்டோம். ஆனால், சாதாரண மனிதர்களின் நிலை அவ்வாறானதல்ல. மனத்தின் கயமையையும் சுயநலத்தையும் எதிர்த்துப் போராடாமல் அவர்களால் அதனை எட்ட முடியாது. எவர் சிறந்த வகையில் செயல்படுகிறார் என்று சோதித்தறிவதற்காக இறைவன் அவர்களை அப்படித்தான் படைத்திருக்கிறான்.

இவ்வகையான உணர்ச்சித் தூண்டல்கள் நவீனச் சடவாத உலகில் நமது விழுமிய நடத்தைமீது பெறும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அவை பற்றிச் சிறிது கலந்துரையாட நான் விரும்புகிறேன்.

ஒருவர் தனது உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துகிறார் என்ற மையப்புள்ளியைச் சுற்றியே பண்பாட்டு விழுமியங்கள் என்ற சக்கரம் சுழல்கிறது. உடல் இச்சைகளையும், கோபம், பொறாமை, கோழைத்தனம், சுயநலம் போன்ற மோசமான அம்சங்களையும் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும், பரிவு, இரக்கம், தாராளத்தன்மை, அற்பணம், துணிச்சல், கோபத்தை அடக்குதல் முதலிய — பகுத்தறிவும் சன்மார்க்கமும் நல்லவையாக ஏற்றுக்கொள்கின்ற — பண்புகளைக் கைக்கொள்வதன் மூலமாகவுமே இது இடம்பெற முடியும். சிறந்த மனிதர்கள் அளவிடப்படுவதற்கான தரநிர்ணயப் பண்புகள் இவைதான். மனிதர்களின் மதிப்பை ஏற்றுக்கொள்ளும் தேசங்களில் இப்பண்புகளின் மூலமாகத்தான் அவர்கள் தலைமைத்துவ அந்தஸ்துகளில் அமர்கிறார்கள்.

அமீருல் முஃமினீன் உமர் இப்னுல் ஃகத்தாபைப் போல் மனிதர்களின் மாண்பை அறிந்து மதித்தவர் யார்? நபித்தோழர் ஒருவரை ஏதோ ஒரு பிரதேசத்திற்கு ஆளுநராக நியமிக்க முன்னர், நாம் மேலே விளக்கிய பண்புகள் அவரிடம் உள்ளனவா என்று உறுதிப்படுத்திக்கொள்ளவே உமர் ﵁ முதலில் ஆர்வம் காட்டுவார். நல்ல விழுமியங்களை நோக்கித் தூண்டக்கூடிய உணர்ச்சிகள் அந்நபரிடம் உள்ளனவா என்றும், உடலிச்சைகளையும் கோபத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டவரா என்றும் அவர் ஆராய்வார். அந்த வகையில், குறித்த நபர் பற்றித் தெரிந்த ஒருவரிடம் விசாரிப்பார். ‘அவர் நல்லவர்தான்’ என யாராவது நற்சான்று வழங்கினால், ‘அவரை உண்மையிலேயே நன்றாக அறிவீரா?’ என மீண்டும் கேட்பார். அவர் ‘ஆம்’ என்று கூறினால், அந்த அறிமுகம் எப்படியானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல கேள்விகளைக் கேட்பார்

நீர் அவரது அயலவரா?

அல்லது அவருடன் பணக் கொடுக்கல்வாங்கல் செய்திருக்கிறீரா?

அல்லது அவருடன் பயணம் செய்திருக்கிறீரா? ...

இவ்வாறு உமரின் கேள்விகள் அமைந்திருக்கும். இக்கேள்விகளுக்கு அவர் ‘இல்லை’ எனப் பதிலுரைத்தால், ‘சென்றுவாரும்; உமக்கு அந்த நபரைத் தெரியாது’ என்று கூறிவிடுவார். ‘அவர் பள்ளி

வாசலில் இப்படித் தலையைக் குனிவதை நீர் பார்த்திருப்பீர்' எனக் கூறி 'றுகூஉ' செய்வதுபோல் உமர் தலையால் சைக்கினையும் செய்துகாட்டுவார். அதாவது, குறித்த நபர் தொழுவதைக் கண்டு அவர் ஆட்சிப்பொறுப்புக்குத் தகுதியானவர்தான் என்ற முடிவுக்கு இவர் வந்திருப்பார் என்பதையே இங்கு உமர் உணர்த்துகிறார்.[62]

தரம் வாய்ந்த மனிதர்களைக் கண்டறிவதற்கு இவ்வகையான உணர்ச்சிகள் எவ்வளவு முக்கியமானவை என்பது பற்றி உமர் இப்னுல் ஃகத்தாபு ஆழமாகத் தெரிந்துவைத்திருந்தார் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. 'சத்தியத்தை உள்ளத்தால் உணர்ந்து பேசுபவர்' என இறைத்தூதர் ﷺ அவர்களும் உமரை வர்ணித்திருக்கிறார்கள்.

ஒருவரது ஆளுமையில் உள்ள இந்த உணர்ச்சிப் பரிமாணத்தை அவர் எப்படிக் கையகப்படுத்திக்கொள்கிறார் என்பதே அவர் பற்றி அறிந்திருப்பதற்கான பிரதான உரைகல்லாகும். அது நுண்மையான உறவாடல் மூலமாகவே கைகூட முடியும்.

உதாரணமாக, அவருக்கருகில் வசித்தால் அவர் தன்னுடைய மனைவியின் மீதும் குழந்தைகள் மீதும் கோபம் கொண்டு திட்டுவதை அல்லது இனிமையாகப் பேசுவதை உள்வீட்டிலிருந்தே உங்களால் கேட்க முடியும். அவருடைய மனைவியும் குழந்தைகளும் உங்கள் மனைவியோடும் குழந்தைகளோடும் பழகுவதன் மூலமாகக்கூட அவர் பற்றிய சரியான அறிவை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். ஒருவருடன் நீண்டதோர் பயணத்தை மேற்கொள்வதும் அப்படித்தான். முன்னைய காலங்களில் பயணம் செய்வோர் பல்வேறு விதமான கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அக்கஷ்டங்கள் ஒருவரது பொறுமையின்மை, சுயநலம், பயணத்தின் உண்மையான அல்லது கற்பனையான அபாயங்கள் பற்றிய அளவுகடந்த பயம் முதலிய பண்புகளை வெளிப்படுத்திவிடும்.

இதேபோன்றுதான், பணக் கொடுக்கல்வாங்கல் மூலமாக ஒருவர் பணத்தைத் தனக்கு அடிமையாக வைத்திருக்கிறாரா அல்லது அவரே பணத்துக்கு அடிமையாக இருக்கிறாரா என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். பண விவகாரத்தில் ஒருவர் உண்மையாக நடந்துகொள்வது என்பது தனது கீழான உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக்கொள்ள அவர் எவ்வளவு ஆற்றல் பெற்றுள்ளார் என்பதிலேயே தங்கியுள்ளது.

---

62. *முஸ்தத்றக் அல்ஹாகிம்; சுனனுத் திர்மிதீ.*

ஒருவரால் விரும்பத்தகாத தனது உணர்ச்சிவயப்பாடுகளைத் தன்னுடன் வாழ்பவர்களிடமிருந்து மறைக்க முடியாது. அத்தகைய உணர்ச்சிகள் உலகில் மனிதர்களது வெறுப்பையும் மறுமையில் அல்லாஹ்வின் தண்டனையையும் பெற்றுத்தருவது மட்டுமன்றி, குறித்த நபர் எதிர்பார்த்த மகிழ்ச்சி, அமைதி என்பவற்றையும் இல்லாமல் ஆக்கிவிடும். ஏனெனில், அவருக்குள் எந்தக் கடிவாளமுமின்றித் தான்தோன்றித்தனமாக விடப்பட்டிருக்கும் சுயநலமான ஆசைகள் காலப்போக்கில் இன்னும் அதிகரிப்பதுடன், இச்சைகளைக் கட்டுப்படுத்துவதற்கான கடிவாளமும் பலவீனமடைந்துவிடும். இறுதியில் அவர், நிறைவேற்ற முடியாத தேவைகளின் கைதியாகவும், தவிர்க்க முடியாத அச்சங்களின் அடிமையாகவும் மாறிவிடுவார். பலவீனர்கள்மீது எவ்வளவு அதிகாரம் பெற்றவராகவும், சொத்து செல்வங்களைக் குவித்துவைத்தவராகவும் இருந்தாலும், அந்த அதிகாரமும் செல்வமும் இறுதியில் அவரது துன்பநெருப்புக்கே எரிபொருளாக மாறும்:

> ஆகவே, அவர்களது செல்வங்களும் மக்களும் உங்களைப் பிரமிக்கச்செய்ய வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் அவற்றைக் கொண்டு இவ்வுலக வாழ்வில் அவர்களை வேதனை செய்வதையும், நிராகரிப்பாளர்களாக இருக்கும் நிலையில் அவர்களது உயிர்கள் பிரிவதையுமே விரும்புகிறான். (9:55)

இதன் காரணமாகத்தான், இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்த இழிபண்புகளிலிருந்து அதிகம் பாதுகாப்பு தேடினார்கள். இவ்வாறான பல பண்புகளை உள்ளடக்கிய அன்னாரது ஓர் பிரார்த்தனையை அனஸ் இப்னு மாலிக் ؓ வாயிலாக இமாம் அல்புஃகாரீ பின்வருமாறு பதிவுசெய்கிறார்:

> இறைவா கவலையிலிருந்தும் துக்கத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். இயலாமையிலிருந்தும் சோம்பலிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.கோழைத்தனத்திலிருந்தும் கஞ்சத்தனத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். கடன் சுமையிலிருந்தும் மனிதர்களின் அத்துமீறலிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் செறிவான மொழி வாய்க்கப்பெற்றிருந்தார்கள். இப்பிரார்த்தனையில் உள்ள சொற்ப வார்த்தைகளில் மிக முக்கியமான தீய உணர்ச்சிகளை அன்னார் சுருக்கித் தருகிறார்கள். ஒருவர் இவ்வுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளாவிட்டால் அவர்மீது அவை ஆதிக்கம் பெற்றுவிடும். நமது நவீன

உளவியல் மொழியில் கவலை என்பது ‘பதற்றம்’ (Anxiety) என்ற பதத்தால் குறிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஏற்பட முடியுமான பிரச்சினைகளையும் துன்பங்களையும் பற்றிய பயவுணர்வையும் பதற்றத்தையும் இது குறிக்கிறது. ‘துக்கம்’ என்பது கடந்தகாலத்தில் அன்புக்குரிய ஒருவரின் இழப்பால் அல்லது விருப்பத்துக்குரிய ஒன்று தவறிப்போனதால் ஏற்படும் சோகமும் நிராசையுமாகும். இத்தகைய துக்கத்தோடும் மன அழுத்தத்தோடும் இணைந்த வகையில் தோன்றும் தெளிவான அடையாளங்களே இயலாமையும் மந்தவுணர்வுமாகும். மனோதத்துவ மருத்துவர்கள் இதனை மன அழுத்தத்தின் முக்கியமான நோய்க்குறியாகக் கருதுகின்றனர்.

இன்று உளவியல் சிகிச்சை நிலையங்களை நாடுவோருள் மிகப் பெரும்பாலோர் கலக்கம், துக்கம் ஆகிய இரு பிரச்சினைகளுக்கான நோய்க்குறிகளால் வருந்துபவர்கள்தான். அதாவது எதிர்காலம் பற்றிய கலக்கமும், இறந்தகாலம் பற்றிய துக்கமும். ஆனால் அல்லாஹ்வை விசுவாசித்து அவனிடம் தனது விவகாரங்களை முழுமையாக ஒப்படைத்துவிடும் இறைவிசுவாசியை இவ்விரு பிரச்சினைகளும் ஆட்கொண்டுவிடாமல் அல்லாஹ் பாதுகாக்கிறான். அல்லாஹ்வின் நாட்டத்தையும் விதியையும் பற்றிய விசுவாசம், ஒரு முஸ்லிம் வாழ்வில் இழந்தவை குறித்த மனத் துன்பங்களைக் குறைக்கிறது. அவ்வாறே, எதிர்காலம் அல்லாஹ்வின் கையில் இருப்பதாகவும், அதனை மாற்றும் சக்தி தன்னிடம் இல்லை என்றும் ஒரு முஸ்லிம் நம்புவது அவனது உள்ளத்தையும் சிந்தனையையும் கவலை பெரிதும் ஆட்கொண்டுவிடாமல் தணிக்கிறது. ‘போனது போனதுதான். வரவிருப்பது மறைவானது. நீ இப்போது இருக்கும் நேரமே உனக்குரியது!’[63] என்பது இதனைத்தான்.

இதனால்தான் உளவியல் சமநிலை பாதிக்கப்பட்ட இறை விசுவாசிகளுக்கு வழங்கப்படும் உளவியல் சிகிச்சையானது குறுகிய காலத்திலேயே உரிய விளைவைத் தருகிறது. ஆனால் உளவியல் சிகிச்சையாளர் தனது சிகிச்சையை இந்த இஸ்லாமியக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் அமைத்துக்கொள்வது முக்கியம். கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் நோயாளிகளுடன் எனக்குக் கிடைத்த அனுபவத்தின்படி மேற்கத்திய மருந்து-உளவியல் சிகிச்சையானது மேலோட்டமானது; இஸ்லாமிய அறிவு-உளவியல் சிகிச்சையுடன் (Islamic Cognitive Behavior Therapy) ஒப்பிடும்போது நிலைபேறற்ற

---

63. அல்முஸ்தஃசிமீ, *‘அத்துருல் ஃபரீது வ பைதுல் கசீது’*, தாருல் குதுப் அல்இல்மிய்யா, 2015, பாகம் 3, பக்.506.

பயன்களைக் கொண்டது. இதுதொடர்பாகப் பல மேற்குலக, அறபுலக உளவியல், மருத்துவ சஞ்சிகைகளில் எனது ஆய்வுகள் பிரசுரிக்கப்பட்டும் உள்ளன. அவை பற்றி விரிவாகப் பேசுவதற்கு இந்நூல் பொருத்தமாக அமையாது.

கோழைத்தனம், கஞ்சத்தனம் ஆகிய இரு பண்புகளைப் பொறுத்த வரை, அவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஏனெனில், கோழை என்பவன் தன் உடலால் பிறருக்கு நன்மை விளையாமல் கருமித்தனம் காட்டுபவன். கஞ்சன் என்பவன் தன் செல்வத்தால் பிறருக்குப் பயன் கிட்டாமல் கருமித்தனம் காட்டுபவன். அந்த வகையில் இரண்டுமே — ஒருவரது சுயநலனும் சுய அபிமானமும் — அவர்மீது ஆதிக்கம் செலுத்தும் நிலைகளாகும். கடன் அல்லது வேறு காரணங்களால் மனிதர்களது அடக்குமுறைக்கு உட்படுதல் என்பது பல்வேறு சமூகவியல் பிரச்சினைகளின்போது ஏற்படும் பயவுணர்வை எனக்கு நினைவூட்டுகிறது. குறிப்பாக, அதிகாரமும் அடக்குமுறையும் கொண்ட மனிதர்களின் முன்னால் பலவீனர்கள் அஞ்சி நடுங்கும் நிலையைக் குறிப்பிடலாம். சமூகவியல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க அஞ்சும் இந்நிலையே தற்காலத்தில் பரவலாகக் காணப்படும் உளவியல் பிரச்சினை எனலாம்.

இதற்கு மறுகிடையாக, நல்ல உணர்ச்சிகளை அணிகலனாகக் கொண்டவர்களே நற்பண்புகள் வாய்க்கப்பெற்றவர்களாக இருப்பர். அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கு அடுத்தபடியாக அவர்களை மேல்நோக்கி உயர்த்துபவை அழகிய உணர்ச்சிகளின் மீது அவர்கள் மேற்கொள்ளும் மனக்கட்டுப்பாட்டுப் பயிற்சிகளே. தீமையையும் சுயநலத்தையும் தூண்டுகிற மோசமான இச்சைகளை அவர்கள் கட்டுப்படுத்துவார்கள். நன்கு கட்டுப்படுத்திப் பழக்கப்பட்ட கால்நடைபோன்று அவற்றை ஆக்கிக்கொள்வார்கள். கோபத்தை அடக்குவார்கள். மனிதர்களை மன்னிப்பார்கள். அப்பாவிகளுக்கும் சிறுவர்களுக்கும் இரக்கம் காட்டுவார்கள். தேவை உள்ளவருக்கு உதவுவார்கள். அநியாயம் இழைக்கப்பட்டவருக்கு ஆதரவு தருவார்கள். இதுதொடர்பாக விசுவாசிகளின் அன்னை ஃகதீஜா பின்த் ஃகுவைலிது கூறுவதைக் கேளுங்கள். நபிகளார் ﷺ வானவர் ஜிப்ரீலைச் சந்தித்த முதல் சந்தர்ப்பத்தில் பயந்து நடுங்கிக்கொண்டு வந்தபோது அன்னை ஃகதீஜா ؓ கூறிய ஆறுதல் வார்த்தைகள் இவைதான்:

*இல்லை! அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான். ஏனென்றால், நீங்கள் இன பந்துக்களைச் சேர்ந்து நடப்பவர்; உண்மை உரைப்பவர்; துன்பத்தைப் பொறுத்துக்கொள்பவர்; இல்லாதவருக்குக் கொடுப்பவர்; விருந்தினரை உபசரிப்பவர்; சத்தியத்திற்கு உதவிசெய்பவர்.*

முஹம்மது ﷺ அவர்கள் நபியாக அனுப்பப்பட முன்னர் அன்னாரிடம் இருந்த பண்புகள் இவை. நபியாக்கப்பட்டதன் பிறகு அன்னாரது பண்பாடு திருக்குர்ஆனாகவே இருந்தது. அல்லாஹ்வின் திருப்தியே அவர்களுக்கும் திருப்தியாக அமைந்தது. அவன் கோபப்படுவதற்கே அவர்களும் கோபப்பட்டார்கள்.

நபி ﷺ அவர்களது பண்பாடு பற்றி அன்னை ஆயிஷா ؓ வினவப்பட்டபோது, 'அல்முஃமினூன் என்ற அத்தியாயத்தை உங்களால் ஓத முடியுமா?' எனக் கேட்டார். அங்கிருந்தவர்கள் 'ஆம்' என்றதும், 'ஓதுங்கள்' என்றார். 'விசுவாசிகள் வெற்றி பெற்றுவிட்டார்கள் ...' என்ற வசனத்திலிருந்து 'அவர்கள் தங்களது மர்மஸ்தலங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள்' என்ற வசனம்வரை அவருக்கு ஓதிக்காண்பிக்கப்பட்டது.[64]

64. அல்குர்துபீ, *'அல்ஜாமிஃ லி அஹ்காமில் குர்ஆன்'*, தாருல் ஆலமில் குதுப், ரியாத், 2003, பாகம் 12; பக்.102.

# அத்தியாயம் ஐந்து

## இறைவன் ஒவ்வொரு நபிக்கும் உகந்த சூழலையும் பரம்பரையையும் தேர்வுசெய்தமை குறித்த அவதானங்கள்

### முற்குறிப்பு

*இந்த அத்தியாயம் மிகவும் முக்கியமானதும் சிக்கலானதுமான ஓர் விசயம் பற்றிப் பேசுகிறது. நீண்ட பல வருடங்களாக உளவியலாளர்களது கவனத்தை ஈர்த்துவந்த இவ்விவகாரம் தொடர்பாக இன்றுவரை பல பரிசோதனை ஆய்வுகளும் கள ஆய்வுகளும் புள்ளிவிவர ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஒருவரது ஆளுமைப் பண்புகளையும் உணர்வெழுச்சிகளையும் வடிவமைப்பதில் சூழலும் பாரம்பரியமும் கொண்டிருக்கும் தாக்கம் பற்றிய ஆய்வியலையே இங்கு நாம் குறிப்பிடுகிறோம்.*

*முன்னைய அத்தியாயங்களில் இவ்விசயம் பற்றி நாம் பொதுவாகச் சுட்டிக்காட்டினோம். இந்த அத்தியாயத்தில், இறைவன் தனது தூதை மக்களுக்கு எடுத்துச்சொல்லத் தேர்ந்தெடுத்த நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் பொருத்தமான சூழலையும் பரம்பரையையும் தேர்வுசெய்வதில் தொழிற்பட்ட அவனது ஞானநோக்கு குறித்த அவதானங்களில் கவனம் செலுத்துவோம்.*

*அத்துடன், இந்த ஆய்வுத்துறையின் அறிவியல் பரிமாணத்தை எளிமைப்படுத்தவும் முடிந்தளவு முயல்வோம். அந்த வகையில், தெளிவானதும் எளிமையானதுமான ஓர் முன்வைப்புடன் இங்கு போதுமாக்கிக்கொள்ள இருக்கிறோம். இத்துறையைச் சூழ ஏராளமான போலிப் புனைவுகளும், தெளிவான ஆதாரங்களற்ற மிகைப்படுத்தல்களும் குவிந்திருக்கின்றன. பகுத்தறிவின் எல்லைகளை மிஞ்சிவிட்ட இத்தகைய தீவிரத்தன்மையை நவீன உளவியலில்கூட நாம் காண முடிகிறது. சூழல் தாக்கத்தைத் தீவிரமாக*

ஆதரிக்கும் பிரபல நடத்தையியல் சிந்தனைப் பள்ளியின் நிறுவனரான வாட்சன், சிறந்த உடலாரோக்கியம் கொண்ட ஒரு குழந்தை தனக்குத் தரப்பட்டால், தனது சூழல் நடத்தையியல் ஆற்றல் களைப் பயன்படுத்தி அக்குழந்தையை ஒரு மருத்துவனாகவோ வழக்கறிஞனாகவோ கலைஞனாகவோ வியாபாரியாகவோ, ஏன் பிச்சைக்காரனாகவோ குற்றவாளியாகவோகூட வளர்த்தெடுக்க முடியுமெனப் பெருமையுடன் கூறுகிறார். குறித்த குழந்தை எப்படிப்பட்ட பரம்பரை ஆற்றல்களையும் திறமைகளையும் கொண்டிருந்தாலும் பரவாயில்லை என்றும் அவர் கூறுகிறார். நடத்தையியல் பற்றிய அவரது *Behaviorism*[65] என்ற நூலில் இதனைக் காணலாம்.

மறுபுறத்தில், மனித நடத்தையை வடிவமைப்பதில் பரம்பரையே முக்கியத்துவமுடையது என்ற தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர் களிடமும் இத்தகைய எல்லைமீறிய எழுத்தாக்கங்களைக் காண முடிகிறது. இத்தீவிர நிலைப்பாடு கொண்டவர்களது ஆய்வுகளை மேற்கத்திய சஞ்சிகைகள் நேர்த்தியற்ற வகையில் சுருக்கித் தருகின்றன. மகிழ்ச்சியை அல்லது குற்றவியல் நடத்தையை அல்லது வேறு விதமான நடத்தைகளை உருவாக்கக்கூடிய மரபணுவைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக அவர்கள் கூறுவதை இவ்வாய்வுச் சுருக்கங்களில் நாம் படிக்க முடிகிறது. (ஆனால், நடத்தை உருவாக்கத்தில் சூழலுக்கு மிகப் பெரும் தாக்கம் இருப்பதையும், பரம்பரைக்கு இரண்டாம்நிலைச் செல்வாக்கே உள்ளதையும் அறிவியல் ஆய்வுகள் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளன.)

இத்தலைப்பில் ஆர்வமுள்ள வாசகர்கள் ‘சமூக உயிரியல்’ (Socio-biology) சார்ந்த நூல்களையும், ‘விலங்கு நடத்தை’, ‘சூழ்நிலைத் தகைவு’ (Ethology) சார்ந்த நூல்களையும், ‘பரிணாம உளவியல்’ (Evolutionary Psychology) நூல்களையும் வாசிக்கலாம். பரம்பரையியலின் வகிபங்கைப் பெரிதுபடுத்திக் காட்டுவதில் இந்நூல்கள் தீவிர முனைப்பு காட்டுகின்றன. ஏனெனில், இத்துறைகளைச் சார்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் டார்வினின் மாணவர்கள் ஆவர். மனித நடத்தையை விலங்குகள் மீதான தனது ஆய்வுமுடிவுகளின் வழியாகவே டார்வின் எப்போதும் விளங்குவார் என்பது நாம் அறிந்ததுதான்.

இத்தீவிர நிலைப்பாடு கொண்டோருள் மற்றொரு குழுவினரும் உண்டு. ஆப்பிரிக்கர்கள், ஆசியர்கள் முதலிய பிற மனிதர்களுடன்

65. John B. Watson, *‘Behaviorism’*, University of Chicago Press, 1930, p.82.

ஒப்பிடும்போது ஐரோப்பிய இனத்தின் மரபணுக்கள் உயர்வானவை என இவர்கள் நம்புகின்றனர். அந்த வகையில், 'கறுப்பரைவிட வெள்ளையர் உயர்ந்தவர்; ஏனெனில், வெள்ளையர் உற்பத்தியையும் பரிசோதனை அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் ஊக்குவிக்கும் சூழலில் வாழ்கிறார். மட்டுமன்றி, அவர் ஆப்பிரிக்கரிடம் இல்லாத முன்னேற்றகரமான நிறமூர்த்தங்களை (Chromosomes) கொண்டிருக்கிறார்' என்பது இவர்களது நம்பிக்கை. இப்போலிப் புனைவானது அறிவியல் ஆதாரங்களின் மீதுதான் கட்டமைந் திருக்கிறது என்று பிறரை நம்பச்செய்வதற்காக இத்தீவிர நிலைப் பாட்டாளர்கள் பல்வேறு நுட்பமான தந்திரங்களைக்கூடப் பயன்படுத்துவதுண்டு.

மரபணுவியலாளர்கள், சூழலியலாளர்கள் ஆகிய இவ்விரு தீவிர நிலைப்பாட்டாளர்களையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு அறிவியல் நுணுக்கத்துடன் நாம் ஆராய்ந்துபார்க்கும்போது, மனித நடத்தையின் மீதான திட்டவட்டமான நேரடிப் பரம்பரையியல் தாக்கமானது பொதுவாக 'அங்கக' (Organic) பரிமாணங்களுடன் மாத்திரம் மட்டுப் பட்டதாகவே உள்ளது. 'டவ்ன் நோய்க்குறி' (Down's syndrome) என அறியப்படும் மனவளர்ச்சிக் குறைபாட்டுக்குக் காரணமான மரபுத்திரிபு (Chromosome) கோளாறை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவற்றைத் தவிர்த்துப்பார்த்தால், நடத்தை உருவாக்கத்தில் சூழல், பாரம்பரியம் ஆகிய இரண்டுக்குமே பங்கிருப்பதை நாம் காண முடிகிறது. மட்டுமன்றி, இவ்விரண்டின் வகிபாத்திரங்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை.

சிலபோது குறிப்பிட்ட ஒரு பண்பு குறித்து ஆய்வுசெய்யும்போது குறிப்பிட்ட ஒரு நபரின் சூழலால் வந்த பண்பா அல்லது முன்னோரிடமிருந்து பாரம்பரியமாகப் பெற்ற பண்பா எனத் தீர்மானிப்பதுகூட ஆய்வாளருக்குச் சிரமமாகிவிடுகிறது. எனவே தான், விஞ்ஞானிகள் தாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் உளவியல் பண்புகள்மீது சூழல் அல்லது பாரம்பரியம் எவ்வளவு தாக்கம் செலுத்துகிறது என்பதைக் கண்டறிவதற்காகப் பல அபாரமான வழிமுறைகளையும் யுக்திகளையும் திட்டமிட்டுப் பயன்படுத்தினார்கள். ஒத்த இரட்டையர்களையும் வேறுபட்ட இரட்டையர்களையும் ஒப்பிட்டு உளவியலாளர்கள் மேற்கொண்ட பரிசோதனை முறை ஆய்வுகள் பற்றி முன்னர் நாம் குறிப்பிட் டவையும் இவற்றினுள் அடங்கும். ஒருவர் 'மனச் சிதைவு' (Schizophrenia) நோய்க்கு ஆளாவதில் பரம்பரையியல் எவ்வளவு தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பான மயக்கத்தைத்

தீர்க்கும் நோக்குடன் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதேபோல், நவீனத் தொழில்நுட்பம், புகைப்படம், கணினிகள் முதலியவற்றையும் விஞ்ஞானிகள் தமது பரிசோதனை ஆய்வுகளில் — குறிப்பாக, பிறந்த சிசுக்களின் மீது — பயன்படுத்தினர்.

மனிதனது பொது அறிதிறன், அகமுகத் தன்மை, உணர்வெழுச்சி நடத்தை என்பவற்றைக் கட்டமைப்பதில் சூழலுடன் இணைந்து பாரம்பரியமும் — குறைவாகவோ கூடுதலாகவோ — முக்கியப் பங்காற்றுகிறது என இவ்வாய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

## நபிமார்களது பண்புருவாக்கத்தில் பரம்பரையும் சூழலும் வகிக்கும் இடம் பற்றிய சில அவதானங்கள்

சூழல் தாக்கத்திற்கும் பரம்பரைத் தாக்கத்திற்கும் மத்தியிலான ஒப்பீடு என்பது சிலபோது நவீன அறிவியல் கிளர்த்திய விவகாரங்களுள் ஒன்றாகத் தோன்றினாலும், இவ்வாய்வுத் துறை பழைய இஸ்லாமிய வரலாற்று அடிப்படைகளைக் கொண்டதாகும்.

> ஒரு தடவை கண்ணியமிக்க நபித்தோழரான அல்அஷஜ் அப்துல் கைஸ் தன்னுடைய தோழர்கள் சிலருடன் இணைந்து இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது *'சலாம்'* கூறுவதற்காக மதீனாவுக்கு வந்திருந்தார். வந்துசேர்ந்தவர்கள் போட்டிபோட்டுக்கொண்டு நபிகளாருக்கு முகமன் கூறினார்கள். ஆனால் அல்அஷஜ் என்ற தோழர் நின்று நிதானித்து தனது உடலில் படிந்திருந்த பயணத் தூசுகளைத் தட்டிக்கொண்டார். அணிந்திருந்த உடையைக் கழற்றி பையில் வைத்துவிட்டுத் தூய்மையான ஓர் ஆடையை எடுத்து அணிந்துகொண்டார். பின்னர் நபிகளாரை நோக்கி அமைதியாக நடந்துவந்தார். அவரது செயல்களை நபியவர்களும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அன்னாரது திருவதனத்தில் திருப்தியின் மலர்ச்சி வெளிப்பட்டிருக்க வேண்டும். அஷஜ்ஜைப் பார்த்து அன்னார் இப்படிக் கூறினார்கள்:
>
> 'அல்லாஹ் விரும்புகின்ற இரண்டு பண்புகள் உம்மிடம் உள்ளன. பொறுமை, நிதானம் ஆகிய பண்புகளே அவை.'[66]
>
> அப்போது அல்அஷஜ், 'அவ்விரண்டும் நான் எடுத்துக்கொண்ட பண்புகளா அல்லது அல்லாஹ் என்னை இயல்பாகவே அப்படிப் படைத்திருக்கிறானா?' என்று கேட்டார்.

---

66. ஸஹீஹ் முஸ்லிம்.

*அதற்கு நபிகளார் ﷺ, 'இல்லை, அவ்விரண்டும் அல்லாஹ் உம்மிடம் இயல்பாகவே படைத்த பண்புகளாகும்' எனப் பதிலளித்தார்கள்.*

*அதற்கவர் இப்படிக் கூறினார், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விரும்புகின்ற இரு பண்புகளை என்னில் ஏற்படுத்திய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!'*[67]

'அவ்விரண்டும் நான் எடுத்துக்கொண்ட பண்புகளா அல்லது அல்லாஹ் என்னை இயல்பாகவே அப்படிப் படைத்திருக்கிறானா?' என்ற இந்தக் கேள்வியைக் கவனியுங்கள். அதாவது, 'அந்த இரு பண்புகளையும் நான் பரம்பரை வழியாகப் பெற்றேனா, சூழலிலிருந்து பெற்றேனா?' என இன்றைய மொழியில் அந்தத் தோழர் கேட்கிறார்.

இப்பீடிகையைத் தொடர்ந்து, தான் தேர்ந்தெடுத்த நபிமார்களையும் தூதர்களையும் பயிற்றுவிப்பதற்குப் பொருத்தமான பரம்பரையையும் பொருத்தமான சூழலையும் அல்லாஹ் தெரிவுசெய்ததன் பின்னால் இருந்த ஞானம் பற்றிய நமது அவதானங்களுக்கு வருவோம். இந்த அவதானங்கள் தெளிவாக அமைய வேண்டும் என்பதற்காக நாம் இங்கு கோட்பாட்டு மொழியமைப்பை அல்லது நிபுணத்துவ மொழியமைப்பைத் தவிர்த்திருக்கிறோம்.

மனிதர்கள் என்ற வகையில் நபிமார்களுக்கிடையில் உடல்-உள வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும், அவர்களிடம் தெய்வக் கொடையாக அமைந்த சில தனிப் பண்புகள் காணப் பட்டிருக்கின்றன. அறிஞர்கள் அவற்றை நான்கு பண்புகளாகச் சுருக்கித் தந்துள்ளனர். நாம் சிறுவர்களாக ஆரம்பப் பாடசாலை களில் படித்துக்கொண்டிருந்தபோதே அவற்றை மனப்பாடம் செய்திருக்கிறோம். உண்மை *(அஸ்ஸித்கு)*, நேர்மை *(அல்அமானா)*, எடுத்துச் சொல்லல் *(அத்தப்லீக்)*, புத்திக் கூர்மை *(அல்ஃபதானா)* என்பனவே அப்பண்புகளாகும். உற்றுக் கவனித்தல், பாவங்களி லிருந்தான பாதுகாப்பு *(இஸ்மா)*, தூதின் சுமையைத் தாங்குவதற்கான வல்லமை முதலிய தெய்வீகக் கொடைகளாக அவற்றுள் சில பண்புகள் இருப்பதைக் காணலாம். அவ்வாறே, உடலமைப்பும் வேறுசில ஆளுமைப் பண்புகளும் பரம்பரையாக வந்தவையாகும். மூன்றாவது வகையான சில பண்புகளில் பரம்பரைத் தாக்கத்துடன் அல்லாஹ் தன்னுடைய நபிமார்களுக்கென்று தெரிவுசெய்த சூழலின் தாக்கமும் கலந்திருந்தது.

---

67. *சுனன் அபூதாவூது.*

பரம்பரையான பண்புகளைப் பொறுத்தவரை வெண்குஷ்டம், பைத்தியம், வெறுக்கத்தக்க முக அமைப்பு, குறைபாடான குட்டை உருவம், அவலட்சணமான உயரம் முதலிய மோசமான உடல்-உளப் பண்புகள் நபிமார்களிடம் இருக்க முடியாது என்பதுபோலவே, அவர்கள் அழகிய முகமும் குரலும் கொண்டவர்களாக இருப்பதும் அவசியம். இங்கு நாம் முன்வைத்த — எல்லா நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் பொதுவான — சில முக்கியத் தெய்வீகக் கொடைகள் குறித்து எளிய நடையிலும் நவீனச் சொற்பிரயோகங்களிலும் இனி கலந்துரையாடுவோம். அந்த வகையில், நபிமார்களுக்கு உடல்ரீதியான நல்ல பண்புகள் அனந்தரமாக வழங்கப்பட்டிருந்தது பற்றி மட்டுமன்றி, ஆத்மீகக் கொடை, உடற்பலம், விவேகம், ஆக்கபூர்வமாகச் சிந்தித்தல், குடும்பக் கண்ணியம் முதலிய விசயங்கள் பற்றியும் கலந்துரையாட உள்ளோம்.

அடுத்துவரும் அத்தியாயங்களில் திருக்குர்ஆனில் மிக விரிவாகப் பேசப்பட்ட நபி மூசா ﵇, நபி யூஸுஃப் ﵇ ஆகிய இருவரது சூழலையும் பரம்பரையையும் தெரிவுசெய்வதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானம் பற்றிய நமது அவதானங்களுக்கான பீடிகையாகவும் இக்கலந்துரையாடல் அமையும். இத்தகைய கலந்துரையாடலானது இறைவனது ஞானம் பற்றிய ஆழ்ந்த சிந்தனையையும், அவனது நாட்டப்படி நம் வாழ்வில் நிகழும் விசயங்கள் தொடர்பில் அவன் மீதான நல்லெண்ணத்தையும் நமக்குத் தர முடியும்.

## ஆத்மீகப் பாரம்பரியம்

*நிச்சயமாக அல்லாஹ் ஆதமையும் நூஹையும் இப்றாஹீமின் குடும்பத்தாரையும் உலகத்தாரைவிட மேலாகத் தேர்ந் தெடுத்தான்.*

*அவர்கள் ஒருவர் மற்றவரிலிருந்து தோன்றிய வழித்தோன் றல்கள் ஆவர். அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவ னாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான்.* (3:33-34)

*அவருக்கு இஸ்ஹாக்கையும் யஅகூபையும் கொடுத்தரு ளினோம். ஒவ்வொருவரையும் நேர்வழியிலும் செலுத்தினோம். இதற்கு முன்னர் நாம் நூஹையும் அவரது சந்ததியிலிருந்து தாவூது, சுலைமான், அய்யூபு, யூசுஃப், மூசா, ஹாறூன் ஆகியோரையும் நேர்வழியில் செலுத்தினோம். நன்மை புரிவோருக்கு இப்படித்தான் நாம் நற்கூலி அளிக்கிறோம்.*

மேலும், ஸகரிய்யா, யஹ்யா, ஈசா, இல்யாஸ் ஆகிய அனைவரும் நன்னடத்தை கொண்டவர்களாகவே இருந்தனர்.

இன்னும் இஸ்மாஈல், அல்யசஉ, யூனுஸ், லூத் முதலிய அனைவரையும் அகிலத்தார் அனைவரிலும் மேலாக்கினோம்.

இவர்களுடைய மூதாதையரிலிருந்தும் சந்ததிகளிலிருந்தும் சகோதரர்களிலிருந்தும் பலரை நாம் தேர்ந்தெடுத்து நேர் வழியில் செலுத்தினோம்.

இதுவே அல்லாஹ்வின் நேர்வழியாகும். தன் அடியார்களில் தான் விரும்பியவர்களை அவன் நேர்வழியில் செலுத்துகிறான். ஆனால் அவர்கள் இறைவனுக்கு இணைவைப்பார்களாயின் அவர்கள் செய்த அனைத்தும் வீணாகிவிடும். (6:84-88)

இவ்வசனங்களைக் கூர்ந்து படிக்கும்போது சில உடல்-உளப் பண்புகளைப் பரம்பரையாகக் கடத்தும் உயிரியல் மரபுணுக்கள் காணப்படுவதுபோன்று ஆத்மீகரீதியான மரபணுக்களும் காணப்பட முடியுமா என்றும், அத்தகைய ஆத்மீக மரபணுக்கள் நபிமார்களது படைப்புக் கட்டமைப்பில் இயல்பாகவே விதைக்கப்பட்டிருந்தனவா என்றும், அவையே அவர்களுடைய பிள்ளைகளுக்கும் கடத்தப் பட்டனவா என்றும் எனக்குள் கேள்விகள் எழுகின்றன. இல்லை யெனில், 'தேர்ந்தெடுத்தல்' என்பதற்குப் பின்னால் மறைந்துள்ள ஞானம் என்ன?!

நமது உயிரியல் நிறமூர்த்தங்கள் பெற்றோரிடமிருந்தும் பாட்டன் மாரிடமிருந்தும் முன்னோரிடமிருந்தும் நமக்குக் கடத்தப்பட்டு உயரம், முகச்சாயல், நிறம் போன்ற சில உடலியல் பண்புகள் பாரம்பரியமாக வந்துசேர்கின்றன. அவ்வாறே இந்நிறமூர்த்தங்கள் சூழலுடன் இடைவினையாற்றி விவேகம், உள்முகத்தன்மை, உணர்ச்சிக் கூர்மை முதலிய உளவியல் பண்புகளை நமக்குத் தருகின்றன. முன்னைய ஓர் அத்தியாயத்திலும் இதுபற்றி நாம் விளக்கினோம். பரம்பரையை அடிப்படையாகக் கொண்ட இந்த எல்லாப் பண்புகளையும் பற்றி நவீன அறிவியல் கலைகள் நமக்கு விளக்குகின்றன.

ஆனால், பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு நகர்த்தப்படக் கூடிய ஆத்மீக மரபணுக்கள் இருக்க முடியுமா?

அல்லாஹ் அவற்றைத் தான் விரும்பியோருக்கு அருளி அவர்களது உள்ளங்களிலிருந்து ஷைத்தானின் தாக்கங்களை

*வெளியேற்றவும், வஹீயையும் அதன் பொறுப்புகளையும் தாங்குபவர்களாக அவர்களைத் தயார்படுத்தவும் முடியுமா?*

*அவற்றின் ஆத்மீக இயல்பின் காரணமாக, ஸ்தூலத் தன்மை கொண்ட அனைத்திலிருந்தும் அவை வேறுபட்டு நிற்க முடியுமா?*

*அதனால்தான் அவற்றின் உண்மைநிலையைப் பௌதிக அறிவியல் ஆய்வுகளால் கண்டறிய முடியாதுள்ளதா?*

*நபிமார்களது சிறப்புகளுக்கிடையில் வேறுபாடு காணப் படுவதற்கு இத்தகைய மரபணுக்களும் பங்களிப்பு செய்ய முடியுமா?*

*அப்படியென்றால், அவை உயரத்தையும் நிறத்தையும் பாரம்பரியமாகத் தரும் கூட்டு மரபணுக்கள் (Multiple genes) போன்று எல்லா மனிதர்களிலும் பல்வேறு எண்ணிக்கையில் காணப்படவும், எண்ணிக்கையின் அதிகரிப்புக்கேற்ப உடல்ரீதியாகத் தாக்கம் ஏற்படுத்தவும் முடியுமா?*

*இக்கருத்தாக்கத்தின்படி, இந்த ஆத்மீக மரபணுக்களின் எண்ணிக்கை ஒரு மனிதரிடம் அதிகரிக்க அதிகரிக்க அவரது ஆத்மீகப் பண்பும் உள்ளொளியும் அதிகரிக்குமா?*

*'தொலைநுண்ணுணர்வு (Telepathy)' சார்ந்த ஆற்றல்களில் மனிதர்கள் ஏன் ஏற்றத்தாழ்வு கொண்டிருக்கிறார்கள் என்பதை இக்கருத்தாக்கத்தின் மூலமாக விளக்க முடியுமா? அதாவது, ஒருவர் தூக்கத்தில் காணுகின்ற தீர்க்கதரிசனக் கனவுகள் அல்லது அவர் பெறுகின்ற உள்ளுணர்வுகள் அல்லது வேறு அமானுஷ்ய அகக் காட்சிகள் அப்படியே எதிர்காலத்தில் இடம்பெறுவது எவ்வாறு என்பதை இக்கோட்பாட்டின் மூலமாக விளக்க முடியுமா?*

*இவ்வாற்றல் இறைவனால் எல்லா மனிதர்களுக்கும் பல் வேறு ஏற்றத்தாழ்வுகளில் வழங்கப்படும் கொடையாக இருந்தபோதும், வணக்கம் மூலமாகவும் ஆழ்நிலைத் தியானச் சிந்தனை மூலமாகவும் அது அதிகரிக்கப்பட முடியுமா?*

உமர் ﵁ அவர்கள் தொடர்பாக நபி ﷺ அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாடு மேற்குறித்த கருத்தாக்கத்திற்கு ஓரளவு பலம் சேர்ப்பதாய் எனக்குத் தோன்றுகிறது. இறைவனின் அருட் கொடையாக வழங்கப்படக்கூடிய ஆத்மீக மரபணுக்கள் பற்றிய

இக்கோட்பாடானது ஆழ்ந்த சமயப் பற்றுடனும் மத உயர் நிலையுடனும் தொடர்புபட்டிருக்க வேண்டும் என்ற எந்த அவசியமும் கிடையாது. எனினும், வணக்க வழிபாடுகளும் தியானச் சிந்தனையும் அவற்றின் ஆத்மீகத் தாக்கத்தை அதிகரிக்கச் செய்ய முடியும்.

அந்த வகையில், இவ்வாத்மீக நிறமூர்த்தங்களை உயர்ந்தளவில் அனந்தரமாகப் பெற்றிருக்கும் முஸ்லிமிடம் தன்னைச் சுற்றி நிகழ்கின்ற ஆத்மீகச் செயல்பாடுகளை ஓர் 'ஆத்மீக ரேடார்' போன்று உள்ளீர்க்கக்கூடிய ஆற்றல் அதிகரித்துக் காணப்பட முடியும். அபூஹுறைறா ﵁ என்ற நபித்தோழர் வாயிலாக அல்புஃகாரீ அறிவிக்கும் நபிமொழியைக் கவனியுங்கள். உமர் இப்னுல் ஃகத்தாபின் ஆற்றல்களை நபிகளார் இப்படி வர்ணிக்கிறார்கள்:

> உங்களுக்கு முன்பிருந்த சமுதாயங்களிலும் தீர்க்கதரிசனமாய் பேசும் மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். எனது சமுதாயத்தில் அப்படி ஒருவர் இருப்பாராயின் அவர் உமர்தான்.

அபூஹுறைறா ﵁ அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில், இஸ்றவேலர்களில் இருந்த தீர்க்கதரிசிகள் பற்றிக் கூறிய நபிகளார், 'நபிமார்களாக இல்லாமலே அவர்கள் தீர்க்கதரிசனமாகப் பேசுவார்கள்'[68] எனக் குறிப்பிட்டார்கள்.

மட்டுமன்றி, இறைத்தூதர் ﷺ கூறக் கேட்டதாக உக்பா இப்னு ஆமிர் ﵁ வழியாக இமாம்களான அஹ்மது, திர்மிதீ ஆகியோர் இவ்வாறு அறிவிக்கின்றனர்:

> எனக்குப் பின்னர் நபி ஒருவர் இருப்பாராயின் அவர் உமராகத்தான் இருப்பார்.[69]

இந்நபிமொழிகள் பல அறிஞர்களையும் பொதுவான ஆய்வாளர்களையும் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன. அவர்கள் எல்லோரது கேள்வியும் இதுதான்: உமரைவிடவும் ஏனைய நபித்தோழர்களை விடவும் அபூபக்கரின் சிறப்பை வலியுறுத்தும் நபிமொழிகள் வந்துள்ளபோதும் அபூபக்கருக்குக் கிட்டாத இந்த அந்தஸ்து உமருக்கு எப்படி வாய்த்தது?

அபூபக்கரின் சிறப்பை வலியுறுத்தும் ஓர் நபிமொழி பின்வருமாறு அமைந்துள்ளது:

---

68. ஸஹீஹுல் புஃகாரீ.

69. சுனனுத் திர்மிதீ.

> நிச்சயமாக நட்பிலும் செல்வத்திலும் என்னுடன் மிகத் தாராளமாக நடந்துகொண்டவர் அபூபக்கரே. என் ரட்சகனைத் தவிர இன்னொருவரை அந்தரங்க நண்பராக எடுத்துக் கொள்வதாயின் அபூபக்கரையே எடுத்துக்கொண்டிருப்பேன். ஆனால் இஸ்லாத்தின் சகோதர வாஞ்சையும் பாசமுமே சிறந்தவை.[70]

உமர்கூட ﵁ பின்வருமாறு அபூபக்கர் ﵁ அவர்களின் சிறப்பை வலியுறுத்தியுள்ளார்:

> அபூபக்கர் எங்களுடைய தலைவர்; எங்களில் சிறந்தவர்; எங்களில் இறைத்தூதர் அவர்களுக்கு மிக நேசத்துக்குரியவர்.[71]

இறைத்தூதர் ﷺ அவர்களது நோய்நிலை கடுமையாகி, பள்ளி வாசலுக்கு நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டபோது, 'மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு அபூபக்கருக்குச் சொல்லுங்கள்' என உமர் ﵁ கூறினார். உமரையும் ஏனைய தோழர்களையும்விட அபூபக்கர் உயர்சிறப்பு பெற்றிருந்ததை இது எடுத்துக்காட்டுகிறது.

உண்மையில் இஸ்லாத்தை மிக ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டு, நபிகளாருடன் ஸவ்ருக் குகையில் ஒன்றாயிருந்த அபூபக்கரின் உயர் அந்தஸ்தைக் காட்டக்கூடிய பல சான்றுகள் காணப்படுகின்றன. அனைவரும் பொதுவாக ஏற்றுக்கொண்ட சன்மார்க்க உண்மைகளுள் ஒன்றாகவும் அது உள்ளது. இதனால்தான் உமர் ﵁ பற்றிய நபிகளாரின் மேற்சொன்ன கூற்று பலரிடம் கேள்விகளை எழுப்பியது. சிலரைப் பொறுத்தவரை இது — உளவியலில் நாம் கற்பதுபோன்று — 'அறிதிறன் முரண்பாட்டை' (Cognitive dissonance) ஒத்த நிலையாகக்கூடத் தோன்றியது. இரண்டு முரண்பட்ட நிலைப்பாடுகளுக்கிடையில் குழம்பிநிற்கும் நிரப்பந்தத்திற்கு உள்ளாகும் ஒருவரிடம் ஏற்படக்கூடிய பதற்றத்தை இப்பிரயோகம் குறிக்கிறது. இவ்வாறான நிலையில் இரண்டில் ஏதாவது ஒன்றின் உண்மைத்தன்மையை நிராகரிக்க முயல்வதன் மூலமாக அல்லது இரண்டுக்குமிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குரிய உளவியல் உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தனது பதற்றநிலையை அவர் குறைத்துக்கொள்ள முடியும்.

இந்த வகையில்தான், சிலர் இந்நபிமொழியின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்தினர் அல்லது இதன் அறிவிப்பாளர் வரிசையில்

70. ஸஹீஹுல் புஃகாரீ.

71. சுனனுத் திர்மிதீ.

பலவீனம் உள்ளதெனக் கூறினர். ஆனால் இந்நபிமொழி அஹ்மது இப்னு ஹன்பல், திர்மிதீ போன்ற நம்பகமானவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அல்பானீ போன்ற ஹதீஸ்துறை அறிஞர்களால் 'ஸஹீஹ்' என உறுதிப்படுத்தப்பட்டும் உள்ளது. இமாம் இப்னு ஹஜர் போன்ற சிலர் உமர் ﵁ ஏன் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பதற்கான சில நியாயங்களை முன்வைத்து 'பதற்றத் தணிப்பு' முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

அபூபக்கர் ﵁ சிறப்புமிக்கவராக இருந்தபோதிலும் உமர் ﵁ சத்தியத்தை நிலைநாட்டுவதில் பலமானவராகவும், அவரது நிலைப்பாடுகளை ஆதரித்து திருக்குர்ஆன் வசனங்கள்கூட இறங்குமளவுக்கு உய்த்தறிவு கொண்டவராகவும் இருந்தார் என இப்னு ஹஜர் நியாயங்களை முன்வைக்கிறார். அதுகுறித்து உமர் ﵁ அவர்களே கூறியதாக அவருடைய புதல்வரான அப்துல்லாஹ் அறிவித்த கூற்றை இமாம் முஸ்லிம் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்:

> மூன்று விசயங்களில் எனது நிலைப்பாடு எனது ரட்சகனுடன் உடன்பட்டு அமைந்தன:
>
> 1. திரை (ஹிஜாபு);
> 2. பத்ரு யுத்தக் கைதிகள்;
> 3. மகாமு இப்றாஹீம்.

அபூபக்கர் சிறப்பு கொண்டவராக இருந்தபோதிலும், இறைத்தூதர் ﷺ அவர்கள் உமரைத் தெரிவுசெய்தது ஏன் என்பதை விளக்க ஆத்மீக மரபணுக்களின் இருப்பு பற்றிய நமது கோட்பாடு இங்கு உதவியாக அமைகிறது. அல்லாஹ் உமருக்கு உயர்ந்த தோற்றத்தையும் உடல்பலத்தையும் அருளியிருந்ததுபோல் சில ஆத்மீக மரபணுக்களையும் இயற்கையாகவே அருளியிருந்ததால்தான் அவர் தீர்க்கதரிசனமாகப் பேசுபவராக இருந்தார் என இதனை நாம் விளக்கலாம். எனினும் இந்தத் தெய்வீகக் கொடை ஒருவரது சமய அந்தஸ்துக்குச் சான்றாக அமையாது. சமய உணர்வு குறைந்தவர்களிடம்கூட அது காணப்பட முடியும். அதன் புலனறி வாற்றலானது (Sensory Ability) 'ஆத்மீக ரேடார்' போன்று செயல்படக் கூடியது.

ஏனெனில், பூமியில் வாழும் உயிரிகள் நாம் மட்டுமல்ல. இப் பிரபஞ்சம் வானவர்களாலும் ஜின்களாலும், நமக்குத் தெரியாத இன்னும் பல ஆத்மீகப் படைப்புகளாலும் நிறைந்திருக்கிறது. இவ்வாறான பல அமானுஷ்யப் படைப்புகள் இவ்வுலகில்

நம்முடன் வாழ்கின்றன என்பது இன்று உலகின் பல பாகங்களில் வாழும் அறிவியலாளர்களாலும் சிந்தனையாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உமருக்கு வழங்கப்பட்டிருந்த தெய்வீகக் கொடையே கால-இடத் திரைகளை ஊடறுத்துச் செல்லும் ஆற்றலை அவருக்குக் கொடுத்திருந்தது. வானவர்கள் அவருடன் பேசுவதுபோல் அவரது உள்ளத்தில் சரியான தீர்க்கதரிசனங்கள் போடப்பட்டன.

அவற்றுள் ஒன்றுதான் முன்னைய ஓர் அத்தியாயத்தில் நாம் சுருக்கமாகக் குறிப்பிட்ட சாரியா இப்னு ஸனீம் என்ற நபித்தோழர் பாரசீகப் பிரதேசத்தில் மஜூசிகளுடன் போர் தொடுப்பதற்காக முஸ்லிம் படைக்குத் தலைமைதாங்கிச் சென்ற சம்பவமாகும்.

> அவ்வேளை, ஓர் தாழ்ந்த நிலப்பகுதியில் வைத்து பாரசீகர்கள் முஸ்லிம்களை முற்றுகையிட்டிருந்தனர். மலையுச்சியின் மீது பாரசீகர்களது ஒரு கோட்டை இருந்தது. அந்த இக்கட்டான நிலையிலிருந்து தன்னையும் படையையும் பாதுகாக்கக்கூடிய எந்தத் திட்டத்தையும் இட முடியாத நிலையில் சாரியா ﵁ இருந்தார். அதேவேளை அமீருல் முஃமினீன் உமர் இப்னுல் ஃகத்தாபு ﵁ மதீனாவில் இறைத்தூதரின் பள்ளிவாசலில் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்தார். இடையில் அவர் சட்டென்று குரலை உயர்த்தி, ‘சாரியா இப்னு ஸனீமே … மலை! சாரியா இப்னு ஸனீமே … மலை!’ எனக் கூறினார். உமரின் இந்த அழைப்பை சாரியா செவிமடுத்தார். அதன்படி சாரியா தனது படையை அழைத்துக்கொண்டு மலைமீது ஏறினார்; வெற்றியும் கண்டார்.

இங்கு சாரியாவை நோக்கி உமர் எழுப்பிய சத்தம் அவரது தீர்க்கதரிசனமாக வியாக்கியானம் செய்யப்பட முடியும். அவரது சத்தத்தை சாரியாவுக்குக் கொண்டுசேர்த்தது அவருக்கும் சாரியாவுக்கும் போராளி முஸ்லிம்களுக்கும் அல்லாஹ் அளித்த கௌரவமாகும்.

இவ்வாறான ஆத்மீக மரபணுக்கள் நபிமார்களிடம் காணப் படவில்லையெனில், ‘வஹீ’ என்னும் வேத வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வது அவர்களுக்குக் கஷ்டமாக இருந்திருக்கும் என்றே நாம் கருதுகிறோம். இம்மரபணுக்கள் பாரம்பரியத் தன்மை கொண்டனவாக இருந்ததால்தான் அவர்களுடைய சந்ததிகளுக்கும் கடத்தப்பட்டன என்றும் கருதுகிறோம். நுபுவ்வத் பணி இம்றானின் குடும்பத்தினருக்கும் இப்றாஹீமுக்கும் அவருடைய சந்ததிகளுக்கும் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது இதனால்தான் போலும்:

> அவருக்கு இஸ்ஹாக்கையும் யஅகூபையும் கொடுத்தருளி னோம். ஒவ்வொருவரையும் நேர்வழியிலும் செலுத்தினோம். இதற்கு முன்னர் நாம் நூஹையும், அவருடைய சந்ததியி லிருந்து தாவூது, சுலைமான், அய்யூபு, யூசுஃப், மூசா, ஹாரூன் ஆகியோரையும் நேர்வழியில் செலுத்தினோம். நன்மை புரிவோருக்கு இப்படித்தான் நாம் நற்கூலி அளிக்கிறோம்.
>
> மேலும் ஸகரிய்யா, யஹ்யா, ஈசா, இல்யாஸ் ஆகிய அனைவரும் நன்னடத்தை கொண்டவர்களாகவே இருந்தனர்.
>
> இன்னும் இஸ்மாஈல், அல்யசஉ, யூனுஸ், லூத் முதலிய அனைவரையும் அகிலத்தார் அனைவரிலும் மேலாக்கினோம்.
>
> இவர்களது மூதாதையரிலிருந்தும் சந்ததிகளிலிருந்தும் சகோதரர்களிலிருந்தும் பலரை நாம் தேர்ந்தெடுத்து நேர் வழியில் செலுத்தினோம். (6:84-87)

நுபுவ்வத்தின் பணிகளைச் சுமப்பதற்கான இந்தத் தெய்வீகத் தயார்படுத்தலுக்கு மேலதிகமாக, நபிமார்கள் தமது பெற்றோருடன் வாழ்ந்ததன் மூலமாகவும் அவர்களை அவதானித்ததன் மூல மாகவும்கூடப் பல விசயங்களைப் பெற்றுக்கொண்டிருப்பர். திருக்குர்ஆன் இதுகுறித்து பல உண்மைகளைப் பரவலாகக் குறிப்பிடுகிறது. நபிமார்களான இப்றாஹீம்-இஸ்மாஈல், யஅகூபு-யூசுஃப், மூசா-ஹாரூன், தாவூது-சுலைமான் ஆகியோர் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## நபிமார்களது உடற்பலத்தின் முக்கியத்துவம்

நபிமார்கள் உடற்பலத்தைப் பரம்பரை இயல்பாகப் பெற்றிருப்பது அழைப்புப் பணியை மேற்கொள்வதற்கும் துன்புறுத்தல்களைத் தாங்கிக்கொள்வதற்கும் முக்கியமானது. வஹீயின் சுமையைப் பௌதிகரீதியாகவும் மானசீகரீதியாகவும் தாங்கிக்கொள்வதற்கும் அது அவசியமானது.

> நிச்சயமாக நாம் உம்மீது பாரமான ஒரு வார்த்தையை இறக்கிவைப்போம். (73:5)

நமது திருத்தூதர் ﷺ அவர்களது வாழ்வியல் இதனை நமக்குத் தெரிவிக்கிறது. வஹீ இறங்கும்போது அவர்களது நிறை அசாதாரண மான வகையில் அதிகரித்துவிடும். புஃகாரீயின் ஓர் அறிவிப்பில் வருவதாவது:

ஒருநாள் நபிகளார்மீது வஹீ இறங்கும்போது அன்னாரது தொடை ஸைது இப்னு ஸாபித் என்ற கண்ணியமான தோழரின் தொடைமீது அழுந்திக்கொண்டிருந்தது. அவ்வனுபவம் பற்றி அந்த நபித்தோழரே இப்படிக் கூறுகிறார்: ‘எனது தொடை நொறுங்கிவிடுமோ என அஞ்சுமளவுக்கு நபிகளாரின் தொடை எனக்குப் பாரமாக இருந்தது.’

அவ்வாறே, நபிகளார் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருக்கும்போது வஹீ இறங்கினால் ஒட்டகம் நிற்க முடியாமல் காலை மடித்து அமர்ந்து பூமியில் கழுத்தை நீட்டிவைத்துக்கொள்ளும் என்பதாகவும், வஹீயின் கடுமையான அழுத்தத்தின் காரணமாகச் சத்தமிடும் என்பதாகவும் பல மூலாதாரங்களில் இடம்பெற்றுள்ளது.[72]

இறைத்தூதர் ﷺ அவர்கள் அந்நூர் மலையின் உச்சியில் அமைந் திருந்த ஹிறா குகைக்குத் தொடர்ந்து ஏறியும் இறங்கியும் வந்தது அன்னாரது உடல்பலத்துக்கான சான்றுகளுள் ஒன்றாக அமைகிறது. அம்மலையின் உயரம் 650 மீட்டரைவிட அதிகமாகும். அந்த இடத்தைச் சென்றடைய ஒருவர் மலையின் செங்குத்தான இடங் களைக்கூடத் தாண்ட வேண்டியிருக்கும். அதனால்தான், ஹஜ்ஜுக்குச் செல்பவர்கள் ஹிறா குகையைத் தரிசிப்பதை சவூதி அரசு தடைசெய்துள்ளது. ஏறும்போது ஏற்படக்கூடிய அபாயங்களைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு. சிலருக்குக் களைப்பு ஏற்பட்டுப் பிராணவாயு (Oxygen) குறைந்துவிடுவதும் உண்டு. இதுதொடர்பாக எனக்கேற்பட்ட தனிப்பட்ட ஒரு அனுபவத்தை இங்கு வாசகருடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்:

1959ம் ஆண்டு எனது இருபத்தேழு வயதில் ஹிறா குகையைத் தரிசிக்கும் பாக்கியத்தை இறைவன் தந்தான். அவ்வேளை நான் பல்வேறு உடற்பயிற்சி விளையாட்டுகளில் ஈடுபடுகின்ற பலமான இளைஞனாக இருந்தேன். உண்மையில் அந்தக் குகைக்கு ஏறிச்சென்று அந்த உன்னத மனிதர் நடந்த பூமியில் என் பாதங்கள் பதிய வேண்டும் என்ற ஆவல் எனக்கிருந்தது. மலை ஏறுவதற்கான உடற்தெம்பு குறித்த திடமான நம்பிக்கையும் எனக்கிருந்தது.

ஆனால் ஏறும்போது எனக்கேற்பட்ட பலவீனத்தையும், பலமுறை உட்கார நேர்ந்ததையும் உணர்ந்தபோது வியப்பே ஏற்பட்டது. மூச்சை இழுத்துவிடவும், தொடர்ந்து ஏறிச் செல்வதற்கான பலத்தைத் திரட்டிக்கொள்ளவும் அவ்வாறு

72. அல்பைஹகீ, *‘அஸ்ஸுனனுல் குப்றா’*.

நான் இடையில் உட்கார வேண்டியிருந்தது. மலையுச்சிக்குச் செல்வதற்கான பாதை விரிவாக்கப்பட்டும், சரிவுகளில் ஏறுவதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டும்கூட இருந்தன. அப்போதுதான் இறைத்தூதர் ﷺ அவர்கள் பெற்றிருந்த உடற்பலம் எத்தகையதாக இருக்கும் என்பது எனக்குப் புரிந்தது. குகையில் ஏறியிருக்கும் சந்தர்ப்பத்தில் உணவுத் தேவை ஏற்பட்டால் அன்னார் கீழே இறங்கிவருவார்கள். ஃகதீஜா ﵂ அவர்களே அன்னாருக்குத் தேவையான உணவைத் தயாரித்து வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

இன்றைய யாத்திரீகர்களுடன் ஒப்பிடும்போது ஐம்பதுகளில் சென்ற யாத்திரீகர்களின் எண்ணிக்கையும் குறைவுதான். யாத்திரீகர் ஒருவர் ஹிறா குகையின் உள்ளிருந்து கஅபாவைப் பார்க்கும் போது இடையில் மறைக்கக்கூடிய கட்டடங்களோ அடுக்கு மாடிகளோ அன்றிருக்கவில்லை. எனவே கஅபாவையும் அதன் சுற்றுவட்டத்தையும் ஒரு விமானத்திலிருந்து பார்ப்பதுபோல் என்னால் பார்க்க முடிந்தது.

நபிகளார் ﷺ அவர்கள் இம்மலையையும் குகையையும் ஏன் தெரிவுசெய்தார்கள் என்பதைக் கண்டு அப்போது நான் வியந்தேன். அந்த அருள்பொருந்திய குகையில்தான் ஜிப்ரீல் ﵇ நபியவர்களிடம் வந்தார்கள். திருக்குர்ஆனின் ஆரம்ப வசனங்களும் இறங்கின.

மக்காவாசிகளுக்கு மத்தியில் அசாதாரணப் பலத்திலும் பெரும் உடற்கட்டமைப்பிலும் பிரபல்யம் பெற்றிருந்த றுகானா இப்னு அப்து யஸீதுடன் முஹம்மது ﷺ அவர்களுக்கு நிகழ்ந்த சம்பவம் அன்னாரது பலத்தை எடுத்துக்காட்டும் மற்றொரு சான்று எனலாம்.

அம்மனிதர் தன்னுடன் மல்யுத்தம் புரிய வரும் எவரையும் வீழ்த்திவிடக்கூடியவராக இருந்தார். எவராலும் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை. நபியவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயர முன்னர் ஒருநாள் அவர் மக்காவின் ஓர் பள்ளத்தாக்கில் நபியவர்களைச் சந்தித்ததாகவும், அவ்வேளை அவர் நிராகரிப்பாளராக இருந்ததாகவும் இப்னு இஸ்ஹாக் குறிப்பிடுகிறார்.

இச்சம்பவத்தை அறிவிப்பவர்களது வேறுபட்ட வசனப் போக்குகளை அவதானிக்கும்போது, றுகானா என்பவர் நபியவர்களை மல்யுத்தத்திற்கு அழைத்துத் தோற்கடிக்கும்

எண்ணம் கொண்டிருந்தார் என்றும், அதன் மூலமாகக் குறைஷிக் காஃபிர்களை மகிழ்விக்க விரும்பியிருந்தார் என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் நபிகளார் அவருடன் மல்யுத்தம் புரிந்து அவரைத் தோற்கடித்தார்கள். நடந்ததை நம்ப முடியாமல் றுகானா ஆச்சரியமடைந்தார். 'இது சிலவேளை மறைமுக உதவியால் நிகழ்ந்திருக்கலாம்' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட அவர், 'முஹம்மதே, திரும்பவும் வாரும்!' என அழைத்தார். நபி ﷺ அம்மனிதரை மீண்டும் தோற்கடித்து நிலத்தில் வீழ்த்தினார்கள். இவ்வாறு மூன்று தடவை இடம்பெற்றது. எனினும் றுகானா அதனைச் சூனியம் என்றே கருதினார்.[73]

இந்த உடற்பலம் பல நபிமார்களிடம் காணப்பட்டதாகத் திருக் குர்ஆன் விவரிக்கிறது. அவர்களுள் நபி மூசாவும் عليه السلام ஒருவர். சத்தியத்தின் மீதான அவரது பலத்தை மட்டுமன்றி அவரது உடற்பலத்தையும் எடுத்துக்காட்டும் விதமாகவே திருக்குர்ஆன் அவர் பற்றி விவரிக்கிறது. சண்டையிட்டுக்கொண்டிருந்த இருவருள் ஒருவரை வெறுமனே கை முஷ்டியால் குத்தியே மூசா கொன்றதாக அது குறிப்பிடுகிறது:

ஒருநாள் மக்கள் அயர்ந்திருந்த வேளையில் மூசா நகரினுள் நுழைந்தார். அப்போது இரு மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் அவரது கூட்டத்தைச் சேர்ந்தவர்; மற்றவர் அவருடைய எதிரிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர். பகைவனுக்கு எதிராக உதவுமாறு அவரது கூட்டத்தைச் சேர்ந்தவர் உதவி கேட்டபோது மூசா அப்பகைவனை ஒரு குத்து குத்திக் கதையை முடித்தார். உடனே மூசா, 'இது ஷைத்தானுடைய வேலைதான். நிச்சயமாக அவன் வழிகெடுக்கக்கூடிய பகிரங்க விரோதியாகவே இருக்கிறான்' என்று கூறினார். (28:15)

ஷுஐபின் புதல்வி மூசா عليه السلام அவர்களது பலம் பற்றி மிக உயர்ந்த நயத்துடன் கூறியதைத் திருக்குர்ஆன் இப்படிக் குறிப்பிடுகிறது:

அவர்கள் இருவருள் ஒருத்தி கூறினாள்: அருமைத் தந்தையே, அவரைக் கூலிக்கு அமர்த்துங்கள்; கூலிக்கு அமர்த்தப்படுவோரில் நிச்சயமாக அவர் மிகச் சிறந்தவர்; பலமுள்ளவர்; நம்பிக்கையானவர். (28:26)

---

73. முஹம்மது இப்னு இஸ்ஹாக், *'சீறத் றசூலில்லாஹ்'*.

தன்னுடைய சமூகத்தவர் வணங்குவதற்காக ஒரு காளை மாட்டைத் தயாரித்த சாமிரீயுடன் நபி மூசா ஏகத்துவக் கொள்கையைப் பாதுகாக்கும் வகையில் விவாதித்த வேளையில் அவரிடம் ஆத்மீகப் பலமும் உடற்பலமும் இணைந்திருந்தன:

> மேலும் நீ ஈடுபாட்டுடன் ஆராதனை செய்துகொண்டிருந்த உனது தெய்வத்தைப் பார். நிச்சயமாக அதனை நாம் சுட்டெரித்து, பின்னர் கடலில் வீசிவிடுவோம். (20:97)

நபி மூசாவின் இந்த உடற்பலம் பற்றிய குறிப்புகள் சமய-வரலாற்றுப் பிரதிகளின் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. நவீனக் காலத்தின் மிகப் பிரபல்யமான சிற்பக் கலைஞரான மைக்கல் ஆஞ்சலோ வடித்த சிலைகூட இக்கருத்துடன் ஒத்திசைவதாகவே உள்ளது. நபி மூசாவைக் குறிக்கும் வகையில் அவர் வடித்த சிற்பத்தில் இந்த உடற்பலத்தை அபாரமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு, சில நபிமார்கள் கொண்டிருந்த உடற்பலம் குறித்து பேசிக்கொண்டே போகலாம்.

> கப்பலைக் கட்டுவதில் நூஹ் நபி ﵇ மேற்கொண்ட உழைப்புக்கு வலிமையான கரங்கள் அவசியம்.
>
> இப்றாஹீம், இஸ்மாஈல் ﵉ ஆகிய இருவரும் கஅபாவைக் கட்டுவதற்கு உடற்பலம் அவசியமாக இருந்தது.
>
> நபி தாவூது ﵇ யுத்தக் கேடயங்கள் தயாரிக்கும் இரும்புக் கொல்லராக இருந்தார். அதற்கும் உடற்பலம் தேவை.
>
> ஸகரிய்யா ﵇ தச்சராக இருந்தார்.

இப்படி ஆராய்ந்துகொண்டு செல்லும்போது பலத்தின் பல்வேறு வடிவங்களையும், இஸ்லாமிய அழைப்பில் அதன் முக்கியத்துவத்தையும் நாம் கண்டுகொள்ளலாம். இறுதியில் நமக்குப் பலவண்ணம் கொண்ட அழகிய மொசைக் சித்திரமொன்று (Mosaic Image) கிடைக்கும்.

### விவேகமும் புத்தாக்கச் சிந்திப்பும்

சூழலுடன் பரம்பரை மரபணுக்கள் இணைந்திருக்கும் பண்புகளுள் ஒன்றாக நபிமார்களது அறிவாற்றலும் இருந்தது. இது ‘அல்ஃபதானா’ என்னும் புத்திக்கூர்மைக்கு அவசியமானது. எந்தச் சமூகத்துக்கு அல்லாஹ் ஒரு நபியை அனுப்பினாலும், அவர் அந்தச் சமூகத்திலேயே அதிகப் புத்திக்கூர்மை கொண்டவராக இருந்தார். ஆக்கச்

சிந்தனைக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவரிடம் அதிக ஆற்றல் இருந்தது. அந்த நபிமார்களின் அறிவாற்றலைத் தற்கால அளவுகோல்களால் மதிப்பீடு செய்தால் மிக உயர்ந்த மதிப்பெண் களைப் பெற்றுவிடுவார்கள். நபிமார்களது விவேகத்துக்கும் அறிவாற்றலுக்கும் புத்தாக்கத்துக்குமான உதாரணங்கள் திருக் குர்ஆனில் ஏராளம். குறிப்பாக நிராகரிப்பாளர்களது வாதங்களை முறியடிப்பதில் அவை அதிகம் வெளிப்பட்டன.

இப்றாஹீம் ﷺ விக்கிரகங்களையும் நட்சத்திரங்களையும் கோள் களையும் வணங்கிக்கொண்டிருந்த தன்னுடைய சமூகத்தவர் களையும், நிராகரிப்பாளராக இருந்த தன்னுடைய தந்தையையும் நோக்கிச் சான்றுகளை முன்வைக்கும்போது அவரது விவேகமும் புத்தாக்கத் திறனும் எவ்வாறிருந்தன என்பதைக் கவனியுங்கள். மட்டுமன்றி, தானே கடவுள் என வாதிட்ட நம்றூது என்ற அரசனுக்கு எதிராக அவர் எவ்வாறு சான்றுகளை முன்வைத்தார் என்பதைத் திருக்குர்ஆனில் படித்துப்பாருங்கள்:

> ‘அல்லாஹ் சூரியனை கிழக்கிலிருந்து கொண்டுவருகிறான். நீ அதனை மேற்கிலிருந்து கொண்டுவா’ என்று அவர் கூறியதும் நிராகரித்திருந்தவன் வாயடைத்துப்போனான். (2:258)

நம்றூது பதிலின்றி வாயடைத்துப்போனான். பின்னர் இப்றாஹீம் ﷺ தன்னுடைய சமூகத்தினர் வணங்கும் சிலைகள் கடவுள்கள் அல்லர் என்று அவர்களை ஏற்கச்செய்வதற்கு ஒரு திட்டம் வகுத்தார். அதற்கமைய எல்லாச் சிலைகளையும் உடைத்தெறிந்தார். பெரிய சிலையை மாத்திரம் உடைக்காமல் விட்டுவைத்தார். பின்னர் அவர் விசாரணைக்காக மக்களின் முன் கொண்டுவரப்பட்டபோது, ‘உங்கள் சிலைகளை உடைத்தது இந்தப் பெரிய சிலைதான். அவர்களிடம் பேச முடியும் என்றால் கேட்டுப்பாருங்கள்’ எனப் பரிகாசமாகக் கூறினார். இதன் மூலமாகத் தன்னுடைய சமூகத்தினர் சிலைகள்மீது வைத்திருந்த நம்பிக்கையை ஆட்டங்காணச் செய்வதில் வெற்றிபெற்றார். அவருடைய சமூகத்தினர் சீரிய சிந்தனைக்கும் இயல்புக்கும் திரும்பினர். ஆயினும் விரைவாகவே மீண்டும் தமது நிராகரிப்பிலும் பிடிவாதத்திலும் மூழ்கிவிட்டனர். அத்தியாயம் அல்அன்பியாவில் இடம்பெற்றுள்ள வசனங்களில் அதனைத் திருக்குர்ஆன் பதிவுசெய்துள்ளது:

> ‘இப்றாஹீமே, எமது தெய்வங்களுக்கு இந்த வேலையை நீயா செய்தாய்?’ என அவர்கள் கேட்டனர்.

> அதற்கவர், 'இல்லை, அவர்களில் உள்ள இந்தப் பெரியவர் தான் அதனைச் செய்தார். அவர்கள் பேசக்கூடியவர்களாயின் அவர்களிடமே கேட்டுப்பாருங்கள்' என்றார்.
>
> இதனால் அவர்கள் புத்தி தெளிந்து, 'நீங்கள்தான் அநியாயக் காரர்கள்' எனத் தங்களுக்குள்ளாகவே கூறிக்கொண்டனர்.
>
> பின்னர் அவர்கள் நாணத்தால் தலைகுனிந்து, 'அவர்கள் பேச மாட்டார்கள் என்பது உமக்குத் தெரிந்ததுதான்' எனக் கூறினர்.
>
> அதற்கவர், 'அப்படியென்றால், நீங்கள் அல்லாஹ்வை விடுத்து உங்களுக்கு எந்த நன்மையோ தீமையோ தராதவற்றையா வணங்குகிறீர்கள்?!' எனக் கேட்டார்.
>
> 'உங்களுக்கும், அல்லாஹ்வை விடுத்து நீங்கள் வணங்கு பவற்றுக்கும் கேடுதான். சிந்திக்க மாட்டீர்களா?!' என்றும் கூறினார். (21:62-67)

இத்தலைப்பின் கீழ் நேசத்துக்குரிய நம்முடைய தூதரான முஹம்மது ﷺ அவர்களது அறிவாற்றல்கள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். நபித்துவத்திற்கு முன்னர்கூட அன்னார் தமது அசாதாரண விவேகத் தாலும் புத்தாக்கச் சிந்திப்பாலும் குறைஷிக் கோத்திரத்தாருக்கு மத்தியில் உக்கிரமான போராக வெடிக்கவிருந்த ஓர் முரண்பாட்டை சமரசப்படுத்தினார்கள். புனித கஅபாவைக் கட்டியெழுப்பும் பணியை ஆரம்பித்த குறைஷிகள் *'அல்ஹஜருல் அஸ்வது'* என்ற கல்லை வைக்குமிடத்தை அடைந்தபோது தமக்குள் முரண்படலாயினர். அக்கல்லை உரிய இடத்தில் வைக்கும் கௌரவத்தை எந்தக் கோத்திரம் பெற்றுக்கொள்வது என்ற முரண்பாட்டினால் மீண்டும் ஒரு கொடிய யுத்தம் மூளலாம் என அங்கிருந்த சிலர் அஞ்சுமளவுக்கு நிலைமை சென்றிருந்தது. ஏற்கனவே சில அற்பக் காரணங்களுக்காகப் 'பக்ரு', 'தக்லபு' கோத்திரங்களுக்கிடையில் நாற்பது வருடங்களுக்கு மேலாகக் கொடிய யுத்தம் நீடித்திருந்தது. இத்தனைக்கும் அவ்விரு கோத்திரங்களும் ஒரே வயிற்றுச் சகோதரர்கள் வழியாக வந்தவை.

*'அல்ஹஜருல் அஸ்வது'* முரண்பாடு மக்காவில் பல நாள்கள் முடிவின்றித் தொடர்ந்த நிலையில், குறிப்பிட்ட ஒரு தினத்தில் *மஸ்ஜிதுல் ஹறாம்* எல்லைக்குள் யார் முதன்முதலாக நுழைகிறாரோ அவரையே பிரச்சினைக்குத் தீர்வு சொல்பவராக ஆக்குவோம் என ஒருவர் ஆலோசனை கூறினார். அவ்வாறு முதன்முதலாக நுழைபவர் முஹம்மதாகவே இருக்க வேண்டுமென அல்லாஹ் நாடியிருந்தான். அவர்களது தீர்ப்பை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி நிலத்தில் ஒரு போர்வை விரிக்கப்பட்டு அதன் நடுவில் கல் எடுத்து வைக்கப்பட்டது. பின்னர், சண்டையிட்டுக்கொண்டிருந்த கோத்திரத் தலைவர்கள் போர்வையின் ஓரங்களைப் பிடித்து அது வைக்கப்பட வேண்டிய இடத்திற்கு உயர்த்திப் பிடிக்குமாறு கேட்கப்பட்டது. பின்னர் முஹம்மது ﷺ அவர்கள் தமது திருக் கரங்களால் அதனை எடுத்து உரிய இடத்தில் வைத்தார்கள். அது அனைவரும் ஏற்கும் தீர்வாக அமைந்திருந்தது.[74] அன்னார் நபியாக்கப்பட ஐந்து வருடங்களுக்கு முன்பு இது நடந்தது. எனவே அது வஹீயாக அன்றி, அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்த விவேகமாகவும் அறிவாற்றலாகவும் அமைந்திருக்கலாம்.

நிகழ்வுகளை அவதானித்து உரிய தீர்மானங்களைப் பெறுவதற்கு அன்னார் தமது அறிவாற்றலில் தங்கியிருந்தமையை அன்னாரது வாழ்வியல் நமக்கு வலியுறுத்துகிறது. மனைவி குழந்தைக்குப் பாலூட்டும் காலத்தில் கணவன் அவளுடன் உறவு கொள்வதை (அல்கீலா) அன்னார் தடைசெய்ய நினைத்து பின்னர் ஆகுமாக்கியதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பால் குடிக்கும் குழந்தைக்குத் தீங்கு நேரலாம் என அஞ்சியே அன்னார் அதனைத் தடுக்க முனைந்தார்கள். இதுகுறித்து அன்னார் கூறியதாக முஸ்லிம் கிரந்தத்தில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

> அல்கீலாவைத் தடைசெய்யவே நான் எண்ணினேன். எனினும் ரோம, பாரசீகர்கள்கூட அதில் ஈடுபட்டாலும், அவர்களது குழந்தைகளை அது பாதிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.

## பரம்பரை மதிப்பும் குடும்பக் கண்ணியமும்

விவேகம், புத்தாக்கச் சிந்தனை, உடற்பலம் என்பன பரம்பரை மரபணுப் பண்புகளாகும் அல்லது பரம்பரையும் சூழலும் கலந்த பண்புகளாகும். ஆக, உளவியல் நோக்கில் இப்பண்புகள் அனைத்தும் இவ்விரு தனிமங்களையும் சுற்றியே உள்ளன.

ஆனால் நபிமார்களது ஆளுமை உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தக் கூடிய வேறு சமூக, நாகரிகப் பரிமாணங்களும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் பரம்பரை மதிப்பும் குடும்பக் கண்ணியமும். அல்லாஹ் தன்னுடைய நபிமார்களை உருவாக்கும் விசயத்தில் தேர்ந்தெடுக்கும் சமூக-நாகரிகப் பண்புகளுள் ஒன்றாக இதுவும் உள்ளது. அந்த வகையில், எல்லா நபிமார்களும் கண்ணியமும் கௌரவமும்

74. இப்னு கஸீர், *'அல்பிதாயா வந்நிஹாயா'*, பாகம் 2. பக்.705.

வாய்ந்த கோத்திரங்களிலிருந்தும் புகழ்பெற்ற குடும்பங்களிலிருந்தும் வந்தவர்களே. ஏனெனில், அல்லாஹ்வின் தூதை எடுத்துரைக்க வந்த ஒருவரை அவருடைய சமூகத்தினர் இழிவு கண்கொண்டு பார்க்கவோ, அவர் தாழ்வு மனப்பான்மையுடன் அகப்போராட்டத்தில் உழலவோ கூடாது.

நம்முடைய நபிகளார் முஹம்மது ﷺ அவர்களது குடும்பப் பின்னணியையும், சமூகத்தில் அவர்கள் பெற்றிருந்த கௌரவத்தையும் கவனித்துப்பாருங்கள். அன்னாரது கோத்திரமான குறைஷிக் கோத்திரம் பழம்பெரும் அறபுக் கோத்திரமாக இருந்தது. அக்கோத்திரத்தின் கௌரவம்மிக்க குடும்பங்களுள் ஒன்றாக பனூ ஹாஷிம் குடும்பம் இருந்தது. அன்னார் கூறியதாக இமாம் முஸ்லிம் பின்வரும் பிரபலமான ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்:

> நிச்சயமாக அல்லாஹ் இஸ்மாஈலின் சந்ததியிலிருந்து கினானாவைத் தெரிவுசெய்தான். கினானாவிலிருந்து குறைஷைத் தெரிவுசெய்தான். குறைஷிலிருந்து பனூ ஹாஷிமைத் தெரிவுசெய்தான். பனூ ஹாஷிமில் என்னைத் தெரிவுசெய்தான்.

வரலாறு பதியப்பட்ட காலங்களில் வாழ்ந்த எல்லா நபிமார்கள், தூதர்களின் வம்சப் பரம்பரைகளில் இவ்வாறான தெரிவை ஆய்வாளர்கள் அவதானிக்கலாம். 'நபிமார்களின் தந்தை' எனப் பெயர்பெற்ற நபி இப்றாஹீம் عليه السلام அவர்களுக்குப் பின் வந்த நபிமார்கள் பொதுவாக 'ஒருவரிலிருந்து இன்னொருவராக வந்த வழித்தோன்றல்களே' (3:34).

ஏற்கனவே நாம் குறிப்பிட்டதுபோல் நமது அவதானங்களும், அவற்றைப் பலப்படுத்தும் வகையிலான உளவியல் கோட்பாடுகளும் இஸ்லாமிய வசனங்களும் நபிமார்களது குழந்தைப் பருவம் முதலான வாழ்வு பற்றிய ஸ்தூல விளக்கத்தையும் நடைமுறை சார்ந்த எடுத்துக்காட்டுகளையும் வேண்டி நிற்கின்றன. அப்போதுதான், நபிமார்களுக்கு 'நுபுவ்வத்' பணியை வழங்கும்வரையிலான பருவம் வரை அவர்களை இறைவன் வளர்த்தெடுத்ததில் மறைந்துள்ள ஞானத்தின் சில பகுதிகளாவது வெளிச்சத்துக்கு வர முடியும். ஏனெனில், குழந்தைப் பருவ ஆண்டுகளும், பெற்றோரது — குறிப்பாகத் தாயின் — பராமரிப்பும் ஒருவரது ஆளுமை உருவாக்கத்தில் ஆழ்ந்த தாக்கம் கொண்டவை. அந்த வகையில்தான், அடுத்துவரும் இரு அத்தியாயங்களிலும் நபி மூசா, நபி யூசுஃப் عليهما السلام ஆகிய இருவரையும் நாம் தெரிவுசெய்துள்ளோம். அவ்விருவரின் வாழ்வு பற்றியும் திருக்குர்ஆன் மிக விரிவாகப் பேசியுள்ளது.

# அத்தியாயம் ஆறு

## நபி மூசாவின் சூழலையும் பரம்பரையையும் திட்டமிடுவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றிய அவதானங்கள்

நபி மூசா ﷺ தனது தூதுப் பணியை மேற்கொள்ளும் வகையில் எவ்வாறு தயார்படுத்தப்பட்டார் என்பதைத் திருக்குர்ஆன் விவரிக்கிறது. அதில் மறைந்திருந்த தெய்வீக ஞானநுட்பங்கள், இறைவன் தன்னுடைய தூதர்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான சூழலையும் பரம்பரையையும் எவ்வளவு நுணுக்கமாகத் தேர்வுசெய்திருந்தான் என்பதற்குத் தெளிவான உதாரணங்களாக உள்ளன. அவர்களது பாரமான பணியை வெற்றிகரமாக நிறைவேற்றும் முதிர்ச்சியை வழங்கும் உபாயமாக அது அமைந்திருந்தது.

நபி மூசா ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்பு 'உலுல் அஸ்மு' என அழைக்கப்பட்ட 'திடவுறதி பூண்ட' நபிமார்கள்மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளுள் மிகக் கடினமான ஒன்றாகும். அநியாயத்திலும் அத்துமீறலிலும் அடக்குமுறையிலும் இறை நிராகரிப்பிலும் உலகம் என்றுமே கண்டிராத உச்சத்தில் இருந்த ஃபிர்அவ்னை எதிர்கொள்ளும் பொறுப்பு அன்னாருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஃபிர்அவ்ன் தனது செயலிலும் பேச்சிலும் கொண்டிருந்த அனைத்து கெட்ட பண்புகளையும் புனிதத் திருக்குர்ஆன் பதிவுசெய்துள்ளது:

> நானே உங்களது மிகப் பெரிய கடவுள் என அவன் கூறினான். (79:24)

> சபையோரே, என்னையன்றி உங்களுக்கு வேறு இறைவன் இருப்பதாக நான் அறியவில்லை. (28:38)

இஸ்றவேலர்களது குழந்தைகளை அவன் கொன்றொழித்ததையும், பெண்களை மட்டும் வாழவிட்டதையும் திருக்குர்ஆன் இப்படி விவரிக்கிறது:

*நிச்சயமாக ஃபிர்அவ்ன் பூமியில் பெருமையடித்து அதில் உள்ளவர்களைப் பல பிரிவினர்களாக்கினான். அவர்களுள் ஒரு கூட்டத்தாரைப் பலவீனர்களாக்கி, அவர்களது ஆண் குழந்தைகளை அறுத்துக் கொன்று, அவர்களுடைய பெண்களை உயிருடன் விட்டுவைத்தான். நிச்சயமாக அவன் விஷமக்காரனாகவே இருந்தான்.* (28:4)

நபி மூசாவும் ஏனைய இஸ்றவேலர்களைப் போலவே ஃபிர்அவ்னின் எகிப்தில் இழிநிலையில் உயிர்பிழைத்து வாழ்ந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்க முடியும் என்பதைச் சற்றுக் கற்பனை செய்து பார்ப்போம். அத்தகைய பின்னணியில் அவர் ஃபிர்அவ்னின் டாம்பீக மாளிகையினுள் நுழைந்து, பரிவாரங்கள் சூழ ராஜ உடையில் அமர்ந்திருக்கும் அநியாயக்காரனிடம், 'நான் அல்லாஹ்வின் தூதராக உன்னிடம் வந்திருக்கிறேன்' என்று கூறியிருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள். அவர் அப்படிச் செய்திருந்தாலும் பயத்தில் நடுங்கிக்கொண்டுதான் செய்திருப்பார். பிரமாண்டமான மாளிகையின் பிரமிப்பில் அவரது பார்வை மருண்டிருக்கும்.

ஆனால் அல்லாஹ் அவனுடைய நபியாகிய மூசாவுக்கு நாடியிருந்ததோ வேறொன்று. நபிமார்களுக்கு அவசியமான கண்ணியத்தைப் பலப்படுத்த அவன் நாடியிருந்தான். அந்த வகையில்தான் அவருக்குச் சில தனித்துவமான பரம்பரைப் பண்புகளை வழங்கியிருந்தான். ஃபிர்அவ்னின் பாதுகாப்பிலேயே அவர் வளர்வதற்கும் ஏற்பாடு செய்தான். மாளிகை அவரது வீடாக மாறியது. ஃபிர்அவ்ன் அவனது வீட்டில் சாதாரண ஆடையணிந்து தளர்வாக இருப்பதைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. சாதாரண மனிதர்கள் நோய்வாய்ப்படுவதுபோல் அவனும் நோய்வாய்ப்படுவதை அவர் கண்டார். தூங்கும்போது அவனும் குறட்டைவிட்டான். ஆக, தன்னைத் தரிசிப்பவர்களைப் பயமுறுத்தும் அளவுக்கு அவன் பயங்கரமான கடவுள் அல்லன் என்பதும், எகிப்து மக்கள் அஞ்சும் அளவுக்கு அவன் பலசாலி அல்லன் என்பதும் அவருக்குத் தெரியவந்தது.

ஃபிர்அவ்ன் போன்ற ஒரு அநியாயக்காரனிடம் அனுப்பிவைக்கப் படும் இறைத்தூதர் சில தனித்துவமான பாரம்பரிய, சூழலியல் பண்புகளைப் பெற்றிருப்பது அவசியம். அப்போதுதான் அவனது அடக்குமுறைக்கு முன்னால் அவரால் திடமாக நின்றுபிடிக்க முடியும். எனவேதான், நபி மூசாவின் அனைத்து வாழ்வுக் கட்டங்களிலும் அவரைப் பயிற்றுவித்து வழிகாட்டும் பொறுப்பை

அல்லாஹ் நேரடியாகப் பொறுப்பேற்றிருந்தான். அத்தியாயம் தாஹாவின் மூன்று வசனங்கள் நபி மூசாவின் பிறப்புமுதல் அவர் நபியாக்கப்பட்டதுவரையான வாழ்வை மிக அற்புதமாகச் சுருக்கித் தருகிறது:

உமது தாய்க்கு வஹீ மூலமாக நாம் அறிவித்த சமயம்,

'குழந்தையைப் பேழையில் வைத்து நதியில் போட்டுவிடு. நதி அதனைச் சுமந்துசென்று கரையில் தள்ளிவிடும். அங்கே எனக்குப் பகைவனும் அவருக்குப் பகைவனுமாகிய ஒருவன் அவரை எடுத்துக்கொள்வான்' எனப் பணித்தோம். (மூசாவே) நீர் என் கண்முன்னே வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக உம்மீது அன்பைப் பொழிந்தேன்.

உம்முடைய சகோதரி உம்மை எடுத்தவர்களிடம் சென்று, 'இக்குழந்தையைப் பொறுப்பேற்கக்கூடியவரை உங்களுக்குக் காட்டித்தரட்டுமா?' எனக் கேட்டாள். அவ்வாறு உம்முடைய தாய் கவலைப்படாது கண்குளிர்ச்சி அடைந்திருக்கும் பொருட்டு, உம்மை உம்முடைய தாயிடமே கொண்டுவந்து சேர்த்தோம். பின்னர் நீர் ஒரு மனிதனைக் கொலைசெய்து கவலைப்பட்டபோது, அந்தக் கவலையிலிருந்து உம்மைக் காப்பாற்றினோம். உம்மை நாம் பல சோதனைகளுக்கும் உட்படுத்தினோம். பின்னர் 'மத்யன்'வாசிகளிடமும் பல வருடங்கள் தங்கியிருந்தீர். அதன் பின்னர்தான், மூசாவே, நீர் தக்க பருவத்தை அடைந்தீர். (20:38-40)

அல்லாஹ் தன்னுடைய அடியார் மூசாவிடம் கூறிய இவ்வார்த்தைகள் எவ்வளவு அழகானவை! எவ்வளவு அற்புதமான இரக்கத்தையும் கிருபையையும் சுமந்துநிற்பவை!

நீர் என் கண்முன்னே வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக உம்மீது அன்பைப் பொழிந்தேன்.

உம்மீது என் அன்பைப் போட்டேன். உம்மைக் காண்பவரெல்லாம் நேசம் வைக்கக்கூடிய மலர்ச்சியையும் வசீகரத்தையும் உம்மிடம் ஏற்படுத்தினேன். கடின சித்தம் கொண்ட ஃபிர்அவ்ன்கூட மன மிளகி, கண்ணியத்துக்குரிய அவனுடைய மனைவி அவரைத் தத்துப் பிள்ளையாக எடுத்துக்கொள்ள விரும்பியதற்கு இணங்குமளவுக்கு அந்த அன்பும் இரக்கமும் பலமாக இருந்தன. இஸ்றவேலர்களைப் பொறுத்தவரை, வெறுப்பைவிட இந்தத் தெய்வீக அன்புணர்ச்சியே தாக்கம்மிக்க ஆயுதமாகப் பயன்பட்டது. ஆக, சூழல் பண்புகளுடன்

பரம்பரைப் பண்புகளும் இணைந்து மூசா ﷺ ஃபிர்அவ்னின் மாளிகையில் ஓர் இளவரசன்போன்று வளர்கிறார்.

சந்தேகமின்றி ஃபிர்அவ்ன்கூட அவரை நேசித்தான். அவரது அசாதாரண அறிவாற்றலை விரும்பினான். அதனால்தான், மாளிகைவாசிகளுக்கும் சமூகப் பிரபுக்களுக்கும் ஏற்ற அறிவு-நாகரிகச் சூழலில் வாழும் வாய்ப்பை அவருக்கு அளித்தான். அவர் வாலிபப் பருவத்தை அடைந்து, அறிவையும் ஞானத்தையும் உள்வாங்கும் தயார்நிலையை அடைந்தபோது அல்லாஹ் அதனை அவருக்குக் கொடுத்தான்:

> அவர் வாலிபமடைந்து பக்குவநிலை பெற்றபோது அவருக்குக் கல்வியையும் ஞானத்தையும் அளித்தோம். நல்லோருக்கு இப்படித்தான் நாம் நற்கூலி வழங்குகிறோம். (28:14)

இப்போது நாம், நல்லறிவும் ஞானமும் பொருத்தமான வளர்ப்பும் பெற்ற ஒரு தூதரைப் பார்க்கிறோம். தனது இரட்சகனின் தூதை ஃபிர்அவ்னுக்கும் அவனது சமூகத்துக்கும் எடுத்துச்சொல்வதற்கு அவர் தயாராகிவிட்டார். ஆயினும், நாம் இன்னும் ஒரு கரையில்தான் நிற்கிறோம். மூசா ﷺ பரம்பரைரீதியாகவும் சூழல்ரீதியாகவும் எவ்வாறு தயார்படுத்தப்பட்டார் என்பதை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

நபி மூசாவின் வாழ்வு பற்றிய தனித்துவமான திருக்குர்ஆனிய விவரணை, அனைத்து நபிமார்களது வாழ்வும் — அவை முழுமை யாகத் திருக்குர்ஆனில் கூறப்படாவிட்டாலும் — எவ்வளவு கச்சிதமாக இறைவனால் வார்ப்பு செய்யப்பட்டவை என்பதற்கான மகத்தான சான்றை முன்வைக்கிறது. இதுகுறித்த நமது அவதானங்களைப் பதிவுசெய்வதற்குக் கால-இட ஒழுங்குடன் கட்டுப்பட்டு நிற்காமல், திருக்குர்ஆன் பின்பற்றியுள்ள அதே முறைமையையே நாமும் பின்பற்ற விரும்புகிறோம். அந்த வகையில் நபிமார்கள் தன்னம்பிக்கை, நற்பண்புகள் என்பவற்றின் மீது பயிற்றுவிக்கப் படுவதன் முக்கியத்துவத்திலிருந்து ஆரம்பிப்போம்.

### குழந்தைப் பருவ வளர்ப்பில் தாயின் வகிபாத்திரம்

மனிதர்கள்மீது சூழலும் பாரம்பரியமும் ஏற்படுத்தும் தாக்கம் அனைவரும் அறிந்ததுதான். சிறுவர்களதும் பருவ வயதை அடைந்தவர்களதும் நடத்தையில் அவதானிக்கப்படும் விசயங்கள் இதனை உறுதிசெய்துள்ளன. ஆயினும், நவீன உளவியல் விஞ்

ஞானம் இக்கருத்தாக்கங்களைத் தனது அறிவியல், பரிசோதனை முறைமைகள் ஆகியவற்றின் மூலமாக ஆழ்ந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தி, நாம் எதிர்பாராத பல உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. குழந்தைகளின் சிசுக் கட்டத்திலிருந்தும் பால்குடிக் கட்டத்திலிருந்தும் இவ்வாய்வுகள் ஆரம்பிக்கின்றன. அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகளையும், பல்வேறு உளவியல் பண்புகளையும் குழந்தைகளிடம் விதைப்பதில் தாயின் முக்கியத் துவம் பற்றி இவ்வாய்வுகள் வெளிப்படுத்தின.

உதாரணமாக, குழந்தை பிறந்த சில ஆண்டுகளில் பெற்றோரின் நடத்தையையும் சூழலையும் புரிந்துகொள்ளத் தொடங்கிய பிறகே சூழல்-தாக்கம் ஆரம்பிப்பதாகப் பொதுவாக நம்பப்பட்டுவந்தது. ஆனால், தாயின் கரு முட்டை தந்தையின் உயிரணுவுடன் இணைந்த திலிருந்தே சூழல்-தாக்கம் ஆரம்பித்துவிடுவதாக நவீன அறிவியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. கருப்பைச் சூழமைவின் இருளில் கூடக் குழந்தை தாயின் உடல்-உள நிலைகளால் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தாக்கமடைகிறது. தாய் உட்கொள்ளும் உணவும் மருந்துகளும்கூட சிசுவைப் பாதிக்கின்றன. அவ்வாறே பாலுட் டலுக்குப் பல அதிசய ஆற்றல்கள் இருப்பதாகப் பிறந்த சிசுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முறை ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. அவ்வாற்றல்கள் குறித்த தெளிவான சான்றுகள் இல்லையெனில் நாமும் அவற்றை நம்பியிருக்க மாட்டோம்.

குழந்தை கர்ப்பத்தில் ஏழு மாத சிசுவாக இருக்கும்போதுகூடத் தாயின் குரலை இனங்கண்டுகொள்கிறது. பிறந்த சில வாரங்களிலேயே தாயின் பால் வாசனையைப் பிற தாய்மாரின் பால் வாசனையிலிருந்து குழந்தை வேறுபிரித்து அறிந்துகொள்கிறது. அதன் தாய்ப்பாலை ஒரு பஞ்சுத் துண்டில் ஈரமாக்கி, வேறொரு பெண்ணின் பாலையும் ஒரு பஞ்சுத் துண்டில் ஈரமாக்கிக் குழந்தைக்கருகில் வைக்கும்போது, அது தனது தாயின் பாலில் நனைக்கப்பட்ட பஞ்சை நோக்கியே மீண்டும்மீண்டும் திரும்புவதை அவதானித்து இவ்வுண்மை நிரூபிக்கப்பட்டது.

வேறுசில ஆய்வுகளும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. விஞ்ஞானி கள் ஒரு கணினித் திரையின் மீது தாயின் தெளிவற்ற ஒரு படத்தைக் காட்சிப்படுத்தினர். அப்படத்தைத் தெளிவாகக் காண்பிப்பதில் தாக்கம் செலுத்தக்கூடிய ஓர் மெல்லிய மின்சார விசையும் தொடர்பு படுத்தப்பட்டிருந்தது. விஷேசமாக வடிவமைக்கப்பட்ட ஒரு கருவி யைச் சூப்புவதன் மூலமாகக் குழந்தை அம்மின்சார விசையைப் பிறப்பிக்க முடியும். இந்நிலையில், குழந்தை பொருத்தமான

வகையில் சூப்புவதன் மூலமாகத் தேவையான மின்சார விசையை உருவாக்கி தாயின் படத்தைத் தெளிவாக்க முடிந்ததாக அதன் மூலம் கண்டறிந்தார்கள். குழந்தைக்கும் தாய்க்கும் மத்தியிலான தொடர்பின் மீது கவனம் குவிக்கும் இவ்வாய்வானது பால்குடிக் குழந்தைகளது உணர்வுப் பரிமாணத்தையும் உளவியல் பரிமாணத்தையும் நோக்கி நம்மை அழைத்துச்செல்கிறது.

குழந்தை தனது வாழ்வின் முதல் வாரங்களிலும் மாதங்களிலும் தாயுடன் உணர்வுபூர்வமான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுவிடுகிறது. இந்தத் தொடர்புதான் அது தனது ஆயுள் முடிவுவரை பிறருடன் ஏற்படுத்திக்கொள்ளும் உணர்ச்சிபூர்வமான சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கான திடமான அஸ்திவாரமாக மாறுகிறது. இத்தொடர்பை உளவியல் அறிஞர்கள் ‘உணர்ச்சிபூர்வமான பற்று’ (Emotional Attachment) என அழைக்கின்றனர். தாயிடமிருந்து குழந்தை பிரிக்கப்பட்டுத் தொடர்பு துண்டிக்கப்படும்போது அது விரக்திநிலைக்கு உள்ளாகிறது. இதனால் எதிர்காலத்தில் பிற மனிதர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்கான ஆற்றலையும் சிலபோது இழந்துவிடுகிறது.

அந்த வகையில், குழந்தை உணர்வுபூர்வமான மானிடத் தொடர்புகளை உருவாக்கிக்கொள்வதில் தாயின் வகிபாத்திரம் மிக அடிப்படையானதாகும். அவளே குழந்தையை அணைத்துக்கொள்கிறாள்; பாலூட்டுகிறாள்; கொஞ்சுகிறாள். அவள் நெஞ்சோடு அணைக்கும்போது அவளது இதயத்துடிப்பைக் குழந்தை கேட்கிறது. கர்ப்பத்தின் இருளில் இருந்தபோது குழந்தை கேட்ட அதே இதயத்துடிப்பு. அதனால் குழந்தை அமைதியும் நிம்மதியும் அடைகிறது. இங்கு தந்தையின் வகிபாத்திரம் இரண்டாம் நிலையான பாத்திரம்தான்.

தாயின் வகிபாத்திர முக்கியத்துவம் குறித்து குழந்தை-உளவியல் கண்டடைந்த உண்மைகள், நபிமார்கள் அவர்களது தாய்ப்பாசத்திலிருந்து துண்டிக்கப்படாதிருந்ததில் இயங்கிய தெய்வீக ஞானத்தை நமக்கு உணர்த்துகின்றன. அதேவேளை, அவர்களது தந்தையரின் நிலை பெரிதும் வேறுபட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக, நேசத்துக்குரிய நம்முடைய தூதர் முஹம்மது ﷺ அவர்களுடைய தந்தை நபிகளார் பிறக்க முன்பே மரணித்துவிட்டார். ஆனால் அவர்களுக்கு நான்கு அன்னையரை அல்லாஹ் அளித்திருந்தான். ஆமினா பின்த் வஹபு அவர்களே மக்காவில் நபிகளாருடைய பேரன்னையாக இருந்தார்கள். அன்னை ஹலீமா அஸ்ஸஅதிய்யா தாயிஃபில்

இருந்தார். அடுத்தவர் துவைபா. நான்காமவர் நபிகளாருடைய செவிலித்தாய் உம்மு அய்மன். அவரையும் நபிகளார் 'அன்னையே!' என்றுதான் அழைத்திருக்கிறார்கள். நபிகளார் ஆறு வயதை அடைந்து உணர்ச்சிரீதியாக முதிர்ச்சியடையும்வரை அன்னை ஆமினா பின்த் வஹபை அல்லாஹ் உயிர்வாழ விட்டிருந்தான். நபி இப்றாஹீம்கூட மகன் இஸ்மாஈலைப் புற்பூண்டுகளற்ற பள்ளத்தாக்கில் அவருடைய தாயின் பரமாரிப்பில் விட்டுவைக்க வேண்டும் என்றே அல்லாஹ் கட்டளையிட்டான்.

நபி மூசாவைக்கூட, பாலூட்டக்கூடிய பல அன்னையரைவிட்டு விலக்கி உண்மையான தாயாரிடமே அல்லாஹ் சேர்ப்பித்தான். பிறகு இறைவிசுவாசம் கொண்ட மற்றோர் அன்னையையும் அவருக்கு வழங்கினான். அவர் ஃபிர்அவ்னின் மனைவி ஆவார். இரு அன்னையரும் அவர்மீது பேரன்பு கொண்டிருந்தனர். ஒருவர் பெற்றெடுத்த அன்னை; மற்றவர் குழந்தைப்பேறு அற்றிருந்த அரசி. அவரும் மூசாவின் மீது பாசத்தைப் பொழிந்தவராகவே இருந்தார். குழந்தையாக இருந்த மூசா இரு அன்னையருக்கு மாத்திரம் செல்லப்பிள்ளையாக இருக்கவில்லை. ஃபிர்அவ்னின் மாளிகைப் பெண்கள் அனைவராலும் அவர் சீராட்டப்பட்டார். ஏனெனில் அவர் அரசியின் செல்லப்பிள்ளை; அல்லாஹ்வின் அன்பு பொழியப்பெற்றவர்.

அவர் வளர்ந்து, கொலை செய்யப்படுவது குறித்த அச்சம் நீங்கிய பின்னர் ஃபிர்அவ்னைக் கண்ணியத்தோடும் தன்னம்பிக்கையோடும் எதிர்கொள்வதற்காக எகிப்துக்குத் திரும்பிவருகிறார். அன்பு, இரக்கம் முதலிய பண்புகளும், திடவுறுதி பூண்ட நபிமார்கள் எதிர்கொள்ளக்கூடிய துன்பங்களைத் தாங்கும் பொறுமையும் தாங்கிவருகிறார். ஆக, குழந்தை பிறந்ததுமுதல் ஆரம்பிக்கும் பண்புருவாக்கத்தில் தாய்க்கு அல்லது தாயின் அந்தஸ்தில் இருப்பவருக்கு அடிப்படையான ஒரு பாத்திரம் உள்ளமை கண்கூடு.

### நபி மூசாவின் முன்னோர்

எனினும், தன்னம்பிக்கையை விதைத்தல் என்பது உளவியல் பரிமாணத்தால் மாத்திரமே நிறைவேறும் ஒன்றல்ல. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், சமூக-நாகரிகப் பரிமாணமும் அதனுடன் இணைய வேண்டும்.

ஒரு குழந்தை தாழ்ந்த கோத்திரம் ஒன்றில் பிறந்ததனால் அதனிடம் ஏற்படக்கூடிய தாழ்வு மனப்பான்மையைத் தாயின் பாசமோ

தந்தையின் தைரியமோ மாற்றியமைக்கப் போதுமானதல்ல. அந்த வகையில்தான் அல்லாஹ் தன்னுடைய நபிமார்களைக் கண்ணியமான பரம்பரையிலிருந்து உருவாக்கினான். அவர்களது சமூகத்திலேயே கீர்த்தியும் பழமையும் வாய்ந்த கோத்திரங்களி லிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களது சமூகங்கள் அவர்களை அங்கீகரிக்கவும், சமூகரீதியான குறைபாடு அவர்களை இகழ்வதற்கான வழியாக அமையாதிருக்கவும் இது அவசியமாக இருந்தது. இஸ்றவேலர்களைப் பொறுத்தவரை, மூசா இப்னு இம்றான் மிகக் கௌரவமான ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். அல்லாஹ்வால் 'நுபுவ்வத்' வழங்கி கண்ணியப்படுத்தப்பட்ட வீட்டில் வளர்ந்தவர்:

> நிச்சயமாக அல்லாஹ் ஆதமையும் நூஹையும் இப்றாஹீமின் குடும்பத்தையும் இம்றானின் குடும்பத்தையும் உலகத்தாரை விட மேலாகத் தேர்ந்தெடுத்தான்.
>
> அவர்களில் ஒருவர் மற்றவரின் சந்ததி ஆவார். அல்லாஹ் நன்கு செவியுறுபவனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கிறான். (3:33-34)

நம்பத்தகுந்த பல திருக்குர்ஆன் விரிவுரை நூல்களில் குறிப்பிடப் பட்டிருப்பதுபோல், நபி மூசா ﵇ நபி யஅகூபு ﵇ அவர்களின் சந்ததி ஆவார். மறுபுறத்தில், மூசா ﵇ ஃபிர்அவ்னிடமும் அவனுடைய மனைவியிடமும் பெற்றிருந்த அந்தஸ்துக்காக எகிப்தியர்கள் அவரை மகத்துவப்படுத்தினர். இஸ்றவேலியப் பரம்பரையில் பிறந்தவராயினும் அவர்களது தெய்வம், அரசி ஆகியோரின் செல்லப்பிள்ளையாக அவர் இருந்தமையே இதற்குக் காரணமாகும்.

## நபி மூசாவுக்கு இறைவன் உடற்பலத்தையும் உணர்வுப் பலத்தையும் அனந்தரமாக வழங்கியது ஏன்?

இறைவன் நபி மூசாவுக்கு அனந்தரமாக அளித்திருந்த அசாதாரண உடற்பலமும், கடுமையான, விரைவான கூருணர்ச்சியும் தனிச் சிறப்பான பண்புகள் எனலாம். பூமியில் வாழ்ந்த மிகப் பெரிய ஒரு அநியாயக்காரனுக்கு முன்னால் இறைவனின் தூதை எடுத்துரைப்பதற்கு அதிகப் பலமும் திட நம்பிக்கையும் அவருக்குத் தேவைப்பட்டன. பலமான உடற்கட்டமைப்பு என்பது இறைவன் எல்லா நபிமார்களுக்கும் வழங்கிய கொடைதான். ஆனாலும், அல்லாஹ் ஏதோ ஒரு காரணத்துக்காகக் குறிப்பிட்ட ஒரு நபிக்கு அதனை அபரிமிதமாகக் கொடுக்கலாம். வசீகரப் பண்பும்

அப்படிப்பட்டதுதான். எல்லா நபிமார்களிடமும் அப்பண்பு காணப்பட்டபோதும், நபி யூசுஃபுக்கு அது பெருமளவு வழங்கப் பட்டு அதன் மூலமாகவே அவர் சோதிக்கப்பட்டார்.

மூசா ﷺ உயரமானவராகவும் அசாதாரணப் பலம் கொண்டவராகவும் இருந்திருக்கிறார். *'அல்இஸ்றா வல்மிஃறாஜ்'* என்னும் விண்ணகப் பயணத்தில் நபி மூசாவைப் பார்த்த நபி முஹம்மது ﷺ அவர்கள், அவர் கடும் கபில நிறமான உயர்ந்த தோற்றம் கொண்ட மனிதராக[75] இருந்ததாக வர்ணித்தார்கள். அவ்வாறே நபி மூசாவைச் சித்தரிக்கும் பண்டைய ஓவியங்களில் அவரது உடற்பண்புகளையும் லட்சணங்களையும் பற்றிய விவரணத்தை நம்மால் பார்க்க முடி கிறது.ரோம் மன்னர் ஹிரக்கல் நபிமார்களது ஓவியங்களைப் பாதுகாத்து வைத்திருந்ததாக இமாம் இப்னு கஸீர் குறிப்பிட்டுள்ளார். நபி சுலைமான் ﷺ விட்டுச்சென்ற அற்புதங்களுள் அதுவும் ஒன்றாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.[76]

இந்த ஓவியங்கள் நபி மூசாவைச் சுருண்ட கேசம் கொண்டவராகவும், கண்கள் குழி விழுந்தவராகவும், கூரிய பார்வை கொண்டவராகவும், கோபம் கொண்டவர்போன்று முகம் கடுகடுத்தவராகவும் சித்தரிக் கின்றன. இத்தகைய அறிவிப்புகள் பலவீனமானவையாக இருந்த போதிலும், திருக்குர்ஆனிலும் நபிமொழியிலும் வந்திருப்பதுபோல் அவை நபி மூசாவின் பண்புகளைச் சித்தரிக்கின்றன. அவரது உயர்ந்த தோற்றம், முறுக்கேறிய தசைகள், கறாரான முக பாவம் ஆகியன கம்பீரமான ஒரு மனிதராகவும் சமூகம் கட்டுப்படக்கூடிய தலைவராகவும் அவரைச் சித்தரிக்கின்றன.

நபி மூசா ﷺ அனந்தரமாகப் பெற்றிருந்த மற்றோர் அம்சம் அவரது உளவியல் பரிமாணமாகும். அவருக்கு அல்லாஹ் தனித்துவ மான நரம்புமண்டலத்தை ஏற்படுத்தியிருந்தான். அதன் கூர்மை அவரது எதிர்வினைகளின்போது தெளிவாக வெளிப்பட்டது. தனது கடுமையான கூருணர்ச்சி பற்றி அவரே விவரித்தமையைத் திருக் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. உணர்ச்சிவசப்படும்போது அவருக்கு ஏற்படும் மனப்பதற்றத்தை மிக நுட்பமாக அது வர்ணிக்கிறது:

> *என் நெஞ்சு நெருக்கடிக்குள்ளாகிவிடும். என் நாவுக்குச் சரளமாகப் பேச வராது. எனவே ஹாறூனுக்கும் தூதனுப்பு வாயாக!* (26:13)

---

75. *ஸஹீஹுல் புஃகாரீ.*

76. இப்னு கஸீர், *'அல்பிதாயா வந்நிஹாயா'*, பாகம் 2. பக்.736.

ஆயினும், இப்பண்பு அநியாயத்தையோ அடக்குமுறையையோ துர்பண்பையோ இணைவைப்பையோ பொறுத்துக்கொள்ளாத உணர்வுப்பலம் கொண்டவராக அவரை ஆக்கியிருந்தது. திருக் குர்ஆன் இப்பண்பை அல்கஹ்ஃப் என்னும் அத்தியாயத்தில் விளக்குகிறது. இரு கடல்கள் சந்திக்குமிடத்தில் (மஜ்மஉல் பஹ்றைன்) ஃகிள்ரு என்பவரைச் சந்தித்து சில ஆத்மீக ஞானங்களைக் கற்றுக்கொள்ளுமாறு அல்லாஹ் அவருக்குக் கட்டளையிட்டிருந்தான். அவ்வேளை ஃகிள்ரு ﵇ மேற்கொண்ட சில செயல்களைப் பார்த்துச் சகித்துக்கொள்ள முடியாத உணர்ச்சிக் கொதிப்பு அவரிடம் ஏற்படுகிறது. அச்செயல்களின் உள்ளுறையாகத் தெய்வீகக் கருணை இருந்தபோதும் வெளிப்படையில் அவை பாவமாகவும் கொடூரமாகவும் தென்படுகின்றன.

கடலில் பயணம் செய்த கப்பலில் துளை ஏற்படுத்தியமை, சிறுவன் ஒருவனைக் கொன்றமை, தங்களுக்குத் தீங்கு செய்த ஊராரின் ஒரு சுவரைப் புனர்நிர்மாணம் செய்தமை என்பன இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இச்செயல்களைக் கண்டு அவரால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஃகிள்ரு ﵇ தனது செயல்களுக்கான நியாயத்தை விளக்கும்வரை பொறுமையாக இருக்கும்படி கூறியும் நபி மூசாவால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

உடற்பலம், மனப்பலம் ஆகிய இவ்விரு பண்புகளும் அல்லாஹ்வின் திட்டப்படி நபி மூசாவிடம் ஒன்றிணைந்தபோதே கொடுங்கோலன் ஃபிர்அவ்னைக் கம்பீரத்தோடும் கண்ணியத்தோடும் தர்க்கத்தோடும் எதிர்கொண்டார். மூசாவின் இப்பலமும் தைரியமும் ஆர்ப்பரிக்கும் உணர்ச்சியும் இன்றி ஃபிர்அவ்னை எதிர்கொள்வதும் வாயடைக்கச் செய்வதும் எப்படி? ஃபிர்அவ்னுக்கும் மூசாவுக்கும் மத்தியில் நிகழ்ந்த சுவாரசியமான உரையாடலைத் திருக்குர்ஆன் அஷ்ஷுஅறா என்ற அத்தியாயத்தின் 18-20 வசனங்களில் நமக்கு எடுத்துரைக்கிறது. ஃபிர்அவ்ன் நபி மூசாவைச் சபையோரின் முன்னால் சங்கடப்படுத்த விரும்பினான். தனது மாளிகையில் வளர்ந்தமைக்கு நன்றியற்றவராக அவர் நடந்துகொண்டதாக மக்களை எண்ணவைக்க முயன்றான். ஃபிர்அவ்னிய மதத்தை அவர் நிராகரித்ததையும், எகிப்துவாசி ஒருவரைக் கொன்றதையும் எடுத்துக்காட்டினான்:

> அவன் கூறினான்: ‘நீ குழந்தையாக இருந்தபோது உன்னை நாம் எங்களிடம் வைத்து வளர்க்கவில்லையா? உன் ஆயுளில் பல்லாண்டுகள் எம்மிடம் நீ தங்கியிருக்கவில்லையா?

பின்னர் உனது அந்தச் செயலையும் செய்துவிட்டாய். நீ பெரிதும் நன்றிகெட்ட ஒருவன்தான்.' (26:18-19)

'உனது அந்தச் செயலையும் செய்துவிட்டாய்' என்ற சொல்லாடல் அந்தச் செயலின் பயங்கரத்தையும் பாரதூரத்தையும் எடுத்துக் காட்டுகிறது. ஆயினும், எகிப்தியனைக் கொன்ற தவறை மூசா ஒப்புக்கொண்டு அந்த வாயிலை மூடிவிடுகிறார்:

'அப்போது நான் அறியாமையால் அதனைச் செய்துவிட்டேன்' என அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஃபிர்அவ்னை வாயடைக்கச் செய்யும் ஒரு பதிலையும் அவர் கூறுகிறார். எனவே உரையாடலின் போக்கை மாற்றுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. மூசா ﷺ கூறினார்:

'நீ இஸ்றவேலர்களை அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டு என்னிடம் சொல்லிக்காட்டும் நன்றியா இது?! உன் மாளிகையில் நான் வளர்க்கப்பட்டது இஸ்றவேலர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று நீ விரும்பியதால் அல்ல; மாறாக நீ அவர்களுக்கு அநியாயம் இழைத்து அவர்களது ஆண் குழந்தைகளைக் கொன்றதனால்!'

நபி மூசாவிடம் பீறிட்ட உணர்ச்சியும், அவர் அனந்தரமாகப் பெற்றிருந்த விவேகமும் இணைந்து இடைவினையாற்றியபோதே ஃபிர்அவ்னை வாயடைக்கச் செய்த இந்தப் பதில் பிறந்தது.

நபிமார்களது உடற்பண்புகள் பற்றி முன்னர் நாம் உரையாடியதுபோல், திருக்குர்ஆன் அந்த அனைத்து பண்புகளையும் எளிமையாகவும் அற்புதமாகவும் நமக்கு எடுத்துரைக்கிறது. எகிப்தியன் ஒருவன் இஸ்றவேலன் ஒருவன்மீது அத்துமீறியதைத் தாங்கிக்கொள்ளாத மூசா ﷺ அந்த எகிப்தியனை முஷ்டியால் குத்தியதாகவும், அதுவே அவன் உயிரிழக்கக் காரணமாக அமைந்ததாகவும் அல்கஸஸ் அத்தியாயத்தின் 15ம் வசனம் குறிப்பிடுகிறது. இது நவீனக் காலத்தில் குத்துச்சண்டை வீரர்கள் செய்வதுபோன்றது. ஆனால், குத்துச்சண்டை வீரர் முஹம்மது அலியாக இருந்தால்கூடப் போட்டியின் ஆரம்பத்தில் ஒரே குத்தில் எதிராளியைக் கொன்றதாக நாம் கண்டதோ கேள்விப்பட்டதோ இல்லை. ஆக, இது நபி மூசாவின் அசாதாரணப் பலத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பின்னர் மூசா ﷺ கைசேதப்பட்டு அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறார். ஆனால் அந்த இஸ்றவேலன் மறுநாளும் மற்றொரு எகிப்தியனுக்கு எதிராக அபயக் குரல் எழுப்புகிறான். உடனே நேற்றைய கைசேதத்தை மறந்துவிடும் அளவுக்கு அவரது உள்ளார்ந்த கூருணர்ச்சி கொப்பளிக்கிறது. அந்த எகிப்தியனைத் தாக்கவும் முனைந்துவிடுகிறார். அத்தியாயம் அல்கஸஸின் வசனங்கள் அவரது அசாதாரணப் பலம், செழுமையான உணர்ச்சி ஆகிய இரு பண்புகளையும் பற்றித் தெளிவாகப் பேசுகின்றன.

அல்லாஹ் இப்பண்புகளை நபி மூசாவுக்கு ஏன் அனந்தரமாக வழங்கினான் என்பதைக் கவனிப்போம். அக்காலத்தில் எகிப்தின் சூழல் ஃபிர்அவ்ன்களின் ஆட்சியால் தாக்கமுற்றிருந்தது. அங்கு நிலவிய நாகரிக மாந்தர்களை வெற்றிகரமாக ஆள வேண்டுமாயின், அத்துமீறி அநீதியிழைப்போரைத் தடுத்துநிறுத்தக்கூடிய பலசாலி ஒருவரால் மட்டுமே அது சாத்தியம் என்ற நிலை காணப்பட்டது. குறிப்பாக இஸ்றவேலர்களுக்கு இது மிகப் பொருத்தமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் — திருக்குர்ஆன் பல வசனங்களில் வர்ணித்திருப்பதுபோல் — இழிவுக்கும் அவமானத்துக்கும் ஆட்சியாளர்களின் வரம்புமீறலுக்கும் பழகிப்போன சமூகமாக இருந்தனர். அவர்களது உள்ளங்களில் எகிப்தியர்களது சிலை வணக்கம் ஊறிப்போயிருந்தது. உணவு, பானம், சுகபோகம், தொல்லையற்ற வாழ்வு முதலிய லோகாயத தேட்டங்களிலேயே அவர்களது கவனம் குவிந்திருந்தது. அவர்கள் இறை வணக்கத்தில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்பதற்காக இறைவன் மன்னு, சல்வா, நீர் முதலியவற்றை நபி மூசாவினூடாக அற்புதமாக வழங்கியிருந்தான். அந்நிலையில்கூட அவர்கள் நபி மூசாவிடம் இப்படிக் கூறினர்:

> மூசாவே, ஒரே விதமான உணவை உட்கொண்டிருக்க எங்களால் முடியாது. ஆதலால் பூமி விளைவிக்கும் அதன் கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் ஆகியவற்றை எங்களுக்கு வெளிப்படுத்தித் தருமாறு உமது இறைவனிடம் பிரார்த்திப்பீராக. (2:61)

அவர்களது புனித பூமியை விடுவிப்பதற்கு அவர்களைத் தூண்ட மூசா ﷺ முயன்றபோது அவர்கள் இப்படிக் கூறினர்:

> நீரும் உமது இறைவனும் சென்று போராடுங்கள்; நாங்கள் இங்கே அமர்ந்திருக்கிறோம். (5:24)

அல்லாஹ் கடலைப் பிளந்து இஸ்றவேலர்கள் அனைவரையும் காப்பாற்றிவிட்டு ஃபிர்அவ்னையும் அவனது படைகளையும் மூழ்கடித்த பேரதிசயத்தை இஸ்றவேலர்கள் தங்கள் கண்களால் பார்த்தனர். அதன் பிறகு மூசா ﵇, அல்லாஹ் குறிப்பிட்ட நாற்பது இரவுகளை அனுஷ்டிக்கச் சென்றுவிட்டார். அந்நிலையில் அவர் தன்னுடைய சகோதரரான நபி ஹாறூனைத் தனக்குப் பிரதிநிதியாக வைத்து, சீர்திருத்தவாதிகளின் வழியைப் பின்பற்றுமாறு கூறியிருந் தார். எனினும் ஹாறூன் ﵇ சகோதரரான மூசாபோன்றிருக்கவில்லை.

நபி மூசாவின் பிரமாண்டமான உடலமைப்போ பலமோ, பிறரைப் பணியச்செய்யும் தலைமைத்துவ ஆளுமையோ, உணர்ச்சிபூர்வமாக விரைந்து வினையாற்றும் பண்போ நபி ஹாறூனிடம் இருக்க வில்லை போலும். அதனால்தான் சாமிரீ என்பவன் நிராகரிப்பை நோக்கியும், பெண்களது ஆபரணங்களால் செய்த காளை மாட்டை வணங்கும்படியும் அழைத்தபோது அவனுக்குக் கட்டுப்பட வேண்டாம் என ஹாறூன் ﵇ இஸ்றவேலர்களைத் தடுத்தும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. மட்டுமன்றி, அவருக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுத்தனர்.

அல்அஃறாஃப், தாஹா ஆகிய அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ள வசனங்கள் இக்கதையை விரிவாகக் குறிப்பிடுகின்றன. மூசா, ஹாறூன் ﵇ ஆகிய இருவரும் ஒரே வயிற்றுச் சகோதரர்கள் என்ற வகையில், உயிரியல் கட்டமைப்பில் ஒத்தவர்கள் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. ஆயினும் இருவருக்கும் மத்தியிலான வேறுபாட்டை அவ்வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. இங்கு மூசா ﵇ அனந்தரமாகவும் சூழல் தாக்கத்தினாலும் பெற்றிருந்த பண்புகள் இறைவனின் ஞானநோக்கை வெளிப்படுத்துகின்றன.

தவ்றாத்தில் இடம்பெற்ற உபதேசங்களை அல்லாஹ் மூசாவுக்குப் புனித ஏட்டில் எழுதிக்கொடுத்திருந்ததாகவும், அதேவேளை அவரது சமூகம் சாமிரீயால் வழிகெடுக்கப்பட்டு ஒரு காளை மாட்டை வணங்கியதாக அவருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. மூசா ﵇ திரும்பிச் செல்லும்போது அவரது சமூகம் காளை வணக்கத்தில் திளைத்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துவிடக் கூடாது என இதன் மூலம் அல்லாஹ் நாடியிருக்கலாம். ஆனாலும் அது நிகழ்ந்தே விட்டது. கோபம், கவலை ஆகிய இரண்டும் சேர்ந்து நபி மூசாவைப் பலமாக உணர்ச்சிவசப்படச் செய்துவிட்டன. சாமிரீயின் தலைமையில் தனது சமூகம் செய்த செயலை அல்லாஹ்விடமிருந்து வஹீ மூலமாக

அறிந்துவைத்திருந்தபோதிலும், அதனைக் கண்களால் நேரடியாகக் கண்டபோது தனது வார்த்தைகளையோ செயல்பாடுகளையோ அவரால் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. புனித ஏடுகளை வீசியெறிந்துவிட்டுச் சகோதரனான ஹாறூனைத் தாக்க முற்படுகிறார். நடந்தவற்றுக்கான பொறுப்பையும் அவர்மீது சுமத்துகிறார். அவரது தலை முடியையும் தாடியையும் பிடித்து பலமாக இழுக்கிறார். இருவருக்கும் மத்தியிலான இரத்த பந்தத்தைக் குறிப்பிட்டே ஹாறூன் ﵇ தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது.

அதன் பிறகு மூசா ﵇ சகோதரனை விட்டுவிட்டுத் தன் பருத்த உடலோடும், கோபம் கொப்பளிக்கும் முகத்தோடும், பயங்கரச் சத்தத்தோடும் வருகிறார். நிச்சயமாக அது சாமிரீயை அச்சமடையச் செய்திருக்கத்தான் வேண்டும். மூசா ﵇ வருவதற்கு முன்பு அவன் தன்னைப் பெரும் தலைவனாகத்தான் எண்ணிக்கொண்டிருந்தான். காளை மாட்டை வணங்குமாறு அவன் இஸ்றவேலர்களைத் தூண்டிக்கொண்டிருந்தது மட்டுமன்றி, ஹாறூன் எதிர்த்தால் அவரைக் கொன்றுவிடுமாறும் தைரியமூட்டினான். நபி மூசாவை அல்லாஹ் அத்தகைய உடல்-மனப் பண்புகளுடன் ஏன் படைத்திருந்தான் என்பது இங்கு நமக்குத் தெளிவாகிறது.

மூசா ﵇ வந்த பிறகு சாமிரீ அடைந்த இழிநிலையை இஸ்றவேலர்கள் கண்டனர். அவர்கள் வணங்கிக்கொண்டிருந்த காளையை மூசா ﵇ உடைத்து எரியூட்டி கடலில் வீசுவதையும் கண்டனர். அதன் மூலமாக சாமிரீயின் குழப்பம் முடிவுக்கு வந்தது. மூசாவுக்கு அவசியமான பரம்பரையையும் சூழலையும் அல்லாஹ் தெரிவுசெய்ததில் அடங்கியிருந்த ஞானநோக்கும் நமக்கு வெளிப்பட்டது. அவர் ஒரு நபியாகவும் தளபதியாகவும் நின்று தனது பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றும் வகையில் அல்லாஹ் அவரைத் தயார்படுத்தியிருந்தான். நீங்கள் விரும்பினால் அவரது வரலாற்றை அல்அஃறாஃப், தாஹா ஆகிய இரு அத்தியாயங்களிலும் படிக்கலாம்.

இறைவன் ஒரு தூதருக்கு, அவருக்கே உரிய சமூகத்தில் அழைப்புப் பணியை மேற்கொள்ள ஏதுவான வகையில் அனந்தரமாக வழங்கிய குறித்த ஒரு பண்பு அவரது வாழ்வின் எல்லாப் பரிமாணங்களிலும் மெச்சத்தக்க பண்பாக அல்லது பயன்மிக்க பண்பாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நபி மூசாவின் கூருணர்ச்சியானது மனிதன் என்ற வகையில் அவருக்குச் சில பிரச்சினைகளை ஏற்படுத்தி யிருக்க முடியும். எனினும், மகத்தான ஒரு பணிக்காக அவருக்கு இப்பண்பைத் தேர்ந்தளித்த இறைவன், அதன் காரணமாக நிகழக்

கூடிய தவறுகளையும் மன்னித்தே இருப்பான். சிலவேளை இப்பண்பினால் அவர் அனுபவிக்க நேர்ந்த துன்பங்களுக்காகப் பெரும் நற்கூலியைக்கூட அவன் வழங்கியிருக்கலாம். அந்த வகையில்தான், அவர் நபியாக்கப்பட முன்னர் எகிப்தியன் ஒருவனைக் கொன்றதை அல்லாஹ் மன்னித்தான். மட்டுமன்றி, அவர் தனது உணர்ச்சிவயப்பாட்டினால் பலவீனமடையும்போதெல்லாம் அவர் மீது பரிவையும் கருணையையும் அன்பையும் பொழிந்தான்.

இவ்விசயத்தில் மூசாவையும் நம்முடைய திருத்தூதர் முஹம்மதையும் ஒப்பிட்டுப்பாருங்கள். நபி மூசாவுக்கு அபரிமிதமான உணர்ச்சி வழங்கப்பட்டிருந்தது. அவர் தலைமைதாங்க வேண்டியிருந்த சமூகத்தைப் பொறுத்தவரை அந்த உணர்ச்சிப்பலம் அவரது கட்டுருவாக்கத்தில் அவ்வளவு அவசியமானதாக இருந்தது. ஒவ்வொரு நபிக்கும், அவரது சமூகத்தின் பண்புகளுக்குப் பொருத்த மான சூழலும் குடும்பமும் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதுதான் இறை நியதி.

ஆனால் நம்முடைய தூதர் முஹம்மது ﷺ அவர்கள் பூமியில் வாழும் அனைத்து மனித, ஜின்னு வர்க்கங்களுக்கும் தூதராக அனுப்பப்பட்டார்கள். அந்த வகையில், எந்த நபிக்கோ வான வருக்கோ வழங்கப்படாத ஒரு இடத்தை அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான். அன்னாரை அழகிய முறையில் பண்படுத்தினான். நற்பண்புகளைப் பூரணப்படுத்தும் தூதராகவும் அனுப்பினான். மனிதர்களோடும் ஜின்களோடும் உரையாடக்கூடிய ஆற்றலையும் கொடுத்திருந்தான். பல்வேறு நாகரிகங்களையும் வழக்காறுகளையும் கொண்ட மக்களுக்கு அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அம் மக்களில் பலர் கூட்டம்கூட்டமாக அல்லாஹ்வின் மார்க்கத்தில் நுழைந்தனர்.

எந்த நபிக்கோ வானவருக்கோ கிட்டாத இந்த அந்தஸ்துடன், மிகப் பெரும் பொறுப்புகளும் கடினமான சோதனைகளும் இணைந்தே இறைத்தூதர் முஹம்மது ﷺ மீது இறங்கின. அதனால்தான், அனைத்து நபிமார்களுக்கும் மேலாக அன்னாரை உயர்த்திய அல்லாஹ் வேறுபல நபிமார்கள் விசயத்தில் கண்டுகொள்ளாமல் விட்ட சில சிறு தவறுகளைக்கூட முஹம்மது ﷺ அவர்களிடம் கண்டு கண்டித்ததாகத் திருக்குர்ஆனில் படிக்கிறோம். அல்லாஹ் தூதர்களில் சிலரைவிட வேறு சிலரை மேன்மைப்படுத்தி வைத்திருந்ததாக அல்பகறா என்னும் அத்தியாயம் குறிப்பிடுகிறது:

*அந்தத் தூதர்களில் சிலரை வேறு சிலரைவிட நாம் மேன்மைப் படுத்தினோம். அவர்களுள் அல்லாஹ் நேரடியாக உரையாடி யோரும் இருந்தனர். அவர்களுள் சிலரை அவன் பல அந்தஸ்துகள் உயர்த்தியும் வைத்தான்.* (2:253)

மேன்மைமிக்க இறைவன் நேரடியாகவே எழுதிக்கொடுத்த புனித ஏட்டை மூசா ﷺ வீசியெறிகிறார். ஃகிள்ரு ﷺ பலமுறை எச்சரித்தது மட்டுமன்றி, அவரிடம் கற்றுக்கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்ட நிலையிலும்கூட அவருக்குக் கட்டுப்படவோ, அவரது செயல்களைப் பொறுமையாகச் சகித்துக்கொள்ளவோ நபி மூசாவால் முடியவில்லை. அப்படியிருந்தும் அவர் மீதான தெய்வீகக் கண்டனம் எதையும் நம்மால் காண முடியவில்லை.

ஆனால் மறுபுறத்தில், அல்லாஹ் கற்றுத்தந்ததைத் தனக்கும் கற்றுத்தருமாறு அந்தகரான இப்னு உம்மி மக்தூம் என்ற நபித்தோழர் வந்து திரும்பத்திரும்பக் கேட்டபோது அவரது முகத்தில் கடுகடுத்த தற்காக அல்லாஹ் நபி முஹம்மது ﷺ அவர்களைக் கண்டித்ததாக அபச என்ற அத்தியாயம் குறிப்பிடுகிறது. இத்தனைக்கும் நபிகளார் சில குறைஷித் தலைவர்களை இஸ்லாத்தை நோக்கித் திருப்பும் எதிர்பார்ப்புடன் உரையாடிக்கொண்டிருந்த வேளை அது. இப்னு உம்மி மக்தூம் கால சூழ்நிலைகளின் பொருத்தப்பாட்டைக் கவனிக்காது அப்படி வந்து கேட்டுக்கொண்டிருந்தார். மட்டு மன்றி, அவர் உரையாடலின் இடையே குறுக்கிட்டு வற்புறுத்திக் கொண்டிருந்ததால் வெறுப்புக்குள்ளான நபிகளார் முகத்தைக் கடுகடுப்புடன் வேறு பக்கம் திருப்பிக்கொண்டார்கள். நபிகளாரின் முகபாவம் மாறுவதை அறிய முடியாத அந்தகரின் முன்னால்கூட அப்படி அன்னார் நடந்துகொள்ளக் கூடாது என அவ்வேளை அல்லாஹ் கண்டிக்கிறான்!

நபி மூசாவின் வளர்ப்புச் சூழல் பற்றிய இவ்விளக்கங்களுடன் இந்த அத்தியாயத்தை நிறைவுசெய்துகொள்கிறோம். நம்முடைய முன்னோரிடமிருந்தும் நமது சூழலிலிருந்தும் அல்லாஹ் நமக்களித்த அருட்கொடைகளுக்காக அவனைப் புகழ்ந்து நன்றி தெரிவிக்கிறோம். நமக்கு வரும் சோதனைகளின்போதுகூட அவற்றின் பின்னால் மறைந்திருக்கும் ஞானநோக்கைப் புரிந்துகொள்ள உதவுமாறு அவனிடமே பிரார்த்திக்கிறோம்.

# அத்தியாயம் ஏழு

## நபி யூசுஃபின் சூழலையும் பரம்பரையையும் திட்டமிடுவதில் தொழிற்பட்ட இறைஞானம் பற்றிய அவதானங்கள்

நபி யூசுஃப் ﷺ வளர்த்துப் பயிற்றுவிக்கப்பட்டதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானம் தொடர்பாக அவதானிக்க விரும்புபவர் அதனைத் திருக்குர்ஆனின் பல அத்தியாயங்களிலிருந்து ஒன்றுதிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. அது முழுவதுமாக அன்னாரின் பெயரில் அமைந்த ஓர் அத்தியாயத்தில் திரட்டித் தரப்பட்டுள்ளது. இஸ்லாமிய உளவியலைக் கற்பவர்களுக்கு, அதிலும் குறிப்பாக புலன்களுக்கு அப்பாற்பட்ட உளவியலையும் (Transcendental Psychology) ஆத்மீக உளவியலையும் (Spiritual Psychology) ஆய்வுசெய்பவர்களுக்கு இந்த அத்தியாயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இவ்வத்தியாயம் கனவுகள், அவற்றுக்கான ஆத்மீக வியாக்கியானங்கள், குறியீட்டு-குறியீடல்லா விளக்கங்கள் முதலிய அம்சங்களில் கவனம் குவிக்கிறது.

அவ்வாறே, உள்மன உதிப்பு, தொலைநுண்ணுணர்வு (Telepathy) போன்ற புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆத்மீகப் பரிமாணங்கள் பற்றியும் இவ்வத்தியாயம் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. இவை குறித்து நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் விரிவாகப் பேசியுள்ளோம். அவ்வாறே 'கண் திருஷ்டி (Evil Eye)', 'உளவழி உடற்கோளாறுகள் (Psychosomatic Disorders)' (அதாவது அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகளால் ஏற்படும் உடல் நோய்கள்) பற்றியும் திருக்குர்ஆனின் இந்த அத்தியாயம் குறிப்பிடுகிறது.

கனவுகள் பற்றியும் அவற்றுக்கு வியாக்கியானம் வழங்க நபி யூசுஃபுக்கு வழங்கப்பட்டிருந்த தனித்துவமான ஆற்றல் பற்றியுமான உரையாடலுடன் இதனை நாம் ஆரம்பிக்கலாம். ஏனெனில், திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள 'யூசுஃப்' என்னும் அத்தியாயம்

— சிலர் கூறுவதைப் போல் — உண்மையிலேயே கனவுகள் பற்றிய அத்தியாயம்தான். யூசுஃப் சிறுவராக இருந்தபோது கண்ட ஒரு கனவுடன் ஆரம்பிக்கும் அத்தியாயம், தனது முன்முதுமைப் பருவத்தில் அக்கனவுக்கு அவர் கூறும் விளக்கத்துடன் நிறைவடைவதே இதற்குக் காரணமாகும்.

இக்கனவுகள் பற்றிய நமது உள-ஆத்மீகச் சிந்தனைகளைக் கலந்துரையாட முன்னர், பொதுவாகக் கனவுகளையும், குறிப்பாக எதிர்காலத்தை உய்த்தறியும் கனவுகளையும் நவீன உளவியல் விஞ்ஞானம் எவ்வாறு நோக்குகிறது எனக் கலந்துரையாடுவது பொருத்தமானதாகும். நான் இப்பீடிகையைச் சற்று நீளமாக அமைத்திருந்தால் அதற்காக வாசகரிடம் மன்னிப்பு கேட்கிறேன். ஏனெனில், நவீன உளவியல் விஞ்ஞான மாணவர்களைப் பொறுத்தவரை இவ்விவகாரம் மிக முக்கியமானது. மட்டுமன்றி, மேற்கத்திய உசாத்துணைகள் முன்வைக்கும் சிந்தனைகளிலும் கோட்பாடுகளிலும் சரியான பரிசோதனை அறிவியலும், பகுத்தறிவுரீதியான சான்றுகளோ சமயச் சான்றுகளோ அற்ற கருத்தாக்கங்களும் ஒன்றாகக் கலந்தே காணப்படுகின்றன. எனவே அவை தெளிவுபடுத்தப்பட வேண்டும். எனினும், உளவியல் விஞ்ஞானத்தில் சிறப்புக் கற்கையைக் கொண்டிராத மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் பயனளிக்கும் வகையில் நமது விளக்கத்தை எளிமையாகவே முன்வைக்க முயல்கிறோம்.

## கனவுவிளக்கத் துறையில் நரம்பியல் மற்றும் உளவியல் ஆய்வுகளின் பங்களிப்பு

மூளை அலகீடு (Brain scan) மூலமாக மேற்கொள்ளப்பட்ட நவீன உளவியல், நரம்பியல் ஆய்வுகள் நாம் தூங்கும்போதும் கனவு காணும்போதும் நிகழும் பல நரம்புத் தொழிற்பாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன. மனிதர்கள் ஏன் தூங்குகிறார்கள், அவர்களுக்கு ஏன் கனவுகள் தோன்றுகின்றன என்ற விவரங்களை நவீன அறிவியல் நுணுக்கமாகத் தெரிந்துகொள்ளாவிட்டாலும் நாம் தூங்கும்போதும் கனவு காணும்போதும் நமக்கு என்ன நிகழ்கிறது என்பதை ஆழ்ந்து தேடியறிய அதனால் முடிந்திருக்கிறது. அவ்வாறே நமது கனவுகளைத் தனித்தனியாக வகைப்படுத்திக் காட்டவும் அதனால் முடிந்திருக்கிறது. அத்தகைய வகைப்பாடுகளுள் சில:

- துர்கனவுகள் (Nightmares),
- இரவுப் பயங்கள் (Night terrors),

- கனவு காணும்போதே அதில் தோன்றும் காட்சி கனவேயன்றி உண்மையானதல்ல என உணரக்கூடிய விசித்திரக் கனவுகள் (Lucid dreams).

இவ்வாய்வுகளின் மூலமாக, ஒருவர் தூக்கத்தில் கனவு காணும்போது அவரது கண்கள் வேகமாக அசைவதாக (Rapid Eye Movement) கண்டறிய முடிந்துள்ளது. மூளையின் சில விசேஷமான அதிர்வுகளைக்கூட மூளையின் செயல்பாட்டு அளவுகோல்கள் மூலமாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது. கண்களில் ஏற்படும் இவ்விரைவான அசைவானது தூக்கத்தின்போது ஒவ்வொரு 90 நிமிடங்களுக்கு ஒரு தடவை நிகழ்வதாகவும், கனவுகள் காண்பது மனிதனின், மிருகங்களின் உளவியல் ஆரோக்கியத்திற்குப் பெரும் பயனளிப்பதாகவும்கூட அறிய முடிந்துள்ளது. ஒரு மனிதன் அல்லது பூனை போன்ற விலங்கு கனவு காண்பதாகக் கணினி காண்பிக்கும்போதெல்லாம், அவனை அல்லது அந்தப் பிராணியை எழுப்பிவிட்டுக் கனவு காணாமல் தடுக்கும்போது, குறித்த நபர் அல்லது பிராணி எவ்வளவு நீண்ட நேரம் தூங்கினாலும் மனப் பதற்றத்துக்கு உள்ளாவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆக, கனவுகள் என்பவை மனிதனது அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளையும் பதற்றங்களையும் தணிக்கின்ற இறையருளாகவே அமைகின்றன. அதேபோல் மனப் பதற்றங்கள், நோய்நிலைகள் முதலியவற்றால் துன்பப்படுபவர்களுக்குக் கனவுகள் சிகிச்சையாக அமைவதாகவும் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. விமான விபத்துகள், தீ விபத்துகள், கொள்ளைச் சம்பவங்கள் என்பவற்றுக்கு உட்பட்டவர்களே இத்தகைய மன அதிர்ச்சிகளுக்கு (Post-traumatic stress disorder) ஆளாவர். இவ்வாறான உளவியல் பாதிப்புக்கு உட்பட்டிருப்போரின் கனவுகளில் அவ்வேதனையான சம்பவங்கள் திரும்பத்திரும்பத் தோன்றுவதால் அவர்கள் அவற்றுக்குப் பழக்கப்படுகிறார்கள். இது அவர்களது சிகிச்சைக்குப் பங்களிப்பு செய்கிறது. அந்த வகையில், கனவுகள் என்பவை நடத்தை உளவியல் சிகிச்சையாளரது பாத்திரத்தை வகிக்கின்றன எனலாம். ஏனெனில், குறித்த நோயாளி உடலளவிலும் மனத்தளவிலும் தளர்வாக இருக்கும் நிலையில் அவருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தைத் திரும்பத்திரும்பக் கற்பனை செய்துபார்க்குமாறுதான் நடத்தை உளவியலாளரும் கேட்பார். அதன் மூலமாக அந்த அனுபவத்தின் மோசமான தாக்கத்தைப் படிப்படியாகக் குறைக்க அவர் முயல்வார்.

நமது அறிவார்ந்த வாழ்வில்கூடத் தூக்கமும் கனவுகளும் பயனுள்ள பங்களிப்பை வழங்குகின்றன. கனவுகள் கொண்ட தூக்கமானது நாள் முழுவதும் நமது நினைவில் சேகரமான தேவையற்ற விசயங்களிலிருந்து விடுபட நமக்கு உதவுகின்றன. பகல் வேளையில் நம்மால் சரியாகக் கிரகிக்க முடியாத சிந்தனைகளையும் கருத்தாக்கங்களையும்கூடத் துலக்கி முழுமைப்படுத்திக்கொள்ள கனவுகள் உதவுகின்றன. நாம் மனனமிட விரும்பும் தகவல்களை அல்லது கற்றுக்கொள்ள விரும்பும் புதிய திறன்களை மனத்தில் பதிக்கவும் அவை உதவுகின்றன. மனனப் பயிற்சியின் பிறகு அல்லது திறன்களைக் கற்றதன் பிறகு நேரடியாகவே தூங்கிவிடுவோர் அவ்வாறு தூங்காதோரைவிட அதிக மதிப்பெண்களைப் பெறுவதாகவும் ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

## கனவுகளின் ஆத்மீகப் பரிமாணத்தை நவீன உளவியல் நிராகரிக்கிறது

நவீன உளவியல் மற்றும் நரம்பியல் ஆய்வுகள் தூக்கம், கனவுகள் தொடர்பான துறையில் வழங்கிய பங்களிப்புகள் பற்றி நாம் முன்னர் குறிப்பிட்டவை இவ்வறிவியல் கலைகளின் ஒளிமிகுந்த பக்கங்களாகும். ஏனெனில், அவை முற்றுமுழுதாக ஆய்வுகளில் தங்கிநின்று உடல், நரம்பியல் மாற்றங்கள் பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. இம்மாற்றங்களை நமது புலன்களால் அல்லது சில வகையான உளவியல், நரம்பியல் அளவீட்டு முறைகளால் கண்டறிந்துகொள்ள முடியும். அவ்வகையில், சில இயற்பியல் தோற்றப்பாடுகள் எவ்வாறு நிகழ்கின்றன என்பது பற்றிய எளிமையான கேள்விகளுக்கு அவ்வாய்வுகள் விடையளிக்கின்றன. ஆனால், மதச்சார்பற்ற இந்த அறிவியல் கலைகளும், அவற்றின் பின்னால் சென்ற சமூக-உளவியல் கலைகளும் மேற்குறித்த பௌதிகத் தோற்றப்பாடுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதையும், அவற்றின் ஆழமான பயன்கள் என்ன என்பதையும் விளக்க முற்படும்போது தான் அவற்றின் ஆழமின்மை நமக்குத் தெளிவாகிறது. மட்டுமன்றி, ஆன்மீகப் பரிமாணத்தையும், புலன்களால் அறிந்துகொள்ள முடியாத அனைத்தையும் மிகத் தெளிவான பக்கச்சார்புடன் நிராகரிக்கும் அவற்றின் தீவிரச் சிந்தனையும் நமக்குத் தெரியவருகிறது.

எதிர்வுகூறல்களைக் குறிக்கும் கனவுகளையும் ஆத்மீக அனுபவங்களையும் இத்தகைய ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பல நூற்றுக்கணக்கான மனிதர்கள் தமக்கு நடக்கவிருக்கும் நிகழ்வுகளைக் கனவில் கண்டு பின்னர் அவ்வாறே நடப்பதைக் கண்கூடாகப்

பார்த்திருப்பதை எடுத்துக்காட்டினாலும் இவ்வாய்வாளர்கள் அதனை ஏற்பதில்லை. மட்டுமன்றி, இத்தகைய எதிர்வுகூறல் கனவுகள் வெறும் ஏமாற்று எனவும், 'அறிவியல் விசாரணை' மூலமாக அதனை அம்பலப்படுத்திவிட முடியும் எனவும் இவர்கள் கூறுவர். ஏனெனில் இவர்கள் கூறும் இந்த அறிவியல் விசாரணைகளின் நிபந்தனைகளுள் ஒன்று, குறித்த நிகழ்வை ஒரே முறைமை மூலமாகத் திரும்பத்திரும்பப் பரிசோதித்து, குறிப்பிட்ட நபர் கூறும் அதே முடிவே திரும்பத்திரும்பக் கிடைக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

அதாவது, ஆய்வாளரது மேற்பார்வையில் குறித்த நபர் அதே வகையான சூழ்நிலைகளின் கீழ் தூங்குமாறு கேட்கப்பட்டு, திரும்பத்திரும்ப அதே கனவைத்தான் காண்கிறாரா என்பது கண்டறியப்பட வேண்டும். அதாவது, குறித்த கனவைக் காணுதல் என்பது முற்றிலும் தூங்குபவரின் சுதந்திர நாட்டத்துக்கும் செயல்பாட்டுக்கும் உட்பட்டதுபோன்று இது கொள்ளப்படுகிறது. அவ்வாறன்றி, ஒருவர் ஒரு கனவைக் கண்டு அதுபற்றிப் பலரிடம் சொன்ன பிறகு அவர் சொன்னதுபோலவே யதார்த்தத்தில் நடந்து, அவர் அதற்கு சாட்சியாக இருந்தாலும் அது முற்றிலும் தற்செயலாக நடந்ததென்றே இவ்வாய்வாளர்களால் கொள்ளப்படும்.

குறைசொல்ல முடியாத மகத்தான மனிதர்களிடமிருந்து இத்தகைய நிகழ்வுகள் கூறப்பட்டால், அவற்றை மறுத்துரைக்க முடியாத நிலையில், உளவியல் ஆய்வாளர்கள்கூட அவற்றை மறந்துவிடும் வரை இத்தகையோர் எதுவும் பேசாமல் விட்டுவிடுவர்.

> அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln), ஜெர்மன் விஞ்ஞானி லெவி ஆகியோரை இதற்கு உதாரணங்களாகக் கூற முடியும். லிங்கன் தனது கனவொன்றில் தான் கொலை செய்யப்படுவதையும், தனது பூதவுடல் அமெரிக்கத் தேசியக் கொடியில் சுற்றப்பட்டுப் படையினரின் பாதுகாப்பில் வெள்ளை மாளிகையில் உள்ள ஒரு அறையில் வைக்கப்படுவதையும் கண்டிருக்கிறார். அந்தக் கனவு பற்றித் தனது நேசத்துக்குரிய சிலரிடம் சொல்லியும் இருக்கிறார். பிறகு அந்தக் கனவு அவர் கூறியதுபோலவே பலித்தது.
>
> ஜெர்மன் அறிவியலாளர் ஒட்டோ லெவி (Otto Loewii) நரம்புக் கலங்களுக்கு மத்தியிலான தொடர்பாடலானது இரசாயன வழிமுறைகளினூடாகவே இடம்பெறுகிறது என நிரூபிக்க விரும்பினார். அக்கருதுகோளை உறுதிப்படுத்த பல

*பரிசோதனைகளையும் மேற்கொண்டார். ஆனால், பல்வேறு முயற்சிகளை வேறுபட்ட வழிமுறைகளில் பல தடவை மேற்கொண்டபோதும் அனைத்தும் தோல்வியில் முடிந்ததால் நம்பிக்கை இழந்து அவ்விசயத்தையே மறந்துவிட்டார். அவ்வாறு கைவிட்டு 17 வருடங்கள் கழிந்த பிறகு ஒரு கனவு கண்டுத் திடுக்கிட்டார். அவரது பிரச்சினையை அவிழ்ப்பதற்கான ஒரு பரிசோதனை முறையை விரிவாக விளக்குவதாக அக்கனவு அமைந்திருந்தது. தூக்கத்திலிருந்து உடனே எழுந்த அவர், பரிசோதனையில் படிமுறைகளைப் பதிவுசெய்துகொண்டார். காலையில் அப்பரிசோதனையைத் தான் கனவில் கண்ட அதே ஒழுங்கில் மேற்கொண்டு தனது கருதுகோள் சரியானதே என நிரூபித்தார். இக் கண்டுபிடிப்புக்காக 1937ம் ஆண்டு நோபல் பரிசையும் வென்றார்.*

*பல விஞ்ஞானிகளுக்கு இதுபோன்ற கனவுகள் தோன்றியிருக்க முடியும். ஆனால் அவர்கள் தமது வெற்றியைத் தாம் விழிப்பு நிலையில் மேற்கொண்ட முயற்சியால் கிடைத்ததாகவே சாதிப்பர்.*[77] *பல ஐரோப்பிய அறிவியலாளர்களும் இலக்கியவாதிகளும் கலைஞர்களும் இதை ஒத்த பல சம்பவங்களைப் பதிவுசெய்துள் ளனர். ஆனால் அவை அனைத்தையும் குறிப்பிட நமது இவ்வாய்வு இடமளிக்காது.*

*பரிசோதனை அறிவியலின் நிபந்தனைகளுக்கு உட்படாத எந்த விசாரணையிலும் உண்மைத்தன்மையோ அறிவியல் பெறுமானமோ கிடையாது என மதச்சார்பற்ற இந்த அறிவியலாளர்கள் நம்புகின்றனர் என்பதை இங்கு மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். அறிவைப் பெறுவதற்கான ஒரே வழி புலன்கள் மாத்திரமே என இவர்களில் தீவிர அபிப்பிராயம் கொண்டோர் எண்ணுகின்றனர். 'புலன்களின் வழியாக நிரூபிக்க முடியாத எதுவும் விஞ்ஞானபூர்வமானதல்ல' என ஆரம்பிக்கும் இவர்கள், ஒன்றின் இருப்பைப் புறவயமாக நிரூபிக்க முடியவில்லையெனில், அப்படியான ஒன்று உண்மையிலேயே இருக்க முடியாது என்று கூறும் அளவுக்குச் செல்கின்றனர்.*

---

77. மின்னணுவியல் தளங்களில் இவ்வகையான பல கதைகளும் சம்பவங்களும் பரவிக் காணப்படுகின்றன. (உ-ம்): பேராசிரியர் அஹ்மது பின் ஹாமிது அல்காமிதீயின், *'தஃப்சீருல் அஹ்லாம் வ மனாமாதுல் உலமா ஃகய்றன் றஅய்து'* என்ற கட்டுரை (மன்னர் சவூது பல்கலைக்கழகம், ரியாத்); منظنة المجتمع العلمى العربى இணையத்தளம்: https://arsco.org/article-detail-688-8-0S

ஆனால் அதே அறிவியலாளர்கள் புறவயமாக உறுதிப்படுத்த முடியாத சில கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் பொறுத்த வரை இவ்வாறான நிபந்தனைகளைக் கண்டுகொள்வதில்லை. இக்கோட்பாடுகளில் சில, பகுத்தறிவுரீதியான கோட்பாட்டாக்கமோ சரியான தர்க்கமோ சீரான ரசனையோ அற்றவையாகக்கூட இருப்பதுண்டு. அவர்களது நாத்திகச் சிந்தனைக்குப் பலம் சேர்க்கின்றன என்பதே அவர்கள் இக்கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் ஆதரிப்பதற்கு ஒரே காரணமாகும்.

கனவுவிளக்கம் தொடர்பான ஃபிராய்டின் பாலியல் கோட்பாடுகளும், குழந்தைகளது பாலியல் நடத்தைக் கோட்பாடும் இவற்றுக்குப் போதிய உதாரணங்களாகும். இதுபற்றிப் பின்னர் விரிவாகப் பேசவுள்ளோம்.

இப்பின்புலத்தில்தான், பல மூத்த ஆய்வாளர்களும் பரிசோதனை அறிவியலாளர்களும் அவர்களைச் சார்ந்த நடத்தையியலாளர்களும் கனவுகளின் அனைத்து ஆத்மீக, எதிர்வுகூறல் பரிமாணங்களையும் மறுக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை கனவுகள் என்பவை தூங்குபவரது மூளையின் பல இடங்களில் முற்றிலும் தற்செயலாக நிகழும் மின்வேதியியல் துடிப்புகளே அன்றி வேறல்ல. மூளை அவற்றுக்கு ஏற்கத்தக்க வடிவத்தைக் கொடுத்து, தொடர்பற்ற நினைவுகள் ஏற்படுத்திய குழப்பத்திலிருந்து தன்னை வெளியேற்ற முயல்வதாக இவர்கள் நம்புகின்றனர்.

உதாரணமாக, தூங்குபவரது மூளையில் எங்காவதோர் இடத்தில் நரம்புத்துடிப்பு தூண்டப்பட்டால், அவரது நினைவகத்தில் அதற்கும் அவரது நண்பருக்குமிடையில் தொடர்பு காணப்படும் அதேவேளை, ஓர் கடிநாய்ச் சம்பவம் தொடர்பாக மற்றொரு நரம்புச்செயல்பாடும் அதே நினைவகத்தில் தற்செயலாகத் தூண்டப்படுமாயின், அவ்விரு விவகாரங்களையும் மூளை ஒன்றிணைக்கிறது. அப்போது நண்பர் நாய்போல் குரைப்பதாக அவர் கனவுகாண்கிறார். இக்கோட்பாட்டின்படி, கனவுகள் என்பவை மூளையில் நிகழும் ஸ்தூலச் செயல்பாடுகளின் விளைவே அன்றி வேறல்ல. எனவே, அவற்றுக்குக் கூறப்படும் எந்தப் பொருளோ செய்தியோ உண்மையான சான்றுகளற்ற வெற்று யூகமாகத்தான் இருக்கும்.

Activation Synthesis Hypothesis என அழைக்கப்படும் இக்கோட்பாடு பொருள்முதல்வாதிகளிடம் பெருவரவேற்பு பெற்றது. ஏனெனில், இது அவர்களது சித்தாந்தரீதியான பொருள்முதல்வாத நம்பிக்கைக்கு

இணக்கமான கருத்தாக்கத்தை முன்வைக்கிறது. அந்த வகையில், கனவுகள் பற்றிய பெரும் கேள்விகளுக்கு விடை கூறவோ, அவற்றின் ஆத்மீகப் பரிமாணத்தை எடுத்துக்காட்டும் சான்றுகளை மறுத்துரைக்கவோ சிரமப்பட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதுபோகிறது.

ஃப்ராய்டின் கோட்பாடு உளவியலாளர்கள்மீது மிகப் பெரும் தாக்கம் செலுத்திய கோட்பாடாகும். ஏனெனில், மனிதனது பிறப்புமுதல் இறப்புவரையான அனைத்து செயல்பாடுகளையும் அது பாலியல்ரீதியாக வியாக்கியானப்படுத்தியதன் மூலம் எல்லைமீறிப் பிறழ்வுற்றபோதிலும், பொதுமகனுக்கு முழுமையானதாகத் தோன்றக்கூடிய ஒரு கருத்தாக்கத்தை முன்வைத்தது.

கனவுகள், அவற்றின் நோக்கங்கள், அவை சுமந்திருக்கும் மறைமுகமான குறியீட்டு அர்த்தங்கள் என்பவை பற்றிய பெரும் கேள்விகளுக்கு விடையளிப்பதாக அக்கருத்தாக்கம் அமைந்தது. ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வு பற்றி விரிவாகக் கலந்துரையாட இங்கு நான் விரும்பவில்லை. இது அதற்கான இடமும் அல்ல. ஆர்வமுள்ளவர்கள் 'கனவுகளின் விளக்கம் (Interpretation of Dreams)' என்ற அவரது நூலில் அதுபற்றிக் கண்டுகொள்ள முடியும். ஆயினும், குறிப்பாகக் கனவுகள் பற்றிய அவரது சிந்தனைகளை வாசகருக்கும் மாணவர்களுக்கும் எளிமைப்படுத்தி முன்வைக்கும் பெருவிருப்பம் எனக்குள் எழுவதை உணர்கிறேன். அவர்கள் இக்கோட்பாடுகளை, ஆய்ந்து உறுதிப்படுத்தப்பட்ட அறிவியல் கலைபோன்று கற்றுக்கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

19ம் நூற்றாண்டின் இறுதியில் ஃப்ராய்டினால் முன்வைக்கப்பட்டு, 1900ம் ஆண்டில் அவரது 'கனவுகளின் விளக்கம்' நூலில் பதிவு செய்யப்பட்ட இக்கோட்பாடு இரண்டு காரணங்களால் மேற்கத்திய உளவியலாளர்களிடமும் ஐரோப்பியப் பொதுமக்களிடமும் வரவேற்பு பெற்றது.

> ***ஒன்று:*** ஃபிராய்டின் கோட்பாடுகள் மதச்சார்பற்ற தாராளவாத அறிவியல் சிந்தனைக்கு, குறிப்பாகப் பாலியல் புரட்சிக்கு, பலம் சேர்க்கக்கூடிய மிகப் பொருத்தமான ஒரு காலப்பிரிவில் தோற்றம்பெற்றன. ஏனெனில், ஐரோப்பா அப்போதுதான் கிறிஸ்தவத் திருச்சபையைத் தோற்கடித்து வெற்றியுடன் வெளியேறியிருந்தது. திருச்சபையின் கோட்டையை வெற்றி கொண்டு, அதன் அழுங்குப் பிடியிலிருந்தும், பாலியல்

இயல்பூக்கத்தின் மீது அது விதித்திருந்த அடக்குமுறையிலிருந்தும் ஐரோப்பா விடுபட்டிருந்த நேரம் அது.

மத்தியக் காலப்பிரிவில் ஐரோப்பியத் திருச்சபை வரலாற்றில் பல விசாரணை மன்றங்கள் காணப்பட்டன. அவை பல லட்சக்கணக்கான உயிர்களைத் தம் சட்டங்களால் பிழிந்தெடுத்தன. அப்படிப் பலியானவர்களுள் பெரும்பான்மையினர் சாத்தானுடன் விபச்சாரம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பெண்கள் ஆவர். அந்நிலையில், திருச்சபையின் தோல்விகள் ஏற்படுத்திய இடைவெளியை நிரப்பக்கூடிய ஓர் தாராளவாதச் சிந்தனை ஐரோப்பாவுக்குத் தேவைப்பட்டது. புதிய நாத்திக மதம்போன்று செயல்படக்கூடிய துணிச்சலான விடுதலைச் சிந்தனையாக அது இருக்க வேண்டிய நிலையும் காணப் பட்டது. அந்த இடைவெளியை ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு — நாத்திக மெய்யியலாளர்களது பக்கபலத்துடன் — நிரப்பியது.

**இரண்டு:** ஃப்ராய்டு தனது கோட்பாடுகளை மக்கள் ஏற்கனவே அறிந்து ஏற்றுக்கொண்ட சிந்தனைகள் மீதும் கருத்தாக்கங்கள் மீதும் நிலைநிறுத்துவதற்கு ஆற்றல் கொண்டிருந்தார். எனினும், பிறகு அவர் இக்கருத்தாக்கங்களை அவற்றின் ஆத்மீக-மத-விழுமியப் பரிமாணங்களிலிருந்து பிரித்தெடுத்து தனது மதச் சார்பற்ற சிந்தனைகளால் மீள்வார்ப்பு செய்துகொண்டார். மனித நடத்தைமீது நனவாகவும் நனவிலியாகவும் அதிகாரம் செலுத்தும் பாலியல் இயல்பூக்கம் பற்றியனவாக அவரது சிந்தனைகள் அமைந்திருந்தன. மனிதனின் நடத்தைமீது அவனே உணராதபடி தாக்கம் செலுத்தும் காரணி பற்றி ஃப்ராய்டுக்கு முன்னைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த அறிவியலாளர்களும் மெய்யியலாளர்களும் பேசிவந்திருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதுவே தற்போது நனவிலி மனம் (Subconcious mind) என அழைக்கப்படுகிறது.

இக்கருதுகோளைத் தானும் ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக்கொண்ட ஃப்ராய்டு அதனைத் தனது கோட்பாடுகளுக்கான அடிப்படைச் சட்டகமாகவும் ஆக்கிக்கொண்டார். பின்னர் அதனை அனைத்து ஆத்மீக-விழுமியப் பரிமாணங்களிலிருந்தும் பிரித்தெடுத்து முழுவதுமாக அதற்குப் பாலியல் இயல்பூக்கச் சாயம் பூசினார். இறுதியில், மனிதன் பிறப்புமுதல் இறப்புவரை மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளுக்குமான தூண்டற்காரணி — அச்செயல்

பாடுகள் பாலியல் செயல்பாட்டுடனோ அதன் கருத்தாக்கங் களுடனோ நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தத் தொடர்பும் கொண்டிராதபோதும் — அவனது நனவிலி மனத்திலிருந்தே ஊற்றெடுப்பதாக விளக்கமளித்தார்.

கனவுகள் தொடர்பாகவும் ஃப்ராய்டு இதே வழிமுறையைத்தான் பின்பற்றினார். பொதுவாகத் தூக்கத்தில் ஒருவர் காணும் கனவு களுக்கு ஓர் அர்த்தமும் செய்தியும் இருக்கும் என்பதும், அத்தகைய செய்திகள் பல்வேறு சங்கேத வடிவங்களை எடுக்க முடியும் என்பதும் மனித நாகரிகங்கள் அன்றும் இன்றும் ஏற்றுக்கொண்ட விசயங்களாகும். கனவுகளில் குறியீட்டுரீதியான ஓர் செய்தி இருக்கும் என்ற இந்நம்பிக்கையை ஃப்ராய்டும் உறுதிப்படுத்தினாலும், தனது பாலியல் கோட்பாடுகளை நோக்கிச் செல்வதற்கான தளமாகவே அதனைப் பயன்படுத்திக்கொண்டார்.

அந்த வகையில், ஒருவர் தூக்கத்தில் காணும் அனைத்து குறியீட்டுச் செய்திகளையும் ஒரேயொரு விசயத்தைக் கொண்டே அவர் வியாக்கியானப்படுத்தினார். பாலியல் வேட்கைகளையும், நனவிலி மனத்தில் அடக்கிவைக்கப்பட்ட எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்தும் முயற்சியாகவே அனைத்து கனவுகளையும் அவர் வியாக்கியானம் செய்தார். ஏனெனில், குறித்த மனிதர் முழுமையான பிரக்ஞையில் இருக்கும்போது அவரது விழுமியங்களுக்கும் உயர்பெறுமானங்களுக்கும் இசைவாக அவ்வேட்கைகளும் உணர்ச்சிகளும் இருக்க மாட்டா என்பது அவரது விளக்கமாக இருந்தது. ஃபிராய்டு கூறுவதாவது:

> ஒருவர் தூங்கும்போது அவரது தன்னுணர்வு (Ego) சார்ந்த சக்திகள் பலவீனமடைகின்றன. அதேபோல், தூங்குபவர் தனது விழுமிய முனைப்புகளையும், இலட்சியத்தன்மை கொண்ட சுயம் பற்றிய உணர்வையும், மனசாட்சி (Superego) பற்றிய பயவுணர்வையும் இழக்கிறார்; அல்லது இத்தூண்டல்கள் பெருமளவு தொய்வடைகின்றன. இந்நிலையில், அவரது மிருக இயல்பில் (Id) அடங்கியுள்ள இச்சைகள் அவரது பாலியல், வன்ம உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன. ஆயினும், தூக்கத்தில் இருப் பவர் தனது விழுமியங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் முழுமையாக முரண்படும் வகையில் சுயக் கண்காணிப்பை முற்றாக இழந்துவிடாமல் பலவீனநிலையை மாத்திரம் அடைவதால், அவரது பாலுணர்ச்சிகள் பற்றிய வெளிப்பாடு

நடுநிலைத்தன்மையுடன் மட்டுப்படுகிறது. கனவுகளில் அது குறியீட்டு முறையில் மாத்திரம் வெளிப்படுவதால் தூங்குபவர் அதனால் சஞ்சலமடையும் நிலையோ கலக்கமடையும் நிலையோ தோன்றுவதில்லை.

ஃப்ராய்டின் வாதப்படி, எல்லாக் கனவுகளின் நோக்கமும் நனவிலி மனத்தின் பாலியல் வேட்கைகளை வெளிப்படுத்துவதற்கான குறுக்குவழியைக் கண்டடைவதே என்ற வகையில், தூங்குபவர் தனது கனவில் காண்பது இப்பாலியல் நோக்கங்களின் ஒரு குறியீடே தவிர வேறொன்றும் அல்ல. இப்பிறழ்வுற்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில், மனிதர்கள் கனவில் காணக்கூடிய சாதாரண விசயங்களைக்கூடப் பட்டியல்படுத்திய ஃபிராய்டு, அது ஒவ் வொன்றின் பாலியல் குறியீட்டு அர்த்தங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். அந்த வகையில், பேனாக்கள், சிகரெட்டுகள், பாம்புகள் போன்ற உருளை வடிவான அல்லது கூரான அல்லது முனை கொண்ட அல்லது துப்பாக்கிபோன்று வேட்டுவைக்கக்கூடிய அல்லது துளையிடுகின்ற அல்லது கலப்பைபோன்று பிளக்கக்கூடிய அனைத்தும் ஆணின் பாலுறுப்பைக் குறிக்கும் என விளக்கினார். அவ்வாறே, வட்டமான அல்லது உட்குழிவான பெட்டிகள், பாத்திரங்கள், அறைகள் ... பாத்திரங்கள்போல எந்தப் பொருள் கனவில் தெரிந்தாலும் அது பெண்ணின் பாலுறுப்பைக் குறிக்கும் என விளக்கினார்.

நமது கனவுகளுக்குப் பாலியல் முலாம் பூசுவதுடன் மாத்திரம் ஃபிராய்டு நின்றுவிடவில்லை. அதையும் தாண்டி நமது குழந்தை களின் நடத்தையை அல்லது பெற்றோருடன் நமக்குள்ள புனித உறவைக் களங்கப்படுத்தும் அளவுக்கும் செல்கிறார்.

ஃபிராய்டின் கூற்றுப்படி, உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் Oedipus complex அல்லது Electra complex என்ற நிலையைக் கடந்தே வருகின்றனர். 'எடிபஸ் காம்ப்லெக்ஸ்' என்பது மகன் தாயின் மீது கொள்ளும் பாலியல் மோகத்தையும், அதனால் தந்தைமீது அவனுக்கு ஏற்படும் பொறாமையையும், 'எலக்ட்ரா காம்ப்லெக்ஸ்' என்பது மகள் தந்தையின் மீது கொள்ளும் பாலியல் மோகத்தையும், அதனால் தாய்மீது அவளுக்கு ஏற்படும் பொறாமையையும் குறிக்கும். ஃபிராய்டு புராதனக் கிரேக்கர்களிடமிருந்து எடுத்துக்கொண்ட இச்சொல்லாட்சிக்கும் பிரச்சினைக்கும் — குறிப்பாகத் தனது ஆரம்பகால எழுத்துகளில் — பெரும் முக்கியத்துவம் வழங்கினார். மனிதர்கள் உளநோய்களால் பாதிக்கப்படுவதற்கு அடிப்படைக்

காரணமாக ஃபிராய்டு இதனையே கருதினார். மட்டுமன்றி, நமது குழந்தைப்பருவப் பாலியல் உணர்வுகள் நாம் உணராமலேயே நமக்குள் தொடர்ந்தும் அடக்கிவைக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றின் தாக்கம் அழிவதோ மறக்கப்படுவதோ இல்லை எனவும் கூறினார். அதனால்தான் தூக்கத்தில் ஒருவரது சுயக் கண்காணிப்புணர்வு பலவீனமடையும்போது அவரது கனவில் இச்சிக்கல் குறியீட்டு வடிவில் வெளிப்படுவதாக அவர் விளக்கினார்.

உளவியலாளர் ஒருவர் இதனைத் தெளிவுபடுத்த பின்வரும் உதாரணத்தையும் தருகிறார்: 'நீங்கள் கனவில் ஓர் கறவைப் பசுவுக்குப் புல் கொடுப்பதாகக் கண்டால், அப்பசு உங்கள் தாயையும், அதற்கு நீங்கள் புல் கொடுப்பது அவள்பால் நீங்கள் அடக்கிவைத்திருக்கும் குழந்தைப்பருவப் பாலியல் உணர்வையும் குறிக்கும்.'

இதுதொடர்பாக மேலும் அறிய விரும்பும் வாசகர்கள் ஃபிராய்டின் எழுத்துகளையும் அவரது பின்பற்றாளர்களின் எழுத்துகளையும் படிக்கலாம். மனித இயல்புக்கும் தர்க்கத்துக்கும் முரணான இத்தகைய பல விளக்கங்கள் அவற்றில் காணப்படுகின்றன.

நமது கனவுகள் அனைத்தும் நமது விழுமியங்களுக்கும் பெறுமானங்களுக்கும் முரணான வகையில் நனவிலி மனத்தில் அடக்கிவைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிகளுக்கான குறியீடுகள்தான் என்ற பொதுமைப்படுத்தல், சாதாரணமாக விழுமியங்களுக்கு முரணாக நாம் காணும் தெளிவான பாலியல் கனவுகளால் பொய்ப்படுத்தப்பட்டுவிடுகிறது எனலாம். ஏனெனில் இப்பொதுமைப்படுத்தல் சரியானதாயின், மிகக் கீழ்த்தரமான மனிதர்கள் கூட வெறுக்கக்கூடிய செயல்களில் நாமே ஈடுபடுவதாகத் தோன்றும் சாத்தானியக் கனவுகள் ஏன் வருகின்றன? இவ்வாறான மானக்கேடான கனவுகளை அல்லது அவற்றின் குறியீட்டுரீதியான வெளிப்பாட்டைத் தடுக்க வேண்டிய நமது கண்காணிப்புணர்வு எங்கே போனது?!

மேலும், நமது அனைத்து கனவுகளும் ஃபிராய்டு சொல்வதுபோல் நனவிலி மனத்தில் அடக்கிவைத்திருப்பவற்றின் குறியீடுகளாகவே இருக்குமாயின், சாதாரண வாழ்வில் எதையுமே நம்மால் 'அப்பாவித்தனமாகப்' பார்க்க முடியாதுபோய்விடும். உதாரணமாக, ஒருவர் வேலையிலிருந்து திரும்பும் வழியில் பசுமாடு புல் மேய்வதைக் கண்டால், அன்றிரவு கனவில் அவரது தாய் மீதான மறைமுகப் பாலியல் மோகம் காரணமாகவன்றிச் சாதாரணமாக ஒரு பசுவைக்

காண முடியாதா? ஏனெனில், இரவில் கனவுகளில் நாம் காணும் பல விசயங்கள் அதற்கு முந்திய பகலில் கடந்துவந்த அனுபவங்களின் வெளிப்பாடுதான் என அறிவியல் சான்றுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

பகலின் செயல்பாடுகள் பற்றிய நினைவுகளை முக்கியமற்ற நிகழ்வுகளிலிருந்து வடிகட்டி, தற்காலிக நினைவகத்திலிருந்து (Short-term memory) நீண்டகால நினைவகத்திற்கு (Long-term memory) நகர்த்துவதற்கு இத்தோற்றப்பாடு பயனுடையதாகும். இப்பின்னணியில், அடக்கிவைக்கப்பட்ட பாலுணர்வு என்ற கோட்பாட்டை, மாடுகள் அறுக்கப்பட முன் அவற்றின் ஆரோக்கிய நிலையை மேற்பார்வை செய்யும் பணியில் ஈடுபடுபவர் மீதோ, மாடுகளை மேய்க்கும் இடையன் மீதோ நாம் பிரயோகிக்கலாமா?!

மாடு பற்றிப் பேசும்போது, முன்னைய ஓர் அத்தியாயத்தில் பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் பற்றிக் குறிப்பிட்டதையும் இங்கு நினைவுபடுத்துகிறோம். அவர் தனது சார்பியக் கோட்பாடு பற்றிய புரிதலை மின்சாரக் கம்பிக்கு அருகிலிருந்து வெருண்டோடும் மாடுகள் பற்றிய கனவிலிருந்தே உய்த்தறிந்தார் என நாம் குறிப்பிட்டோம்.

கனவுகள் மீதான ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடு பற்றி இங்கு நான் சற்று விரிவாகக் குறிப்பிடக் காரணம், மேற்குலகில் உளவியல் ஆக்கங்களை எழுதுவோர் கவனம் குவிக்கின்ற ஒரேயொரு கோட்பாடு அது மாத்திரமே என்பதனால்தான். அறபு, முஸ்லிம் உளவியலாளர்கள் அதனை எவ்வித விமர்சனமோ திறனாய்வோ இன்றி எடுத்துவந்து, ஒரு மனோதத்துவ இயற்பியல் விதிபோன்று தங்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர்.

மேற்கத்திய உளவியலாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் மதத்தையும் அதன் ஆத்மீக விவகாரங்களையும் ஒதுக்கித் தள்ளிய பிறகு கனவுகளுக்கு விளக்கமளிப்பதற்கு Activation-synthesis hypothesis என்ற கோட்பாட்டையும், ஃபிராய்டின் கோட்பாட்டையும் தவிர அவர்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. முதல் கோட்பாடானது கனவுகளின் அனைத்து அர்த்தங்களையும் முக்கியத்துவத்தையும் நிராகரித்தது. அதன் வாதப்படி, கனவுகள் என்பவை மூளையில் ஒழுங்கின்றி நிகழும் நரம்புச் செயல்பாடுகள் மட்டுமே. அவற்றுக்கு எந்தப் பொருளும் இல்லை. ஆயினும் எதிர்வுகூறல் கனவுகளும், புலன்களுக்கு அப்பாற்பட்ட பிற தோற்றப்பாடுகளும் உண்மையில் காணப்படுவதற்கான ஏராளமான சான்றுகள் முன்வைக்கப்பட்ட

போது அக்கோட்பாடு செல்வாக்கிழந்தது. இந்நிலையில், ஃபிராய்டின் கோட்பாடு மட்டுமே எஞ்சிநின்றது. அது தவிர்ந்த எந்தக் கோட்பாடும் அவர்களிடம் அவ்வளவு செல்வாக்கு பெறவில்லை.

இந்த வகையில்தான், அமெரிக்க, ஐரோப்பிய உளவியல் நூல்கள் கனவுகள் பற்றிய ஃபிராய்டின் கருத்தாக்கத்தை அதிக விமர்சனம் செய்யாமல் தனியான ஓர் அத்தியாயத்தில் அப்படியே நகல் செய்கின்றன. பின்னர் அதே நூல்களின் வேறு அத்தியாயங்களில், உளவியல் சிகிச்சை தொடர்பான ஃபிராய்டின் பகுப்பாய்வுச் சிந்தனை பிற பயனாக்கத் துறைகளில் அடைந்த தோல்விக்காகத் தயவுதாட்சண்யமற்ற தாக்குதலுக்கு உள்ளாவதை நாம் பார்க்கிறோம். ஆனால், கனவுகள் பற்றிய தனது கோட்பாட்டை வடிவமைக்க ஃபிராய்டு அடிப்படையாகக் கொண்ட அதே கருத்தாக்கத்தின் மீதே அவரது உளவியல் பகுப்பாய்வுச் சிந்தனையும் கட்டமைக்கப்பட்டது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

முன்னைய ஓர் அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்டதுபோல், பிந்திய ஆண்டுகளில் ஃபிராய்டினதும் அவரது உளவியல் பகுப்பாய்வினதும் செல்வாக்கு பெருமளவு சரிந்துவிட்டது. உளவியல் சிகிச்சையாக அமைய முடியாத அதன் இயலாமையைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்தியதே இதற்குக் காரணமாகும். இதனால் அவர் சாதித்த வெற்றிகள் பற்றியும், பரிசோதனை அறிவியலோ சீரிய தர்க்கமோ ஆதரிக்காத அவரது கோட்பாடுகள் பற்றியும் மறுபரிசீலனை செய்ய உளவியல் வரலாற்றாசிரியர்கள் தூண்டப்பட்டனர். இறுதியில் அவரைப் பொய்யராகவும் இருட்டடிப்பு செய்பவராகவும் குற்றம் சாட்டுமளவுக்கு நிலைமை மாறியது. ‘கோகெயின்’ என்னும் போதைப் பொருளுக்கு அவர் அடிமையாகியிருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

தோர்ன்டன் (Thornton) என்னும் பெண் ஆய்வாளர் தனது *‘ஃபிராய்டும் கோகெயினும்: ஃபிராய்டிய பிழைவாதம் (Freud and Cocaine: The Freudian Fallacy)’* என்ற நூலில், ஃபிராய்டு தனது பாலியல் கோட்பாடுகளில் குறிப்பிட்ட எல்லாப் பைத்தியக்காரத்தனமும் அவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்த பாதிப்பில் எழுதப்பட்டவை என நிரூபித்தார்.

ஆனால் இந்த அனைத்துக்கும் அப்பால், குறிப்பாகக் கனவு-விளக்கம் பற்றிய அவரது கோட்பாடு ஐரோப்பிய உளவியல் நூலாசிரியர்களிடமும் பொதுமக்களிடமும் வரவேற்பு பெற்றுள்ளது. அல்லது குறைந்தபட்சம் அவர்களது பழிப்புக்கு அது ஆளாகவில்லை.

ஏனெனில், அது மேற்கத்திய ரசனையுடன் இணங்கிச்செல்கிறது; கனவுகளுக்கு விளக்கமளிப்பதில் பாலுணர்வுடன் ஆழ்ந்த கோட்பாட்டுத் தொடர்பைப் பேணுகிறது.

அக்கோட்பாட்டுக்குப் போட்டியாக யங், அட்லர் முதலிய மூத்த உளவியலாளர்கள் முன்வைத்த கோட்பாடுகளால்கூடத் தாக்குப்பிடிக்க முடியாமல்போனபோது ஐரோப்பியர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் மட்டுமே எஞ்சியிருந்தன:

- ஒன்றில், ஃப்ராய்டின் சிந்தனையை ஏற்றுக்கொள்ளல்;
- அல்லது கனவுகளுக்கான (ஆத்மீக) தொலைநுண்ணுணர்வு (Telepathy) வியாக்கியானங்களை ஏற்றுக்கொள்ளல்.

இந்த இரண்டாவது வகை வியாக்கியானங்கள் அண்மைக் காலங்களில் அதிக வரவேற்பு பெற்றுவருகின்றன. இவ்வகையான விளக்கங்கள் அவர்களது இளைய தலைமுறையை மீண்டும் மதச் சிந்தனையை நோக்கி ஈர்த்து வந்துவிடும் என்று அவர்கள் அஞ்சியதால், ஃபிராய்டைப் பற்றிப்பிடித்திருப்பதையே அதிகம் விரும்பினர். வேண்டுமென்றே குருட்டுத்தனமாகச் சிந்திப்பதன் தீங்குகளில் இதுவும் ஒன்றாகும். ஒரு கோட்பாடு எவ்வளவு குறைபாடு கொண்டதாக இருப்பினும், பிற கோட்பாடுகளை விடுத்து அதனையே பிடிவாதமாகப் பின்பற்றும் நிலையை இச்சிந்திப்பு உருவாக்குகிறது. இந்த வகையில்தான், டார்வினின் கோட்பாட்டைப் பற்றிப்பிடித்திருப்பதற்கான கோஷங்களும் மேலெழுகின்றன. ஏனெனில், அதனைக் கைவிட்டால் படைப்பாளனான ஓரிறைவன் இருப்பதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு பதிலீடு கிடையாது.

ஆக, நவீன மேற்கத்திய நாகரிகத்தின் புதல்வர்கள் கனவுகளுக்கான ஆத்மீக-மத வியாக்கியானத்தை நிராகரிக்கும் வகையில் கொண்டிருக்கும் நம்பிக்கை இதுதான். இந்த நம்பிக்கை அவர்களது உள்ளங்களில் மதச்சார்பற்ற மதமாய் ஆழப் பதிந்துள்ளது. மத்தியக்காலக் கிறிஸ்தவத்துக்கும் மதகுருக்களின் செயல்பாடுகளுக்கும் எதிராகத் தம்முடைய மூதாதையர் செய்த புரட்சியிலிருந்தும், பிரபஞ்சத்தையும் வாழ்வையும் பற்றி அவர்கள் வடிவமைத்த சிந்தனையிலிருந்தும் இந்நம்பிக்கையை அவர்கள் அனந்தரமாகப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சிந்தனையின் அல்லது நம்பிக்கையின் தீவிரத்தன்மையால் பாதிக்கப்பட்ட சமூகங்களது எதிர்வினை இப்படித்தான் இருக்கும். அச்சிந்தனைக்கு எதிரான மற்றொரு சிந்தனையையும் அதே தீவிர வழிமுறையையும் அவை கைக்கொள்ள முனைந்துவிடும்.

ஐரோப்பியச் சிந்தனையானது ஆத்மீக வியாக்கியானங்களை வெறுத்து அவற்றுக்கு எதிரான கோட்பாடுகளையும் செயல்பாடுகளையும் ஏன் வரவேற்கிறது என்பதற்கான சமூக-நாகரிக விளக்கம் இது தான். வரலாற்றுரீதியாகவும் சிந்தனாரீதியாகவும் அமைந்த காரணங்கள் இவை. இந்நிலையில், தர்க்கரீதியான அல்லது விழுமியரீதியான சிந்திப்பின்றி இம்மேற்கத்தியச் சிந்தனைகளை விரும்பி ஏற்றுக்கொள்ளும் முஸ்லிம் உளவியலாளர்களையும் ஆசிரியர்களையும் என்னவென்பது?! அவர்களது இஸ்லாமிய வரலாறோ அறிவுக்கும் மதத்துக்கும் மத்தியில் இவ்வாறான எந்த மோதலையும் கண்டதில்லை. மட்டுமன்றி, இஸ்லாம்தான் அனைத்து வகையான கோட்பாட்டு, பரிசோதனை அறிவியல்களையும் நோக்கி அவர்களது புத்தியையும் தரிசனப் பார்வையையும் திறந்துவிட்டது என்பதற்கு அதன் நீண்ட வரலாறு சாட்சி.

அடுத்ததாக, கனவுகளை இஸ்லாம் எவ்வாறு நோக்குகிறது என்பதைக் கவனிப்போம்.

## கனவுகள் பற்றிய இஸ்லாத்தின் நோக்கும் வகைப்பாடும்

இஸ்லாத்தில் கனவுகளுக்கு ஓர் உயர்ந்த இடம் உண்டு. அவற்றின் உண்மைநிலை பற்றியும் வகைகள் பற்றியுமான இஸ்லாமியக் கருத்தாக்கம் ஓர் அறிவியலாளரிடமிருந்தோ, தன்னிடம் அறிவு இருப்பதாகச் சுயவிளம்பரம் செய்யும் ஒருவரிடமிருந்தோ நமக்கு வரவில்லை. மாறாக, இஸ்லாத்தின் மிகப் பெரும் மூலாதாரங்களுள் ஒன்றான முஹம்மது ﷺ அவர்களிடமிருந்து வந்தது. அன்னார் தமது மனோ இச்சைப்படி பேசவில்லை. அபூஹுறைறா ؓ வாயிலாக இமாம் புஃகாரீ பதிவுசெய்த ஓர் நபிமொழி பின்வருமாறு குறிப்பிடுகிறது:

கனவுகள் மூன்று வகை:

1. அல்லாஹ்விடமிருந்து வரும் நற்செய்தி;
2. மனத்தின் உரையாடல்;
3. ஷைத்தானின் பயமுறுத்தல்.[78]

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ‘மனத்தின் உரையாடல்’ என்பது பற்றிய சில உளவியல் கருத்தாக்கங்களை மாத்திரம் இங்கு முன்வைக்க விரும்புகிறோம். ஏனெனில், அதுபற்றி முன்னரும் சுருக்கமாகப் பேசியுள்ளோம்.

78. ஸஹீஹுல் புஃகாரீ.

மேற்குறித்த நபிமொழியின் மற்றொரு அறிவிப்பில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது:

கனவுகள் மூன்று வகை:

1. அவற்றுள் சில கனவுகள் மனிதனைப் பயமுறுத்த ஷைத்தான் ஏற்படுத்துபவை.
2. இன்னும் சில கனவுகள் ஒருவர் விழிப்பில் மேற்கொண்டு பின்னர் தூக்கத்திலும் தொடர்பவை.
3. வேறுசில கனவுகள் நுபுவ்வத்தின் நாற்பத்தாறு பகுதிகளுள் ஒன்றாக வருபவை.[79]

இந்த அறிவிப்பில், 'மனத்தின் உரையாடல்' என்பதை நபிகளார் 'ஒருவர் விழிப்பில் மேற்கொண்டு பின்னர் தூக்கத்திலும் தொடர் பவை' என விவரிக்கிறார்கள். ஒருவர் தனது விழிப்புநிலையில் மேற் கொள்பவை அன்றாடம் கடந்துசெல்கின்ற சாதாரண, அசாதாரண நிகழ்வுகளை மட்டுமன்றி அவரது நினைவுகளையும், மனத்தில் தோன்றும் ஆசைகள், அச்சங்கள், விருப்பங்கள், வெறுப்புகள் முதலிய அனைத்தையும் உள்ளடக்கும்.

முன்னரும் நாம் வலியுறுத்தியதுபோல், இரவில் நாம் காணுகின்ற கனவுகளில் அதிகமானவை பகலின் அனுபவங்களாலும் நிகழ்வு களாலும் தாக்கமுற்றே வருகின்றன. இது அனைவரும் அறிந்த விசயம். பரிசோதனை ஆய்வுகளும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. ஒருவர் விழிப்பின்போது மேற்கொள்பவை இச்சை சார்ந்தவையாக அல்லது உயிரியல் சார்ந்தவையாக அல்லது உளவியல் சார்ந்த வையாக இருக்க முடியும். அந்த வகையில், பாலியல் இச்சையும் ஒருவர் தனது விழிப்புநிலையில் கடந்துசெல்லும் அனுபவம்தான். ஆனால், ஃபிராய்டு சொல்வதுபோல் ஒருவரது எல்லாக் கனவுகளின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரே விசயம் பாலியல் இச்சை மட்டுமல்ல.

அடுத்த இரு எதிரெதிரான வகைகளைப் பொறுத்தவரை, அவை இரண்டும் கனவுகளில் உள்ள ஆத்மீக, குறியீட்டுப் பரிமாணங் களைப் பிரதிநிதித்துவம் செய்பவை. இவ்விரு வகை குறியீட்டு, ஆத்மீகக் கனவுகளை விளக்குவதற்கு நமது சமகால வாழ்விலிருந்து ஓர் உதாரணத்தை வாசகருக்குத் தருகிறோம்:

---

79. சுனன் இப்னு மாஜா.

நாம் வாழும் இவ்வுலகம் அலைகளாலும் அதிர்வுகளாலும் நிறைந்திருக்கிறது. 'டிரான்ஸ்மிட்டர்' எனப்படும் கருவிகளால் வெளியிடப்படும் இந்த அலைகளையும் அதிர்வுகளையுமே நமது தொலைக்காட்சிகளும் வேறுபல சாதனங்களும் உள்ளெடுக்கின்றன. அவற்றுள் திருக்குர்ஆனின் பல்வேறு பாராயணங்களை ஒலி/ ஒளிபரப்பி நற்செயல்களைத் தூண்டக்கூடிய அலைவரிசைகளும் உள்ளன. அதேபோல், மிக மோசமான ஆபாசத் திரைப்படங் களையும் பொய்களையும் மானபங்கப்படுத்தும் நிகழ்ச்சிகளையும் ஒலி/ஒளிபரப்பும் அலைவரிசைகளும் உள்ளன.

இதேபோன்றுதான், நாம் வாழும் இவ்வுலகு வானவர்களாலும் நல்ல ஆத்மாக்களாலும் நிறைந்திருக்கும் அதேவேளை, ஜின்களாலும் ஷைத்தான்களாலும் கெட்ட ஆத்மாக்களாலும்கூட நிறைந்திருக்கிறது. மாட்சிமைமிக்க இறைவன் நமக்கு இதயங்களைப் படைத்திருக் கிறான். அந்த உள்ளங்களால் நாம் பிரக்ஞை நிலையிலும் கனவு களிலும் நல்ல ஆத்மீகச் செய்திகளையோ கெட்ட விசயங்களையோ உள்ளீர்க்க முடியும். அந்த வகையில், நமது உள்ளங்கள் உயிருள்ள 'ரேடார்' கருவிகளாகச் செயல்படுகின்றன எனலாம்.

இந்த வேறுபாடும் எதிர்நிலையும் இறைவனின் படைப்பியல் அற்புதமாகும். அவன் இரவையும் பகலையும் படைத்தான். அவ்வாறுதான் இன்பம்-துன்பம், நன்மை-தீமை, ஆண்-பெண், மனிதன்-ஜின்னு, நேர்வழி-வழிகேடு ஆகிய முரண்களையும் படைத்தான். ஒவ்வொன்றிலும் எதிரெதிராக அமைகின்ற இரு வகைகளை அவன் படைத்திருக்கிறான். 'நீங்கள் சிந்தித்துணரலாம் என்பதற்காக ஒவ்வொன்றிலும் நாம் ஜோடிகளைப் படைத்தோம்.' (51:49) என இதனை அவன் குறிப்பிடுகிறான்.

அந்த வகையில், ஒருவர் தூக்கத்தில் ஆழ்ந்து பிரக்ஞையின் அழுத்தத்திலிருந்து விடுபடும்போது அவரது ஆத்மாவை அதன் ஆத்மீக ராஜ்யத்தில் அல்லாஹ் நீந்த விடுகிறான். அப்போது வானவர்கள்போன்ற நல்லாத்மாக்களின் தாக்கத்தினால் அல்லது ஷைத்தான்கள்போன்ற தீயாத்மாக்களின் தாக்கத்தினால் அவருக்குக் கனவுகள் உருவாகின்றன. அந்தத் தாக்கம் தீயாத்மாக்களால் உருவாகுமாயின், கவலையளிக்கக்கூடிய அல்லது சங்கடமான விசயங்களையே கனவில் காண்பார். மக்களுக்கு முன்னால் நிர்வாணமாகச் செல்லல் அல்லது பொருத்தமற்ற செயல்பாடுகளில் ஈடுபடல் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். 'ஷைத்தானின் பயங்கரங்கள் அல்லது ஊசலாட்டங்கள்' என இறைத்

தூதர் ﷺ குறிப்பிட்டுள்ள வகை இதுதான். முஸ்லிம் கிரந்தத்தில் வரும் அறிவிப்பொன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

> நாட்டுப்புற அறபி ஒருவர் தனது தலை துண்டிக்கப்பட்டிருந்ததாகவும், தலையற்ற அவரது உடல் துண்டிக்கப்பட்ட தலையைப் பின்தொடர்ந்து செல்வதாகவும் கனவில் கண்டார். அதற்கான விளக்கத்தைக் கேட்டு அவர் இறைத்தூதரிடம் வந்தபோது, அன்னார் அவரைக் கண்டித்து இப்படிச் சொன்னார்கள்: 'தூக்கத்தின்போது ஷைத்தான் உன்மீது நடத்தும் விளையாட்டை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்காதீர்.'[80]

ஆக, கனவுகள் என்பவை தூங்குபவரது அனுபவங்கள், பகலில் அவர் கவனம் செலுத்தும் விவகாரங்கள் ஆகியவற்றின் தாக்கத்துக்கேற்ப அமையும்; அல்லது ஷைத்தான்கள், தீயாத்மாக்களின் தாக்கத்துக்கேற்ப அமையும்.

மூன்றாவது வகை கனவுகளே சுபசோபனக் கனவுகளாகும். எதிர்வுகூறும் கனவுகளும் அவ்வாறானவைதான். படுக்கையில் தூங்கிக்கொண்டிருக்கும்போது நமக்குத் தோன்றும் இக்கனவுகளின் நிகழ்வுகள் முழுக்கமுழுக்க நமது வாழ்வின் எதிர்காலத்தில் நடப்பவையாக இருக்கும். இம்மூன்றாவது வகை கனவுகளையே நபிகளார் அல்லாஹ்விடமிருந்து வரும் சுபசோபனமாக வர்ணித்தார்கள். ஏனெனில், இறைவிசுவாசி ஒருவரின் பரிசுத்தமான உள்ளமும், ஆத்மீக சமிக்ஞைகளைப் பெறக்கூடிய (ஆத்மீக ரேடார்) பலமும் இணையும்போது அவரது கனவுகள் — நுணுக்கத்திலும் அருளிலும் — நபிமார்களுக்கு வரும் வஹீயை ஒத்ததாக இருக்கும். அதேவேளை, நபிமார்களுக்கும் இறை நேசர்களுக்கும் மத்தியிலான பாரிய வேறுபாட்டையும் இங்கு நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

இந்த வகையில்தான், உண்மைத்தன்மை கொண்ட இத்தகைய கனவுகளை நபியவர்கள் நுபுவ்வத்தின் நாற்பத்தாறு பகுதிகளில் ஒன்றாகக் குறிப்பிட்டார்கள். நபிகளார் தமது சமயரீதியான சில தீர்மானங்களைக்கூட யாராவது நபித்தோழர் ஒருவர் கண்ட உண்மைக் கனவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டிருக்கிறார்கள். அதனை ஒத்த கனவை வேறொரு தோழரும் கண்டிருந்தால், அதுகுறித்து நபிகளார் இன்னும் அதிக அவதானத்தைச் செலுத்துவார்கள்.

---

80. ஸஹீஹ் முஸ்லிம்.

இமாம்களான அஹ்மது, திர்மிதீ, இப்னு மாஜா ஆகியோரின் அறிவிப்புகளில் வரும் ஒரு சம்பவம் இதற்கு எடுத்துக்காட்டாகும்:

நபி ﷺ அவர்கள் தமது பள்ளிவாசலில் ஐவேளைத் தொழுகைக்காக முஸ்லிம்களை அழைப்பதற்குக் கிறிஸ்தவர்களின் மணிபோன்ற ஒன்றைப் பயன்படுத்த விரும்பியிருந்தார்கள். எனினும், கண்ணியமிக்க நபித்தோழரான அப்துல்லாஹ் இப்னு ஸைது இப்னு அப்தி றப்பிஹ் தனது கனவில் மணியைச் சுமந்துசெல்லும் ஒரு மனிதரைக் கண்டார். முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பதற்குப் பயன்படுத்தலாம் என அதனை அவரிடமிருந்து வாங்க நபித்தோழர் விரும்பினார். அதற்கு அம்மனிதர், 'இதனைவிடச் சிறந்த ஒன்றை நான் காட்டித்தரட்டுமா?' எனக் கேட்டுவிட்டு, இன்றுவரை நாம் பயன்படுத்தும் 'அதான்' அழைப்பின் வாசகங்களைச் சொல்லிக்கொடுத்தார்.

அப்துல்லாஹ் என்ற அந்த நபித்தோழரின் கனவைப் போன்ற கனவொன்றை உமர் இப்னுல் ஃகத்தாபு ؓ அவர்களும் அதே வாசகங்களோடு கண்டபோது நபிகளார் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த இரு கனவுகளும் இல்லையென்றால், இன்றுவரை அதிகாலை மணியோசை, நண்பகல் மணியோசை, றமளானில் நோன்புவைப்பதற்கான மணியோசை என்றுதான் நாம் பின்பற்றிக் கொண்டிருப்போம்.

இஸ்லாத்தில் நல்ல கனவுகள் பெறும் இடத்திற்கு மகத்தான சான்றாக மற்றொரு நிகழ்வும் உள்ளது:

இறைப்பாதையில் மரணித்த நபித்தோழர் ஒருவர் மற்றொரு நபித்தோழரின் கனவில் தோன்றிக் கூறிய ஓர் விருப்பத்தை அமீருல் முஃமினீன் அபூபக்கர் ؓ நிறைவேற்றிய நிகழ்வாகும் அது. கனவை அடிப்படையாகக் கொண்டு ஒரு மரண சாசனம் (வஸிய்யா) நடைமுறைப்படுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பமும் அதுதான். கைஸ் இப்னு ஸாபித் ؓ என்ற நபித்தோழர் 'ரித்தத்' போரில் ஷஹீதாகியிருந்தார். அவர் கொல்லப்பட்ட தினத்தைத் தொடர்ந்துவந்த இரவில் போராளித் தோழர் ஒருவரின் கனவில் தோன்றிய கைஸ் ؓ பின்வருமாறு கூறினார்:

*‘நீர் இப்போது காண்பதைச் சாதாரண கனவாக எண்ணி விட வேண்டாம். மாறாக, இது எனது மரண சாசனம். முஸ்லிம்களுடைய படைத்தலைவராகிய ஃகாலிது இப்னுல் வலீதுக்கு இதனை நீர் தெரியப்படுத்த வேண்டும். முஸ்லிம் களில் ஒருவர் எனது பிரேதத்தைக் கடந்துசென்றபோது அதில் இருந்த கேடயத்தைக் கழற்றி அவரது வீட்டில் மறைத்துவைத்திருக்கிறார்.’ பின்னர், மறைத்துவைக்கப்பட்ட இடத்தை விளக்கிய கைஸ் ﵁, அதனை எடுத்துவர ஆளனுப்புமாறு ஃகாலிதிடம் வேண்டப் பணித்தார். அதனை விற்று தன்மீதிருந்த ஒரு கடனை அடைக்குமாறு அமீருல் முஃமினீனிடம் வேண்டுமாறும் கூறினார். அதன் பிரகாரம் தளபதி ஃகாலிதால் அனுப்பிவைக்கப்பட்ட நபித்தோழர் கனவில் விவரிக்கப்பட்ட அதே இடத்தில் கவசத்தைக் கண்டெடுத்தார். ஃகாலிது அக்கேடயத்தை அபூபக்கருக்கு அனுப்பிவைத்தார். பின்னர், மரணித்தவரின் விருப்பம் நிறைவேற்றிவைக்கப்பட்டது.*[81]

சாதாரண முஸ்லிம்களது கனவுகளே இப்படி என்றால், நபிமார்களது கனவுகள் எப்படி இருக்கும்? அந்த நபிமார்கள் பகலில் பிரக்ஞை யுடன் இருக்கும்போதும் இரவில் தூக்கத்தின்போதும் கனவுகளின் போதும் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தார்கள். அவர்களது கனவுகளைத் தீயாத்மாக்கள் நெருங்கவோ குழப்பவோ முடிவதில்லை. ஏனெனில், அவர்களது கனவுகள் அல்லாஹ்வின் ஏவலர்களால் பாதுகாக்கப்பட்டன. வானுலகின் வஹீயைப் பெறும் வழிகளுள் ஒன்றாகக் கனவுகளும் அமைந்திருந்தமையே இதற்குக் காரணமாகும்.

வாசகர்கள், நபிகளார் கனவுகளுக்கு வழங்கிய முப்பரிமாண விளக்கத்தோடும், உண்மையான கனவுகளில் அடங்கியிருக்கும் உயர்ந்த அர்த்தங்களோடும் ஃபிராய்டின் பாலியல் விளக்கங்களை அல்லது கனவுகளின் அர்த்தங்களை மறுக்கும் கோட்பாட்டை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பின்புலத்திலேயே நபி யூசுஃப் ﵇ பற்றியும் அவரது கனவு விளக்கங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாட விரும்புகிறேன்.

---

81. *இமாம் அத்தஹபீ, ‘சியர் அஃலாம் அந்நுபலாஅ்’.*

### நபி யூசுஃபின் வரலாறும், அவரது சூழலையும் பரம்பரையையும் தெரிவுசெய்வதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானமும்

'மனிதர்களிலேயே சங்கைமிக்கவர்' என நம்முடைய நபிகள் நாயகம் ﷺ அவர்கள் வர்ணித்த நபியொருவரைப் பற்றி இங்கு நமது அவதானங்கள் அமையவிருக்கின்றன. இறைத்தூதர் முஹம்மது ﷺ கூறியதாக இப்னு உமர் ﵁ தன்னுடைய தந்தை வழியாகப் பின்வருமாறு அறிவிக்கிறார்:

> இப்றாஹீமின் மகன் இஸ்ஹாக். இஸ்ஹாக்கின் மகன் யஅகூபு. யஅகூபின் மகன் யூசுஃப். சங்கையானவரின் மகன்; சங்கையானவரின் மகன்; சங்கையானவரின் மகன் சங்கையானவர்.[82]

மற்றோர் அறிவிப்பில் அன்னார் பின்வருமாறு கூறினார்கள்:

> மனிதர்களில் சங்கைமிக்கவரான யூசுஃப் அல்லாஹ்வின் நபி. அல்லாஹ்வின் நபியுடைய புதல்வர். அந்த நபியும் ஒரு நபியுடைய புதல்வர். அந்த நபி அல்லாஹ்வின் நண்பருடைய புதல்வர்.[83]

அந்த வகையில்தான், நாம் ஏற்கனவே கலந்துரையாடிய பல ஆத்மீகப் பரம்பரை இயல்புகளை யூசுஃப் நபிக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான் போலும். வேறுபல நபிமார்களுக்கு வழங்கப்பட்டிராத அனந்தரம் அது. நபிமார்களான அவருடைய தந்தைக்கும் பாட்டன்மாருக்கும் அருளப்பட்டிருந்த இவ்வாத்மீகப் பண்புகள் அனைத்தும் அவரது உருவாக்கத்தின்போது ஒன்றுதிரண்டிருந்தன. அதனால்தான் அவரது அழகில் மயங்கிய பெண்களின் கூற்றை உண்மைப்படுத்துவதுபோல் அவர் மென்மையிலும் அழகிலும் வானவரைப் போன்றிருந்தார்:

> அல்லாஹ் பெரியவன்தான்! இவர் மனிதரே அல்லர். இவர் மேன்மைமிக்க ஒரு வானவரே அன்றி வேறல்லர். (12:31)

நபிமார்கள் அவர்களுக்குச் சுமத்தப்பட்ட பணியை நிறைவேற்றவும், அவர்கள் சந்திக்கக்கூடிய சோதனைகளைப் பொறுத்துக்கொள்ளவும் கூடிய வகையில் அவர்களது ஆளுமையை உருவாக்குவதில் தொழிற்பட்ட தெய்வீக ஞானத்தைக் கவனித்துப்பாருங்கள். நபி யூசுஃப் மென்மையானவராகவும், தனக்குத் தீங்கிழைக்கவோ அநியாயம் இழைக்கவோ தன்னைக் கொலை செய்யவோ

82. ஸஹீஹுல் புஃகாரீ.

83. மேலது.

அவமானப்படுத்தவோ முயன்றவர்களுக்குக்கூட எந்தக் கஷ்டமும் கொடுக்காமல் பொறுமை காப்பவராகவும் நடந்துகொண்டார் என்பதை அத்தியாயம் யூசுஃப் நமக்கு உணர்த்துகிறது. உண்மையில் இது எந்த ஒரு நபியும் எதிர்கொள்ள முடியுமான சோதனைகளில் மிகக் கடினமானதாகும். அவ்வகையில், அன்னாரது முக வசீகரத்தில் தெரிந்த அதே அற்புதத்தை அவரது மென்மையான நடத்தையிலும் நாம் காண்கிறோம்.

நபி யூசுஃபின் இடத்தில் நபி மூசா இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அநியாயம் செய்து, கொல்ல முயன்று, அவமானமும் படுத்திய சகோதரர்கள் பல வருடங்கள் கழித்து அவர் அரச அந்தஸ்தில் இருக்கும்போது வறியவர்களாகவும் இழிவடைந்தவர்களாகவும் தர்மம் கேட்டு வருகின்றனர். அங்கிருந்தவர் நபி மூசாவாக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?! அமைச்சரின் மனைவி கதவுகளை மூடிவிட்டு 'இங்கே வா!' என அழைத்தபோது அங்கு மூசா ﷺ இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? கன்னத்தில் அறைந்திருப்பார்; அல்லது அந்த எகிப்திய மனிதனைக் குத்தியதுபோல் முஷ்டியால் குத்திக் கொன்றிருப்பார். அத்துணைப் பலத்தையும் உணர்ச்சி வேகத்தையும் அல்லாஹ் அவருக்கு அருளியிருந்தான்.

## நபி யூசுஃபின் முதல் கனவு பற்றிய அவதானங்கள்

அத்தியாயம் யூசுஃப் நமக்கு மூன்று அல்லது நான்கு கனவுகள் பற்றி விவரிக்கிறது. சிறைவாசிகள் இருவருக்கு அவர் வியாக்கியானம் வழங்கிய வேறு கனவுகள் பற்றியும் அது குறிப்பிட்டாலும் அவை பற்றி விரிவாகச் சொல்லவில்லை. நபி யூசுஃபின் முதல் கனவு அவரது குழந்தைப் பருவத்தில் சம்பவித்தது. அதுபற்றித் திருக்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது:

> யூசுஃப் தன்னுடைய தந்தையிடம், 'தந்தையே, நான் பதினொரு கிரகங்களையும் சூரியனையும் சந்திரனையும் எனக்குச் சிரம்பணிவதாகக் கனவில் கண்டேன்' எனக் கூறினார். (12:4)

சடப்பொருள்கள் ஒரு மனிதனுக்குக் குறியீட்டு முறையில் சிரம்சாய்ப்பது எப்படி?! யூசுஃப் சிறுவராக இருந்தபோதும் அந்தக் கனவின் குறியீட்டு அர்த்தங்களைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும்; அல்லது கனவுடன் வேறுசில வார்த்தைகளும் இணைந்து தோன்றியபோதும் திருக்குர்ஆன் அவை பற்றி நமக்கு விளக்காமல் விட்டிருக்க வேண்டும்.

இந்தக் கனவு தோன்றியபோது யூசுஃபுக்கு எத்தனை வயதாக இருந்திருக்கும்? சில விரிவுரையாளர்கள் அவருக்குப் பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் சிலர் ஒன்பது வயது எனக் குறிப்பிட்டுள்ளனர். அவருக்கு ஏழு வயதாக இருந்ததாகக் கூறும் சிலரும் உண்டு. கதையின் நிகழ்வுகளையும், 'அவர் எங்களுடன் உண்டு மகிழ்ந்து விளையாடட்டும்' என அவருடைய சகோதரர்கள் தந்தைக்குச் சமாதானம் கூறியதையும் அவதானிக்கும்போது அவர் ஐந்து அல்லது ஆறு வயதைக்கூடக் கடந்திராத குழந்தையாகத்தான் இருந்திருப்பார் என்பதை நிச்சயிக்க முடிகிறது. அத்தியாயத்தின் 11ம், 12ம் வசனங்களைக் கவனித்துப்பாருங்கள்:

> 'எங்கள் தந்தையே. யூசுஃபின் விசயத்தில் நீங்கள் ஏன் எங்களை நம்பாதிருக்கிறீர்கள்?! நிச்சயமாக நாங்கள் அவருக்கு நன்மையே நாடுகிறோம். நாளை அவரை எங்களுடன் உண்டு மகிழ்ந்து விளையாட அனுப்பிவையுங்கள். நிச்சயமாக நாங்கள் அவரைப் பாதுகாப்பாக வைத்திருப்போம்' என அவர்கள் கூறினர்.

பன்னிரண்டு வயதைத் தாண்டிய ஓர் இளவல் உண்டு மகிழ்ந்து விளையாடவோ, சகோதரர்கள் போட்டிபோட்டு முந்திச்செல்ல அவர்களது பொருள்களுக்குக் காவலனாக அமர்ந்திருக்க விரும்பவோ மாட்டான். மாறாக அவர்களுடன் போட்டியில் இறங்கவே விரும்புவான்.

யூசுஃப் கட்டிளமைப் பருவத்தவராக இருந்திருந்தால், ஓநாய் சாப்பிட்ட கதையை அன்றி வேறொரு கதையையே சகோதரர்கள் தந்தையிடம் கொண்டுவந்திருப்பர். ஏனென்றால் 12 அல்லது 13 வயதுக் கட்டிளமைப் பருவத்தினனை ஓநாயால் அவ்வளவு இலகுவாகத் தின்று ஏப்பமிட முடியாது. அத்தகைய இளைஞனால் எதிர்த்துப் போராட முடியும்; கற்களால் தாக்க முடியும்; தடியால் அடிக்க முடியும்.

அடுத்ததாக, அந்தக் கனவு பற்றிச் சகோதரர்களிடம் சொல்ல வேண்டாம் என்று புதல்வரான யூசுஃபிடம் யஅகூபு ﵇ கேட்டுக் கொண்டதாகவும், அப்படிச் சொன்னால் அவர்கள் பொறாமை கொள்வார்கள் என்று கூறியதாகவும் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. நபித்துவ இல்லத்தில் கனவுகள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை இந்த எச்சரிக்கை உணர்த்துவதாகவே நாம் கருதுகிறோம். ஏனெனில், சாதாரண வீட்டுக் குழந்தை ஒன்று தனக்குக் கிரகங்களும் சூரியனும்

சந்திரனும் சிரம்சாய்ப்பதாகக் கனவுகண்டு கூறினால் கேட்பவர்கள் நிச்சயம் சிரிப்பார்கள். ஆனால் யூசுஃபுடைய சகோதரர்களோ மகனையே அறுத்துப் பலியிடுவதாகக் கனவுகண்ட இப்றாஹீம் நபியின் பேரப்பிள்ளைகள்.

அந்த வகையில், யூசுஃபின் கனவு இறைவனிடமிருந்து வந்த நற்செய்தியாகத்தான் இருக்க வேண்டும். எனவே அதன் வியாக்கியானத்தால் அவர்களது உள்ளங்களில் காழ்ப்புணர்வு நிரம்பி அவருக்கு எதிராக சூழ்ச்சிசெய்ய முடியும். பாரம்பரியமாகக் கடத்தப்படும் ஆத்மீகப் பண்புகள் குறித்து நாம் ஏற்கனவே விளக்கிய அம்சமும் அவர்களிடம் இந்த சூழ்ச்சியை அதிகப்படுத்த முடியும். ஏனெனில் யூசுஃபின் சகோதரர்கள் தீய எண்ணமும் கெட்ட செயல்களும் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்கள் நபிமார்களுடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் ஆவர். அந்த நபிமார்களிடமிருந்து அவர்கள் எதிர்காலம் குறித்து அறியும் திறன் கொண்ட ஆத்மீகப் பண்புகளைப் பாரம்பரியமாகப் பெற்றிருக்க முடியும். இத்தகைய தெய்வீகக் கொடையானது, முன்னர் நாம் கூறியதுபோல் சமயப் பற்றுடன் அவசியம் தொடர்புபட்டிருக்க வேண்டும் என்பதல்ல. எனவே, இப்பாரம்பரியக் கொடையின் வழியாக அவர்கள் குழந்தை யூசுஃபின் தனிச்சிறப்பைக் கணிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க முடியும்.

குழந்தை யூசுஃபின் சகோதரர்கள் அவரைக் கிணற்றில் தள்ளிவிடத் தீர்மானித்தபோது என்ன நடந்தது என்பதைத் தொடர்ந்து கவனிப்போம். அவர்களை எதிர்த்துநிற்கவோ, அவர்களிடமிருந்து வேகமாகத் தப்பியோடவோ, இளைஞனின் பலத்துடன் கிணற்றிலிருந்து மேலேறி வரவோ முடியாத குழந்தையாகத்தான் அவர் இருந்திருக்கிறார் என்பது தெளிவு. சிலவேளை அவர் அழுது கெஞ்சியிருக்க முடியும். ஆனாலும் அவர்கள் அவரைப் பலவந்தமாகத் தூக்கி கிணற்றுக்குள் தள்ளிவிட்டார்கள். இந்நிலையில் அவரது அச்சத்தை யாராவது போக்குவது அவசியம்:

> இவ்வாறாக அவரை அழைத்துச்சென்று ஆழமான கிணற்றில் தள்ளிவிட அவர்கள் அனைவரும் உடன்பட்டபோது, 'அவர்களது இச்செயல் பற்றி அவர்களுக்கு நிச்சயம் ஒருநாள் நீர் எடுத்துச்சொல்வீர். அப்போது அவர்கள் உம்மை அறிந்திருக்கவும் மாட்டார்கள்' என அவருக்கு அறிவித்தோம். (12:15)

*இந்த அறிவிப்பு (வஹீ) அவருக்கு எவ்வாறு வந்தது? நீண்ட காலத்திற்குப் பிறகேனும் அவர்களுக்கு எதிராக இறைவன் அவருக்கு உதவுவான் என எவ்வழியில் அவருக்கு நன்மாராயம் கூறப்பட்டது? சிறியதொரு குழந்தைக்கு இப்படி இறைவனிடமிருந்து 'வஹீ' அருளப்பட முடியுமா? அந்த 'வஹீ' அவர் கிணற்றின் பயங்கர இருளுக்குள் உறங்கிக்கிடந்தபோது கண்ட ஓர் கனவினூடாகவே அறிவிக்கப்பட்டது எனச் சில விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறு அது கனவுதான் என்றிருக்குமாயின் குறித்த அத்தியா யத்தில் குறிப்பிடப்பட்ட கனவுகளின் எண்ணிக்கை நான்காகும். அது கனவன்றி 'வஹீ'யாகவே இருந்திருக்குமாயின் அதில் தெளிவான மூன்று கனவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதாக நாம் கொள்ளலாம்.*

## இறைவன் யூசுஃபைப் பெருநகருக்கு அனுப்பியது ஏன்?

*கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்குப் பயணக்கூட்டத்தின் பணியாள் வந்து கிணற்றினுள் வாளியைப் போட்டபோது யூசுஃப் அதனைப் பற்றிக்கொண்டார். வாளியில் அவரைக் கண்டபோது, 'இதோ ஒரு நற்செய்தி ... இங்கு ஒரு பையன் இருக்கிறான்' என அவன் கத்தினான். பிறகு அவரை வெளியே எடுத்தான். சில அறிவிப்புகளின்படி, கிணற்றின் இருளால் வாளியில் என்ன இருந்ததென்று அந்த மனிதனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே யூசுஃப் வாளியைப் பற்றியிருந்த நிலையில் அவன் கயிற்றை இழுத்துக்கொண்டே இருந்தான். வாளியின் சுமைக்குக் காரணம் தண்ணீரன்றி ஒரு குழந்தைதான் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. யூசுஃப் அப்போது மிக இளவயதினராக இருந்தார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.*

*அருள்பொருந்திய அக்குழந்தையை இறைவன் இவ்வாறான கஷ்டங்களுக்கு உட்படுத்தியதன் பின்னால் மறைந்திருந்த ஞானம் என்ன? அவரை ஒரு நபியாகவும் தூதராகவும் அனுப்பிவைக்க அவன் நாடியிருந்தான். அதற்கான தயாரிப்புதான் இந்தக் கஷ்டங்கள். ஆனால் 'கன்ஆன்' பூமியின் கடைக்கோடியில் உள்ள ஒரு கிராமத்தில் வாழ்பவர்களுக்காக அவன் ஒரு தூதரை அனுப்பி வைக்கப்போவதில்லை. அல்லாஹ் எப்போதும் பெருநகர்களுக்கே தன்னுடைய தூதர்களை அனுப்பிவைப்பதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது:*

> *நம் வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கும் தூதர் ஒருவரை அவர்களது பெருநகருக்கு அனுப்பிவைக்காதவரை உமது இரட்சகன் எந்த ஊரையும் அழிப்பதில்லை. மேலும்*

*எந்த ஊரையும் அதன் மக்கள் அக்கிரமக்காரர்களாக இல்லாத நிலையில் நாம் அழிப்பதில்லை.* (28:59)

நபி யூசுஃபின் காலத்தில் எகிப்தின் தலைநகரைத் தவிர வேறு பெருநகரம் இருக்கவில்லை. சிலவேளை அது அன்றைய நிலையில் முழு உலகுக்குமான தலைநகராகவும் இருந்திருக்கலாம். யூசுஃபின் சகோதரர்களை ஷைத்தான் வழிகெடுத்து, அவரை இருண்ட கிணற்றில் தள்ளிவிடச்செய்து, பின்னர் எகிப்துக்கு எடுத்துச்செல்லக்கூடியோர் மூலமாக அவரைக் கிணற்றிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதுதான் இறைவனின் திட்டமாக இருந்திருக்கிறது. ஏனெனில் அல்லாஹ் பாவிகளையும் அவர்களை வழிகெடுக்கக்கூடிய ஷைத்தான்களையும்கூடப் பெரும் நன்மை மறைந்திருக்கும் ஒரு விவகாரத்தைச் சாதிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்வான்.

நீங்கள் விரும்பினால் அத்தியாயம் அல்கஹ்ஃபின் 62-65 வசனங்களைப் படித்துப்பாருங்கள். நபி மூசா ﷺ தன்னுடைய பணியாளர் வைத்திருந்த மீன்கொண்டு பகலுணவு தயாரிக்குமாறு கூறுகிறார். ஆனால் அந்த மீன் மீண்டும் உயிர்பெற்று கடலுக்குள் நழுவி ஓடிவிட்டிருந்தது. பணியாளன் அப்போதே அதுபற்றி மூசாவிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் ஷைத்தான் அதனை மறக்கடித்திருந்தான். 'அதுபற்றிக் கூறாமல் என்னை மறக்கடிக்கச்செய்தவன் ஷைத்தானே அன்றி வேறல்லன்' என அதுபற்றிப் பணியாளன் பின்னர் குறிப்பிடுகிறான். எனினும் மீனின் செயலானது அந்த நீண்ட பயணம் எதற்காக மேற்கொள்ளப்பட்டதோ அதற்கான அடையாளமாக அமைந்திருந்தது. 'நாம் நாடிவந்தது அந்த இடம்தான்' என நபி மூசா ﷺ அப்போது கூறுகிறார். பின்னர் இருவரும் அந்த இடத்திற்குத் திரும்பிவந்து நல்லடியார் ஃகிள்ரைச் சந்திக்கிறார்கள். மூசாவுக்கு வழங்கப்பட்ட பணியை அவர் மேற்கொள்ள உதவும் பொருட்டே ஷைத்தான் பணியாளனுக்கு மறதியை ஏற்படுத்தினான்.

ஆக, அல்லாஹ் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன். நாம் தீமை என்று எண்ணுவதிலிருந்துகூட அவன் நன்மையைக் கொண்டுவருகிறான். நாம் நன்மை என்று கருதுவதிலிருந்துகூட அவன் மாற்றமான ஒன்றை ஏற்படுத்துகிறான்.

குழந்தை யூசுஃபைச் சில நாணயங்கள் கொடுத்து வாங்கியவர்கள், எகிப்தில் இருந்த ஹைக்சோஸின் தலைநகரான பை-ராம்செஸுக்குச் சென்றடைந்து அங்கு அவரை விற்பனைக்கு விட்டனர். அடிமை வியாபாரிகள் பலர் அவரை வாங்குவதற்குப் போட்டிபோட்ட

போதிலும், எகிப்தின் 'அஸீஸ்' என்ற பட்டம் கொண்ட முதலமைச்சர் அந்தப் போட்டியின் இடையில் புகுந்து யூசுஃபை வாங்கிக் கொண்டார். யூசுஃப் அழகுமிகுந்த குழந்தையாக இருந்தார். அஸீஸுக்கோ குழந்தைகள் இருக்கவில்லை. எனவே அவர் யூசுஃப்மீது பரிவு கொண்டார். அதுவரை தனக்கு வாய்க்கப்பெறாத தந்தைப் பாசத்தை யூசுஃபின் மீது வைத்தார். யூசுஃப் அவ்வேளை சிறுவராகத்தான் இருந்தார் என்பதை இதுவும் உறுதிப்படுத்துகிறது.

'இந்தச் சிறுவனுக்குக் கௌரவமான தங்குமிடத்தை அமைத்துக் கொடு; இவன் நமக்குப் பயன்படக்கூடும். அல்லது இவனை நாம் மகனாக எடுத்துக்கொள்ளலாம்' என அவர் மனைவியிடம் கூறுகிறார். தன்னுடைய நபிக்குப் பொருத்தமான சூழலைத் தெரிவுசெய்வதில் அல்லாஹ்வின் ஞானம் எப்படி வெளிப்பட்டது என்பதை இங்கு பார்க்கிறோம். இப்படித்தான் யூசுஃப் நபி தனது குழந்தைப் பருவம் முழுவதும் நபி மூசாவைப் போல் கண்ணியமாகவும் கௌரவமாகவும் வாழ்கிறார்.

குழந்தை மூசாவுக்கும் அல்லாஹ் குழந்தைப்பாக்கியம் அற்றிருந்த அரசி ஒருவரை வளர்ப்புத்தாயாகப் பெற்றுக்கொடுத்தான். ஒரு தூதருக்குரிய மனநிலையைப் பெறத்தக்க வகையில் அவர்மீது அரசி அன்பையும் பாசத்தையும் பொழிந்தார். மட்டுமன்றி, தூதர்கள் இருவரும் எகிப்து ஆட்சியாளர்களின் மாளிகைகளில்தான் வளர்ந்தார்கள். இது இருவருக்கும் சமூகப் பாதுகாப்புணர்வை வழங்கியிருந்தது.

### யூசுஃப் ﷺ இளவயதிலேயே பெற்றாரிடமிருந்து பிரிக்கப்பட்டது ஏன்?

யூசுஃப் ﷺ ஐந்து அல்லது ஆறு வயதுச் சிறுவனாக இருந்தபோது தந்தையின் கதகதப்பான பாசத்திலிருந்தும், அவரை வளர்த்த சிற்றன்னையின் அன்பிலிருந்தும் பிடுங்கியெடுக்கப்பட்டதானது அதில் மறைந்திருந்த தெய்வீக ஞானம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் கடப்பாட்டை நமக்கு ஏற்படுத்துகிறது. நபி யூசுஃபை அல்லாஹ் எகிப்துவாசிகளுக்கே தூதராகத் தேர்ந்தெடுத்திருந்தான். இறைத் தூதைச் சமூகத்துக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய எந்தத் தூதரும் குறித்த சமூகத்தின் மொழியைத் தெரிந்துகொள்ளாமல் அதனை மேற்கொள்ள முடியாது.

> எல்லாத் தூதர்களையும் அவரவரின் சமுதாய மொழியிலேயே தூதுச்செய்தியை அறிவிப்பவர்களாக நாம் அனுப்பி வைத்தோம். குறித்த தூதை அவர்கள் தெளிவாக எடுத்துரைக்க

வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்தோம். அதன் பிறகே அல்லாஹ் தான் நாடியோரை வழிதவறச் செய்கிறான்; தான் நாடியோருக்கு நேர்வழியும் காட்டுகிறான். அவன் மிகைத்தவனும் ஞானம்மிக்கவனும் ஆவான். (14:4)

ஆரம்பத்தில் யூசுஃப் ﷺ கன்ஆனியப் பிரதேசத்தில் பரவலாகப் பேசப்பட்ட ஹீப்று மொழியைப் பேசுபவராகவே இருந்தார். ஆனால் எகிப்தின் அஸீஸ் அவரைத் தனது அரண்மனைக்கு எடுத்துச் சென்றபோது பண்டைய எகிப்து மொழியைக் கற்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. யூசுஃப் ﷺ அல்லாஹ்வின்பால் மக்களை அழைப்பதற்கு அந்த மொழியைத்தான் கற்க வேண்டுமென அவன் நாடியிருந்தான்.

புதிய மொழியைக் கற்பதிலும் அதனைத் திறம்பட உச்சரிப்பதிலும் குழந்தைகள் அபார ஆற்றல் கொண்டவர்கள் என்பது யாவரும் அறிந்ததுதான். குழந்தையொன்று பருவ வயதை அல்லது பன்னிரண்டு வயதை அடைந்துவிட்டால் வேற்றுமொழிச் சொற்களை உச்சரிப்பது அதற்குச் சிரமமாகிவிடும் அல்லது சாத்தியமற்றுப்போய்விடும் எனச் சில விரிவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவேதான் யூசுஃப் சிறு வயதிலேயே எகிப்து மொழியைக் கற்று அதை அழகிய முறையில் உச்சரிக்க வேண்டுமென இறைவன் நாடியிருந்தான். ஒரே நாட்டில்கூடத் தலைநகரில் வாழ்பவர்களுக்கென்று தனியான பேச்சுவழக்கு இருக்கும். அவ்வாறே கிராமப்புறங்களுக்கென்று வேறுபட்ட வழக்குகள் காணப்படும். அந்த வகையில்தான், யூசுஃப் தூய எகிப்து மொழியைச் சரளமாகக் கற்றிருக்க வேண்டும் என்பது ஞானம்மிக்க இறைவனின் நாட்டமாக அமைந்திருந்தது.

## தாய்ப்பாலிலிருந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ...

சிறுவர் யூசுஃப் இதழ்விரிக்கும் மொட்டுபோல் வளர்கிறார். அவரது அழகு மேன்மேலும் மெருகேறிச்செல்கிறது. அவருக்குச் செவிலித்தாயாக இருந்தவளே இப்போது அவரது பேரழகில் மயங்குகிறாள். அவரைப் பலாத்காரமாக அடைய முயல்கிறாள். ஆனாலும் அவர் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபிமார்களுக்கே உரித்தான உறுதியுடன் தன்னைத் தற்காத்துக்கொள்கிறார். தனக்கு உபகாரம் செய்தவரின் கௌரவத்தை நம்பிக்கையுடன் பாதுகாக்கும் ஆண்மகனாக நடந்துகொள்கிறார். அனைத்துக்கும் மேலாக, தன்னைக் காப்பாற்றி அரச வாழ்வளித்த, சக்தியும் சங்கையும் மிகுந்த அல்லாஹ்வுடன் கண்ணியமாக நடந்துகொள்கிறார்.

திருக்குர்ஆன் நமக்கு விரகதாபத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் பெண் ஒருத்தியின் பிம்பத்தை வரைந்துகாட்டுகிறது. அந்த உணர்ச்சியின் ஆக்கிரமிப்பில் அவள் தனது பெருமையையும் டாம்பீகத்தையும்கூட இழந்துநிற்கிறாள். பிள்ளையாகத் தத்தெடுக்க யூசுஃபை அஸீஸ் அழைத்துவந்திருந்தபோது அவளிடம் ஏற்பட்டிருந்த தாய்மை உணர்ச்சிகூட இப்போது இல்லை. அவளது ஆசைக்கு இணங்க மறுத்த அவர் கதவை நோக்கி விரைந்தபோது அவள் பைத்தியம் பிடித்தவள்போல் பின்னால் ஓடி சட்டையைப் பிடித்து இழுக்கிறாள். அது கிழிந்துவிடுகிறது. அஸீஸின் மனைவி யூசுஃபைப் பலாத்காரம் செய்ய முயன்ற நிகழ்வின் உச்சகட்டமாகத் திருக்குர்ஆன் இதனை வர்ணித்துவிட்டு, அந்த இடம்வரை கொண்டுவந்து சேர்த்த விவரங்களை நம் கற்பனைக்கு விட்டுவிடுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னரும்கூட யூசுஃபை வீழ்த்துவதற்கு அவள் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்றே என் அவதானம் சொல்கிறது. தன்னை அழகுபடுத்திக்கொண்டு பெண்களுக்கே உரித்தான பல வித்தைகளைப் பயன்படுத்தி அவரை வீழ்த்த அவள் முயன்றிருக்கலாம். அதிலும் அவள் விரகதாபம் கொண்டவள்; பகட்டான வாழ்வில் திளைத்திருந்தவள். இந்த முயற்சிகள் அவரைப் பலவீனப்படுத்திப் பணியவைக்கும் என அவள் எண்ணியிருக்கலாம். ஆனாலும் அவை வெற்றியளிக்காததைக் கண்ட பிறகுதான் இந்த எதிர்பாராத தாக்குதலை மேற்கொள்ளத் தீர்மானித்தாள் போலும்.

மொத்தத்தில் இந்த அனைத்துமே அல்லாஹ்வின் நபியாகிய யூசுஃபுக்கு வைக்கப்பட்ட தனித்துவமான சோதனை. ஆயினும் அவருக்கு அல்லாஹ் உயர்ந்த நற்பண்புகளை அளித்திருந்தான். தனக்கு அநியாயம் செய்தவர்களைக்கூடத் துன்புறுத்தாத அல்லது வார்த்தையாலோ கையாலோ பழிவாங்காத மென்மை அவரிடம் இருந்தது. அந்த வகையில், எந்த ஒரு நபியும் உட்படுத்தப்பட்ட சோதனைகளுள் மிகக் கடினமான சோதனையாக அது அமைந் திருந்தது.

**'காந்த' ரகசியம்**

யூசுஃபிடம் அழகும் இளமையும் மட்டுமன்றி, காண்பவரைக் கவர்ந்திழுக்கும் காந்தக் கவர்ச்சி போன்ற ஒரு தெய்வீக ரகசியமும் இணைந்தே இருந்திருக்க வேண்டும். அஸீஸின் மனைவி அவளுடைய வளர்ப்புமகனுடன் நடந்துகொண்ட முறையை விமர்சித்து எகிப்தின் மேட்டுக்குடிப் பெண்கள் கதை பரப்பியபோது அவர்களுக்கு எதிராக அவள் ஓர் திட்டத்தைத்

தீட்டினாள். யூசுஃபின் அழகையும், காண்பவரைக் கவர்ந்திழுக்கும் வசீகரத்தையும் அதில் பயன்படுத்திக்கொண்டாள். ஏனெனில் யூசுஃபினுள் அல்லாஹ் ஏற்படுத்திவைத்திருந்த விவரிக்க முடியாத அந்த ரகசிய ஈர்ப்புச் சக்தியைத் தனது தனிப்பட்ட அனுபவத்தால் அவள் உணர்ந்திருந்தாள். தனது வீட்டில் வளர்ந்த யூசுஃபைச் சிறு பிராயம்முதலே அவள் பார்த்திருக்கிறாள். அவரது வசீகரத்தைத் தினமும் கண்டு பழக்கப்பட்டிருக்கிறாள். வளர்ந்து இளைஞனான பிறகு அவரிடம் சட்டென்று வெளிப்பட்ட அந்த ஈர்ப்புச் சக்தியை எதிர்த்துநிற்க அவளால் முடியவில்லை. எனவேதான் தனது முயற்சியை நியாயப்படுத்தும் வகையிலான ஓர் திட்டத்தை நகரப் பெண்களுக்கு எதிராகத் தீட்டினாள்.

அப்பெண்களுக்கு அவள் அழைப்பனுப்பினாள். அவர்கள் வசதியாகச் சாய்ந்து அமர்ந்துகொள்ளத்தக்கவாறு தலையணைகளையும் ஏற்பாடு செய்தாள். பின்னர் ஒவ்வொருவரும் கனிகளை வெட்டிப் புசிப்பதற்காக ஒவ்வொரு கத்தியைக் கொடுத்தாள். அப்பெண்கள் தளர்வாகவும் வசதியாகவும் அமர்ந்து பழங்களை வெட்டத் தொடங்கியிருந்த சமயத்தில் சற்றும் எதிர்பாராமல் ‘அவர்களுக்கு முன்னால் செல்!’ என யூசுஃபுக்குக் கட்டளையிட்டு அவர்கள்முன் கொண்டுவந்து நிறுத்தினாள். அவரது அற்புதமான அழகும் கவர்ச்சியும் அப்பெண்களை நிலைமறக்கச் செய்தன. அறுதுயில் (Hypnosis) நிலைக்கு உட்பட்ட ஒருவரைப் போன்று அவர்கள் மாறிவிட்டனர். வைத்தகண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டு பிரக்ஞையின்றியே பழங்களை வெட்டிக்கொண்டிருந்தனர். அந்நிலையில் பழங்கள் நழுவி கத்திகள் கைகளை வெட்டிவிட்டன. ஆனால் அதைக்கூட அவர்கள் உணர்வதாக இல்லை.

ஒரு மனிதனைச் சூடான மேற்பரப்பில் அறுதுயிலுக்கு உட்படுத்தி அதனைக் குளிராக உணரும்படி செய்யவும், அதன் வேதனையை உணராதபடி வைத்திருக்கவும், அதேபோன்று குளிரான ஒரு பொருளை அவன் சூடானதாக உணரச்செய்யவும் அறுதுயில் கலையில் தேர்ந்த உளவியல் வல்லுனர்களால் முடியும். அது அவர்களுக்கு இலகுவான ஒன்று. மயக்க மருந்துகள் கண்டுபிடிக்கப்பட முன்னர் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தங்களது அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு இம்முறையையே பயன்படுத்திவந்தனர்.

இந்த ஈர்ப்புச் சக்தி யூசுஃபின் அழகினால் மாத்திரம் வாய்த்ததாக இருக்கவில்லை என்றே நமக்குத் தோன்றுகிறது. அவரது சோதனையைக் கடினமாக்குவதற்காக அல்லாஹ் இந்த ரகசியத்தை

அவருக்குக் கொடுத்திருக்கலாம். ஏனெனில், நிராகரிப்பாளர்களுடன் போரிடும் சோதனை நபி யூசுஃபுக்கு ஏற்படவில்லை. தூதர்கள் பலரைப் போல் நோய்களாலும் துன்பங்களாலும்கூட அவர் சோதிக்கப்படவில்லை. தனது அழகில் மயங்கிய பெண்களின் சூழ்ச்சியை எதிர்த்துநிற்பதும், தனக்கு அநியாயம் செய்தவர்களை மன்னிப்பதுமே அவர் எதிர்கொண்ட சோதனைகள். இந்நிலையில் தான் ஒரு நபியாகவும் தூதராகவும் அவரது அந்தஸ்தை உயர்த்துவதற்காக அல்லாஹ் இந்தத் தேவ ரகசியத்தை அவருக்கு அளித்திருந்தான் போலும். இந்த ரகசியத்தின் ஒரு பகுதியை அப்பெண்களும் உணர்ந்துகொண்டதால்தான் இப்படிக் கூறியிருக்க வேண்டும்:

> இவர் மனிதரே அல்லர்; நிச்சயமாக இவர் சங்கைமிக்க வானவர்தான். (12:31)

அப்பெண்கள் தங்களது கைகளையே வெட்டிக்கொண்டதைப் பார்த்தபோது அஸீஸின் மனைவி தான் இழந்த கௌரவத்தை மீளப் பெற்றுவிட்டதாக உணர்கிறாள். தானே அவரைப் பலாத்காரப் படுத்தியதாகவும், மானக்கேட்டில் ஈடுபட அவரை நிர்ப்பந்தித்தே தீருவேன் எனவும் பெருமையுடன் பகிரங்கமாகச் சொல்கிறாள். அவர் இணங்க மறுத்தால் சிறையாலும் இழிவாலும் அவரைத் தண்டிக்கப்போவதாகவும் சூளுரைக்கிறாள்:

> நீங்கள் யார்குறித்து என்னை நிந்தித்தீர்களோ அவரே இவர். எனக்கு இசையும்படி இவரை நான் வற்புறுத்தினேன். ஆனால் தற்காத்துத் தப்பித்துக்கொண்டார். இனியும் இவர் நான் சொல்வதைச் செய்யாவிட்டால் சிறையில் அடைக்கப்படுவார். (12:32)

பின்னர் அப்பெண்கள் அனைவரும் சேர்ந்து பல்வேறு வழிகளிலும் அவரை மயக்க முயன்றனர். ஆனாலும் அவர் திடமாக நின்றார். இது எவ்வளவு கடுமையான சோதனை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறெந்த நிழலும் இல்லாத மறுமைநாளில் அவன் ஏழு கூட்டத்தினருக்கு மாத்திரம் நிழல் கொடுப்பான் என நபிகளார் ﷺ நன்மாராயம் கூறியதாக அபூஹுறைறா ؓ அறிவிக்கிறார். “அந்தஸ்தும் அழகும் கொண்ட பெண் ஒருத்தி தகாத செயலுக்காக அழைத்தும், ‘நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்’ எனக் கூறி விலகிக்கொண்ட ஒரு மனிதனும் அவர்களுள் ஒருவர் ஆவார்”[84] என அந்த நபிமொழி உரைக்கிறது.

84. ஸஹீஹுல் புஃகாரீ.

நிலை இவ்வாறிருக்க, ஒரு பெண் அல்ல; அழகும் கவர்ச்சியும் கொண்ட பல பெண்களால் அழைக்கப்படும் ஒரு வாலிபனின் நிலை எப்படி இருக்கும்?!

அஸீஸின் மனைவி அழகியாக இருந்தாள். யூசுஃபைப் பொறுத்த வரை அவள் அந்தஸ்துடைய பெண் மட்டுமல்ல; அவரது வாழ்வைக் கட்டுப்படுத்துகின்ற எஜமானியும்கூட. தன்னுடைய கணவனைக்கூட மேலாண்மை செய்பவளாக அவள் இருந்தாள். அவளது எந்தக் கட்டளையையும் அவர் மீறத் துணிவதில்லை. அத்தகைய பெண்தான் யூசுஃபைச் சிறையில் அடைத்துச் சிறுமைப்படுத்தப்போவதாக அச்சுறுத்துகிறாள்.

கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபிமார்களுள் ஒருவராக யூசுஃப் ﷺ இருந்தார் என்பதில் ஐயம் இல்லை. இத்தகைய மயக்கும் ஜாலங்களை எதிர்த்துநிற்க ஒரு நபியால் மட்டுமே முடியும். ஆயினும் இந்தச் சோதனையும், அஸீஸின் மனைவியால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும் நீண்ட காலம் தொடர்ந்தபோதும் தனது இரட்சகனிடம் அவர் இவ்வாறு பிரார்த்தித்தார்:

> என் இரட்சகா, அவர்கள் என்னை அழைக்கும் தீய செயலை விடச் சிறைவாழ்வே எனக்கு விருப்பமானது. அவர்களின் சூழ்ச்சியிலிருந்து என்னை நீ காப்பாற்றாவிட்டால் அவர்களின் பக்கம் சாய்ந்து அறிவீனனாகிவிடுவேன். (12:33)

எனவேதான் அல்லாஹ் தனது தீர்க்கமான திட்டமிடலின் மூலமாக அவரது பிரார்த்தனையை நிறைவேற்றும் வழியை உருவாக்கினான். அஸீஸின் மனைவி, செல்வச் செழிப்பில் வாழ்ந்த மற்ற பெண்கள் ஆகியோரின் சபலத்துக்குப் பணியாமல் யூசுஃப் ﷺ திடமாக நின்றது பற்றி நகரப் பெண்கள் தங்களது சமூகங்களில் பேசிக்கொண்டுதான் இருந்திருப்பார்கள். அந்தச் செய்தி எல்லா இடங்களிலும் பரவி, அஸீஸும் அவருடைய குடும்பத்தினரும் பழிச்சொல்லுக்கும் அவமானத்துக்கும் பயந்திருப்பார்கள். அந்நிலையிலேயே, அஸீஸின் மனைவியின் செயலை மக்கள் மறந்து அவள் பற்றிய கிசுகிசுப்பு அடங்க வேண்டுமாயின் யூசுஃப் சிறையில் அடைக்கப்படுவது சிறந்தது என்ற கருத்து வலுப்பெற்றது. இது யூசுஃபைப் பாதுகாப்பதற்காக அல்லாஹ் வகுத்த திட்டமாக இருந்தது. அவரது பிரார்த்தனையை அவன் அங்கீகரித்து, சிறை மூலமாக அவர்களது சூழ்ச்சியிலிருந்து அவரைக் காப்பாற்றினான்.

## சிறையில் நபி யூசுஃப்

கிணற்றின் ஆழத்தில் சிறுவரான யூசுஃப் இருந்தபோது பெற்ற வஹீயை அல்லது கனவைத் தவிர்த்து, அவரது நபித்துவம் பற்றியும், கனவுகளுக்கு விளக்கம் கூறும் அவரது அற்புதமான தனித்தன்மை குறித்தும் திருக்குர்ஆன் அதுவரை எதுவும் குறிப்பிடவில்லை. அவர் சிறை செல்லும்வரை அதுபற்றித் திருக்குர்ஆன் எதுவுமே கூறவில்லை. ஏனெனில், சிறை வாழ்வுதான் ஒருவரது உணர்வுகளைக் கூர்மைப் படுத்துகிறது; உணர்ச்சிகளை மென்மைப்படுத்துகிறது. தனது உணர்ச்சிவயப்பட்ட சிந்தனைகள் பற்றியும், இறந்தகால-எதிர்கால நிகழ்வுகள் குறித்து தனது கனவுகள் உணர்த்தும் உண்மைகள் பற்றியும் ஆழ்ந்து சிந்திப்பதற்கு அவருக்கு நீண்ட அவகாசம் அங்கு கிடைக்கிறது.

இந்த வகையில்தான், யூசுஃபுடன் சிறைவாசம் அனுபவித்த இரு மனிதர்கள் அவரை அருள்பொருந்திய நண்பராகவும், தங்களது அதிகமான கனவுகளுக்கு விளக்கம் சொல்பவராகவும் கண்டார்கள். அக்கனவுகளின் விரிவான தகவல்களையோ, அவற்றுக்கு யூசுஃப் ﵇ வழங்கிய விளக்கங்கள் பற்றியோ திருக்குர்ஆன் நமக்கு எதுவும் கூறவில்லை. எனினும், அவை எதார்த்த வாழ்வின் நிகழ்வுகள்போலவே இடம்பெற்றுக்கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டதைத் திருக்குர்ஆன் குறித்துக்காட்டுகிறது:

> உங்கள் இருவருக்கும் வழங்கப்படும் உணவு உங்களை வந்துசேரும் முன்பாகவே இக்கனவுகளின் விளக்கத்தை உங்களுக்குக் கூறிவிடுவேன். இது எனது இறைவன் எனக்குக் கற்றுத்தந்ததாகும். அல்லாஹ்வை விசுவாசிக்காமலும் மறுமையை ஏற்காமலும் வாழ்கின்ற சமூகத்தாரின் மதத்தை விட்டு நிச்சயமாக நான் விலகிவிட்டேன். (12:37)

அவர்கள் இருவரும் தாம் கண்ட கனவுகள் பற்றிய விளக்கத்தைக் கேட்டு யூசுஃபிடம் வந்தபோது அவர்கள்மீது அவர் தயைகூர்ந்தார். அக்கனவுகள் அவ்விருவரின் எதிர்கால வாழ்வு குறித்த பெரும் உண்மைகளைச் சுமந்துநின்றன. ஏக இறைவனை நோக்கி அவர்களை அழைப்பதற்கும், அந்த இறைவனால் எந்த அதிகாரமும் வழங்கப்படாத தெய்வங்களை விட்டுவிடச் சொல்வதற்குமான சந்தர்ப்பமாக யூசுஃப் ﵇ அதனைப் பயன்படுத்திக்கொண்டார். 'தோழர்களே!' என அவர்களை விளிக்கிறார். அரண்மனையின் பணியாளர்களாக இருந்த அவ்விருவரையும் அஸீஸின் மாளிகையில் வளர்ந்த யூசுஃப் ﵇ தனக்கே உரிய மென்மையுடன் 'என் சிறைத்தோழர்களே ...' என அழைக்கிறார்:

என் சிறைத்தோழர்களே, வெவ்வேறு தெய்வங்கள் இருப்பது நல்லதா? அல்லது யாவரையும் ஆளுகின்ற அல்லாஹ் ஒருவன் மட்டும் இருப்பதே நல்லதா?

இன்று மார்க்கப்பணி புரியும் பலருக்கு இந்த அணுகுமுறையில் ஆழமான படிப்பினை உள்ளது.

அந்த இருவருள் ஒருவர்தான் அரசருக்கு மது தயாரிப்பதற்காகத் திராட்சை ரசம் பிழிவதாகக் கனவு காண்கிறார். அடுத்தவர் தன் தலையில் ரொட்டிகளைச் சுமந்துசெல்வதாகவும், பறவைகள் அவற்றிலிருந்து கொத்தித் தின்பதாகவும் கனவு காண்கிறார். இக்கனவுகளுக்கான விளக்கத்தை யூசுஃப் ﷺ வழங்கியதைத் திருமறை வசனங்கள் குறிப்பிடுகின்றன.

மது வடிப்பதாகக் கனவு கண்டவர் அரசருக்கு மது ஊற்றிக் கொடுப்பவராக இருப்பார் என அவர் விளக்கமளித்தார்.

தலையில் ரொட்டி சுமப்பதாகவும், பறவைகள் அதனைக் கொத்தித் தின்பதாகவும் கனவு கண்டவர் கழுவேற்றப்படுவார் எனவும், பறவைகள் அவரது தலையைக் கொத்தித் தின்னும் எனவும் விளக்கமளித்தார்.

சொன்னதுபோலவே இரு கனவுகளும் பலித்தன. முதலாமவர் விடுதலை பெற்று அரசருக்கு மது வழங்குபவராக மாறினார். அடுத்தவர் கழுவேற்றப்பட்டுக் கொல்லப்பட்டார்.

## உண்மைக் கனவுகள்

இங்கு நாம் முக்கியமாகப் புரிந்துகொள்ள வேண்டிய விசயம் யாதெனில், ஒருவர் தூக்கத்தில் காணும் கனவுகள் அவர் கண்டது போலவே யதார்த்தத்தில் நிகழ முடியும் என்பதுதான். அவ்வாறான கனவுகளுக்குச் சிலபோது ஓர் எளிமையான வியாக்கியானம் தேவைப்படும்; சிலபோது அதுகூடத் தேவைப்படாது. இவ் வகையான இரு கனவுகளைத்தான் திருக்குர்ஆனும் இங்கு குறிப்பிட்டுள்ளது. ஒரு கனவில், குறித்த அந்தக் கைதி தான் மது பிழிவதாகக் காண்கிறார். பின்னர் அந்தக் கனவு பலிக்கிறது. அவர் சிறையிலிருந்து விடுதலையாகி மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார். அது அரசருக்கு மது வழங்கும் பணி.

ஒரு முஸ்லிமின் ஆன்மீகப் பண்பு அதிகரிக்கும்போது அவனுக்கு உண்மைக் கனவுகள் அதிகமாகத் தோன்றும் என நமது இஸ்லாமிய வரலாற்றில் அறிந்திருக்கிறோம். நமது ஆத்ம ஞானிகளதும்

அறிஞர்களதும் வரலாறு அத்தகைய கனவுகளால் நிறைந்திருக்கிறது. சிலர் கண்ட உண்மைக் கனவுகளால் அவர்களது வாழ்க்கையே மாறிப்போயும் உள்ளது. முன்னர் நாம் குறிப்பிட்டதுபோல், இத்தகைய கனவுகள் சமயப் பற்றற்றவர்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்கும்கூடத் தோன்ற முடியும். ஆனால் அது அரிது. சிலபோது முஸ்லிம் அல்லாத ஒருவர் காணும் கனவில் முழு மனித இனத்திற்கும் பெரும் நன்மை தரும் ஒரு விசயம்கூட மறைந்திருக்க முடியும்.

முஹம்மது ﷺ அவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிபு ஒரே கனவைப் பல தடவை கண்டதும் இவ்வாறானதுதான். அந்தக் கனவில் அவரிடம் பாலைவனத்தின் ஓரிடம் பல தடவை காண்பிக்கப்பட்டு 'ஸம்ஸம்' கிணற்றை அவ்விடத்தில் தோண்டுமாறு கட்டளையிடப்பட்டது. அதன்படி அவ்விடம் தோண்டப்பட்டபோது நீர் பீறிட்டுப் பாய்ந்தது. இன்றுவரை ஊற்றெடுத்துக்கொண்டிருக்கும் அக்கிணற்றிலிருந்து பல மில்லியன் ஹாஜிகளும் உம்றா செய்பவர்களும் மக்காவாசிகளும் பிறரும் நீர் அருந்திக்கொண்டிருக்கிறார்கள். மட்டுமன்றி, அதன் நீர் கொள்கலன் களில் அடைக்கப்பட்டு உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பப் படுகிறது. அந்த வகையில், 'ஸம்ஸம்' ஊற்று மக்கா பள்ளிவாசலின் அற்புதங்களுள் ஒன்று எனலாம்.

நபிமார்களைப் பொறுத்தவரை அவர்கள் காணும் எல்லாக் கனவுகளும் உண்மையானவையே. நபித்துவம் பற்றிய நற்செய்தியாக அவை முதலில் அவர்களுக்குத் தோன்றுகின்றன. நபித்துவம் கிடைத்த பிறகு அவர்களுக்குத் தோன்றும் கனவுகள்கூட வஹீயின் வழிமுறைகளுள் ஒன்றாகவே அமைகின்றன. அன்னை ஆயிஷா ﵂ கூறியதாவது:

> இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு ஆரம்பத்தில் உண்மைக் கனவுகளே தோன்றிக்கொண்டிருந்தன. எந்தக் கனவைக் கண்டாலும் அவர்களுக்கு அது அதிகாலை வெளிச்சம்போல் தோன்றும்.

## குறியீடாக வரும் கனவுகள்: கனவுகளா, செய்திகளா?

நபி யூசுஃபுக்கு அல்லாஹ் அருளியிருந்த ஆற்றலானது செய்திகளுக்கு வியாக்கியானம் (தஃவீலுல் அஹாதீஸ்) வழங்குவதே எனத் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. ஆனால், அத்தியாயம் யூசுஃப் கனவுகளுக்கான விளக்கம் பற்றியே குறிப்பாகப் பேசுகிறது. இந்த அற்புதத்தைத்

திருக்குர்ஆன் கனவுகளுக்கான வியாக்கியானம் (தஃவீலுல் றுஃயா) எனக் குறிப்பிடாமல் செய்திகளுக்கான வியாக்கியானம் எனக் குறிப்பிட்டது ஏன்?

தலையில் ரொட்டிகளைச் சுமந்துசெல்வதாகவும், பறவைகள் அவற்றைக் கொத்தித் தின்பதாகவும் தோன்றியதுபோன்ற குறியீட்டுக் கனவுகளைப் புரிந்துகொள்வதற்கு இறைவனால் தீட்சண்ய அறிவு வழங்கப்பட்ட ஒருவரது உதவி அவசியம். அத்தகைய தீட்சண்ய அறிவு மூலமாகவே குறியீட்டுக் கனவுகளுக்கும் மனத்தின் எண்ணங்களுக்கும் ஷைத்தானின் ஊசலாட்டங்களுக்கும் தெய்வீக சோபனங்களுக்கும் மத்தியில் வேறுபிரித்து அறிந்துகொள்ள முடியும்.

ஏனெனில், கனவுகளின் இம்மூன்று உள்ளடக்கங்களும் பரஸ்பரம் ஒன்றோடொன்று கலந்திருக்க முடியும். மட்டுமன்றி, ஒருவர் தனக்குத் தோன்றிய ஒரு கனவைத் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் பதிவுசெய்யாவிட்டால், குறித்த கனவுடன் தொடர்புபட்ட வகையில் அவரது நினைவில் தங்கியிருக்கும் நிகழ்வுகள் நாளடைவில் — சிறியளவிலோ பெரியளவிலோ — கனவுடன் கலந்துவிடும் என நவீனப் பரிசோதனை ஆய்வுகள் நடைமுறைச் சான்றுகள் மூலமாக உறுதிப்படுத்தியுள்ளன. அதேபோல் சிலருக்கு ஞாபகசக்தி பலவீனமாக இருக்கும்; அல்லது குறித்த கனவு தோன்றுவதற்கு முந்திய நாளின் நிகழ்வுகளும் அதனுடன் கலந்துவிடும்.

மொத்தத்தில் கனவுகள் மனத்தின் எண்ணங்களிலிருந்தும் அக்கனவு களுடன் தொடர்புபட்ட நினைவுகளிலிருந்தும் முற்றாக விலகியிருக்க முடியாது. அவ்வகையில், கனவுகள் என்பவை தூக்கத்தில் நிகழும் உரையாடல்களும் செய்திகளும் ஆகும். அந்த உரையாடல்கள் அன்றாட வாழ்வியல் அனுபவ உரையாடல்களுடனும் கலந் திருக்கும். எனவே அவை கனவுகளின் அறுதியான உண்மையைவிட யதார்த்தமான உரையாடலுக்கு நெருக்கமானவையாய் இருக்கும்.

கனவுகளில் நமக்குத் தோன்றும் சில விசயங்கள்மீது நம்மைச் சுற்றி நீந்திக்கொண்டிருக்கும் ஆத்மாக்களின் தலையீடு ஏற்படுவது கனவுகளுக்கு விளக்கமளிக்கும் பணியை மேலும் கடினமாக்குகிறது. நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது அல்லாஹ் நமது ஆத்மாக்களை நம்மிலிருந்து வேறாக்கிவிடுகிறான். அவ்வகையில், தூக்கம் என்பது ஒருவகையில் மரணம்போன்றது எனத் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. நிரந்தர மரணத்துடன் ஒப்பிட்டு இது ‘சிறு மரணம்’ என அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது தற்காலிக மரணமாகும். இதன்போதுதான் நமக்குக் கனவுகள் தோன்றுகின்றன.

> மனிதர்கள் இறக்கும்போதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும்போதும் அல்லாஹ்வே அவர்களது உயிர்களைக் கைப்பற்றுகிறான். பின்னர் எவர்மீது அவன் மரணத்தை விதித்திருந்தானோ அவர்களது உயிரைத் தன்னிடமே பிடித்துவைத்துக்கொள்கிறான். ஏனைய உயிர்களைக் குறிப் பிட்ட காலம்வரை வாழவிடுகிறான். சிந்திக்கக்கூடிய மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் உள்ளன. (39:42)

தூக்கத்தில் இருப்பவரது உயிர் நுழைகின்ற ஆத்மாக்களின் உலகம் நெரிசல்மிக்கது. அங்கு பல்வேறு ஆத்மீகப் படைப்புகள் கொந்தளித்துக்கொண்டிருக்கும். வானவர்கள், நபிமார்களது ஆத்மாக்கள், நல்லவர்களிலும் கெட்டவர்களிலும் ஷைத்தான்களிலும் நமக்குத் தெரியாத பிற படைப்புகளிலும் மரணித்தவர்களது ஆத்மாக்கள் என ஏராளமான ஆத்மாக்கள் அங்கிருக்கும். அந்த ஆத்மாக்களைத் தூங்குவோரது ஆத்மாக்கள் சந்திப்பதாக சுனனுன் நசாஈ கிரந்தத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் அறிவிப்பு குறிப்பிடுகிறது:

உமாறா இப்னு ஃகுஸாமா இப்னு ஸாபித் அறிவிக்கிறார்:

> ‘நான் நபி ﷺ அவர்களது நெற்றியின் மீது சிரம்பணிவதுபோல் கனவு கண்டேன்’ என என்னுடைய தந்தை கூறினார். பின்னர் அதுபற்றி அவர் நபிகளாரிடம் கூறியபோது, ‘நிச்சயமாக ஆத்மாவும் ஆத்மாவும் சந்தித்துக்கொள்கின்றன’ என அன்னார் கூறி, பின்புறமாகச் சாய்ந்து தமது நெற்றியை அவருக்குக் காட்டினார்கள். அவர் தனது நெற்றியை அன்னாரது நெற்றியின் மீது வைத்தார்.[85]

தூங்குபவருக்கும் ஆன்மாக்களுக்கும் புலனுக்குட்படாத வேறு படைப்புகளுக்கும் மத்தியிலான இந்த ஆத்மீக இடைவினைகள் வழியாகவே கனவுகள் உருவாவதாக இப்னுல் கையிம் அவரது பெறுமதி வாய்ந்த ‘அர்றூஹ்’ என்னும் நூலில் வலியுறுத்துகிறார். தூக்கத்தில் இருப்பவர் கண்விழித்ததும் இமைப்பொழுதைவிடவும் குறுகிய அவகாசத்தில் உயிர் அவரிடம் வந்துசேர்ந்துவிடுகிறது. தூங்கிய நிலையில் அவர் இறந்துவிட்டால் அவரது ஆத்மா ‘பர்ஸஃக்’ உலகுக்குச் சென்றுவிடும்.

வியாக்கியானம் வழங்கும் விசயத்தில் நபி யூசுஃபுக்குப் பெரும் ஆத்மீகக் கொடை வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தெய்வீகக்

---

85. அல்பைஹகீ, *‘அஸ்ஸுனனுல் குப்றா’*.

கொடையின் மூலமாக அவரால் குறியீட்டையும், அதனோடு இணைந்த நினைவுகளையும் செய்திகளையும், ஆன்மாக்களின் உலகு அதில் ஏற்படுத்திய மாற்றங்களையும், கனவைக் கண்டவர் பிறகு அதனை விவரிக்கும்போது ஏற்படும் உளவியல் தாக்கத்தையும், வெட்கம் அல்லது பயத்தின் காரணமாகச் சொல்லாமல் மறைத்துக் கொண்டதால் ஏற்பட்ட தாக்கத்தையும் பிரித்தறிந்துகொள்ள முடிந்தது. ஏனெனில், கனவைக் கண்டவர் அதனை விவரிக்கும் போது ஏற்படும் உளவியல்-ஆத்மீக நிலைக்கும், கனவைக் கேட்டு விளக்கமளிப்பவருக்கு ஏற்படும் உணர்வுக்கும் கனவுவிளக்கச் செயல்முறையில், அதன் சங்கேதங்களை அவிழ்ப்பதில் முக்கியப் பங்கு உள்ளது.

பொதுவாக ஒருவர் கனவு காணும்போது அதனுடன் கடுமையான ஓர் உணர்ச்சிநிலைக்கு உட்படுகிறார். பயத்தை அல்லது மகிழ்ச்சியை ஏற்படுத்திய அந்த உணர்ச்சிவயப்பாடு அவர் தூக்கத்திலிருந்து விழித்ததும் நீங்கிவிடுகிறது. பின்னர் அவரது கனவு மட்டும் ஒரு கதையாக அல்லது செய்தியாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாகப் பயங்கரக் கனவுகளுக்கு இது மிகப் பொருந்தும். ஏனெனில், அத்தகைய கனவைக் கண்டவர் கண்விழித்தவுடன் தனக்கு ஏற்பட்ட கடுமையான உணர்ச்சிவயப்பாட்டிலிருந்து விடுபடுகிறார். பின்னர் அந்தக் கனவு மட்டும் ஒரு கதையாகவோ செய்தியாகவோ எஞ்சுகிறது.

ஓர் ஆத்மா பிற ஆத்மாக்களோடும் புலனுக்குத் தென்படாத படைப்புகளோடும் இடைவினையாற்றுவதன் மூலமே சங்கேதக் கனவுகள் உருவாகின்றன என நான் நினைக்கிறேன். அத்தகைய நிலையில் அவை கடுமையான போராட்டத்தில் ஈடுபடுகின்றன. குறித்த ஆத்மாவின் விருப்பமின்றியே சில ஆத்மாக்கள் அதன் எல்லைக்குள் நுழைய முயல்கின்றன. இன்னும் சில ஆத்மாக்கள் அதனுடன் இணங்கி தைரியமளிக்கின்றன; பல வாயில்களை அதற்குத் திறந்துகொடுக்கின்றன. இவ்வாறான கடுமையான போராட்டங்களின் விளைவாகவே கனவுகள் உருவாகின்றன. ஆயிஷா ﵂ அறிவித்ததாகப் புஃகாரீ பதிவுசெய்துள்ள பின்வரும் நபிமொழி இக்கருத்தாக்கத்திற்கு வலுசேர்க்கிறது:

> இறைத்தூதர் ﷺ கூறினார்கள்: ‘ஆத்மாக்கள் ஒன்றுதிரட்டப் பட்ட படைகளாகும். அவற்றுள் ஒன்றையொன்று அறிந்தவை இணங்கிச்செல்லும்; ஒன்றோடொன்று முரண்பட்டவை பிணங்கிநிற்கும்.’

இப்போராட்டமானது சிலபோது சாதாரணக் கனவைக்கூட — அது நல்ல பல அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும் — அதன் எளிய நிலையிலிருந்து சிக்கலான சங்கேதங்களாக மாற்றிவிடுகிறது. இதன்போது கெட்ட ஆத்மாக்கள் அல்லது ஷைத்தான்கள் மிகைத்து விடுமானால், குறித்த கனவு சஞ்சலத்தையும் கவலையையும் பயத்தையும் தருவதாக அமைந்துவிடும். மறுபுறத்தில் அக்கனவு அல்லாஹ்விடமிருந்து வரும் செய்தியாகவும், அதனை அவன் பாதுகாக்க விரும்புவதாகவும் அமைந்திருக்குமானால், ஷைத்தானோ வேறெந்தக் கெட்ட ஆத்மாவோ அதனை நெருங்க முடியாது.

உதாரணமாக, தூங்குபவர் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஓர் விசயம் தொடர்பான செய்தியைக் கொண்ட கனவைக் காணும்போது அது அவருக்குத் தெளிவான காணொளிக் காட்சி (Video) போன்று தெரியும். அவர் கனவில் கண்ட நிகழ்வுகள் யதார்த்தத்தில் நிகழ வேண்டுமென அல்லாஹ் நாடியிருந்தால், கனவில் தோன்றியதுபோலவே அது உண்மையாக இடம்பெறும்.

ஓர் ஆத்மாவினால் வேறு ஆத்மாக்களிடமிருந்து தனது கனவைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலை காணப்படுமாயின், அவ்வாத்மாக்கள் அத்துமீறி உள்நுழைந்து அக்கனவின் சில பண்புகளை மாற்றியமைத்துவிடும். இந்நிலையில், குறித்த கனவானது சங்கேதப் பண்பு கொண்டதாய் மாறுவதோடு அதனைச் சரியாக வியாக்கியானப்படுத்தக்கூடிய நபர்களையும் வேண்டிநிற்கும். அவ்வகையில் அல்லாஹ்விடமிருந்து வரும் கனவை நாம் தெளிவான ஒரு காணொளிக்கு ஒப்பிட்டால், திரிபுபடுத்தப்பட்ட குறியீட்டுக் கனவுகளை மெய்த்திரிபிய (Surrealism) வகை சார்ந்த ஓவியத்துக்கு ஒப்பிட முடியும். பிக்காசோபோன்ற பிரபல ஓவியக் கலைஞர்கள் உருவாக்கிய இந்த ஓவிய வகை தனது கலைப் பண்பைக் குறியீடுகளாகவே முன்வைக்கும். பார்ப்பவர்கள்தான் அதன் அர்த்தங்களை முயன்று வெளிக்கொணர வேண்டும்.

ஆக, ஆத்மீகப் பலம் கொண்ட ஒருவரால் மட்டுமே கனவில் வந்த அடிப்படையான செய்திகளையும், பிற ஆத்மாக்களால் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களையும் பிரித்துக்காட்டி வியாக்கியானம் வழங்க முடியும். அத்தியாயம் யூசுஃபின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கனவும் இவ்வகையானதே. அக்கனவு அரசருக்குத் திரும்பத்திரும்பத் தோன்றியது. ஏழு மெலிந்த பசுமாடுகள் ஏழு கொழுத்த பசுமாடுகளைத் தின்பதாகவும், ஏழு பசுங்கதிர்களையும் ஏழு காய்ந்த கதிர்களையும் அவர்

கனவில் கண்டார். அந்த உண்மைக் கனவை யூசுஃப் ﵇ சிறையில் இருந்துகொண்டே விளக்கினார். அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படவிருந்த பெரும் பஞ்சத்திலிருந்து முழு எகிப்து மக்களையும் அவர் காப்பாற்றினார்.

அறிஞர்களாலும் மந்திரவாதிகளாலும் அரசரின் கனவுகளுக்கு விளக்கம் கூற முடியவில்லை. அர்த்தமற்ற, குழப்பமான கனவுகளாகவே அவர்கள் அவற்றைக் கருதினர். ஆயினும் முன்னர் நபி யூசுஃபுடன் சிறையில் இருந்து, அவரது கனவுவிளக்கத்தின்படி அங்கிருந்து வெளியேறி தனது முன்னைய பணிக்குத் திரும்பிய அரசரின் மதுச்சேவகன் கனவுகளுக்கு விளக்கம் கூறுவதில் யூசுஃபுக்கிருந்த ஆற்றலை நினைவுகூர்ந்தான். தங்களது கனவுகளுக்கு அவர் எவ்வாறு சிறையில் வைத்து சரியான விளக்கங்களை வழங்கினார் என்பதை அரசருக்கு அவன் எடுத்துச்சொன்னான். பின்னர், சிறையில் இருந்த யூசுஃபிடம் அரசரின் கனவு பற்றிச் சொல்லப்பட்டது. ஆட்சியாளர்களால் சிறைவாசத்துக்கும் துன்பத்துக்கும் அநீதிக்கும் உட்பட்டிருந்தபோதும், எதிரே வரக்கூடிய பெரும் பஞ்சத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் அரசரின் கனவுக்கு விளக்கம் கூற அவர் சிறிதும் தயங்கவோ தாமதிக்கவோ இல்லை. அவ்விடத்தில் அவரது அன்பும் இரக்க குணமும் அவருக்கு ஏற்பட்டிருந்த கசப்புணர்வை மிகைத்துவிட்டன.

ஏழு பசுமாடுகள் ஏழு வருடங்கள் எனவும், ஏழு பசுங்கதிர்கள் நீர்வளம்மிக்க ஏழு வருடங்கள் எனவும், அவற்றைத் தொடர்ந்து ஏழு வரட்சியான வருடங்கள் வரும் எனவும், காய்ந்த ஏழு கதிர்கள் அவற்றையே குறிக்கின்றன எனவும், அதன் பிறகு மழை கொண்ட வருடம் ஏற்பட்டு மக்களுக்கு நிவாரணம் கிட்டும் எனவும் அவர் விளக்கமளித்தார்.

யூசுஃப் அளித்த விளக்கம் அரசருக்குப் பிடித்துப்போனது. அவரைப் பற்றி அரசரிடம் எடுத்துச்சொன்ன மதுச்சேவகன் அஸீஸின் மனைவியும் அவளோடிருந்த பெண்களும் அவரை வீழ்த்துவதற்கு மேற்கொண்ட தந்திரங்கள் பற்றியும் மன்னரிடம் கூறித்தான் இருக்க வேண்டும். அவரது உறுதி, நற்பண்பு, பற்றின்மை என்பவை பற்றியும், அவரைக் கண்ட பெண்கள் தங்களை அறியாமலே தங்கள் கைகளை வெட்டிக்கொள்ளும் அளவு வசீகரத் தோற்றத்தை இறைவன் அவருக்கு வழங்கியிருந்தது பற்றியும்கூட அவன் அரசருக்குச் சொல்லியிருப்பான். அதனால்தான், தான் நிரபராதி என்பது நிரூபிக்கப்படும்வரை சிறையிலிருந்து வெளியேறப்போவதில்லை

எனக் கூறி யூசுஃப் ﷺ அரசரின் அழைப்பை மறுத்தபோதும் அரசர் கோபம் கொள்ளாதிருந்தார். மட்டுமன்றி, அரசர்களுக்கே உரித்தான கம்பீரத்தோடும், அப்பெண்கள் செய்த காரியம் பற்றிய அறிவோடும் அவர்களைப் பார்த்து இப்படிக் கேட்டார்:

> *நீங்கள் யூசுஃபை உங்கள் ஆசைக்கு இணங்கச்செய்ய முயன்றபோது உங்களுக்கு என்ன நேர்ந்தது?* (12:51)

அந்நிலையில், தாம் செய்த காரியத்தை ஒப்புக்கொள்வதைத் தவிர அஸீஸின் மனைவிக்கும் ஏனைய பெண்களுக்கும் வேறு வழி இருக்கவில்லை. யூசுஃபின் உறுதியையும் அவர் நிரபராதி என்பதையும் அவர்களே உறுதிப்படுத்த வேண்டியதாயிற்று.

> *‘அல்லாஹ் எங்களைக் காப்பாற்றட்டும்! அவரிடம் எந்தக் கேடும் இருந்ததாக நாங்கள் காணவில்லை’ என அவர்கள் கூறினர். ‘இப்போது உண்மை வெளிப்பட்டுவிட்டது. நான்தான் அவரை என் ஆசைக்கு இணங்குமாறு அழைத்தேன். நிச்சயமாக அவர் உண்மையாளர்தான்’ என அஸீஸின் மனைவி கூறினாள்.* (12:51)

நபி யூசுஃப் ﷺ கனவுகளுக்குக் குறியீட்டு அடிப்படையில் — அதாவது பசுவை வருடம் என்பதுபோல் — விளக்கமளித்ததை வைத்து கடந்தகாலத்திலும் தற்காலத்திலும் தொழில்முறையில் கனவுவிளக்கம் கூறுவோர் சில நிரந்தரமான அட்டவணைகளைக்கூட உருவாக்கிக்கொண்டனர். கனவில் தோன்றும் விசயங்கள் குறிக்கும் அர்த்தங்களுக்கான அட்டவணைகளாக அவை அமைந்திருந்தன. ஒருவர் தனது கனவில் காண்பவற்றைக் குறிப்பிட்ட நோய்களுக்கான அறிகுறிகளாகவும், அவற்றுக்கு விளக்கமளிப்பவர் நோய்களின் வகைகள் பற்றி நன்கறிந்த மருத்துவர்போலவும் கொள்ளப்படும் நிலை தோன்றியது.

> *அவ்வகையில், ஒருவர் கனவில் தன்னை வியாபாரியாகவும், தனது கடை இடிந்து வீழ்வதுபோலவும் கண்டால் அவர் தன்னுடைய மனைவியை விவாகரத்து செய்வார் எனக் கனவுவிளக்க நூல்களில் எழுதிவைத்தனர்.*
>
> *நோயாளியைக் கனவில் கண்டவர் விரைவில் இறந்து விடுவார்.*
>
> *கடை அழகாகவும் பொருள்கள் நிறைந்திருப்பதாகவும் கண்டால் அது அவருக்கு சுபசோபனமாக அமையும்.*

அத்தகைய ஒருவர் பிரம்மச்சாரியாக இருந்தால் விரைவில் திருமணம் முடித்து நிறையச் செல்வங்களையும் பெறுவார்.

திருமணம் முடிப்பதாகக் கண்டும் மணவிழாவில் மண மகளைக் காணவில்லை என்றால், அவர் மரணிப்பார் என்பது அர்த்தம்.

கனவில் தேளைக் கண்டால் அவருடைய உறவினர் ஒருவர் அவருக்குத் தீங்கிழைக்கத் திட்டமிடுகிறார் என்று பொருள்.

பற்கள் வீழ்வதாகக் கண்டால் உறவினர் ஒருவர் மரணிப்பார்.

இப்படி ஏராளமான விளக்கங்களை இத்தகைய நூல்களில் நாம் காண முடிகிறது. ஆனால் நமது உள்ளங்களில் தோன்றும் எல்லா விசயங்களுக்கும் உணர்வுகளுக்கும் அவ்வாறான ஆதாரபூர்வமான விளக்கங்களை அல்லாஹ் வழங்கவில்லை. கனவுகளுக்கு விளக்கம் கூறும் ஆற்றல் கொண்ட ஒருவர் ஒரு கனவுக்கு வழங்கும் சரியான விளக்கம் என்பது 'கனவு காண்பவரது ஆளுமை' போன்ற பல்வேறு விசயங்களில் தங்கியிருப்பதாகும். சிலபோது ஒரே விதமான கனவை இருவர் காணும்போது இருவருக்கும் வெவ்வேறு விதமான விளக்கங்களை அவர் வழங்க முடியும்.

'அதான்' சொல்வதுபோல் கனவு கண்ட ஒருவருக்கு இப்னு சீரீன் கூறிய விளக்கத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். 'ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வாய்' என அம்மனிதருக்கு அவர் கூறினார். பின்னர் அதேபோன்று கனவு கண்ட இன்னொரு மனிதருக்கு, 'நீ திருடுவாய். பின்னர் உனது கரம் துண்டிக்கப்படும்' என விளக்கமளித்தார்.

இறைத்தூதர்களின் தரத்தில் வைத்து நோக்கும்போது, அரசன் கண்ட பசுமாட்டை யூசுஃப் ﵇ வருடத்திற்கான குறியீடாக விளக்கினார். ஆனால் நம்முடைய இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் உஹுதுப் போர் இடம்பெறுவதற்குச் சற்று முன்னர் மாடொன்று அறுக்கப்படுவதாகக் கனவில் கண்டபோது, தம்முடைய தோழர்களில் சிலர் யுத்தத்தில் கொல்லப்படுவார்கள் என அன்னார் விளக்கமளித்தார்கள். அது அப்படியே நடந்தது. நபித்தோழர்களில் எழுபது பேர் யுத்தத்தில் கொல்லப்படுவதைக் கண்டு நபிகளார் அதிர்ச்சியடையாதிருப்பதற்காகச் சங்கேத அடிப்படையில் அன்னாருக்கு அதனைத் தெரிவிக்க இறைவன் நாடியிருந்தான் போலும். இங்கு 'மாடு' என்ற குறியீடு இருவிதமாக வியாக்கியானம் செய்யப்பட்டதைக் காண்கிறோம்.

அத்தியாயம் யூசுஃபில் உள்ள கனவுகள் பற்றிய நமது அவதானங் களை இத்துடன் போதுமாக்கிக்கொண்டு அற்புதமான அந்த அத்தியாயத்தில் உள்ள வேறுசில விசயங்களில் கவனம் செலுத்து வோம். அவ்விசயங்களும்கூடப் புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகம் தொடர்பான துறையில் உளவியலாளர்கள் ஆய்வுக்கு உட்படுத்துபவைதான்.

## யூசுஃப் ﷺ தான் யார் என்பதைச் சகோதரர்களுக்கும் தந்தைக்கும் தெரிவிப்பதைத் தாமதப்படுத்தியது ஏன்?

இப்போது நாம் சிறையிலிருந்து விடுதலை பெற்ற யூசுஃப் நபியுடன் நிற்கிறோம். அரசர் அவரைத் தனக்கு நெருக்கமாக்கிக்கொண்டார். எகிப்தின் 'அஸீஸ்' ஆகவும் நியமித்துக் கௌரவித்தார். எதிர் வரக்கூடிய ஏழு வருடங்கள் செழிப்பும் வளமும் நிறைந்த வருடங்களாக அமையும் என நபி யூசுஃப் திடமாக நம்பினார். அவ்வருடங்களில் கோதுமையை அறுவடை செய்து, அதன் பின்னர் வரவிருக்கும் வரட்சியான ஏழு வருடங்களில் எகிப்து மக்களுக்கு உணவளிப்பதற்காகச் சேமித்துவைக்க வேண்டும். அதேவேளை, யூசுஃப் ﷺ ஹெக்சோஸியரின் (Hyksos) எகிப்தில் வாழ்ந்த காலப்பகுதியில் ஊழலையும், பிழையான நிர்வாக முறைமையையும், உறவினருக்குச் சலுகை காட்டப்படுவதையும் அனுபவபூர்வமாகக் கண்டிருந்தார். இவை கோதுமையைப் பாது காத்து எதிர்வரக்கூடிய வரட்சி ஆண்டுகளில் மக்களுக்கு நீதியாகவும் சமமாகவும் பகிர்ந்தளிக்கும் செயல்பாட்டைப் பாழாக்கிவிடும். இதனால் முழு நாட்டு மக்களும் பஞ்சத்தில் உழல வேண்டி ஏற்படும். எனவே, இவ்விவகாரத்தை நபி யூசுஃப் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

அந்த வகையில், அறுவடைகளைக் களஞ்சியப்படுத்துவதற்கும், வரட்சிக் காலத்தில் அவற்றைப் பகிர்ந்தளிப்பதற்குமான பணியின் மேற்பார்வையாளராகத் தன்னை நியமிக்குமாறு அரசரிடம் அவர் வேண்டிக்கொண்டார். அவரால்தான் கோதுமையைக் களஞ்சியப்படுத்தும் நம்பிக்கையாளராகவும் பகிர்ந்தளிப்பதில் நீதியானவராகவும் நடந்துகொள்ள முடியும்:

> 'தேசத்தின் களஞ்சியங்களுக்கு என்னைப் பொறுப்பாளர் ஆக்குங்கள். நிச்சயமாக நான் நன்கு பாதுகாக்கக்கூடிய வனாகவும் அதுபற்றி அறிந்தவனாகவும் இருக்கிறேன்' என அவர் கூறினார். (12:55)

செழிப்பான ஆண்டுகள் கழிகின்றன. வரட்சியும் பட்டினியும் பஞ்சமும் நிறைந்த ஆண்டுகள் வருகின்றன. பின்னர் யூசுஃபைக் கிணற்றில் தள்ளிய சகோதரர்கள் தங்களது பங்கு தானியத்தைப் பெற வருகிறார்கள். காலமாற்றத்தாலும் பாலைவன வாழ்வின் கஷ்டங்களாலும் நீண்ட பயணத்தினாலும் அவர்களது முகங்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தபோதும், யூசுஃப் ﷺ தன்னுடைய சகோதரர்களை அடையாளம் கண்டுகொண்டார். அவ்வேளையில் அவரோ வளர்ந்து முழு மனிதனாகவும் பேரழகனாகவும் மாறியிருந்தார். உலக இன்பங்களில் பற்றற்றவராகவும் மறுமை வாழ்வை ஆசிப்பவராகவும் இருந்தபோதிலும் அரசர்களின் உணவும் அரண்மனைவாசமும் அவரை முழுமையான சுகதேகியாக மாற்றியிருந்தன. மட்டுமன்றி, எகிப்தின் 'அஸீஸ்' என்ற வகையில் அவருக்கென்று தனி மரியாதையும் இருந்தது. எனவே அவரையும், அவர்கள் கிணற்றில் வீசும்போது கெஞ்சிமன்றாடி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த குழந்தையையும் தொடர்புபடுத்திப் பார்ப்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.

பின்னர் யூசுஃப் ﷺ விவேகமாகவும் சாணக்கியமாகவும் அவர்கள் தன்னுடைய தம்பியை அழைத்துவரும்படி செய்தார். தம்பியைத் திரும்ப அழைத்துவருவதாகத் தந்தைக்கு அவர்கள் உறுதிமொழி வழங்கியிருந்தபோதிலும் யூசுஃப் ﷺ அவரைத் தன்னுடனே வைத்துக்கொண்டார்.

> யஅகூபு கூறினார்: 'உங்களை ஏதேனும் ஆபத்து சூழ்ந்து கொண்டாலே தவிர நிச்சயமாக அவரை என்னிடம் திரும்ப அழைத்துவருவீர்கள் என்று எனக்கு நீங்கள் உறுதிமொழி தந்தால்தான் அவரை உங்களுடன் அனுப்புவேன்.' அவ்வாறே அவர்களும் உறுதிமொழி அளித்தபோது, 'நாம் உரைத்த இவ்வுடன்படிக்கையை அல்லாஹ் கண்காணித்தவனாகவே இருக்கிறான்' என அவர் கூறினார். (12:66)

இந்த அத்தியாயத்தைப் படிக்கும்போதும் செவிமடுக்கும்போதும் இப்படி நான் எனக்குள் கேட்டுக்கொண்டதுண்டு:

> தான் உயிரோடிருப்பதையும் ஆரோக்கியத்துடன் இருப்பதையும் அஸீஸின் மாளிகையில் வாழ்ந்துகொண்டிருப்பதையும் தன்னுடைய சகோதரர்களுக்கும் தந்தைக்கும் தெரிவிப்பதை யூசுஃப் ﷺ தாமதப்படுத்தியது ஏன்?
>
> பின்னர் எகிப்தின் அஸீஸாக மாறும் பாக்கியத்தை அல்லாஹ் தனக்களித்ததையும், எகிப்தியர்களுக்கும் சுற்றியுள்ள மக்க

ளுக்கும் தானியப் பங்கீடுசெய்யும் பொறுப்பு தன்னிடமே உள்ளது என்பதையும் அவர்களிடம் ஏன் அவர் சொல்ல வில்லை?

அஸீஸின் மாளிகையில் இருந்த அவருக்குக் கன்ஆன் பள்ளத் தாக்கில் வாழ்ந்துகொண்டிருந்த அவர்களுடன் தொடர்பு கொள்வது சிரமமாக இருந்திருந்தால் அவர்கள் தங்களது பங்கு தானியத்தைப் பெற வந்தபோதும் ஏன் சொல்லாமல் தவிர்ந்துகொண்டார்?

தன்னைப் பிரிந்ததால் வேதனையுற்றுப் பார்வை இழந்திருந்த வயதுமுதிர்ந்த தந்தையைக் காப்பாற்றவேனும் அவர் ஏன் உண்மையை வெளிப்படுத்தவில்லை? அதனைப் பிற்படுத்திவைத்ததன் ரகசியம்தான் என்ன?!

யூசுஃப் ﷺ ஒரு தூதர். அல்லாஹ்வின் அனுமதியின்றி அவர் எதனையும் செய்ய மாட்டார். அல்லாஹ் அனுமதி தரும்வரை தனது உண்மைநிலை பற்றி அவர் வெளிப்படையாக அவர்களுக்குக் கூற முடியாது. எனவே, இத்தகைய பிறிபோடலில் மறைந்திருந்த இறைஞானம் என்ன என்பது பற்றி நாம் சிந்திப்போம். இமாம் ஷாஃபிஈ பின்வருமாறு கூறியதாக அறிவிக்கப்படுகிறது:

இறைவிசுவாசி ஒருவர் யாராவது ஒருவருடன் கொள்ளும் பிணைப்பு அதிகரிக்கும்போதெல்லாம் அந்தப் பிணைப்பின் கசப்பை அவர் அனுபவிக்கும்படி அல்லாஹ் செய்துவிடுகிறான். ஏனென்றால், அடியான் ஒருவனின் உள்ளம் தன்னையன்றி மற்றொருவருடன் பிணைப்பு கொண்டிருப்பதை அல்லாஹ் ஏற்பதில்லை. அவன் அந்த உள்ளத்தைத் தடுத்து தன்னை நோக்கித் திருப்பிவிடுகிறான்.[86]

இக்கூற்று பொதுவாக விசுவாசிகளைக் குறிப்பதாயின் நபிமார்கள், தூதர்களின் நிலை எவ்வாறிருக்கும்?

யூசுஃப் ﷺ மீது யஅகூபு ﷺ கொண்டிருந்த அன்பும் நெருக்கமும் ஒரு தந்தை மகன்மீது செலுத்தும் அன்பு பற்றி நாம் படித்திருக்கும் அனைத்தையும் மிகைத்தவையாக இருந்தன. ஆண்டுகள் கழியக்

---

86. இக்கூற்று *இமாம்* ஷாஃபிஈ கூறியதாகக் குறிப்பிடப்பட்டாலும் அதற்கான சான்று நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் இக்கருத்தைக் காட்டக்கூடிய வேறுபல சான்றுகள் காணப்படுகின்றன. இப்னுல் கையிம் அல்ஜவ்ஸிய்யா தனது *'றவ்ளதுல் முஹிப்பீன் வ நுஸ்ஹதுல் முஷ்தாக்கீன்'* என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பக்.216.

கழிய அந்த அன்பு ஆழமாகிக்கொண்டே சென்றது. எகிப்தின் 'அஸீஸ்' யஅகூபின் கடைசி மகனாகிய பின்யாமீனைப் பிடித்து வைத்துக்கொண்டதாக அவருடைய புதல்வர்கள் கூறியபோது, அவரது எதிர்வினை எப்படி இருந்தது என்று பாருங்கள். முன்னர் யூசுஃபை ஓநாய் சாப்பிட்டுவிட்டதாக அவர்கள் பொய்யாக அழுதுகொண்டு வந்து யஅகூபிடம் கூறியபோது அவர் சொன்ன அதே வார்த்தைகளைத்தான் பின்யாமீனை இழந்தபோதும் கூறினார்:

> *இல்லை, உங்களது மனம் ஒரு கெட்ட காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்துவிட்டது.*

ஆயினும், பின்யாமீனுக்கு நேர்ந்த கதியால் தனக்கு ஏற்பட்ட மனத்தாக்கத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் கூறியதை அதன் பிறகும் அவர் நம்பத் தயாராக இருக்கவில்லை என்றே தோன்றுகிறது. யூசுஃபுக்குச் செய்ததுபோல் பின்யாமீனுக்கும் அவர்கள் சூழ்ச்சிசெய்திருக்கலாம். ஆயினும், தனது பாசத்துக்குரிய கடைசி மகனின் இழப்பால் வந்த வேதனையை அவர் வெளிக் காட்டவில்லை. அவர்களைப் புறக்கணித்து, யூசுஃபின் இழப்பால் ஏற்பட்ட துன்பத்தையும் கவலையையும் இறைவனிடம் முறை யிடுகிறார். அவர் காணாமல்போய் நீண்டபல வருடங்கள் கழிந்த பிறகும், பின்யாமீனுக்கு ஏற்பட்ட முடிவு யூசுஃபைப் பிரிந்த கவலையையே அவரிடம் அதிகரிக்கச்செய்கிறது:

> *பின்னர் அவர்களைவிட்டுத் திரும்பிக்கொண்டு, 'ஐயகோ, யூசுஃப்!' எனத் துக்கத்தில் புலம்பினார். கடுமையான துக்கத்தால் அவரது கண்கள் வெளுத்துப்போயிருந்தன. பின்னர் அந்தத் துக்கத்தையும் அவர் மனத்துக்குள் அடக்கிக் கொண்டார்.*
>
> *அதற்கு அவருடைய புதல்வர்கள், 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீங்கள் நோயுற்று நலிவடையும்வரை அல்லது மடிந்துவிடும்வரை யூசுஃபையே நினைத்துக்கொண்டிருக் கிறீர்கள்!' எனக் கூறினர்.* (12:84-85)

இங்கே ஒரு நபி தன்னுடைய மகன்மீது கொண்ட பாசம் அவரது உள்ளத்தையே ஆக்கிரமித்துவிட்டது. கண்ணியமும் மகத்துவமும் கொண்ட இறைவனே கோபிக்கும் வகையிலான அளவுகடந்த பாசம். எனவேதான் கண்ணியமான ஒரு நபியின் உள்ளத்தை உலகின் ஆசாபாசம் கலந்த உணர்ச்சி களங்கப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக மகனை அவரிடமிருந்து பிரிக்கிறான். இப்னு அஜீபா

தனது திருக்குர்ஆன் விரிவுரை நூலில்[87] குறிப்பிடுவதுபோல், யஅகூபின் பாட்டனான இப்றாஹீம் ﷺ இதனைவிடப் பெரும் துன்பத்தால் சோதிக்கப்பட்டிருக்கிறார். முதுமையில் கிடைக்கப் பெற்ற அருமை மகனையே அறுத்துப் பலியிட அவர் ஏவப்பட்டார்.

ஆக, யூசுஃப் யாரென்று வெளிப்படுத்துவதைத் தாமதப்படுத்தியதற்கு அல்லாஹ்விடம் ஒரு காரணம் இருந்திருக்கிறது. யூசுஃப் நபிக்கு அவரது அழகும், அவர்மீது பெண்கள் கொண்ட மோகமும், பொறுமையும், தன்னுடன் எவ்வளவு மோசமாக நடந்துகொண்டவர்களோடும் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதும் சோதனையாக வைக்கப்பட்டிருந்த அதேவேளை, யஅகூபு நபி மிகவும் நேசித்த மகனை நீண்ட காலம் பிரிந்திருக்க வேண்டும் என்பது அவருக்கு வைக்கப்பட்ட சோதனைகளுள் ஒன்றாக அமைந்தது. கண்ணியமான அந்த நபி அல்லாஹ் விதித்த சோதனையைக் கடந்து, அவருக்காக அவன் தயார்படுத்திவைத்திருக்கும் உயர் அந்தஸ்துக்குத் தகுதிபெற வேண்டுமானால் இந்தப் பிரிவு தொடரத்தான் வேண்டும். பின்னர் அவரது கடைசி மகன் அடிமையாகப் பிடிக்கப்பட்டதும், மூத்த புதல்வன் தலைமறைவானதும்கூட மிகக் கடுமையான சோதனைக் கட்டத்துக்கு அவரைக் கொண்டுசென்றிருந்தன.

மறுபுறத்தில், யூசுஃபின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் தள்ளிப்போட்டதில் மற்றொரு தெய்வீக ஞானமும் இயங்கியிருக் கிறது. யூசுஃபின் சகோதரர்கள் எவ்வளவு அநியாயத்திலும் துர் செயலிலும் ஈடுபட்டபோதிலும் அவர்கள்மீது பீறிட்ட இறைவனின் பெருங்கருணையை அது எடுத்துக்காட்டுகிறது. அதாவது, அவர்களை மன்னிப்பதற்கு முன்னர் தங்கள் செயல்களுக்காக அவர்கள் கைசேதப்பட வேண்டும்; அல்லாஹ்வுக்கு முன்னாலும் யூசுஃபுக்கு முன்னாலும் தந்தைக்கு முன்னாலும் வெட்கப்பட வேண்டும். எனவேதான், யூசுஃப் ﷺ தன்னுடைய தம்பியான பின்யாமீனைத் தன்னுடன் எடுத்துக்கொள்ள மேற்கொண்ட உபாயத்திற்குப் பிறகு இறைவன் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்குகிறான்.

சகோதரர்கள் யூசுஃபை 'அஸீஸ்' என நினைத்து பின்யாமீனை மன்னித்துவிடுமாறு பல வழிகளில் வேண்டுகின்றனர். அவர் இணங்காததால், பின்யாமீனின் இடத்தில் தங்களில் ஒருவரை எடுத்துக்கொள்ளுமாறும், தங்களுடைய தந்தை வயோதிகராகவும் நோயாளியாகவும் இருப்பதாகவும் கூறுகிறார்கள். அறிந்தோ

87. இமாம் அஹ்மது இப்னு அஜீபா, *'அல்பஹ்ருல் மதீது ஃபீ தஃப்சீருல் குர்ஆனில் மஜீது'*. (இ. ஹிஜ்ரீ 1222).

அறியாமலோ தங்களது உணர்வையும் நடத்தையையும் மாற்றிக் கொள்ளவும், யூசுஃபுக்குச் செய்த அநியாயத்தை நினைத்துப் பார்க்கவும் அவர்களை அல்லாஹ் நிர்ப்பந்திக்கிறான். அதன் மூலமாக அவர்கள் கைசேதப்பட வேண்டும். பின்னரே அவர்களை அவன் மன்னிக்க வேண்டும். ஏனெனில், யூசுஃபைத் தந்தையிடமிருந்து பிரித்து அவரது அன்பு தங்களை நோக்கித் திரும்ப வேண்டுமென அவர்கள் விரும்பியபோது அவரைக் கிணற்றில் வீசினர்; ஓநாய் சாப்பிட்டுவிட்டதாகப் பொய்யான இரத்தத்தைக் காண்பித்தனர். ஆனால் இப்போது பின்யாமீனை மன்னித்துவிடுமாறு அஸீஸிடம் கெஞ்சுகின்றனர். அவர் மறுத்தபோது, பின்யாமீனுக்குப் பதிலாகத் தங்களில் ஒருவரை எடுத்துக்கொள்ளுமாறும், பின்யாமீனைத் தந்தையிடம் தாங்கள் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

இம்மாற்றம் யூசுஃபுக்கு இழைத்த தீங்கை நினைத்து ஏற்பட்ட கைசேதத்தினால்தான் வந்திருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் எவ்வளவுதான் மோசமாக நடந்திருந்தாலும் நபித்துவ இல்லத்தில் வளர்ந்தவர்கள்; கெட்ட செயல்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் தண்டனை உள்ளதென அறிந்தவர்கள்.

அஸீஸிடம் மன்றாடி நம்பிக்கை இழந்த அவர்கள் அங்கிருந்து வெளியேறி தங்களுக்குள் கலந்தாலோசனை செய்கிறார்கள். நீண்டபல வருடங்கள் கழிந்துவிட்டாலும், யூசுஃபுக்கு இழைத்த அநியாயம் அவர்களது கண்களுக்கு முன்னால் தெளிவாகத் தெரிந்ததாகத் திருக்குர்ஆன் கூறுகிறது. தாம் இழைத்த அநீதிக்காக அவர்களுள் ஒருவர் பின்னர் கைதசேதப்பட்டாலும் மனத்தில் அதனை மறைத்துவைத்திருந்தார். இன்னொருவர் யூசுஃபுக்கு அவர்கள் இழைத்த அநீதிக்காகப் பகிரங்கமாகவே கடிந்துகொண்டார்; புதியதொரு துயரச் செய்தியுடன் மீண்டும் தந்தையை எதிர்கொள்ள வெட்கப்படுவதாகக் கூறி அவர்களுடன் திரும்பிச்செல்ல மறுத்தார்.

இறைவனின் மகத்தான, நுணுக்கமான திட்டமிடலைக் கவனித்துப் பாருங்கள். முன்னர் தங்கள் வாழ்விலிருந்து யூசுஃப் ஒழிந்துவிட்ட மகிழ்ச்சியை அவர்கள் மறைத்துக்கொண்டு தந்தையின் முன்னால் பொய்யான இரத்தம் பூசப்பட்ட ஆடையுடன் வந்துநின்றார்கள். ஆனால் இந்தத் தடவை பின்யாமீனுக்கு நடந்த கதையைச் சொல்லி தந்தையின் வேதனையை இன்னும் அதிகரிக்கச்செய்யும் வகையில் அவர்களை அல்லாஹ் கொண்டுவந்து நிறுத்துகிறான். மட்டுமன்றி, அவருடைய மூத்த மகன் அந்நிலையில் தந்தையைப் பார்க்க வருவதற்கு மறுத்துவிட்டார்.

இம்முறை அவர்கள் உண்மையாகவே கவலையும் கைசேதமும் கொண்டிருந்தார்கள். ஆனாலும் தந்தை அவர்களை நம்பவில்லை. யூசுஃபை ஓநாய் தின்றுவிட்டதென அவர்கள் சொன்னபோதே அவர் நம்பவில்லை. அப்படியிருக்கையில் தன்னுடைய மகன் திருடியதாகவும், அதனால் அடிமையாகப் பிடித்துவைக்கப்பட்ட தாகவும் கூறினால் எப்படி நம்புவார்?! எனவே அவர்கள் சத்தியம் செய்யலானார்கள். தங்களோடு இருந்த எகிப்துவாசிகளையும், தங்களுடன் பயணக் குழுவில் இருந்த கிராமவாசிகளையும் கேட்டுப்பார்க்குமாறு அவர்கள் சாட்சிகளை முன்வைத்தனர்.

> நாங்கள் இருந்த ஊர்வாசிகளையும், நாங்கள் வந்த பயணக் குழுவினரையும் கேட்டுப்பாருங்கள். நிச்சயமாக நாங்கள் உண்மைதான் சொல்கிறோம். (12:82)

இப்படித்தான் யூசுஃபின் விசயத்தில் இழைத்த சிறிய, பெரிய அனைத்து தவறுகளுக்காகவும் அவர்கள் கைசேதப்பட வேண்டுமென இறைவன் நாடியிருந்தான்.

எகிப்துக்கு அவர்கள் மேற்கொண்ட இரு பயணங்களுக்கும் பிறகு தந்தையுடன் கழித்த அந்த நாள்கள் துயரமான நாள்களாக அமைந்திருந்தன. பார்வை இழந்து சோகத்தில் வாழும் தந்தை. நிழலாய் தொடர்ந்துவந்த வறுமை. பின்யாமீனின் சத்தமும், மூத்த சகோதரனின் ஆணையிடும் குரலும் கேட்காமல் வெறிச்சோடிய வீடு. இந்நிலையில்தான் மீண்டும் எகிப்துக்குச் சென்று உணவைப் பெற வேண்டிய நேரம் வந்தது. ஆனால், ஏற்பட்டிருந்த வறுமையின் காரணமாக அவர்கள் இந்தத் தடவை எடுத்துச்சென்ற பொருள்கள் அற்பமானவையாகவும் பண்டமாற்றுக்குத் தேறாதவையாகவும் இருந்தன. பொருள்களைப் போலவே அவர்களது முகங்களும், உளவியல்ரீதியாகவும் ஆத்மீகரீதியாகவும் உடலளவிலும் ஏற்பட் டிருந்த பரிதாபநிலையை உண்மையாகப் பிரதிபலித்தன.கவலையும், தங்களது துர்செயல்கள் குறித்த கைசேதமும் அவற்றில் வெளிப் பட்டன. இந்தத் தடவை அற்பப் பொருள்களுடன் யூசுஃபை நாடி வந்தார்கள். உடல் நலிந்து, பசி, களைப்பு, வறுமை, கவலை என்பன தோய்ந்த முகத்துடன் தர்மம் வேண்டி வந்தார்கள்.

அவர்களது நிலை கண்டு யூசுஃபின் உள்ளம் உருகுகிறது. தான் யார் என்பதை வெளிப்படுத்த கடும் ஆர்வம் எழுகிறது. இந்த விருப்பத்தை வஹீயும் ஆதரித்தது போலும். அவர்கள் கைசேதப்பட்டு அதிக வேதனையை அனுபவித்து, தெய்வீக மன்னிப்புக்குத் தகுதி பெற்றுவிட்டார்கள் எனவும், யூசுஃபின் உண்மையான அடையாளம்

வெளிப்படுத்தப்படுவதற்கான நேரம் கனிந்துவிட்டதாகவும் அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கலாம். எனவேதான் தனது அடையாளத்தை அவர் இப்படி மென்மையாக வெளிப்படுத்துகிறார்:

> நீங்கள் அறிவீனர்களாக இருந்தபோது யூசுஃபையும் அவருடைய சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? (12:89)

தான் குழந்தையாக இருந்தபோது இருண்ட கிணற்றில் தள்ளி, திருட்டுக் குற்றமும் சுமத்தியவர்களுடன் அவர் எவ்வளவு மென்மையாக நடந்துகொள்கிறார் என்று பாருங்கள். ‘நீங்கள் அறிவீனர்களாக இருந்தபோது ...’ என்பதன் மூலமாக அவர்களது அறியாமை மீதும் இளவயதின் மீதும்தான் அவர் பழியைப் போடுகிறார். அப்போது அவர்கள் இருந்த நிலையில் வேறொரு சாதாரண நபர் அவர்களை எதிர்கொண்டிருந்தால், ‘நீங்கள் கெட்டவர்களாக இருந்தபோது ...’ என்றோ, ‘நீங்கள் கொலைகாரர்களாக இருந்தபோது ...’ என்றோ, ‘நீங்கள் பொய்யர்களாக இருந்தபோது ...’ என்றோதான் கூறியிருப்பார். ஆனால் அநியாயத்தையும் அத்துமீறலையும் பொறுமையாகவும் மென்மையாகவும் எதிர்கொள்வதுதான் நபி யூசுஃபுக்கு வைக்கப்பட்ட சோதனையாக இருந்தது. தன்னையும் தன்னுடைய தந்தையையும் குடும்பத்தாரையும் மீண்டும் ஒன்று சேர்த்து, தனக்கும் சகோதரர்களுக்கும் மத்தியில் சமாதானம் செய்துவைத்து அருள் செய்தமைக்காக அவர் எவ்வாறு இறைவனைப் புகழ்கிறார் என்பதையும் கவனியுங்கள்:

> அவன் சிறைக்கூடத்திலிருந்து என்னை வெளியேற்றி எனக்குப் பேருபகாரம் செய்தான். எனக்கும் என் சகோதரர்களுக்கும் மத்தியில் ஷைத்தான் பிரிவினையை உண்டுபண்ணிய பிறகு உங்கள் அனைவரையும் பாலைவனத்திலிருந்து என்னிடம் கொண்டுவந்து சேர்த்தான். நிச்சயமாக எனது இரட்சகன் தான் நாடுவதை மிக நுட்பமாக நிறைவேற்றக்கூடியவன். நிச்சயமாக அவனே நன்கறிந்தவனும் தீர்க்கமான ஞானம் கொண்டவனும் ஆவான். (12:100)

இங்கு யூசுஃப் ﵇ ஷைத்தானையே கண்டிக்கிறார். ஷைத்தானின் விளையாட்டில் பாதிக்கப்பட்டவராகத் தன்னையே அவர் முதலில் நிறுத்துகிறார். மட்டுமன்றி, தன்னையும் சகோதரர்களையும் ஒரே இடத்தில் நிறுத்துகிறார். *சுப்ஹானல்லாஹ்!*

*யூசுஃப் ﷺ தனது அடையாளத்தை வெளிப்படுத்தியதன் மூலமாகப் பல சோதனைகளின் திரை விலகுகிறது:*

***முதலாவதாக:*** *யூசுஃபுக்கு அநியாயம் இழைத்த சகோதரர்கள் அந்த வேதனையை அனுபவித்து தங்களது தவறை ஏற்றுக்கொள்கின்றனர். யூசுஃபே எகிப்தின் 'அஸீஸ்' என்பது தெரிந்ததும் அவரைப் பார்த்து இப்படிச் சொல்கின்றனர்:*

> *'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக நாங்கள் பெரும் தீமை இழைத்துவிட்டோம். ஆயினும் அல்லாஹ் எங்களைவிட உம்மை மேன்மைப்படுத்திவிட்டான்.'*
>
> *அதற்கவர், 'உங்கள்மீது எந்த நிந்தனையும் இல்லை. அல்லாஹ் உங்களை மன்னித்தருள்வானாக! அவனே கிருபையாளர்களுக்கெல்லாம் மேலான கிருபையாளன்' எனக் கூறினார்.* (12:91-92)

***இரண்டாவதாக:*** *நபி யஅகூபின் சோதனைகள் விலகுகின்றன. அவரது சோதனையின் இறுதிக்காலம் துன்பம்மிக்கதாகவே அமைந்திருந்தது. யூசுஃபின் பிரிவு, பின்யாமீனின் பிரிவு, மூத்த மகனின் பிரிவு என எல்லா வேதனைகளும் சேர்ந்துவிட்டிருந்தன. போதாததற்கு உடல் உபாதை, பார்வை இழப்பு, முதுமை, வறுமை என்பனவும் சேர்ந்து வதைத்தன. பின்னர் அல்லாஹ் அவரது பார்வையை அற்புதமான வகையில் மீட்டுக் கொடுத்தான். எகிப்தில் இருந்த யூசுஃப் உட்பட அனைத்து பிள்ளைகளையும் அவரிடம் சேர்த்தான்.*

***மூன்றாவதாக:*** *பல வருடங்கள் குடும்பத்தாரை — குறிப்பாகத் தந்தையை — பிரிந்திருந்த யூசுஃபின் சோதனை விலகுகிறது. தந்தை யஅகூபு ﷺ மகன் யூசுஃப் ﷺ மீது வைத்திருந்த அன்பைவிட யூசுஃப் ﷺ தந்தைமீது வைத்திருந்த அன்பும், அவரைச் சந்திக்க வேண்டும் என்ற வேட்கையும் குறைந்ததாக இருக்கவில்லை. ஆயினும் யூசுஃப் ﷺ இளவயதினராகவும் அதிகப் பொறுமை கொண்டவராகவும் இருந்தார். நபி யூசுஃபின் இந்தச் சோதனை பற்றிப் பேசிய விரிவுரையாளர்கள் மிகக் குறைவு. ஏனெனில் அவர் அதனை எங்கும் வெளிப்படுத்தவில்லை. திருக்குர்ஆனும் அதுபற்றி விரிவாக எங்கும் குறிப்பிடவில்லை.*

*யூசுஃபின் சகோதரர்கள் அவரை அஸீஸ் என நினைத்து பின்யாமீனை மன்னித்துவிடுமாறும், அவர்களுக்கு வயதுமுதிர்ந்த தந்தை இருப்பதாகவும் கெஞ்சியபோது யூசுஃபின் உள்ளத்தை வேதனை கசக்கிப் பிழிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. திருக்குர்ஆன் 'வயது*

முதிர்ந்தவர்' என்பதோடு மட்டும் நின்றுகொண்டது. ஆனால் உண்மையில் அவர்கள் அஸீஸின் மனத்தை இளகச்செய்வதற்காகத் தங்களுடைய தந்தையின் கவலைக்குரிய நிலை பற்றியும், நோய் பற்றியும், பார்வை இழந்திருக்கும் நிலை பற்றியும் விரிவாக விவரித்துத்தான் இருப்பார்கள். அவர்களது வார்த்தைகள் யூசுஃபின் மனத்தைக் கவலையால் பிழிந்துதான் இருக்கும். தான் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டாம் என்ற தெய்வீகக் கட்டளை இல்லையெனில் நிச்சயம் அவர் மறைத்திருக்க மாட்டார். மட்டு மன்றி, அரசர் அவரைச் சிறையிலிருந்து விடுவித்து உயர்பதவியில் நியமித்த உடனேயே தந்தையைக் காணப் போயிருப்பார். ஆனால் தெய்வீக ஞானத்துக்குக் கட்டுப்பட்டு அவர் பொறுமை சாதித்தார். அந்த ஞானம் அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் எதிர்பாராத நன்மையைக் கொண்டுவந்தது.

சகோதரர்களைச் சந்தித்த முதல் நாளே யூசுஃப் ﷺ தனது உணர்ச் சிக்குக் கட்டுப்பட்டு உண்மையை வெளிப்படுத்தியிருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று சிந்தித்துப்பாருங்கள். பஞ்சம் தொடங்கிய ஆரம்பகாலம் அது. அவருடைய சகோதரர்கள் அப்போதும் கடுமையானவர்களாகவும் கர்வம் கொண்டவர் களாகவுமே இருந்தனர். அந்நிலையில் தானே எகிப்தின் 'அஸீஸ்' என யூசுஃப் ﷺ சொல்லியிருந்தால் அவர்களது பொறாமை இன்னும் அதிகமாகியிருக்கும். அதிலும் குறிப்பாக அவர்களுடைய தந்தை அவர்மீது காட்டும் பாசம் இன்னும் அதிகரிப்பதையும், எகிப்தின் அஸீஸ் என்ற பதவியில் அவர் இருப்பதைக் காணும்போது தந்தைக்கு ஏற்படக்கூடிய கௌரவ உணர்வையும் நினைக்கும்போது அவர்களது காழ்ப்புணர்வு எல்லைமீறியிருக்கும்.

ஆனால் யூசுஃப் ﷺ சோதிக்கப்பட வேண்டும் என்பதுதான் தெய்வீகச் சித்தமாக இருந்திருக்கிறது. அவர் தன்னுடைய தம்பியைத் திருடிக்கொள்ள வேண்டும் என்பதும், அதன் மூலமாக அவருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் தந்தைக்கும் நல்ல முடிவு கிட்ட வேண்டும் என்பதும் இறை நாட்டமாக அமைந்துவிட்டது. யூசுஃப் ﷺ சிறு பிராயத்தில் கண்ட கனவுக்கான விளக்கத்துடன் இந்த அற்புதமான அத்தியாயம் நிறைவடைகிறது. கிரகங்களும் சூரியனும் சந்திரனும் தனக்குச் சிரம்பணிவதாக அவர் கனவில் கண்டார். கிரகங்கள் சகோதரர்களுக்கும் சூரியன் தந்தைக்கும் சந்திரன் தாய்க்கும் குறியீடாக அமைந்தன.

அவர் தன்னுடைய பெற்றோரை அரியணையில் அமரச் செய்தார்.அவர்கள் அனைவரும் அவருக்கு மரியாதையாக சாஷ்டாங்கம் செய்தனர். 'தந்தையே, முன்னர் நான் கண்ட கனவின் விளக்கம் இதுதான். எனது இரட்சகன் அதனை உண்மையாக்கிவிட்டான்' என அவர் கூறினார். (12:100)

ஆக, இந்த அத்தியாயம் ஒரு கனவுடன் ஆரம்பித்து அதற்கான வியாக்கியானத்துடன் நிறைவடைகிறது.

இந்த அத்தியாயத்தின் முடிவுடன் யூசுஃப் ﷺ பற்றிய எனது அவதானங்களையும் முடித்துக்கொள்கிறேன். அதன் மூலமாக எனது இந்நூலும் நிறைவுக்கு வருகிறது. ஆயினும், இந்த அத்தியாயத்தில் வந்துள்ள மூன்று உளவியல் தோற்றப்பாடுகள் குறித்த சுருக்கமான ஓர் விளக்கத்தை முன்வைக்காமல் எழுதுகோலைக் கீழே வைக்க நான் விரும்பவில்லை. இம்மூன்று தோற்றப்பாடுகளும் மனோதத்துவ வியலிலும் (Psychosomatics) ஆத்மீக உளவியலிலும் (Parapsychology) — குறிப்பாக இஸ்லாமிய உளவியல் நோக்கில் — மிகுந்த முக்கியத்துவம் உடையவை.

## அத்தியாயம் யூசுஃபில் தொலைநுண்ணுணர்வு; உளவழி உடற் கோளாறுகள்; கண்திருஷ்டி.

கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் பெய்ரூத்டில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் என் முதல் வருடத்தில் பொது உளவியல் பாடத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பாடப்புத்தகத்தை நான் கற்றுக்கொண்டிருந்தபோது — அக்கால கட்டத்தில் காணப்பட்ட ஏனைய உளவியல் நூல்களைப் போலவே — அதில் ஓர் அத்தியாயம் இருந்தது. நுணுக்கமான அவதானத்தை அடிப்படையாகக் கொண்ட பரிசோதனை அறிவியலுக்கும், பல்வேறு சமூகங்களில் காணப்படும் அறிவியல் அடிப்படையற்ற சிந்தனைகள், சமய மூடநம்பிக்கைகளுக்கும் மத்தியில் ஒப்பீடு செய்கின்ற அத்தியாயம் அது.

அறிவியலால் மேற்கோள் காட்டப்படாத சிந்தனைகளாக நூலாசிரியர் குறிப்பிட்டவற்றுள் தொலைநுண்ணுணர்வு (Telepathy), மனக்கண் தொலைக்காட்சி (Clairvoyance), கண்ணூறு (Evil eye) போன்று இன்று பிரபல்யமாக அறியப்பட்டிருக்கும் ஆத்மீக உளவியல் (Parapsychology) துறையில் அடங்குகின்ற அனைத்து அறிவியல் அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதேபோல் மூடநம்பிக்கைகள் என்ற தலைப்பின் கீழ் ஆத்மா, மறுமை போன்ற

அனைத்து சமய நம்பிக்கைகளும் அடக்கப்பட்டிருந்தன. குறித்த நூலாசிரியர் அமெரிக்க உளவியல் ஆசான்களிடம் மேற்கொண்ட ஓர் ஆய்வின்போது அவர்களுள் ஒரு சதவீதமானவர்களே புலன்களுக்கு அப்பாற்பட்ட கருத்தாக்கங்களின் உண்மைத்தன்மையில் நம்பிக்கை கொண்டிருப்பதாக எழுதியிருந்தார் என இப்போதும் எனக்கு ஞாபகம் உள்ளது.

ஆனால் இப்போது 60 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், பெரும்பாலான ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் தங்களுடைய மாணவர்களுக்குப் புலன்களுக்கு அப்பாற்பட்ட மனோதத்துவவியல் குறித்த பாடப்புத்தகங்களை வழங்குவதைப் பார்க்கிறோம். மட்டுமன்றி, இத்துறையின் ஏதாவதொரு கிளையில் நுணுக்கமான சிறப்புத்தேர்ச்சி கொண்ட ஆசிரியர்களைச் சில பல்கலைக்கழகங்கள் பெரிதும் வரவேற்கின்றன. அதேவேளை, மரணிக்கும் நிலையில் உள்ள ஒருவரது ஆத்மீக அனுபவங்கள், அல்லது உளவியல் கவனக்குவிப்பு மூலமாகப் பொருள்களை நகர்த்துவதற்குச் சில மனிதர்கள் கொண்டிருக்கும் ஆற்றல் என்பன போன்ற மறைவான சமய நம்பிக்கைகளுடன் இந்தச் சிறப்புத்துறை மிகப் பலமான தொடர்பைக் கொண்டிருப்பது யாவரும் அறிந்தது தான். சில மேற்கத்தியப் பல்கலைக்கழகங்கள் இத்துறையில் மிக உயர்ந்த கல்வித் தகைமைகளை வழங்குவதைக்கூட இன்று நாம் பார்க்கிறோம்.

பரிசுத்த இறைவன் நிலைமைகளை எவ்வளவு தூரம் மாற்றிவிடுகிறான் என்று பாருங்கள். மறைவான உலகம் பற்றிய நம்பிக்கையையும், ஆரோக்கியமான தர்க்கச் சிந்தனையின் சட்டகத்தினுள் புலனுக்கு அப்பாற்பட்ட உலகம் பற்றிய சரியான கோட்பாட்டையும் கொண்ட சன்மார்க்கத்தை நமக்கு வழங்கிய இறைவனுக்கே புகழனைத்தும். அத்தியாயம் யூசுஃப் தொலைநுண்ணுணர்வு, முன்னறிவிப்புக் கனவுகள் (Predictive dreams), கண்திருஷ்டி, மனநலக் கோளாறுகள் போன்ற இத்துறையின் மிக முக்கியமான அம்சங்களுக்கான சிறந்த உதாரணங்களை முன்வைக்கிறது.

## தொலைநுண்ணுணர்வு

‘தொலைநுண்ணுணர்வு அல்லது Telepathy’ என்பது — நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல் — ஒருவர் தனது உணர்வுகளையோ சிந்தனைகளையோ வழக்கமான புலன்வழிச் சாதனங்கள் எதுவு மின்றியே இன்னொருவருக்கு நகர்த்துவதற்குக் கொண்டிருக்கும் உள-ஆத்மீக சக்தியைக் குறிக்கிறது.

உமர் இப்னுல் ஃகத்தாபு ﷺ தொடர்பான ஒரு சம்பவத்தைக் குறிப்பிடும்போது இத்தோற்றப்பாடு பற்றி நாம் விரிவாக விளக்கினோம். மதீனாவில் இருந்த உமர் ﷺ, *'சாரியாவே ... மலை!'* எனச் சத்தமிட்டுக் கூறியதாகவும், 1500 மைல்களுக்கு அப்பால் பாரசீகர்களுடன் போரிட்டுக்கொண்டிருந்த சாரியா அதனைச் செவிமடுத்ததாகவும், உடனே சாரியா மலையை நோக்கிச் சென்று எதிரிகளை வெற்றிகொண்டதாகவும் அச்சம்பவம் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மனச்செய்திகளைப் பிறருக்கு அனுப்பும் ஆற்றல் சிலருக்கு இருப்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அவ்வாறே, பெற்றார்-பிள்ளை, காதலர்கள் முதலிய அன்புணர்ச்சியால் தொடர்புபட்ட நபர்களுக்கிடையில் இத்தொலைநுண்ணுணர்வு மிகப் பலமாக இயங்குவதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'டெலிபதி' போன்ற ஒன்றுதான் அத்தியாயம் யூசுஃபில் நபி யஅகூபிடமும் தொழிற்படுகிறது. துன்பங்களும் சோதனைகளும் மலையாகக் குவிந்து கடுமையான வேதனைக்கும் துக்கத்துக்கும் அவர் ஆளாகியிருந்தார். யூசுஃபின் பிரிவால் அவர் அடைந்த வேதனை அவருடைய இளைய மகனான பின்யாமீனின் பிரிவால் இன்னும் கடுமையாகியது. ஏற்கனவே ஏற்பட்ட காயம் ஆறத் தொடங்கும்போது அதே இடத்தில் மீண்டும் குத்தப்படுவதுபோன்ற நிலை இது. அடக்கிவைத்த சோகத்தின் கடுமையினால் அவரது கண்கள்கூடப் பார்வை இழந்துவிட்டன. அதனால் அவரது குடும்பத்தாரும் மனநெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர்; அல்லது யூசுஃபின் மீது அவர் காட்டிய ஆறாத் துயரைப் பார்த்து அவர்மீது பரிதாபம் கொண்டனர். 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நீங்கள் இளைத்துப்போகும்வரை அல்லது மடிந்துபோகும்வரை யூசுஃபை நினைத்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள்' என அவர்கள் கூறினர்.

இந்தக் கட்டத்தில்தான் இறைவன் அவரது துன்பத்தை விலக்குகிறான். நபி யூசுஃபும் தனது உண்மைநிலையைச் சகோதரர்களுக்கு வெளிப்படுத்த அனுமதிக்கப்படுகிறார். பின்னர் அவர் தனது ஆடையைச் சகோதரர்களிடம் கொடுத்து தந்தையின் முகத்தில் அதனைப் போடும்படியும், தெய்வீக அற்புதத்தால் அவருக்குப் பார்வை திரும்பிவிடும் என்றும் கூறுகிறார். எகிப்தின் தலைநகரிலிருந்து இந்த இரு மகிழ்ச்சியான செய்திகளையும் எடுத்துக்கொண்டு ஒட்டகக் கூட்டம் பயணமாகிறது. எட்டு நாள்களைவிட அதிகக் காலம் எடுக்கக்கூடிய அந்தப் பயணம் ஆரம்பித்த மாத்திரத்திலேயே அங்கே நொடிந்து அமர்ந்திருந்த வயோதிகரான

யஅகூபுக்கு யூசுஃப் நன்றாக இருப்பதுபோலவும், தனக்கு அருகாமையிலேயே அவர் இருப்பதுபோலவும் பலமான ஓர் உணர்வு ஏற்படுகிறது.

> அந்த ஒட்டகப்பயணிகள் கூட்டம் நகரைவிட்டுப் புறப்பட்ட போது (கன்ஆனில் இருந்த) அவர்களுடைய தந்தை கூறினார்: 'இதோ யூசுஃபின் வாடையை நான் நிச்சயமாக உணர்கிறேன். நான் ஏதோ அறிவு மங்கிப் பிதற்றுவதாகச் சொல்லிவிடாதீர்கள்.' (12:94)

ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோலவே அவர்கள் அவரைக் கண்டித்தனர்:

> 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நீங்கள் இன்னும் உங்களது பழைய மனக்குழப்பத்தில்தான் இருக்கிறீர்கள்' என அவர்கள் கூறினர். (12:95)

### யூசுஃபின் வாசனையை யஅகூபு நுகர்ந்தது எப்படி?

'வாசனை' என்பதற்கு யூசுஃபின் ஆடையில் இருந்த வாசனையைக் காற்று சுமந்துவந்ததாகவே பழைய விளக்கவுரை நூல்கள் விளக்கமளித்தன. கடுமையான காற்று கிளர்ந்தெழுந்து அந்தச் சட்டையின் வாசத்தைச் சுமந்துசென்றதாக இப்னு கஸீர் தனது விளக்கவுரையில் குறிப்பிட்டிருப்பது இதற்கான உதாரணங்களுள் ஒன்றாகும். தற்காலத்தில்கூட விளக்கவுரையாளர்கள் சிலர் இதே விளக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும், எகிப்துக்கும் கன்ஆன் பிரதேசத்துக்கும் இடையிலான தூரத்தை அவர்கள் அசாத்தியத் தூரமாகக் கருதுகின்றனர்.

உஸ்தாது சையித் குதுப் தனது விரிவுரையில், சட்டையின் வாசனை கன்ஆன் பிரதேசத்தினுள் குறுகிய தூரத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறார். மொத்தத்தில், புலன்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உள-ஆத்மீக விவகாரத்துக்குப் புறவயமான ஒரு விளக்கத்தைக் கண்டடையவே இவ்வனைத்து விரிவுரையாளர்களும் முயன்றுள்ளனர். ஆனால், எகிப்துக்கும் கன்ஆனுக்கும் இடையிலான நெடுந்தொலைவில் அல்லது கன்ஆன் பிரதேசத்துக்குட்பட்ட தொலைவில்கூட வாசனை எப்படி நகர்ந்துசெல்ல முடியும்?! குறிப்பிட்ட ஒரு வாசனை ஒரு மைல் தூரத்துக்குப் பயணித்தால்கூட அதனை ஓர் அற்புதமாகக் கருத முடியும் என்றிருக்கும்போது, இவ்வளவு நெடுந்தொலைவுக்கு அது எவ்வாறு சாத்தியமாகும்?! அதனைவிட — சிலர் குறிப்பிட்டிருப்பதுபோல் — அது நபிக்கு

வழங்கப்பட்ட அற்புதம் எனக் கூறியிருந்தால்கூட ஒருவகையில் அவர்களுக்கும் நமக்கும் நிம்மதியாக இருந்திருக்கும்.

'நான் யூசுஃபின் வாசனையை உணர்கிறேன்' என யஅகூபு ﷺ சொன்னபோதும் அதனை அவர் சிலேடையாக அல்லது 'வாசனை' (ரீஹ்) என்ற சொல்லின் வேறு அர்த்தங்கள் தொனிக்கும் விதமாகவே சொல்லியிருப்பார் என்பதுதான் எனது அவதானம். அவ்வாறன்றி அவர் 'மணம்' என்ற கருத்தை நாடியிருக்க மாட்டார். அறபுமொழியில் 'ரீஹ்' என்ற சொல்லுக்கு வெற்றி, மேலாண்மை முதலிய அர்த்தங்களும் உண்டு. சிலவேளை, 'யூசுஃப் உயிரோடிருப்பதான உணர்வு என்னை ஆட்கொள்கிறது' என்றோ, 'அவர் எனக்கருகில் இருப்பதாக உணர்கிறேன்' என்றோ, 'அவரது ஸ்தூலத்தையும் சுவாசத்தையும் உணர்கிறேன்' என்றோ கூற விரும்பியிருக்கலாம். ஆயினும், எகிப்தில் ஒட்டகப் பயணம் ஆரம்பித்த அதேவேளையில் யஅகூபை ﷺ இந்த உணர்வு எப்படி ஆட்கொண்டது?

> அந்த ஒட்டகப்பயணிகள் கூட்டம் நகரைவிட்டுப் புறப்பட்ட போது (கன்ஆனில் இருந்த) அவர்களுடைய தந்தை கூறினார்: 'இதோ யூசுஃபின் வாடையை நான் நிச்சயமாக உணர்கிறேன். நான் ஏதோ அறிவு மங்கிப் பிதற்றுவதாகச் சொல்லி விடாதீர்கள்.' (12:94)

சில வேளை யூசுஃப் ﷺ தொலையுணர்வுச் செய்தி போன்ற ஏதோ ஓர் ஆத்மீக-உளவியல் உணர்த்தலின் மூலமாக யஅகூபுக்கு இவ்வுணர்வை ஏற்படுத்தியிருக்கலாம். அது உமர் இப்னுல் ஃகத்தாபு ﷺ சாரியாவுக்கு அனுப்பிய செய்திபோன்ற ஒன்றாக அமைந்திருக்கலாம்.

யூசுஃப் ﷺ தனது உண்மைநிலையைச் சகோதரர்களுக்கு வெளிப் படுத்தி, தனது சட்டையையும் அவர்களிடம் கொடுத்தனுப்பிய பிறகு தந்தையைச் சந்திக்க வேண்டும் என்ற பெருவேட்கைக்கு ஆளாகியிருக்கலாம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அன்புக்குரிய ஒருவரைவிட்டுத் தவிர்க்க முடியாத சில நிர்ப்பந்தங்களால் பிரிந்து வாழும் ஒருவர் அந்தப் பிரிவை எவ்வளவு பொறுமையுடன் தாங்கிக்கொள்வாரோ அதேபோன்ற நிலையில்தான் யூசுஃபும் இருந்திருக்க வேண்டும். அத்தகைய ஒருவரது சூழ்நிலைகள் மாற்றமடைந்து அன்புக்குரியவரைச் சந்திக்க விரையும்போது அன்புணர்ச்சி எரிமலையாய் வெடிக்கும்.

ஆக, யஅகூபை ஆக்கிரமித்திருந்த இப்பலமான உணர்வு ஓர் உள-ஆத்மீகத் தொலையுணர்வாக அன்றி வேறு எதுவாக இருக்க முடியும்? அது நபி யூசுஃபுக்கோ அவருடைய தந்தைக்கோ வழங்கப்பட்ட அற்புதமாகவே இருக்கட்டும். ஆனால் அது அல்லாஹ்விடமிருந்து வந்த வஹீயாக இருந்திருந்தால் அதனை யஅகூபு ﷺ, 'நான் யூசுஃபின் வாசனையை உணர்கிறேன். நான் ஏதோ அறிவு மங்கிப் பிதற்றுவதாக எண்ணிவிடாதீர்கள்!' எனப் பலவீனமான தொனியில் கூறியிருக்க மாட்டார். மாறாக, 'யூசுஃப் உயிரோடிருப்பதாக எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டது. அவரை இன்னும் சில நாள்களில் நான் சந்திப்பேன்' என்று திடமாகவே கூறியிருப்பார்.

## உளவழி உடற்கோளாறுகள்

யூசுஃபின் சட்டையை யஅகூபின் முகத்தின் மீது போட்டதால் அவருக்குப் பார்வை திரும்பியது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நபித்துவ அற்புதங்களில் ஒன்றுதான். அதனை உளவியல்ரீதியாக விளக்க நாம் துணியப்போவதில்லை. ஆனால் அவர் ஏன் பார்வையை இழந்திருந்தார் என்பதைத் திருக்குர்ஆன் ஒற்றை வசனத்தில் குறிப்பிடுகிறது. அதுபற்றி இங்கு சுருக்கமாகக் கவனிப்போம். மனரீதியாக ஏற்படும் ஓர் பதற்றத்தால் உடல் எவ்வாறு பாதிக்கப்படலாம் என்பதைத் திருக்குர்ஆன் அதில் நமக்கு உணர்த்துகிறது.

> பிறகு அவர் அவர்களைவிட்டும் முகத்தைத் திருப்பிக்கொண்டு 'ஐயகோ, யூசுஃப்!' எனப் புலம்பலானார். துக்கத்தால் அவரது கண்கள் வெளுத்துப்போயின. அவர் துக்கத்தைத் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டிருந்தார். (12:84)

உடலில் நோயையோ கோளாறையோ ஏற்படுத்துவதில் உளவியல் அல்லது உணர்வார்ந்த காரணி வகிக்கும் பாத்திரம் என்னவென்று ஆராய்வதே நவீன உளவழி உடற்கோளாறு மருத்துவத்தின் ஆதார சுருதியாகும். உடல்ரீதியான உபாதைகளை உருவாக்குவதில் உளவியல் பகுதி வகிக்கும் முக்கியப் பாத்திரத்தை மருத்துவர்கள் பல நூற்றாண்டுகளாகக் கவனிக்காது விட்டிருந்தது மட்டுமன்றி, சிலபோது அதனை நிராகரித்து கேலிசெய்தும் வந்திருக்கின்றனர் என்பதை வரலாறு நமக்குச் சொல்கிறது. இன்றும்கூட இந்த உளவியல் பக்கத்தை மருத்துவர்கள் புறக்கணித்துவருவதாக நவீன மனோதத்துவ மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பென்சன் (Benson) தனது *Timeless Healing* என்ற நூலில் குறிப்பிடுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். நவீன மருத்துவர்கள் உடல்ரீதியான குணங்குறிகளைக் கண்டறிவதிலும், மருந்துகள் மூலமாகவோ அறுவை சிகிச்சை மூலமாகவோ அவற்றைக் குணப்படுத்தும் முறையைத் தேடுவதிலும், வேறு ஸ்தூல வழிகளைப் பயன்படுத்துவதிலும் தமது முழுக் கவனத்தையும் செலுத்துவதாக அவர் கூறுகிறார். பென்சனின் இக்கூற்று 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த முஸ்லிம் மருத்துவரும் அறிவியலாளருமான அபூஸைது அல்பல்ஃகீ அவரது பெறுமதி வாய்ந்த கையெழுத்துப் பிரதியாகிய, *'மசாலிஹுல் அப்தான் வல்அன்ஃபுஸ் (உடல்கள் மற்றும் ஆத்மாக்களின் நலன்கள்)'* என்ற நூலில் குறிப்பிடும் கருத்துடன் ஒத்துப்போகிறது.

மருத்துவக் கற்பித்தல் முறைகளும், மருத்துவ மாணவர்களைப் பரீட்சிக்கும் வழிகளும் உடலளவிலான நோய்களைக் கண்டுபிடித்து அவற்றுக்கு மருந்துகளாலும் அறுவை முறைகளாலும் சிகிச்சையளிக்கும் வழிகளைக் கண்டறிதல் என்பதன் மீதே தங்கிநிற்கின்றன என இவ்விரு அறிவியலாளர்களும் கூறுகின்றனர்.அல்பல்ஃகீயே குறிப்பிடுவதுபோல், 'ஆன்மாவோ உயிரோ அற்ற உடல்' என்பதாகவே மனிதனை அவை நோக்குகின்றன.

நோய்களை உருவாக்குவதில் உளவியல் பரிமாணம் வகிக்கும் பாத்திரம் குறித்து நவீனக்கால மருத்துவர்கள் ஓரளவு கவனம் செலுத்தத் தொடங்கினாலும்கூட, அந்த உளவியல் தாக்கத்தைக் குறிப்பிட்ட சில நோய்களுடன் மாத்திரம் அவர்கள் மட்டுப்படுத்திக்கொண்டனர். கடந்த நூற்றாண்டின் அறுபதுகள்வரை நாங்கள் கற்ற மனநோயியல் (Psychopathology) சார் நூல்கள் குடற்புண், உயர் இரத்த அழுத்தம், செரிமானக் கோளாறு போன்ற சிலவகை பாதிப்புகள் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருந்தன. ஆனால் எல்லா வகையான உடல்நோய்களுக்கும் உளவியல் பரிமாணங்கள் அல்லது காரணிகள் காணப்பட முடியும் என இன்று கண்டறியப்பட்டுள்ளது.

மட்டுமன்றி, உளவியல் காரணிகளின் பாதிப்பு மிக விரிந்தது என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. உடலைத் தாக்கும் நுண்ணங்கிகளை எதிர்ப்பதற்கான உடற்சக்தி பலவீனமடைதல் அல்லது புற்றுநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்படல் போன்றவைகூட இதனுள் அடங்க முடியும். இப்பொதுமைப்படுத்தல், மருத்துவத் துறையில் ஏற்பட்ட மூன்றாவது புரட்சி எனக் கருதப்படுகிறது.

அறுவை சிகிச்சை முறை கண்டுபிடிக்கப்பட்டமை முதல் புரட்சி யாகவும், பென்சிலின் போன்ற நுண்மக்கொல்லிகள் (Antibiotics) கண்டுபிடிக்கப்பட்டமை இரண்டாவது புரட்சியாகவும் அமைந்திருந்தன. மனமும் புத்தியும் உடல்மீது ஏற்படுத்தும் தாக்கம் இம்மூன்றாவது புரட்சியாக அமைந்தது.

அந்த வகையில்தான் இந்நோயறிதல் (Diagnosis) முறையானது புனிதத் திருக்குர்ஆனின் அற்புதங்களுள் ஒன்றாக அமைந்தது. ஏனெனில், கவலை என்ற உணர்ச்சிவயப்பாடே யஅகூபின் கண்களில் குருட்டுத்தன்மையை ஏற்படுத்தியது. அது மட்டுமல்ல. ஒருவர் உளவழி உடற்கோளாறுக்கு உட்படும் நிலையைப் பலப்படுத்துகின்ற அல்லது தீவிரப்படுத்துகின்ற காரணிகளையும் நவீன அறிவியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. கடுமையான உணர்ச்சிவயப்பாடு, கோபப்படுதல் போன்ற மாற்று உணர்ச்சிகளும்கூட அந்த உணர்ச்சி வயப்பாட்டை வெளிப்படுத்தாமல் மென்று விழுங்குவதும், உணர்ச்சியை வெளிப்படுத்த வழியற்றிருப்பதும் அக்காரணிகளுள் சிலவாகும். இம்மூன்று காரணிகளையும் சொற்பமான வார்த்தைகளில் திருக்குர்ஆன் கூறுவதைக் கவனியுங்கள்:

> கவலையின் காரணமாக அவரது கண்கள் வெளுத்துப்போயின. அந்தக் கவலையை அவர் அடக்கிவைத்துக்கொண்டிருந்தார். (12:84)

இம்மூன்று காரணிகளும் நபி யஅகூபுமீது திரண்டிருந்தன. யூசுஃபை இழந்ததால் அவருக்கு ஏற்பட்டிருந்த கவலையானது பார்வை இழந்து நோய்வாய்ப்பட்டிருந்த வயோதிகர் ஒருவரால் தாங்க முடியாத மிகக் கடுமையான துன்பமாக இருந்தது. ஆயினும், அழகிய பொறுமையைக் கைக்கொள்வதே அவரது வழக்கமாக இருந்தது. தனது வேதனையைக் குறைக்கக்கூடிய அளவுகூட அவர் துயரத்தை வெளிப்படுத்தாதவராக இருந்தார். மூன்றாவதாக, அந்நெருக்கடியைத் தளர்த்திக்கொள்ளவும் அவர் சக்தியற்றிருந்தார். முதிர்ந்த வயது. பார்வை போய்விட்டது. யூசுஃபிடமிருந்து அவரைத் தூரமாக்கிய புதல்வர்களுக்கு மத்தியில் ஒரு கைதிபோன்று அவர் வாழ்ந்தார். எனவேதான் அவரது தாக்கம்மிக்க வார்த்தைகள் இவ்வாறு அமைந்தன:

> இல்லை, உங்களது உள்ளங்கள் ஒரு துர்காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்துவிட்டன. எனினும், இந்நிலையில் அழகிய பொறுமையே நல்லது. (12:18)

ஆக, இக்காரணிகள் அனைத்தும் சேர்ந்தே அவர் பார்வை இழப்பதற்கு வழிகோலின.

**கண்திருஷ்டி**

எகிப்துக்குத் தானியம் பெறச் செல்லும்போது அங்கு ஒரே வாயிலால் உள்ளே நுழையாமல் வெவ்வேறு வாயில்களால் நுழையும்படி நபி யஅகூபு ﷺ தன்னுடைய புதல்வர்களுக்கு உபதேசித்ததாக அத்தியாயம் யூசுஃப் சொல்கிறது. அவர்களுக்குக் கண்திருஷ்டி (Evil Eye) ஏற்பட்டுவிடும் என அவர் பயந்ததன் காரணமாகத்தான் அப்படிக் கூறினார் என்று திருக்குர்ஆன் விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் ஒரே தந்தைக்குப் பிறந்த பதினொரு புதல்வர்கள். அழகும் பலமும் கம்பீரமும் கொண்டவர்கள். எனவே அனைவரும் ஒரே வாயிலால் நுழையும்போது கண்திருஷ்டி ஏற்படலாம்.

இறைத்தூதர் முஹம்மது ﷺ கூறியதாக முஸ்லிம் கிரந்தத்தில் பின்வருமாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது:

> கண்திருஷ்டி என்பது உண்மையானது. விதியை முந்தக்கூடிய ஏதாவது இருப்பின் அது கண்திருஷ்டியாகத்தான் இருக்கும்.[88]

எனவே கண்திருஷ்டி என்றால் என்ன என்பதையும், பொறாமை, சூனியம் என்பவற்றுடன் அதற்குள்ள தொடர்பு என்ன என்பதையும் சற்றுச் சுருக்கமாகவும் எளிமையாகவும் அறிய முயல்வோம். இந்த அனைத்தையும் அல்லாஹ் அல்ஃபலக் அத்தியாயத்தில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளான்.

பொறாமை (அல்ஹசது) என்பது மோசமான ஒரு மன உணர்ச்சியாகும். ஒருவரிடம் இவ்வுணர்ச்சி மூர்க்கமடையும்போது, எதிராளிக்கு இறைவன் அளித்திருக்கும் ஓர் அருட்கொடை அவரிடமிருந்து இல்லாமல்போய்விட வேண்டுமென ஆசைப்படுவார். அந்த அருட்கொடை செல்வமும் வாழ்க்கை வசதியும் அல்லது உடற்பலமும் ஆரோக்கியமும் போன்ற பௌதிகரீதியான அருட்கொடையாக இருக்கவும் முடியும்; நிறைவான அறிவு அல்லது புத்திக்கூர்மை போன்ற மானசீக அருட்கொடையாக இருக்கவும் முடியும்.

ஆக, பொறாமைக்காரன் என்பவன் தீய உணர்ச்சியால் ஆக்கிரமிக்கப் பட்டவன் ஆவான். எனினும், அவனது தீங்கிலிருந்து எதிராளியை இறைவன் பாதுகாத்துவிடுகிறான். அதேவேளை, அவனது இந்தத்

88. ஸஹீஹ் முஸ்லிம் #2188.

தீய உணர்ச்சியுடன் இறைவன் அவனுக்களித்த உள-ஆத்மீகப் பலமும் இணைந்துகொள்ளுமாயின், அவனது ஆசைகள் ஸ்தூல வடிவம் பெற்று எதிராளிமீது பாதிப்பை ஏற்படுத்தும்; அல்லது அவன் பெற்ற அருட்கொடையை அழித்துவிடும். ஆயினும், இந்த எதுவுமே இறைவனின் அனுமதியின்றி இடம்பெறுவதில்லை.ஏனெனில் அவன் தன்னுடைய அடியார்கள்மீது பேராதிக்கம் கொண்டவன். கண்களின் துரோகத்தையும் உள்ளங்களில் மறைந்திருப்பதையும் அவன் நன்கறிவான்.

ஆக, சக மனிதர்களுக்குக் கண்திருஷ்டியை ஏற்படுத்துபவர் இயல்பாகவே உள-ஆத்மீகப் பலம் பெற்றவராக இருப்பார். அந்தப் பலம் தன்னிடம் இருப்பது அவருக்குத் தெரிந்திருக்கவும் முடியும்; தெரியாதிருக்கவும் முடியும். அதனால்தான் சிலபோது தனக்கு நெருக்கமான மனிதர்களுக்குக்கூடத் தன்னையறியாமலேயே அவர் கண்திருஷ்டி ஏற்படுத்திவிடுகிறார். இத்தகைய பலம் பெற்ற ஒருவர் தனக்கிருக்கும் உளவியல் ஆற்றல்களை அறிந்து எதிராளியின் அருட்கொடை நீங்க வேண்டும் என்ற ஆசையுடன் ஷைத்தானிய ஆத்மாக்களுடன் கூட்டுசேர்ந்து அதற்கு முயல்வாராயின், அப்போது ‘கண்திருஷ்டியை ஏற்படுத்துபவர்’ என்ற நிலையிலிருந்து ஒருபடி மேலே சென்று, சூனியம் செய்பவர்களின் பட்டியலில் இணைந்துகொள்வார். கண்திருஷ்டி என்றால் என்ன என்பதற்கும், பொறாமைக்கும் சூனியத்திற்கும் அதனோடுள்ள தொடர்பு என்ன என்பதற்குமான சுருக்கமான விளக்கம் இதுதான்.

உளவியல் மாணவர்களுக்காகவும், இத்துறையில் சிறப்புக் கற்கையைக் கொண்டிராதவர்களுக்காகவுமே இவ்வாறு நாம் எளிமைப்படுத்திக் கூறினோம். அத்தியாயம் யூசுஃபில் இடம்பெற்றுள்ள கண்திருஷ்டி என்ற விவகாரத்தை நவீன உளவியல் ஆய்வுகளின் கோணத்தில் விரிவாக விளக்குவதற்கு இப்பீடிகை அவசியமானதாகும்.

இவ்வாய்வில் எழும் மையக்கேள்வி இதுதான்: தூரத்தில் உள்ள உயிரியின் மீதோ ஒரு சடப்பொருளின் மீதோ ஒருவர் மனோ பலத்தால் தாக்கம் ஏற்படுத்த முடியுமா? மனித உயிர் உள-ஆத்மீகச் சக்தியைக் கொண்டிருப்பதாகவும், உடல் உறங்கும்போது அந்தச் சக்தி விடுதலை பெற்று மேலும் பலம் பெற்று நமது புறவுலகில் நிறைந்திருக்கும் நல்ல அல்லது தீய ஆத்மீகப் படைப்புகளுடன் இடைவினையாற்றுவதாகவும், அதன் விளைவாகவே சங்கேதக் கனவுகளும் ஷைத்தானியக் கனவுகளும் அருள் பொருந்திய கனவுகளும் உருவாவதாகவும் முன்னர் ‘கனவுகள் எவ்வாறு உருவாகின்றன?’ என விளக்கும்போது குறிப்பிட்டோம்.

மனித மனத்துக்கும் நல்ல அல்லது தீய ஆத்மாக்களுக்கும் நிகழும் இந்தப் பரஸ்பர இடைவினை அவன் பிரக்ஞையுடன் இருக்கும்போது குறைந்த வீரியத்துடனேயே இடம்பெறுகிறது. ஷைத்தானின் ஊசலாட்டங்களின்போதும், தீயதை ஏவும் நமது இச்சைகளின்போதும் இதனை நாம் உணர்கிறோம். நம்மைநாமே கடிந்துகொள்ளும் மனநிலை நம்மிடம் ஆதிக்கம் செலுத்தும்போது இதன் நல்ல பாதிப்பையும் உணர்கிறோம். அல்லது நல்ல ஆத்மாக்களால் பலப்படுத்தப்படுகின்ற ஆத்மீகப் பரவசநிலை நமக்கு ஏற்படும்போதும் இதனை உணர்கிறோம். ஆயினும், இப்பரஸ்பரச் செயல்பாடு உள-ஆத்மீகப் பரிமாணங்களுடன் மாத்திரம் சுருங்காமல் ஸ்தூலப் பரிமாணங்களிலும் நிகழவே செய்கிறது. அந்த வகையில் தான் பௌதிக, மருத்துவ, உளவியல்சார்ந்த அறிவியல் கலைகள், மனத்தையும் உடலையும் பிரித்துப்பார்க்கும் அர்த்தமற்ற பாகுபாட்டு முறையைத் தாண்டி வந்துவிட்டன.

நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல், உணர்ச்சிவயப்பாடுகளும் உளவியல் நிலைமைகளும் உளவழி உடற்கோளாறுகளுக்கும் நோய்களுக்கும் காரணமாகின்றன. உள்ளத்துக்கும் உடலுக்கும் மத்தியிலான இத்தொடர்பானது மருத்துவத் துறை முழுமையாக ஒப்புக்கொண்ட விசயங்களில் ஒன்றாக மாறிவிட்டது. உடல் உறுப்புகளின் மீது உளவியல் பரிமாணம் ஏற்படுத்தும் பாதிப்பை இந்த இடைவினை சுட்டிக்காட்டுகிறது. அதாவது ஸ்தூலமற்ற மனசக்திகள் உயிரிகள் மீதும் சடப்பொருள்களின் மீதும் மாற்றம் ஏற்படுத்துவது சாத்தியமே என்பதை இது உறுதிப்படுத்துகிறது. எனினும், கண்திருஷ்டியின்போது ஏற்படுவதுபோல் மன ஆற்றலானது பிறர்மீது ஏற்படுத்தும் பாதிப்பு சான்றுடன் நிரூபிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், நாம் இணையத்தில் துழாவிப் பார்க்கும்போது, உடலின் மீது மனம் ஏற்படுத்தும் தாக்கம் பற்றித் திருப்தியளிக்கக் கூடிய விளக்கத்தைப் பெற முடிகிறது. அமெரிக்காவில் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தின் Mind and Body Instituteல் மேலாளராகப் பணிபுரிந்த ரிச்சர்டு பென்ஷன் போன்ற ஆய்வாளர்கள், இமாலய மலைச்சிகரங்களில் யோகா தியானத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தமது தன்னியக்கச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பெற்றிருந்த ஆற்றலைச் சான்றுப்படுத்தினர்.

தமது பாதங்களின் உஷ்ண அளவை அதிகரிக்கவும், இதயத்துடிப்பு வேகத்தைக் குறைக்கவும் அந்த யோகிகளால் முடிந்ததாக அவ்வாய்வாளர்கள் பதிவுசெய்துள்ளனர். ஆக, தமது உள-ஆத்மீகச்

சக்தியைப் பயன்படுத்தி இச்செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த அந்த யோகிகளால் முடிந்திருக்கிறது. அதேவேளை இச்செயல்பாடுகள் அனைத்தும் தன்னியக்கச் செயல்பாடுகள் என்றும், அவை மனிதனது விருப்பத்துக்குக் கட்டுப்படாதவை என்றுமே அறிவியல் அன்றும் இன்றும் நம்பிவந்திருக்கிறது. ஆனால் அந்த யோகிகள் இச்செயல்பாடுகளை மன ஒருமைப்பாடு, தளர்வுநிலை ஆகிய வற்றின் மூலமாகச் சாதித்திருக்கிறார்கள். அந்த வகையில், பலமான உள-ஆத்மீகச் சக்தியைப் பயன்படுத்தி — கண்திருஷ்டி ஏற்படுவது போன்ற — அவதானிக்கத்தக்க மாற்றங்களைப் பிறரது உடல்களில் ஏற்படுத்த முடியுமா?

கண்ணூறு என்பது உயிரிகளின் மீதும் சடப்பொருள்களின் மீதும் உள-ஆத்மீகச் சக்தி ஏற்படுத்தும் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது எனில், அதற்கான மறைமுகமான சான்றை நாம் நவீன இயற்பியலில் கண்டுகொள்ள முடிகிறது. ஏனெனில், ஐன்ஸ்டீன் தனது சார்பியக் கோட்பாட்டின் மூலமாகவும், அதனைத் தொடர்ந்து அணுவெடிப்பின் மூலமாகவும் சக்தி, சடப்பொருள் ஆகிய இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்ற கருத்தாக்கத்தைத் தகர்த்தார்.

மட்டுமன்றி, அணுக்களை உருவாக்கும் நுண்துகள்களின் இயக்கத்தை அளக்கும் கருவிகளுக்கு முன்னால் நிற்கும் ஒருவர் அவற்றின் இயக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவார் என நுண்ணணு இயற்பியல் (Subatomic physics) உறுதிப்படுத்தியது. அதாவது, மனிதனது பிரக்ஞையால் (Consciousness) தூரத்திலிருந்துகூட அணுவுக்குள் அடங்கியுள்ள மின்னணுக்கள் (Electrons) போன்ற உட்கூறுகளின் இயக்கத்தை மாற்றியமைக்கலாம்.[89] ஆக, உள-ஆத்மீகப் பரிமாணமும், மனிதப் பிரக்ஞையை ஏதாவதொன்றின் மீது குவிமையப்படுத்துவதும் அதன் மீது ஏதோ ஒருவகையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என இவ்வாய்வுகள் அனைத்தும் உறுதிப்படுத்தின. அந்தத் தாக்கம் ஒருவர் தன்மீது ஏற்படுத்திக்கொள்வதாகவும் இருக்கலாம்; பிறர்மீது ஏற்படுத்துவதாகவும் இருக்கலாம்.

உளவியல் விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை, மீநிகழ்வு உளவியல் (Parapsychology) துறையிலிருந்து இதற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக, மனசக்தி மூலமாகப் பொருள்களை அசையச்செய்தல் (Telekinesis அல்லது Psychokinesis) தொடர்பான ஆய்வுகள், சில அசாதாரண ஆற்றல் வாய்ந்த மனிதர்களால் தமது

89. Fritjof Capra, *'The Tao of Physics'*, (1992).

நாட்டத்தைக் குவிமையப்படுத்துவதன் மூலமாகச் சடப்பொருள்களின் மீது தாக்கம் ஏற்படுத்தவும் அவற்றை அசையச்செய்யவும் முடியும் என உறுதிப்படுத்தியுள்ளன. இவ்வாய்வுகளின் உண்மைத்தன்மை குறித்து சிலர் ஐயம் எழுப்பியபோதும், அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான பரிசோதனைகள் இத்தோற்றப்பாடு உண்மையானதே என உறுதிப்படுத்தியுள்ளன.

முனைவர் ராபர்ட் ஜான் (Robert Jahn) என்பவரின் தலைமையில் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகள் இவற்றுள் முக்கியமானவை. இவ்வாய்வுகள் எல்லாச் சர்ச்சைகளையும் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அமைந்திருந்தன. அதாவது சில மனிதர்கள் தமது ஆத்ம பலத்தால் பொருள்களை அசைக்கும் ஆற்றல் கொண்டிருப்பது உண்மையே என்பதற்கான ஆதாரங்களை அவை முன்வைத்தன. ராபர்ட் ஜானின் பரிசோதனை முறை ஆய்வுகளில் நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டனர். அவர்கள்மீது ஆயிரக்கணக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. புள்ளிவிவரத் தரவுகள் மூலமாக அவரது கருதுகோள் சரியானதே என்பது நிரூபணமாகிறது. எவ்வாறாயினும், மதச்சார்பற்றவர் களையும் நாத்திகத்தை மதமாக ஏற்றுக்கொண்டவர்களையும் எவ்வகையிலும் திருப்திப்படுத்த முடியாது. ஏனெனில், அவர்கள் இப்பரிசோதனைகளை மத-ஆன்மீகச் சிந்தனைக்கு இயைபானவை யாகவும், தங்களது சடவாதக் கருத்தாக்கங்களுக்கு எதிரானவை யாகவும் பார்க்கின்றனர்.

மீண்டும் நாம் கண்திருஷ்டி என்ற விசயத்துக்கே திரும்புவோம். இறைத்தூதர் முஹம்மது ﷺ கூறியதுபோல் அது உண்மையானதே என்றுதான் நாமும் கூறுகிறோம். பல்வேறு நிகழ்வுகளும் நவீன ஆய்வுகளும் இந்த உண்மைக்குப் பலம் சேர்க்கின்றன. ஆக, இவ்வாறு தமது பார்வையையும் மன ஆற்றலையும் குவிமையப்படுத்தி பொருள்களை அசைக்கக்கூடிய ஆற்றல் கொண்ட சில மனிதர்கள் காணப்பட முடியுமாயின், அதே மனிதர்கள் தமது பார்வையையும் மன ஆற்றலையும் திரட்டி உடல்கள் மீதும் பொருள்கள் மீதும் மாற்றம் ஏற்படுத்த சக்தி பெற்றிருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கப்போகிறது?! ஆயினும், சில முஸ்லிம் உளவியலாளர்களிடம் கண்திருஷ்டி பற்றியும், அதன் தாக்கங்கள் பற்றியும் நபிமொழியில் வந்திருப்பது பற்றிக் கூறப்பட்டால் பரிகாசமாகப் புன்னகைப்பார்கள். அறபு மக்களதும் பழங்காலத்தவர்களதும் மூடநம்பிக்கையாக அதனைப் பார்ப்பார்கள். அதேவேளை, தூரத்திலிருந்து பொருள்களை

அசைக்கக்கூடிய அசாதாரணமான ஆற்றல்கள் குறித்து ராபர்ட் ஜான் மேற்கொண்ட ஆய்வுகள் பற்றியும், ‘தொலைநுண்ணுணர்வு (Telepathy)’ குறித்த ஆய்வுகள் பற்றியும், புலன்களுக்கு அப்பாற்பட்ட உளவியல் உலகம் (Parapsychological World) குறித்த ஆய்வுகள் பற்றியும் கேள்விப்படும்போது மாத்திரம் அவர்கள் பிரமிப்புடன் தலையசைத்து ஏற்றுக்கொள்வார்கள். இத்தகையோரைப் பார்த்து உண்மையாகவே நான் ஆச்சரியப்படுகிறேன்.

இறுதியாக, இந்த அவதானங்களை எனது தனிப்பட்ட ஓர் அனுபவம் பற்றிய குறிப்புடன் நிறைவுசெய்ய விரும்புகிறேன். கண்திருஷ்டி, தொலைநுண்ணுணர்வு, பார்வைத் தீட்சண்யம் போன்ற உள-ஆத்மீக ஆற்றல்களின் இருப்பு குறித்த எனது எல்லையற்ற நம்பிக்கையை அந்த அனுபவம் பலப்படுத்தியது. அவற்றுள் சில விசயங்கள் குறித்து நபிமொழியிலும் (உ-ம்: கண்திருஷ்டி), திருக்குர்ஆன் வசனங்களிலும் (உ-ம்: சூனியம்) இடம்பெற்றிருக்கின்றன என்பதால் மட்டுமல்ல; மாறாக, கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் எத்தியோப்பியாவிலும் சூடானிலும் காணப்பட்ட பாரம்பரிய உளவியல் சிகிச்சைகள் பற்றி உலகச் சுகாதார நிறுவனம் (WHO) எனக்குப் பணித்திருந்த ஆய்வுகளின்போது இத்தோற்றப்பாடுகளை நேரடியாகவே பார்த்தேன். சிகிச்சையாளர்கள், கோத்திரத் தலைவர்கள், சூனியக்காரர்கள், தீய ஆத்மாவுடன் தொடர்புவைத்திருப்பவர்கள் முதலியோர் மேற்கொள்ளும் பல்வேறு செயல்பாடுகளை என் கண்களால் கண்டேன். சடவாதச் சிந்தனை என்ற சிறைக்குள் தமது பகுத்தறிவைப் போட்டுப் பூட்டிக்கொண்டவர்கள் அவற்றை நம்பப்போவதில்லை.

அல்லாஹ்வே சிறந்த பாதுகாவலன். அவன் கருணையாளர்களுக்கெல்லாம் மேலான கருணையாளன். சர்வ உலகங்களின் இரட்சகனான அவனுக்கே புகழனைத்தும்.

# முடிவுரை

மனிதன் ஆரம்பகாலம்தொட்டே ஒருபுறத்தில் தர்க்கம், பகுத்தறிவு என்பவற்றின் மீது எழும் சிந்தனைக்கும், மறுபுறத்தில் உணர்வு, உணர்ச்சிவயப்பாடு என்பவற்றுக்கும் மத்தியிலான வேறுபாட்டைப் பிரித்தறிந்தான்.

பகுத்தறிவானது நம்மை நிதானமான சிந்தனைக்கு அழைக்கும் அதேவேளை உணர்ச்சிகள் நம்மை அப்போதைய தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும் செயல்பாட்டை நோக்கி உந்தித்தள்ளுகின்றன. பொதுவான மொழிக் கருத்தில் பகுத்தறிவிலிருந்து பிறப்பவை, உள்ளத்திலிருந்து பிறப்பவை எனச் சுட்டப்படும் இவ்விரு அம்சங்களுக்கும் மத்தியில் இத்தகைய வெளிப்படையான பாகு பாடு காணப்பட்டாலும் இரண்டுக்குமிடையில் சமநிலையும் ஒத்துழைப்பும் பேணப்படாமல் மனிதனுக்கு சுபிட்சமும் நற்பண்பும் கிட்டுவதில்லை. ஏனெனில், அன்பும் பரிவும் மகிழ்ச்சியும் இன்றி வாழ்வுக்கு எந்தச் சுவையும் கிடையாது. அச்சம், கலக்கம் போன்ற உணர்வுகளின்றி மனிதனால் அபாயங்களிலிருந்து தப்ப முடியாது. கோபம் என்ற உணர்ச்சியின்றி அவனால் தனக்குரியவற்றைப் பாதுகாக்க முடியாது.

ஆயினும் ஒருவன் தனது உணர்ச்சிகளுக்குப் பகுத்தறிவாலும் நற்பண்புகளாலும் கடிவாளமிட்டுச் சரியான பாதையில் தன்னைத் தக்கவைத்துக்கொள்ளாதபோது அவன் தனது மனிதப் பண்பை இழந்து மிருகம்போன்று மாறிவிடுகிறான். இந்நிலையில் கோபம், பழிவாங்கும் உணர்ச்சி என்பவற்றில் அளவுகடந்து சென்று, இச்சைகளுக்குப் பின்னால் அள்ளுண்டுபோய் உள்ளம் கடினமாகி, அன்பு, இரக்கம், பரிவு போன்ற உணர்ச்சிகளின் ஊற்று அவனுக்குள் வற்றிவிடுகிறது. உண்மையில் எவரை இந்த விகாரமான உணர்ச்சிகள் ஆட்கொள்கின்றனவோ அவர் உடல் இச்சைகளைப் பின்தொடரும் இயல்புடன் படைக்கப்பட்ட மிருகங்களைவிட மோசமானவர் ஆவார். பின்வரும் இறைவாக்கு அத்தகையோருக்கே பொருந்தும்:

நிச்சயமாக அவர்கள் கால்நடைகள் போன்றவர்கள். மட்டு மன்றி, அவற்றைவிட வழிபிறழ்வானவர்கள். (25:44)

இவ்வாறான இஸ்லாமிய விவகாரங்களைத் தனது சிறப்புத்துறை கோணத்திலிருந்து அணுகும் உளவியல் ஆய்வாளன் ஒருவன் இரு தீவிரப் போக்குகளை எதிர்கொள்கிறான். ஏனெனில், நவீன மேற்கத்திய உளவியல் விஞ்ஞானம் முழுவதுமாக மதச்சார்பற்ற அறிவாய்வை அடிப்படையாகக் கொண்டிருப்பதாக ஒருசாரார் நோக்குகின்றனர். இஸ்லாத்திற்கு எதிரான யூத-கிறிஸ்தவ நாகரிகத் தின் சிதைவுகளின் மீது கட்டமைந்த ஒன்றாக அவர்கள் அதனைப் பார்க்கின்றனர். எனவே, அச்சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு நபிமார்களது வரலாற்றையும் பண்புகளையும் பேசுவது எப்படிப் போனாலும், எத்தகைய இஸ்லாமியத் தலைப்பும் அணுகப்படக் கூடாது என அவர்கள் கருதுகின்றனர்.

இந்நிலைப்பாடு கொண்டோரில் பெரும்பான்மையினர் உளவியலைச் சிறப்புத்துறையாகக் கொண்டிராத சமயப் பற்றாளர்கள் ஆவர். இவர்களில் பலர் தாம் கேள்விப்பட்ட ஃபிராய்டியச் சிந்தனைகளின் மீதும், அவரது புறநடையான பாலியல் கோட்பாடுகளின் மீதுமே தமது ஊகத்தை உருவாக்கிக்கொண்டனர். உளவியல் விஞ் ஞானத்தையும் அதன் உட்பிரிவுகளையும் ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வு முறையே முழுமையாக ஆக்கிரமித்திருப்பதாக இவர்கள் நம்பினர். மட்டுமன்றி, உளவியல் விஞ்ஞானம் என்பதே பல்வேறு வடிவங்களிலான உளவியல் பகுப்பாய்வுதான் எனவும் இவர்கள் நம்பினர்.

இப்பின்னணியில்தான் இஸ்லாமிய விவகாரங்களை உளவியல் ரீதியாக வியாக்கியானப்படுத்த மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் சமயப் புனிதத்தின் மீதான ஒருவகை அத்துமீறலாக அமையும் என இவர்கள் கருதுகின்றனர். இவர்களுக்கு எதிர்த்தரப்பில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் உளவியல் விஞ்ஞானத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுவினர். உளவியல் பற்றி மதச்சார்பற்ற மேலோட்டமான கருதுகோளின் மீது தங்களது அறிவியல் கீர்த்தியைக் கட்டியெழுப்பியவர்கள். இவர்களது கருதுகோளின்படி, நவீன உளவியல் விஞ்ஞானமானது மெய்யியலையும் மதச் சிந்தனையையும் புறந்தள்ளிவிட்டு உயிரியல், ஏற்பியல் போன்ற நுணுக்கமான அறிவியல் கலைகளுள் ஒன்றாக மாறிவிட்டது; அல்லது — குறைந்தபட்சம் — அந்த அந்தஸ்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது.

மேற்குலக அறிவியலாளர்களில் பலரே கைவிட்டுவிட்ட இந்த யூகத்தைத் தமக்கான ஆதார சுருதியாக எடுத்துக்கொண்ட இவர்கள் இந்தச் சிறப்புத்துறையை அதன் கோட்பாடுகளோடும் நடைமுறைகளோடும் சேர்த்து — அவை நல்லவையாயினும் கெட்டவையாயினும் — பரிசோதனை அறிவியல் என்ற பரந்த குடையின் கீழ் நுழைத்துவிட்டனர். அவ்வகையில், மத-ஆத்மீக விவகாரங்களையும் நபிமார்களது வரலாற்றையும் ஆய்வுசெய்வதற்கு எவ்வித அறிவியல் சான்றோ ஆரோக்கியமான சிந்தனையோ அற்ற தமது கோட்பாடுகளைக்கூடப் பிரயோகிப்பதில் அவர்களைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

இதனால்தான், சரியான அறிவியல் அடிப்படைகளைக் கொண்ட உளவியல் சிறப்புத்துறைகளை வாசகருக்கு — குறிப்பாக உளவியல் சிறப்புத்துறையைக் கற்காதவர்களுக்கு — நாம் விளக்கினோம். அதுபோல், நபிமார்களது வரலாற்றை ஆய்வுசெய்யும் பணியிலிருந்தும், அவர்களைத் தெரிவுசெய்து பயிற்றுவிப்பதில் இயங்கிய தெய்வீக ஏற்பாட்டை வெளிக்கொணர்வதிலிருந்தும் எவ்வாறு பயன்பெற முடியும் என்பதையும் வாசகருக்கு — குறிப்பாக உளவியல் சிறப்புத்துறையைக் கற்காதவர்களுக்கு — நாம் விளக்கினோம்.

அவ்வாறே நாத்திகப் படுகுழியில் வீழ்ந்துவிட்டோரது போலிக் கருதுகோள்களையும் வேறுபடுத்தி விளக்கினோம். இந்த வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவதற்காக நபிமார்களது உளவியல் வாழ்வு பற்றி எழுதப்பட்ட சில நூல்களையும் எடுத்துக் காட்டுகளாக முன்வைத்தோம். இந்நூலாசிரியர்கள் தமக்கு அடிப்படையாகக் கொண்டிருந்த கோட்பாடுகளை மேற்குலக அறிவியலாளர்கள்கூடத் தவறானவை என நிரூபித்துவிட்டமை பற்றியும் எடுத்துக்காட்டினோம். மட்டுமன்றி, இறைவனின் நபிமார்களுக்குரிய கண்ணியத்தை வழங்காத ஓர் எழுத்துமுறையை அவர்கள் பயன்படுத்தியதையும் சுட்டிக்காட்டினோம். இவ்வாறான வேறுபாடுகளை விளக்கியதனூடாக நபிமார்களின் வரலாறு பற்றியும், அவர்களது நல்லுணர்ச்சிகள் பற்றியும் பேசும்போது கைக்கொள்ளத் தகுந்தது எது, தகாதது எது என்ற வேறுபாட்டையும் எடுத்துக்காட்டினோம்.

இந்நூல் நபிமார்களது வரலாற்றின் உளவியல், உணர்ச்சிப் பரிமாணம் மீது கவனம் குவிக்கிறது என்ற வகையில், உணர்ச்சிவயப்பாடு என்ற அம்சத்தை நவீன உளவியல், நரம்பியல் ஆய்வுகளின் நோக்கில் விளக்குவதற்குத் தனியொரு அத்தியாயத்தை ஒதுக்கினோம்.

ஏனெனில் இத்துறையில் அறிவியல் எங்கோ வந்துசேர்ந்திருக்கிறது என வாசகருக்குப் புரியவைக்காமல் இவ்வாய்வை விளக்க முடியாது. பின்னர், இத்துறையில் பரிசோதனை அறிவியலில் நிரூபித்த விசயங்களையும், மதச்சார்பற்ற உளவியலாளர் சிலரது போலி வாதங்களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட விசயங்களையும் வேறுபடுத்திக் காட்டினோம்.

ஏனெனில் இத்தகைய உளவியலாளர்கள் மனிதக் கட்டமைப்பில் ஓர் ஆத்மீகப் பக்கம் இருப்பதை நிராகரிக்கும் தமது சடவாதச் சிந்தனையைச் சாதாரணப் பொதுமக்கள் ஏற்க வேண்டும் என்பதற்காக உயிரியல் மற்றும் பரிசோதனை ஆய்வு முடிவுகளை முடிந்தவரை திரித்துக்கூற முற்பட்டனர். மனிதர்களது நடத்தையை வடிவமைப்பதில் ஏகக் கட்டளைச் செயலகமாகத் தொழிற்படுவது அவர்களது மூளைதான் எனவும் வாதிட்டனர். எனவேதான் உயிரியல் ஆய்வுத்துறையின் முடிவுகளை அத்துறையில் சிறப்புக் கற்கையைக் கொண்டிராதவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக உயிரியல் ஆய்வுத் தகவல்களை எளிமைப்படுத்தி முன்வைக்க இவ்வத்தியாயத்தில் முயன்றோம். அவ்வகையில் இந்த அத்தியாயமும் இதற்கு முந்திய அத்தியாயமும் நூலின் பிரதான உள்ளடக்கத்தை எடுத்தாளும் வகையில் தொடர்ந்துவரும் நான்கு அத்தியாயங்களுக்கான உளவியல் விஞ்ஞானத் தளமாக அமைகின்றன.

பின்னர் தர்க்கரீதியான தொடர்ச்சியாக நான்காம் அத்தியாயத்திற்கு நகர்ந்தோம். வணக்க வழிபாட்டில் மட்டுமன்றி இறைவிசுவாசத்தை முழுமைப்படுத்தி ஆழப்படுத்துவதிலும் உணர்ச்சிப் பரிமாணத்தின் பாத்திரம் குறித்த நமது அவதானங்களை அந்த அத்தியாயம் பதிவுசெய்தது. ஏனெனில் இந்த உணர்ச்சிப் பரிமாணமின்றி இறைவிசுவாசம் வாடி பலவீனமடைந்துவிடும், 'குளிர்ந்து இறுகிப்போன' அறிவின் மீது உருவாகும் இறைவிசுவாசம்.

அன்பு, அச்சம், எதிர்பார்ப்பு முதலிய உணர்ச்சிகளால் 'சூடேற்றப் பட்ட' உள்ளத்தை இளகச்செய்து கண்களில் நீரை வரவழைத்து தெய்வீக அன்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுத்தராதவரை அந்த விசுவாசம் பயனற்றது. முற்றுமுழுக்க உளவியல் கோணத்திலிருந்து பார்த்தால்கூட உணர்ச்சி என்பது மனித நடத்தையை எல்லா வகையிலும் பிரதிநிதித்துவம் செய்கின்ற மூன்றாவது தூணாக உள்ளது எனலாம். மனிதனுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுத்தரும் அறிவுப் பரிமாணம் முதல் தூணாகும். பெற்றுக்கொண்ட

தகவல்களுக்கு அமைவாக அவன் மேற்கொள்ளும் செயல்பாடுகள் இரண்டாவது தூணாகும்.

அடுத்ததாக வருவதே உணர்ச்சிப் பரிமாணமாகும். தான் சாதித்த வெற்றியினால் அவன் மகிழ்ச்சியடைவது, தன்னம்பிக்கை பெறுவது போன்ற நிலையை இது குறிக்கிறது.

இந்த உளவியல் கருத்தாக்கத்தை இஸ்லாமிய நோக்கிலிருந்து நாம் கலந்துரையாடியுள்ளோம். உணர்ச்சிக்கும் ஆத்மீகப் பக்கத் துக்கும் மத்தியில் மறைந்துள்ள இறுக்கமான தொடர்பை வெளிக் கொண்டுவரவும் முயன்றுள்ளோம். அருள் பொருந்திய இத் தொடர்பை நவீன உளவியல் விஞ்ஞானம் கவனிக்காமல் விட்டு விட்டது. இஸ்லாத்தை அதன் ஆத்மீகத்திலிருந்தும் உணர்வார்ந்த வேட்கைகளிலிருந்தும் வேறாகப் பிரித்துவிட முயன்றோரும் இதனைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர்.

இறைவிசுவாசத்தைப் பூரணப்படுத்துவதில் உணர்ச்சி வகிக்கும் முக்கியப் பாத்திரம் பற்றிய நமது அவதானங்களைத் தொடர்ந்து நான்காம் அத்தியாயத்திற்கு நகர்ந்தோம். நபிமார்களும் நரம்பு மண்டலங்களைக் கொண்ட மனிதர்கள் என்ற வகையில் அவர்கள் வெளிப்படுத்திய உணர்ச்சிகள் பற்றி அதில் கவனம் செலுத்தி னோம். எனினும் அவர்கள் வானுலகிலிருந்து வஹீயைப் பெறும் நபிமார்களாகவும் தூதர்களாகவும் இருந்தார்கள் என்ற வகையில் அந்த மகத்தான அந்தஸ்தைக் கவனத்தில் கொண்டே அவர்களது உணர்வார்ந்த எதிர்வினைகளை அவதானித்தோம். எமது அவதா னங்களும் தொகுத்தறிமுறையும் தமது உணர்ச்சித் தூண்டல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தும் நிலைக்கு வழியமைத்தன.

**ஒன்று:** தன்னியக்கமாகவே நாம் துலங்கலை வெளிப்படுத்தக்கூடிய தூண்டல்கள். ஏனெனில், இவை நமது நரம்புமண்டலத்தில் உள்ளடங்கியிருப்பவை. அவற்றை நிறுத்தும் தெரிவு நம்மிடம் இல்லை. கொடிய விலங்குகளைக் கண்டு அல்லது பூகம்பத்தைக் கண்டு பயப்படுதல் இதற்கான உதாரணமாகும். மனித இயல்பை அச்சத்திற்குள்ளாக்கும் அனைத்தும் இவ்வகையில் அடங்கும். பிரக்ஞைபூர்வச் சிந்தனையின்றி விரைவான துலங்கலை வெளிப் படுத்த நம்மை நிர்ப்பந்திக்கும் வகையில் எதிர்பாராமல் நிகழ்கின்ற சங்கடமான நிலைகளும்கூட இதனுள் அடங்கும். நரம்பியல் விஞ்ஞானிகள் கூறுவதுபோல், இந்தத் தெறிவினைகள் மூளையின் அமிக்டலா (Amygdala) எனும் வாதுமைப் பகுதியிலிருந்து

உருவாகின்றன. கடுமையான உஷ்ணப் பரப்பிலிருந்து நாம் விரைவாகக் கையை இழுத்துக்கொள்ளல், எதிர்பாராமல் கடும் காற்று வீசும்போது அல்லது கடுமையான வெளிச்சத்தின்போது கண்களை மூடிக்கொள்ளல் போன்ற எதிர்வினைகள் அனைத்தும் இவ்வாறு நமது நரம்புமண்டலத்தினுள் அடங்குபவையே.

**இரண்டு:** முழுமையான நாட்டத்துடன் நாம் துலங்கலை வெளிப் படுத்தும் தூண்டல்கள். இவ்வகையான தூண்டல்களின்போது நமது தீர்மானங்களின் விளைவுகளை நாமே பொறுப்பேற்றுக்கொள் கிறோம். இதன்போது குறித்த தூண்டலுக்கு உட்படும் நபர் தனது உணர்ச்சி வெளிப்பாட்டைப் பிரக்ஞைபூர்வமாக உணர்ந்து அதுபற்றிய தனது மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கிறார். இவ்வகையான தூண்டல்களுக்கு ஆற்றப்படும் எதிர்வினையானது பல்வேறு காரணிகளின் மீது தங்கியிருக்கிறது. தூண்டலின் கூர்மை, தூண்டலுக்கு உட்படும்போது குறித்த நபரின் உளவியல் நிலை, அவரது எதிர்வினையைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய விளைவின் பாரதூரத் தன்மை, அவர் விசுவாசம் கொண்டிருக்கும் மத-ஆத்மீக நம்பிக்கைகள் முதலிய காரணிகளாக அவற்றை அடையாளப்படுத்த முடியும். இங்குதான் நபிமார்களது எதிர்வினைகளுக்கும் சாதாரண முஸ்லிம்களின் எதிர்வினைக்கும் மத்தியிலான பாரிய வேறுபாட்டைக் காண்கிறோம். நபிமார்களது தெய்வீகப் பொறுப்புக்கும், பொதுமக்கள் தாம் வெளிப்படுத்தும் எதிர்வினைகளுக்காக ஏற்கும் பொறுப்புக்கும் மத்தியிலான வேறுபாட்டையும்கூடக் கண்டுகொள்கிறோம்.

இந்நிலையே, அல்லாஹ் சில மனிதர்களை மாத்திரம் நபிமார் களாகவும் தூதர்களாகவும் தேர்ந்தெடுக்க அவர்களைத் தகுதிப்படுத்திய உணர்வு, உளவியல், ஆன்மீகம் சார்ந்த பண்புகள் குறித்து விரிவாக அவதானிக்க நம்மை இட்டுச்சென்றது. ஐந்தாம் அத்தியாயத்தில் நாம் முன்வைத்திருப்பது இதனைத்தான். அவர்களைத் தெரிவு செய்வதிலும், அவர்களது ஆளுமை உருவாக்கத்திலும், அல்லது அவர்களது தனித்தன்மைகளை வெளிக்கொண்டுவர பொருத்தமான சூழல், பாரம்பரியம், ஆத்மீகப் பயிற்சி என்பவற்றைத் தெரிவு செய்வதிலும் தொழிற்பட்ட தெய்வீகப் பெருஞானத்தைக் கூர்ந்து அவதானிக்க இதில் பெருமுயற்சி எடுத்துக்கொண்டோம். ஏனெனில், தனது தூதை எங்கே இறக்க வேண்டும் என்பதை இறைவனே நன்கறிவான்.

பின்னர் இப்பண்புகளை ஆறாம், ஏழாம் அத்தியாயங்களில் இன்னும் ஆழமாக ஸ்தூலப்படுத்தினோம். மூசா, யூசுஃப் ﷵ ஆகிய இரு தூதர்களின் வாழ்வில் நிகழ்ந்த அனைத்து சிறிய, பெரிய அம்சங்களையும் மதிப்பீடு செய்வதில் தொழிற்பட்ட இறைவனின் ஞானம் குறித்து அதில் பேசியுள்ளோம். ஏனெனில், இவ்விரு நபிமார்களது வாழ்வு பற்றியே திருக்குர்ஆன் மிக விரிவாகப் பேசியுள்ளது.

இவ்வகையில் எனது நூல் நிறைவடையும் கட்டத்திற்கு வந்திருக் கிறேன். எனது இந்த அவதானங்களில் உளவியல் மாணவர்களுக்கும் பொதுவான வாசகர்களுக்கும் பயனளிக்கக்கூடிய ஏதாவது இருக்கு மாயின் அதற்கான புகழ் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அதற்கு மாற்றமான விளைவு ஏற்பட்டிருக்குமாயின் எனது எழுதுகோலின் தவறுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறேன். ஏனென்றால் அவை வெறும் அவதானங்களும் எனக்குள்ளான உரையாடலுமே அன்றி வேறல்ல. அல்லாஹ் அவற்றைப் பொறுத்தருளக்கூடும். என் ஆயுள் எஞ்சியிருந்தால், எனது இரண்டாவது நூலுக்காக அதனை இலகுபடுத்தித் தருமாறு மாட்சிமைமிக்க இறைவனை இறைஞ்சுகிறேன். 'தூதர்களின் தலைவரது வாழ்வில் உணர்ச்சியும் அன்பும்' என்ற தலைப்பில் இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களது வாழ்வின் உணர்ச்சிப் பரிமாணம் பற்றிய எனது அவதானங்களை அந்நூலில் பதிவுசெய்வேன்.

# பிற்சேர்க்கை

# கலைச்சொற்கள்

| வரிசை எண் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| 1. | ஃப்ராய்டின் உளவியல் பகுப்பாய்வு | Freud's Psychoanalysis |
| 2. | நடத்தையியல் புரட்சி | The Behavioral Revolution |
| 3. | உயிரியல் நோக்கிலான உளவியல் | Biologically Oriented Psychol-ogy |
| 4. | இயற்பியல் | Physics |
| 5. | வேதியியல் / இரசாயனவியல் | Chemistry |
| 6. | உயிரியல் | Biology |
| 7. | உயிரியல் விஞ்ஞானம் | Biological Science |
| 8. | வேதியியல் விஞ்ஞானம் | Chemical Science |
| 9. | உயிர்வேதியியல் | Biochemistry |
| 10. | நுண்ணுயிரியல் | Microbiology |
| 11. | மனித உயிரியல் | Human Biology |
| 12. | உயிர் உளவியல் | Biopsychology |
| 13. | பரம்பரையியல் | Genealogy |
| 14. | மரபியல் | Genetics |
| 15. | மருந்தியல் | Pharmacology |
| 16. | நுண்ணணு இயற்பியல் | Subatomic Physics |
| 17. | மனநோயியல் | Psychopathology |

| வரிசை எண் தொடர்ச்சி ... | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| 18. | மனித உடலியங்கியல் | Human Physiology |
| 19. | கல்வியியல் | Pedagogy |
| 20. | குழந்தை உளவியல் | Child Psychology |
| 21. | பரிணாம உளவியல் | Evolutionary Psychology |
| 22. | இனப்பெருக்கச் சூழலியல் | Reproductive Ecology |
| 23. | நரம்பு (மூளை) உடலியங்கியல் | Neurophysiology |
| 24. | நரம்பு (மூளை) அமைப்பியல் | Neurostructuralism |
| 25. | உளநல மருத்துவவியல் | Psychiatry |
| 26. | விலங்கு நடத்தைகள் | Ethology/Bestiality |
| 27. | அறிவாற்றல் நடத்தை சிகிச்சை | Cognitive Behavioural Ther-aphy |
| 28 | நேர்நிலை உளவியல் விஞ்ஞானம் | Positive Psychological Science |
| 29. | தக்கன பிழைத்தல் | Survival of the Fittest |
| 30. | தொலைநுண்ணுணர்வு | Telepathy |
| 31. | மனக்கண் தொலைக்காட்சி | Clairvoyance |
| 32. | சார்பியக் கோட்பாடு | Theory of relativity |
| 33. | தூரத்தில் இருந்துகொண்டு வெறுமனே மனமுயற்சியால் பொருள்களை அசைக்கும் ஆற்றல் / மனசக்தி மூலமாகப் பொருள்களை அசையச்செய்தல் | Telekinesis (or) Psychokinesis |
| 34. | மரணத்தை நெருங்குமளவு நோயுற்றுவிட்டு மீண்டும் வாழ்வுக்குத் திரும்புதல் | Near death phenomenon |

| வரிசை எண் தொடர்ச்சி ... | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| 35. | காந்த ஒத்ததிர்வு உருவரைவு | Magnetic Resonance Imaging [MRI] |
| 37. | செயல்பாட்டுக் காந்த ஒத்ததிர்வு உருவரைவு | Functional Magnetic Resonance Imaging [FMRI] |
| 38. | கணிப்பொறிப் பருவரைவுத் துழாவற்படம் | Computed Tomography [CT] Scan |
| 39. | சுயாதீன நரம்புமண்டலம் | Autonomic Nervous System |
| 40. | பரிவு நரம்புத்தொகுதி | Sympathetic Nerve Branch |
| 41. | அனுபரிவு அல்லது இணைப்பரிவு நரம்புமண்டலக் கிளை | Parasympathetic Nerve Branch |
| 42. | நிறமூர்த்தங்கள் / மரபுத்திரிபு | Chromosomes |
| 43. | அறிதிறன் முரண்பாடு | Cognitive Dissonance |
| 44. | புலனறிவாற்றல் | Sensory Ability |
| 45. | புலன்களுக்கு அப்பாற்பட்ட உளவியல் | Transcendental Psychology |
| 46. | ஆத்மீக உளவியல் | Spiritual Psychology |
| 47. | புலன்களுக்கு அப்பாற்பட்ட உளவியல் அல்லது மீநிகழ்வு உளவியல் அல்லது ஆத்மீக உளவியல் | Parapsychology |
| 48. | அறுதுயில் / ஆழ்துயில் | Hypnosis |
| 49. | கண்திருஷ்டி | Evil Eye |
| 50. | உளவழி உடற்கோளாறுகள் | Psychosomatic Disorders |
| 51. | மூளை அலகீடு | Brain Scan |

| வரிசை எண் தொடர்ச்சி ... | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| 52. | மெய்த்திரிபியம் | Surrealism |
| 53. | மனோதத்துவவியல் | Psychosomatics |
| 54. | முன்னறிவிப்புக் கனவுகள் | Predictive Dreams |
| 55. | நோயறிதல் | Diagnosis |
| 56. | யதார்த்தம் மீதான கலக்கம் | Reality anxiety |
| 57. | நரம்பியல் பதற்றம் | Neurotic anxiety |
| 58. | நியதிக்கொள்கை / நியதிவாதம் | Determinism |

# மேற்கோள் நூல்பட்டியல்


1. இமாம் அல்புஃகாரீ, *‘ஸஹீஹுல் புஃகாரீ’*.
2. இமாம் முஸ்லிம் (முஸ்லிம் நைஷாபூரீ), *‘ஸஹீஹ் முஸ்லிம்’*.
3. இமாம் அத்திர்மிதீ, *‘சுனனுத் திர்மிதீ’*.
4. இமாம் அபூதாவூது அல்சிஜிஸ்தானீ, *‘சுனன் அபூதாவூது’*.
5. இமாம் இப்னு மாஜா, *‘சுனன் இப்னு மாஜா’*.
6. இமாம் அல்பைஹகீ, *‘அஸ்ஸுனனுல் குப்றா லில் பைஹகீ’*.
7. இமாம் அத்தபறானீ, *‘அல்முஃஜமுல் அவ்சத்’*.
8. இமாம் இப்னு தைமிய்யா, *‘மஜ்மூஉல் ஃபதாவா’*, தாருல் வஃபா.
9. இமாம் ஷம்சுத்தீன் அத்தஹபீ, *‘சியர் அஃலாம் அந்நுபலாஅ’*.
10. இமாம் இப்னுல் கையிம் அல்ஜவ்ஸிய்யா, *‘றவ்ளதுல் முஹிப்பீன் வ நுஸ்ஹதுல் முஷ்தாக்கீன்’*.
12. இமாம் அஹ்மது இப்னு அஜீபா, *‘அல்பஹ்ருல் மதீது ஃபீ தஃப்சீருல் குர்ஆனில் மஜீது’*.
13. ஹாகிம் அந்நிஷாபூரீ, *‘முஸ்தத்றக் அல்ஹாகிம்’*.
14. அல்ஃகத்தீபுல் பக்தாதீ, *‘அல்ஜாமிஃ லி அஃக்லாகுல் றாவீ வ ஆதாபுஸ்ஸாமிஃ’*. பெய்ரூத், அர்ரிசாலா, 1989.
15. அப்துல்லாஹ் கமால், *‘நபிமார்கள் பற்றிய உளவியல் பகுப்பாய்வு’*, கெய்ரோ, தாருல் ஃகயால், 1996,
16. அப்துல் சத்தார் இப்றாஹீம், *‘அல்இன்சான் வ இல்முந்நஃப்ஸு’*, குவைத், சில்சிலதுல் ஆலமில் மஃரிபா 86, பிப்ரவரி 1985 (அறபியில்).
17. அஸ்ஸிர் அஹ்மது சுலைமான், *‘அல்அப்ஆத் அந்நஃப்ஸிய்யா லித்தஅபீர் ஃபில்வஹ்ஹீ ஃபில்குர்ஆனில் கரீம்’*. ரியாத். 2017.
18. சையித் குதுப், *‘ஃகஸாயிஸ் அத்தஸவ்வுர் அல்இஸ்லாமீ’*, பெய்ரூத்: தாருஷ்ஷுறூக். 2000,
19. சையித் குதுப், *‘ஃபீ ழிலாலில் குர்ஆன்’*, கெய்ரோ,
20. சையித் குதுப், *‘அத்தஸ்வீருல் ஃபன்னீ ஃபில்குர்ஆனில் கரீம்’*.
21. இப்னு ஜரீருத் தபரீ, *‘தாரீஃகுர் றுசுல் வல்முலூக்’*, தாருல் மஆரிஃபா.

22. இப்னு ஜரீருத் தபரீ, *'ஜாமிஉல் பயான் அன் தஃவீல் ஆயில் குர்ஆன் (தஃப்சீருத் தபரீ)'.*

23. இப்னு கஸீர், *'அல்பிதாயா வந்நிஹாயா'*, தாருல் மஅரிஃபா, 1997, பாகம் 4. பக்.194.

24. இப்னு ஹஜருல் அஸ்கலானீ, *'அல்இசாபா ஃபீ தம்யீஸ் அஸ்ஸஹாபா'*, தாருல் ஜீல். ஹி.1412.

25. மாலிக் பத்ரீ, *'அத்தஃபக்குர் மினல் முஷாஹதா இலஷ்ஷுஹூது'*, அல்மஃஹத் அல்ஆலமி லில் ஃபிக்ருல் இஸ்லாமீ, 1995.

26. அல்முஸ்தஃசிமீ, *'அத்துருல் ஃபரீது வ பைதுல் கசீது'*, தாருல் குதுப் அல்இல்மிய்யா, 2015,

27. அபூஅப்துல்லாஹ் அல்குர்துபீ, *'அல்ஜாமிஃ லி அஹ்காமில் குர்ஆன்'*, தாருல் ஆலமில் குதுப், ரியாத், 2003,

28. முஹம்மது இப்னு இஸ்ஹாக், *'சீறத் றசூலில்லாஹ்'.*

29. அபூஸைது அல்பல்ஃகீ, *'மசாலிஹுல் அப்தான் வல்அன்ஃபுஸ்'.*

30. அஹ்மது பின் ஹாமிது அல்காமிதீயின், *'தஃப்சீருல் அஹ்லாம் வ மனாமாதுல் உலமா ஃகய்றன் றஅய்து'* என்ற கட்டுரை,

31. Paul C. Vitz, '*Psychology as Religion: The Cult of Self-worship*'. London: William Eerdmans Publishing, 1977.

32. Sigmund Koch, S.C.ed., '*Philosophy of Psychology*'. London: The Macmillon Press (Ltd), 1979.

33. Elizabeth Thornton (Mary Forrest Baxter), *'Freud and Cocaine: The Freudian Fallacy'*, London: Blond and Briggs Publishers, 1983.

34. John Carl Flügel, *'Man, Morals and Society: A Psychoanalytical Study'*, Beirut, 1966.

35. Joseph Wolpe, *'Psychotheraphy by Reciprocal Inhibition'*, Stanford: Stanford Univ. Press, 1958.

36. Hans Eysenck, *'The Effects of Psychotheraphy: An Evaluation'*, Journal of consult. Psychology:16, 1952.

37. Melitta Schmiedeberg, *'Psychotheraphy with Failures of Psychoanalysis'*, British Journal of Psychology:116, 1970.

38. Williams James, *'The Varieties of Religious Experience: A Study in Human Nature'*, 1982.

39. Charles Darwin, *'The Expression of the Emotions in Man and Animals'*, Oxford University Press, 9 April 1998. Retrieved: 4 August 2013.

40. David Eagleman, *'Incognito: The Secret Lives of the Brain'*, Vintage; Reprint edition (15 May 2012).

41. David Ottoson, *'Challenges and Perspectives in Neuroscience'*, Pergamon Pr.; 1st ed., 1985.

42. David Matthew Driscoll, *'The Effects of Prefrontal Cortex Damage on the regulation of Emotion'*, University of Iowa, 2009.

43. Herbert Benson, *'Timeless Healing'*, London: Simon & Schuster, 1996.

44. John B. Watson, *'Behaviorism'*, University of Chicago Press, 1930,

45. Fritjof Capra, *'The Tao of Physics'*, (1992).


46. Sigmund Freud, *'Moses and Monotheism',* Martino Fine Books (25 June 2010).

47. Sigmund Freud, *'Leonardo DaVinci: And a Memory of His Childhood',* Createspace Independent Pub (17 May 2017).

48. Sigmund Freud, *'Leonardo daVinci: A Psychosexual Study of an Infantile Reminiscence',* Prabhat Prakashan (26 March 2017).

49. Sigmund Freud, *'The Interpretation of Dreams',* Maple Press (1 August 2013).

குறிப்புகள்



இஸ்லாமிய உளவியல் கற்கையின் பிதா என மிக்க கௌரவத்துடன் கொண்டாடப்படுபவர் பேராசிரியர் மாலிக் பாபிகேர் பத்ரீ (1932 - 2021). 1956-ம் ஆண்டு பெய்ரூத்தின் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் உளவியல் துறை இளமானிப் பட்டத்தை ஈட்டிக் கொண்ட அன்னார், 1961-ம் ஆண்டு *Leicester* பல்கலைக்கழகத்து கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1962 முதல் 1971 வரை பெய்ரூத், ஜோர்டான் பல்கலைக்கழகங்களிலும், *Omdurman* இஸ்லாமியப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி, இறுதியாக மலேசிய சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் இப்னு கல்தூன் பீடத்துத் தலைவராகக் கடமையாற்றினார். இஸ்லாமிய உளவியல் கற்கைக்கான சர்வதேச அமையத்தின் நிறுவனரும் தலைவருமாக நீண்டகாலம் அரும்பெரும் சேவைகள் செய்துள்ளார் கலாநிதி பத்ரீ.

அறபு மொழியிலும் ஆங்கிலத்திலும் அவரது ஆக்கத்தில் வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் ஏராளம். அன்னாரின் ஆங்கில ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கன *'Islam and Analytical Psychology'*, *'Islam and Alcoholism'*, *'The Catastrophe of AIDS'*, *'Dilemma of Muslim Psychologists'*, *'Contemplation'*, *'Sustenance of the Soul'* என்பனவாகும்.



இது நேரடியாகத் தமிழில் எழுதப்பட்ட நூலாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. நூலில் கையாளப்பட்டுள்ள தொய்வில்லாத, தடுமாற்றம் இல்லாத, சரளமான மொழிநடை அதற்குக் காரணமாக இருக்கலாம். மொழியாக்கம் என்பது கலை. மிகுந்த வாசிப்பும் தேடலும் அர்ப்பணிப்பும் கொண்ட முனைவர் இர்ஃபானின் மொழியாக்கத்தில் தனித்தன்மை, பண்பாட்டுக் கலாச்சார இடைவெளிகளைப் புரிந்து பிரதிகளில் அவற்றை ஏற்றம்செய்தல், ஆற்றொழுக்கான வாசிப்புக்கு உதவல், மயக்கமின்மை, கருத்துத் தெளிவு, மூலமொழியைச் சிதைக்காது பெறுமொழியை வளப்படுத்தல் போன்ற பல பண்புகளைக் காண்பது வழமை. அது இந்த மொழியாக்கத்திலும் கைவரப் பெற்றிருக்கிறது.


**- ஏ.எம். றியாஸ் அகமட்**
முதுநிலை விரிவுரையாளர்,பிரயோக விஞ்ஞான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



**Fuzin Texts**
*23/3, Market Road,*
*Dharga Town 12090*
*Sri Lanka*

ISBN 978-624-5832-03-3